உ

கடவுள் துணை.

தர்க்கபரிபாஷை.

இது

நன்னிலந்தாலுக்கா, விஷ்ணுபுரம்

பிரஹ்மஸ்ரீ, வி. ச. இராமச்சந்திர சாஸ்திரியாரவர்கள்

முன்னிலையிற் பரிசோதிக்கப்பட்டு,

சென்னை, ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல்

தமிழ்ப்பண்டிதர்

கோ. வடிவேலு செட்டியாரவர்கள்

எழுதிய

குறிப்புரையுடன்

ஷை செட்டியாரவர்களாலும்,

ம. சண்முகமுதலியாரவர்களாலும்,

சென்னை, வேப்பேரி,

கமலநாயகி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1908.

விலை ரூபாய் 1.

உ

கடவுள்துணை.

முகவுரை.

ஒவ்வொருவருக்கும் பிரதிகூலமாயிருப்பது துக்கமா மென்பது அநுபவசித்தமாம். அதனை யொழித்தற்குபாயம் ஆத்மசாட்சாத்காரமாம். அது துக்கநிவிர்த்தி வடிவ மோட்சத்திற்கு நேர்சாதனமா மென்பது

"ஆத்மாவையறிந்தே அதிகாரி புருஷன் துக்கத்தின் அத்தியந்த நிவிர்த்திவடிவ மோட்சமடைகின்றான். அம் மோட்ச சித்தியின் பொருட்டு அவ்வாத்ம ஞானமன்றி வேறோருபாயமுமின்று."

"கருமத்தாலாவது சந்ததியாலாவது தனத்தாலாவது எவரும் மோட்சமடைகிறதில்லை. சமையற்கு நெருப்புப்போல மோட்சத்திற்கு முக்கியகாரணம் ஞானமே" என்றற்றொடக்கத்து வசனங்களாற் பிரசித்தமாம்.

ஆத்ம சாட்சாத்காரமும் * சிரவண, மநந, நிதித்தியா

---

* 1. ஆனு நற்கல்வி யறிவொழுக்க முடையவரும் ஆத்ம சாக்ஷாத்கார முடையவருமாகிய குருவின் வாயிலாகச் சுருதிவாக்கியங்களின் அர்த்தத்தைக் கேட்டல் சிரவணமாம்.

2. கேட்ட அர்த்தத்தினை சாதகபாதக யுக்திகளால் மீண்டு மீண்டுஞ் சிந்தித்தல் மநநமாம்.

3. கேட்ட அர்த்தத்தினை இடைவிடாது வெகுகாலபரியந்தம் அநுசந்தானஞ் செய்தல் நிதித்தியாசனமாம்.

சனங்களாலுண்டாகின்றது. சிரவணமுதலிய மூன்றனுள் மநநம் அநுமானத்தின் வசமாயிருக்கின்றது; அநு மாநமோ வியாப்தி ஞானத்தின் வசமாயிருக்கின்றது; வியாப்தி ஞானமும் பதார்த்தங்களின் பேதஞானத்தை யபேட்சிக்கின்றது. ஆகையினால், ஆத்ம ஞானம் பிற பதார்த்தங்களின் ஞானமின்றி யுண்டாவதின்றாம்; உண்டா காதாகவே, பிறபதார்த்தங்களை யறிந்தவனுக்கே பிற பதார்த்தங்களின் பேதமுடைய ஆத்மஞான முண்டா கின்றதென்பது சாஸ்திரசம்மதமாம். இதனால் பிறபதார்த் தங்களின் ஞான முள்ளவனுக்கே ஆத்மஞானம் சித்திக்கு மென்பது பெறப்பட்டது.

பதார்த்தங்களின் ஞானம்: லக்ஷணம் பிரமாண மென்னு மிரண்டினாலேயே சித்திக்கின்றதென்பது நியமம். பிருதிவி ஏனையவற்றின் வேறென்றுணருமிடத்து அதற்கு லக்ஷணம் கந்தமுடைமையும், பிரமாணம் கிராணேந்திரி யமுமாம். பிருதிவி கந்தமுடையதெனவும், கந்தமுடைமை கிராணேந்திரியத்தாற் கிரகிக்கப்படுகின்றதெனவும் உண ராதவனுக்குப்பிருதிவி ஏனையவற்றின் வேறென்னும் ஞான முண்டாவதில்லை; ஆதலின், பதார்த்தங்களின் சித்திக்கு லக்ஷணமும் பிரமாணமும் இன்றியமையாது வேண்டப் படுவனவாமென்ப தொருதலையாம்.

பிறபதார்த்தங்களின் லக்ஷணங்களையும் அவற்றிற் குரிய பிரமாணங்களையும் ஐயந்திரிபின்றி யுணர்ந்தவருக்கு அவற்றின் வேறாய ஆத்மாவின் லக்ஷணமும், அதற்குரிய

பிரமாணமும் செவ்வனே விளங்கும்; அங்ஙனம் விளங்குவதால், அவர் ஆத்மாவையறிந்து அதன் வாயிலாக மோட்சமடைகின்றனர். இம்மோட்சசித்திக்குப் பிறபதார்த்தங்களின் லக்ஷணங்களும் பிரமாணங்களும் பரம்பராசாதனமாக விருத்தலின், மோட்ச விருப்புள்ள ஒவ்வொருவரும் பிறபதார்த்தங்களின் லக்ஷணங்களையும் பிரமாணங்களையும் உணர்தற்பொருட்டுக் கௌதமராலும் கணாதராலும் நியாயசாஸ்திரமும் வைசேடிக சாஸ்திரமும் இயற்றப்பட்டன.

இவற்றுள் பதார்த்தங்களின் லக்ஷணமும் பிரமாணமும் பரீட்சையும் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை யுணராதவருக்கு ஏனைய சாஸ்திரங்களின் உண்மைப்பொருள் எளிதில் விளங்காமை பற்றி ஆன்றோர் சர்வ சாஸ்திரங்களின் பொருளையு மறிவதற்கு நியாய சாஸ்திரமும் வைசேடிகசாஸ்திரமும் உபகாரமாயிருக்கின்றன என்றனர். இவ்விரண்டும் சாங்கிய சாஸ்திரம் யோகசாஸ்திரம் போலப் பெரும்பான்மையும் கருத்து வகையில் ஒத்திருத்தலின் பொதுவகையால் * தர்க்க சாஸ்திரமென்று கூறப்படுகின்றன.

---

* தர்க்க சாஸ்திரமென்பதன் பொருள் பதார்த்தங்களை நன்ருய் நிருபிக்கும் நூலென்பதாம். பிரமாணத்திற்ருேன்றும் வியபிசாரஞானம் தர்க்கத்தால் நிவிர்த்தியாதலின் அது பிரமாணத்தின் சககாரியாம். உபசாரவழக்கால் பிரமாணமும் தர்க்கமெனக் கூறப் படுகின்றது.

நியாயசாஸ்திரம் சோடச (16) பதார்த்த * நிரூபணமும் வைசேடிகசாஸ்திரம் சப்த (7) பதார்த்த நிரூபணமும் செய்வனவாம். தர்க்கம் † வித்தியா ஸ்தானங்களுள் ஒன்றுமென்பது "வேதமொரு நான்குமா றங்கமுநன் னியாய மீமாஞ்சை யொடுமிருதி புராணமுமீ ரேழா, வோதலுறும் வித்தைகளாம்" என்பதனால் நன்கு விளங்கும்.

மேலே எறிந்த கல் கீழே விழுமென்பதும், காந்தம் (திசையறிகருவி) வடதிசை நோக்கி நிற்கு மென்பதும், பூமி யுருண்டை வடிவினதென்பதும், இருள் பரிசமின்றி யுருவமுடைய தென்பதும், மக்கள் மனவுணர்ச்சி யுடையாரென்பதும், பிறவும் இயல்பாகவே சித்தித்திருப்பன வாயினும், அவற்றைப் பிறர் சிறப்புவகையால் நூல்வாயிலாகப் பிரசித்தஞ் செய்ததுபோல், கௌதமரும் கணாதரும் பதார்த்தங்களின் லக்ஷணமும் பிரமாணமும் இயல்பாகவே சித்தித்திருப்பனவாயினும் அவற்றைச் சிறப்புவகையால் நூல்வாயிலாகப் பிரசித்தஞ் செய்தனர். அங்ஙனமன்றிப் பூர்வமீமாஞ்சா சாஸ்திரத்தில் பதார்த்தங்களின் லக்ஷணமும் பிரமாணமும் பொதுவகையாக நிரூபிக்கப் பட்டிருத்

---

* நிரூபணமாவது பதார்த்தத்தின் லக்ஷண மின்னது, அதன் சொரூபமின்னது, அஃதிதனாற் கொள்ளத்தக்கது என்றிங்ஙனம் பலவகையால் விளக்குவதாம்.

† வித்தியாஸ்தானம்-ஞானத்திற்கிடமாம்; அஃதாவது ஞானத்தை யுண்டாக்குவதாம்.

தலைக் கௌதமரும் கணாதரும் சிறப்புவகையால் நிரூபித்தனரென்பதும் ஒன்று.

தர்க்கம் பொது சிறப்பென இருவகைத்தாம். பிருதிவி கந்தமுடையதென்பதும், நீர் குளிர்ந்த பரிசமுடைய தென்பதும், தேயு சுடும்பரிசமுடைய தென்பதும், வாயு உருவமின்றிப் பரிசமுடைய தென்பதும், கருமம் அசைவு வடிவினதென்பதும், பிறவும் பொதுத்தர்க்கமாம். பரமாணு, ஆகாயம், காலம், திக்கு, மனம், சாமாநியம், சமவாயம் என்பனவும் பிறவும் நித்தியமென்பதும், ஜீவான்மா பலவாய் வியாபகமாய் நித்தியமாய் மனக்கூட்டமின்றிய போது ஜடமாயிருக்கின்ற தென்பதும், பிறவும் சிறப்புத் தர்க்கமாம். சிறப்புத்தர்க்கமே மததர்க்கமென்று கூறப்படும். இச்சிறப்புத்தர்க்கத்திலும் விசேஷபதார்த்தம் அங்கீகரிக்கத் தக்கது தகாது என்பதும் பிறவுமாகிய பலவேறுபாடுகளுண்டு. மதவாதிகள் தங்களுக்காதாரமாக எடுத்தாளுவது பொதுத்தர்க்கமேயன்றிச் சிறப்புத்தர்க்கமன்றும். நியாயநூலில் மோட்ச சாதனமாகக் கூறப்படுவது சிறப்புத் தர்க்கமேயாம்.

தர்க்கம், நியாயம், அளவை, ஏரணம், எண் என்பன ஒருபொருட் கிளவி. தர்க்கநூலுணர்ச்சி (சொல்) இலக்கணநூல் உணர்ச்சியில்லார்க் கமையா தென்பது "ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா, மாற்றங்கொடுத்தற்பொருட்டு", என்பதனல் நன்கு விளங்கும்.

இலக்கணநூ லுணர்ச்சியும் தர்க்கநூ லுணர்ச்சியும் மக்களுக்கு (அறமுதற் பொருள்களைக் காண்டற்குக் கருவியாக) இருகண்போலிருத்தலின்,

"எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங், கண்ணென்ப வாழு முயிர்க்கு" என்றும்,

"எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்" என்றும்,
"எண்ணெழுத் திகழேல்" என்றும்,

ஆன்றோர்களாற் கூறப்பட்டன. இவ்விருநூலுணர்ச்சியு முடையார்க்கன்றி ஏனையோர்க்குச்சாஸ்திரப்பொருளை ஆராய்ந்துணர்தலும் வாதசபையிலொன்றையெடுத்து நிரூபித்தலும் முடியா. ஆதலின், ஒவ்வொருவரும் சொல்லிலக்கணநெறியானே தர்க்கநூலைக் கற்பதுஅத்தியாவசியகமாம். அஃது "ஆதி முதலொழிய வல்லா தனவெண்ணி, னீதி வழுவா நிலைமையவான்-மாதே, யறமார் பொருளின்பம் விடென் றிவற்றின், றிறமாமோ வெண்ணிறந்தாற் செப்பு."

"பண்ணிலார்க் கில்லாத பாட்டின் பயன்போன்றுங், கண்ணிலார்க் கில்லாக் கவின்போன்று-மெண்ணிலா, வஞ்சொ லளவை யறியா தவர்க்கில்லை, செஞ்சொ லளவின் சிறப்பு."

"இராக மறியா ரிசைப்பயன் றாமறியார், தராதரமறியார் சற்கா ரியமறியா, ரோரா ரளவை யொருபயனுந் தாமறியா, ராராய்ந் தளவை யறிந்துகொ ளீரே."

"காண்டல் கருத லுவம மாகம, மாண்டய வருத்தா பத்தியோடியல், பைதிக வபாவ மீட்சியொழிவறி, வெய்தி யுண் டானெறி யென்றிவை தம்மாற், பொருளி னுண்மை புலங்கொளல் வேண்டும்"

என்றறற்றொடக்கத்தனவற்றால் நன்கு விளங்கும்.

மீமாஞ்சை, நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், வேதாந்த மென்னும் வைதிக சாஸ்திரமாறனுள் ஒன்றாகிய * நியாயசாஸ்திரம் காலதேச நிமித்தங்களுக் கேற்றவாறு பண்டித சிரோமணிகளாற் றொகுத்தும், விரித் தும், மொழிபெயர்த்தும் கூறப்பட்டதென்பது பிரசித்த மாம். அங்ஙனம் தொகுத்துக்கூறியவற்றுள், தர்க்க பரிபாஷை யென்பதும் ஒன்று. இது தார்க்கிகருக்குள் சூடாமணி (முடிமணி) போல் விளங்கிய கேசவமிசிர ரென் னும் பெரியாரால் பாலர்களுக் குபயோகமாம் பொருட்டுச் சுருங்கச்சொல்லலும் விளங்கவைத்தலுமாக இயற்றப்பட் டது. இந்நூலின்கண் மங்களாசரணை பிரமாண மென்னும் பதத்தாற் கூறப்பட்டது; பிரமாணமென்னும் பதம்

---

* "நியாய மென்பது நெறியுறக் கிளக்கி, னளவையிற் றெளிக் கும் வினைபொருட் டிறமே (நியாயமென்று சொல்லப்படுவது இலக் கண வகையாற் கூறுமிடத்து அது பிரத்தியட்ச முதலிய பிரமா ணங்களாற் பதார்த்தங்களின் வேறுபாட்டினை விளக்குவதாம்)" என்றார் தண்டியலங்கார நூலார்.

பரமேசுவரனது நாமங்களு ளொன்றாயிருத்தலின். இம்மங்கலம் * வஸ்து நிர்த்தேசவடிவ மங்கலமாம். இந்நூலாசிரியர் காலம் இற்றைக்கேறக்குறைய 700 வருடங்கட்கு முன்னரென்று கருதப்படுகின்றது. இத்தர்க்கபரிபாஷைக்குத் தர்க்கபாஷை யென்றும் தர்க்கசூடாமணி யென்றும் பெயருண்டு. இதற்கு 23 வியாக்கியானங்களுண்டு. இங்ஙனம் 23 வியாக்கியானங்க ளிருப்பதனாலேயே இது மிக்க பிரசித்திபெற்ற தென்பது நன்குவிளங்கும்.

இஃதிற்றைக்கேறக்குறைய 290 வருஷங்களுக்கு முன்னிருந்த துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளால் கருணை

---

* எடுத்துக்கொண்டநூ லிடையூறின்றி யினிது முடிதற்பொருட்டும் படிப்போர்க்குத் தம்மிடத்தில் நாஸ்திகப்பிராந்தி நீங்குதற்பொருட்டும் நூலாசிரியரால் நூன் முகத்திற் செய்யப்படும் மங்கலம் வஸ்து நிர்த்தேசம் (பொருளியல்புரைத்தல்), வணக்கம் (நமஸ்காரம்), வாழ்த்து (ஆசீர்வாதம்) என மூவகைத்தாம்.

1. நமஸ்கார முதலியன வின்றிக் கேவலம் பரமேசுவர சங்கீர்த்தனம் (ஸ்துதி) வஸ்துநிர்த்தேச மங்கலமாம்.

2. நமஸ்காரத்திற்குத் தகுதியான பரமேசுவரன், குரு முதலியவர்களிடத்து நமஸ்காரஞ் செய்பவன் தனதிழிதகமையை யுணர்த்துதற்பொருட்டு மனோவாக்குக் காயங்களால் செய்யப்படும் வியாபாரவிசேடம் நமஸ்காரவடிவ மங்கலமாம்.

3. நூலாசிரியர் தாம் விரும்பிய பொருளையும் தமது சீடர் விரும்பிய பொருளையு மடைதற் பொருட்டுப் பரமேசுவரனைப் பிரார்த்தித்தல் ஆசீர்வாதவடிவ மங்கலமாம்.

யினுல் தமிழுலகமுய்யுமாறு சம்ஸ்கிருதத்தினின்றும் கத்திய (வசன) வடிவமாக மொழிபெயர்த் தருளப்பட்டது. இந்நூலின்கணுள்ள விஷயம் இதன் அநுக்கிரமணிகையினுல் நன்குவிளங்கும்.

காலவேறு பாட்டினுல் மிகவும் பிழைபட அச்சிடப்பட்டிருக்குமிது நன்னிலந்தாலுக்கா - விஷ்ணுபுரம்-வியாசசூத்திர சங்கரபாஷியத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாசிரியரும்,தார்க்கிக சிரோமணி-அப்பாசாஸ்திரியாரவர்கள் சிஷ்யரும், தௌகித்திரருமாகிய பிரஹ்மஸ்ரீ இராமச்சந்திர சாஸ்திரியா ரவர்கள் முன்னிலையில் சம்ஸ்கிருத பாஷையில் திருத்தமா யச்சிட்டுள்ள தர்க்கபரிபாஷையைத் தழுவித்து அதற்கிணங்கத் திருத்தப்பட்டது. இங்ஙனம் பரிசோதிக்கப்பட்ட இதற்கு வேண்டுமிடங்கட்குத் தக்கவாறு படிப்போர்க்குப் பதார்த்தவுணர்ச்சி யெளிதிலுண்டாம் வண்ணம் பரமேசுவரனது திருவருளை முன்னிட்டுக் குறிப்புரையொன் றெழுதப்பட்டது.

இக்குறிப்புரையில் வேண்டுமிடங்களில் இருதலைப்பிறையினுள்ளும் கீழ்க் குறிப்பினுள்ளும் கடினமான விஷயங்கள் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன.

இக்குறிப்புரைக்கு (தமிழ்மொழி பெயர்ப்பாயுள்ள) விருத்திப்பிரபாகரம், விசாரசாகரம், பாலபோதம், விருத்திரத்னவலி, வேதாந்தபரிபாஷை, சித்தாந்தபிந்து முதலிய நூற்களிலுள்ள தர்க்கபாகங்களும், சர்வதரிசன சங்

கிரகத்தின் அவலோக்கிய தரிசனமும், அக்கபாத தரிசனமும், தர்க்கசங்கிரக தீபிகைமுதலியனவும் பேருபகாரமாயிருந்தன.

சென்னை, கோமளேசுவரன் பேட்டை, ஸ்ரீசாது இரத்தின வேதாந்தசபையினருள் ஒருவரும் எனதாப்தருமாகிய ம-ா-ா-ஸ்ரீ சன்முக முதலியாரவர்களால் இப்புத்தகத்தின் மகுடங்கட்கிணங்க ஆங்கிலேய வார்த்தைகளெழுதப்பட்டன.

இத்தர்க்கபரிபாஷையின் மூலத்தைத் தேகசிரமத்தை ஒருசிறிதுங்கருதாது நன்கு பரிசோதித்துத்தந்த ஷைசாஸ்திரியாரவர்களது நன்றி ஒருபோதும் மறக்கத்தக்கதன்றாம்.

இந்நூலச்சிடுங்காலத் துடனிருந்துதவிய மேற்படி முதலியாரவர்களது உதவி சொப்பனத்துங் கருதத்தக்கதாம்.

இந்நூலிற்குக் குறிப்புரை யெழுதுவதற்குரிய விவேகத்தை யுண்டுபண்ணுவதற்குக் காரண பூதராயிருந்த சற்குரு - மகான் - சை. இரத்தின செட்டியாரவர்களது கருணையென்னுள்ளத்தினின்றும் எஞ்ஞான்றும் நீங்கத்தக்கதன்றாம்.

இந்நூலைச் செப்பமாக அச்சிட்டுத்தந்த சென்னை, வேப்பேரி, கமலநாயகி அச்சியந்திரசாலைத் தலைவர், ம-ா-ா-ஸ்ரீ. க. பெ. நாராயணசாமி முதலியாரவர்களது நன்றியும் மறக்கத்தக்கதன்றாம்.

இந்நூலின்கண் பிரமப்பிரமாதங்களாற் றவறுநேரிட்டிருப்பின் அதனைத் தர்க்கசிரோமணிகள் தயைசெய்தறிவிப்பாராயின் மறுபதிப்பிற்றிருத்தி அச்சிடுவதுடன் அவர்கட்கு வந்தனமு மளிக்கப்படும்.

இந்நூலைச் செவ்வையாகத் திருத்திக் குறிப்புரையெழுதி அச்சிட்டு முற்றுப்பெறுமாறு பிரேரேபித்த எல்லாம்வல்ல இறைவன் இஃதென்ஞான்றும் நிலைபெறுமாறும் கருணை புரிவாராக. இதிற் பிழையுளதாயின் உலகம் பொறுக்க.

15—3—08.
கோமளேசுவரன்பேட்டை,
சென்னை.

கோ. வ.

தர்க்கபரிபாஷையின்

அநுக்கிரமணிகை.

1. பிரமாணம் 6-168.

2. அநுமானம் 46-98.

ஏதுப்போலி 81-98.

Koviloor Digital Library

INTRODUCTION

BY THE

Head Master,

HINDU THEOLOGICAL HIGH SCHOOL, MADRAS.

THE book herewith ushered into the world is a Tamil rendering of a very authoritative Sanskrit work on logic and metaphysics—The Tarka-paribasha of Kesavamisra who lived 600 years ago. Of the six DARSANAS or systems of Indian philosophy, the Nyayya whose sutras were formulated at least 2000 years ago by Gautama, dealing with the laws of reasoning and thought, was arduously studied from the very beginning, and manifold commentaries from time to time appeared on the original aphorisms. Tarka is in fact the first branch of study tackled by those who aim at becoming SASTRAJNAS or scholars.

A knowledge of its paribhasha, terminology, is indispensable to a careful understandig of Indian thought in general. Thus it was that apart from commentaries on the aphorisms of Gautama, several treatises on Tarka came later to be written; so that the literature on the subject of Indian Logic—or more properly dialectics mixed up with

metaphysics—is now considerable indeed. Of these later treatises, the Tarkaparibhasha of Kesavamisra occupies the front rank in importance and authority, as is evidenced by the fact that Prof. Aufrecht notes no less than twenty-three commentaries thereon.

Kesavamisra's work was translated into Tamil about 300 years ago by the well-known Sivaprakasa Swamigal of Thuraimangalam. It has been since printed; but the edition is seriously marred with errors and misprints, depriving the work of much of its intrinsic merit. The Tamil rendering is therefore reprinted correctly and issued now by Pandit Vadivalu Chettiar.

I should add a word about the notes on the Tamil text added by Mr. Vadivalu Chettiar. They have the great merit of being very concise and to the point, giving help to the reader just where help is needed. No Tamil reader of average intelligence can find difficulty now to read the book for himself. I have glanced at several portions and have compared some with the original Sanskrit work and the commentaries thereon. The Pandit has evidently taken no little pains to prepare these notes; he has indeed laid the entire Tamil reading public under an obligation to him.

It is high time that the knowledge contained in dead or foreign languages is rendered into the living tongue of the people and brought within reach of all. I trust that this publication will therefore be received with the appreciation that it so richly deserves. I can confidently recommend this work to any one who wishes to acquaint himself with a most interesting and instructive branch of ancient Indian learning—a study of which will qualify us in no small degree intellectually to grapple with the higher problems of life.

M. Krishnamacharyar, B. A., L. T.

21st February,
1908.

பண்டித சிரோமணிகளின் அபிப்பிராயம்.

பட்டஸ்ரீ பாலஸரஸ்வதி
பண்டித கு. நாராயண சுதரிசன சாஸ்திரியார்
அவர்களின் அபிப்பிராயம்.

தர்க்கபரிபாஷை அல்லது தர்க்கபாஷை யென்னும் நூல் வடமொழியிலுள்ள சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம், மீமாம்சை, வேதாந்த மென்னு மாறுதரிசனங்களு ளொன்றாகிய நியாயதரிசனத்தின் சுருக்கமாம். நியாயதரிசனம் முதல் முதல் கௌதமமுனிவராற் சூத்திரவடிவமாகச் செய்யப்பட்டது. அதற்குப் பாஷ்யம் (விருத்தியுரை) வாச்சியாயன முனிவராற் செய்யப்பட்டது. இந்நியாயசாஸ்திரத்தை யனுசரித்து முதல் முதல் பின் வந்த நூல்கள் உதயனாசாரியரருளிய நியாய குசுமாஞ்சலி, கிரணாவலி, ஆத்மதத்துவ விவேகமென்னும் பௌத்தாதிகாரமுமாய விம் மூன்றுமேயாம். அதன் பின்னர் இவற்றின் வழிவந்த நூல்கள் பெரும்பான்மையும் இவ்வாசிரியர் கூறிய பதினாறு பதார்த்தங்களையும், நியாயசாஸ்திரத்தை வேறுவழியாக விசேடித்துக் கூறிய வைசேடிகமதப் பிரவர்த்தகரான கணாதமுனிவர் சூத்திரத்திற் கண்டவாறு பதார்த்தங்க ளெழுவகையெனக் கூறிய பாகுபாட்டையுமே தழுவி யவர் மதத்தினின்றுஞ் சிறிது சிறிது வேறுபாட்டையடைந்து நின்றன. கௌதமீயமுங் கணாதமுமென்னு மிரண்டையுந் தமக்கு முதனூலாகவே யெண்ணிச் சிந்தாமணி முதலிய நூல்களைக் கங்கேசோபாத்தியாயர் முதலிய புலவர்களியற்றத் தொடங்கினர். பிறகு, அச் சிந்தாமணிக் கிரந்தத்திற் குரையாசிரியராகிய இரகுநாதசிரோமணி பட்டாசாரியர் தாமியற்றிய "தீதி" என்னுமுரையில் இப்

போத வழக்கும் நியாயமதத்தை விரித்து ஸ்தாபித்திருக்கின்றார். அவரே தமதபிப்பிராயத்திற்கிணங்க ஆத்மதத்துவபோதமென்னு முதயனுசாரியர் கிரந்தத்திற்கும் பிரகாசமென்னு மோருரையு மியற்றிச் சுவதந்திரமாய்க் கௌதமகணாதர்களிருவர் மதத்தையுந் தழுவியதாய் ஓர்வழியைக் காண்பித்தனர். அக்காலமுதற்கொண்டு பவாநந்தர், மதுராநாதர், ஜயதேவரென்னும் பட்சதார், ஜகதீசர், கதாதார், கிருஷ்ணம்பட்டர், மஹாதேவபட்டர் முதலிய சிறந்த வித்துவான்கள் அந்தத் 'தீதிதி' க்கே தங்கடங்களுரைகளை விரித்துச்செய்தும் தத்தம் பெயர்களுடன் தனித்தனிநூல்களியற்றியும் மூலமாயுள்ள சூத்திரம், பாஷியம், வார்த்திக முதலியவற்றைச் சிறிதேனு மெடுத்து வழங்காது பிராசீன தர்க்கமதமென்று மாத்திரஞ் சிற்சிலவிடங்களிற்கூறியதுடனின்றுவிட்டனர். இந்நூதன மதத்தை யனுசரித்துத்தான், அன்னம்பட்டித் தருக்க சங்கிரகம், அன்னம்பட்டீயம், நீலகண்டப் பிரகாசிகை, நியாய சித்தாந்த மஞ்சரி, அதனுரையாகிய தர்க்கப்பிரகாசம், காரிகாவலி, முக்தாவலி, தினகரி, ராங்கினி முதலிய பிரகரணங்க ளேற்பட்டன. இப்போது இத்தர்க்கபரிபாஷை யென்னு மிந்நூல் அவ்வித நவீன தார்க்கிக மதத்தையே தழுவாது முதனூலாகிய கௌதம சூத்திரத்தின் பகுபாட்டையே நாடி அப்பண்டைக் காலத்துத் தார்க்கிகர்கள் கொண்டிருந்த கொள்கைகளையே முக்கியமாகத் தழுவி அவற்றிற்கிணக்கமாகவே இலக்கணங்களையுங்கூறி அக்கௌதமசூத்திரத்தின் பொருளை யெளிதிலறியுமாறு சுருக்கமாய்க் கேசவமிசிர ரென்னுமோர் மைதிலகௌடராற்செய்யப்பட்டது. இவர் பவானந்தர் முதலிய நவத்வீப வித்வான்களால் தழுவப்பட்ட நவீன தார்க்கிகமதத்துக்கு முன்பே நன்கு பிரகாசித்திருந்த பிராசீன தர்க்க வழியைப்பற்றி யிருப்பதால் ஏறக்குறையப் பத்துநூற்றாண்டுகட்கு முந்தியே இந்நூல் வரையப்பட்டிருத்தல் வேண்டுமெனப் புலப்படு

கின்றது. இதற்குப்பிறகுதான் பிரகரண சாரியர்களாகிய விசுவ நாதபஞ்ஞானன பட்டாசாரியரும், அன்னம்பட்டரும் தத்தம் பிர கரணங்களை யியற்றியிருக்கின்றன ரென்பது அவர்கள் நூல்களை யாராய்ந்து பார்க்குமிடத்துத் தெரியவருகின்றது. இத்தர்க்க பரிபாஷை முதல்நூல்களின் கருத்தை யுள்ளவாறெடுத் தெளி திற் காட்டக்கூடியதோர் நூலாயிருப்பதனால் இது நமதாரியதர்க்க மதம் இவ்வாறு ஆதியிலேற்பட்டிருந்த தென்பதைத் தெள்ளிதின் காட்டுந் தன்மையதாம். அவ்வாறிருத்தல்பற்றி ஆரியபண்டிதர் கட்கு அத்தியந்தோபகாரமாக விருக்கு மிது தமிழில் துறைமங் கலம்-சிவப்பிரகாசசுவாமிகளால் சிலநூற்றாண்டுகட்கு முன்னே மொழிபெயர்க்கப்பட்டது. அம்மொழிபெயர்ப்புத்தகுந்த பதிப்புட னில்லாது காலவேறுபாட்டாற் பலவழுக்களோடு விரவியிருந்தமை யின், அதனை இந்து தியாலாஜிகல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர், நோ. வடிவேலு செட்டியாரவர்கள், விஷ்ணுபுரம் பிரஹ்மஸ்ரீ இராமசந்திரசாஸ்திரியாரவர்களின்உதவியைக்கொண்டுவடமொழி மூலத்தோ டொத்துப்பார்த்துத்திருத்தி, தகுந்தபடியெளிதில் தர்க்கஞானம் படிப்போர்க்கு உதயமாகும்படி குறிப்புரையொன்று மிகவும் பரிஸ்ரமப்பட்டெழுதிப் பிரசுரித்திருக்கின்றனர். இப் பதிப்பி லுள்ள மொழிபெயர்ப்புங் குறிப்புரையுஞ் சொற்பொருள் வழுஉக்களின்றி மூலத்திற் சொத்து உண்மைப் பொருளைத் தெளிவாய்க் காட்டுகின்றன வென்பது அவற்றை யாராய்ந்து பார்க்கு மறிஞருக்கு நன்குபுலப்படும். இக் குறிப்புரை யானது இத் தர்க்கபாஷையின் வியாக்கியானங்க ளாகிய கௌரீகாந்தீயம், தாமோதரீயம், கோவர்த்தநீயம் முதலிய வற்றைத்தழுவிய வுரை நடையென யான்கண்டவரையிற் றோற்று கின்றது. மிகப்பழையதோர் பிரபந்தமாகிய இத்தர்க்கபரிபாஷை நந் தமிழ்நாட்டுத் தர்க்க மாணவருக்கு மிகவும் உபயோகமுள்ளதா

விருப்பதுபற்றி அதனை மிகப் பரிஸ்ரமமெடுத்தெழுதிய குறிப்புரை யோடு வெளிவரச்செய்து அதனால் தர்க்கமதத்திலிருந்த அரிய பொருள்களை அனைவருமெளிதிலறியும் வண்ணஞ்செய்த ஷை செட்டியாரவர்களின் பரிஸ்ரமம் மிகவும் பயனுளதென்பதும், இதுபோ லாழ்ந்துகிடக்கும் அரியபெரிய நூல்களைப் பிரகடனஞ் செய்யு முயற்சிகொண்ட பண்டிதர்களுக்கு மோருத்சாகமுண்டாமென் றுவ தற்கு நமதாரியநாட்டுச்சகோதரரெல்லோருங் கடமைப்பட்டிருக் கின்றோ மென்பதும் என்னுடைய மனப்பூருவகமான வபிப்பிராய மாம்.

———

வேதாந்த வித்வத் சிரோமணி,

தஞ்சைமாநகரம் ஸ்ரீமத். வே. குப்புசாமிராஜு அவர்கள்

இயற்றிய

நேரிசை யாசிரியப்பா.

ஒண்பொருள் விளங்க வோதிய வைதிக
சாத்திர மாறிற் சால்புடைக் கோதமன்
சொல்லிய நியாய சூத்திர மதுதான்
பாடிய மாதிப் பலவாய் விரிந்தன
தென்றெனி யப்பொரு ளெளிதினிற் சுருக்கிக்
கட்டிமொ ழுவந்திக் காசினி யோர்க்குத்
தருக்க பாடைத் தனிச்சிறு நூலைச்
சாற்றினன் கேசவ மிசிரச் சான்றோ
னாரிய முணர்ந்தோர்க் கல்லா லதனு
லேனைய தமிழர்க் கிலையே பயனென்

றிரங்கிச் சிவப்பிர காசப் பெரியோ
னினிய தமிழா லியற்றின னதனைக்
கூட்டியுங் குறைத்தும் பதித்தனர் சிலரே
யிவ்வணம் பொருடிரிந் திருப்பது கண்டு
சென்னைப் பதியுறு சீர்சால் பண்டிதன்
வேதாந்த பரிபா டையே முதலாப்
பன்னாற் றமிழிற் பாவுவான் மொழிபெயர்த்
தச்சிடு வித்த வரிய குணத்தோன்
வடிவேலு செட்டியென் வளமிகு பெயரோன்
கூட்டியுங் குறைத்து முளவவை திருத்திப்
பாலர்க்கு மெளிதிற் பயன்படு மாறு
வியன்குறிப் புரையொடு வெளிப்படுத் தினனா
லித்துணை யுதவி யியற்றிய வன்றே
னிவணெடுங் கால மினிதே வாழ்க
வென்றிவை யெல்லா மியக்கு
மிறைவ னடிக்கெம் மிதயஞ்சேர்ப் பாமே.

சேலம் ஜில்லா,

திருப்பத்தூர் முனிசிபல் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்
ஸ்ரீமத் போ. நல்லதம்பிப்பிள்ளை அவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொன்பூத்த விதழிநறுந் தொடைபுனைந்த
சங்கரனார் புனிதப் பாதம்
மின்பூத்த வுளத்தமைத்த சிவப்பிரகா
சப்பெரியோன் விரும்பி முன்னாட்

டென்பூத்த தென்மொழியால் வடமொழிசின்
றேதிரித்துச் செய்த தர்க்கக்
கொன்பூத்த பரிபாடை யெனுநூற்குக்
குறிப்புரையைக் குறித்து மன்னே. (1)

கற்றவர்கேட் டவரிதயங் களிகூரத்
தெளிவாகக் கனிவாச் செய்தான்
பொற்பமரும் பலகலையி னுண்பொருடேர்ந்
திந்துதியா லாஜி கல்லாஞ்
சொற்பெருகுஞ் சென்னையுய ராங்கிலக்கல்
லூரியினிற் றேமி றென்னூற்
கற்பிக்குங் கோவடிவே லுச்செட்டி
யாரென்றுங் கவிஞன் மாதோ. (2)

ஸ்வயோநந்த யோகிகளென்னும்
பொதிகைமலைச் சித்தர் பொன்னடிக்காளாகிய
ஞானாநந்த நாதமுனி சுவாமிகள் மாணாக்கருளொருவராகிய
வேதாந்தவித்வத் சிரோமணி

ஸ்ரீமத். ல. நாராயணசாமி நாயகரவர்கள் இயற்றிய

பன்னிருசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

உலகனிலே யாய்ந்திரு மறைப்பொருளின் முடிவையு
மொன்றலா வான்ம சொருபத்
தொடபதார்த் தங்கள்பதி னறினியல் தெளியக்கே
சவம்சிர ஞோர்ந்துன்னியில்

கிலகுதொடை மேலவ ரணிந்துஜய சிலரா
　　யிருமாப்பி னெடுமெகிழ்தர
வினியதாந் தர்க்கபரி பாஷையெனு நூலதைமு
　　னேற்றவா ரியத்திசைப்பப்
புலவர்புகழ் துறைமங்க லச்சிவப் பிரகாச
　　புண்ணியன் போதரூபன்
பூமணங் கொள்கிலா லத்தையொப்பத் தமிழிற்
　　போந்துறச் செயவுறுபிழை
விலகவுரை யிலகக் குறிப்புரையு மெழுதினான்
　　வியனிரத் தினசிரேட்டி
விளம்புரை மருதவடி வேற்சிரேட்டிக்கரையின்
　　மேதையான் புலவரேறே.

ஸ்ரீசாது இரத்தினவேதாந்த விசாரணைச் சபையினரு
ளொருவரும், நியாயப்பிரகாசமெனப் பெயரிய தர்க்க
சாஸ்திரத்தின் மொழிபெயர்ப் பாசிரியரு மாகிய

ஸ்ரீமத். பு. நாகரத்தின நாயகரவர்கள்

இயற்றிய

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பாரிலுயர் கௌதமனார் பாத்துளப தார்த்தம்பதி னாறு நன்குய்த்
தேரிதக்கே சவமிசிரன் செய்தருக்க பாஷைதமிழ் செய்த ளித்தான்
மாரியெனும் வாக்குடைய சிவப்பிரகாசப்புனிதன்மலைமேற்சோதிக்
கூரிதெனப் புலவோர்பா னளியிரங்கிக் குறிப்புரைநன் குயிற்
[றினனால்.

அன்னவன்யா ரெனினுரைது மத்துவிதச் சித்தாந்தத் தார்வ மிக்கோன், பொன்னனரத் தினநாமச் சற்குருவின் போதனையாற் புலமிக் குற்றோன், மன்னுதமி ழாசிரியன் மாசறுநல் வேதாந்தம் வாய்ப்பச் சொல்வோன், சொன்னலத்த னன்னடையன் சுகுண முளான் வடிவேற்பேர்த் தூயோனன்றே.

The Tharkabasha edited by Kasavamisra is a smal compendium on Logic written on the lines of the Nyaya Philosophy by Gowthama, one of the six systems of Hindu Philosophy. As the Tharkabasha presents in a nutshell the whole range of the Nyaya and consequently difficult for beginners, Mr. K. Vadivalu Chettiar with a view to make the work easily understandable by every one has written an exhaustive annotation. I have read the whole of this and I find that Mr. Chettiar has spared no pains to explain all the difficult and knotty points by means of illustrations. Mr. Chettiar's knowledge of Logic is simply admirable as would be seen by the various important points in the Nyaya and Vaiseshika systems clearly dealt with here. I am of opinion that this book will be found to be very useful and a great help to the study of larger treatises on Logic.

V. MURUGASA MUDALIAR,
PRESIDENCY POST OFFICE, MADRAS,
& a member of the
" SADHU RATNA VEDANTA VICHARANA SABHA."

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
7	10	கிரியை	முயற்சி
ஷை	19	காரண	கரண
16	11	சொல்வது	சொல்வது ஈண்டு
17	17	(திரவியம்-குடம்)	திரவியம் (குடம்)
18	13	முதலியவற்குப்	முதலியவற்றிற்குப்
21	7	(சையோக)	(கர்மஜசையோக)
48	10	சமயலறை	சமையலறை
85	25	க்ஷணப்போதிருப்ப	க்ஷணப்போதிருப்ப
95	3	கடமுத	காரியவடிவ அப்புமுத
,,	20	கடமுத	ஷை
101	5	வாக்கியார்த்தம்	வாக்கியார்த்த
,,	6	தரிசன	தரிசனம்
161	5	லிங்கமான	லிங்கமா
194	8	விடம்	விடய
208	3	(சத்தம்,	(சத்தம்),
,,	4	விபாகம்)	விபாகம்(
237	21	சையும்	மெய்யும்
240	14	சையும்	மெய்யும்
248	10	மயக்கமே	(மயக்கமே)
249	13	(ஒலி	(ஒலி)
254	13	சுதந்தன்	சுந்தன்
269	5	யடையது	யுடையது
291	5	செங்குடமில்லை‘	செங்குடமில்லை”
372	25	யேது	வேது
380	2	(குண	(குண)

அகத்தியத் தருக்க சூத்திரம்.

பொருள்குணங் கருமம் பொதுச்சிறப் பொற்றுமை
யின்மை யுடன்பொரு ளேழென மொழிப. (1)

மண்புன லனல்கால் வெளிபொழு தாசை
யான்மா மனதோ டொன்பதும் பொருளே. (2)

வடிவஞ் சுவையிரு நாற்ற மூறெண்
ணளவு வேற்றுமை புணர்ச்சி பிரிவு
முன்மை பின்மை திண்மை நெகிழ்ச்சி
சிக்கென லோசை யுணர்ச்சி யின்பந்
துன்பம் விருப்பம் வெறுப்பு முயற்சி
யறமறம் வாதனையொடு குணமறு நான்கே. (3)

எழும்பல் விழுதல் வளைத னிமிர்த
னடத்த லுடனே கருமமை வகைத்தே. (4)

பொதுமை மேல்கீ ழெனவிரு வகையே. (5)

மன்னிய பொருளின் கண்ணவா யவற்றின்
வேற்றுமை தெரிப்பன பலவாஞ் சிறப்பே. (6)

ஒற்றுமை யாப்பலீ தொன்றே யென்க. (7)

முன்னின்மை பின்னின்மை முற்றுமின்மை
யொன்றினொன் றின்மையென் றின்மை நான்கே. (8)

மண்ணீ ரனல்கான் முறையே நாற்றந்
தட்பம் வெப்பமூற்ற மாகி
மெய்ப்பொரு ளழிபொருண் மேவு மென்க. (9)

அணுக்கண் மெய்ப்பொருள் காரிய மழிபொருள்
பிருதிவி நித்திய வநித்திய வணம்பெறும்
நிலையறும் பொருணிலை யில்லது காரியம். (10)

அதுவே:—

உடல்பொறி விடய மூவகைப் படுமே
நம்மனோர் யாக்கை மண்கூற் றுடம்பு
நாற்றங் கவர்வது நாசியி னுனியே
மண்கல் முதலிய விடய மாகும். (11)

நீரிறை வரைப்பிற் கட்டுநீ ருடம்பு
சுவைத்திறங் கவர்வது நாவி னுனியே
கடல்பா குதி விடய மாகும். (12

கதிரோன் வரைப்பிற்கட்டன லுடம்பே
யுருவங் கவர்வது கருமணி விழியே
மன்னின் வயிரு கரநால் விடயம். (13)

வளியிறை வரைப்பிற் கட்டுகா லுடம்பே
யூற்றங் கவர்வது மீங்தோ லென்க
விடய மாமுத லசைதற் கேதுவே
பிராண னுடலகத் தியங்குங் காற்றே. (14)

விசும்பே காலந் திசையோ டான்மா
மனமிவை யைந்து நித்தியப் பொருளே. (15)

ஓசைப் பண்பிற் றுகா யம்மே. (16)

இறப்புமுதல் வழக்கிற் கேதுக் காலம். (17)

கிழக்குமுதல் வழக்கிற் கேதுத் திசையே. (18)

அறிவுப் பண்பிற் றுன்மா வென்க
விறையே யீசன்முற் றறிவனோர் முதலே
யுயிர்தா னுடறொறும் வெவ்வே றுகும். (19)

மனமணு வடிவாய் வருமின்பாதி
யறிதற் கின்றி யமையாக் கருவி
யாகிப் பலவா யழிவின் றாறுமே. (20)

உ

கடவுள் துணை.

இந்நூலுரையாசிரியர் மாணாக்கருள் ஒருவராகிய
ம-ா-ா-ஸ்ரீ. தே. கிருஷ்ணசாமி பிள்ளை யவர்கள்
இயற்றிய

சிறப்புப்பாயிரம்.

நேரிசை யாசிரியப்பா.

பூவார் வாணியைப் புணரு நான்முகன்
றூஅன் படைத்தவித் தாரணி தனக்கோர்
சிறுவையாய் விளங்குமிச் சென்னையைச் சார்ந்த
மாதர்க ளணியு மாண்பார் நத்தின்
முத்தொளி விளங்க முழுமதி யெனவே
குவளைப் போதலர் கூமமார் வயலிற்
செங்நெற் கதிர்கள் செழித்தோங் குதலாற்
காண்பா ரியாருங் கழையெனக் கழற
வளமுள பிணிமுகம் வாரமாய்த் தங்கக்
கோகிலங் காவிற் குலாவிக் கூவக்
கற்புடை மாதர் கவின்செய்து நிற்க
ஓதைக் கவரிய னுறைவென வுறையுங்
கோவலர் போற்றுங் கோமளேச் சுரநகர்
வந்து குடிகொண்ட வடமுகத் தவரிற்
பேரிவை சியரெனும் பெருங்குடித் தர்ம
சிவாசா ரியர்தஞ் சீரிய மடத்தைச்
சிந்தை செய்யுநற் றேசிக குலத்தனுஞ்

சுப்பரா யப்பேர் சுந்தரன் றானுந்
தங்க நிகர்குணத் தனக்கோட்டி யம்மையும்
புகலிட மெனவே போற்றுமா ணவருஞ்
செய்தவப் பேற்றான் சிந்தையுட் களிப்பச்
சாலிவா கனநற் சகாப்தந் தன்னி
லாயிரத் தெழுநூற் றாண்டதைச் சேர்ந்த
வுருத்திரோத் காரியென் னுகந்த வருடத்
துதித்தன னன்றே யுவப்புறப் பலரு
மிங்ஙன முதித்த விவனூ ரென்னி
றொல்காப் பியமுந் திருக்கோவை யாருந்
திருவள்ளு வர்செய் திருக்குற டானு
மியற்றமிழ் வல்லனு மிராமா னுஜா
யகரிடம் பல்காற் பயின்ற வறிவினன்
றிருவள்ளு வர்செய் திருக்குற டனக்கோர்
விருத்தி யுரைவரைந்த வித்தகன் ஞான
சாத்திர மனைத்துந் தருக்கசாத் திரங்களுஞ்
சமயக் கரிவாய் தாம்விட் டலறத்
துரத்துஞ் சிங்கமாந் தூய்குணத் தண்ண
லிரத்தினத் தேசிக னிணையடி யேத்திச்
சித்தத் துணர்ந்த சிவஞானச் செல்வ
னூலடி யமர்ந்த வவிர்சடை யண்ண
றந்த வைதிக சாத்திர மாறனு
ளுத்தம நூலா முபநிட தத்து
ளுரைக்கு ஞான மொன்றே யுண்மை
யென்றே கழறு மெழிலார் ஞானி
தமிழுல கேத்துந் தவாநிலை யாளன்
காமம் வெகுளி கடும்பற் றுள்ளம்

மான முலைகை மரமெரு மாறும்
போர்மிய சீமான் புகல்வடி வேலெரு
மபிரா னற்றொடிக் கார்ந்தமெலம் மாசாள்
செய்ய ாரரை ஜீவ யாதக்
கட்டின வெள்ளைச் சுழுதுராத் தலைக்கோ
ரகுப் குறிப்புரை பகிர்ந்தமெல் கோமா
னொம்ம ரெருமோரா மொழிதிலின் முத்தி
படைபும் பல்லை மழிருர்க ருயைந்த
சித்தார்ந்த பிக்கு முரவாச் சிறந்தபன்
ஞான அற்பின யத்தமெவி யிட்டோர்
விர்தச முனைர்த்தும் வேறந் தலைக்கோ
ரக்க மாபொளிர்ச் தறிவுடை போர்புகழ்
ரகுக்க தர்பலமெசக் தமிழ் விளைமையின்
னொத்தகைபோரு மெலிநிலி ருவரத்
ரகுக்கபளி பாவைடியைத் தரும்பலர சோதித்
திக்கிலைப் புலவோர் கினிதுரைம் வியப்பப்
பன்னருஞ் சிறப்புப் பனாத விளக்கப்
பகார்ந்த வியக்மினாப் பரிதிபோர்த் காட்டி
விந்தார மாக விரித்துக் குறிப்புரை
பெழுதி யெம்மனோர்க் கெந்ன வாதின
ராமக லைபத்து ரக்கிட மிருவொளக்
கூறவே வோரன் குலத்தனி யுதித்த
சன்முக மொறுர்ந்கை சார்ந்தவே தாந்த
தர்பெறுங் கடவு ளன்னிதி ருவார்க்கோர்
தேசிக வடிவினச் சிந்தைசெய் சீலன்
யாவரு முணர வலவயின்
அச்சிற் பதிப்பித் தளித்தன னன்றே.

உ

கடவுள் துணை.

தர்க்கபரிபாஷை.

I. நியாயநூற் பிரவேசஞ் சுருங்கிய கேள்வியினு லடை தலை மடியனுயும் வாஞ்சிக்கின்ற பாலனெவன் அவ னுக்கு யுக்தியன்வித தர்க்கபரிபாஷையை யான் சுருக்கி விளக்குகின்றேன்.

(குறிப்புரை.) நியாயநூற்பிரவேசம் - தர்க்கனூலோத முய லுதல்; அரிஷ்டத்தைச் சம்பாதித்தல் தர்க்கமெனப்படும்; மடியன்- சோம்பலுடையவன்;வாஞ்சிக்கின்ற-விரும்புகின்ற;பாலன் - தர்க்க பரிபாஷையினர்த்தத்தைக் கிரஹித்தலிலும் உள்ளத்தமைத்தலி லும் வல்லுநன்,குழவிப்பருவத்தனல்லன்; யுக்தியன்வித-யுக்தியோடு கூடிய:இது கூடும், இது கூடாதெனத் தன்னிடத்திற்றோன்றுவது யுக்தியெனப்படும். யுக்தியெனினும் பொருந்துமாறெனினு மொக் கும்; தர்க்கபரிபாஷை-தர்க்கத்தின்பரிபாஷை. பரிபாஷையாவது சாஸ்திரத்தின் அசாதாரண சங்கேதம். சங்கேதம்-இச்சை. அது பிரமாண முதலியனவாம்.

2. பிரமாணம், பிரமேயம், சம்சயம், பிரயோசநம், திட்டாந்தம், சித்தாந்தம், அவயவம், தருக்கம், நிண்ண யம், வாதம், சற்பம், விதண்டை, ஏத்துவாபாசம்,

சலம், சாதி, நிக்கிரகத்தாநங்களது தத்துவஞானத்தால் உயர்சிறப்படைப.

(கு-ரை.) சரீரமுதலிய சகல பதார்த்தங்களினும் ஆத்மா வேறென்னும் நிச்சயம் தத்துவஞானமெனப்படும். தத்துவஞானத்திற்கேது மனனமாம்.

ஆத்மா பிறபதார்த்தங்களினும் வேறு; ஆத்மத்தன்மையால்; எது பிறபதார்த்தங்களினும் வேறாகாது பிறிதாகுமோ, அஃது ஆத்மாவன்று; கடம்போல; என்னும் வியதிரேகி அநுமானத்தினால் ஆத்மாவில் பிறபதார்த்தங்களினது பேதத்தின் அநுமிதியுண்டாகின்றது.

பிறபதார்த்தங்களின் ஞானமின்றி ஆத்மாவில் பிறபதார்த்தங்களினது பேதத்தின்ஞானம் சம்பவிக்கமாட்டாது; ஏனெனின், எதற்குப் பிறவற்றில் பேதமிருக்கின்றதோ அது பேதத்தின் பிரதியோகி (எதிர்மறை)யாம். அந்தப் பிரதியோகியின் ஞானமின்றிப் பேதஞான முண்டாகமாட்டாது. ஆதலால், ஆத்மாவினிடத்துப் பிறபதார்த்தங்களினது பேதத்தின் அநுமிதிவடிவ மனனத்தின் உபயோகியான பிரமாண முதலிய பதார்த்தங்களின் நிரூபணமும் தத்துவஞானத்திற்கு உபயோகமாயிருக்கின்றதென்க.

உயர்சிறப்பு-மோக்ஷம்; அடைப-அடைவார்கள்.

அறம், பொருள், இன்பம், வீடென்னும் புருஷார்த்தங்களுள் வீடு மிகு சிரேட்டமாயிருத்தல்பற்றி 'உயர் சிறப்பு' என்று கூறப்பட்டது.

3. இது நியாயத்தினது முதற்சூத்திரம். இதன்பொருள்: பிரமாணமுதற் பதினாறு பொருளது உண்மை யறிவால் விடடைத லுளதாமென்பது.

(கு-ரை.) நியாயம் வைதிகசாத்திர மாறனுளொன்று. இதன் கர்த்தா கௌதமர். மீமாம்சை, நியாயம், வைசேஷிகம், சாங்கியம், யோகம், வேதாந்தம் என வைதிக சாத்திரம் ஆறும்.

பதினறு பொருளென்றது பதினறு பதார்த்தங்களை; பதார்த்தம்-பதத்தாற் பெயரிட்டு வழங்கற்பாலது.

4. எவ்வளவும் பிரமாண முதலியவற்றின் உத்தேச, இலக்கண, பரீக்ஷை பண்ணப்படாது அவ்வளவும் அவற்றின் உண்மை யறிவு உண்டாகாது. எங்ஙனம் பாஷியகாரர் கூறினர் அங்ஙனம் இந்நூலது பிரவிருத்தி: உத்தேசமும், இலக்கணமும், பரீக்ஷயுமென மூன்று வகைத்து.

(கு-ரை.) பாஷியகாரர் - வாச்சியாயன மகரிஷி. இவர் கௌதம சூத்திரத்தி னுரைகாரர்.

i. உத்தேசம்—Enunciation.

5. உத்தேசமாவது பெயர் மாத்திரையாற் பொருளைச் சொல்வது. அதுவு (உத்தேசமு)ம் இச்சூத்திரத்தானே பெறப்படும்.

(கு-ரை.) "அறியவுணர்த் துறுபொருளை நாமமாத் திரையாலறைந்திடுதே லுத்தேசம்". பெயர்மாத்திரையால்-பெயரளவாலே.

ii. இலக்கணம்—Definition.

6. இலக்கணமாவது சிறப்பியல்பு. எங்ஙன மெனின் ஆ (கோ) விற்குத் தாடி முதலிய வுடைமை.

(கு-ரை.) "ஊகம் பளமாங் குறியுடைய தாமெனல்போ லப் பொருளிற் சிறந்த குறியுரைத்த விலக்கணம்". சிறப்பியல்பு-சிறந்த குறி.ஒன்றிற் சிறப்பாயிருப்பதாகியகுறி இலக்கண மெனப்படும். இஃது அவ்வியாப்தி, அதிவியாப்தி, அசம்பவமென்னு முக்குற்றங் களு மின்றியிருக்கும். இங்ஙனமிருப்பதே சத்லக்ஷணம் எனப்படும்.

மேற்கூறிய குற்றங்களுள் யாதேனுமோர் குற்றத்துடன்கூடிய இலக்கணம் அசத்லக்ஷண மெனப்படும்.

(1) இலக்கியத்தின் ஏகதேசத்தில் இலக்கண மிருத்தல் **அவ்வியாப்தி** யெனப்படும்.

இதற்குதாரணம்:—கபில நிறமுடையது ஆ (பசு) என்றுற் போல்வதாம். கபிலநிற (ஒரேபிங்களவர்ண) முடைமை ஆவடிவ இலக்கியத்தின் ஏகதேசத்திருப்பதன்றி ஆ மாத்திரத்தில் (முற் றும்) இராமையின் கபிலநிற முடைமை யென்னு மிவ்விலக்கணம் அவ்வியாப்திக் குற்றமுடையதாம்.

வியாப்தி-நியதமான உடனிகழ்ச்சி. அது சிலவிடத்திற் குறைந் திருத்தல் அவ்வியாப்தி. அஃதாவது வியாபித்தலின்மையாம்.

(2) இலக்கியத்திலேயேயன்றி இலக்கியமல்லாததன் கண் ணும் இலக்கண மிருத்தல் **அதிவியாப்தி** யெனப்படும்.

இதற்குதாரணம்:-கொம்புடையது ஆ என்றுற்போல்வதாம்.

கொம்புடைமை இலக்கியமாகிய ஆ முற்று மிருப்பதன்றி இலக்கியமல்லாத எருமை ஆடு முதலியவற்றின்கண்ணு மிருத் தலின், கொம்புடைமை யென்னு மிவ்விலக்கணம் அதிவியாப்திக் குற்றமுடையதாம். அதிவியாப்தி-மேல்வியாபித்தல்.

(3) இலக்கியத்திலாது இலக்கிய மல்லாததன்கண் இலக் கண மிருத்தல் **அசம்பவ** மெனப்படும்.

இதற் குதாரணம்:-ஒற்றைக்குளம்புடையது ஆ என்றாற் போல்வதாம். ஒற்றைக்குளம்புடைமை இலக்கியமாகிய ஆவிலிராது இலக்கியமல்லாத குதிரையின்க ணிருத்தலின் ஒற்றைக் குளம் புடைமை யென்னு மிவ்விலக்கணம் அசம்பவக் குற்றமுடையதாம்.

அசம்பவம்—சம்பவிக்காமை; அஃதாவது பொருந்தாமை.

மேற்கூறிய குற்றங்களின்றிய நல்லிலக்கணம் சோருபம், தடத்த மென விருவகைத்தாம்.

(i.) எது (ஒன்றிற் சிறப்பா யிருப்பதாகியகுறி) எப்போது மிருப்பதாய் வியாவர்த்தகமாய் (மற்றவற்றினின்றும் வேறுபிரித் தறிவிப்பதாய்) இருக்கின்றதோ அது சோருபலட்சண மெனப் படும்.

இதற் குதாரணம்: - களகம்பளம் (அலைதாடி) உடையது ஆ என்றாற் போல்வதாம். களகம்பளமுடைமையாகிய இலக்கணம் ஆவாகிய இலக்கியத்தின்கண் எப்போதுமிருப்பதாய் ஆவினை ஆடு முதலியவற்றினின்றும் வேறுபிரித்தறிவிப்பதாயிருத்தல் காண்க.

(ii.) எது ஒருகாலத் திருப்பதாய் வியாவர்த்தகமா யிருக்கின் றதோ அது தடத்த லட்சண மெனப்படும். உபலட்சண மென்ப தும் இதிலந்தர்க்கதமாம். (காரியத்திற் சம்பந்தமின்றிய வியா வர்த்தகம் உபலக்ஷணமாம்.)

இதற்குதாரணம்:-காகமுடையது தேவதத்தன் வீடு என்றாற் போல்வதாம். காகமுடைமையாகிய விலக்கணம் தேவதத்தன் வீடாகிய இலக்கியத்தின்கண் ஓர்காலத்திருப்பதாய்த் தேவதத்தன் வீட்டை யக்கியதத்தன் வீடு முதலியவற்றினின்றும் வேறுபிரித் தறிவிப்பதாயிருத்தல் காண்க.

iii. பரீக்ஷை—INVESTIGATION.

7. இலக்கியத்திற் கிலக்கணம் பொருந்துமோ பொருந் தாதோவென்று ஆராய்தல் பரீட்சை.

(கு-ரை.) "இலக்கியமாம்பொருளிற் செறிவுறுமவ் விலக்கண முண் டோவிலையோ வென்னத் தெரிந்திடுதல் பரீட்சை." உத்தேச விலக்கணங்களின் பொருத்தம், பொருத்தமின்மை யென்னும் இரண்டிலொரு பயனையுடைய விசாரம் பரீட்சையாம்.

8. ஆதலின், இவ்விலக்கண பரீட்சைகள் (இலக்கண மும் பரீட்சையும்) பிரமாணாதிகளுடைய உண்மையறி வின் பொருட்டு அவசியம் வேண்டப்படுவன. அவற்று (பிரமாணாதிகளு) ள்ளும் முதற்கண் உத்தேசித்த பிர மாணத்திற்கு இலக்கணம் முறையே கூறப்படும்.

(கு-ரை.) இலக்கணமும் பரீட்சையு மில்லாவிடத்துப் பதார்த்தங்களின் ஞான முண்டாகாமையின் அவை அவசியம் வேண்டப்படுவனவாயினவென்க.

I. பிரமாணம்-PROOF.

Means of Knowledge.

9. பிரமைக்குக் கரணம் பிரமாணம். இதிற் பிரமாணம் இலக்கியம்; பிரமாகரணத் தன்மை இலக்கணம்.

(கு-ரை.) பிரமை - உண்மையநுபவஞானம்; அஃதுண்டா தற்குச் சிறந்தகாரணமா யிருப்பது பிரமாணமாம். எனவே, பிர

மாண ஐந்திரியஞானம் பிரமை யெனப்பட்டது. பிரமா என்பது பிரமையெனத்திரிந்து நின்றது.

பிரமையை யுண்டுபண்ணுந் தன்மை பிரமாணத்திற் கிருத்த லின் அதுவே (பிரமாகாணத் தன்மையே) பிரமாணத்திற் கிலக் கணமாம்.

கரணமென்பது சிறப்புக்காரண மென்றும், காரண மென் பது பொதுக்காரண மென்றும் அறியவேண்டும்.

சகல காரியங்களுக்கும் ஈசுவரன், அவரது ஞானம், இச்சை, கிரியை, திக்கு, காலம், அதிர்ஷ்டம், பிராகபாவம், பிரதிபந்தகா பாவமென்னு மிவ்வொன்பதும் பொதுக்காரணங்களாம்.

10. (ஆட்சேபம்.) அற்றாயின், பிரமாணம் பிரமைக்குக் கரணமாயின் அதற்குப் பலம் கூறல் வேண்டும்; கர ணத்திற்குப் பலமுடைமை நியமமாதலின்.

(சமாதானம்.) அஃதொக்கும். அத(கரணத்தி)ற்குப் பிரமையே பலம்; பலமாவது சாதி (நிச்சயி) த்தல். துணித் (வெட்டு)தற் கருவியாகிய நவியத்திற் (கோட ரிக்)குத் துணித்தலே பலம்.

(கு-ரை.) வெட்டுதற்குக் காரணமான கோடரிக்கு வெட்டு தலே பிரயோஜனமானாற் போன்று பிரமைக்குக் கரணமான பிர மாணத்திற்குப் பிரமையே பிரயோஜனமாம்.

பிரமை—RIGHT KNOWLEDGE.

11. எந்தப் பிரமைக்குக் கரணம் பிரமாணமோ அந் தப் பிரமை யாது?

சமாதானஞ் சொல்லப் படுகின்றது.

யதார்த்த அநுபவம் பிரமை; யதார்த்த மென்றது அயதார்த்தமாகிய ஐயம் (சந்தேகம்), திரிவு (விபரீதம்), தருக்க வுணர்வுகட்கு விலக்கு; அநுபவ மென்றது ஸ்மிருதிக்கு விலக்கு. அது (அநுபவம்) ஸ்மிருதிக்கு வேறாய வுணர்வு.

(கு-ரை.) அநுபவம்: உண்மையநுபவம் இன்மையநுபவ மென விருவகைத்தாம். பிரமாணத்தாற் றோன்றிய அனுபவம் யதார்த்த (உண்மை) அநுபவமாம். பிரமாணப்போலியாற் றோன்றிய அநுபவம் அயதார்த்த (இன்மை) அநுபவமாம்.

உண்மையநுபவம் ஐயந் திரிவு தருக்க ஞானங்கட்கு விலக்கா (வேறா) யிருத்தலின், அயதார்த்த அநுபவத்தை விலக்குதற் பொருட்டு அநுபவமென வாளாகூறாது 'யதார்த்த அநுபவ' மெனக் கூறப்பட்டது.

இவ்வுரு குற்றியோ மகனோ வென ஒருபொருளை மாறுபட்ட பலபொருளாக வுணர்தல் ஐயம்.

இப்பி (முத்துச்சிப்பி) யை வெள்ளியென ஒருபொருளை மற்றொருபொருளாக வுணர்தல் திரிவு.

தீயில்லையாகில் புகையுமில்லையாதல் வேண்டுமென அநிஷ்டத்தைச் சம்பாதித்தல் தருக்கம்.

சிலர் ஸ்மிருதிஞானத்தையும் பிரமையாகக் கொண்டிருத்தலின் அதனை விலக்குதற்பொருட்டு, யதார்த்தம் பிரமை யெனக் கூறாது 'யதார்த்த அநுபவம் பிரமை' என்று கூறப்பட்டது.

அநுபவத்தின் காரியமாய சம்ஸ்காரத்தி (வாசனையி) னால் தோன்றும் ஞானம் ஸ்மிருதி எனப்படும்.

இதனால் ஸ்மிருதிக் (நினைவிற்)கு வேறாய உணர்வு அநுபவமெனா நன்கு விளங்கும்.

அந்தச் சம்ஸ்காரத்தின் உற்போதகம் (எழுச்சி)

(i.) சம்பந்தியின் ஞானம்

(ii.) சாதிருசிய பதார்த்தங்களின் ஞானம்

(iii.) சிந்தனம் என்னும் மூன்றனுள் ஒன்றாலுண்டாகின்றது.

(i.) புத்திரனைப்பார்த்துப் பிதாவின் ஸ்மிருதியும் பிதாவைப் பார்த்துப் புத்திரனது ஸ்மிருதியு முண்டாகின்றன. ஆண்டுச் சம்பந்தியின்ஞானம் சம்ஸ்காரங்களி னெழுச்சிக்குக் காரணமாம். பிதாவிற்கும் புத்திரனுக்குமுள்ள சம்பந்தம் ஜனகஜன்னிய சம்பந்தமாம். பிதா-ஜனகன் (உற்பத்திசெய்கிறவன்),புத்திரன்-ஜன்னியன் (உற்பத்தியானவன்). அச் சம்பந்தமுடைய இருவரும் சம்பந்திகள்.

(ii.) ஒரு தவசியைக்கண்டு முற்கண்ட மற்றொரு தவசியின் ஸ்மிருதியுண்டாகின்றது. ஆண்டுச் சம்ஸ்காரத்தின் உற்போதகத்திற்கேது சாதிருசிய தரிசனமாம் (ஒப்புமைக் காட்சியாம்).

(iii.) யாண்டு ஏகாந்தத்தி லுட்கார்ந்து அநுபவிக்கப்பட்ட பதார்த்தங்களின் சிந்தனஞ்செய்யு மிடத்து அதனால் அநுபவிக்கப் பட்ட பதார்த்தங்களின் ஸ்மிருதியுண்டாகின்றதோ ஆண்டுச் சம்ஸ்காரத்தின் உற்போதகத்திற் கேது சிந்தனமாம்.

கரணம்—INSTRUMENT (PECULIAR CAUSE).

12. கரணமாவது யாது? சாதகதமம் கரணம். உயர்ந்த சாதகம் சாதகதமம்; உயர்ந்த (சிறந்த) காரணமென்பதே இதன் பொருள். சாதகம் காரணம் என்பன ஒருபொருட் சொற்கள்.

(கு-ரை.) பொதுக்காரணமாகிய காலந் திக்கு முதலியவற்றிற்செல்லு மதிவியாப்தியை நீக்குதற்பொருட்டுச் 'சாதகதம'மென்று கூறப்பட்டது.

காரணம்—GENERAL CAUSE.

13. காரணமாவது யாதெனின் கூறுதும்:—நியதமாய்ப் பிறிதொன்றற் காதலின்றிக் காரியத்திற்கு முன்னிற்றலுடையது யாது அது காரணம்; ஆடைக்கு நூல் நாடா முதலியனபோல்வ. ஆடைதோன்றுழித் தன்னியல்பின் (தெய்விகமாய்)வந்த கழுதை முதலியவற்றிற்கு முன்னிற்றலுண்டேயாயினும் அது நியமமன்று. நூலுருவிற்கு நியதமாய் முன்னிற்றலுண்டேயெனின் அது (நூலுரு) பிறிதொன்றற் காகும் (அந்நியதாசித்தியாம்);ஆடையுருத்தோற்றத்தமைதலின். (நூலுருவம்) ஆடையைக் குறித்துங் காரணமெனின் கற்பனைபெருகும். ஆதலின் பிறிதொன்றற் காகாமையாய் நியதமாய் முன்னிற்பதன்றன்மை காரணத்தன்மை.

(கு-ரை.) நியதம்-இன்றியமையாமை; பிறிதொன்றற்காதல்-வேருெரு காரியத்திற்குக் காரணமாதல்; நாடா - நூல்வைக்குங் குழல்: இதனை வேமாவென்றும் நூனுழியென்றுங் கூறுவதுண்டு; முதலியன என்றதனுல் துரி (தறி) யுங் கொள்க; எது காரணமோ அது காரியத்திற்கு அவ்வியவகித (மறைப்பின்றிய) பூர்வகாலத்தி லிருக்க வேண்டுமென்பது நியமமாதலின் 'அது நியமமன்று' என்று கூறப்பட்டது. கற்பனைபெருகும்-கற்பநா கௌரவமாம்:— ஒருவஸ்துவினுலேயே ஒருகாரியம் சித்திக்கக்கூடியதாயிருக்க அதற் குப் பல வஸ்துக்களை ஹேதுவாகக் கற்பித்தல் கற்பநா கௌரவ மாம்; ஆடையுருத் தோற்றத்தமைதலின் - நூலுரு ஆடையினுரு வத்தை யுண்டுபண்ணுவதிற் காரணமாயிருத்தலின்.

தன்னியல்பின்வந்த கழுதை முதலியவை காரணசாமக்கிரி யினும் புறம்பாயிருத்தலின் அவை அந்நியதாசித்தமாம்.

காரியம்—Effect.

14. பிறிதொன்றற்காகாது நியதமாய்ப் பின்னிற்பதன் றன்மை காரியத்தன்மை.

(கு-ரை.) பிறிதொன்றற்காகாது - பிறிதொன்ருற் பெறப் படுவதாகாது; அஃதாவது வேருெருகாரணத்தின் காரியமாகாது. உற்பத்தியுடையது காரியமெனப்படும்.

பிராகபாவத்திற்கு (முன்னின்மைக்கு)ப் பிரதியோகி (எதிர் மறை) யாயும் துவம்சத்திற்கு (அழிவிற்கு)ப் பிரதியோகியாயு மிருப்பது காரியத்தன்மையாம். துவம்சம் துவம்சாபாவத்திற்கு வேருயிருத்தலின் துவம்சாபாவத்தில் வியபிசாரமின்ரும்.

கடமுண்டாமிடத்து அதற்குத் தண்டம், சக்கரம், குலாலன் முதலியவை காரணமா யிருப்பதுபோன்று அதன் பிராகபாவமும் காரணமாம். எந்தக் காரணத்தி (மண்ணி)ல் எதன் (கடத்தின்) பிராகபாவமிருக்கின்றதோ அந்தக்காரணத்தினின்றும் அஃதுண்டாகின்றதென்பது நியமமாம். மண்ணில் கடத்தின் பிராகபாவமிருக்கின்றமையாற்றான் அத(மண்ணி)னின்றும் கடமுண்டாகின்றது; நூலில் கடத்தின் பிராகபாவமின்மையின் அத (நூலி) னின்றும் கடமுண்டாகின்றதில்லை. இதனால் சகலகாரியங்களினுற்பத்தியிலும் பிராகபாவமுங் காரணமாமென்பது தெள்ளிதின்விளங்கும். விளங்கவே, பிராகபாவத்தின் (முன்னின்மையின்) பிரதியோகி (எதிர்மறை-கடம்) யாதோ அதுவே காரியமாமென்பது பெறப்பட்டது.

15. ஒருவன் காரியத்தாலே தொடரப்பட்ட அந்நுவய வியதிரேகி காரணமென்றான். அது பொருந்தாது; நித்திய விபுவாய வான் (ஆகாய) முதலியவற்றிற்குக் காலத்தானும் இடத்தானும் வியதிரேக (அபாவ) மின்மையின் காரண மன்மை (ஆகாமை) வரவேண்டுதலின்.

(கு-ரை.) அது(காரணம்)இருந்தால் அது(காரியம்)இருத்தல் அந்வயமா (உடன்பாடா)ம். அஃதில்லா திருக்க அஃதில்லா திருத்தல் வியதிரேகமா (எதிர்மறையா)ம்; உற்பத்திநாசமின்றியது நித்தியமெனப்படும்; விபு-வியாபகம்: அஃதாவது, வடிவுடைப் பொருளெல்லாவற்றினும் சையோகித்திருத்தல்; வடிவுடைப்பொருளாவது-வரம்பு (எல்லை)ப் பட்ட பரிமாணமு (வடிவு) டைமை.

நித்தியமாய ஆகாய முதலியவற்றிற்கு வியதிரேக(அபாவ)மின்மையின் காரியத்தாலே தொடரப்பட்ட அந்நுவய வியதிரேகி காரணமாமெனல் பொருந்தாதாயிற்று.

16. காரணமும்: சமவாயி, அசமவாயி, நிமித்தமென்னுங் கூறுபாட்டான் மூவகைப்படும். அவற்றுள்,

சமவாயிகாரணம்—INTIMATE CAUSE.

17. எதன்கண் சமவேதித்து (ஒற்றிற்று)க் காரியந் தோன்றும் அது சமவாயிகாரணம். எங்ஙனம்? நூற்கள் ஆடைக்குச் சமவாயிகாரணம். நூலின் கண்ணே ஆடை சமவேதித்துத் தோன்றும்; நாடா முதலியவற்றினில்லை.

(கு-ரை.) ஆதிகாரணம், முதற்காரணம், உபாதானகாரணம், சமவாயிகாரணமென்பன ஒருபொருட்கிளவி. எது (மண்) காரிய (கட)த்தின் சொரூபத்தில் பிரவேசிக்கின்றதோ எதனை (மண்ணை) விட்டுக் காரியம் (கடம்) சித்திக்கின்றதில்லையோ அது சமவாயி காரணமாம். அல்லது காரியத்தின் உற்பத்தி, ஸ்திதி, லயங்களுக்குக் காரணமியாதோ அது சமவாயிகாரண மெனினு மொக்கும்.

சமவாயிகாரணம்: ஆரம்பம், பரிணாமம், விவர்த்தமென மூவகைத்தாம். ஆரம்ப சமவாயிகாரணத்தைத் தார்க்கிகரும், பரிணாம சமவாயிகாரணத்தைச் சாங்கியரும், விவர்த்த சமவாயிகாரணத்தை வேதாந்திகளு மங்கீகரித்திருக்கின்றனர்.

18. (ஆ.) அற்றாயின், ஆடைக்கு நூலோடும் நாடா முதலியவற்றோடும் சம்பந்தமுளதாக நூலின் கண்ணே ஆடை சமவேதித்துத் தோன்றும்; நாடாமுதலியவற்றின்கண் இல்லையென்ப தெங்ஙனம்?

(ச.) அஃதோக்கும். அச்சம்பந்தம், சையோகமுஞ் சமவாயமுமென இருவகைப்படும். அவற்றுள், நீக்கமின்றி இருப்பனவற்றின் சம்பந்தம் சமவாயம்; ஏனையவற்றது (மற்றையவற்றின்) சம்பந்தம் சையோகமே.

(கு-ரை.) இரண்டு திரவியங்களின் சம்பந்தம் சையோகமெனப்படும்.

19. நீக்கமின்றி இருப்பனயாவை? எவற்று ளொன்று நசியாததாய் மற்றொன்றைப் பற்றியேநிற்கும் அவை நீக்கமின்றி இருப்பன. எங்ஙனம்? அவயவ (உறுப்பு) அவயவி (உறுப்பி)கள், குணகுணிகள், வினை வினையது (வினைமுதல்) கள், சாதி வியக்தி (வடிவு) கள், விசேட நித்தியத்திரவியங்க ளென்பனவே.

(கு-ரை.) குணியெனினும் திரவியமெனினு மொக்கும். குணங்களினாசிரயம் குணியெனப்படும். சேஷ்டை, கிரியை, வினை என்பன ஒருபொருட்கிளவி. வினையினாசிரயம் வினைமுதலெனப்படும்.

நித்தமாய் அநேகதர்மியி (திரவிய குண கர்மங்களி) லுள்ள ஒருதர்மம் ஜாதி (சாமானியம்) எனப்படும். ஜாதியுடையது வியக்தி யெனப்படும். நித்தியத்திரவியங்களிலுள்ள வேற்றுமையையறிதற்பொருட்டு அவற்றின்க ணிருப்பவை விசேடமெனப்படும். நித்தியத்திரவியங்கள் பிருதிவிமுதலிய நான்கன் பரமாணுக்களும் ஆகாயமுதலிய ஐந்துமாம்.

20. அவயவி முதலியன முறையே கெடாதனவாய் அவயவ முதலியவற்றைப் பற்றியே நிற்கும்; கெடுமவத்

தையி (அழியுங்காலத்தி)ற் பற்றுமையே (ஆசிரயிக்கா மலே)நிற்கும். எங்ஙனம்? நூலது கேட்டில் ஆடையும், ஆசிரயித்தது (குணியின்) கேட்டிற் குணமும்.

(கு-ரை.) சேர்க்கையாற் சித்தித்த விரண்டன் சம்பந்தம் சையோகமாதல்போலச் சேர்க்கையின்றிச் சித்தித்த விரண்டன் சம்பந்தம் சமவாயமாம். எவ்விரண்டனுள் ஒன்று தனதழிவற்ற நிலையில் மற்றொன்றன் ஆசிரதமாகவே நிற்குமோ, அத்தன்மையவிரண்டும் சேர்க்கையின்றிச் சித்தித்தனவாம். இவ்விரண்டும் அவயவ அவயவி, குண குணி, வினை வினைமுதல், ஜாதி வியக்தி, விசேட நித்தியத்திரவியங்களென ஐவகைப்படும். இவ்வைந்தனுள் விசேட நித்தியத்திரவியங்க ளொழிந்த மற்றைய நான்கன் அவயவி குணம் வினை ஜாதி என்னும் நான்கும் நசியாதனவாய், அவயவம் குணி வினைமுதல் வியக்தி என்னும் நான்கையும் ஆசிரயித்தனவாயிருந்து அவயவாதி நான்கும் நசித்தபின்னர் க்ஷணமாத்திர மாசிரத மில்லாதனவாய் நிற்குமென்க. நித்தியத்திரவியங்கட் கழிவின்மையின் விசேட நித்தியத்திரவியங்கள் ஈண்டைக் கியையாவென்க.

21. கெடுதற் றன்மையாவது கெடுதற் (அழிதற்குரிய) காரணக்கூட்டங் கூடுதல். நூலாடைகளும் அவயவ அவயவிகளாதலின் அவற்றது சம்பந்தம் சமவாயம்; நீக்கமின்றி யிருத்தலின். நாடா ஆடைகட் காயின் சமவாய மின்று; நீக்கமின்றி இருத்தலின்மையின். நாடா ஆடையைப்பற்றி நிற்றலும் இன்று; ஆடை நாடாவைப்பற்றி நிற்றலும்இன்று. ஆதலின்; அவற்றது சம்

பந்தம் சையோகமே. ஆதலின் இங்ஙனம் ஆடை நூலிற் சமவேதம். எதன்கண் சமவேதித்துக் காரியந் தோன்றும் அது சமவாயிகாரணம். ஆதலின், நூல்களே ஆடைக்குச் சமவாயிகாரணம்; நாடாமுதலியன அல்ல. ஆடையும் தற்புணர் (தன்னையடைந்த) உருவமுதலியவற்றிற்குச் சமவாயிகாரணம். இங்ஙனம் மட்பிண்டமும் குடத்திற்குச் சமவாயிகாரணம். குடமும் தற்புணர் உருவமுதலியவற்றிற்குச் சமவாயிகாரணம்.

(கு-ரை.) நூல்—அவயவம்; ஆடை-அவயவி. அவயவத்தைச் சமவாயிகாரணமாகச் சொல்வது ஆரம்பவாதமாம். அவயவங்களாகிய பல காரணங்களால் அவயவியாகிய ஒரு காரியமுண்டாதல் ஆரம்பவாதமாம். அவயவங்களாகிய பல நூற்களால் அவயவியாகிய ஓர் ஆடைதோன்றுதல் காண்க.

ஆடையி னுருவமுதலியவற்றிற்கு ஆடையும் கடத்தினுருவமுதலியவற்றிற்குக் கடமும் சமவாயிகாரணங்களாம்.

22. (ஆ.) அற்றாயின், எப்பொழுது குடமுதலியன தோன்றும் அப்பொழுதேதற்புணர்(தன்னையடைந்த) உருவமுதலியனவுந் தோன்றும். ஆதலின் (குடமும் உருவமுதலியனவும்) ஒருகாலத்திற் றோன்றின. ஆதலின் குணகுணிகட்கு (ஓராவினின்றும் ஒரு காலத்திற்றோன்றும்) இடவலக் கோடு (கொம்பு) போலக்

காரிய காரணத்தன்மையே யில்லை; முற்பிற்பாடி(முன் பின்னிருத்தலி)ன்மையின். ஆதலின், குடம் தற்புண ருருவ முதலியவற்றிற்குச் சமவாயிகாரணமன்று; சம வாயிகாரணம் காரண விசேடமாதலின் (சிறப்புக்கார ணங்களுள் ஒன்றாதலின்) எனின் கூறுதும்:—

(ச.) குணகுணிகட் கொருகாலத் தோற்றமின்று. ஆயின், திரவியம் குணமிலியாயே முற்றோன்றும்; பின் அதிற் சமவேதித்துக் குணங்கள் தோன்றும். (குணமும்குணியும்) ஒருகாலத்தோற்றமாயின் (ஒரே காலத்திற் றோன்றுவதாயின்) குணகுணிகட்கு ஒரு காரணக் கூட்டத்தன்வாதலில் (காரண சமுதாய மொன்றாயிருத்தலால்) வேறுபாடில்லாதல் வேண்டும்; காரிய வேறுபாடு காரண வேறுபாட்டின் நியத மாத லின். ஆதலின்,முற்கணத்திற் குணமிலியேயாய குடம் (தன்னிற்றோன்றும்) குணங்கட்கு முன்னிற்பது. (திரவியம்-குடம்) குணங்கட்குச் சமவாயி காரணமாம். அப்பொழுது காரணவேறுபாடுமுண்டு. குடம் குடத் தைக்குறித்துக் காரணமன்றே; ஒன்றற்கே முற்பிற் பாடின்மையின். குடம் தானே தன்னைக்குறித்து முன் னிற்பதும் (காரணமாதலும்) பின்னிற்பது (காரிய மாதலு) மில்லை. தன் குணங்களைக் குறித்து முன்னிற் றலின் திரவியம் குணங்கட்குச் சமவாயிகாரணமாம்.

(கு-ரை.) காரியத் திரவியமுண்டாகுமிடத்து அது முதற் கணத்தில் குணமின்றியதாய்த் தோன்றும், அடுத்தக்ஷணத்தில் அதனினின்றுங் குணந்தோன்றுமென்பது நியமம்.

முதற்கணத்திற்றோன்றிய நிர்க்குணத்திரவியத்தில் குண மின்றாயினுங் குணத்திற் கதிகரணமாந்தன்மை யுளதாகலின் அதுவே குணமுடைமையா மென்பதும் நியமம்.

காரியத்திரவியத்தின் சமவாயிகாரணம் அவயவ சமுதாயமா யிருத்தலின் 'ஒருகாரணக் கூட்டத்தனவாதலி' லென்று கூறப் பட்டது.

வேறுபாடில்லாதல் வேண்டும்—இன்னது குணம் இன்னது குணி என்னும் வேற்றுமைஇல்லாமை வரல் வேண்டும். வினையும் (முதற் காரணமும்) முதலும் (காரியமும்), குணமும் குணியும், வினையும் வினைமுதலும், ஜாதியும் வடிவும் (வியக்தியும்), விசேடமும் நித்தியப்பொருளும் யாண்டும் வேற்றுமையுடையனவேயாம். மீமாம்சகர் காரணகாரிய முதலியவற்குப் பேதசகித அபேதமுண் டென்றும், வேதாந்திகள் கற்பிதபேதசகித வாஸ்தவ அபேத முண்டென்றுங் கூறுவர்.

குடம் தானேதன்னைக் குறித்துக் காரணமாமென்பது ஆத்மா ச்ரயதோஷமாம் (தன்னைப்பற்றுதலென்னுங் குற்றமாம்). ஒன்று தனதுற்பத்தியில் தானே காரணமா மென்பது ஆத்மாசிரய தோஷம்.

23. (ஆ.) அற்றாயின், இங்ஙன (முதற்கணத்தில் நிர்க் குணமாய்க்குடமுண்டாகு) மாயின், குடம் முற்கணத் திற் கட்புலமின்மையாதல் வேண்டும்; அருவத்திரவிய மாதலின்; காற்றுப்போலே. எத்திரவியம் பரிதா(மகத் துவ) உற்பூத உருவமுடையது அத்திரவியம் கட்புலப் படுவது. திரவியமன்மையு மாதல்வேண்டும்; குணத் திற்கிடனாதற்றன்மை யின்மையின்

குணத்திற் கிடனாவது திரவியமென்பது திரவிய இலக்கணம்.

(கு-ரை.) நிர்க்குணத்திரவிய முண்டாவதின்றென்பர் வேதாந்திகள். கட்புலமின்மை - கண்ணிந்திரியத்திற்கு விஷயமாகாமை.

உற்பூதவுருவம்-தோற்றிய வுருவமுடைமை.

உற்பூதவுருவம், மகத்துவம், ஆலோக (ஒளி) சையோகமுடைய திரவியமே நேத்திரேந்திரியத்திற்கு விஷயமாகுமென்பது நியமம்.

(ச.) அஃதொக்கும்; மிகவும் நுண்ணிய (சிறிய) குடம் முதற்கணத்திற் கட்புலனாற் கிரகிக்க (அறிய) ப் படாதாயின் அப்பொழுது நமக்கிடையூறு யாது?

குணமுடையதாகக் குடமுண்டாகிறதென்னுமிடத்தும் நிமிஷாவசர (கண் மூடுங்கால) த்தில் அக்குடமறியப்படுவதின்று. ஆதலின், முன்னர்க் குணமிலியாயே குடந்தோன்று மென்னு மிது துணிபு. (குடம்) இரண்டு (இரண்டாவது) முதலிய கணங்களிற் கட்புலனாற் கிரகிக்கப்படும். முற்கணத்திற் குணத்திற் கிடனாதற்றன்மையின்மையின் திரவியமன்மை யாதலில்லை; சமவாயிகாரணம் திரவியமென்னுந் திரவிய விலக்கணப் பொருத்தத்தால் யோக்கியதை (தகுதி) யாற் குணத்திற் கிடனுமாதலின்.

(கு-ரை.) குணமுடையதாதல் திரவியத்திற்கிலக்கணமாயின் முதற்கணத்திற்றோன்றும் குடத்தின்கட் குணமின்மையின் அது திரவியமாகாதென்னும் ஆசங்கைக்குச் சமவாயிகாரணம் திரவியமென்பது திரவியத்திற் கிலக்கணமாயிருத்தலின் குடம்திரவியமே என்று சமாதானங் கூறப்பட்டது. முதற்கணத்திற் றோன்றும்

கடம் இரண்டாங் கணத்திற் ரோன்றும் குணத்திற்குச் சமவாயி காரணமாயிருத்தல் காண்க.

எதன்கண் எப்பதார்த்தம் எப்போதாயினுமிருக்குமோ அதன் கண் அப்பதார்த்தத்தின் அதிகாணத்தன்மை யென்றுமுளதா மாகலின் 'யோக்கியதையால்' என்று கூறப்பட்டது.

திரவியத்தன்மையுடையது திரவியமென்பதுந் திரவியத்திற் கிலக்கணமாம்; அதில் திரவியத்தன்மை யாண்டும் நிகழ்தலின்.

திரவியத்தன்மையாவது நித்தியமான ஆகாய முதலியவற் றிலும் அனித்தியமான கடமுதலியவற்றிலும் சமவாய சம்பந்த முடையதாயும் நித்தியமாயும் குணகர்மங்களில் சமவாய சம்பந்த மின்றியதாயுமுள்ள ஜாதி.

அசமவாயி காரணம்—NON-INTIMATE CAUSE.

24. யாது சமவாயிகாரணத்தணுகி (சமீபித்து) யிருப் பதும் துணிந்த காரணத்தன்மையுடையதுமா யிருப் பது அஃது அசமவாயிகாரண மென்று கூறப்படும்.

எங்ஙனம்? ஆடைக்கு நூலியைபு (நூலின் சையோ கம்) அசமவாயிகாரணம்; நூலியைபா (நூலின்சை யோகமா) கிய குணம் ஆடைச் சமவாயி (முதற்) கார ணமும் (தனக்குக்) குணியுமாகிய நூல்களிலே சமவே தித்திருத்தலின்; சமவாயிகாரணத்தணித்தா (நெருங்கி யதா) யிருத்தலின்; பிறிதொன்றற் காகாமையும் நிய தியு (நியமமு) மாகிய முன்னிற்றற் றன்மையால் ஆடையைக்குறித்துங் காரணமாதலின்.

இங்ஙனம் நூலுருவமும் ஆடையை யடைந்த உருவிற்கு அசமவாயிகாரணம்.

(கு-ரை.) காரியத்தின் சமவாயி காரணத்தோடு சம்பந்தமுடையதாய்க் காரியத்தை யுண்டுபண்ணுவது யாதோ அஃது அசமவாயிகாரணமாம். அது சிலவிடத்துக் குணமாயும் சிலவிடத்துக் கிரியையாயுமிருக்கும். (சையோக) குணோற்பத்தியில் கிரியை அசமவாயிகாரணமா யிருத்தலும், திரவியோற்பத்தியில் (சையோக) குணம் அசமவாயிகாரணமா யிருத்தலுங் காண்க.

பிறிதொன்றற்காகாமை - வேறோர்காரியத்திற்குக் காரணமாகாமை.

அசமவாயிகாரணம் காரியத்துடனாவது காரணத்துடனாவது ஒருபொருளிற் சமவேதித்திருப்பதாகலின் 'ஆடைக்கு நூலியைபு அசமவாயிகாரண' மென்றது முன்னதற் குதாரணமாம். நூலியைபாகிய குணம் தன் காரியமாகிய ஆடையோடு நூலின்கண் சமவேதித்திருத்தல் காண்க.

'நூலுருவமும் ஆடையையடைந்த உருவிற்கு அசமவாயிகாரண' மென்றது பின்னதற்குதாரணமாம். நூலுருவம் தன்காரியமாகிய ஆடையுருவத்தின் சமவாயிகாரணமாகிய ஆடையுடன் நூலின்கண் சமவேதித்திருத்தல் காண்க.

ஆடையுண்டாகுமிடத்து அதற்கு நூல் சமவாயிகாரணமென்றும் நூலியைபு அசமவாயிகாரணமென்றும், ஆடையினுருவமுண்டாகுமிடத்து அதற்கு ஆடைசமவாயிகாரண மென்றும் நூலுருவம் அசமவாயிகாரண மென்று மறிக.

25. (ஆ.) அற்றாயின், ஆடையுருவிற்கு ஆடை சமவாயிகாரணமாதலின், தன்னை (ஆடையை) யடைந்

கடம் இரண்டாங் கணத்திற் றோன்றும் குணத்திற்குச் சமவாயி காரணமாயிருத்தல் காண்க.

எதன்கண் எப்பதார்த்தம் எப்போதாயினுமிருக்குமோ அதன்கண் அப்பதார்த்தத்தின் அதிகரணத்தன்மை யென்றுமுளதாமாகலின் 'யோக்கியதையால்' என்று கூறப்பட்டது.

திரவியத்தன்மையுடையது திரவியமென்பதுந் திரவியத்திற்கிலக்கணமாம்; அதில் திரவியத்தன்மை யாண்டும் நிகழ்தலின்.

திரவியத்தன்மையாவது நித்தியமான ஆகாய முதலியவற்றிலும் அனித்தியமான கடமுதலியவற்றிலும் சமவாய சம்பந்தமுடையதாயும் நித்தியமாயும் குணகர்மங்களில் சமவாய சம்பந்தமின்றியதாயுமுள்ள ஜாதி.

அசமவாயி காரணம்—NON-INTIMATE CAUSE.

24. யாது சமவாயிகாரணத்தணுகி (சமீபித்து) யிருப்பதும் துணிந்த காரணத்தன்மையுடையதுமா யிருப்பது அஃது அசமவாயிகாரண மென்று கூறப்படும்.

எங்ஙனம்? ஆடைக்கு நூலியைபு (நூலின் சையோகம்) அசமவாயிகாரணம்; நூலியைபா (நூலின்சையோகமா) கிய குணம் ஆடைச் சமவாயி (முதற்) காரணமும் (தனக்குக்) குணியுமாகிய நூல்களிலே சமவேதித்திருத்தலின்; சமவாயிகாரணத்தணித்தா (நெருங்கியதா) யிருத்தலின்; பிறிதொன்றற் காகாமையும் நியதியு (நியமமு) மாகிய முன்னிற்றற் றன்மையால் ஆடையைக்குறித்துங் காரணமாதலின்.

இங்ஙனம் நூலுருவமும் ஆடையை யடைந்த உருவிற்கு அசமவாயிகாரணம்.

(கு-ரை.) காரியத்தின் சமவாயி காரணத்தோடு சம்பந்தமுடையதாய்க் காரியத்தை யுண்டுபண்ணுவது யாதோ அஃது அசமவாயிகாரணமாம். அது சிலவிடத்துக் குணமாயும் சிலவிடத்துக் கிரியையாயுமிருக்கும். (சையோக) குணோற்பத்தியில் கிரியை அசமவாயிகாரணமா யிருத்தலும், திரவியோற்பத்தியில் (சையோக) குணம் அசமவாயிகாரணமா யிருத்தலுங் காண்க.

பிறிதொன்றற்காகாமை - வேறோர்காரியத்திற்குக் காரணமாகாமை.

அசமவாயிகாரணம் காரியத்துடனாவது காரணத்துடனாவது ஒருபொருளிற் சமவேதித்திருப்பதாகலின் 'ஆடைக்கு நூலியைபு அசமவாயிகாரண' மென்றது முன்னதற் குதாரணமாம். நூலியைபாகிய குணம் தன் காரியமாகிய ஆடையோடு நூலின்கண் சமவேதித்திருத்தல் காண்க.

'நூலுருவமும் ஆடையையடைந்த உருவிற்கு அசமவாயிகாரண' மென்றது பின்னதற்குதாரணமாம். நூலுருவம் தன்காரியமாகிய ஆடையுருவத்தின் சமவாயிகாரணமாகிய ஆடையுடன் நூலின்கண் சமவேதித்திருத்தல் காண்க.

ஆடையுண்டாகுமிடத்து அதற்கு நூல் சமவாயிகாரணமென்றும் நூலியைபு அசமவாயிகாரணமென்றும், ஆடையினுருவமுண்டாகுமிடத்து அதற்கு ஆடைசமவாயிகாரண மென்றும் நூலுருவம் அசமவாயிகாரண மென்று மறிக.

25. (ஆ.) அற்றாயின், ஆடையுருவிற்கு ஆடை சமவாயிகாரணமாதலின், தன்னை (ஆடையை) யடைந்

தேயிருக்கின்ற ஒருதருமத்தி (நூலியையபி) ற்கு ஆடையுருவைக்குறித்து அசமவாயிகாரணத் தன்மை கூறத்தகும்; சமவாயிகாரணத்து (ஆடையின்) அணித்தாயிருத்தலின். நூலுருவிற்குத் தகுதியன்று; அதற்கு (நூலுருவிற்கு)ச் சமவாயிகாரணத்து (ஆடையின்) அணித்தாயிருத்தலின்மையின்.

(ச.) இங்ஙனமன்று; (நூலுருவம்) சமவாயிகாரணத்தி (ஆடையி)ன் சமவாயிகாரணத்து (நூலின்) அணித்தா யிருத்தலும் பரம்பரையாய்ச் சமவாயிகாரணத் தணித்தாயிருத்தலு முடைமையின்.

(கு-ரை.) நூலுருவம் ஆடையை முன்னிட்டு ஆடையுருவத்திற்கு அசமவாயி காரணமாயிருத்தலின் 'பரம்பரையா' யென்று கூறப்பட்டது. எதனுடன் எதற்கு நேர்சம்பந்தமில்லாமல் ஒன்றன் வாயிலாகச் சம்பந்தமிருக்கின்றதோ அதனோடு அதற்குப் பரம்பரைச்சம்பந்தமுண்டென்பது நியமம். ஆடையுருவத்துடன் நூலுருவத்திற்கு நேர்சம்பந்தமில்லாமல் ஆடைவாயிலாகச் சம்பந்தமிருத்தலின் அவ்வாடையுருவத்துடன் நூலுருவத்திற்குப் பரம்பரைச் சம்பந்தமுண்டென்க.

நிமித்த காரணம்—INSTRUMENTAL CAUSE.

26. யாதொன்று சமவாயிகாரணமும் அசமவாயி காரணமு மன்றாய் மற்றுங்காரணமாம், அது நிமித்த காரணமா மென்று கூறப்படும். எங்ஙனம்? நாடா முதலியன ஆடைக்கு நிமித்தகாரணம்.

(கு-ரை.) எது (நாடா) சொரூபத்தி (படத்தி)ற் பிரவேசிக்கிறதில்லையோ ஆனுல் காரியத் (படத்) திற்கு வேருகவிருந்து காரியத்தைச் செய்கிறதோ, எதன் (நாடாவின்) நாசத்தினுல் காரியம் (படம்) நாசமடைகிறதில்லையோ அது நிமித்தகாரண மெனப்படும்.

நிமித்தகாரணம் சிலவிடத்துச் சேதனமா (சித்தா) கவும், சிலவிடத்து அசேதன (ஜட) மாகவுமிருக்கும். சேதனவடிவ நிமித்தகாரணம் சுதந்திரமாகவும், ஜடவடிவநிமித்தகாரணம் கர்த்தாவி (சேதனத்தி) னது வியாபாரத்தின் வசமாகவும் அஃதின்றியதாகவுமிருக்கும்.

ஆடைக்குத் தந்துவாயன் (நெய்வோன்) சேதனவடிவ நிமித்தகாரணமாம். நாடா முதலியன ஜடநிமித்தகாரணமாம், அவை தந்துவாயனது வியாபாரத்தின் வசமாயிருத்தல்காண்க. மரமுதலியவற்றை அசைத்தல் நிலைபெயரச்செய்தல் முதலியவற்றிற் கேதுவாய காற்று முதலியவை கர்த்தாவினது வியாபாரத்தின் வசமின்றிய ஜடநிமித்தகாரணமாம். இலக்கண நூலார் கூறும் துணைக்காரணம் தர்க்க நூலார் கூறும் ஜடநிமித்த காரணத்தி லந்தர்க்கதமாம்.

(1) சில நிமித்தகாரணம் காரியத்தின் உற்பத்திகாலத்தில் மாத்திர மிருப்பதாகவும் (2) சில நிமித்தகாரணம் காரியமுள்ளவரை யிருப்பதாகவு மிருக்கும்.

(1) நாடா முதலியன ஆடையின் உற்பத்திகாலத்தில் மாத்திர மிருக்கும் நிமித்த காரணமாம்.

(2) ஜலபாத்திரத்தின் சந்நிதானத்தால் சுவரில் சூரியப்பிரபையின் பிரதிபிம்ப முண்டாகின்றது. அப்பிரதிபிம்பத்திற்குச் சூரியப்பிரபை சமவாயிகாரணமும், ஜலபாத்திரம் நிமித்த

காரணமும்,சந்நிதானம் அசமவாயிகாரணமுமாம். அப்பிரதிபிம்பம் ஜலபாத்திரமுள்ளவரை யிருப்பதால் ஜலபாத்திரம் காரியமுள்ள வரை யிருக்கும் நிமித்த காரணமாம்.

இங்ஙனம் சமவாயிகாரணத்திற்கும் அசமவாயிகாரணத்திற்கும் வேறாய நிமித்தகாரணம் பலவகைப்பட்டிருக்கும்.

27. இக்காரணங்கள் மூன்றும் உள்பொருட்கே (பாவ காரியத்திற்கே). இல்பொருட் (அபாவகாரியத்திற்) காயின் நிமித்த காரணமாத்திரம்; அத (அபாவகாரியத்தி) ற்கு ஓரிடத்தும் சமவாய மின்மையின். சமவாயம் உள்பொருளிரண்டின் தருமமாதலின்.

(கு-ரை.) காரியம் பாவகாரியம் அபாவகாரியமென விருவகைத்தாம். பாவகாரியம் கடமும், அபாவகாரியம் அத (கடத்தி)ன் துவம்சாபாவமு (பின்னின்மையு) மாம்.

பாவகாரியமாகிய கடமுண்டாமிடத்துக் கபாலமாகிய சமவாயிகாரணமும், அதன் சையோகமாகிய அசமவாயிகாரணமும், தண்ட முதலிய நிமித்தகாரணங்களும் வேண்டப்படுவதாயிருத்தலின், 'இக்காரணங்கள் மூன்றும் உள்பொருட்கே' என்று கூறப்பட்டது.

அபாவகாரியமாகிய கடத்தின் துவம்சாபாவ முண்டாமிடத்துக் கடமும் கடத்தோடு தண்டமுதலியவற்றின் சையோகமும் நிமித்தகாரணமாம்; சமவாயிகாரணமும் அசமவாயிகாரணமும் அதற்கு வேண்டியதில்லை; ஏனெனின், சமவாயிகாரணம் காரியத்திற் சமவாயமுடையதாயும், அசமவாயிகாரணம் காரியத்துடனாவது காரணத்துடனாவது சமவாயமுடையதாயு மிருத்தலின்.

சமவாயம் (ஒற்றுமைச் சம்பந்தம்) உள்பொருளிரண்டின் (சினைமுதல், குணகுணி என்றற் றொடக்கத்துப் பாவபதார்த் தத்தின்) தருமமாயிருத்தலின், இல்பொருட்குச் சமவாயம் யாண்டும் இன்று. வேறொன்றை யாசிரயித்ததாய்ச் சுதந்தரமின்றி யிருப்பது தருமமெனப்படும்.

28. இக்காரணங்கள் மூன்றனுள் யாதாயினு மெவ்வாற்றானு முயருமாயின் அதுவே கரணம் (அசாதாரண காரணம்). ஆதலின், பிரமைக்குக் கரணம் பிரமாண மென்னு மிவ்விலக்கணம் துணியப்படும்.

(கு-ரை.) பிரமேயசித்தி பிரமாணத்தின் வசமாமென்னும் ந்யாயத்தினால் பிரமாணம் முதலிற் கூறப்பட்டது. சாதனாசிரயத்தினும் வேறாகாமலும் பிரமா வியாப்தமாயுமிருப்பது பிரமாணமாம்.

'இக்காரணங்கள் மூன்றனுள் யாதாயினு மெவ்வாற்றானு முயருமாயின் அதுவே கரணம்' என்றமையின் சிலவிடத்துச் சமவாயி காரணமும், சிலவிடத்து அசமவாயிகாரணமும்,சிலவிடத்து நிமித்தகாரணமும் கரண (அசாதாரணகாரண)மா யிருக்குமென்பதாம். அவ்வாறிருத்தலை நேர்ந்தவிடத்துக் கூறுதும்.

29. உணரப்படாதபொருளினதுணர்வு பிரமாண மென்பது பிரமாண விலக்கணமெனின்,

அஃதன்று; ஒரு குடத்தின்கண்ணே குடமிது குடமிது வென்று உணரப்பட்டதை யுணருந் தாரைகொளுணர்வு (தொடர்ச்சியாய் நிகழும் ஞானங்)கட்கு அப்பிராமாண்யம் வரவேண்டுதலின்.

வேறுவேறாகிய கனவிசேடத்தோடுகூடிய பொருட்கவர்ச்சியான் உணரப்படாத பொருளினது உணர்தற்றன்மை யுண்டென்பதன்று; காட்சியான் நுண்ணிய காலவேறுபாடு தெரியாமையின். (நுண்ணியகாலத்தின்) வேறுபாடு தெரியின், கிரியைமுதற் சையோக மீறாய நான்கிற்கும் ஒருமை (ஏககாலத் துண்டாவதென்னும்) அபிமானமின்றாதல் வேண்டும்.

30. பிரமாத்ருப் பிரமேய முதலிய பலகாரணங்கள் பிரமைக்குள, இவையெல்லாம் கரணமோ அல்லது (கரணம்) அல்லவோ கூறுதும்:—

பிரமாதாவு (காண்பானு) ம் பிரமேய (விஷய) மும் இருப்பினும் பிரமை (யதார்த்த ஞானம்) பிறவாமையினும் இந்திரியார்த்த (இந்திரியவிஷய) சையோகாதி யுண்டாயின் விரைவினாற் பிரமை பிறத்தலினானும் * இந்திரியார்த்த சையோகாதியே கரணம். சாதகத் தன்மை விசேஷ மின்றாயினும் இவ்வுயர்ச்சியா (விரைவினாற் பிரமை பிறத்தலினா) னே இதற்கு (இந்திரியார்த்த சையோகாதிகட்கு)ப் பிரமாதா முத

---

* கௌரிகாந்தபட்டாசாரியர் "பிரத்தியக்ஷப் பிரமைக்கு இந்திரியம் காரணமன்று. ஆனால் இந்திரியத்தின் சம்பந்தமாகிய எதனை வியாபாரமெனக் கூறுகின்றார்களோ அது காரணமாம்; இந்திரியம் காரணமாம்; கரணமன்று" என்று கூறுவதுமிங்கறியத் தக்கதாம்.

லியவற்றினின்றும் அதிசயமாதலின், உயர்ந்த கார ணாங் கரணமென்று கூறப்பட்டது.

இந்திரியார்த்த சையோகாதியே பிரமைக்குக் கரண மாதலின் பிரமாணம்; பிரமாதா முதலியனவல்ல. அப் பிரமாணங்கள் நான்கு. அங்ஙனம் நியாயசூத்திரம்- "பிரத்தியக்ஷம், அநுமானம், உபமானம், சப்தங்கள் பிரமாணங்கள்" (என்று கூறுகின்றது).

(கு-ரை.) 'பிரமாத்ருப் பிரமேய முதலிய பல காரணங்கள்' என்றமையின், ஆன்மமனச் சையோகம், மனவிந்திரியச் சையோக முதலியவற்றையுங் கொள்க. விரைவினுல்-தாமதமின்றி; சாதகத் தன்மை - காரணமாந்தன்மை; அது பிரமாதா முதலியவையாம். விசேஷமின்றாயினும் - பொதுவாயிருப்பினும்; அதிசயமாகலின்- விசேஷமா (சிறப்பா) யிருத்தலின்.

(கு-ரை.) வேதாந்தபரிபாஷை பிரமாணலக்ஷணங் கூறு மிடத்து "பிரமாகரணம்-பிரமாணம். பிரமா-யதார்த்தஞானம்; கர ணம் - சிறந்தகாரணம். பிரமா:—யதார்த்த அநுபவமும் ஸ்மிருதியு மென விருவகைத்து. வேறுஞானத்தால் பாதிக்கப்படாமலிருக் கின்ற விஷயத்துடன் கூடிய ஞானத்தன்மை அநுபவம் ஸ்மிருதி யென்னுமிரண்டற்கும் பொதுவிலக்கணமாம். யதார்த்த வனுபவத் திற்குமாத்திரம் லக்ஷணம் வேறு பிரமாணத்தால் அறியப்படாம லும் வேறு ஞானத்தினுல்பாதிக்க (பொய்யென்று நிச்சயிக்க)ப்படா மலுமிருக்கிற விஷயத்துடன்கூடின ஞானத்தன்மை. "இது கடம்" "இது கடம்" எனத் தொடர்ச்சியாய் நிகழும் ஞானங்களில் முந்திய ஞானத்தால் அறியப்பட்ட கடமே பிந்திய ஞானத்திற்கும் விஷ யமாயிருப்பதால் அவ்வியாத்தியா மெனின், தாரை (தொடர்ச்சி)

யாய் நிகழும் ஞானங்களிலும் முதல் முதல் உண்டான ஞானத்தில் விஷயமாகாத அந்தந்தக்ஷணங்களோடுகூடிய கடம் விஷயமாயிருப்பதால் அவ்வியாத்தியின்றாம். இந்திரியத்திற்கு உருவமற்றகாலம் எங்ஙனம் விஷயமாமெனின்? இப்பொழுது கடமிருக்கிறது. இப்பொழுது இந்தப் புருஷனுண்டாகின்றா னென்றற் றொடக்கத்து வியவகாரங்களால் காலமும் இந்திரியத்திற்கு விஷயமாமென் றங்கீகரிக்கப்பட் டிருக்கின்றமை காண்க'' என்று கூறியிருத்தல் இந்நூலாசிரியர் பூர்வபக்கமாக்குதற் கெடுத்துக் கூறியதற் கிணங்கியிருத்தல் காண்க.

இது குடம் இது குடம் என்றுணருமிடத்து அந்தந்த க்ஷணத்துடன் கூடிய குடம் அறியப்படுதலின் உணரப்படாத பொருளினது உணர்வு பிரமாணம் என்பதில் தோஷமின்றெனின், அந்தந்தக் காலவிசேஷத்தின் வேறுபாடு பிரத்தியட்சத்தால் அறிதற்கியையாமையின் அது பொருந்தாது; இது குடம் இது குடம் என்றறியுமிடத்து, அந்தந்த என்னுஞ் சூக்குமமான காலத்தின் வேறுபாடு தெரியின் கிரியைமுதல் ஸையோகமீறாயுள்ள நான்கிற்கும் ஒருமை அபிமானமில்லாமற் போகவேண்டும் எனப் பிறர் கூறிய பிரமாண விலக்கணம் இந்நூலாசிரியரால் மறுக்கப்பட்டது.

இது குடம் இது குடம் என்றுணருமிடத்து இரண்டாமுறை யுணரும் அக்குடம் உணரப்படாத பொருளாகாமையின் 'உணரப் படாத பொருளின துணர்வு பிரமாண மென்பது' பொருந்தா தாயிற்றென்க.

கிரியைமுதல் நான்காவன:— (1) கிரியை, (2) விபாகம் (பிரிவு), (3) பூர்வ ஸையோகநாசம், (4) உத்தரஸையோக உற்பத்தி யென்பனவாம்.

கபாலத்திற் கிரியையுண்டாவதால் கபாலத்திற்கும் நிலத்திற்கும் விபாகமும், அதனால் பூர்வ சையோகநாசமும், அதன்பின்னர் மற்றொரு கபாலத்துடன் சையோகமு முண்டாதல் காண்க.

இந்திரியத்திற்கும் விஷயத்திற்கும் சையோக முண்டாகுமிடத்து மிங்ஙனமே கொள்ளல்வேண்டும்.

'இந்திரியார்த்த சையோகாதியே பிரமைக்குக் காரணமாதலின் பிரமாணம்' என்றமையின், சையோகாதி அசமவாயிகாரணமே கரண (சிறந்த காரண) மாயினவாறு காண்க.

1. பிரத்தியட்சம்.

Sensuous Perception.

31. காட்சியாவது யாது? சாட்சாத்காரிப்(பிரத்தியட்சப்) பிரமைக்குக் கரணம் பிரத்தியட்சம் (பிரத்தியட்சப் பிரமாணம்). யாது இந்திரியத்தாற்றோன்றும் அது சாக்ஷாத்காரிப் பிரமை. அதுவும் சவிகற்ப நிர்விகற்பக் கூறுபாட்டால் இருவகைப்படும். அதற்கு (பிரத்தியட்சப் பிரமைக்கு)க் கரணமூவகை; (1) ஓரிடத்திந்திரியம், (2) ஓரிடத்துப் பொருளிந்திரியக் கூட்டம். (3) ஓரிடத்து ஞானம்.

(கு-ரை.) இந்திரியத்தாற் றோன்றிய யதார்த்த ஞானம் பிரத்தியட்சப் பிரமை யெனப்படும். இந்திரியம் சுரோத்திரம், துவக்கு, நேத்திரம், இரசனை, கிராணம், மனமென ஆறாயிருத்தலின் அவற்றாற்றோற்றிய பிரத்தியட்சப் பிரமையும் ஆறாம். (1) சுரோத்திரேந்திரிய (காதிந்திரிய) ஜன்னிய (உண்டான) யதார்த்த ஞானம் சுரோத்திரப்பிரமையாம்; (2) துவக்கிந்திரிய ஜன்னிய

யதார்த்த ஞானம் துவாசப்பிரமையாம்; (3) நேத்திரேந்திரிய ஜன்னிய யதார்த்த ஞானம் சாட்சுசப் பிரமையாம்; (4) இரசனேந்திரிய ஜன்னிய யதார்த்த ஞானம் இராசனப் பிரமையாம்; (5) கிராணேந்திரிய ஜன்னிய யதார்த்த ஞானம் கிராணஜப் பிரமையாம்; (6) மன இந்திரிய ஜன்னிய யதார்த்த ஞானம் மானசப்பிரமையாம். இவ்வாறும் சம்வாதியா (யதார்த்தமா)ம். சுக்திராஜதம் (கிளிஞ்சில் வெள்ளி) முதலியவற்றின் பிராந்தி ஞானம் * தோஷசகித இந்திரிய ஜன்னியமா யிருத்தலின் விசம்வாதியா (அயதார்த்தமா)ம்.

(1) எவ்விடத்து இந்திரியங் கரணம்? எப்போது நிருவிகற்ப வுருவப்பிரமை பலமாம் அப்போது இந்திரியம் கரணம்.

அவ்வாறே, உயிர் மனத்தோடு கூடும்; மனம் இந்திரியத்தோடு; இந்திரியம் பொருளோடு; இந்திரியங்கட்கு அடைந்ததை விளக்குந்தன்மை நியமமாதலின். ஆதலின் பொருளோடுகூடிய இந்திரியத்தால் பெயர் சாதிமுதலியையில்லாத (சம்பந்த மில்லாத) பொருள் மாத்திரமகப்படுக்கும் நிருவிகற்ப ஞானந்தோன்றும்.

(i) அந்தஞானத்திற்கு இந்திரியங் கரணம்; துணித்தற்கு நவியம் (கோடரி) போல. (ii) இந்திரியார்த்தக் கூட்டம் (இந்திரியவிஷய சையோகம்) அவாந்தர வியாபாரம்; துணித்தற் கருவியான நவியத்திற்கு மரத்தோடு கூட்டம்போல. (iii) நிருவிகற்ப ஞானம் பலம்; நவியத்திற்குத் துணித்தல் போல.

* தோஷமென்றது பித்தம், படலம், தூரம், இருள் முதலியவற்றை.

(கு-ரை.) ஆன்மா மனத்தோடும், மனம் இந்திரியத்தோடும், இந்திரியம் பொருளோடுங்கூடினுல் இந்திரியங்கட்குத் தாமடைந்த விஷயங்களை விளக்குந்தன்மையுண்டாமென்க.

காரகம் (செய்வது) ஞாபகம் (அறிவிப்பது) என்னும் இரு வகைக் கருவி (காரணங்) களில், இந்திரியம் ஞாபகக்கருவி யெனவும் நவியம் (கோடரி) காரகக்கருவி யெனவுமறிக. இதனுல் பிரமைக்குக் காரணமான பிரமாணம் அஞ்ஞான ஞாபகமே (அறியப்படாததை விளக்குவதெ)ன் ருயிற்று.

பிரத்தியக்ஷம், அனுமானம், உவமானம், சப்தம் என்னும் நான்கு பிரமாணங்களும் ஞாபகக்கருவியேயாம்.

சாத்தனிவன், பார்ப்பானிவன் என்று விசேடண விசேடியங்களின் சம்பந்தத்தைக்கவராது இஃதேதோ வொன்றெேன வஸ்து மாத்திரத்திற்ருேற்றும் ஞானம் நிர்விகற்ப ஞானமாம். விசேடணம்-வேறுபடுத்துவது; விசேடியம் - வேறுபடுத்தப்படுவது. நிர்விகற்பம்-பெயர், ஜாதிமுதலிய விகற்பமில்லாதது.

(2) எவ்விடத்துப் பொருளிந்திரியக் கூட்டம் கரணம்?

எப்போது நிருவிகற்பத்தின் பின்னர்ப் பெயர் சாதி முதலியையுள்ள சாத்தனிவன், பார்ப்பானிவன், கரியனிவன் என்னும் விசேடண விசேடியத்தன்மை அகப்படுக்கும் சவிகற்பஞானந் தோன்றும், அப்போது (i) பொருளிந்திரியக் கூட்டம் கரணம்; (ii) நிருவிகற்பமே அவாந்தர வியாபாரம்; (iii) சவிகற்பஞானம் பலம்.

(கு-ரை.) இவன் சாத்தன், இவன் பார்ப்பான், இவன் கரியன், இவன் ஓதுவான் எனப்பெயர், ஜாதி, குணம், தொழில் முதலிய விசேடண விசேடியங்களின் சம்பந்தத்தை யறியும் ஞானம் சவிகற்ப ஞானமெனப்படும்.

(3) எவ்விடத்து ஞானம் கரணம்? எப்போது கூறப்பட்ட சவிகற்பத்தின் பின்னர் வெறுப்பு, விழைவு, உபேட்சையென்னும் புத்திதோன்றும், அப்போது (i) நிருவிகற்ப ஞானம் கரணம்; (ii) சவிகற்ப ஞானம் அவாந்தர வியாபாரம்; (iii) வெறுப்புமுதலிய புத்திகள் பலம்.

(கு-ரை.) அனுகூல பிரதிகூல பதார்த்தங்களின் ஞானத்தால் சுகதுக்க முதலியவை யுண்டாதல் நியமமா யிருத்தலின் வெறுப்பு முதலியவற்றிற்கு ஞானம் கரணமென்று கூறப்பட்டது.

அதனுலுண்டானதாயும் அதனுலுண்டான ஞானத்திற்கு ஜனகமாயுமிருப்பது அவாந்தர வியாபாரமா (இடைத்தொழிலா)ம்.

* சவிகற்ப முதலியவற்றிற்கும் இந்திரியமே கரணமென்பாருமுளர்.

---

* "விசிஷ்ட ஞானத்திற்கு எது விசேஷணஞானமாம்; அவ்விசேஷணத்தின் ஞானம் சிலவிடத்து ஸ்மிருதிரூபமாம்; சிலவிடத்து நிருவிகற்பமாம்; சிலவிடத்து விசிஷ்டஞானமே விசேஷணமாம். விசேஷியத்திற்கு முன் விசேஷணமாத்திரத்தோடு இந்திரியத்திற்குச் சம்பந்தமுண்டாகின்றது. ஆண்டு விசேஷணம்

விசேஷணமாத்திரமாக இந்திரியசம்பந்த ஜந்யமாம். அதுவும் விசிஷ்டப் பிரத்தியக்ஷமேயாம். யாண்டுப் புருஷனின்றிக் கேவல தண்டத்தோடு இந்திரியத்திற்குச் சம்பந்தமுண்டாய்ப் பிற்கணத்திற் புருஷனோடு சம்பந்தமாகின்றதோ, ஆண்டுத் தண்டரூப விசேஷணத்தின் ஞானம் விசேஷணமாத்திரத்தின் சம்பந்தத்தாலுண்டாகின்றது. அதற்குப் பிற்கணத்தில் தண்டி புருடன் என்னும் விசிஷ்டத்தின் ஞானமுண்டாகின்றது. கடமிருக்கிறதென்னும் முதல் விசிஷ்டஞானமெதுவோ அதற்குமுன் கடத்துவரூப விசேஷணத்தின் நிர்விகற்பஞானம் இந்திரியசம்பந்தத்தாலுண்டாகின்றது. பிற்கணத்தில் கடமிருக்கிறதென்னும் கடத்துவ விசிஷ்ட கடஞானம் உண்டாகின்றது. எவ்விந்திரிய சம்பந்தத்தால் கடத்தன்மையின் நிர்விகற்பஞான முண்டாகின்றதோ, அவ்விந்திரிய சம்பந்தத்தாற்றனே கடத்துவ விசிஷ்டகடத்தின் சவிகற்பஞான முண்டாகின்றது. கடத்தன்மையின் நிர்விகற்ப ஞானத்தில் இந்திரியம் கரணமும், இந்திரியத்தின் சையுக்த சமவாய சம்பந்தம் வியாபாரமுமாம். கடத்தன்மைவிசிஷ்ட கடத்தின் சவிகற்பஞானத்தில் இந்திரியத்தின் சையுக்த சமவாய சம்பந்தம் கரணமும், நிர்விகற்ப ஞானம் வியாபாரமுமாம். இவ்வாறு ஓர் ஆதுனிக (நவீன) நையாயிகர் நிர்விகற்பக சவிகற்பக ஞானங்களில் கரணத்தின் பேதம் கூறியிருக்கின்றனர்.

அது சம்பிரதாயத்திற்கு விருத்தமாம். ஏனெனின், வியாபாரமுடைய அசாதாரண காரணம் கரணமெனப்படுமென்னும் மதத்தில் பிரத்தியக்ஷ ஞானத்திற்குக் கரணமாயிருத்தலால் இந்திரியமே **பிரத்தியக்ஷப்பிரமாண** மெனப்படுகின்றது. ஆதுனிகர் கிரமப்படி சவிகற்பக ஞானத்தின் காரணமாயிருத்தலால், இந்திரியத்தின் சம்பந்தத்தையும் பிரமாணமெனல்வேண்டும். சம்பிரதாயமுடையோர் சம்பந்தத்தைப் பிரமாணமாகக் கூறினாரில்லையாகலின் இரண்டு

*நடுவு(இந்திரியத்திற்கும் விஷயத்திற்கு மிடையே)

பிரத்தியக்ஷ ஞானங்களுக்கும் இந்திரியமே காரணமாம். ஆதலால் இந்திரியம் பிரத்தியக்ஷப் பிரமாணமாம். ஆனல் நிர்விகற்ப ஞானத்தில் இந்திரியத்தின் சம்பந்தமாத்திரம் வியாபாரமாம். சவிகற்ப ஞானத்தில் இந்திரியத்தின் சம்பந்தமும் நிர்விகற்பஞானமுமாகிய இரண்டும் வியாபாரமாம். இருவகைப்பிரத்தியக்ஷ ஞானத்திற்குங் காரணமாயிருத்தலால் இந்திரியம் பிரத்தியக்ஷப் பிரமாணமாம்.

தர்மதர்மிகளின் சம்பந்தத்தை விஷயஞ் செய்யும் ஞானம் சவிகற்பக ஞானமெனப்படும். கடமிருக்கிறதென்னும்ஞானத்தால் கடத்தில் கடத்தன்மையின் சமவாயம் விளங்குகின்றதாகலின், சவிகற்ப ஞானத்திற்குத் தர்மம், தர்மி, சமவாய மென்னுமூன்றும் விஷயமாம். ஆதலால் கடமிருக்கிற தென்னும் விசிட்டஞானம் சம்பந்தத்தை விஷயஞ்செய்தலால் சவிகற்பக மெனப்படுகின்றது; அதனின் வேருய ஞானம் நிர்விகற்பக ஞானமெனப்படும்.

இவ்வாற்ருல் முதல் விசிட்ட ஞானத்தை யுண்டுபண்ணும் விசேஷண ஞானம் நிர்விகற்பக ஞானமாம். ஒருமுறை கடமிருக்கிற தென்னும் விசிட்ட ஞானமுண்டாய்ப் பின்னர்க் கடத்தின் விசிட்ட ஞானமுண்டாமிடத்துக் கடத்தோடு இந்திரியத்திற்குச் சம்பந்தமிருக்கிறது. முன்னனுபவித்த அதே கடத்தன்மையின் ஸ்மிருதியுண்டாகின்றது. அதற்குப் பிற்கணத்தில் கடமிருக்கிற தென்னும் விசிட்டஞான முண்டாகின்றது. இவ்வாற்ருல் இரண்டாவது முதலிய விசிட்ட ஞானத்திற்கேதுவாகிய விசேடண ஞானம் ஸ்மிருதிவடிவமாம்" என்று விருத்திப்பிரபாகரத்திற் கூறப்பட்டிருக்கின்றமை யீண்டறியத்தக்கதாம்.

* "சையோக முதலிய அறுவகைச் சம்பந்தமும் வியாபார மெனிற் படுமிழுக்கென்னை? அவை இந்திரியங்களால் தோன்றி

தோன்றியனவாகிய சந்நிகர்ஷ (சம்பந்த) முதலியன எவ்வளவோ அவ்வளவும் அவாந்தர வியாபாரம்.

(கு-ரை.) வியாபாரமுடைய அசாதாரண காரணம் கரணமாமென்பது (1) இந்திரியார்த்தக் கூட்டம் அவாந்தர வியாபாரம்; (2) நிருவிகற்பமே அவாந்தர வியாபாரம்; (3) சவிகற்ப ஞானம் அவாந்தர வியாபாரம் என்று கூறியிருப்பதாலறிக,

காரணத்திற்றேன்றிக் காரியத்தைத் தோற்றுவிப்பதாகிய வியாபாரம்: ஞாபகம் காரகம் என்னும் இருவகைக் கருவிகட்கும் பொதுவாம்.

(1) **இந்திரியார்த்தக் கூட்டம்** (இந்திரியவிஷய சம்பந்தம்) இந்திரியத்திற்றேன்றி நிருவிகற்ப ஞானத்தைத் தோற்றுவிப்பதாயிருத்தலின் வியாபாரமெனவும்,(2)**நிருவிகற்பம்** பொருளிந்திரியக் கூட்டத்திற்றேன்றிச் சவிகற்ப ஞானத்தைத் தோற்றுவிப்பதாயிருத்தலின் வியர்பார மெனவும், (3) **சவிகற்ப ஞானம்** நிருவிகற்பஞானத்திற்றேன்றி வெறுப்புமுதலிய ஞானத்தைத்தோற்றுவிப்பதாயிருத்தலின் வியாபார மெனவுமறிக.

சவிகற்பம்: அபிஞ்ஞாரூபப்பிரத்தியட்சம் பிரத்தியபிஞ்ஞாரூபப்பிரத்தியட்சமென் றிருவகைத்தாம்.

இந்திரியங்களால் தோன்றுவனவாகிய இது கடம்; இது படம் என்றற்றொடக்கத்துப் பிரத்தியட்சத்தைத்தோற்றுவிப்பனவாகலானெனின், அங்ஙனமன்று; முதற்சம்பந்தமாகிய சையோகத்தையொழித்து ஒழிந்த சையுக்த சமவாய முதலிய நான்கு சம்பந்தமும் நித்திய சமவாயமே யாகலான்" என்று தர்க்காமிர்தங் கூறுகின்றது.

i. கேவலம் இந்திரியசம்பந்தத்தா லுண்டாகும் ஞானம் அபிஞ்ஞாருபப் பிரத்தியக்ஷமாம். அஃது 'இது யானை' என்று நேத்திரசம்பந்தத்தாலுண்டாகும் ஞானம்போல்வதாம்.

ii. முந்தியஞானத்தின் சம்ஸ்காரத்தினாலும் இந்திரிய சம்பந்தத்தினாலுமுண்டாகும் ஞானம் பிரத்தியபிஞ்ஞாருபப் பிரத்தியக்ஷமாம். அது முன்பார்த்த யானை யெதிரே காணப்படும்போது 'அந்தயானையிது' என்றுண்டாகும் ஞானம்போல்வதாம்.

இன்னு மிப்பிரத்தியட்சம் சிவஞானசித்தியார் கூறுகின்றவாறு இந்திரியப்பிரத்தியக்ஷம், மானதப்பிரத்தியக்ஷம், சுவ வேதனைப்பிரத்தியக்ஷம், யோகப்பிரத்தியக்ஷமென நால்வகைத்தாம்.

அவைவருமாறு:—

(1) உயிரினேடுணர்வுவாயிலொளியுருவாதிபற்றிச்செயிரொடு விகற்பமின்றித்தெரிவதிந்திரியக்காட்சி.

(2) அயர்விலிந்திரியஞானமைம்புலன்சார்ந்துயிர்க்கண் மயர்வறவந்தஞானமானதக்காண்டலாமே.

(3) அருந்தின்பத்துன்பமுள்ளத்தறிவினுக்காராகமாதிதரும் தன்வேதனையாங்காட்சி.

(4) சமாதியான்மலங்கள்வாட்டிப்பொருந்தியதேசகாலவியல் புகல்பொருள்களெல்லாமிருந்துணர்கின்ற ஞானம்யோகநற்காண்டலாமே.

அறுவகைச் சந்நிகர்ஷம்.

32. பொருளிந்திரியங்களுடைய சாட்சாத்காரிப் பிரமைக்கு ஏதுவாகிய சந்நிகர்ஷம் யாது, அஃது அறுவகையே, அவை (1) சையோகம், (2) சையுக்த சம

வாயம், (3) சையுக்த சமவேத சமவாயம், (4) சமவாயம், (5) சமவேத சமவாயம், (6) விசேடண விசேடியபாவ மென்பனவே.

(கு-ரை.) (1) சையோக சம்பந்தத்தாற் றிரவியப்பிரத்தியட்சமும், (2) சையுக்த சமவாய சம்பந்தத்தாற் றிரவியத்திலிருப்பதாகிய சாதி, சப்தமொழிந்த குணங்கள், கருமங்களென்னு மிவற்றின் பிரத்தியட்சமும், (3) சையுக்த சமவேத சமவாயசம்பந்தத்தாற் சப்தமாத்திரத் திருப்பதான சாதியை யொழித்து ஒழிந்த குணகர்மங்களி லிருப்பதாகிய சாதியின் பிரத்தியட்சமும், (4) சமவாய சம்பந்தத்தாற் சப்தப்பிரத்தியட்சமும், (5) சமவேதசமவாய சம்பந்தத்தாற் சப்தத்திருப்பதாகிய சாதியின் பிரத்தியட்சமும், (6) விசேடண விசேடியபாவ சம்பந்தத்தால் அபாவ சமவாயங்களின் பிரத்தியட்சமு முண்டாகுமென்க. அது பின்வருவனவற்ருல் விளங்கும்.

அவற்றுள் (1) எப்போது சையோக சந்நிகர்ஷ (சம்பந்த)ம்?

எப்போது கண்ணுற் குடமிதுவென்று குடவிடய ஞானந் தோன்றும் அப்போது கண் இந்திரியம் கடம் பொருள், அவற்றது சந்நிகர்ஷம் சையோகமே; நீக்கமின்றி யிருத்தலின்மையின்.

இங்ஙனம் மனமென்னும் அக் (உள்) இந்திரியத்தால் எப்போது ஆன்மவிடய ஞானம் நானென்று தோன்றும் அப்போது மனம் இந்திரியம், ஆன்மா பொருள், அவற்றது சந்நிகர்ஷம் சையோகமே.

(கு-ரை.) கண் முதலிய புறவிந்திரியங்கட்குக் கடமுதலிய வற்ரேடு சையோகமுண்டாயபோது ஈண்டுக் கடமிருக்கிற தென்றற் ருெடக்கத்து ஞானமுண்டாவதுபோன்று அகவிந்திரியமாகிய மனத்திற்கு ஆன்மாவுடன் சையோக முண்டாயபோது நானிருக்கிறேனென்றற் ருெடக்கத்து ஞானமுண்டாகின்ற தென்பதாம்.

(2) எப்போது சையுக்த சமவாய சந்நிகர்ஷம்?

எப்போது கண்முதலியவற்ருற் குடமடை (குடத்வ.தயடைந்த) உருவமுதலியவை குடத்தின்கண் நீலவுருவம் உண்டென்று கிரகிக்கப்படும் அப்போது கண் இந்திரியம், குடமடை யுருவ முதலியவை பொருள், அவற்றினது சந்நிகர்ஷம் சையுக்த சமவாயமே; கண்ணேடு சையுக்தமான குடத்தில் உருவிற்குச் சமவாயமாதலின்.

இங்ஙனம் மனத்தால் ஆன்ம சமவேதமாகிய இன்ப முதலியவை கிரகிக்கப்படும்போதும் இச் சந்நிகர்ஷ (சையுக்த சமவாய) மே.

(கு-ரை.) சையுக்தம்- சையோக சம்பந்த முடையது.

குடமடை பரிமாண (அளவு) முதலியவற்றின் கிரகிப்பில் நான்குவகைச் சந்நிகர்ஷமும் மிக்ககாரணமென்று வேண்டப்படும்; சையுக்தசமவாய முண்டாயினும் அஃதில்லாத போது சேய்மைக்கண் பரிமாண முதலியன கிரகிக்கப்படாமையின்.

(கு-ரை.) அஃது-நான்குவகைச் சந்நிகர்ஷம்; சேய்மை- தூரம்.

நான்குவகைச் சந்நிகர்ஷம் எங்ஙனம்?

(க) அவை இந்திரியங்களின் அவயவங்கட்கும் பொருள்களின் அவயவிகட்கும், (உ) இந்திரியங்களின் அவயவிகட்கும் பொருள்களின் அவயவங்கட்கும், (ங) இந்திரியங்களின் அவயவங்கட்கும் பொருள்களின் அவயவங்கட்கும், (ச) பொருள்களின் அவயவிகட்கும் இந்திரியங்களின் அவயவிகட்குமாய சந்நிகர்ஷங்கள்.

(கு-ரை.) மனமும் சுரோத்திரேந்திரியமு மொழிந்த இந்திரியங்கள் நான்கும் அவயவ முடையனவா யிருக்கின்றன வாதலின் அவ்விந்திரியங்களையே யீண்டுக் கொள்ளல்வேண்டும். காரியவடிவத் திரவியமியாவும் அவயவ முடையனவா மென்பது நியமம். தூரத்திலுள்ள குடமுதலியவற்றின் பரிமாண (அளவு) முதலியவற்றை யறியுமிடத்து அவற்றோடு (நேத்திர) இந்திரியத்திற்குச் சையுக்தசமவாய சம்பந்தமிருப்பினும் மேற்கூறியுள்ள நால்வகைச் சம்பந்தங்களும் அவசியமிருத்தல் வேண்டும்; இல்லாவிடின் அவற்றின் ஞானமுண்டாகாது. அவயவமுடைய இந்திரியங்களும் அதீந்திரியமாம். அதீந்திரியம்-இந்திரியத்திற்கு விஷயமாகாமை.

(3) எப்போது சையுக்த சமவேதசமவாய சந்நிகர்ஷம்?

எப்போது கண் முதலியவற்றால் குடவுருவின் சமவேதமான உருவத்தன்மை முதலிய சாமானிய ஞானம் கவரப்படும் அப்போது கண் இந்திரியம், உருவத்தன்மை முதலிய சாமானியம் பொருள், அவற்றது

சந்நிகர்ஷம் சையுக்த சமவேத சமவாயமே. எங்ஙனம்? கண்ணோடு சையுக்தமான குடத்தில் உருவம் சமவேதம்; அதன்கண் உருவத்தன்மைக்குச் சமவாயமாதலின்.

(கு-ரை.) சமவாய சம்பந்தத்தோடிருப்பது சமவேத மெனப் படும்.

(4) எப்போது சமவாய சந்நிகருஷம்?

எப்போது செவிப்புலனால் இதுககாரமென்று ஓசை கிரகிக்கப்படும் அப்போது செவி இந்திரியம், ஓசை பொருள், அவற்றினது சந்நிகர்ஷம் சமவாயமே; செவிக்கு வான் (ஆகாய) வடிவமுண்மையின், ஓசைக்கு வான் குணத்தன்மை உண்மையின், குண குணிகட்குச் சமவாயமாதலின்.

(கு-ரை.) கர்ண கோளகத்தால் வளைபட்ட ஆகாயம் சுரோத்திரேந்திரிய மெனப்படும். கர்ணம்-காது.

ஓசை ஆகாயத்தின் குணமாயிருத்தலின் ஓசையாகிய குணத்திற்கும் கர்ண கோளகத்தால் வளைபட்டுள்ள ஆகாயமாகிய சுரோத்திரேந்திரியத்திற்குமுள்ள சம்பந்தம் சமவாயசம்பந்தமாம்; சுரோத்திரேந்திரியம் குணியாயும் ஓசை குணமாயு மிருத்தலின்.

(5) எப்போது சமவேத சமவாய சந்நிகர்ஷம்? எப்போது செவியிற் சமவேதமான ஓசையில் ஓசைத்தன்மை முதலிய சாமானியம் சுரோத்திரத்தால் கவர (அறிய)ப்படும் அப்போது செவி இந்திரியம்,

ஓசைத்தன்மை முதலிய சாமானியம் (ஜாதி) பொருள், அவற்றினது சந்நிகர்ஷம் சமவேத சமவாயம்; செவி யிற் சமவேதமான ஓசையில் ஓசைத்தன்மைக்குச் சமவாயமாதலின்.

(கு-ரை.) ஓசையெனப் பொதுப்படக் கூறினமையின் எழுத்துவடிவம், ஒலி வடிவமென்னு மிரண்டையுங் கொள்க. அண்ண (மேல்வாய்) முதலியவற்றின் வியாபாரத்தாற் றோன்று வது எழுத்துவடிவமாம்; யாழ் முதலியவற்றாற் றோன்றுவது ஒலி வடிவமாம்.

'ஓசைத்தன்மை முதலிய' என்றமையால் ஓசைத் தன்மையின் வியாப்பியமான ககாரத்தன்மை முதலியனவும் தார (உச்சஸ்வர)த் தன்மையும் மந்தத்தன்மையுங் கொள்க.

(6.) எப்போது விசேடண விசேடியபாவப்பொரு ளிந்திரிய சந்நிகர்ஷம்?

எப்போது கண்ணோடு சையுக்தமான பூதலத்தில் இப்பூதலத்திற் குடமில்லென்று குடத்தினின்மை கிர கிக்கப்படும் அப்போது விசேடண விசேடிய பாவரூப சம்பந்தம். அப்போது கண்ணோடுகூடிய பூதலத்திற் குக் கடத்தினின்மை விசேடணம், பூதலம் விசேடியம்.

எப்போது மனத்தோடு சையுக்தமான ஆத்மாவில் யான் சுகமற்றவனென்று (தன்னிடத்திற்) சுகாபாவம் (இன்பமின்மை) கிரகிக்கப்படும் அப்போது மனத்

தோடு சையுக்தமான ஆத்மாவிற்குச் சுகத்தின் அபாவம் விசேடணம், (ஆன்மா விசேடியம்).

எப்போது சுரோத்திர (செவியிற்) சமவேதமான ககாரத்திற் சகாரத்தன்மையின் அபாவம் கிரகிக்கப்படும் அப்போது செவியிற் சமவேதமான ககாரத்திற்குச் சகாரத்தன்மையின் அபாவம் விசேடணம், (ககாரம் விசேடியம்).

33. இங்ஙனஞ் சுருக்கத்தாற்கூறுதும்:—(சையோக முதலிய) ஐவகைச் சம்பந்தத்தில் ஏதாவதொரு சம்பந்தத்தின் சம்பந்தியினது விசேடண விசேடிய பாவவிலக்கண (வடிவ) மான இந்திரியார்த்த சந்நிகர்ஷத்தால் அபாவம் இந்திரியத்தாற் கிரகிக்கப்படும்.

இங்ஙனம் சமவாயமும். கண்ணோடு சையுக்தமான தந்துவிற்கு விசேடியமான படத்தின் சமவாயம் இந்நூலில் ஆடையின் சமவாயமிருக்கின்றதென்று கிரகிக்கப்படும்.

இங்ஙனம் அறுவகைச் சந்நிகர்ஷங்கள் கூறப்பட்டன.

(கு-ரை.) விசேடண விசேடியபாவம் (தன்மை) விசேடண விசேடிய சொரூபமேயன்றி வேற்றுச் சம்பந்தமன்றாம்.

"நியாயமதத்தில் ஜாதிவடிவ தர்மத்திற்கும் குணத்திற்கும் கிரியைக்கும் தமதாசிரயத்தில் சமவாயசம்பந்தங் கூறுவர். ஜாதி

குணக்கிரியைகளின் வேருய தர்மத்தினை யுபாதியென்பர். உபாதிக்கும் அபாவத்திற்கும் அதனதன் ஆசிரயத்தோடுள்ள சம்பந்தத்தைச் சொரூபசம்பந்தமென்பர். சொரூபத்தையே விசேஷணத்தன்மையென்பர்" என்று விருத்திப்பிரபாகரம் முதற்பிரகாசத்திற் கூறுவதிங் கறியத்தக்கதாம்.

எவ்விந்திரியத்தால் எது கவா(அறிய)ப்படுகின்றதோ அவ்விந்திரியத்தாலேயே அதன்கணுள்ளசாமானியமும்அதன்சமவாயமும் அதனபாவமும் கிரகிக்கப்படு மென்பது நியமமாதலின் 'அபாவம் இந்திரியத்தாற் கிரகிக்க (அறிய) ப்படும்' என்று கூறப்பட்டது.

மீமாம்சகர் முதலியோர் அபாவநிச்சயம் அனுபலத்திப்பிரமாணத்தாலுண்டாகின்றதென்பர். உபலத்தி-ஞானம்; அனுபலத்தி-அதனின்மை. அஃதாவது பதார்த்தம் விளங்காமை. நையாயிகர் அபாவத்தையறியு மிடத்து அனுபலத்தி பிரத்தியட்சப்பிரமாணத்திற்குச் சககாரியா (துணைக் காரணமா)யிருக்கின்றதென்பர்.

பிரத்தியட்ச ஞானத்திற் கேதுவாகிய விஷய விந்திரியங்களின் சம்பந்தம்: இலௌகிகம் அலௌகிகமென விருவகைப்படும் அவற்றுள், மேற்கூறிய சையோக முதலிய அறுவகைச் சம்பந்தமும் இலௌகிக சம்பந்தமாம். அலௌகிக சம்பந்தம்: சாமானிய லக்ஷணம், ஞானலக்ஷணம், யோகஜன்னிய தர்மலக்ஷணமென மூன்று வகைப்படும்.

(1) யாண்டு ஒரு கடத்தோடு நேத்திரத்தின் சையோக முண்டாகின்றதோ ஆண்டு ஒரேகடத்தின் பிரத்தியட்சம் நேத்திரத்தினுலுண்டாகாது கடத்தன்மையின் ஆசிரயமான சர்வகடங்களின் பிரத்தியக்ஷமும் நேத்திரத்தினுலுண்டாதல் சாமானிய லக்ஷணமாம்.

(2) சந்தனக்கட்டையோடு நேத்திரத்தின் சையோகமுண்டாய விடத்துச் சந்தனக்கட்டை வாசனையுடையதென்றுண்டாகும் ஞானம் ஞானலக்ஷணமாம்.

(3) யோகாப்பியாசபலத்தால் மறைந்துள்ளன, சென்றன, வருவனவாகிய சகலபதார்த்தங்களின் பிரத்தியக்ஷமுமுண்டாதல் யோகஜன்னிய தர்மலக்ஷணமாம். இவற்றின் விரிவை விருத்திப் பிரபாகரம் 7-வது பிரகாசத்திற் காண்க.

34. சங்கிர (சுருக்)கமாகவுங் கூறுதும்:—இந்திரியத் தோற்றப்பிரமை: விகற்பம் நிருவிகற்பமென விருவகைத்து. ஆங்க (அவ்விடத்த) தற்குக் கரண மூன்று; சந்நிகர்ஷம் ஆறு.

(கு-ரை.) இந்திரியத் தோற்றப்பிரமை—இந்திரியத்தாலுண்டாகும் யதார்த்த ஞானம். கரணமூன்றென்றது 'ஒரிடத்திந்திரியம், ஒரிடத்துப் பொருளிந்திரியக் கூட்டம், ஒரிடத்து ஞானம், என்று கூறியுள்ளதை',

சந்நிகர்ஷம் (சம்பந்தம்) ஆறென்றது சையோகசம்பந்த முதலியவற்றை.

(ஆ.) அற்றாயின், நிருவிகற்பம் பரமார்த்த சத்தாகிய (மெய்யாகிய) * தனது சொருபத்தை விடயமாகவுடைமையின் பிரத்தியட்ச மாதலமையும். சவிகற்பப் பிரத்தியட்சமோ உரையும் இலிங்கமும் (சப்தப் பிர

---

* தனது சொருபத்தை விடயமாகவுடைமையின் என்பது எதுகர்ப்ப விசேஷணம். அஃதாவது எதுவைத் தன்னுளடக்கிக் கொண்டிருக்கும் விசேஷணம்.

மாணமும் அனுமானப்பிரமாணமும்) போல அனுக தாகாரத்தை (அனுசரித்துள்ள வடிவத்தை) அகப் படுத்தலின் (விஷயமாகச் செய்திருப்பதால்) எங்ங னம் சாமானியம் விஷயமாகக் கூடும்? (சாமானி யத்தை விஷயமாகவுடைத்தா யிருத்தல் கூடும்)?

அர்த்தத் (விஷயத்) தினாலுண்டான ஞானத்திற்கே பிரத்தியட்சத்தன்மை யிருப்பதால், பரமார்த்த சத் தான (முயற்கொம்பு முதலியவைபோல் அத்தியந்த அசத்தென்னும் அளீகத்திற்குப்பின்னமான) அர்த் தமே ஞானஜனக மாகையால். சுலட்சண (தனது சொரூப) மோ பரமார்த்தசத்து. அது சாமானிய மன்று; பிரமாணத்தாற் றள்ளப்பட்ட விதிபாவ (சத் துவ) த்தையுடைய அன்னிய வியாவிர்த்திய (பிறிது நீக்க) வடிவதர்மத்துடன் அதற்குத் துல்லிய (ஒப் புமை)த் தன்மையிருத்தலின்.

(ச.) இங்ஙனமன்று; சாமானியத்திற் (ஜாதிக்)கு வஸ்துபூதம் (பாவவடிவம்) இருத்தலின்.

இங்ஙனம் பிரத்தியட்சங் கூறப்பட்டது.

(கு-ரை.) அசாதாரண தருமமாகிய விலக்கணங்களே யெல் லாம் அதத்வியாவிருத்தி (அதுவல்லாததன் நீக்க) வடிவமாகஅங் கீகரித்துள்ள பௌத்தன் ஈண்டு நிருவிகற்பஞானத்தைப் பிரத்தி யட்சஞானமாக வங்கீகரித்துச் சவிகற்ப ஞானத்தை யங்கீகரி

யாது நிருவிகற்பமானது சுலட்சணத்தை (கடாதிவியக்தி சொரூபத்தை) விடயமாக வுடைமையின் பிரத்தியட்சப்பிரமையாகும். சவிகற்பமோ அதத்வியா விருத்திவடிவ அபாவத்தை விடயமாக வுடைமையின் அஃதெங்ஙனம் பிரமையாகுமென்று சங்கித்தானென்றறிதற்பாற்றும்.

சிவஞானசித்தியாரின் "அளவைகாண்டல்" என்னுஞ் செய்யுளின் விசேடவுரையில் சிவாக்கிரயோகி "அவன் (பௌத்தன்) ஸ்மிருதிஞானமும் சவிகற்பஞானமும் பிரமாணமல்லவென்கையால்" என்று கூறியிருத்தலு மிங்கறியத்தக்கதாம்.

2. அநுமானம்—Inference.

35. இலிங்கபராமரிசம் அநுமானம். யாதினாலநுமாவிக்கப்படும் அஃது அநுமானம்.

இலிங்க பராமரிசத்தானே பொருள் அநுமிக்கப்படும். ஆதலின், இலிங்கபராமரிசம் அநுமானம். அநுபுகை முதலிய ஞானம்; அநுமிதியைக் குறித்துக் கரணமாதலின். தீமுதலியஞானம் அநுமிதி; அதன் கரணம் புகை முதலிய ஞானம்.

(கு-ரை.) இலிங்க பராமரிசம்-குறியாராய்ச்சி. இலிங்கம்-குறி, பராமரிசம்-ஆராய்ச்சி. வன்னியின் வியாப்பியமான புகையுடையது இம்மலை என்னு மிலிங்கபராமரிசத்தினால் இம்மலை நெருப்புடையது என்னும் ஞானந் தோன்றுதலின் இலிங்கபராமரிசம் அநுமானமும், இம்மலை நெருப்புடையதென்பது அநுமிதியுமாம். எதன் (புகையின்) ஞானத்தால் சாத்தியத்தின் (தீயின்) ஞானமுண்டாகின்றதோ அஃதிலிங்க மெனப்படும்.

இலிங்க பராமரிசம் அனுமான மென்னுமிடத்து அதற்கு வியா பாரம் பெறப்படாமையின் அது *வியாபாரமின்றிய காரணமாம். வன்னி (தீ)யின் வியாப்பியமான புகையுடையது இம்மலை என்னும் இலிங்கபராமரிசம் பிரசித்தானுமான மெனப்படும்.

அனுமிதியின் கரணமான அனுமானம் வியாபாரமுடையதென்பார் தூமம் (புகை) வன்னியின் வியாப்பியமாமென்னும் வியாத்திஞானம் அனுமானமென்றும், பராமரிசம் வியாபாரமென்றுங் கூறுவர். பராமரிசம் வியாத்திஞானத்திற்றோன்றி அனுமிதிஞானத்தைத் தோற்றுவிப்பதா யிருத்தலின் வியபாரமாயிற்றெனக.

சிலநையாயிகர் ஞானவேதுவினை அனுமானமென்பர். ஓர் பக்ஷத்தில் எதுவின் ஞானத்தை அநுமானமென்பர். வியாப்தியின் ஸ்மிருதியையும் பராமரிசத்தையும் வியாபாரமென்பர்; சிலர் வியாப்தியின் ஸ்மிருதி ஞானத்தை அநுமானமென்பர்; பராமரிசத்தை வியாபாரமென்பர். இவ்வாறு நையாயிகர்களுக்குள் அநேக மதமுண்டு. ஆனல் எல்லோர் மதத்தினும் பராமரிசத்தின் அங்கீகாரமுண்டு. சிலர் பராமரிசத்தைக் கரணமென்பர்; சிலர் வியாபாரமென்பர். பராமரிசமின்றி அனுமிதியுண்டாகா தென்பது சகல நையாயிகர்களது மதமாம். பிரத்தியட்சப் பிரமாணத்திற்கு வியாபாரங்கூறிய இந்நூலாசிரியர் அநுமானப் பிரமாணத்திற்கு வியாபாரங் கூறாமையறிக.

36. இலிங்கம் யாது? அதனது பராமரிசம் யாது? கூறுதும்:—

---

* காரியத்தை வெவ்வாற்றாலேனும் உற்பத்தி செய்வியாது தானேயுண்டாக்குவது வியாபாரமின்றிய காரணமாம்.

வியாப்தி வல (நிச்சய)த்தாற் பொருளை (சாத்தியத்தை) யுணர்த்துவது இலிங்கம். எங்ஙனம்? புகை தீக்கு இலிங்கம். அங்ஙனமன்றோ, யாண்டுப்புகை ஆண்டுத் தியென்னும் உடனிகழ்ச்சி நியமம் வியாப்தி. அது (வியாப்தி) கிரகிக்கப்பட்டாற்றான் புகை தீயை யுணர்த்தும். ஆதலின், வியாப்தி வலத்தால் தீ அநுமாபகமாதலின் புகை தீக்கிலிங்கம். அத (புகையி)னது மூன்றா ஞானம் இலிங்கபராமரிசம். அங்ஙனமன்றோ, முன்னே அட்டில் (பாகசாலை - சமயலறை) முதலியவற்றில் மறித்து மறித்து (அடுத்தடுத்து)ப்புகைகண்டு தீயைக் காணாநின்றான்; அம்மறித்துக் காண்டலால் புகை திக்களது தன்னியல்பான (சுவாப) சம்பந்தம் யாண்டுப்புகை ஆண்டுத் தியென்று துணியாநின்றான்.

(கு-ரை.) அவிநாபாவ ரூப (விட்டு நீங்காதுள்ள) சம்பந்தம் வியாப்தி யெனப்படும். தூமத்தில் வன்னியின் அவிநாபாவ ரூப சம்பந்த மிருக்கின்றமையின் அதுவே தூமத்தில். வன்னியின் வியாப்தியாம்.

உடனிகழ்ச்சி யென்பது கூடவிருத்தற்காம். புகையோடு கூடத் தீயிருத்தல் காண்க.

எதன் (புகையின்) கண் எதன் (தீயின்) வியாப்தியுண்டாகின்றதோ அது (புகை) அதன் (தீயின்) வியாப்பியமாம். எதன் (தீயின்) வியாப்தியுளதாகின்றதோ அது (தீ) வியாபகமாம். வியாப்பியம்-எது; வியாபகம்-சாத்தியம்.

அது கிரகிக்கப்பட்டாற்ருன்--[யாண்டுப்புகையுண்டு ஆண்டுத் தீயுண்டென அடுக்களை (சமயலறை) முதலியவற்றில் அவ்விரண்டற்கும்] வியாப்தியறியப்பட்டாற்ருன்.

தீ யநும்மாபகமாதலின்—(இம்மலை தீயுடையதென்று) தீயின் அநுமிதியை யுண்டுபண்ணுவதாகலின்.

37. யாண்டு யாண்டு மித்திரை மக (மைத்திரி யென்பவளதுபிள்ளைத்த)ன்மை ஆண்டு ஆண்டுக் கருமையென்பது ஒக்கும். ஆயினும், மித்திரை மகன்மை கருமைகட்குத் தன்னியற்கைச் சம்பந்தமின்று. மற்றென்னெனின், ஔபாதிகமே (உபாதியோடு கூடியதே); அடகு (இலைக்கறி) முதலிய உணவுப் பரிணாமமான (திரிபான) உபாதியுண்மையின். அங்ஙனமன்றே, கருமையில் மித்திரை மகன்மை பிரயோசக (காரண) மன்று. மற்றென்னெனின், அடகு முதலிய வுணவுப் பரிணதி (திரிபின்) வேறுபாடே பிரயோசகம். பிரயோசகமும் உபாதியென்று கூறப்படும். புகை தீக்களது சம்பந்தத்தில் ஒருபாதியுமின்று; தகுதியல்லது சங்கித்தற் பொருட் டருமையாதலின், தகுதியது காணப்படாமையின். யாண்டு உபாதி யுண்டு ஆண்டுக் காணப்படும். எங்ஙனம்? தீக்குப் புகையோடு சம்பந்தத்தில் ஈரவிறகின் கூட்டம் உபாதி; கொலைமைக்கு அதன்மசாதனத்தோடு கூடிய சம்பந்தத்தில் நிஷித்தத்துவம் உபாதி; மித்திரை மகன்மைக்குக் கருமைச் சம்பந்தத்தில் அடகுமுதலிய உணவுப் பரிணதி

வேறுபாடு உபாதி. ஈண்டுப்புகைக்குத் தீ உடனிகழ்ச்சியில் ஒருபாதியுமின்று; உண்டாயின், அப்போது (நிலம் போலக்) காணப்படும். ஆதலின், காட்சியின்மையின் இல்லை என்னும் தருக்கத்துணை (சககாரி) யுடைய உணர்வின்மை (அநுபலத்தி) யோடுகூடிய காட்சியானே உபாதியின்மை துணியப்படும். அங்ஙனமன்றோ, உபாதியின்மையிற்றோன்றிய வாசனை (சம்ஸ்காரம்) யோடு கூடிய மறித்துக் காண்டலிற்றோன்றிய வாசனையோடு கூடிய உடனிகழ்ச்சி கிரகிக்கும் காட்சியானே புகை தீக்களது வியாத்தி துணியப்படும். ஆதலின், புகை தீக்களுக்குத் தன்னியற்கைச் சம்பந்தம் (சுபாவ சம்பந்தம்) ஔபாதிகமன்று. தன்னியற்கைச் சம்பந்தம் வியாத்தியென்று கூறப்படும்.

(கு-ரை.) எங்கே யெங்கே மித்திரை மகன்மை யங்கே யங்கே கருமையென அடுத்தடுத்துக் காணினும் அது (கருமை) சிலவிடத்துத் தவறிப்போதலின் மித்திரைமகன்மைக்கும் கருமைக்கும் தன்னியற்கைச்சம்பந்த மின்றாம். அங்ஙனமே யாண்டுப் புகை ஆண்டுத்தீயென அடுத்தடுத்துக் காணினும் அவற்றிற்குத் தன்னியற்கைச் சம்பந்தமுண்டெனக் கிரகித்தல் கூடாதென்பது கருத்து. புகைக்கும் தீக்கும் தன்னியற்கைச் சம்பந்தமின்றாயின் யாண்டுப்புகை ஆண்டுத்தீயென்னும் உடனிகழ்ச்சி நியமமுண்டாகாதென்க.

பரிணாமமாவது ஒன்று (பால்) தன் சொருபத்தைவிட்டு வேறு (தயிர்) சொருபத்தையடைவதாம்.

உபாதியுள்ளவிடத்து ஏதுவிற்கும் சாத்தியத்திற்கும் உடனிகழ்ச்சிநியமம் பெறப்படாமையின் 'புகை தீக்களது சம்பந்தத்தில் ஒருபாதியுமின்று' என்று கூறப்பட்டது.

'தகுதியல்லது சங்கித்தற்பொருட் டருமையாகலின், தகுதியது காணப்படாமையின்' என்னும் ஏதுவாக்கியத்தின் பொருள் உபாதியிருந்ததேயானல் அது யோக்கியமா? அல்லது அயோக்கியமா? அயோக்கியமாயின் அதுபற்றிச் சங்கித்தல் முடியாது. யோக்கியமாயின் காணப்படல்வேண்டும். காணப்படலோ இன்று என்பதாம்.

(1) இம்மலை புகையுடைத்து; தீயுடைமையால் என்னுமிடத்து ஈரவிறகின்கூட்டம் உபாதி. சாத்தியத்தில் வியாபித்து ஏதுவில் வியாபியாமலிருப்பது உபாதி. ஈரவிறகின் கூட்டம் சாத்தியமான புகையில் வியாபித்து ஏதுவான தீயில் (ஒழுகக்காய்ச்சிய இரும்பில்) வியாபியாம லிருக்கின்றமையின் உபாதியாம். இதனல் யாண்டுப்புகை ஆண்டுத் தீயென்னும் உடனிகழ்ச்சி நியமமும், யாண்டுத்தீ ஆண்டுப் புகையென்னும் உடனிகழ்ச்சி நியமமின்மையும் பெறப்பட்டவாறறிக.

(2) யாகத்திற் செய்யும் பசுக்கொலை அதர்மசாதனம்; கொலைமையான் என்னுமிடத்து நிஷித்தத்வம் (நிஷித்தத் தன்மை) உபாதி. அது (நிஷித்தத்வம்) சாத்தியமான அதர்மசாதனத்தில் வியாபித்து ஏதுவான கொலைமையில் வியாபியாமலிருக்கின்றமையின் உபாதியாயிற்று. யாகத்திற்செய்யும் கொலைமையில் நிஷித்தத்வமின்மையின் யாண்டுக்கொலைமை ஆண்டு நிஷித்தத்வமென்பது இன்றுமென்க.

(3) மைத்திரிபுத்திரன் கரியன்; மைத்திரி புத்திரத்தன்மையால் என்னுமிடத்து அடகு முதலிய வுணவுப் பரிணமத்தின்

வேறுபாடு உபாதி. அது சாத்தியமான கரியன் என்பதில் வியாபித்து எதுவான மைத்திரி புத்திரத்தன்மையில் வியாபியாம லிருக்கின்றமையின் உபாதியாயிற்று. மைத்திரி புத்திரரியாவரும் கரியராயிராமைபற்றி அவ்வனங் கூறப்பட்டது.

புகைக்குக் காரணம் ஈரவிறகின் கூட்டமா யிருத்தல்போலக் கருமைக்குக்காரணம் அடகுமுதலிய வுணவுப் பரிணாமத்தின்வேறுபாடாமென்க.

காகமுதலியவற்றினில்லாத கருமையே ஈண்டுச் சாத்தியமாம்.

பிரமாணத்தி லுண்டாகும் வியபிசாரசங்கை தர்க்கத்தால் நிவிர்த்தியாய்ப் போதலின் பிரமாணத்திற்குத் துணை (சககாரி)யாயிருப்பது தர்க்கமாமென்க.

'காட்சியின்மையினில்லை' என்பது * தருக்கத்தின்வடிவமாம்.

அத் தருக்கத்தினைத் துணையாக வுடைய அனுபலத்தியோடு (உபாதிவிளங்காமையோடு) கூடிய பிரத்தியக்ஷப் பிரமாணத்தினாலே புகைக்குத் தீயுடனிகழ்ச்சியில் உபாதியில்லாமை நிச்சயிக்கப்படு மென்பதாம்.

---

*தர்க்கம்:-சாதகதர்க்கம், பாதகதர்க்கமென விருவகைத்து.

சாதகம்-கருவி; பாதகம்-கெடுப்பது.

சாதகமி (புகையி) ருப்பின் சாத்தியமி (தீயி) ருக்குமென்பது சாதகதர்க்கத்தின் வடிவமாம்.

சாத்தியமி (தீயி) ன்றாயின் சாதகமி (புகையி) ன்றாமென்பது பாதகதர்க்கத்தின் வடிவமாம்.

38. ஆதலின், இந்நியாயத்தாற் புகை தீக்களது வியாத்தி கிரகிக்கப்படுகையின் அட்டிலி(பாகசாலையி)ற் புகை ஞானம் யாது, அது முதலது; மலைமுதலியபக்கத்திற் புகைஞானம் யாது, அஃது இரண்டாவது; பிற்பாடு முன்கிரகிக்கப்பட்டதாகிய யாண்டுப்புகை ஆண்டுத்தீ யெனப் புகை தீக்களது வியாத்தியை நினைத்து அம்மலையின்கண்ணே பின்னர்ப் புகையைப் பராமரிசிக் (ஆராய்) கின்றான்; இம்மலையில் தீயால் வியாத்த (வியாப்பிய)மான புகை உண்டென்று. இப் புகை ஞானம் மூன்றாவது.

இஃது (மூன்றாவது) அவசியம் வேண்டப்பட்டது. வேறாயின், யாண்டுப்புகை ஆண்டுத் தீயுண்டாக, ஈண்டுத்தீயிருத்த லெங்ஙனம்? ஆதலின், ஈண்டுப் புகை

ஈண்டுக் காட்சியின்மையின் இல்லையென்பது பாதகதர்க்கமாம். அதன்பொருள் உபாதி காணப்படுதலின்மையின் அஃதில்லையென்பது.

பிறர் காட்சியின்மையினென்பதை அநுபலப்திப் பிரமாணமென்றும் இன்மை அதன் விஷயமென்றுங் கூறுவர். அவர் உபாதியின் அப்பிரதீதி (விளங்காமை)யினால் அதன் அபாவநிச்சய முண்டாகின்றது; உண்டாகின்றமையின் அதன் (உபாதியின்) அபாவநிச்சயத்திற்குக் காரணமான அதன் அப்பிரதீதி அநுபலப்திப் பிரமாணமாமென்பர். ஈண்டு அநுபலப்திப் பிரமாணமும் அதன் விஷயமும் தர்க்கமென்று கூறப்பட்டன.

யுண்டென்னும் ஞானம் வேண்டப்படும். இதுவே இலிங்கபராமரிசம். அதுவும், அநுமிதியைக்குறித்துக் கரணமாதலின் அநுமானம். அதனு லிம்மலையிற் றியுண்டென்னு மநுமிதிஞானந் தோன்றும்.

(கு-ரை.) i. முதற்கண் அடுக்களை முதலியவற்றில் ஏதுசாத்தியங் (புகைதீக்) களின் உடனிகழ்ச்சிப்பிரத்தியக்ஷ முண்டாகிறது. இது முதலாவது.

ii. அதனுல் ஏதுவில் சாத்தியத்தினது வியாப்தி னிச்சய முண்டாகின்றது. அதன்பின் பர்வதமுதலிய பட்சத்தில் ஏதுவின் பிரத்தியக்ஷமுண்டாகின்றது. இஃதிரண்டாவது.

iii. அதன்பின் சம்ஸ்காரத்தி னெழுச்சியுண்டாய் வியாப்தியின் ஸ்மிருதியுண்டாகின்றது. அதன்பின், இம்மலையில் சாத்தியத்தினது வியாப்தி விசிஷ்ட ஏதுவின் (வன்னியின் வியாத்தியுடன் கூடிய புகையின்) பிரத்தியக்ஷ முண்டாகின்றது. இது மூன்ருவது.

சாத்தியவியாப்பிய ஏதுவுடையது பட்சம் என்பது பராமரிசத்தின் சாமான்யவடிவமாம்.

வேருயின் - மூன்ருவதாகிய புகை ஞானம் வேண்டப்படுவ தன்ருயின். மலையில் புகையின் பிரத்தியட்சமும் வியாப்தியின் ஸ்மரணமு முண்டாகியும் இம்மலை நெருப்புடைத்தென்னும் அநுமிதிஞான முண்டாகாமையின் இவ்விரண்டு ஞானங்களுக்குப் பின்னர் 'வன்னியின் வியாப்பியமான புகையுடைய திம்மலை' என்னும் மூன்ருவதான இலிங்க பராமரிசத்தினுற்ருன் இம்மலை தீயுடைத்தென்னும் அநுமிதிஞான முண்டாகின்ற தென்க.

(ஆ.) அற்றாயின், எங்ஙனம் முன்னரட்டிலிற் புகைஞானம் யாது அது தீ அநுமாபகம்(அநுமிதியை யுண்டுபண்ணுவத)ன்று.

(ச.) அஃதொக்கும்; வியாத்தி கிரகிக்கப்படாமை யின், வியாத்தி கிரகிக்கப்படுகையிலே அநுமிதி தோன்றலின்.

(கு-ரை.) வியாப்தி கிரகிக்காவிடத்து அநுமிதிஞான முண் டாகாதென்பது கருத்து.

(ஆ.) ஆயின், வியாத்தி துணிந்தபின்பு அட்டிலின் கண்ணே தீ அநுமிக்கப்படும்.

(ச.) இங்ஙனமன்று; தீயது காட்சியா லையை (சந் தேக) மின்மையின். ஐயப்படுபொரு ளநுமிக்கப்படும். எங்ஙனம் பாஷியகாரராற் கூறப்படும்? "அநுபலத் திப் பொருளிலும் துணிந்தபொருளிலும் நியாயம் பிர வர்த்திக்காது; மற்றென்னெனில், ஐயப்படும் பொரு ளில்".

(கு-ரை.) பாஷியகாரர் - வாச்சியாயனர். துணிந்தபொருள்- பிரமாணத்தால் நிச்சயிக்கப்பட்ட பொருள்.

(ஆ) ஆயின், மலையடைதன் மாத்திரமாகிய மகற் குப் புகைஞாநம் தீயை யநுமிக்கப்பண்ணுத தென்? இவ் விடத் தையமுண்டன்றே; சாதி (நிச்சயி)த்தல் வாதித் (தள்ளு)தலாகிய பிரமாணமின்மையால், ஐயம் நியா யத்தா லடைதலின்.

(கு-ரை.) அடுக்களை முதலியவிடத்துப் புகைக்கும் தீக்கு முள்ள உடனிகழ்ச்சி நியமத்தையறியாது மலையைமாத்திர மடைந் துள்ளவனுக்கு ஐயமிருக்கினும் புகை ஞானமானது இம்மலை தியுடைத்தென்னும் அனுமிதி ஞானத்தை யுண்டுபண்ணாததேன்? என்பது வினாவின்பொருள். சிறப்பு வகையாற் றோன்றாது பொது வகையாற் றோன்றுவது ஐயப்பொருள். அது நியாயத்தால் அடை யப்படும்.

(ச.) அஃதொக்கும்; கிரகிக்க (அறிய)ப்படாத வியாத்தியான்(வியாத்தியுடையவன்)போலக்கிரகித்து மறந்த வியாத்தியுடையமகற்கும் அநுமாநம் பிறவா மையால், வியாத்திநினைவும் அநுமிதி யேதுவாதலின். புகை காண்டலா லெழுந்த வாசனையு(சம்ஸ்காரமு)டை யவனுய் யாது யாது புகையது அது அது தீயது, எங் ஙனம்? அட்டில் என்று வியாத்தியை நினைப்பான். ஆத லின், புகைக்காட்சி தோன்றலில் வியாத்தி நினைவு தோன்றுகையின் இதுவு(மலையு)ம் புகையுடைத்தென் னும் புகை ஞாநம் யாது, அது மூன்றுவது. அதுவே தியை யநுமிக்கப்பண்ணும், மற்றையவல்ல. அதுவே இலிங்க (குறி) பராமரிசம் (ஆராய்ச்சி). ஆதலின் இலிங்க பராமரிசம் அநுமாநமென்னு மிது துணியப் படும்.

(கு-ரை.) மற்றையவல்ல-புகைஞானமும் வியாப்தி நினைவும் அநுமிதியை யுண்டுபண்ணுவன வன்று. யாண்டுப் பருவதத்தில் புகையின் பிரத்தியட்சத்தால் வியாத்தியின் ஸ்மிருதியு(நினைவு)ண் டாய் வன்னியின் அனுமிதியுண்டாகின்றதோ ஆண்டுப் பாமரிச

யின்றியும் அநுமிதி சித்திக்கின்ற தென்னும் மீமாம்சகர்மதம் 'மற்றையவல்ல' என்று கூறியதனல் மறுக்கப்பட்டது.

பிறர்பொருட்டனுமானத்தின்கண் இலிங்கபராமரிசம் இன்றியமையாது வேண்டப்படுவதா யிருத்தலின் புகையின் ஞானமும், வியாத்தியின் நினைவும் அநுமிதியின் காரணம் என்பதினும் எளிதாக யாண்டும் இலிங்கபராமரிசமே அனுமிதியின் காரணமென்றல் பொருத்த முடையதா மென்க.

அவ்வநுமாநமும் சுவார்த்தமும் பரார்த்தமுமென இருவகைப்படும்.

சுவார்த்தாநுமாநம்.

39. சுவார்த்தந் தன்னுணர்வினேது (தனது ஞானத்திற்குக் காரணம்). அங்ஙனமன்றே, (ஒருவன்) தானே அட்டில் முதலியவற்றின் விசிட்டமாகிய (கூடிய) காட்சியாற் புகை தீக்களது வியாத்தியைக் கிரகித்து, மலையருகடைந்து அதன்கண் தீயின் ஐயமுடையனாய், மலையினிகழ்வ (இருப்ப) தாய் இடை விடாத மூலத்ததாய் விண்ணுரிஞ்சும் (வானளாவும்) புகையொழுங்கைக்கண்டு, புகைகாண்டலா லெழுந்த வாசனையுடையனாய், யாண்டுப்புகை ஆண்டுத்தீயென்று வியாத்தியை நினையாநின்றான்; ஈண்டும் புகையுண்டென் றுணராநின்றான்; ஆதலின் இம்மலையிற் றீயுண்டென்று தானே யுணராநின்றான். அதுவே, சுவார்த்தா (தன் பொருட்ட)நுமாநம்.

(கு-ரை.) யாண்டு வாக்கியப் பிரயோகமின்றி இலிங்கபராமரிசத்தால் அனுமிதியுண்டாகின்றதோ அவ்வனுமிதி சுவார்த்தாநுமிதி யெனப்படும். அதன் காரணமான இலிங்கபராமரிசம் சுவார்த்தாநுமானமெனப்படும். மூலத்ததாய்-அடியினையுடையதாய்.

பரார்த்தாநுமாநம்.

40. (ஒருவன்) தான் புகையாற் றீயை யநுமித்துப் பர (பிற) னைக் குறித்துப் போதிக்கும் பொருட்டுப் பஞ்சாவயவ (ஐந்துறுப்புகளையுடைய) அநுமாந வாக்கியம் யாது கூறுகின்றான், அது பரார்த்தாநுமாநம். அஃதெங்ஙனம்? மலை தியுடைத்து; புகையுண்மையான்; யாது யாது புகையுடைத்து அது வது தியுடைத்து; எங்ஙனம்? அட்டில்; இதுவுமங்ஙனம்; ஆதலி னிங்ஙனம் என்பதே. இவ்வாக்கியத்தானே பிரதிபாதிக்க (சொல்ல)ப்பட்ட பஞ்சரூப (ஐந்து வடிவ) த்தோடு கூடிய அவ்விலிங்கத்தா (குறியா)ற் பரனுந் தியை யுணராநின்றான். ஆதலின் இது பரார்த்தா (பிறர்பொருட்ட)நுமாநம்.

(கு-ரை.) ஒருவன் மலையிற்றீ அநுமானப் பிரமாணத்தால் நிச்சயிக்கப்பட்டதென மற்றொருவன் இல்லை யென்று கூறுமிடத்து இருவருக்கும் விவாதமுண்டாகின்றது; உண்டாகின்ற விடத்துத் தீ நிச்சயமுடைய புருஷன் தனது பிரதிவாதியை நிவிர்த்தித்தற் பொருட்டுப் பஞ்சாவயவமுடைய வாக்கியத்தைக் கூறுகின்றான். அங்ஙனம் கூறுவது பரார்த்தாநுமான மெனப்படும்.

பஞ்சாவயவமாவன:—பிரதிஞ்ஞை (மேற்கோள்), (2) ஏது (3) உதாரணம், (4) உபநயம், (5) நிகமன மெனவிவை.

(1.) மலைதீயுடைத்து என்பது பிரதிஞ்ஞை;

(2.) புகையுண்மையான் என்பது ஏது;

(3.) யாதுயாது புகையுடைத்து அதுவது தீயு
டைத்து. எங்ஙனம்? அட்டில் என்பது உதாரணம்;

(4.) இதுவும் (இம்மலையும்) அங்ஙனம் (அது
போல் புகையுடையது) என்பது உபநயம்;

(5.) ஆதலின் இங்ஙனம் (இம்மலையும் நெருப்
புடையது) என்பது நிகமனம்.

இங்ஙனம் பஞ்சரூபத்தோடுங் கூடிய அவ்விலிங்கத்தாலே (புகையாலே) மற்றொருவனும் இம்மலை தீயுடைத்தென் றறிகின்றானென்பதாம்.

ஈண்டுக்கூறிய பஞ்சாவயவ முடைய வாக்கியம் மகாவாக்கியமெனப்படும். இம்மகா வாக்கியத்திலுள்ள ஐந்துவாக்கியங்களும் அவாந்தர (இடை) வாக்கியமெனப்படும்.

சிலர் உபநயஅவயவத்தையும், நிகமனஅவயவத்தையும்உதாரணஅவயவத்துள் அடக்கி அனுமானத்தின் அவயவம் மூன்றென்று கூறுவர். வேறு சிலர் அவயவங்களோ பிரதிஞ்ஞை, ஏது, உதாரணமென்பன; இம்மூன்றுமே பிரசித்தமாம். அல்லது உதாரணம், உபநயம், நிகமன மென்னு மூன்றேதவிர ஐந்தென்றல் பொருந்தாது. மூன்றவயவங்களாலேயே வியாப்தி ஞானம் பட்சதருமத்தன்மை ஞானம் சம்பவிப்பதால் அதிகமாக இரண்டவயவங்களையொப்புக்கொள்ளுதல் வியர்த்தமாம் என்று கூறுவர்.

ஐந்தவயவத்தின் சொரூப முரைக்கப்படுகின்றது:—

(1.) மலை தீயுடைத்தெனச் சாத்தியவிசிட்ட (தீயுடன்கூடிய) பக்கத்தை (மலையை) யறிவிக்கும் வாக்கியம் பிரதிஞ்ஞா வாக்கிய மெனப்படும்.

(2.) புகை யுடைமையின், அல்லது புகை யுடைமையால் என இன்னுருபீறாகவேனும் ஆலுருபீறாகவேனும் இலிங்கத்தையறிவிக்கும் வாக்கியம் ஏதுவாக்கிய மெனப்படும்.

(3.) யாதுயாது புகையுடையது அதுவது தீயுடையது, அடுக்களைபோல என ஏது சாத்தியங்களின் உடனிகழ்ச்சியை யறிவிக்கும் வாக்கியம் உதாரணவாக்கிய மெனப்படும்.

(4.) வன்னியின் வியாப்பியமான புகையுடையது இம்மலை யென வியாத்தி விசிட்டமாகிய ஏதுவின் பட்சதருமத்தன்மையை யறிவிக்கும் வாக்கியம் உபநயவாக்கிய மெனப்படும்.

பக்கதருமத் தன்மையாவது - வியாப்பியமானபுகை மலைமுதலிய பட்சத்திலிருத்தல்.

(5) ஆகவின் இம்மலை தீயுடைத்தெனச் சாதன (புகை) சாத்திய (தீ) முடையதாகப் பக்கத்தை (மலையை) யறிவிக்கும் வாக்கியம் நிகமனவாக்கிய மெனப்படும்.

முடிந்தது முடித்தலென்னும் நிகமனத்திற்குப்பயன் பாதிதத்துவமு (மறுப்புடைமையு)ம் சற்பிரதிபட்சமு (மறுதலையுடைமையு) மின்மையா மென்க.

வாக்கியமெனினும் தொடர்மொழி யெனினு மொக்கும்.

அந்நுவயவியதிரேகி.

41. இதில் (இப்பரார்த்தாநுமானத்தில்) மலைக்குத் தீயுண்மை சாத்தியம் (துணிபொருள்); புகை யுண்மை

யேது. அதுவும், அந்நுவயவியதிரேகி; அந்நுவயத்தானும் வியதிரேகத்தானும் வியாத்தி யுடைமையின். அங்ஙனமன்றே, "யாண்டுப்புகை, ஆண்டுத்தீ; எங்ஙனம், அட்டிலில்" என்பது அந்நுவய வியாத்தி; அட்டிலிற் புகைதீக்களது அந்நுவய உண்மையது காட்சியின்.

இங்ஙனம், "யாண்டுத் தீயில்லை ஆண்டுப் புகையுமில்லை; எங்ஙனம், மடுவில்" என்பது வியதிரேக வியாத்தி; மடுவிற் புகைதீக்களது வியதிரேக உண்மையது காட்சியின்.

(கு-ரை.) அன்வயம் - உடம்பாடு. வியதிரேகம்-எதிர்மறை. மலைதீயுடையது என்னுமிடத்து மலைபக்கமும் தீயுடைமை சாத்தியமுமாம். ஈண்டு ஏது விருந்தால் சாத்திய மிருக்குமென்பது அங்வயமாயும், சாத்தியமின்றாயின் ஏது விராதென்பது வியதிரேகமாயுமிருத்தலின் அங்வயவியதிரேகங்கள் புகைதீக்களின் அவிநாபாவரூபசம்பந்தத்தின் நிச்சயத்தை யுண்டுபண்ணுவனவா மென்க.

எவ்வதிகரணத்தி (மலையி)ல் சாத்தியத்தை (தீயை) யறியும் விருப்ப முண்டாய்ச் சாத்தியத்தின் அநுமிதிவடிவ நிச்சய முண்டாகின்றதோ அவ்வதிகரணம் பட்சமாம். சாதன (புகை) ஞானத்தால் யாது அறியப்படுகின்றதோ அது (தீ) சாத்தியமெனப்படும். எவ்வனுமானத்தில் அன்னுவய வியாத்திக்கும் வியதிரேக வியாத்திக்கும் உதாரணங் கிடைக்கின்றதோ அவ்வநுமானம் அன்னுவய வியதிரேகியநுமானமாம்.

(1.) (யாண்டுப்புகை ஆண்டுத்தீ அட்டில் போல என) ஏதுவிற் (புகைக்)கும் சாத்தியத்திற் (தீக்)கு முளதாய வியாத்தி அன்னுவய வியாத்தியாம்.

(2.) (யாண்டுத் தீயில்லை ஆண்டுப்புகையில்லை, மடுப்போல என) சாத்தியத்தி (தீயி)ன் அபாவத்திற்கும் ஏதுவின் (புகையின்) அபாவத்திற்கு முளதாய வியாத்தி வியதிரேக வியாப்தியாம்.

வியதிரேக வியாப்திக்குக் கிரமமிது:—

அந்நுவயத்தில் சாதனம் (புகை) வியாப்பியம், சாத்தியம்(தி) வியாபகம்; வியதிரேகத்தில் சாத்தியாபாவம் (தியின்மை) வியாப்பியம்,சாதனுபாவம்(புகையின்மை) வியாபகம்.

வியாப்பிய வியாபகபாவமானது பாவ பதார்த்தங்களுக்கெங்ஙனம் கூறப்பட்டதோ அபாவபதார்த்தங்களுக்கு அதற்கு விரோதமாகத் தோன்றும்.

வியாப்பியத்தின் (யாண்டுத்தீ யில்லையென்னும்) வசனம் முன்னும் வியாபகத்தின் (ஆண்டுப் புகையில்லையென்னும்) வசனம் அதன்பின்னுமாகக் கூறப்படும். இங்ஙனமாகப் பரீட்சை செய்த வியாத்தி உண்மையாய் வெளிப்படுகின்றது. ஆதலின், இங்ஙனம் புகையுண்மை ஏதுவில் அந்நுவயத்தானும் வியதிரேகத்தானும் வியாத்தியுண்டு.

(கு-ரை.) பாவபதார்த்த (அன்வயி)அநுமானத்தில் சாதனம் வியாப்பியமாகவும் சாத்தியம் வியாபகமாகவும், அபாவபதார்த்த

(வியதிரேகி) அநுமானத்தில் அதற்கு மாருகச் சாத்தியாபாவம் வியாப்பியமாகவும் சாதனபாவம் வியாபகமாகவும் கூறப்படுகின் றனவென் றறிதல் வேண்டும்.

சாதனம் (ஏது) - முடிப்பது; சாத்தியம் - முடிக்கப்படுவது. வியாப்பியம் - வியாபிக்கப்பட்டி (குறைந்தி) ருப்பது; வியாபகம்- வியாபித் (மிகுந்) திருப்பது. பாவம்-உண்மை; அபாவம்-இன்மை.

(மேற்காட்டிய பரார்த்தானுமான) வாக்கியத்தில் அந்நுவய வியாத்தி யொன்றே பிரதரிசிக்க (காட்ட)ப் பட்டது; அஃதொன்ருனும் பயனுதலின். அவற் றுள்ளும் (அன்வயம் வியதிரேகம் என்னு மிரண்ட னுள்ளும்),அந்நுவயஞ் செவ்விதா (ஆவசியகமா)தலின் பிரதரிசநஞ் செந்நெறியா (நேர்வழியா)ற் சித்திக் கும் பொருட்குக் கொடுநெறியாற் சாதித்தல் யோக (பொருத்த) மாகாமையின்; வியதிரேகவியாத்தி யின் மையினன்று. ஆதலின் இங்ஙனம் புகையுண்மை யேது அந்நுவய வியதிரேகியே. இங்ஙனமேனையவும்.

அநித்தியத்துவ முதலிய சாதிக்கையிற் கிருதகத் துவ (செய்யப்பட்டது) முதலிய ஏதுக்கள் அந்நுவய வியதிரேகிகளாக அறியத்தக்கன.

(கு-ரை.) அந்நுவய வியாத்தியொன்றே-யாதுயாது புகை யுடைத்து, அதுவது தீயுடைத்து, எங்ஙனம்? அட்டில்என அந்வய வியாத்தியொன்றே.

கொடுநெறியால்-யாண்டுத் தீயில்லை ஆண்டுப் புகையில்லை, எங் ஙனம்? மடு என விரோதவழியால்.

வியதிரேக வியாத்தியின்மை யினன்று - வியதிரேக வியாத்தி யில்லாமையினலல்ல. மேற்காட்டிய பாரார்த்தானுமான வாக்கியத்தில் வியதிரேக வியாத்தியு முண்டென்றவாறும்,

சுவர்க்கம் அநித்தியம்; செய்யப்பட்டதாகலின் என்னுமநுமானத்தில்,செய்யப்பட்டதாகலினென்பதுஅந்வயவியதிரேகியேது; யாது செய்யப்பட்டது அஃதனித்தியம், கடம்போல என அன்னுவயவியாத்தியும், யாது அநித்திய மன்று அது செய்யப்பட்டதன்று பரமாணுப்போல எனவியதிரேக வியாப்தியு முடைமையினென்க.

பிராகபாவம் செய்யப்படாததன்று யிருந்தும் காரியோற்பத்தியால் நாசமடைவதா யிருத்தலின் இவ்வநுமானம் பாவபதார்த்தத்திற்கேயாம்.

அங்குர (முளை) முதலியன கர்த்தாவை யுடையன; காரியமாகலின் என்னு மநுமானத்தில், காரியமாகலின் என்னும் ஏது அன்னுவய வியதிரேகியேது; யாது காரியம் அதுகர்த்தாவையுடையது கடம்போல என அன்னுவய வியாத்தியும், யாது கர்த்தாவை யுடையதன்று அது காரியமன்று, பரமாணுப்போல எனவியதிரேக வியாப்தியுமுடைமையி னென்க.

முதலிய என்றமையின் இதுவுங் கூறவேண்டியதாயிற்று.

கேவலவியதிரேகி.

42. ஒரோவோரேது கேவல வியதிரேகி. அஃதெங்ஙனம்? சான்மகத்துவம் (ஆன்மாவோடுகூடியதன்மை) சாதிக்கையில் பிராணாதியுடைமை ஏது; எங்ஙனம்? சிவச்சரீரம் சான்மகம் (ஆன்மாவோடு கூடியது); பிரா

ணுதியுடைமையின்; யாது சான்மகமன்று அது பிரா ணுதி யுடைமையதன்று; எங்ஙனம்? குடம்; இச்சீவச் சரீரம் அங்ஙனம (பிராணுதி யுடைமையதன்ற) ன்று; ஆதலின் இங்ஙனம (சான்மகமன்ற)ன்று என்கை.

இதில் சீவச்சரீரம் பட்சம்; சீவச்சரீரத்தினது சான் மகத்துவம் சாத்தியம்; பிராணுதியுடைமை ஏது. இது கேவலவியதிரேகி; அந்நுவய வியாத்தி யின்மையின். அங்ஙனமன்ருே, யாது பிராணுதியுடையது அது சான்மகம்; எங்ஙனம்? இது வென்று திட்டாந்தமில்லை; சர்வசீவச்சரீரமும் பக்கமே.

(கு-ரை.) யாது சான்மகமன்று அது பிராணுதியுடைமைய தன்றுஎன்னும் வியாத்திவாசகத்தில் சாத்தியாபாவம் (சான்மகமன் றென்பது) வியாப்பியமும்; ஏதுவ பாவம் (பிராணுதி யுடைமைய தன்றென்பது) வியாபகமுமாம். இவ்வியாத்திவாசகத்தில் சாத்தியத் தின் அபாவவசன முன்னும் ஏதுவினபாவவசனம் பின்னும் கூறப் பட்டிருத்தலறிக.

வியதிரேகத்தில் மாத்திரம் வியாத்தியுடைய ஏது கேவல வியதிரேகி யேதுவாம். அஃதாவது எவ்வேதுவில் அந்நு வய வியாத்திக்கு உதாரணங்கிடைக்காது சாத்தியாபாவத்தில் ஏது வபாவத்தினது வியாத்தியின் உதாரணங் கிடைக்கின்றதோ அவ் வேதுவாம். 'சீவச்சரீரம் சான்மகம்; பிராணுதியுடைமையின்' என் புழி,'யாண்டுப்பிராணுதியுடைமை ஆண்டுச் சான்மகம்' இதுபோல என அன்னுவயவியாத்திக்கு உதாரணமின்று; உதாரணம் பட்சத் திற்கு வேருயிருத்தல் வேண்டும். ஈண்டுச் சீவச்சரீர முற்றும் பட்சமாம். சீவச்சரீரத்திற்கு வேறுபட்ட கடமுதலியவற்றில் சான்

மகத்துவமும் பிராணுதியுடைமையு மில்லை. ஆதலால் பிராணுதி யுடைமையி னென்னுமிவ்வேது கேவலவியதிரேகி யேதுவாம்.

வாண்டுச் சான்மகத்தினபாவம் ஆண்டுப் பிராணுதியுடைமையி னபாவம், கடாதிபோல என்றிங்ஙனம்சாத்தியாபாவத்(சான்மகத்தி னபாவத்)தில் ஏது (பிராணுதியுடைமையின்) அபாவத்தின் வியாத்தி ஞானத்திற் கேதுவாகிய உடனிகழ்ச்சி யுணர்வு கடமுத லியவற்றி லிருக்கின்றமையின் கடமுதலியன வுதாரணமாம். எதில் வியாத்தி ஞானத்திற்கேதுவாகிய வுடனிகழ்ச்சியின் ஞானமிருக் கின்றதோ அந்த உதாரணமாம்.

43. இலக்கணமும் கேவல வியதிரேகி ஏது. எங்ஙனம்? பிருதிவி இலக்கணம் கந்தமுடைமை. இவ்விவாதபதமும் (சந்தேகஸ்தானம்) பிருதிவி; கந்தமுடைமையின்; யாதுபிருதிவியன்று அது கந்தமுடைய தன்று; எங் ஙனம்? புனல். இதில் யாது கந்தமுடையது அது பிரு திவி; எங்ஙனம்? இதுவென்று திட்டாந்த மில்லை.

(கு-ரை.) பிருதிவியிற் கந்த (நாற்ற) முடைமை பிருதிவி யின் அற்பதேச (இட)த் திருப்பது மதிகதேசத்தி (சலமுதலிய வற்றி)ருப்பது மாகாது பிருதிவியில் மாத்திர மிருக்கின்றமையின் அது பிருதிவிக்கிலக்கணமாம். முதற்கணத்திற்றோன்றுந் திரவியத் தித் குணமின்றென்னும் நியமப்படி முதற்கணத்திற்றோன்றிய கடத் தின்கண் கந்தமின்மையின் பிருதிவி இலக்கணம் கந்தமுடைமை என்றது அவ்வியாத்தியா மெனின், முதற்கணத்திற் றோன்றுங் கடத்தின்கண் கந்தமின்றாயினும் அதன் அதிகரண (இட)த் தன்மையிருத்தலின் அவ்வியாத்தி யாகாதென்க.

(பிரதிஞ்ஞை) இவ்விவாதபதம் பிருதிவி; (ஏது) கந்தமுடை மையின்; (உதாரணம்) யாது பிருதிவியன்று அது கந்தமுடைமைய தன்று, ஜலம்போல; (உபநயம்) இதுவும் (விவாதபதமும்) அங்ஙன மன்று (கந்தமுடையதன்றன்று-கந்தமுடையதே); (நிகமனம்) ஆத லின் இங்ஙனமன்று (பிருதிவியன்றன்று-பிருதிவியே) என்பதில் கந்தமுடைமையின் என்னும் கேவலவியதிரேகியேதுவே பிருதி விக் கிலக்கணமாயிற்று. இஃதிதனினும் வேறெனவொன்றை மற்ற வற்றினின்றும் வேறுபடுப்பதே இலக்கணமாயிருத்தலின் கந்த முடைமை யென்னு மிலக்கணம் பிருதிவியை மற்றவற்றினின்றும் வேறுபடுத்துவதறிக.

44. பிரமாண இலக்கணமாகிய பிரமாகரணத்துவமும் அவ்வாறே (கேவலவியதிரேகியேதுவே). அங்ஙன மன்றே, (பிரதிஞ்ஞை) காட்சி முதலியன பிரமாண மென்று வியவகரிக்கத் தக்கன; (ஏது) பிரமாகரணத் துவ மாதலின்; (உதாரணம்) யாது பிரமாண மென்று வியவகரிக்கப்படாது அது பிரமாகரணமன்று; எங் ஙனம்? காட்சிப்போலி முதலியன.

இதில் யாது பிரமாகரணம் அது பிரமாண மென்று வியவகரிக்கத்தக்கது; எங்ஙனம்? இது வென்று அந்ுவய திட்டாந்தமில்லை; பிரமாண மாத் திரம் பக்கஞ் செய்தலின். இதில் வியவகாரம் சாத் தியம், பிரமாணத்துவமன்று; அதற்குப் பிரமா கரணத்துவமாகிய ஏதுவினின்றும் வேறின்மையின்

சாத்திய அபேததோஷம் வருதலின். ஆதலின், இங்ஙனம் கேவலவியதிரேகிகள் காட்டப்பட்டன.

(கு-ரை.) எங்ஙனம் பிருதிவிக்கிலக்கணம் கந்தமுடைமையோஅங்ஙனமே பிரமையின்காரணமான பிரமாணத்திற்கும் பிரமாகாணத்தன்மை யிலக்கணமாம்.

பொன்னிறத்தது சங்கு, செந்நிறத்தது படிகமென்றற்றொடக்கத்துப் பிராந்திஞானமுண்டாதற்குக் காரணமாகிய பித்தம், படலம், தூரம், இருள் முதலிய குற்றங்களோடுகூடிய இந்திரியம் பிரத்தியக்ஷப்பிரமாண (காட்சி)ப் போலியாம். முதலியன என்றதனல் அநுமானப்போலி முதலியனவுங்கொள்க.

இம்மலை நெருப்புடைத்து; நெருப்புடைமையால் என்புழி ஏதுவும் சாத்தியமும் அபேதமா யிருத்தலின் அவ்வநுமான மெங்ஙனந் தோஷத்தோடுகூடிய தாகுமோ அங்ஙனமே 'காட்சிமுதலியன பிரமாணமென்று வியவகரிக்கத்தக்கன என்னும் பிரதிஞ்ஞா வாக்கியத்தில் பிரமாணத்தைச் சாத்தியமாகக் கொள்ளின் பிரமாணமும் பிரமாகரணமும் ஏகவடிவமாதலின் தோஷமாம். அதுபற்றி 'வியவகாரம் சாத்தியம்' என்று கூறப்பட்டது.

பிரதிஞ்ஞை. காட்சி முதலியன பிரமாணமென்று வியவகரிக்கத்தக்கன;

ஏது. பிரமாகரணத்துவ மாதலின்;

உதாரணம். யாது யாது பிரமாணமென்று வியவகரிக்கப்படாது அதுவது பிரமாகரணத்துவ மன்று; காட்சிப்போலி முதலியனபோலே;

உபநயம். இதுவும் (காட்சிமுதலியனவும்) அங்ஙன மன்று (பிரமாகாணத்துவமன்றன்று-பிரமாகரணத்துவ முடையதே);

நிகமனம். ஆதலின் இங்ஙனமன்று (வியவகரிக்கத்தக்கதன்றன்று-வியவகரிக்கத்தக்கதே);

என்பதனுல் பிரமாகாணத்துவமென்னும் கேவல வியதிரேகி ஏதுவே பிரமாணத்திற் கிலக்கணமாயிற் றென்க.

வியதிரேகி யநுமானத்தில் பிரதிஞ்ஞையும் ஏதுவும் சமமாயிருக்கும்; உதாகாண, உபநய, நிகமனங்கள் வேறுபடும்.

ஜீவச்சரீரம் சான்மகம் பிராணுதியுடைமையின் என்புழிப் பிரதிஞ்ஞையும் ஏதுவும் சமமாயும், யாது சான்மகமன்று அது பிராணுதியுடைமைய தன்று குடம்போலே எனவுதாரணமும், இஜ்ஜீவச்சரீரம் அங்ஙனமன்று (பிராணுதிகளையுடைய தன்றன்று) என உபநயமும், ஆதலின் இங்ஙனமன்று (சான்மகமன்றன்று) என நிகமனமும் வேறுபடுதலுங்காண்க.

கேவலாந்துவயி.

45. வேறோரேது கேவலாந்துவயி. எங்ஙனம்? விசேடம் அபிதேயம்; பிரமேயமாதலின்; யாது பிரமேயம் (அளவையாலளக்கற்பாலது) அஃது அபிதேயம் (பெயரிட்டு வழங்கற்பாலது); எங்ஙனம்? குடம்; இதுவும் அங்ஙனம்; ஆதலின் இங்ஙனம் என்கை. இதில் விசேடத்திற்கு அபிதேயத்துவம் சாத்தியம்; பிரமேயத்துவம் ஏது. அதுவும் கேவலாந்துவயியே. யாது அபிதேயமாகாது அது பிரமேயமுமாகாது; எங்ங

ஸம்? இது வென்று வியதிரேக திட்டாந்தமில்லை. எவ்விடத்தும் பிராமாணிகப்பொருளே (பிரமாணத் தாற் பெறப்பட்ட பதார்த்தமே) திட்டாந்தம். அதுவு (திட்டாந்தமு)ம் பிரமேயமும் அபிதேயமும்.

(கு-ரை.) எவ்வநுமானத்திற் சாத்தியாபாவ ஏதுவபாவங் களின் உடனிகழ்ச்சிக்கு உதாரணங் கிடைக்கவில்லையோ அது கேவலாந்நுவயி அநுமானமாம். அஃதாவது அந்வயத்தின் மாத் திரம் வியாப்தியுடைய ஏதுவாம்.

இவ்வநுமானத்தில் யாது பிரமேயம் அஃது அபிதேயம் என் னும் வியாப்தி வாசகத்தில் ஏதுவசனம் முன்னும், சாத்திய வச னம் பின்னும் வருதல்காண்க.

இதுவும்-விசேடமும், அங்ஙனம்-பிரமேயமாம்; ஆதலின் இங் ஙனம்-விசேடம் அபிதேயம்.

எதன் அபாவம் ஒர்திகரணத்து (ஒரிடத்து) மிருப்பதின்றோ அது கேவலாந்நுவயியாம். அஃதாவது முழுதுமபாவத்திற்கு எதிர் மறையாகாமையாம்.

(1) யுக்தயோகி (2) யுஞ்ஞானயோகி யென்னு மிருவருள் யுக்தயோகியாகிய ஈசுவரனு லியாவுமறியப்பட்டிருத்தலின் அவ னுக்கு அபிதேயமாகாததும் பிரமேயமாகாததும் யாண்டுமில்லை யென்க.

(1) எவனுக்கு எப்போதும் ஏகாசமாய்ச் சர்வபதார்த்தங் களும் பிரத்தியக்ஷமாய் விளங்குகின்றனவோ அவனுக்கு யுக்த யோகி யென்று பெயர்.

(2) சிந்தனை செய்வதால் பதார்த்தஞான முண்டாகின்றவனுக்கு யுஞ்ஞானயோகி யென்று பெயர்.

பஞ்சரூபங்கள்.

46: இவ்வந்நுவயவியதிரேகி: கேவலாந்நுவயி, கேவலவியதிரேகி யென்னு மேதுக்களது மத்தியில் எவ்வேது அந்நுவயவியதிரேகி அது பஞ்சரூபத்தோடு கூடியே தனது சாத்தியத்தைச் சாதிக்கவல்லது; ஒருரூபத்தாலுங் குறைந்ததாகாது.

(கு-ரை.) அந்நுவய வியதிரேகியேது கீழ்க்கூறப்படும் பஞ்சரூபங்களுள் ஒரு ரூபங்குறைந்தாலும் தனது சத்தியத்தைச் சாதிக்குந் தன்மையுடைய தாகாதென்றவாறு.

அப்பஞ்சரூபங்கள்: பக்கதருமத்துவம், சபக்கத்திற் சத்துவம் (இருத்தல்), விபக்கத்தில் வியாவிருத்தி (இன்மை), அவாதித விடயத்துவம், அசற்பிரதிபக்கமென்பனவாம். இப்பஞ்சரூபங்கள் புகையுடைமை முதலிய அந்நுவய வியதிரேகி யேதுக்களினிருக்கும்.

அங்ஙனமன்றோ, i. புகையுடைமை பக்கமான மலைக்குத்தருமம்; மலையினகத்திருத்தலின்.

ii. இங்ஙனஞ் சபக்கத்திலுண்மை - சபக்க (திட்டாந்த) மாகிய அட்டிலிலிருக்குமென்பது பொருள்.

iii. இங்ஙனம் விபக்கமாகிய மடுவினிக்கம்-ஆண்டில்லையென்பது பொருள்.

iv. இங்ஙனம் புகையுடைமை அவாதிதவிடயம். அங்ஙனமன்றே, புகையுடைமையாகிய ஏதுவிற்கு விடயம் சாத்தியதருமம். அது தீயுடைமை, யாது பிரமாணத்தானும் அவாதிதம் - கண்டிக்கப்படாத தென்பது பொருள்.

v. இங்ஙனம் புகையுடைமை பிரதிபக்கமில்லது. அங்ஙனமன்றே, சாத்தியத்தின் விபரீத (மறுதலையாகிய துணிந்தபொருளை) சாதக (சாதிக்கும்) ஏத்வந்தரம் (வேறேது) பிரதிபக்கமென்று கூறப்படும். அதுவும் புகையுடைமை யேதுவினின்றே; தோன்றாமையின். ஆதலின் இங்ஙனம் பஞ்சரூபங்கள் புகையுடைமை யேதுவிலிருக்கும். ஆதலின் இப்புகையுடைமை தீயுடைமையது கம (ஞாப)கம். அது (புகையுடைமை) தீயுடைமையது சாதகம் (ஏது) என்பது பொருள்.

(கு-ரை.) (1) பக்கதருமத்துவம்-துணிபொருளுக்கிடமான பக்கமாகிய வாசிரயத்தில் ஏதுவிருத்தல். மலைதீயுடைத்து; புகையுடைமையால் என்புழிப் புகையுடைமையாகிய ஏது தீயென்னுந் துணிபொருளுக் கிடமான மலையென்னும் பக்கமாகிய வாசிரயத்திருத்தலின், இவ்வேது பக்கதருமத்துடன் கூடியதாயிற்று. வன்னியின் வியாப்பியமான புகை மலை முதலிய பக்கத்திருத்தல் பக்கதருமத்துவ மென்பதாயிற்று.

(2) சபக்கத்திற் சத்துவம்—திருஷ்டாந்த ஸ்தலத்திலேதுவிருத்தல். சபக்கமெனினும் திருஷ்டாந்த ஸ்தலமெனினும்

ஒக்கும். புகையுடைமையாகிய வேது துணியப்பட்ட சாத்திய (தீ) முள்ள சபக்கமாகிய அடுக்களையினிருத்தலின், இது சபக்கத்தோடு கூடியதாயிற்று.

(3) விபக்கத்தில் வியாவிருத்தி—நிச்சயிக்கப்பட்ட சாத்தியத்தினபாவமுள்ள விடத்து ஏதுவில்லாதிருத்தல். புகையுடைமையாகிய ஏது தீயாகிய சாத்தியத்தின் அபாவமுள்ள மடுமுதலிய விடத் தில்லாதிருத்தலின் இது விபக்கத்தோடு கூடியதாயிற்று.

(4) அவாதித விடயத்துவம்—ஏதுவிற்கு விடயமான சாத்தியதருமம் வேறெப்பிரமாணத்தாலுங் கண்டிக்கப்படா திருத்தல். புகையுடைமையாகிய ஏதுவிற்கு விடயமான தீயுடைமையாகிய சாத்தியதருமம் வேறெப் பிரமாணத்தாலுங் கண்டிக்கப்படாத (மறுப்புடையதாகாத) தாயிருத்தலின்,இது அவாதிதவிடயத்துவத்தோடுகூடியதாயிற்று.

நெருப்புச்சூடில்லது;திரவியமாதலின் என்புழித் திரவியமாதலின் என்னுமேதுவிற்கு விடயமான சூடில்லது என்னும் சாத்தியதருமம் துவக்கிந்திரியப் பிரமாணத்தால் கண்டிக்கப்படுதலின் இவ்வேது வாதிதவிடயத்துவத்தோடு கூடியதாயிற்று. ஆகவே ஏது இத்தன்மையதா யிருக்கலாகா தென்பதாம்.

(5) அசற்பிரதிபக்கம்—சாத்தியாபாவத்தைச் சாதிக்கும் பிறிதோரேதுவின்மை. புகையுடைமையாகிய வேதுவிற்கு விடயமான தீயுடைமையாகிய சாத்தியத்தின் அபாவத்தைச்சாதிக்கும்பிறிதோரேதுவின்மையின் இது அசற்பிரதிபக்கத்தோடு கூடியதாயிற்று.

சாத்தியா பாவத்தைச் சாதிக்கும் பிறிதோரேது பிரதிபக்கமெனப்படும். அதனையுடையது சற்பிரதிபக்கமாம். அஃதில்லாதது அசற்பிரதிபக்கமாம்.

'கடம் நித்தியம் அஜன்னிய மாதலின்' என்புழி அஜன்னிய மாதலின் என்னும் ஏதுவிற்கு விடயமாகிய நித்தியமென்னும் சாத்தியத்தின் அபாவம் 'கடம் அநித்தியம் காரியப்பாட்டால்' என்னுமனுமானத்தின் காரியப்பாட்டால் என்னும் ஏதுவினுல் சாதிக்கப்படுவதாயிருத்தலின் அஜன்னியமாதலினென்னும் ஏதுபிரதிபக்கமுடையதாமென்க. இவ்வாறிருக்குமேதுவுங் குற்றமுடையதாம்.

பக்கதருமமாகிய புகையுடைமை சாத்திய தருமமாகிய தீயுடைமையை ஞாபகப்படுத்துவதா யிருத்தலின் 'இப்புகையுடைமை தீயுடைமையது கமகம்' என்று கூறப்பட்டது.

தீயினது பக்கதருமத்துவம் ஏதுவினது பக்கதருமத்துவ வலியா (பலத்தா)ற் சித்திக்கும். அங்ஙனமன்றே, அநுமானத்தின் அங்கம்: வியாத்தியும் பக்கதருமத்துவமுமென இரண்டு. அவற்றுள், வியாத்தியாற் சாத்திய சாமாநியசித்தி; ஏதுவினது பக்கதருமத்துவ வலியாற் சாத்தியத்திற்குப் பக்கசம்பந்தத்துவ(பட்சத்திருக்கும்)விசேடஞ்சித்திக்கும். மலைத்தருமமாகிய புகையுடைமையால் தீயும் மலைச்சம்பந்தமாயே அநுமிக்கப்படும். வேருயின் (இங்ஙனங் கூறுதலையொப்பாவிடத்து),(சாத்திய)சாமாநியம் வியாத்திகிரகிப்பதானே சித்தித்தலின், அநுமாநத்தாற் பயனென்னை?

(உரை.) தீயினது பக்கதருமத்துவம்-தீயானது மலைமுதலிய பக்கத்திருத்தல்; ஏதுவினது பக்கதருமத்துவம் - புகையுடைமை

யாகிய எது மலைமுதலிய பக்கத்திருத்தல். "அனுமானத்தின் சாத்தியம்: சாமானியமு (பொதுவும்)ம், விசேடமு (சிறப்பு)மென விரண்டு" என்றதிக பாடமுமுண்டு.

அநுமானத்தினங்கமான வியாத்தி பக்கதருமத்துவமென்னு மிரண்டனுள் எதுவின் பக்கதருமத்துவத்துவ வலியாலே சாத்தியத்தின் பக்கதருமத்துவஞ் சித்திக்குமன்றி வியாத்தியினாலேயே அது சித்திக்கமாட்டாதென்பது கருத்து.

வேறும் (மற்றதும்) அந்நுவய வியதிரேகி யேது யாது அது பஞ்சரூபத்தோடு கூடியே நல்ல எது வாம். வேறாயின், எதுப்போலி - எதுவல்லதென்னு மளவு.

(கு-ரை.) பஞ்சரூபத்தோடு - பக்கதருமத்துவமுதலிய ஐந் துருவத்துடன்; வேறாயின் - இவ்வைந்துருவங்களுள் யாதாயினு மொன்று குறையுமாயின்.

கேவலாந்நுவயி நான்குரூபத்தோடு கூடியே தனது சாத்தியத்தைச் சாதிக்கும். அதற்கு விபக்கத்தி னீக்கமின்று; விபக்கமின்மையின்.

(கு-ரை.) கேவலாந்நுவயி யனுமானத்தில் சாத்தியாபாவ எதுவபாவங்களினுடனிகழ்ச்சிக் குதாரணம் ஓரிடத்துங் கிடைப்ப தின்றாதலின் அதற்கு விபக்கமின்றாமென்க.

கேவலவியதிரேகிநான்குரூபத்தோடுகூடியே தனது சாத்தியத்தைச் சாதிக்கும். அதற்குச் சபக்கத்தி

னுண்மை (இருத்தல்) இன்று; சபக்க மின்மை யின்.

(கு-ரை.) கேவலவியதிரேகி யனுமானத்தில் எது சாத்தியங்களி' னுடனிகழ்ச்சிக் குதாரணம் ஓரிடத்துங் கிடைப்பதின் ருகலின் அதற்குச் சபக்கமின்ரு மென்க.

பக்கம், சபக்கம், விபக்கம் யாவை? கூறுதும்.

பக்கம்.

ஐயமுடைய *சாத்தியதருமத்தை(தீயுடைமையை) யுடைய தருமி (மலை) பக்கம். எங்ஙனம்? புகை அநுமாநத்தில் மலை.

(கு-ரை.) மலை தீயுடைத்து; புகையுடைமையால் என்புழி மலை தீயுடைமையென்னும் ஐயமுடைய சாத்தியதருமத்தை யுடைய தருமியாயிருத்தலின் அது பக்கமாயிற்று. தருமத்தை யுடையது தருமியெனப்படும். யாண்டும் பக்கம் விசேடியமும் சாத்தியம் விசேடணமுமா மென்றறிக. "ஒரு பெரியமச்சம் (தடாக முதலியவற்றின்) இருகரைக்குள் அங்குமிங்குஞ் சஞ்சரிப்பது போல் இந்தப்புருஷனும் சாக்கிரசொப்பன சுழுப்தியவஸ்தைகளில்

---

* தருமதருமிகளின் சம்பந்தம் சிலவிடத்துச் சையோகமாயும், சிலவிடத்துச் சமவாயமாயு மிருக்கும். (1) மலை தீயுடைத்து என்புழி மலையாகிய தருமிக்கும் தீயாகிய தருமத்திற்குமுள்ள சம்பந்தம் சையோகமாம். (2) வெண்ணிறத்தது சங்கு என்புழிச் சங்காகிய தருமிக்கும் வெண்மையாகிய தருமத்திற்குமுள்ள சம்பந்தம் சமவாயமாம்.

மாறிமாறிச் சஞ்சரிக்கின்றான்" என்றற் றொடக்கத்துச் சுருதிவாக்கியங்களால் ஆன்மாவுண்டென நிச்சயிக்கப்பட்டதாகலின் ஆண்டு ஐயமின்றாம்; இன்றாயினும் சிரவணத்தின் பின்னர்த்தாகிய "ஆத்மா பிறபதார்த்தங்களினும் வேறு; ஆத்மத்தன்மையால்" என்னும் அனுமானத்தால் ஆத்மாவில் பிறபதார்த்தங்களினது பேதத்தின் அனுமிதியுணர்வுண்டாவதாகிய மனனத்திலும், பிரத்தியட்சமாயுள்ள தீயில் துணியும் விருப்பமுண்டாயவிடத்து "இவ்வெளியிடத்திற் றீயுண்டு;புகையுடைமையின்"என்னும் அனுமானத்தால் இவ்வெளியிடத்திற் றீயுண்டென அனுமிதியுணர்வுண்டாவதிலும் இப்பக்கவிலக்கணம் பொருந்தாதாயின், எவ்வதிகரணத்திற் சாத்தியத்தையறியும் விருப்பமுண்டாகிச் சாத்தியத்தின் அநுமிதிவடிவ நிச்சயமுண்டாகின்றதோ அது பக்கமாமெனக் கொள்க.

சபக்கம்.

நிச்சித (நிச்சயிக்கப்பட்ட) சாத்தியதருமத்தையுடைய தருமி சபக்கம். எங்ஙனம்? இப்புகையநுமானத்தின்கண்ணே, அட்டில் (பாகசாலை).

(கு-ரை.) 'மலை தீயுடைத்து' என நிச்சயிக்கின்றவனுக்குத் தீயுடைமையாகிய சாத்தியதருமம் நிச்சயிக்கப்பட்டவிடம் அடுக்களையாதலின் அது சபக்கமாயிற்று. ஆகவே யாண்டுப்புகை ஆண்டுத்தீ அடுக்களைபோல என ஏது சாத்தியங்களி னுடனிகழ்ச்சிக்குதாரணங் கிடைத்துள்ளவிடம் சபக்கமெனச் சித்தித்ததென்க.

விபக்கம்.

விபக்கம் நிச்சித சாத்தியமில்லாத தருமி. எங்ஙனம்? ஆண்டே (அவ்வநுமானத்திலே) மடு.

ஆதலின், இங்ஙனம் அந்நுவயவியதிரேகி, கேவலாந்நுவயி, கேவலவியதிரேகியாகிய மூன்றேதுவுங் காட்டப்பட்டன. அவற்றின் வேறுபட்டன ஏதுப் போலிகள்.

(கு-ரை.) மலைதீயுடைத்து என்புழி நிச்சயிக்கப்பட்ட சாத்தியமாகிய தீயில்லாதவிடம் மடுவாதலால் அது விபக்கமாயிற்று. ஆகவே, யாண்டுத்தீயில்லை ஆண்டுப்புகையில்லை மடுப்போல எனச் சாத்தியாபாவ ஏதுவபாவங்களின் உடனிகழ்ச்சிக் குதாரணந் கிடைத்துள்ளவிடம் விபக்கமென்று சித்தித்ததென்க.

ஈண்டுக்கூறிய பக்க, சபக்க, விபக்கமென்னு மூன்றனுள் முன்னுள்ள விரண்டும் சாத்திய மறிதற்கிடமாமெனவும், பின்னுள்ள ஒன்று அஃதின்றென் றறிதற்கிடமா மெனவுமறிக.

இயல்பேது, காரியவேது, அனுபலத்தியேது, காரணவேது வென ஏது நால்வகைத்தாமென்று பிறர்கூறுவதும் ஈண்டுக்கூறிய மூவகையேதுக்களுன் அந்தர்க்கதமாம்.

இயல்பேது.

(1) கடம்திரவியம்; திரவியத்தன்மையால் என்புழித் திரவியத்தன்மையால் என்னும் ஏது திரவியமென்னும் சாத்தியத்தின் காரணமாகவாவது காரியமாகவாவதின்றி யியல்பாயிருத்தலின் இயல்பேதுவாம். இவ்வனுமானம் சாமானியதோ திருஷ்ட (காரண காரியங்களுக்கு வேறுய இலிங்கத்தையுடைய அனுமான) மெனப்படும்.

காரியவேது.

(2) மலை தீயுடைத்து; புகையுடைமையின் என்புழிப் புகை தீயின் காரியமாயிருத்தலின் புகையுடைமையின் என்னும் ஏது காரியவேதுவாம். மழைபெய்தது; நெல்விளைதலால் என்புழி விளைதலால் என்னும் ஏதுவும் அதுவாம். விளைதல் பெய்தலின்காரியமாயிருத்தலறிக. இவ்வனுமானம் சேஷவத் (காரியத்தை யிலிங்கமாகவுடைய அனுமானம்) எனப்படும்.

அநுபலப்தியேது.

(3.) இவ்வெளியிடத்திற் புகையில்லை; தீத்தோன்றாமையின்; யாண்டுத்தீயின்று ஆண்டுப்புகையின்று மடுப்போல என்னும் அனுமானத்தில் தீத்தோன்றாமையின் என்னும் ஏது அனுபலத்தியேதுவாம். பரமாணு கர்த்தாவுடையதன்று; காரியமாகாமையின் என்புழிக் காரியமாகாமையின் என்னும் ஏதுவும் அதுவாம். உபலத்தி-விளங்குதல்; அனுபலத்தி-விளங்காமை.

காரணவேது.

(4.) காரணமாகிய தீயில்லாவிடத்துக் காரியமாகிய புகையின்றென்பது நியமமாயிருத்தலின், தீத்தோன்றாமையின் என்னும் அனுபலத்தியேது புகையின்மையைச் சாதித்தற்குக்காரணமாயுமிருத்தலின் காரணவேதுவுமாம். நெல்விளைந்தது மழைபெய்தலால் என்புழிப் பெய்தலாலென்னும் ஏதுவும் அதுவாம். பெய்தல் விளைதற்குக் காரணமாயிருத்தலறிக. இடித்து மின்னியிருண்டுமேகமெழுதலால் மழைபெய்யும் என்புழி இடித்துமின்னியிருண்டு மேகமெழுதலால் என்பதும் அதுவாம். இடித்து மின்னியிருண்டுமேகமெழுதல் மழைபெய்தற்குக்காரணமா யிருத்தலறிக.

இவ்வனுமானம் பூர்வவத் (காரணத்தை லிங்கமாகவுடைய அனுமானம்) எனப்படும்;

இன்னும் அனுமானம்: பூர்வக்காட்சியனுமானம், கருதலனுமானம் உரையனுமானமென மூவகைத்தாமெனக்கூறுதலுமுண்டு.

பூர்வக்காட்சியநுமானம்.

i. புகையையும்தீயையும் ஓரிடத்திற்கண்டு அவ்விரண்டற்கும் நியதமான உடனிகழ்ச்சியை யறிந்தவன் பின்னர் மலைமுதலிய விடத்திற் புகையைக்கண்டு ஆண்டுப்புகையால் தீயுண்டெனவறிதல் பூர்வக்காட்சியனுமானமாம்.

கருதலநுமானம்.

ii. ஒருவன் கூறும் வார்த்தையால் அவனது அறிவினளவை யுணர்தல் கருதலனுமானமாம்.

உரையநுமானம்.

iii. ஒருவனுக்குள்ள ஹிதாஹிதங்களைக் கண்டு அவற்றால் அவனது பூர்வவினையினளவைச் சாஸ்திரவாயிலாக வறிதல் உரையனுமானமாம்.

"அக்கேபோ லங்கையொழிய விரலழிகித்,துக்கத் தொழுநோயெழுபவே - யக்கால், அலவனைக் காதலித்துக் கான்முரித்துத் தின்ற, பழவினை வந்தடைந்தக் கால்".

"இரும்பார்க்குங் கால்ராயேதிலார்க் காளாய்க்,கரும்பார் கழனியுட் சேர்வர்-சுரும்பார்க்கும், காட்டுளாய் வாழுஞ் சிவலுங் குறும்பூழும், கூட்டுளாய்க் கொண்டுவைப் பார்" என்று நாலடியார் பழவினையின் பயனைப்பற்றிக் கூறுவதறிக.

இதுபற்றி விரிவாயறிய விரும்புவோர் மனுதருமசாஸ்திரம் பன்னிரண்டாமத்தியாயம் பார்க்கக்கடவர்.

இம்மூவகை யனுமானமும் மேற்காட்டிய அனுமானங்களுள் அடங்குமாறுய்த்துணர்க.

* ஏதுப்போலி.

47. ஏதுவிலக்கண (சாத்தியத்தின் சாதகத்துவ) ரகிதமா (இன்றியதா)ய் ஏதுவைப்போல விளங்குவன ஏதுப்போலிகள்; அவையும் அசித்தம், விருத்தம், அநைகாந்திகம், பிரகரணசமம், காலாத்தியயாபதிட்டம் என்னும் பேதத்தா லைவகையே.

---

* எதனை விஷயமாகவுடைய நிச்சய சாமானியம் (எல்லா நிச்சயமும்) பிரகிருதத்திலுள்ள அநுமிதியைத் தடுக்கின்றதோ அத்தன்மையது ஏதுப்போலியின் சாமானிய விலக்கணமாம். அத்தன்மையோடு கூடிய ஏது ஏதுப்போலி யெனப்படும். (பிரகிருதத்திலுள்ள) அநுமிதியென்னும் பதம் சாத்தியத்தினால் வியாப்பியமான ஏதுவுடன் கூடிய பக்ஷம், சாத்தியமுடைய பக்ஷம் என்னு மித்தகைய அநுமிதியை யறிவிக்கின்றது.

இதனால் வியபிசார முதலிய ஞானம் சாக்ஷாத் அநுமிதியைப் பிரதிபந்திக்காவிடினும் அவ்வியாப்தியின்றெனப் பெறப்படுகின்றது.

அல்லது, எத்தகையபக்ஷத்தையும் சாத்தியத்தையு முடைய ஏதுவில் எவ்வளவுதோஷங்கள் சம்பவிக்கின்றனவோ அவ்வளவு தோஷங்களிலும் அன்னிய (குண)மானவற்றிற்கு அன்னியத்து

(கு-ரை.) அசாதகமாயும் ஏதுவென் றபிமானிக்கப்பட்டிருப்பது ஏதுப்போலியாம். பிறர்கூறும் * பக்கப்போலி, † திருஷ்டாந்தப்போலி யென்னு மிரண்டும் ஏதுப்போலியுளடங்கும். சற்பிரதிபக்கமென்னும் பிரகரணசம ஏது சாத்தியத்தின் மறுதலையாகிய சாத்தியத்தைச் சாதித்தலில் முற்கூறியவேதுவோடொத்தவலியுடையதா யிருத்தலின் ஏதுப்போலி யாகாது; காலாத்தியயாபதிஷ்டமென்னும் பாதிதம் விருத்தத்தி லடங்குமெனப் பிறர் கூறுவர்.

அசித்தம்.

i. அவற்றுள், ஏதுத்தன்மையினுல் அநிச்சித (நிச்சயிக்கப்படாத) பக்கவிருத்தி (பட்சத்திருத்தல்) அசித்தம். அது ஆசிரயாசித்தம், சொரூபாசித்தம், வியாப்பியத்துவாசித்தமென மூன்றுவகையாம்.

(கு-ரை.) பட்சத்தில் நிச்சயிக்கப்படுதலில்லாத ஏது அசித்தம். அசித்தமெனினும் பேறில்லதெனினு மொக்கும்.

வம் (தோஷங்கள்) ஏதுப்போலியெனப்படும். யாண்டு ஒரேதோஷமிருக்கின்றதோ ஆண்டு அத்தோஷமே ஏதுப்போலியாம்.

* பக்கவிலக்கணமின்றிப் பக்கம்போல விளங்குவது பக்கப்போலி யெனப்படும். ஒருசாரார் இது நால்வகைப் படுமென்பர்; மற்றொருசாரார் ஒன்பதுவகைப் படுமென்பர்.

† திருஷ்டாந்த விலக்கணமின்றித் திருஷ்டாந்தம்போல விளங்குவது திருஷ்டாந்தப்போலி யெனப்படும். ஒருசாரார் இது பதினெண்வகைப்படுமென்பர்; மற்றொருசாரார் பத்துவகைப்படுமென்பர்.

ஆசிரயாசித்தம்.

(1.) ஆசிரயாசித்த மெங்ஙனம்? வான்றாமரை மண முடைத்து; தாமரைத்தன்மையால்; பொய்கைத் தாமரைப்போல. இதில் வான்றாமரை ஆசிரயம்; அஃது மின்றே.

(கு-ரை.) எவ்வேதுவிற்குப் பட்சம் அசித்தமோ அவ்வேது ஆசிரயாசித்தமாம். அஃது ஆசிரய அசித்தமெனப் பிரிபட்டு நிற்கும். ஆசிரயம், சார்பு, பக்கமென்பன ஒரு பொருட் சொற்கள். தாமரைத்தன்மையாலென்னு மேதுவிற்குப் பக்கமாகிய வான்(ஆகாயத்) தாமரையெஞ்ஞான்றும் பெறப்படுவ தன்றாயிருத்தலின் இவ்வேது ஆசிரயாசித்தமாயிற்று. இவ்வேது வான்றாமரையென்னும் பட்சத்தில் மணமுடைத்தென்னும் சாத்திய தருமத்தை யறிதற்குத் தடையாயிருத்தலின் இது ஆராய்ச்சிக்குத் தடையாயிருந்தது கொண்டே அனுமிதிக்குத் தடையாவதுடன் பக்கதருமத்தன்மை யுணர்விற்குந் தடையாயிற்றென்க.

சொருபாசித்தம்.

(2.) சொருபாசித்த மெங்ஙனம்? சத்தம் அநித்தியம்;கட்புலப்படுதலால்;(குடம்போல). இதிற் கட்புலப்படுதல் ஏது; அதுவுஞ் சத்தத்திற்கின்றே; சத்தஞ் செவிப்புலப்படுதலின்.

(கு-ரை.) பட்சத்திலில்லாத ஏது சொரூபாசித்தமாம். அது சொரூப அசித்தமெனப் பிரிபட்டு நிற்கும். ஒன்றன் முழுவடிவமும் சொரூபமெனப்படும். கட்புலப்படுதலா லென்னும் ஏதுவின் சொரூபம் சத்தமாகிய பட்சத்தி லிராமையின் சொரூபாசித்தமாயிற்று.

சத்தமென்னும் பட்சத்தில் அநித்தியமென்னும் சாத்தியதருமத்தை யறிதற்குத்தடையாயிருத்தலின் இவ்வேதுவும் ஆராய்ச்சிக்குத் தடையாயிருந்துகொண்டே அனுமிதிக்குத் தடையாவதுடன் பக்கதருமத்தன்மை யுணர்விற்குந் தடையாயிற்றென் றுணர்க.

கட்புலப்படுதல்-கண்ணிந்திரியத்தால் அறியப்படுதல்; செவிப்புலப்படுதல் - காதிந்திரியத்தா லறியப்படுதல். கட்புலப்படுதல் உருவ முதலியனவே யன்றிச் சத்தமுதலியனவன்று மென்க.

துணிந்ததனைத் துணிவிப்பதாகிய சித்தசாதனம் பக்கதருமத்தன்மையைச் சிதைத்தலால் ஆசிரயாசித்தத்து ளந்தர்க்கதமாம்; ஆதுனிகர் நிக்கிரக ஸ்தானத்து ளந்தர்க்கதமா மென்பர்.

வியாப்பியத்துவாசித்தம்.

(3.) வியாப்பியத்துவாசித்தம் இருவகை; ஒன்று, வியாத்தி கிரகிப்பதாகிய பிரமாணமின்மையின், மற்றையது உபாதியுண்மையின் (வியாப்பியத்துவா சித்தம்).

(கு-ரை.) வியாபிக்கப்படுந்தன்மையின்றிய எது வியாப்பியத்துவாசித்த வேதுவாம். (1) வியாத்தியைக்கிரகிப்ப (அறிவ) தாகிய பிரமாணமில்லாதது (2) உபாதியுடன்கூடியது என அஃதிருவகைத்தாம். இவ்விரண்டனுள் முன்னையது சாத்தியத்தோடு உடனிகழ்ச்சிச் சம்பந்தமில்லாத எதுவாம்; பின்னையது உபாதியுடன்கூடிய சாத்தியத்தோடு சம்பந்தமுடைய வேதுவாம். வியாப்பியத்துவாசித்தமென்பது வியாப்பியத்துவ அசித்தமெனப் பிரிபட்டுநிற்கும்.

அவற்றுள், முதலது எங்ஙன்? சப்தம் கணிகம்; சத்தாயிருப்பதால்; யாது சத்து அதுகணிகம்; எங்ஙனம்?

முகிற்படலம். அங்ஙனமே (முகிற்படலம் போல) சப்தாதியுஞ்சத்து. சத்துவத்திற்கும் கணிகத்துவத்திற்கும் வியாத்தியைக் கிரகிக்கும் பிரமாணமின்று. சோபாதிகதை (உபாதியோடு கூடியதன்மை) யாற் சத்துக்கு வியாப்பியத்துவாசித்தங்கூறில், வேறடைந்த (மற்றொன்றாற் பெறப்பட்ட) கணிகத்துவம் வேண்டப்படும்.

(கு-ரை.) கணிகம்-க்ஷணிகம். அஃதாவது க்ஷணப்போதிருப்பது. க்ஷணமாவது தாமரையிதழையடுக்கி யூசியிட்டடித்தா லெட்டிதழறுமள வென்று கூறுவர். சத்து-உள்ளது.

சப்தம் கணிகம்; சத்தாயிருப்பதால்; யாதுசத்து அதுகணிகம்; முகிற்படலம் (மேகக்கூட்டம்)போல; அங்ஙனமே (முகிற்படலம் போல) சப்தாதியும் (சப்தமுதலியவைகளும்) சத்து என்பது பௌத்தரது அனுமானவாக்கியம். யாதுசத்து அதுகணிகமன்றாதலின் சத்தாயிருத்தலாலென்னு மேதுவிற்குக் கணிகமென்னுஞ் சாத்தியத்தோடு உடனிகழ்ச்சிச் சம்பந்தமில்லை. யாண்டுப்புகை ஆண்டுத் தீயெனப் புகைக்குந் தீக்கும் உடனிகழ்ச்சியைக் கிரகிக்கும் பிரமாண மிருப்பதுபோல யாண்டுச்சத்து ஆண்டுக் கணிகமெனச் சத்துவத்திற்கும் கணிகத்துவத்திற்கும் வியாப்தியைக்கிரகிக்கும் பிரமாணமின்மையின் இவ்வேது ஆராய்ச்சிக்குத் தடையாயிருந்து கொண்டே அனுமிதிக்குத் தடையாவதுடன் வியாப்தியுணர்விற்குந் தடையாமென் றுணர்க. காரணவடிவாயேனும் காரியவடிவாயேனு மிருக்கும் பதார்த்தங்களுள் யாதொன்றாயினும் க்ஷணப்போதிருப்ப தன்றாயிருத்தலின் சத்தாயிருப்பது க்ஷணிகமாகாதென விளக்கியவாறும்.

சத்தாயிருத்தலால் என்னும் எது உபாதியுடன் கூடிய சாத்தியத்தோடு சம்பந்தமுடைய எது என்று கூறின், மலை புகையுடைத்து தீயுடைமையின் என்புழிப் புகையுடைமையென்னுஞ் சாத்தியம் ஈரவிறகின் கூட்டத்தாற் பெறப்பட்டிருத்தல் போன்று கணிகத்துவமும் (க்ஷணப்போதிருக்குந்தன்மையும்) மற்றொன்றால் (வேறோ ருபாதியினால்) பெறப்பட்டிருத்தல்வேண்டும். அங்ஙனமோ இன்று; இன்மையின், சத்தாயிருப்பதால் என்னும் எது அதுவாகாதென்க.

பௌத்தருள் ஒரு பகுதியாரான க்ஷணிக விஞ்ஞானவாதி (யோகாசாரனது மதத்தை யனுசரித்தவர்)கள் விஞ்ஞானத்திற்கு வேறாக வொருபதார்த்தமுமில்லை; விஞ்ஞானமே தத்துவம்; அது க்ஷணிகமா யிருக்கிறதென்று கூறுவர்; அது சுருக்கமாக வருமாறு:—சகல பதார்த்தங்களும் விஞ்ஞானத்தி னாகாரமாகவே யிருக்கின்றன. அந்த விஞ்ஞானம் பிரகாசவடிவம். ஒவ்வொரு க்ஷணத்திலும் விஞ்ஞானம் தோன்றி யழிகின்றது; முன் விஞ்ஞானத்திற்குச் சமானமாக வேறுவிஞ்ஞான முண்டாவதால் முதல் விஞ்ஞானம் நாசமடைகின்றது; அங்ஙனமே மூன்றாவது விஞ்ஞானத்தினுற்பத்தி யிரண்டாவது விஞ்ஞானத்தினாசத்திற்கேது; நான்காவதனுற்பத்தி மூன்றாவதன் நாசத்திற்கேது; இங்ஙனம் நதியின் பிரவாகம்போன்று விஞ்ஞானத்தின் தாரை (கிரமம்) தொடர்ந்துகொண்டே யிருக்கிறது. அந்த விஞ்ஞானதாரை: ஆலயவிஞ்ஞானதாரை, பிரவிர்த்திவிஞ்ஞானதாரையென விருவகைத்தாம். அவற்றுள், 'நான் நா' னென்னும் விஞ்ஞானதாரை (புத்தி) ஆலயவிஞ்ஞானதாரையாம்; 'இது கடம், இது சரீரம்' என்னும் விஞ்ஞானதாரை பிரவிர்த்தி விஞ்ஞான தாரையாம். ஆலயவிஞ்ஞானதாரையினின்றும் பிரவிருத்தி விஞ்ஞானதாரை யுண்டாகின்றதென்பது.

க்ஷணிகவிஞ்ஞானவாதிகள் சரீரமுதலியவற்றை * க்ஷணிகமென்று சித்தாந்தப்படுத்தற் பொருட்டுச் 'சப்தம் கணிகம், சத்தாயிருத்தலால்' என் றனுமானங்கூறுகின்றனர். ஒவ்வொரு பதார்த்தமும் க்ஷணத்திற்குமேலிருப்ப தன்றாயின் 'அந்த யானையிது,' 'அவன்றானிவன்' என்றற் றொடக்கத்துப் பிரத்தியபிஞ்ஞாரூபப் பிரத்தியட்சம் நிகழாதிருத்தல் வேண்டும்; நிகழுதலின் அது பொருந்தாதென்க.

இரண்டாவது யாது? வேள்வியினிகழுங் கொலை யதன்மசாதனம்; கொலைமையால்; வேள்விப்புறத்துக் கொலைபோல. இதில் அதன்ம சாதனத்தின்கட்

---

* உண்டவுணவின் சாரமே க்ஷணந்தோறும் அவயவங்களாய்ப் பரிணமித்து வளர்ந்தும் தேய்ந்தும்வேறுபடுதலின் அவயவியாகிய வுடம்பும் வளர்ந்துந் தேய்ந்தும் க்ஷணந்தோறும் பிறிது பிறிதாம். அங்ஙனம் க்ஷணந்தோறும் வளர்ந்தும் தேய்ந்தும் வருதல் காணப்படாதாயினும் மழைத்தாரையால் நிறையும் தடாகநீரும் இறைப்பக் குறையும் கிணற்றினீரும்போல முடிவின்கட் காணப்படுதலின் க்ஷணந்தோறும் வளர்தலும் தேய்தலு முடைமை பெறப்படும். இங்ஙனமே மண்டொடுதல் பூரித்தல் முதலியவற்றால் நிலமும், ஆற்றுநீர்ப் பெருக்கு முதலியவற்றால் கடலும் க்ஷணந்தோறும் நிறைவு குறைவுடைமையால் இன்னோன்னவை யெல்லாம் க்ஷணபங்கமாய்ப் பிறிது பிறிதாய்த் தோன்றும் எனச் சிலவற்றிற்கு க்ஷணபங்கம் தார்க்கிகரங்கீகரித்திருக்கின்றனர். மூன்றாவது க்ஷணத்தில் யாது நாசமாகின்றதோ அது க்ஷணிகமென அவர் அங்கீகரித்திருக்கின்றமையின் பௌத்தராது க்ஷணபங்கவாதத்திற்கும் தார்க்கிகரது க்ஷணபங்கவாதத்திற்கும் பெரிதும் வேற்றுமையுண்டெனக.

கொலைமை பிரயோசகமி(உபாதியி)ன்று. மற்றென்னை? நிஷித்தத்வமே பிரயோசகம், உபாதியென்னுமளவு.

அங்ஙனமன்றோ, சாத்திய வியாபகத்துவமாய்ச் சாதநத்திற் கவ்வியாபகத்துவமாதல் உபாதியெனல் உபாதியிலக்கணம்; அதுவு (உபாதியு)ம் நிஷித்தத்வத்தின்கணுண்டு, நிஷித்தத்வம் சாத்தியமான அதன்மசாதனத்வத்திற்கு வியாபகமே. எங்ஙனம்? யாண்டு யாண்டு அதன்மசாதநத்வம் ஆண்டாண்டு அவசியம் நிஷித்தத்வம். இங்ஙனஞ் சாதகமான கொலைமையை நிஷித்தத்வம் வியாபியாது.

யாண்டு யாண்டேக் கொலைமை ஆண்டு ஆண்டு அவசியம் நிஷித்தத்வமின்று; வேள்வியினது பசுக்கொலையில் நிஷித்தத்வ மின்மையின். அந்நிய (லௌகிக ஹிம்சையினுல்) பிரயுக்தமான (ஏற்பட்டதான) வியாத்தியோடு கூடிய கொலைமை வியாப்பியத்துவாசித்தமே.

(கு-ரை.) சாத்தியத்திற் சமவியாத்தியுடையதாய்ச் சாதனத்தி (ஏதுவி)ல் வியாபியாமலிருப்பது உபாதியினிலக்கணமாம். உபாதியெனினுஞ் செயற்கையெனினுமொக்கும்.

வேள்வியினிகழுங்கொலை அதன்மசாதனம்; கொலைமையால்; வேள்விப்புறத்துக்கொலைபோல என்புழி வேள்வியினிகழுங்கொலை என்பது பட்சமும், அதன்மசாதனம் என்பது சாத்தியமும், கொலைமையால் என்பது ஏதுவும், வேள்விப்புறத்துக்கொலைபோல என்பது உதாரணமுமாம். இவ்வனுமானத்தில் நிஷித்தத்வம் (விலக்கப்படுந்தன்மை) உபாதி. பட்சமாகக்கூறப்பட்ட கொலை

யில் கொலைமையா லென்னும் எதுவிருப்பினும் நிஷித்தத்வ மென்னு முபாதியின்று.

யாண்டு அதன்ம சாதனத்துவ முண்டு ஆண்டு நிஷித்தத்வ முண்டு; யாண்டு நிஷித்தத்வ முண்டு ஆண்டு அதன்ம சாதனத்துவ முண்டெனச் சாத்தியமும் உபாதியும் சமவியாத்தியுடையன வாயும், யாண்டுக்கொலை ஆண்டு நிஷித்தத்வ மின்று; வேள்வியினிகழுங்கொலையில் நிஷித்தத்வ மின்மையினெனக் கொலைமையாலென்னுஞ் சாதனத்தில் நிஷித்தத்வ மென்னு முபாதி வியாபியாமலுமிருத்தல் காண்க. சாதனத்தில் உபாதி வியாபியாமலிருப்ப தென்பதற்குச் சாதனத்தில் உபாதி வியாபித்தாவது வியாபிக்காமலாவது இருக்கு மென்பது பொருள். நிஷித்தத்வ மென்னு முபாதி ஆன்முலையறுத்தல், மகளிர்கருவினைச் சிதைத்தல், பார்ப்பார்த்தபுதல் (கொல்லுதல்) முதலிய கொலைமையில் வியாபித்தும், யாகத்தினிகழுங் கொலையில் வியாபியாமலு மிருத்தல் காண்க.

"யக்ஞயத்திற்காகவே பசுக்கள் பிரமனால் படைக்கப்பட்டன. அந்தயக்ஞயஞ் செய்தால் உலகமெல்லாம் க்ஷேமத்தையடைகின்றன. ஆகையால் யக்ஞயத்திற் செய்யும் பசுக்கொலை கொலையன்று" என்றும், "கொடிகள், பசுக்கள், விருட்சங்கள், மிருகங்கள், பட்சிகளென்னு மிவற்றை யக்ஞயத்திற்குபயோகப்படுத்தினால் பின்பு அவை உயர்ந்த கதியை யடைகின்றன" என்றும், "சராசர விஷயத்தில் வேதத்தில் விதிக்கப்பட்ட கொலையைக் கொலையென்று கருதுதல் கூடாது. வேதத்தினின்றே தருமம் விளங்குகின்றதல்லவா? ஆதலால் அந்த்வேதம் கொலையைக்கூறினபோதிலும் புண்ணியமாகவேயிருக்கும்" என்றும் தருமசாஸ்திரங் கூறுதலால் வேள்வியினிகழுங்கொலையில் நிஷித்தத்வ மின்றென்பது நன்கு விளங்கும்; விளங்கவே, அதன்ம சாதனத்தைத்தருவது நிஷித்தத்வ

மென்பதும் கொலைமை யன்றென்பதும் பெறப்படுதல் காண்க. வேள்வியினிகழுங் கொலையில் நிஷித்தத்வ மின்றெனக் கூறப் பட்டதாயினும் இனம் பற்றி "(வீட்டிற்கு) நெருப்புவைத்தவன், (அன்னத்தில்) விஷங்கலந்தவன், ஆயுதத்தினாற் கொல்லவந்தவன், பொருளை யபகரித்தவன், பூமியையபகரித்தவன், மனைவியையப கரித்தவ னென்னு மிவ்வறுவரும் ஆததாயிகளென்று சொல்லப் படுவர். எதிர்ப்பட்ட ஆததாயிகளை விசாரியாமலே கொல்லவேண் டும். ஆததாயிகளைக் கொன்றவனுக்கு யாதொருதோஷமு மில்லை" என்று புராணங்கூறுதலால் இவர்களைக் கொல்லுதலிலும் போர் முகத்துப் பகைவரைக் கொல்லுதலிலும் நிஷித்தத்வ மின் றென் றறிதற்பாற்றும். கொலைமையாலென்னும் எது நிஷித்தத் துவமென்னு முபாதியோடு கூடிய அதன்ம சாதனமென்னும் சாத்தியத்தோடு சம்பந்தமுடையதாயிருத்தலால் யாண்டுக்கொலை யுண்டு ஆண்டு அதன்மசாதனத்துவ முண்டென வியாத்தி பெறப் படுவதின்று யிருத்தலின் இதுவும் ஆராய்ச்சிக்குத் தடையாயிருந்து கொண்டே அனுமிதிக்குத் தடையாவதுடன் வியாத்தியுணர்விற் குந் தடையாமென்றுணர்க.

உபாதியோடுகூடிய எது துணிபொருளெ (சாத்தியமெ)ல்லா வற்றினும் வியாபிப்பதும், பக்கதருமத்தால் வரைந்துகொள்ளப் படுந்துணிபொருளில் வியாபிப்பதும், எதுவால் வரைந்துகொள்ளப் படுந் துணிபொருளில் வியாபிப்பதும், யாதாயினுமோர் தருமத் தால் வரைந்துகொள்ளப்படுந் துணிபொருளில் வியாபிப்பதும் என நால்வகைத்தாம்.

(1) முதலதற்கு நிஷித்தத்துவ முபாதியாம். அல்லது மலை புகையுடைத்து; தீயுடைமையால் என்னுமனுமானத்தில் ஈர விறகின் கூட்டம் உபாதியாம்.

அது புகையுடைமை யென்னுந் துணிபொருளெல்லா வற்றி னும் வியாபித்துத் தீயுடைமையாகிய ஏதுவில் வியாபியாதிருத்தல் காண்க. ஈரவிறகின்கூட்டம் தீயுடைமைமுற்றும் வியாபியாமையை ஒழுகக்காய்ச்சிய இரும்பிலுணரத்தக்கதாம்.

(2) *வாயு காட்சிப்பொருள்; காட்சிப் பரிசமுடைமையால்; கடம்போல என்னுமனுமானத்தில் வாயுபட்சமும், காட்சிப்பொருள் சாத்தியமுமாம். ஈண்டுப் புறவிந்திரியக் காட்சிப் பொருளாகிய பிருதிவி, அப்பு, தேயுக்களில் வியாபித்திருப்பதாகிய உற்பூத (தோற்றிய) வுருவம் உபாதியாம். அது புறப்பொருண்மையால் வரைந்து கொள்ளப்படும் காட்சிப்பொருளில் வியாபித்து வாயு வாகிய பட்சத்தின்கட்கூறிய காட்சிப்பரிச முடைமையாலென் னும் ஏதுவில் வியாபியாதிருக்கின்றதென்க.

உற்பூதவுருவம் காட்சிப்பரிசமுற்றும் வியாபியாமையை வாயுவின் காட்சிப் பரிசத்திலறிக. வாயு உருவமின்றிப் பரிச முடையதா யிருத்தலின் அதில் உற்பூதவுருவமின்று.

காட்சிப்பரிசமுடைமை யென்னும் பக்கதருமத்தால் வரைந்து கொள்ளப்படும் துணிபொருள்—காட்சிப்பொருள். அதன்கண் வியாபித்திருப்பது உற்பூதவுருவம்.

(3) அழிவுபாட்டபாவம் நாசமுடைத்து; உண்டாகற் பால தாகலின் என்னுமனுமானத்தில் உண்டாகற்பாலதாகலினென்

---

* தோற்றியவுருவமும் தோற்றிய பரிசமுமுடைய பொருளே தொக்கிந்திரியத்திற்குப் பிரத்தியக்ஷமாமென்பது நியமமாதலின் உருவமின்றித் தோற்றியபரிசமுடைய வாயு தொக்கிந்திரியத்திற் குப் பிரத்தியக்ஷமாகாது; ஆகாதாகவே அஃதனுமானத்தாலறியத் தக்கதாயிற்றென்க.

னும் ஏதுவால் வரைந்து கொள்ளப்படும் நாசமுடைத்தென்னும் துணிபொருளில் வியாபிப்பது பாவத்தன்மை; அதுவே யீண்டு உபாதி. தோற்றமுடைத்தாய் நாசமின்றியிருப்பது அழிவுபாட்ட பாவமாகலின் அது நாசமுடையதாகாது. உண்டாகற்பாலதாகி நாசமடைவது பாவபதார்த்தமாம். ஈண்டுப் பாவத்தன்மையென்னுமுபாதி உண்டாகற்பாலதாகி நாசமடைவதாகிய சாத்தியத்தில் வியாபித்து உண்டாகற்பாலதாகலின் என்னும் ஏதுவில் வியாபியாமை காண்க. உண்டாவனயாவும் நாசமுடையனவா மென்பது நியமமன்றெனக் காட்டப்பட்டது.

(4) முன்னபாவம் நாசமுடைத்து; அளவையா லளக்கற்பாலதாகலின் என்னும் அனுமானத்தில் உண்டாகற்பாலதாந் தன்மையாலென்னும் யாதானுமோர் தருமத்தால் வரைந்துகொள்ளப்படும் நாசமுடைத்தென்னுந் துணிபொருளில் வியாபிப்பது பாவத்தன்மை. அதுவே யீண்டுபாதி. தோற்றமின்றி நாசமுடைத்தாயிருப்பது முன்னபாவமாகலின் அது தோற்றமுடையதாகாது.

பாவபதார்த்தம் அபாவபதார்த்தமென்னு மிரண்டும் அளவையாவளக்கப்படுவன (பிரமாணத்தா லறியப்படுவன)வா யிருத்தலின் அளவையாலளக்கற்பாலதாகலின் என்னும் ஏதுவில் பாவத்தன்மை நியமமாய் வியாபித்திருத்தலின்று.

விருத்தம்.

ii. சாத்திய விபரீதத்தோடு (சாத்தியாபாவத்துடன்)வியாத்தம் (வியாபித்திருப்பது) விருத்தம். அஃதெங்ஙனம்? சத்தம்நித்தியம்; காரியத்தன்மையால்: ஆன்மாப்போல. காரியத்தன்மை சாத்தியமான நித்தியத்துவத்திற்கு விபரீதமான (மாறுன) அநித்தியத்

துவத்தோடு வியாத்தம். யாது காரியம் அஃது அநித்தியமே; நித்தியமன்று. ஆதலின் காரியத்தன்மை விருத்தம்.

(கு-ரை.) சாத்தியமல்லாவிடத்து வியாபித்திருக்கும் ஏது விருத்த ஏதுவாம். விருத்தம்-மாறுகொள்வது.

சத்தம் நித்தியம்; காரியத்தன்மையால்; ஆன்மாப்போல என்புழிக் காரியத்தன்மையா லென்னும் ஏது நித்தியமாகிய சாத்தியத்தில் வியாபியாது சாத்தியமல்லாவிடத்து (அனித்தியத்தில்) வியாபித்திருக்கின்றது. யாது காரியம் அஃதனித்தியம் கடம் போல என்னும் நியமமிருத்தலின் இவ்வேது அநுமிதிக்கே தடையாம். காரியத்தன்மையால் என்னும் ஏது சபட்சமாகிய ஆன்மா முதலிய நித்தியபதார்த்தங்களிலிராது பட்சமாகிய சத்தத்திலும் விபட்சமாகிய கடாதிகளிலு மிருத்தல் காண்க. சத்தம் ஆகாயத்தின் காரியமாகலின் அதுவும் அநித்தியமே. காரியத்தன்மையால் என்பது நித்தியத்தைச் சாதிக்காது அதற்கு மாறுகொள்வதாகிய அநித்தியத்தைச் சாதித்தலின் விருத்தமாயிற்று.

அநைகாந்திகம்.

iii. வியபிசாரத்தோடு கூடியது அநைகாந்திகம். அது சாதாரண அநைகாந்திகம், அசாதாரண அநைகாந்திகமென விருவகைத்து. அவற்றுள்,

சாதாரண அநைகாந்திகம்.

(1) பக்க சபக்க விபக்கத்திலிருப்பது சாதாரண அநைகாந்திகம். எங்ஙனம்? சத்தம் நித்தியம்; பிரமேயத்தன்மையால்; வியோமம்போல; இதில் பிரமேயத்தன்மையேது. அது நித்திய அநித்தியத்திருப்பது.

(கு-ரை.) வியபிசாரம், பிறழ்வு, நியமமின்மை யென்பன ஒருபொருட்கிளவி. வியோமம் - ஆகாயம். அநைகாந்திகம், சவ்வியபிசாரம், பிறழ்வுடையது என்பனவும் ஒருபொருட்கிளவி. சாதாரணம் - பொது. அசாதாரணம்-சிறப்பு. பிரமேயத்தன்மையால் என்னும் ஏது நித்தியமென்னும் சாத்தியமில்லாத சத்தமென்னும் பட்சத்திலும், சபட்சமாகிய ஆகாயமுதலியவற்றினும், விபட்சமாகிய கடாதிகளிலுமிருத்தலின் சாதாரணமாயிற்று. எல்லாம் பிரமேயமாதலின் பிரமேயம் எல்லாவற்றினுமிருக்கும். ஈண்டு நித்தியப்பொருள் சபக்கமும், அநித்தியப்பொருள் விபக்கமுமாம். பிரமாணத்தா லறியப்படுவது பிரமேயமெனப்படும். பர்வதம் வன்னியுடைத்து, பிரமேயமாகலின் என்புழிப் பிரமேயமென்னும் ஏது சாத்தியத்தின் ஆசிரயமாகிய பக்கத்திலும் சபக்கமாகிய அடுக்களையிலும் விபக்கமாகிய மடுவிலுமிருத்தலின் சாதாரண அநைகாந்திகவேது சாத்திய முள்ள பக்கத்திலு மிருக்கும். வியபிசார ஞானமுண்டாயவிடத்து வியாத்தியைக் கிரகித்தலுண்டாகாமை மிகப் பிரசித்தமா யிருத்தலின் இவ்வேது ஆராய்ச்சிக்குத் தடையாயிருந்து கொண்டே அநுமிதிக்குத் தடையா யிருக்கின்றதென்க.

அசாதாரண அநைகாந்திகம்.

(2.) சபக்க விபக்க நீக்கமாய் (இல்லாது) பக்கமாத்திரத்திருப்பது அசாதாரண அநைகாந்திகம்: அஃதெங்ஙனம், நிலம் நித்தியம்; மணமுடைமையால்; (வியோமம்போல என்புழி) மணமுடைமை சபக்கமாகிய நித்தியத்துவத்தினின்றும், விபக்கமாகிய அநித்தியத்துவத்தினின்றும் நீக்கம்; நிலமாத்திரையிலிருத்தல்.

(கு-ரை.) மணமுடைமையால் என்னுமேது சபக்கமாகிய ஆகாயமுதலியவற்றினும் விபக்கமாகிய கடமுதலியவற்றினு மின்லாது பக்கமாகிய நில (பிருதிவி) மாத்திரையினிருத்தலின் அசாதாரணமாயிற்று. வியாத்தியின்கண் ஐயமுண்டாயவிடத்து வியாத்தியைக் கிரகித்தல் கூடாமையின் இவ்வேதுவும் ஆராய்ச்சிக்குத் தடையாயிருந்துகொண்டே அனுமிதிக்குத் தடையாயிருக்கின்றதென்றுணர்க. அது வருமாறு:—

மணமுடைமையால் என்னும் ஏது திருஷ்டாந்த (சபக்க)மின்மையின் அன்னுவயி யேதுவன்று; ஆனால் வியதிரேகியேதுவாம். ஏது எதையுடையதன்கண் இல்லாமலிருக்கின்றதோ அது தனதாசிரயத்தில் அதன் அபாவத்தைச் சாதிக்கின்றதென்பது நியமம். எங்ஙனம். தூமம் வன்னியபாவத்தையுடைய மடுமுதலியவற்றின்கண் இல்லாமலிருந்து தனது ஆசிரயமாகிய பர்வதமுதலியவற்றில் அதன் அபாவத்தை (வன்னியபாவத்தின் அபாவத்தை-வன்னியை)ச் சாதிக்கின்றதோ அங்ஙனமே மணமுடைமை நித்தியத்தன்மையுடைய ஆகாயமுதலிய சபக்கத்தின்க ணில்லாது தனது ஆசிரயமாகிய நிலத்தில் நித்தியத்தன்மையி னபாவமாகிய அனித்தியத் தன்மையைச் சாதிக்கின்றது; இங்ஙனமே நித்தியத்தன்மையின் அபாவமுடைய கடமுதலிய விபக்கத்தின்கணில்லாது தனது ஆசிரயமாகிய நிலத்தில் அதன் அபாவத்தை (நித்தியத்தன்மையபாவத்தின் அபாவத்தை - நித்தியத்தன்மையை)ச் சாதிக்கின்றது. ஒரேயிடமாகிய நிலத்தில் தம்முள் விரோதமுள்ள நித்தியத்துவம் அனித்தியத்துவமென்னு மிரண்டும் பொருந்தாவாகலின் மணமுடைமையா லென்னும் ஏதுவினால் அனுமிதி யுண்டாக மாட்டாதென்க.

தருக்கசங்கிரக முதலியவை கூறுகின்றவாறு அநைகாந்திகம் சாதாரணம், அசாதாரணம், அநுபசங்காரி (முடிவுபெறுமை) என

மூவகைத்தாம். அநைகாந்திகம் ஏழ்வகைத்தா மென்பாருமுண்டு. பின்னர்க் காட்டுதும். அன்னுவய திருஷ்டாந்தமும் வியதிரேக திருஷ்டாந்தமு மில்லாதது அநுபசங்காரி. அஃது எல்லாப் பொருளும் அநித்தம், பிரமேயத்தன்மையால் என்பதாம். ஈண்டு எல்லாப்பொருளும் பக்கமாய்விட்டமையின் எல்லாப்பொருளி லும் வேருக அன்னுவயதிருஷ்டாந்தமும் வியதிரேக திருஷ்டாந் தமுமில்லை; இல்லையாகவே, இவ்வேது திருஷ்டாந்தங் கூறிமுடித் தற் கிடம்பெருதாயிற்று. இவ்வேதுவும் முன்னர்க்கூறிய தோஷ முடையதாமென்றுணர்க.

உலகம் கர்த்தாவையுடையது; காரியமாயிருத்தலின்; யாது யாது காரியம் அதுவது கருத்தாவையுடையது, கடம்போல என்னு மனுமானத்தில் கடம் உலகபதார்த்தத்தி லொன்ருயிருத்தலின் காரியமாயிருத்தலின் என்னும் ஏது அனுபசங்காரியா மெனின், உலகம் கர்த்தாவையுடையது என்று கூறுவோன் ஜீவர்களால் செய்யப்பட்டனவன்ருயும் காரியமாயுமுள்ள பொருள்களையே உலகமென்று கூறுகின்ருனுகலின் ஆகாதென்க.

கர்த்தாவைச் சாதிக்குமிடத்துக் காரியமாயிருத்தலின் என் பது அந்ுவய வியதிரேகி யேதுவாம்; யாது காரியம் அது கர்த் தாவையுடையது கடம்போல என அந்ுவய வியாத்தியும், யாது கர்த்தாவையுடையதன்று அது காரியமன்று ஆன்மாப்போல என வியதிரேக வியாத்தியு முடைமையின்.

பிரகரணசமம்.

iv. எவ்வேதுவிற்குச் சாத்திய விபரீதத்தை(துணி பொருட்கு மறுதலையாய துணிந்தபொருளை)ச் சாதிக் கும் ஏத்வந்தரம்(வேறேது)உண்டு அதுவே பிரகரண

சமம். எங்ஙனம்? i. "சத்தம் அநித்தியம்; நித்தியதருமந் தோன்றாமையால்" ii. "சத்தம்நித்தியம்; அநித்திய தருமமின்மையால்" என்பதுவே. இதுவே சற்பிரதி பக்கமென்றுங் கூறப்படும்.

(கு-ரை.) சாத்தியத்திற்கு விபரீதமாகிய சாத்தியத்தைச் சாதிக்கும் சமபலமாகிய (ஒத்தவலியுள்ளதாகிய) வேறோரேதுவை யுடைய எது பிரகரணசமமென்னும் சற்பிரதிபக்கமாம். 'நித்திய தருமந்தோன்றாமையால்', 'அனித்தியதரும மின்மையால்' என்னு மிரண்டேதுகட்கும் ஒன்றற்கொன்று சாத்தியாபாவத்தைச் சாதிக்குந்தன்மை யிருத்தலின் ஒன்றற்கொன்று சற்பிரதிபக்க முண்டென்க. அனித்தியதரும மின்மையால் என்பது சத்தம் அநித்தியமன்றென்பதனையும், நித்தியதருமந் தோன்றாமையால் என்பது சத்தம் நித்தியமன்றென்பதனையுஞ் சாதித்தல் காண்க. சற்பிரதிபக்கம்-மறுதலையுடையது. * இவ்வேது அநித்தியம் நித்தியம் என்னும் மறுதலைப்பொருளுணர்விற்குக் கருவியாயிருத்தலின் அனுமிதிக்கே தடையாம்.

காலாத்தியயாபதிட்டம்.

48. பக்கத்திற் பிரமாணாந்தரத்தாற் றுணிந்த (வேறு பிரமாணத்தால் நிச்சயிக்கப்பட்ட) சாத்திய வின்மை

---

* "விருத்தவேதுவிற்கு எங்ஙனம் அனுமிதிப் பிரதிபந்தகம் பலமோ அங்ஙனமே சற்பிரதிபக்க எத்துவாபாசத்திற்கும் அனுமிதிப்பிரதிபந்தகம் பலமாம். பின்னர்ப் பேதம்யாதெனின், விருத்த எத்துவாபாசத்திற்குச் சாதனமொன்றெனவும், சற்பிரதிபக்க எத்துவாபாசத்திற்குச் சாதன மிரண்டெனவு முணர்க" என்று தருக்காமிர்தங் கூறுகின்றது.

யேது பாதிதவிடயம். காலாத்தியயாபதிட்ட மெனவுங் கூறப்படும். எங்ஙனம்? தீ வெம்மையிலது; பதார்த்தத்வத்தால்; புனல்போல. இதில் பதார்த்தத்வமான ஏதுவிற்குச் சாத்தியம் வெம்மையின்மை. (அனுஷ்ணாத்துவம்); அதனபாவம் (உஷ்ணத்துவம்) காட்சியானே துணியப்பட்டது. பரிசன (தொக்கிந்திரிய)க் காட்சியால் வெம்மை தோன்றலின். ஆதலினிங்ஙனம் அநுமானம் உணர்த்தப்பட்டது.

(கு-ரை.) பாதிதம் - மறுப்புடையது. சாத்தியாபாவ முள்ள பட்சத்தையுடையவேது பாதிதமாம். தீ சூடில்லது, பதார்த்தத்தன்மையால், ஜலம்போல என்புழித் தீயென்னும் பட்சத்தில் சூடின்மையின் அபாவம் (சூடுண்மை) துவக்கிந்திரியத்தா லறியப்படுதலின் பதார்த்தத்தன்மையால் என்னும் ஏது பாதிதமாயிற்று. பிரத்தியட்சமாகச் சாத்தியாபாவ நிச்சயமுண்டாதலின் இவ்வேது அனுமிதிக்கே தடையாம்.

ஈண்டுக்கூறிய தோஷங்களின்றிய ஏது சத்தேதுவாம்.

3. உவமானம்-Comparison.

49. அதிதேச வாக்கியப் பொருள் நினைவோடு கூடிய ஆவொப்புமை விசிட்ட (கூடிய) பிண்ட ஞானம் *உவமானம். எங்ஙனம்? ஆமாவுணரானும், எங்ஙனம் ஆ அங்ஙனம் ஆமா என்றோ ராரணியகபுருஷ (வன்

---

* அலங்கார நூலார் "பண்புந் தொழிலும் பயனுமென் றிவற்றின், ஒன்றும் பலவும் பொருளொடு பொருள்புணர்த், தொப்புமை தோன்றச் செப்புவ துவ்மை" என்பர்.

வாசியி)னாற்கேட்டு வநத்துட் புக்கு வாக்கியப்பொருள் நினைத்துக் கொண்டு, எப்போது ஆவொப்புமை விசிட்ட பிண்டங் காணுநின்றான் அப்போது அவ்வாக்கியப்பொருள் நினைவோடு கூடிய ஆவொப்புமை விசிட்டபிண்ட ஞாநம் உவமாநம்; உவமிதியைக் குறித்துக் கரணமாதலின். ஆவொப்புமைவிசிட்டபிண்டங் கண்டபின்னர், இது (இம்மிருக விசேடம்) ஆமாசப்த வாச்சியமா (பொருளான) ன பிண்டமென்னும் நாம நாமிசம்பந்தப் பிரதீதி (ஞானம்) உவமிதி. அதுவே பலம். இதுவோ (உவமானமோ) பிரத்தியட்ச அநுமான மென்னுமிவற்றால் அசாத்தியமான பிரமைக்குச் சாதகமாயிருப்பதால் உவமானம் வேறுபிரமாணமாம். இங்ஙனம் உவமாந முணர்த்தப்பட்டது.

(கு-ரை.) 'எங்ஙனம் ஆ (கோ) அங்ஙனம் ஆமா(காட்டுப்பசு)' என்பது அதிதேச வாக்கியமாம். பேதத்தோடுகூடிய சமானதருமம் ஒப்புமை (சாதிருசியம்) எனப்படும். ஆமாவில் ஆவின் பேதத்துடன் கூடிய சமான அவயவமிருத்தலின் அதுவே ஆவின் சாதிருசியமாம். ஆவின் சமானதருமம் மற்றோராவிலிருக்கின்றது; ஆனால் பேதமோ இன்று. ஆவின் பேதம் அசுவத்திலிருக்கின்றது; ஆனால் சமானதருமமோ இன்று; ஆதலால் ஒப்புமையில்லை. இங்ஙனமிருத்தலின் உவமான வுவமிதிகளின் பேதத்தோடுகூடிய சமானதருமமே ஒப்புமை யென்பதன் பொருளாமென்க.

வாக்கியப் பொருள் நினைத்துக்கொண்டு—எங்ஙனம் ஆ அங்ஙனம் ஆமா என்னும் அதிதேசவாக்கியப் பொருளை நினைத்துக் கொண்டு; நாமநாமிசம்பந்தப்பிரதீதி – பெயர்க்கும் பெயர்ப்

பொருளுக்குமுள்ள சம்பந்தத்தையறியுமறிவு; நாமம்-ஆமா என்னும் பெயர்; நாமி-அப்பெயரின் பொருளான பிண்டம்.

ஈண்டு ஆவொப்புமைவிசிட்ட பிண்டஞானம் உவமானப் பிரமாணம்; அதிதேசவாக்கியப் பொருள் நினைவு வியாபாரம்; இஃது ஆமாசப்த வாச்சியமான பிண்டமென்னும் நாமநாமிசம்பந்தப் பிரதீதி யுவமிதி (உவமேய) யாம். இவ்வாறு கூறுதல் நவீன நையாயிகாது சித்தாந்தம்.

ஆரணியக புருஷனு லறிவிக்கப்பட்ட வாக்கியார்த்தத்தின் சத்தாநுபவம் உவமானம்; அதிதேசவாக்கியப் பொருள் நினைவு வியாபாரம்; மிருகவிசேடத்தில் ஆமாவென்னுஞ் சொற்பொருட்டன்மை புணர்ச்சி யுவமிதியாமெனச் சம்பிரதாயிகமான நையாயிகர்கூறுவர். இவர் ஆவொப்புமை விசிட்டபிண்டஞானம் உவமிதியின் சககாரியாமென்பர்.

நவீனர் மேற்கூறிய வாக்கியார்த்தத்தின் சத்தாநுபவம் காரணத்திற்கு(ஆவொப்புமை விசிட்டபிண்டஞானத்திற்கு)க்காரணமாயிருத்தலின் அந்நியதாசித்தமாமென்பர்.

உவமிதி ஒப்புமைஞானத்தா லுண்டாவதுபோன்று விதர்மஞானத்தாலு முண்டாகும்.

காண்டாமிருகமென்னும் பதத்தின் வாச்சியத்தை(பொருளை) யறியாதவன் ஆரணியக புருஷனுல் ஒட்டையினும் வேறான தர்மமுள்ள கொம்போடுகூடிய மூக்கினையுடையது காண்டாமிருகமென்னும் பதத்தின் வாச்சியமா மென்னும் வாக்கியத்தைக் கேட்டு வாக்கியார்த்தத்தின் சத்தாநுபவமுண்டாய பின்னர் வனத்திற் சென்று ஒட்டையினும் விதர்மமான (மாறான தர்ம முடையதான) காண்டாமிருகத்தின் பிரத்தியட்சத்திற்குப் பின்னர் அதனிடத்துக்

காண்டாமிருக மென்னும் பதத்தின் வாச்சியத்தன்மையை யறிகின்றான். காண்டாமிருகத்தில் ஒட்டையினும் மாறான தர்மம் குறுகிய கழுத்து முதலியனவாம். ஈண்டுச் சம்பிரதாயிகக் கிரமமாக வாக்கியார்த்தத்தின் சத்தானுபவம் உவமானமும், வாக்கியார்த்தம் ஸ்மிருதி வியாபாரமும், மாறான தர்மமுள்ள பிண்டத்தின் தரிசன சககாரி (துணை) யும், காண்டாமிருக பதத்தின் வாச்சியத் தன்மையின் ஞானம் உவமிதியாகிய பயனுமாம்.

நவீனக்கிரமமாக மாறான தர்மமுள்ள பிண்டத்தின் (காண்டாமிருகத்தின்) பிரத்தியட்சம் உவமானமும், வாக்கியார்த்த ஸ்மிருதி வியாபாரமும், வாக்கியார்த்தத்தின் சத்தானுபவம் பாஹ்யசாமக்கிரியு(தூரகாரணமு)ம், காண்டாமிருக பதத்தின் வாச்சியத்தன்மையின் ஞானம் உவமிதியாகிய பயனுமாம்.

வேதாந்த மதத்தில் உவமிதி யுவமானங்கட்குச் சொரூபம் இதுவாம்:—நகரத்தில் ஆவியக்தியை (ஆவின்பிண்டத்தை)க் காண்பவன் வனத்திற்சென்று ஆமாவைக் காணுமிடத்து அவனுக்கு ‘இம்மிருக விசேடம் (ஆமா) ஆவையொத்ததாம்’ என்னும் பிரத்தியட்சமுண்டாகின்றது. அதன்பின்னர் ‘எனது ஆ இம்மிருக விசேடத்தை யொத்ததாம்’ என்னும் ஞானமுண்டாகின்றது. ஆண்டு ஆமாவில் ஆ ஒப்புமையின் ஞானம் உவமானப் பிரமாணமும், ஆவில் ஆமாவின் ஒப்புமை ஞானம் உவமிதியுமாம். ஆதலால் ஒப்புமை ஞானத்தாற்றோன்றிய ஞானவடிவ உவமிதி ஆவில் ஆமாவின் ஒப்புமை ஞானமாம். அதன்காரணம் ஆமாவில் ஆவின் ஒப்புமை ஞானமாம். அதுவே உவமானமாம். இந்திரிய சம்பந்தத்தில் ஒப்புமை ஞானம் உவமானமாம்; இந்திரியத்தின் மறைபட்டதில் ஒப்புமை ஞானம் உவமிதியாம்.

ஆவின் ஒப்புமை ஆமாவிலிருக்கின்ற தென்னுமிடத்து ஆ பிரதியோகியாம்; ஆமா அநுயோகியாம். ஈண்டுக்கூறியகாரணம் வியாபாரமின்றியதாம்.

4. சப்தம்-Word.

50. ஆப்தவாக்கியஞ் சப்தம். ஆப்தன் உள்ளபொருளை யுபதேசிக்கும் புருஷன். வாக்கியம் அவாய்நிலை, யோக்கியதை, அண்மை (சந்நிதி) யுடைய பதங்களினது சமூகம் (கூட்டம்). ஆதலினனே "ஆ, புரவி, மகன், யானை" யென்னும் பதங்கள் வாக்கியமல்ல; ஒன்றற்கொன்று அவாய்நிலை யின்மையின். "தீயால் நனைக்க" என்பது வாக்கியமன்று; யோக்கியதை யின்மையின். தீ நனைத்தல்கட் கொன்றற்கொன் றந்வய யோக்கியதையின்றே. அங்ஙனமன்றே, 'தீயால்' என்னு மூன்றுவதால் 'நனைத்தல்' ஆகிய காரியத்தைக் குறித்துக் கரணத்தன்மை தீக்குக் கூறப்பட்டது. தீ நனைத்தற் கரணமாம் பொருட்டு யோக்கியமன்று. ஆதலின் காரியகாரணபாவ (வடிவ) இலக்கணசம்பந்தத்தில் தீநனைத்தல்கட்கு யோக்கிய மின்மையின் 'தியால் நனைக்க' என்பது வாக்கியமன்று. இங்ஙனம். ஒவ்வொருயாமத்தின் ஒருங்குச்சரிக்கப்படாத "வெள்ளை-ஆவைக் - கோலாற் - கொணர்க" என்னும் பதங்கள் வாக்கியமல்ல. ஒன்றற்கொன் றவாய்நிலை யுளதாயினும், ஒன்றற்கொன் றந்வயயோக்கியதை யுளதாயினும், ஒன்றற்கொன் றண்மை யின்மையின். யாவை

அவாய்நிலையன, யோக்கியதையன, அண்மையன அவையே வாக்கியம். எங்ஙனம்? "சோதிட்டோமத்தாற் றுறக்கம்வேண்டியான் வேட்க" என்பது முதலியன, "ஆற்றங்கரையி லைந்துகனிக ளிருக்கின்றன", "ஆவைக்கொணர்தி" என்பன முதலிய பதங்கடாமே விளம்ப (தாமத) மின்றி யுச்சரிக்கப்பட்டன.

(கு - ரை.) சாப்திப்பிரமையின் கரணம் சப்தப்பிரமாணமெனப்படும்.

ஈண்டுப் பதஞானம் கரணமும், பதப்பொருள் ஞானம் வியாபாரமும், சாப்திப்பிரமை பலமுமாம். பதப்பொருள் ஞானம் பதஞானத்திற் றோன்றிச் சாப்திபிரமையைத் தோற்றுவித்தலின் வியாபாரமாயிற்றென்க.

சாப்திப்பிரமையாவது வாக்கியப் பொருளுணர்ச்சி. ஆப்தன், பிராந்தன் (திரிபுணர்ச்சியுடையவன்), வஞ்சகனென்னு மூவருள் ஆப்தன் வாக்கியமே பிரமாணமா மென்பார் 'ஆப்தவாக்கியஞ் சப்தம்' என்று கூறினர். தன்னிடத்துப் பிராந்தியின்றிப் பொருள்களை யுள்ளவாறுணர்ந்து விருப்பு வெறுப்பின்றி அவற்றையுணர்ந்தவாறே உரைப்பவன் ஆப்தனாவன். மயக்கத்தாற் பொருள்களை விபரீதமாக வுணர்ந்துரைப்பவன் பிராந்தனாவன். அறிந்தபொருள்களை விருப்பு வெறுப்புகளால் விபரீதமாக வுரைப்பவன் வஞ்சகனாவன்.

வாக்கியப்பொருளுணர்ச்சிக்கு அவாய்நிலை முதலிய மூன்றும் சககாரி (துணைக்காரணங்) களாம்.

அவாய்நிலை.

(1) எப்பதத்திற்கு எப்பதமின்றி அந்வயாநுபவத்தை (பொருள்கோளுணர்ச்சியை) யுண்டாக்குந்தன்மையில்லையோ அப்

பதத்திற்கு அப்பதத்தோடு (செவ்வையா யுச்சரிக்கப்படுந்தன்மை யால்) அவாய்நிலையாம். அஃதாவது ஒருபதம் தன்னை முடிப்ப தொருபதமில்லாவிடத்து முடிவு பெறாதுநிற்றலாம். இது ஸ்தூலக் கிரமமாம். சூக்குமமாய்நோக்குமிடத்து அவாய்நிலையென்பதுபுருஷ னது இச்சைக்காம். 'ஆ, புரவி, மகன், யானை' என்னும் பதங்கள் தம் முள் அவாய்நிலையின்றி யிருத்தலின் வாக்கியமன்றாம். இப்பதங்க ளுள் ஒவ்வொன்றும் தன்னோடு அன்வயித்துப் பொருள் முடித் தற்குரிய மற்றைப்பதத்தை வேண்டாதுநிற்றல் காண்க.

குடத்தைக்கொண்டுவா என்னும் வாக்கியத்தில் நீ யென்னும் காரக (கர்த்தா) பதத்திற்குக் கொண்டுவா என்னும் கிரியாபத மின்றிக் குடம்செயப்படுபொருளாமென்னும் அன்வயாநுபவத்தை யுண்டாக்குந் தன்மையின்மையின் காரக பதத்திற்குக் கிரியாபதத் துடன் அவாய்நிலையாம். இங்ஙனமே கிரியாபதத்திற்குக் காரக பதத்துடன் அவாய் நிலையாம். இவ்வாற்றால் அவாய்நிலை வாக்கியப் பொருளுணர்ச்சிக்குச் சககாரியாதல் காண்க.

யோக்கியதை (தகுதி).

(2) ஒரு பதார்த்தத்திற்கு (பதப்பொருளுக்கு) மற்றொரு பதார்த்தத்தோடுள்ள சம்பந்தம் யோக்கியதையாம். அஃதாவது பதப்பொருள்களுள் ஒன்றுடனொன்று பாதையின்றிச் சம்பந்தித் திருத்தலாம், யோக்கியதை யில்லாவிடத்து வாக்கியப்பொரு ளுணர்ச்சி யுண்டாகாது. 'தீயால் நனைக்க' என்னும் வாக்கியத்தில் தீயின்கணுள்ள கரண (ஏது) த்தன்மை வடிவமூன்றாம் வேற்றுமைப் பொருட்கு நனைத்தற்பதார்த்தத்தில் யோக்கியதையில்லை யாகலின் தீயால் என்னும் காரணத்தால் நனைத்தலென்னும் காரியமுண்டா காது; உண்டாகாமையின் தீயால் நனைக்க என்பது வாக்கியமாகா தாயிற்று. 'ஜலத்தால் நனைக்க' என்னும் வாக்கியத்தில் ஜலத்தின்க

ளுள்ள கரணத்தன்மை வடிவ மூன்றும் வேற்றுமைப் பொருட்கு நனைத்தற் பதார்த்தத்தில் யோக்கியதை யுண்மையின், ஜலத்தால் என்னும் காரணத்தால் நனைத்தலென்னும் காரிய முண்டாகும். உண்டாகின்றமையின் 'ஜலத்தால் நனைக்க' என்பது வாக்கியமாம்; இவ்வாற்றால் யோக்கியதை வாக்கியப்பொரு ளுணர்ச்சிக்குச் சககாரியாதல் காண்க.

அண்மை.

(3.) * பதங்களை யொருதொடராக விரையக்கூறுதல் அண்மையாம். அஃதாவது பதங்களின் மறைப்பின்மையாம். 'வெள்ளை ஆவைக் கோலாற் கொணர்க' என்னும் வாக்கியத்திலுள்ள பதங்களை யொருதொடராக விரையக்கூறாது யாமத்திற் கொவ்வொன்றாக வெள்ளை-ஆவைக்-கோலாற்-கொணர்க என்றுகூறின், இப்பதங்கள் தம்முள் ஒன்றற்கொன் றவாய்நிலையும் ஒன்றற்கொன் றந்வயயோக்கியதையு முளவாயினும் ஒன்றற்கொன் றண்மை யின்மையின் வாக்கியமாகாவாயின. இவ்வாற்றால் அண்மை வாக்கியப்பொருளுணர்ச்சிக்குச் சககாரியாதல் காண்க.

அவாய்நிலை முதலிய மூன்றுமேயன்றி வாக்கியப்பொருளுணர் விற்குத் தாற்பரியமும் சககாரியாம். அவ்வப் பொருளுணர்ச்சி

---

* அண்மைக் கிலக்கண மிங்ஙனங்கூறாது அன்வயித்தற்கு வேண்டப்படும் பதங்கள் இடையீடின்றியடுத்து நிற்றலென்றுகூறு வாருமுளர். "மறைப்பின்றிய சம்பந்தத்தினது பிரதியோகி ஞானம் ஆசக்தி (அண்மை). 'கிரியுண்ணப்பட்டது வன்னியுடைத்து தேவ தத்தனால்' என்புழி அன்வயஞான முண்டாகின்றதில்லை; ஆசக்தி யின்மையின். கிரி வன்னியுடைத்து, தேவதத்தனால் உண்ணப்பட் டது எனமாறின் அன்வயஞான முண்டு" என்று தருக்காமிர்தங் கூறுகின்றது.

விருப்பால் பதங்களை யுச்சரித்தல் தாற்பரியமாம். சைந்தவத்தைக் கொண்டுவா என்னும் வாக்கியம் போஜன சமயத்துக் கூறப்படின், குதிரையின் ஞானமுண்டாகாது உப்பின் ஞானமுண்டாகின்றது. அது பிரயாண சமயத்துக் கூறப்படின் உப்பின் ஞானமுண்டாகாது குதிரையின் ஞானமுண்டாகின்றது. தாற்பரியம் வாக்கியப் பொருளுணர்ச்சிக்குச் சககாரியாகாவிடின் சைந்தவத்தைக்கொண்டுவா என்னும் வாக்கியத்தினால் போஜனசமயத்துக் குதிரையின் ஞானமும், பிரயாணசமயத்து உப்பின்ஞானமு முண்டாதல் வேண்டும்; உண்டாகாமையின் தாற்பரியமும் சககாரியாம். [ஈண்டுக்கூறிய நால்வகைச் சககாரிகளுள் ஆசக்தி (அண்மை) சொரூபமாகச் சாப்தபோதத்திற் கேதுவாவதன்றி ஏனையவற்றின் ஞானம் போல் அதன் ஞானம் ஏதுவாவதன்றாம்].

சிந்துவினின்றுண்டாவது சைந்தவமெனப்படும். சிந்துவென்பது சமுத்திரத்திற்கும் ஒருதேசத்திற்கும் பெயராம். சமுத்திரத்தினின்றுண்டாகிய உப்பிற்கும், சிந்துதேசத்துண்டாகிய குதிரைக்கும் சைந்தவமென்னும் பெயருண்டென்க.

* சக்தியுடையது பதமாம். இப்பதமானது இப்பொருளையுணர்த்தவேண்டுமென்னும் இறைவனது சங்கேதம் (இச்சை) சக்தியாம். இந்தக் கடபதத்தைக் கேட்டகாலத்துயாவருக்கும் கலசரூபப் பொருளுணர்ச்சி யுண்டாதல் வேண்டுமென்பது இறைவனது சங்கேதமா (இச்சையா) யிருத்தலின் அதுவே சக்தியாம். அது முக்கியம் கௌணம் என்னும் பேதத்தா லிருவகைப்படும்.

---

* புத்திரனைப் பார்த்துப் பிதாவின் ஸ்மிருதி (சமபந்தம் பற்றி) யுண்டாதல் போன்று பதத்தைக் கேட்டலால் பதார்த்தத்தின் ஸ்மிருதி யுண்டாகின்றமையின் பதத்திற்கும் அர்த்தத்திற்கு

(1) எப்பதம் எப்பொருளை சக்திவிருத்தியா லுணர்த்துகின் றதோ அப்பதம் அப்பொருளில் முக்கியமாம். அஃது ஆவென்னும் வியக்தியை யுணர்த்துவது ஆவென்னும் பதமாதல் போல்வதாம்.

முள்ள சம்பந்தம் சக்தியாம். பதத்திற்கும் அர்த்தத்திற்கு முள்ள சம்பந்தமாகிய சக்தியின் ஞானம் எவனுக்கிருக்கின்றதோ அவ னுக்கே பதத்தின் ஞானத்தினல் பதார்த்தத்தின் ஸ்மிருதியுண்டா கும். மேற்கூறிய ஞானம் எவனுக்கில்லையோ அவனுக்குப் பதத்தின் ஞானத்தால்பதார்த்தத்தின் ஸ்மிருதியுண்டாகமாட்டாது. ஆதலால் விருத்தி (சக்தி) யோடுகூடிய பதத்தின் ஞானம் பதார்த்தத்தின் ஸ்மிருதிக்குக் காரணமாம். அந்தச்சக்தி வேறு பதார்த்தமாமெனை ஜைமினி நூலார் கூறுவர். வியாகரணமதத்திலும் பாதஞ்சல(யோக) மதத்திலும் வாச்சிய (பொருள்) வாசகத்தன்மைக்குக் காரணமான பதத்திற்கும் பொருளிற்கு முள்ள தாதாத்மியசம்பந்தம் சக்தியாம். வியாகரண நூலாருள் ஒரு சாரார் பதத்திலுள்ள அர்த்தத்தின் யோக்யதையைச் சக்தியென்பர். வேதாந்த நூலார் முழுவதும் தனதுகாரியத்தைச் செய்தலின் சாமர்த்தியமே சக்தியென்பர். பட் டர் பதத்திற்கு அர்த்தத்தோடுள்ள பேதாபேதவடிவ தாதாத்மியம் சக்தியென்பர். நியாயசூத்திரக் கர்த்தாவான கௌதமர் ஜாதி, ஆகி ருதி, வியக்திகளில் சகலபதங்களுக்கும் சக்தியுண்டென் றங்கீரித் திருக்கின்றனர். அவயவங்களின் சையோகம் ஆகிருதி யெனப் படும். சிலர் பதங்கட்கு ஜாதியின் கண்ணே சக்தியுண்டு; அர்த்த சித்தி வினைமுதலியவற்றால் பெறப்படுமென்பர். சிலர் சகலபதங் களுக்கும் வியக்திமாத்திரத்திற்கே சக்தியுண்டென்பர். பிரபாகர நூலார் ஒவ்வொருபதத்திலும் சக்தியுண்டு; ஆனல் அன்வயத்தில் வேறுசக்தி யுண்டென்பர். இவற்றின் விரிவை விருத்திப்பிரபாகரம் 3-வது பிரகாசத்திற் காண்க.

(2) எப்பதம் எப்பொருளை லட்சணு விருத்தியினுலுணர்த்து கின்றதோ அப்பதம் அப்பொருளில் கௌணமாம். அது கங்கையி லிடைச்சேரியென்புழிக் கங்கையென்னும்பதம் கரையையுணர்த்து தல்போல்வதாம் சக்திவிருத்தியாலறியப்படும் பதப்பொருள்சக்கிய மெனப்படும். சக்கியசம்பந்தம் லட்சணுவிருத்தி யெனப்படும். லட் சணுவிருத்தியாலறியப்படும் பொருள் லட்சியமெனப்படும். கங்கை யென்னும் பதத்தின் சக்கியம் (பொருள்) தேவநதியின் பிரவாக மாம்; அதற்குக் கரையோடுள்ள சம்பந்தம் லட்சணுவிருத்தியாம்; அதனுலறியப்படும் கரை லட்சியமாம். ஈண்டுக்கூறிய சம்பந்தம் சையோக சம்பந்தமாம். சக்தி, லட்சணை யென்னும் மிரண்டனுள் ஒன்ருந்தன்மை விருத்தி யெனப்படும்.

பதத்தின் சக்திவிருத்தியைக் கிரகித்தற் கேது வியவகாரம், உபதேசம், உவமானம், கோசம், வியாகரணம், விவரணம், சந்நிதா னம், வாக்கியசேஷமென எட்டாம்.

(1) வியவகாரம்.

ஏவும் முதியோன்கூறிய 'கடத்தைக்கொணர்க' என்னும் வாக் கியத்தைக்கேட்டு இயற்று முதியோன் கடங்கொண்டுவந்ததைக் கண்டு பக்கத்தினின்ற பாலன் கடத்தைக் கொணர்தலாகிய காரியம் கடத்தைக்கொணர்க என்னும் வாக்கியத்தா லேவப்பட்ட தென நிச்சயித்துப் பின்னும் 'கடத்தைக்கொண்டு செல்க' 'ஆடை யைக்கொண்டுவருக'என்றற்ருெடக்கத்து வாக்கியங்களில்முன்னும் பின்னும் உற்றுநோக்குதலாலே கடமுதலிய பதங்கட்குக் காரியத் தோடியைந்த கடப்பொருள் முதலியவற்றில் சக்தி கிரகித்துக் கொள்வன். இதுவே வியவகாரத்தால் பதசக்தி கிரகிக்கும் வகை யாம்.

(2.) உபதேசம் (ஆப்தவாக்கியம்).

குழந்தைகட்குக் கண்முதலியவுறுப்புக்களைக்காட்டி இதுகண், இது மூக்கு என அவ்வப்பதங்களால் அவ்வப்பொருள்களைத் தெரிவித்தல் போல்வதும் பிறவும் உபதேசமாம்.

(3.) உவமானம் (ஒப்புமையுணர்வு).

ஆவினையொக்கும் ஆமா என்னும் அதிதேசவாக்கியப்பொருள் நினைவோடுகூடி ஆவையொத்த பிண்டத்தைக் கண்டவிடத்து ஆமாவென்னும் பதத்திற்கு ஆமாவடிவ பிண்டத்தில் சக்தி கிரகிக்கப்படுகின்றது. ஒப்புமை யுணர்வால் இஃதாமா என ஆமா என்னும் பதத்திற்கு ஆமாப்பொருளில் சக்தி கிரகிக்கப்படுகின்றமை காண்க.

(4.) கோசம்.

பதப்பொருளுணர்த்து நூலாகிய நிகண்டு முதலியவை கோசமாம். அதனால் பதசக்திகிரகித்தல் "அந்திவண்ணன் காமாரி புராரி அந்தகாரி பர்க்கனென் றனந்தமீ சன்பெயர்" என்பதனாற் காண்க.

(5.) வியாகரணம்.

பகுதிவிகுதி முதலியவற்றின் பொருளையுணர்த்திப் பதங்களின் சொரூபமும் அவற்றின் பொருளு முணர்த்துநூல் வியாகரணமாம் (இலக்கண நூலாம்). அதனால் பதசக்திகிரகித்தல் "ஏஃகானுற்றேமகடூஉவறிசொல்" என்பதனாற் காண்க.

(6.) விவரணம் (வெளிப்படுத்துவது).

அதற்குச் சமானமாகிய பொருளையுடைய வேறுபதத்தினாலே அதன்பொருளைக்கூறுதல் விவரணம். அது கடமிருக்கிறதென்னுமிடத்துக் கலசமிருக்கின்றதென்று கூறுதலாம்.

(7.) சந்நிதானம் (அண்மை).

ஒருபதத்தை யுரிமையால் பொருள் குறிப்பிக்கின்ற பிறபதங்கள் அணுகிநிற்றல் சந்நிதானம். 'தேமாந்தருவிற் பிகமிருந்து சிந்தைகளிப்பக் கூவியது' என்னுமிடத்துப் பிகமென்பது குயிலென்னும் பொருளதென்பது தேமாந்தருவென்னும் சார்பாலும் சிந்தைகளிப்பக் கூவியதென்னும் வினையாலும் விளங்கியவாறறிக "வினைசார்பின மிட மேவி விளங்காப், பலபொரு ளொருசொற் பணிப்பர் சிறப்பெடுத்தே" என்று நன்னூற்கூறுவதறிக.

(8.) * வாக்கியசேஷம்.

ஒரு வாக்கியத்திலுள்ள பதத்தைச் சந்தேகமற நிச்சயித்தற்கு அநுகூலமாகிய குறைவாக்கியம் வாக்கிய சேஷமாம்.

"அரி யவ்விடத்துவந்தபோது அமரரியாவரும் வணங்கினர்" என்புழி அமரர்யாவரும் வணங்கினர் என்னும்குறைவாக்கியம் அரி பதப்பொருள் விஷ்ணுவெனத் துணிவித்தமைகாண்க.

இங்ஙனம் சக்திவிருத்தியுடையபதம் யோகம்(காரணம்), ரூடி (இடுகுறி), யோகரூடி (காரணவிடுகுறி), யௌகிகரூடி என நால்வகைத்தாம்.

யோகம்.

(1.) எப்பதத்தில் சமுதாய (பொது) சக்தியின்றி அவயவ சக்தியாலே பதார்த்த ஞானமுண்டாகின்றதோ அப்பதம் யோகபத

---

* வாக்கிய முடிதற் பொருட்டாயினும் பொருள் முடிதற் பொருட்டாயினும் எஞ்சிநின்ற பதங்களை வருவித்துரைத்தல் அத்தியாகாரமெனப்படும்; இது வாக்கியசேடமென்றும் சொல்லப்படும் என்பர் ஒருசாரார்.

மாம். பொன்னன் என்னும் பதம் சமுதாய சக்தியின்றிப் பொன் அன் என்னும் அவயவ (பகுதிவிகுதி) சக்தியாலே பொருளை யுணர்த்துவதறிக.

ரூடி.

(2.) எப்பதத்தில் அவயவ சக்தியின்றிச் சமுதாய சக்தியி னால் மாத்திரம் பதார்த்தஞான முண்டாகின்றதோ அப்பதம் ரூடி பதமாம். பரம் என்னும்பதம் அவயவ சக்தியின்றிச் சமுதாயசக்தி யினால் மாத்திரம் பொருளை யுணர்த்துவதறிக.

யோகரூடி.

(3.) எப்பதத்தில் சமுதாய சக்தியாலும் அவயவசக்தியாலும் பதார்த்த ஞானமுண்டாகின்றதோ அப்பதம் யோகரூடிபதமாம். • பங்கஜமென்னும் பதம் சமுதாயசக்தியால் தாமரையையும்,பங்கத் திற் (சேற்றிற்) சனித்ததென்னும் அவயவ சக்தியால் குவளை முதலியவற்றையு முணர்த்துவதறிக.

யௌகிகரூடி.

(4.) எப்பதத்தில் யோகத்தாலேவேறர்த்தத்தின் ஞானமும் ரூடியாலே வேறர்த்தத்தின் ஞானமுமுண்டாகின்றதோ அப்பதம் யௌகிகரூடிபதமாம். உத்பித் என்னும்பதம் யோகத்தாலே (பூமி யைப்) பிளந்துகொண்டுவரும் மரங் கொடி முதலியவற்றையும்

• "பங்கயமுதலிய சொற்களின் அவயவவாற்றல் காரணமும் பொதுவாற்றல் இடுகுறியும் விளக்குதலின் இன்னோரன்னவை காரண விடுகுறியென்க. நியதமாய்த் தாமரையுணர்வே நிகழ் தற்பொருட்டுப் பொதுவாற்றலும் வேண்டப்பட்டது; அல்லாக் கால் குவளை முதலியவற்றையும் பங்கய மெனல் வேண்டுதலின்", என்று தருக்கசங்கிரகவுரையிற் கூறப்பட்டிருப்பதறிக.

ரூடியாலே ஓர்யாகவிசேடத்தையு முணர்த்துவதறிக. யௌகிகரூடி பதத்தைத் தமிழில் பொதுமொழியென்று கொள்ளல் வேண்டும். பொதுமொழிக்குதாரணம் தாமரை வேங்கை என்றாற்போல்வன வாம். இவை யொருமொழிகளாய் நின்று ஒருபொருளையுணர்த் துவதன்றித் தொடர்மொழிகளாய் நின்று தாவுகின்ற மரை, வேகின்ற கையென வேறுபொருளையு முணர்த்துவதறிக.

அந்வய வுணர்ச்சியேனும் தாற்பரிய வுணர்ச்சியேனும் யாண்டு வாக்கியத்திற் பொருந்தவில்லையோ ஆண்டுலட்சணாவிருத்திகொள் ளப்படுகின்றது. வாக்கியத்தின் தாற்பரியவுணர்ச்சி பொருந்தா மையே லட்சணைக்கு முக்கிய காரணமாம். அது விட்டவிலக்கணை, விடாதவிலக்கணை, விட்டுவிடாதவிலக்கணை யென மூன்று வகைப் படும்.

விட்டவிலக்கணை.

(1) வாச்சியார்த்தத்திற்கு (சொற்பொருட்கு) அன்வயமி (கொண்டுகூட்டுதலி) ல்லாதவிடத்து விட்டவிலக்கணை கொள்ளப் படுகின்றது. கங்கையிலிடைச்சேரி யென்னுமிடத்துக் கங்கையென் னும் பதம் தனது சக்தியர்த்தமாகிய தேவநதியின் பிரவாகத்தை விட்டு அதன் சம்பந்தமுடைய கரையையுணர்த்துதலின் அதற்கு விட்டவிலக்கணையுளதென்க.

விடாதவிலக்கணை.

(2) வாச்சியார்த்தத்திற்கும் அன்வயமுள்ளவிடத்து விடாத விலக்கணை கொள்ளப்படுகின்றது. 'கவிகையாளர் செல்லுகின்றார்' என்னுமிடத்துக் கவிகையாளர் என்பது சக்தி அர்த்தமாகிய குடை யுடையவர்களையும் விடாது அவர்களுடன் சம்பந்தப்பட்டுக் குடை யின்றிச் செல்வர்களையும் உணர்த்துதலின் அதற்கு விடாதவிலக் கணையுளதென்க.

விட்டுவிடாத விலக்கணை.

(3) வாச்சியார்த்தத்தின் ஏகதேசத்தை (ஒருபகுதியை) விட்டு ஏகதேசத்திற்கு அன்வயமுள்ள விடத்து விட்டுவிடாதவிலக்கணை கொள்ளப்படுகின்றது. முன்பார்த்த பொருளையே வேறிடத்திற் பார்த்து 'அதுதானிது' என்னுமிடத்துச் சென்றகாலத்திலும் வேறிடத்திலுமுள்ள பொருள் அதுவென்னும் பதத்தின் பொருளும், நிகழ்காலத்திலும் சமீபதேசத்திலுமுள்ள பொருள் இதுவென்னும் பதத்தின் பொருளுமாம். ஆகவே 'அதுதானிது' என்னும் வாசகசமுதாயத்தின் பொருள் சென்ற காலத்துடனும் வேறிடத்துடனுங் கூடிய பொருளே நிகழ்காலத்துடனுஞ் சமீபதேசத்துடனும் கூடியிருக்கின்ற தென்பதாம். ஈண்டுச் சென்ற காலத்திற்கும், நிகழ்காலத்திற்கும், அன்னியதேசத்திற்கும், சமீபதேசத்திற்கும் விரோத மிருக்கின்றமையின், அது இது என்னு மிரண்டு பதங்களின் வாச்சியமா (பொருளா) கிய தேசகாலங்களை விட்டுப் பிண்டமாத்திரத்தில் இரண்டுபதங்கட்கும் விட்டுவிடாத விலக்கணையுளதென்க. [அதுதானிது என்பதில் ஒருபாகம் தேசகாலம், மற்றொருபாகம் பிண்டம். ஈண்டு விட்டபாகம் தேசகாலம்; விடாதபாகம் பிண்டமென்க.]

ஈண்டுக்கூறிய மூவகைலக்ஷணையுள் ஒவ்வொன்றும். i. பிரயோஜனவதி (பயனுடைய) லக்ஷணை ii. நிரூட (இடுகுறி) லக்ஷணை என்னும் பேதத்தா லிருவகைத்தாம்.

i. யாண்டுச் சக்தியுடைய பதத்தினை விட்டு இலாக்ஷணிக (லக்ஷணையையுடைய) சொற்பிரயோகத்தில் பிரயோசன முண்டாகின்றதோ ஆண்டு அது **பிரயோஜனவதி லக்ஷணை** யெனப்படும். கங்கையிலிடைச்சேரி என்று கூறின் கங்கையென்னும் பதத்திற்குக் கரையிற் பிரயோஜனவதி லக்ஷணையிருக்கின்றது. கரையிலிடைச்

சேரி என்று கூறின் கரையில் குளிர்ச்சி தூய்மை முதலியவற்றின் ஞான முண்டாவதில்லை. கங்கையென்னும் பதத்தாற் கரையையறி விக்கின் கங்கையின் தர்மமாகிய குளிர்ச்சி, புனிதத்தன்மை முதலி யன கரையிற்காணப்படுதலின் கங்கையென்னும் பதத்திற்குக் கரை யில் பிரயோஜனவதி லக்ஷணையுளதென்க.

ஈண்டுக் குளிர்ச்சி, புனிதத்தன்மை முதலியன சொல்லுணர்ச் சிக்கு விஷயமன்று; ஆனால் அநுமிதிக்கு விடயமாம். எங்ஙனம்? கங்கைக்கரை குளிர்ச்சி, புனிதத்தன்மை முதலியவற்றையுடைய தாம்; கங்கையென்னும் சொல்லா லறிவிக்கப்படுந்தன்மையால்; கங்கையைப்போல.

ii. பதத்திற்கு எப்பொருளில் சக்திவிருத்தியில்லையோ, சக் தியத்தை (சக்திவிருத்தியா லறியப்படும் பொருளை)ப் போல எப் பொருளினுணர்ச்சி எப்பதத்தா லெல்லாருக்கும் பிரசித்தமா யுண் டாகின்றதோ அப்பொருளில் அப்பதத்திற்குப் பிரயோசன சூனிய லக்ஷணையென்னும் நிருடலக்ஷணை யிருக்கின்றது. எங்ஙனம்? நீலஞ் சூடினளென்றற் றொடக்கத்து வாக்கியங்களைக் கேட்டவிடத்து நீல முதலிய பதங்களால் எல்லாப்புருஷர்கட்கும் குணியினுணர்ச்சி யுண்டாதல் மிகப்பிரசித்தம்; ஆதலால், நீல முதலிய பதங்கட்குக் குணியில் பிரயோஜன சூனிய லக்ஷணையிருத்தலின் நிருடலக்ஷணை யுண்டு. அது சக்திவிருத்திக்குச் சமானமாயிருக்கின்றது.

இவ்விரண்டினும் வேறாக ஐச்சிக லக்ஷணை யென்பதொன்று முண்டு. அது மிகுபிரசித்தமின்மையின் எழுதாதுவிடப்பட்டது.

பிறர்கூறும் i. கௌணிவிருத்தியும், ii. வியஞ்சனை விருத்தியும் லட்சணுவிருத்தியி லந்தர்க்கதமாம்.

i. பதத்தின் சக்கியார்த்தத்தில் எந்தக்குண மிருக்கின்றதோ அதனையுடைய அசக்கியார்த்தத்தில் பதத்தின் கௌணி விருத்தி சொல்லப்படுகின்றது. (சௌரியமுடைய ஒருவனை நோக்கிச்) சிங்கம் தேவதத்தனென்னு மிடத்துச் சிங்கபதத்தின் சக்கியத்தில் (பொருளில்) சூரத்தன்மை முதலிய குணங்களிருக்கின்றன. அவற்றை யுடையவன் சிங்கபதத்திற்குச் சக்கியமாகாத தேவதத்தன். அவனிடத்திற் சிங்கபதத்தின் கௌணி விருத்தியுளதென்பர். கௌணி விருத்தியாற் றோன்றும் பொருள் கௌணார்த்தமெனப்படும்.

கௌணிவிருத்தி லக்ஷிதலக்ஷணையி (இருமடியாகுபெயரி)ல் அடங்கும். வாச்சியார்த்தத்தின் பரம்பரைச் சம்பந்தம் லக்ஷிதலக்ஷணையாம். சிங்கம் தேவதத்தனென்புழிச் சிங்கத்தோடபின்னன் தேவதத்தன் என்னும் வாக்கியார்த்தம் பதங்களின் சக்திவிருத்தியாலுண்டாகின்றது. அது பொருந்தாது; ஏனெனின், (ஒருவகை யாகாரத்தோடும் தாடி மீசை முதலியவற்றோடுங் கூடிய மிருகவிசேடமாகிய சிங்கமென்னும்) பசுத்தன்மைச் சாதியும் மனிதத்தன்மைச் சாதியும் ஒன்றற்கொன்று விருத்தமாயிருத்தலின் ஒன்றனிடத்துச் சம்பவியா. ஆதலின் சிங்கமென்னும் சொல்லிற்குச் சூரத்தன்மை முதலிய தர்மமுடைய தேவதத்தனிடத்து லக்ஷணையாம். அப்புருஷனோடு சிங்கமாகிய சக்கியத்தி(பொருளி)ற்குச் சாக்ஷாத் சம்பந்த மின்மையின் கேவலலக்ஷணையோ இல்லை; ஆனால் சூரத்தன்மை முதலியவற்றோடு சிங்கபதத்தின் சக்கியத்திற்கு ஆதேயத்தன்மைச் சம்பந்தமிருக்கின்றது. சக்கிய சம்பந்தியாகிய சூரத்தன்மை முதலியவற்றிற்குத் தேவதத்தனிடத்து ஆசிரயத்தன்மைச் சம்பந்தமிருக்கின்றது. அச்சம்பந்தத்தா லறியப்படு

கின்றவன் தேவதத்தனாதலின் அவனிடத்துச் சிங்கபத வாச்சியார்த்தத்தின் பரம்பரைச் சம்பந்தமிருக்கின்றது. இருத்தலின், சிங்கபதத்திற்கு லக்ஷிதலக்ஷணையுளதென்க.

ii. சத்துருவின் வீட்டில் போஜனத்தின் பொருட்டுப் பிரவிர்த்தித்த ஒருவனை நோக்கி அவனுக்குப்பிரியனாகிய மற்றொருவன் விஷத்தைப் புசியென்று கூறுகின்றான். ஆண்டு விஷத்தைசசாப்பிடென்பது சக்திவிருத்தியால் வாக்கியத்தின் பொருளாம். கூறுவோனதுகருத்துப் போஜனத்தின் அபாவத்திலாம். போஜனத்தில் சக்தியுள்ள அப்பதத்திற்கு அபாவத்தில் சம்பந்த மின்மையால் இலக்கணையும் பொருந்தாது. ஆதலால் சத்துருவின் வீட்டி லுண்ணுதலின் நிவிர்த்தி வாக்கியத்தின் வியங்கிய (குறிப்பு)ப் பொருளாம். வியஞ்சனாவிருத்தியாற் றோன்றும் பொருள் வியங்கியப் பொருளெனப்படும் என்பர் .

வியஞ்சனா விருத்தி பெரும்பான்மையும் விட்டவிலக்கணையிலடங்கும். விஷத்தைப்புசியென்னுமிடத்து அது தனது வாச்சியார்த்தத்தை (விஷம் புசித்தலை) விட்டு அதனது பிரதியோகித்தன்மைச் சம்பந்தமுடைய சத்துருபோஜன நிவிர்த்தியை யுணர்த்துதலின் அதற்கு விட்டவிலக்கணையுளதென்க.

தருக்கசங்கிரகம் "குறிப்பும் (வியஞ்சனா விருத்தியும்) ஆற்றல் (சக்தி விருத்தி) இலக்கணை யென்னு மிவற்றுளடங்கும்" என்று கூறுவதறிக.

(ஆ). அற்றாயின், இதிற் பதங்க ளவாய்நிலையன அல்ல; மற்றென்னெனிற் பொருள்கள்; கனிமுதலிய ஆதேயங்கட்கே கரைமுதலிய ஆதார அவாய்நிலைமையால். ஆராயிற் பொருள்களும் அவாய்நிலையனவல்ல;

* அவாய்நிலை இச்சை வடிவாய சேதன தருமமாதலின்.

(கு-ரை.) கனிமுதலிய பொருள்கள் கரைமுதலிய விடங்களி னிருத்தலின் கரைமுதலியவை ஆதாரமாயும் கனிமுதலியவை ஆதேயமாயுமிருக்கின்றன. இருத்தலால் பொருள்கட்கே அவாய் நிலை யிருக்கின்றதேயன்றிப் பதங்களிடத்தில்லை; ஆராயுமிடத்து ஆண்டுமின்றிச் சேதன (புருஷ) தருமமாகிய இச்சையே அவாய் நிலையாம் என்பது ஆட்சேபம்.

---

* "அவாய்நிலை யென்பது இச்சைக்காம். அது சேதனத்துண் டாயினும் பதத்தினது அர்த்தத்திற்கு எவ்வளவுகாலம் வேறு பதார்த்தங்களுடன் அந்வய ஞானமுண்டாகவில்லையோ அவ்வளவு காலம் தனது அர்த்தத்தின் அந்வயத்தின் பொருட்டு வேறு பதத் தின் இச்சை சமானமாகத் தோன்றுகின்றது; அந்வய போதமுண் டாய பின்னர்த் தோற்றுவதில்லை. அஃது அவாய்நிலையெனப்படு கின்றது. எங்ஙனம்? "இவன் வருகின்றான் புத்திரன், ராஜனுடைய புருஷன், விலக்கப்படுக" என்புழி இவன்ராஜாவின் புத்திரன் வரு கின்றான் என்று ராஜபதார்த்தத்திற்குப் புத்திரபதார்த்தத்தோடு அந்வய போதமுண்டாகியபின் புருஷபதார்த்தத்தில் அந்வய போதத்திற்கேதுவான அவாய்நிலை ராஜபதார்த்தத்திலில்லையாக லின் 'ராஜனது புருஷன் விலக்கப்படுக' என்னும் ஞானமுண்டா கின்றதில்லை; ஆனால் 'புருஷன் விலக்கப்படுக' என்னும் ஞான முண்டாகின்றது. அவாய்நிலைஞானம் சாப்தபோதத்திற் கேது வாகாவிடின் 'ராஜாவின் புத்திரன் வருகின்றான், ராஜாவின் புருஷன் விலக்கப்படுக' என்னும் ஞானமுண்டாதல் வேண்டும். ஆதலால் அவாய்நிலைஞானம் சாப்தபோதத்திற் கேதுவாம்" என்று விருத்திரத்நாவலி கூறுகின்றது.

(ச.) ஆஃகாங்க்ஷை(தொக்கும்). பொருள்கள் தம்பதங்கள் (அர்த்தங்கள் தமக்குரிய பதங்களைக்) கேட்பானுக் கொன்றற் கொன்று விடயமான அவாய்நிலையைத் தோற்றுவித்தலின், அவாய்நிலையனவெனக் கூறப் படும். அதன் (பொருள்) வழியா லதனை (பொருளை)க் கூறும் பதங்களும் அவாய்நிலையனவென உபசரிக் கப்படும். அல்லது, பதங்களே பொருளைப் பிரதிபா தித்து(கூறி)க் கொண்டு பொருள் வேறுபாட்டு விடய அவாய்நிலையைத் தோற்றுவிப்பன வென்னு முப சாரத்தால் அவாய்நிலையன வென்றுமாம். இங்ஙனம் பொருள்கள் அவாய்நிலையன; ஒன்றற்கொன்று அங் வயயோக்கிய முடையனவுமாம். அது(பொருள்)வழி யாற் பதங்களும் அவாய்நிலையன யோக்கியமுடையன வென் றுபசரிக்கப்படும். அண்மை பதங்களொருவ னுனே விளம்ப (தாமத) மின்றி உச்சரிக்கப்படுதல்; அதுவுஞ் சாட்சாதே (நேரே) பதங்களினுண்டு. பொருள் வழியான (அர்த்த மூலமாய)ன்று. ஆதலின் இப்பொருளுண்டாயிற்று. பொருள் கூறும் வழியாற் கேட்பானுக்குப் பதவேறுபாட்டுவிடய அவாய் நிலையையாயினும் பொருள்வேறுபாட்டு விடய அவாய்நிலையையாயினுந் தோற்றுவிக்கின்ற விளங்கும் ஒன்றற்கொன்று அங்வயமான யோக்கியப்பொருளைக் கூறுகின்ற அண்மையுடைய பதங்களது கூட்டம்

வாக்கியம்; * பதமு மெழுத்துக்கூட்டம். † ஈண்டுக் கூட்டம் ஒருஞான விடயமாதல்.

இங்ஙனம் அதின் முறையுடையவாகிய எழுத்துக் கட்கு விரையக்கெடுதல் உண்மையின் ஒருங்கே அநேக எழுத்தநுபவ முண்டாகாமையின் முதன் முதலெழுத் துக்களை அநுபவித்து ஈற்றெழுத்துக் கேட்குங்கால் முதன் முதலெழுத் தநுபவத்தாற்பிறந்த வாசனை யோடுகூடிய ஈற்றெழுத்தோடு பொருந்திய பதத் திற்கமைந்த பொருட் ‡ சங்கேதங் கிரகித்தலால்

---

* பதமும் எழுத்துக்கூட்ட மென்றாராயினும் சிறுபான்மை ஓரெழுத்தே பதமாதலு முண்டு. "எழுத்தே தனித்துந் தொடர்ந் தும் பொருடரின் பதமாம்" என்று நன்னூல் கூறுவதறிக.

† "சொல்லென்றது எழுத்தினாக்கப்பட்டு இருதிணைப் பொருட்டன்மையும்ஒருவ னுணர்தற்குக்கருவியாம்ஓசையை. ஈண்டு ஆக்கப்படுதலென்றது ஒருசொற்கூறுமிடத்து ஓரெழுத்துப்போக ஓரெழுத்துக் கூறுவதல்லது ஒருசொல்லாக முடியும் எழுத்தெல் லாம் சேரக்கூறலாகாமையின் அவ்வெழுத்துக்கள் கூறிய அடைவே போயிற்றேனும் கேட்போர் கருத்தின்கண் ஒருதொடராய் நிலை பெற்று நின்று பொருளை யறிவுறுத்தலை. ஆயின் ஓரெழுத்தொரு மொழிக்கு ஆக்குதலின்றாலெனின், ஓரெழுத்தொருமொழியைக் கூறியக்கால் அதுவுஞ் செவிப்புலனாய்க் கருத்தின்கண் நிகழ்ந்து பின்னர்ப் பொருளையாக்குதலின் அதுவும் ஆக்குந்தன்மையுடைய தாயிற்று" என்று நச்சினார்க்கினியர் "உயர்திணை யென்மனார்" என் னுஞ் தொல்காப்பியச் சூத்திரவுரையிற் கூறுவதறிக.

‡ சங்கேதம்—சக்தி.

*அளிக்கப்பட்ட செவிப்புலனுல் ஒருங்கே சதசத்தா (இருப்பது இராததா)ன பலவெழுத்தையகப்படுக்கும் பதவுணர்வு தோன்றுந் துணைவலியால் பிரத்யபி ஞாநம் போல (அந்தயானையிது என்னும் பிரத்ய பிஞ்ஞாரூபப்பிரத்தியட்சம்போல)ப் †பிரத்யபிஞாநக் காட்சியில் அதிதமா (மீறியதா)யு முன்னரவத்தை (சம்ஸ்காரம்-வாசனை) தோன்றுமே. அன்றோ (அதனு லல்லவா) பின்னர் முதன்முதற் பதாநுபவத்தாற் றோன்றிய வாசனையோடு கூடிய ஈற்றுப் பதவிடயச் செவிப்புலனுற் சதசத்தான பலபதத்தை அகப்படுக் கும் வாக்கிய ஞாநமுண்டாம். இவ்வாக்கியம், ஆப்த மகனுற் கூறப்பட்டுச் சப்தப்பிரமாணமாம். அதற்குப் பலம் வாக்கியப்பொருளுணர்வு. இச்சத்தப் பிரமாண

---

* அளிக்கப்பட்ட—சகாயத்தையடைந்த. சகாயம்-கேட்குஞ் சாமர்த்தியம்.

† பிரத்யபிஞாநக் காட்சியில்-இஃது அந்தப்பதம் என்னும் பிரத்தியபிஞ்ஞாரூபப் பிரத்தியட்சத்தில். "இஃதந்தக்ககரம் என முன்னதனுணர்வே (பிரத்தியபிஞ்சாரூபப் பிரத்தியட்சமே) நிகழ் தலின் எழுத்துக்களெல்லாம் நித்தமாதல் பெற்றும். பெறவே வேதம் அநாதியென்றுற்படுமிழுக்கென்னை யெனின், அற்றன்று; ககரம் தோன்றிற்று, ககரமழிந்தது என்னுமுணர்வு நிகழ்தலான் எழுத்துக்களெல்லா மநித்தமாதல் பெறப்பட்டமையின். 'இஃதந்தக் ககரம்' என முன்னதனுணர்வுநிகழ்தல் 'இஃதந்த விளக்கின்சுடர்' என்பதுபோல அதன் சாதிபற்றியென்க" என்று தருக்கசங்கிரகங் கூறுவதறிக.

இலக்கணம் உலகினும் வேதத்தினும் பொது. உலகத்தின் இது விசேடம். யாவனுயினு மொருவ னுத்தனுவான்; அனைவருமல்லர். ஆதலின், உலகவாக்கியஞ் சிறிதேபிரமாணம்;வேதத்திற்பரமாப்தனுன ஸ்ரீமகேசனுற் கூறப்பட்ட வாக்கியமெல்லாம் பிரமாணம்; எல்லாம் ஆப்தவாக்கிய மாதலின்.

ஒருசாரார் வேதம் காரியமாயின், அது மூன்றுகணந்தானிருத்தல் வேண்டுமென்பாரைமறுக்க, எவ்வேதம் தேவதத்தனுல் அத்தியயனம் செய்யப்பட்டதோ அவ்வேதம் என்னுல் அத்தியயனம் செய்யப்பட்டதென்னும் பின்னிகழு முணர்ச்சிக்கு விரோதமுண்டாகின்றமையின் அது க்ஷணிகமென்ப தொவ்வாது. இதனுல் ககர முதலிய வர்ணங்களும் க்ஷணிகமன்று; அந்தக் ககரந்தானிதுவென்னும் பின்னிகழுமுணர்ச்சிக்கு விரோத முண்டாகின்றமையின். ஆகவே எழுத்து, பதம், வாக்கியமென்னு மிவற்றின் சமுதாயமாகிய வேதத்திற்கு ஆகாய முதலியனபோன்று சிருஷ்டி காலத்திலுண்டாகிச் சங்காரகாலத்தில் நாசமேயன்றி இடையில் எழுத்துக்களுக் குற்பத்தி நாசமில்லை. (இடையில் எழுத்துக்களுக் குற்பத்தியுண்டென்றங்கீகரிக்கின்) பலககரங்களைக் கற்பித்தல் வேண்டும். அது கௌரவமாம். ஆனல் உச்சரிக்கப்படாமலுள்ளபோது எழுத்துக்கள் தோன்றுதலின்று; உச்சாரணமாகிய வியஞ்சகமி (பிரகாசம் பண்ணிவைத்தலி) ன்மையின்; அந்தகாரத்தில் கடம் தோன்றாமைபோல. ஆதலால் யாதொரு விரோதமுமின்று. ககரமுண்டாயிற்றென்றற்றொடக்கத்து ஞானம் அந்தக்ககரந்தானிது வென்னும் பின்னிகழு முணர்ச்சிக்கு விரோதமா யிருத்தலின் அஃதப்பிரமாணமாம்; அல்லது, எழுத்துக்களின் பிரகாசத்தை யுண்டுபண்ணும் துவனி (கண்டத்தொனி) யிலுள்ள உற்பத்தியானது பிரகா

(கு-ரை.) ஒன்றன்றன்மையை மற்றொன்றன் மேலேற்றிக் கூறுவது உபசாரமெனப்படும். கேட்பவனுக்கு ஒன்றற்கொன்றுள்ள அவாய்நிலை (இச்சை)யைத் தோற்றுவிக்கும் பொருள்களின் றன்மையை அப்பொருளையுணர்த்தும் பதங்களின் மேலேற்றிக் கூறினமைகாண்க. அல்லது என்றோருபசாரங் கூறுமிடத்தும் பதங்களே பொருளைக்கூறுவதன் வாயிலாக அதன் வேற்றுமை விஷய அவாய்நிலையைத் தோற்றுவித்தலின் அது காரணமாகப்பதங்களும் அவாய்நிலையனவென் றுபசாரமாக கூறப்படுகின்றன வென்றறிக. அவாய்நிலையுடைய பொருள்களே அன்வய (கொண்டுகூட்டுதல்) யோக்கிய முடையனவா யிருத்தலின் அப்பொருள்களின் வாயிலாகப் பதங்களும் அவாய் நிலையுடையன யோக்கியமுடையன வென் றுபசாரத்தாற் கூறப்படுகின்றன வென்பதாம். ஈண்டும் பொருள்களின் அவாய்நிலையும் தகுதியும் பதங்களின்மே லேற்றிக் கூறப்பட்டமை காண்க.

அண்மை சொல்லின்கணன்றிப் பொருளின்கணின்றென்பது முன்னர்க்கூறிய வாற்றால் நன்குவிளங்கும். அவாய்நிலை, யோக்கியதை, அண்மையுடைய பதங்களின் கூட்டமாகிய வாக்கியம் விதி, நிஷேதம், அர்த்தவாதமென மூவகைத்தாம். அவற்றுள், பிரவிர்த்திபரமான வாக்கியம் விதிவாக்கியமாம். அது சோதிட்டோமத்தாற் றுறக்கம் வேண்டியான் வேட்க; ஓதனகாமன் தண்டுலத்தை (அரிசியை)ப் பாகஞ்செய்க என்றாற்போல்வனவாம். நிவிர்த்திபரமான வாக்கியம் நிஷேத வாக்கியமாம். அது கலஞ்சம் (கஞ்சா) தின்னற்க என்றாற்போல்வதாம். இவ்விரண்டினும் வேறாயவாக்கியம் அர்த்தவாதமாம். ஸ்துதி நிந்தையென்னுமிரண்டனுள் ஒன்றை

சத்தையடைவதான அட்சர விஷயமாகத் தோன்றுவதால் அப்பிரமாணமாம். ஆதலால் வேதம் க்ஷணிகமன்று என்பர்.

யறிவிக்கும் வாக்கியம் அர்த்தவாதமெனப்படும். அஃது அநுவாதம், குணவாதம், பூதார்த்தவாதமென மூவகைத்தாம்.

(i) அன்னியப் பிரமாணத்தாற் சித்தித்த அர்த்தத்தைக் கூறும் வாக்கியம்|அநுவாதமாம். அது 'பனிக்குமருந்து அக்கினி' என்றாற்போல்வதாம்.

(ii) அன்னியப் பிரமாணத்திற்கு விருத்தமாகிய விதேய (அமைக்கப்பட்டதாய) அர்த்தத்தைக் குணவாயிலாகத் துதிக்கும் வாக்கியம் குணவாதமாம். அது பிரகாசமாகிய குணத்தின் சமத் தன்மையால் துதிக்கும் 'யூபம் (யக்கியகம்பம்) ஆதித்தன்' என்னும் வாக்கியம் போல்வதாம்.

(iii) சுவார்த்தத்திற் (தனதர்த்தத்திற்) பிரமாண முள்ள தாய் இலக்கணையினாலே விதேய அர்த்தத்தின் மேன்மையை யறிவிக்கும் வாக்கியம் பூதார்த்தவாதமாம். அது 'வஜ்ஜிர அஸ்தன் புரந்தரன்' என்றாற்போல்வதாம்.

இவ்வாக்கியங்களியாவும் சித்தபரம், காரியபரமென்னும் வாக்கிய மிரண்டனுள் அந்தர்க்கதமாம். சித்தித்த (பெறப்பட்ட) அர்த்தத்தைக் கூறும்வாக்கியம் சித்தபரவாக்கியம். அது வஜ்ஜிர அஸ்தன்புரந்தரன், மலர்ந்ததாமரைக்கண் வண்டுளது என்றாற் போல்வனவாம். செய்யவேண்டுவதைக் கூறும் வாக்கியம் காரிய பரவாக்கியம். அது சுவர்க்ககாமன் ஜோதிஷ்டோமத்தால் யஜிக்க ஓதனகாமன் தண்டுலத்தைப் பாகஞ்செய்க என்றாற்போல்வன வாம். வேதவாக்கியம் உலகவாக்கியமென்னு மிரண்டனுள் காரிய பரவாக்கியத்திற்குக் கூறிய உதாரணமிரண்டனுள் முன்னது வேத வாக்கியமும், பின்னது உலக வாக்கியமுமாம். ஏனையவற்றையு மிங்ஙனமே யுய்த்துணர்ந்து கொள்க.

"* கண்ட முதலிய விடங்களில் வாயுவின் சையோகத்தால் உண்டாகும் வர்ண (எழுத்து) வடிவசத்தமெதுவோ அதன் சாட்சாத்காரம் (பிரத்தியட்சம்) சிரவணத்தா லுண்டாகின்றதில்லை. ஆனால், வர்ணரூபசத்தத்தால் வேறுசத்த முண்டாய் அதன் சாட்சாத்காரமுண்டாகின்றது. இவ்வாற்ருன் அந்நியசத்தமின்றிய ஒரு சத்தம் அப்பிரசித்தமாம். ஆனால் இம்மதத்தில் வர்ணங்களின் சமுதாய வடிவமான பதத்திற்கு ஏககாலத்திற் சம்பவமில்லையாகலின் பதத்தின் சாட்சாத்காரமோ சம்பவியாது. என்றாலும், ஒவ்வொரு எழுத்தின் சாட்சாத்காரத்தால் எல்லாவெழுத்துக்களையும் விஷயஞ்செய்யும் ஒருஸ்மிருதியுண்டாகின்றது. ஸ்மரிக்க(நினைக்க)ப்பட்ட பதத்தால் பதார்த்தத்தின் ஸ்மிருதியுண்டாகின்றது. அதனாற்சாப்தபோத முண்டாகின்றது. அல்லது முன் முன் வர்ணங்களின் அனுபவத்தால் (பிரத்தியட்சத்தால்) சம்ஸ்காரமுண்டாகின்றது. சம்ஸ்காரத்தோடு கூடிய அந்திய (ஈற்று) வர்ணத்தின் அனுபவமே பதத்தின் அனுபவமெனப்படுகின்றது. அதனால் பதார்த்தத்தின் ஸ்மிருதியுண்டாகின்றது. அதனால் சாப்தபோத முண்டாகின்றது. இது நியாயமதம்" என்று விருத்திப்பிரபாகரம் மூன்றாவது பிரகாசத்திற் கூறுவதால் வாக்கியப்பொருள் ஞான முண்டாகும்வகை நன்குவிளங்கும்.

சத்துவம், ரஜசு, தமசு என்னு மூக்குணங்களும் மாறிமாறி வருதல் யாவர்க்கு மிருத்தலின் உயர்ந்தபொருள் இழிந்தார்வாயினும், இழிந்தபொருள் உயர்ந்தார் வாயினும், உறுதிப்பொருள் பகைவர்வாயினும், கெடுபொருள் சிநேகர் வாயினும் ஒவ்வோரிடத்துக் கேட்கப்படுவதாயிருத்தலின் 'உலகவாக்கியம் சிறிதே பிரமாணம்' என்று கூறப்பட்டது.

---

* கண்டம், மேல்வாய், பல், மூக்கு, உதடு, நாநுனி, உரம், சிரம் என்னும் எட்டுறுப்புக்கள் இடங்களாம்.

பரமாப்தனான மகேச (ஈச)ன் சர்வஞ்ஞனாயிருத்தலின் அவனிடத்து எவ்விஷயத்திலும் ஐயந்திரிபில்லை; இல்லாமையின் அவனாற்கூறப்பட்ட வேதவாக்கியமியாவும் பிரமாணங்களேயாம். *பிறராற் கூறப்பட்ட நூல்களுள் வேதத்திற்குவிரோதமாகாதுள்ளவையே பிரமாணமாம். மீமாம்சகர் வேதத்திற்குக் கர்த்தாவின்று; அது நித்தியமென்று கூறுவர். வேதாந்திகள் வேதம்நித்தியமன்று; ஆனல் அது முன்சர்க்கத்தின் (படைப்பின்) கிரமத்தை நினைத்துப் பின் சர்க்கத்தில் முன் கற்பத்திற்குச் சமானக்கிரமமுடையதாக ஈசனல் கூறப்படுகின்றமையின் அதன் கிரமம் அநாதியென்பர்.

51. நான்கு பிரமாணமும் வர்ணிக்க (கூற)ப் பட்டன. இவற்றின் வேறாயின பிரமாணமல்ல; பிரமாண மாயினும் ஈண்டேயடங்குதலின்.

(கு-ரை.) பிரமாணம் நான்கெனக் கூறுவதன் காரணம் வருமாறு:—சார்வாகர் பிரத்தியட்சமொன்றே பிரமாணமாமென்பர். பிரத்தியட்சத்தையும் அனுமானத்தையு மங்கீகரித்துள்ள பௌத்தரும் வைசேடிகரும் பிரத்தியட்சப் பிரமாணத்தைமாத்திர மங்கிகரிக்குமிடத்துத் திருப்தியை விரும்பும் புருஷனுக்குப் போஜனத்திற் பிரவிர்த்தியுண்டாதல் கூடாது. சாப்பிடாத போஜனத்தில் திருப்தியுண்டாகு மென்பதற்குப் பிரத்தியட்சப்பிரமாணத்தினல் யாதொரு பிரத்தியட்ச ஞானமுமின்மை. சாப்பிட்ட போஜனத்தினனுபவம் சாப்பிடாதபோஜனத்திலும் அனுமானத்தின லுண்டாகின்றமையின் அனுமானப் பிரமாணத்தையு மங்கிகரிக்கவேண்டுமென்பர். அவ்விரண்டுடன் சப்தத்தையு மங்கீகரித்துள்ள சாங்கியர் சைவர் முதலியோர் சப்தப்பிரமாணத்தை யங்கிகரிக்காவிடத்

* பிறரென்றது விஷ்ணுவின் அவதாரமான புத்தர் முதலியோரை.

தத் தேசாந்தரத்தில் உன் தகப்பனிறந்துபோனானென்று பிறர் கூறக்கேட்டவனுக்குத் தன் தகப்பனிறந்துபோனானென்னும் ஞானமுண்டாதல் கூடாது. உண்டாதலே பிரசித்தமாயிருக்கின்றது. இது பிரத்தியட்சத்தாலும் அனுமானத்தாலு முண்டானதன்மையின் * சப்தப்பிரமாணத்தையு மங்கீகரித்தல்வேண்டுமென்பர். இம்மூன்றுடன் ‡ உவமானத்தையும் அங்கீகரித்துள்ள நையாயிகர் ஆமாவினைப் பாராத ஒருவன் வனசரனால் ஆமா ஆவையொக்குமெனக் கேள்விப்பட்ட பின்னர் வனத்திற்குச்சென்று ஆமாவைக் காணும்போது அவ்வனசரன்கூறிய வாக்கியமும் அதன்பொருளும் நினைவில் வருகின்றன. அந்த ஸ்மரணைக்குப் பின்னர் அவனுக்கு இஃதாமா என்னும் ஞானமுண்டாகின்றது. உவமானப் பிரமாணத்தையங்கீகரிக்காவிடத்து இந்த ஞானமுண்டாதல் கூடாது. ஆதலால் உவமானப்பிரமாணத்தையு மங்கீகரித்தல்வேண்டுமென்பர். இங்ஙனங் கூறியதால் பிரத்தியட்ச முதலிய நான்கு பிரமாணத்தையு மவசிய மங்கீகரித்தல்வேண்டுமென்பது பெறப்பட்டது.

---

* "இப்பதங்கள் நினைப்பிக்கப்படும் பொருட்சம்பந்தமுடையன; அவாய்நிலை முதலியவற்றையுடைய சொற்றிரட்சியாகலின்; நம்மனோர் வாக்கியம்போலுமென்று மனுமானத்தானே யாண்டும் உணர்வு நிகழ்தலின் சத்தம் வேறு பிரமாணமன்றெனின், அற்றன்று; சத்தவுணர்வு அனுமிதியுணர்விற்கு வேறாய இலக்கணமுடையதென்பதற்குச் சொல்லாலறிந்தேனென்னும் பின்னிகழுமுணர்வே (அனுவியவசாயஞானமே) சான்றாதல் எல்லார்க்குமொப்ப முடிந்ததாகலின்" என்று தருக்கசங்கிரகம் கூறுகின்றது.

‡ உவமானம் அனுமானத்தி லந்தர்க்கதமாமென்பவர் எனது ஆ இவ்வாமாவிற் கொத்திருக்கின்றது; இதன்கணுள்ள ஒப்புமைக்குக் (கோ) பிரதியோகியா யிருத்தலின்; எது எதனிடத்துள்ள

மீமாம்சகருள் ஏகதேசியான பிரபாகரர் அருத்தாபத்திப் பிரமாணத்தையு மங்கீகரித்திருக்கின்றனர். அது கேவலவியதிரேகி யனுமானத்தி லந்தர்க்கதமாம். மீமாம்சகருள் மற்றெரு ஏகதேசியான பட்டரும் வேதாந்திகளும் மேற்கூறிய ஐந்துபிரமாணங்களுடன் அனுபலத்திப் பிரமாணத்தையு மங்கீகரித்திருக்கின்றனர். அது பிரத்தியட்சப் பிரமாணத்தி லந்தர்க்கதமாம்.

பௌராணிகர் மேற் கூறிய ஆறுபிரமாணங்களுடன் பரிசேஷம் (ஒழிவு), சம்பவம் (உண்மை), ஐதிகம் (வழக்கம்), சுபாவம் (இயல்பு) என்னும் நான்கு பிரமாணங்களையும் அங்கீகரித்திருக்கின்றனர். பரிசேஷமும், சம்பவமும், சுபாவமும் அனுமானத்தி லந்தர்க்கதமாம்; ஐதிகம் சப்தத்தி லந்தர்க்கதமாம். சுபாவம் பிரத்தியட்சத்தி லடங்குமென்பாரு முளர்.

பரிசேஷ முதலிய நான்கிற்கும் செய்யுள் வருமாறு:—

(i.) சீராரொழிபென்று செப்பப்படுவது திண்புவிமேற், போராடிநின்று பொருதாரிருவர்தம் போர்க்களத்துப், பாராரிராகவன் வென்றுனெனிற்றன் பரிசழிந்து, நேராமிராவணன் றேற்ற சொல்லாகி நிகழ்வதுவே.

ஒப்புமைக்குப் பிரதியோகியா யிருக்கின்றதோ அஃததற்கொப்பா யிருக்கின்றது; எங்ஙனம்? மைத்திரனிடத்துள்ள ஒப்புமைக்குப் பிரதியோகி சைத்திரன்; அவன் மைத்திரனுக் கொப்பாயிருத்தலின் என்று கூறுவர்.

மலைதீயுடைத்து; புகையுடைமையின்; அடுக்களைபோல என்னும் அனுமானத்தில் உவமைக்குரிய உறுப்புக்கள் நான்கும் அடங்குவது அடுக்களைத்தீ உவமானமாயும், மலைத்தீ உவமேயமாயும், போல என்பது உவமவுருபாயும், புகையுடைமை சாதாரண தருமமாயுமிருத்தலானுணர்க என்பர் இக்காலத்தொருவர்.

(ii.) நயக்கரவுண்மையென காவலர்கடுணிந்துரைப்ப, தியற்கைப்பொருளினை யிற்றெனலாமிது தானுரைக்கின், வியக்குற்ற கால்சவிக்கும் தீச்சுடு வியனீர்குளிரும், வயக்குற்ற மண்வலிதென்று பட்டாங்கு வழங்குவதே.

(iii) கொன்பயில்வேலைக் கடல்புடைசூழுங் குவலயத்தோ, ரன்புடனுலி லலகையுண்டென்பர்க ளென்பதுவு, மின்பயில் புற்றில் விடநாகமுண்டென்ப ரென்பதுவு, மென்பர்க ணுலல ரென்பதுமைதிக மென்பர்களே.

(iv.) மாமேலிருந்தொரு கோருவெனிற்சுள்ளிக்கோறரலுந், சோமேலிருந்தொரு கோருவெனிற்ற வேதுணிந்து:பூமேவுகண்ணழுத் தங்கோல் கொடுத்தலும் பூதலத்தே, நாமே வியல்பென்றுகூ றுவர்நல்லசொன் னுவலரே.

கைமுதலியன அசைத்தலாகிய சேஷ்டையும் சத்தப்பிரமாணத்தின் வாயிலாகவாவது அநுமானப் பிரமாணத்தின்வாயிலாகவாவது வியவகாரத்திற் கேதுவாயிருத்தலின் அது வேறு பிரமாணமன்றாம்.

5. அருத்தாபத்தி.—ASSUMPTION.

52. (ஆ) அற்றாயின், அருத்தாபத்தியும் வேறுபிரமாணமாகவுண்டு. அநுபபத்தியமா (பொருந்தாமையா)ன அர்த்தங் காணப்படுவதால் அதற்கு உபபாதக (சம்பாதக) மான வேறு அர்த்தங் கற்பிப்பது அருத்தாபத்தியாம். அங்ஙனமன்றே, பரியனான தேவதத்தன் பகலுண்ணா னென்று கண்டாயினும் கேட்டாயினும் இரவுண்டல் கற்பிக்கப்படும். பகலுண்ணனது

பருமை இரவுண்டலன்றிக் கூடாது; ஆதலின் பருமை வேறொன்றுலாகாமை தோற்றுவித்த அருத்தாபத்தியே இரவுண்டலிற் பிரமாணம். அது காட்சி முதலியவற்றின் வேறு; இரவுண்டல் காட்சிமுதலிய வற்றிற்கு விடயமாகாமையின்.

(கு-ரை.) அருத்தாபத்திப் பிரமையின் கரணம் அருத்தாபத்திப் பிரமாணமாம். உபபாதக கற்பனைக்கேதுவான உபபாத்திய ஞானம் அர்த்தாபத்திப் பிரமாணமாம். உபபாதக ஞானம் அருத்தாபத்திப் பிரமையாம். உபபாதகம் சம்பாதகமென்பன ஒரு பொருட் கிளவி; உபபாத்தியம் சம்பாத்திய மென்பனவும் அவ்வாறே. யாதின்றி யாது சம்பவியாதோ அதற்கு அது உபபாத்தியமாம். எங்ஙனம்? இராப்போஜனமின்றிப் பகற்பொழுதுணவொழிந்த புருஷனிடத்துப் பருமை சம்பவியாமையின் பருமை இராப்போஜனத்திற்கு உபபாத்தியமாம். யாதொன்றன் அபாவத்தால் யாதொன்றன் அபாவமுளதாகின்றதோ அது அதன் உபபாதகமாம். எங்ஙனம்? இராப்போஜனத்தின் அபாவத்தால் பகற்பொழுதுண்ணுதானுக்குப் பருமை சம்பவியாமையின் இராப்போஜனம் பருமையின் உபபாதகமாம். இதனுல் உபபாத்திய அனுபபத்தி (பருமை பொருந்தாமை)யின் ஞானத்தால் உபபாதக கற்பனை (இராப்போஜனத்தைக் கற்பித்தல்) அருத்தாபத்திப் பிரமையாம். உபபாதககற்பனைக் கேதுவான உபபாத்திய அனுபபத்தியின் ஞானம் அர்த்தாபத்திப் பிரமாணமாம். அர்த்தாபத்தி யென்பது அர்த்தஸ்ய—ஆபத்தி யெனப் பிரிபட்டு நிற்கும். அதன் பொருள் அர்த்தத்தின் கற்பனை யென்பது. அர்த்தம்-உபபாதக வஸ்து; ஆபத்தி-கற்பித்தல்.

பகற்பொழுதுண்ணுப் புருஷன் பருத்திருக்கிறுனென்னுமிடத்துப் பருமையிரவுண்டலால் பொருந்துமன்றி வேறொருற்றுற்

பொருந்ாதென்பது இதன் திரண்டபொருள். ஈண்டுப் பருமை யின் பொருந்தாமையினால் இரவுண்டல் கற்பிக்கப்படுதலின் பருமையின் பொருந்தாமையின் ஞானம் அர்த்தாபத்திப் பிரமாண மும், அதனால் இரவுண்டலைக்கற்பிக்கும் ஞானம் அருத்தாபத்திப் பிரமையுமாம். இப்பிரமாணம் வியாபாரமின்றிய காரணமாம்.

அது i. திருஷ்டம் (காண்டல்) ii. சுருதம் (கேட்டல்) என விருவகைத்து.

i. திருஷ்டமான அர்த்தத்தின் அனுபபத்தியினால் உபபாத கத்தைக் கற்பித்தல் திருஷ்டார்த்தாபத்திப் பிரமை யெனப்படும். அதற்கேதுவான திருஷ்டார்த்தத்தின் அநுபபத்தியின் ஞானம் திருஷ்டார்த்தாபத்திப் பிரமாணமெனப்படும். எங்ஙனம்? பகலுண் ணாதவனது பருமையைக்கண்ட விடத்து இப்பருமை யிராத்திரி போஜனமின்றிச் சம்பவியாதென்று பருமையில் இராப்போஜனங் கற்பிக்கப் படுகின்றது. ஈண்டு உபபாத்தியமான பருமை பொருந் தாமையின் ஞானம் திருஷ்டார்த்தாபத்திப் பிரமாணமாம். இராப் போஜனத்தைக் கற்பித்தல் திருஷ்டார்த்தாபத்திப் பிரமையாம்.

ii. சுருதார்த்தத்தின் அநுபபத்தியினால் (பொருந்தாமை யினால்) உபபாதகத்தைக் கற்பித்தல் சுருதார்த்தாபத்திப் பிரமை யெனப்படும். அதற்கேதுவான சுருதார்த்தத்தின் அனுபபத்தியின் ஞானம் சுருதார்த்தாபத்திப் பிரமாணமெனப்படும். எங்ஙனம்? வீட்டிலில்லாத தேவதத்தன் ஜீவித்திருக்கிறு னென்னும் வாக்கி யத்தைக் கேட்டவிடத்து, வீட்டிற்குப்புறம்பே தேவதத்தனது இருப்பின்றி வீட்டிலில்லாத தேவதத்தனது ஜீவனம் பொருந்தா தென ஜீவனத்தில் புறம்பேயிருத்தல் கற்பிக்கப்படுகின்றது. ஈண்டு உபபாத்தியமான ஜீவனம் பொருந்தாமையின்ஞானம் சுருதார்த்தா பத்திப் பிரமாணமாம்; புறம்பேயிருத்தலைக் கற்பித்தல் சுருதார்த் தாபத்திப் பிரமையாம்.

அச்சுருதார்த்தாபத்தியும் (க.) அபிதானாநுபபத்தி (உ.) அபிகிதாநுபபத்தியென யிருவகைப்படும்.

(க.) யாண்டு வாக்கியத்தின் ஏகதேசத்தைக் கேட்டலால் அந்வயாபிதானம் பொருந்தாமலிருக்கின்றதோ ஆண்டு அந்வயாபிதானத்திற்கு உபயோகமான வேறுபதங் கற்பிக்கப்படுகின்றது. இஃது அபிதாநாநுபபத்தியாம். எங்ஙனம்? துவாரம்(வாயிலை)என்று கூறுமிடத்து மூடு என்னும் பதமானது அத்தியாகாரம் பண்ண (சேர்க்க)ப் படுகின்றது. ஈண்டு உபபாத்தியமான துவாரமென்னும் பதத்தின் பொருந்தாமையின் ஞானம் அபிதானாநுபபத்திப் பிரமாணமாம். 'மூடு' என்னும் பதத்தைக்கற்பித்தல் அபிதானாநுபபத்திப் பிரமையாம். ஒருபதார்த்தத்திற்கு இஷ்டமாகிய வேறுபதார்த்தத்துடன் அன்வயபோதத்திலுள்ள கூறுவோனது தாற்பரியம் அபிதான மெனப்படும். 'வாயிலை' அல்லது 'மூடு' என்றிவ்வளவுமாத்திரங் கூறின் ஆண்டு 'வாயிலை மூடு' என்னுமுணர்ச்சி கேட்பவனுக் குண்டாதல் வேண்டுமென்பது கூறுவோனது தாற்பரியமாகிய அபிதானமாம்.

(உ.) யாண்டு வாக்கியத்தா லறியப்பட்ட அருத்தமானது பொருந்தவில்லையென் றறியப்படுகின்றதோ ஆண்டு வேறர்த்தங் கற்பிக்கப்படுகின்றது. இஃது அபிகிதாநுபபத்தியாம். எங்ஙனம்? "சுவர்க்ககாமன் ஜோதிஷ்டோம மென்னும் யாகத்தைச்செய்யக்கடவன்" என்னு மிடத்து அவ்வாக்கியத்தின் பொருள் அபூர்வத்தைக் கற்பித்தலின்றிச் சம்பவியாதென்று அதனர்த்தத்தில் அபூர்வங் கற்பிக்கப்படுகின்றது. ஈண்டு உபபாத்தியமான வாக்கியார்த்தத்தின் பொருந்தாமையின் ஞானம் அபிகிதாநுபபத்திப் பிரமாணமாம். அபூர்வத்தைக் கற்பித்தல் அபிகிதாநுபபத்திப் பிரமையாம். சுவர்க்கசாதனமான யாகம் க்ஷணிக மாதலையால்

அச்சாதனத்தன்மை சாக்ஷாத்தாகப் பொருந்தாமையால் யாகத்திற்கும் சுவர்க்கத்திற்குமிடையில் அபூர்வங் கற்பிக்கப்படுகின்றது. ஈற்றுருதியை யாகமென்றும், சுகவிசேஷத்தினைச் சுவர்க்கமென்றும், கர்மத்தினாலுண்டான சம்ஸ்காரவடிவ அதிர்ஷ்டத்தினை அபூர்வமென்றுங் கூறுவர்.

(ச) இங்ஙனமன்று; இரவுண்டல் * அநுமான விடயமாதலின். அங்ஙனமன்றோ, தேவதத்தன் இரவிலுண்பன் (என்பது பிரதிஞ்ஞை); பகலுண்ணானாயினும் பரியனாதலின் (என்பது ஏது); யாவனொருவன் இரவிலுண்ணான் அவன் பகலுண்ணானாயும் பரியனாகான்; எங்ஙனம்? பகலிரவிலுண்ணான் பரியனாகான் (என்பது உதாரணம்); இவன் அங்ஙனமல்லன் (என்பது உபநயம்); ஆதலின் இங்ஙனமல்லன் (என்பது நிகமனம்) என்னுங் கேவலவியதிரேகி யனுமானத்தால் இரவுண்டல் தோன்றலின், அருத்தாபத்தி கற்பனை யாற் பயனென்?

(ச-ரை.) அருத்தாபத்தி யென்பது வியதிரேகி யனுமானத்திற்கே மற்றோர் பெயராயிருத்தலின் அருத்தாபத்தியை வேறு பிரமாணமென்றல் பொருந்தா தென்றவாறு.

---

* அர்த்தாபத்திப் பிரமாணம் வேறு, அநுமானப் பிரமாணம் வேறு என்பவர் யாண்டு ஒரு பொருளினது ஞானத்தின் அனுவியவசாய (பின்னிகழு) ஞானம் பின்ன மாகின்றதோ ஆண்டு அப்பொருளினது ஞானத்தின் பிரமாணம் பின்னமாகின்றது. வியவசாய (முன்னிகழு) ஞானத்தினை யுண்டுபண்ணும் பிரமாண பேதமின்றி அநுவியவசாயஞானத்தின் பேதமுண்டாகாது. அர்த்

தேவதத்தன் இரவிலுண்பன் (பி); பகலுண்ணுனுயினும் பரியனுதலின் (ஏ): யாவனெருவன் இரவிலுண்ணுன் அவன் பகலுண்ணுனும் பரியனுகான், பகலுமிரவு முண்ணுதவன்போல (உதா); இவன்(இத்தேவதத்தன்) அங்ஙனமல்லன் (பரியனுகாதவனல்லன்-பரியனே) (உப); ஆதலின் இங்ஙனமல்லன் (இரவிலுண்ணுதவனல்லன்—இரவிலுண்பவனே) (நிக) என்னும் வியதிரேகி யனுமானத்தில் அருத்தாபத்தி யடங்கிப்போதல் காண்க.

6. அநுபலத்தி—Absence.

53. (ஆ.) அற்றுயின், அபாவமெ (அநுபலத்தியெ)ன்பதும் வேறுபிரமாணமாயுண்டு; அதுவும் இன்மை கவர்தற் (அபாவத்தை யறிதற்)பொருட்டு வேண்டப்

தாபத்திப் பிரமையும் அநுமிதிப்பிரமையும் தம்முள் வேறுபட்ட அநுவியவசாய ஞானமாயிருத்தலின் அவ்விரண்டன் பிரமாணமும் பின்னமாகவே யிருத்தல்வேண்டும். எங்ஙனம்? ஸ்தூலத்தன்மை இராப்போஜனத்தின்வியாப்பியமாம், ஸ்தூலத்தன்மையுடையவன் தேவதத்தன் என்னுமிரண்டு ஞானமுமுண்டாய் யாண்டுஇராப்போஜனத்தின் ஞானமுண்டாகின்றதோ ஆண்டு அஃது அநுமிதி ஞானமாம். பகலுண்ணுத புருஷனிடத்து இராத்திரிபோஜன மின்றி ஸ்தூலத்தன்மை சம்பவியாதென்னும் ஞானத்தின்பின்னருண்டாகும் இராத்திரிப் போஜனத்தின் ஞானம் அர்த்தாபத்திப்பிரமையாம். இவ்வேதுவினுல் முதற்கிரமப்படியிராத்திரிபோஜனத்தினது ஞானத்தின்பின்னர்ப் பருமையினுல் இராப்போஜனத்தை யனுமிக்கிறேனென்னும் அநுவியவசாயஞானமுண்டாகின்றது. இரண்டாவது கிரமப்படி இராப்போஜனத்தின் ஞானத்திற்குப் பின்னர்ப் பருமை சம்பவியாமையால் இராப்போஜனத்தைக் கற்பிக்கிறேனென்னும் அநுவியவசாயஞான முண்டாகின்றது என்று கூறுவர்.

படும். அங்ஙனமன்றே, குடமுதலியவற்றின் அநுபலத்தியால் குடமுதலியவற்றின் அபாவந் துணியப்படும். அநுபலத்தி-உபலத்தியின்மை (விளங்காமை) யென்பது. ஆதலால் அபாவ (அநுபலத்தி)ப் பிரமாணத்தால் குடமுதலியவற்றினின்மை கிரகிக்கப்படும்.

(கு-ரை.) அபாவப்பிரமையின் அசாதாரண காரணம் அனுபலத்திப் பிரமாண மெனப்படும். கடத்தின் அனுபலத்தியினால் அதன் அபாவ மறியபப்படுதலின் அனுபலத்தியை வேறுபிரமாணமாக அங்கீகரித்தல் வேண்டும். அனுபலத்தி அப்பிரதீதியென்பன ஒருபொருட்கிளவி. இப்பிரமாணம் வியாபாரமின்றியதாம்.

(ச.) இங்ஙனமன்று; ஈண்டுக் குடமுண்டாயின் அப்போது நிலம்போலக்காணப்படும் *என்னும் தருக்கத்துணையுடைய தோன்றாமை (அநுபலத்தி) யோடு கூடிய காட்சியானே அபாவங் கிரகிக்கப்படுதலின்.

(கு-ரை.) பிரத்தியட்சப் பிரமாணத்தினால் கடத்தின்அபாவங் கிரகிக்கப்படுமிடத்து அதற்கு அதன் அனுபலத்தி சககாரி காரணமாயிருத்தலின் அது சுதந்தரமாகப் பிரமாணமாகமாட்டாதென்பதை விளக்க'ஈண்டுக்...கிரகிக்கப்படுதலின்' என்று கூறப்பட்டது. 'ஈண்டுக்குடமுண்டாயின் அப்போது நிலம்போலக்காணப்படும்' என்பதன்பொருள் ஈண்டுக் கடமில்லாமையால் காணப்படவில்லையென்பதாயிருத்தலின் இது பாதகதருக்கமாம். கடத்தின் அனுபலத்தி (விளங்காமை)யோடு கூடிய இந்திரியத்தால் அதன் அபா

---

* ஈண்டு "குடம் காணப்படாதிருப்பதே, அதனால் காட்சியின்மையினில்லை" என்றிவ்வளவு சிலபிரதியில் அதிகமாயிருக்கின்றது.

வங் கிரகிக்கப்படுகின்றதென்னுமிடத்து அதற்கு 'ஈண்டுக்குட முண்டாயின் அப்போது நிலம்போலக் காணப்படவேண்டும்' என்னும் தருக்கம் உதவியாயிருக்கின்றதென்க.

54. (ஆ) அற்றாயின், இந்திரியங்கள் தம்மோடு சம்பந்தப்பொருள் கிரகிப்பன. அங்ஙனமன்றோ, (1) இந்திரியங்கள் வஸ்துவை யடைந்து விளக்கும்; ஞான கரணத் தன்மையாதலின்; ஆலோகம் (ஒளிப்பொருள்) போல. அல்லது (2)கண் செவிகள் வஸ்துவையடைந்து விளக்கும்; இந்திரியத்தன்மையாதலின்; மெய் (துவக்கிந்திரியம்) போல. மெய் (துவக்கிந்திரிய) முதலிய அடைந்து காரியப்படுதல் உபயவாதி சித்தமே.

(கு-ரை.) இந்திரியங்கள் தம்மோடு சம்பந்தப்பட்ட பொருள்களை அறிகின்றன வென்பதற்கு இரண்டனுமானங்கள் காட்டப்பட்டன. மெய்முதலிய அடைந்து காரியப்படுதலாவது துவக்குமுதலிய இந்திரியங்கள் விஷயங்களுடன் கூடி அவற்றை விளக்குதலாம். அனுபலத்திப் பிரமாணத்தை யங்கீகரித்துள்ள மீமாம்சகர் முதலியோரும், அங்கீகரியாத நையாயிகர் முதலியோரும் ஈண்டு உபயவாதிகளாவர். உபயம்-இரண்டு, சித்தம்-அங்கீகரித்தது.

இந்திரிய அபாவங்கட்குச் சம்பந்தமே யில்லை. சம்பந்தங்கள் * சையோக சமவாயமே யன்றோ? அவை அவற்றிற்கி(இந்திரியத்திற்கும் அபாவத்திற்குமி)ல்லை;

---

* (1.) தம்முள்விட்டு நீங்கி வெவ்வேறாயிருக்கக்கூடியபதார்த்தங்களின் சம்பந்தம் சையோகமாம். (2.) தம்முள்விட்டு நீங்காத பதார்த்தங்களின் சம்பந்தம் சமவாயமாம்.

திரவியங்கட்கே சையோக மென்பது நியமம். அபாவ மோ திரவியமன்று. சமவாயமுமின்று; நீக்கமின்றி யிராமையின், சையோகமும் சமவாயமும் பாவதர்ம மாகையால். விசேடண விசேடிய பாவம் சம்பந்தமே யன்று; வேறுதல், இருபொருட்கண் நிற்றல், ஒன்றுத லின்மையின். சம்பந்தமாவது சம்பந்திகளில் வேறுத லும், உபயசம்பந்திகளி லடைதலும், ஒன்றுதலு முடைய தன்றோ? எங்ஙனம்? முரசுகுணிற் சையோ கம். அது (சையோகம்) முரசுகுணில்களில் வேறுத லும், அவற்றையடைதலும், ஒன்றுதலுமாம். விசே டண விசேடிய பாவம் அங்ஙனமன்று; அங்ஙன மன்றோ, ‡‡தண்ட புருடனுடைய விசேடணவிசேடிய பாவம் அவற்றின் (விசேடண விசேடியங்களின்) வேறன்று. தண்டத்திற்கு விசேடணத்துவம் வேறு பொருளன்று; புருடனுக்கு விசேடியத்துவம் வேறு பொருளன்று; மற்றென்னெனின், சொரூபமே.

---

‡‡ தண்ட புருஷனென்னுமிடத்துத் தண்டம் விசேடணமும், புருஷன் விசேடியமுமாம். ஈண்டுத் தண்டத்திற்கும் புருடனுக்கு முள்ள சம்பந்தம் சையோகமாம். சம்பந்தத்தின் பிரதியோகி விசே டண மெனப்படும். சம்பந்தத்தின் அனுயோகி விசேடிய மெனப் படும். எதன் (தண்டத்தின்) சம்பந்த முண்டாகின்றதோ அது (தண்டம்) சம்பந்தத்தின் பிரதியோகியாம். எதில் (புருடனில்) சம்பந்த முண்டாகின்றதோ அது (புருடன்) அனுயோகியாம். விசேடணத்தையுடையது விசிட்டமெனப்படும்.

அபாவமும் விசேடண மாதலின் அபாவத்தில் திரவிய முதலியவற்றுள் ஒன்றற்கும் சம்பந்தமின்று. ஆதலின், அபாவத்திற்குத் தன்னையுடைய தென்னும் புத்தியைத் தோற்றுவிப்பதான சொரூபம் யாது அதுவே விசேடணம்; அது வேறு பொருளன்று. இங்ஙனம் வியாப்பிய வியாபகத்துவம், காரியகாரணத் துவ முதலியனவும் (சொரூபமே யென்று) ஊகிக்க (ஆராய)த்தக்கன.

(கு-ரை.) இந்திரியங்கள் தம்மோடு சம்பந்தப்பட்ட பொருள்களை விளக்குமேயன்றிச் சம்பந்தப்படாத பொருள்களை விளக்குவதில்லை. இந்திரியத்திற்கு அபாவத்துடன் சம்பந்தமின்மையின் அஃது அதனை விளக்குமென்பது பொருந்தாது. பொருந்தாமையினால் அனுபலத்திப் பிரமாணத்தினால் அபாவங் கிரகிக்கப்படுகின்றதென்று கொள்ளவேண்டுமேயன்றி இந்திரியத்தினால் அது கிரகிக்கப்படுகின்றதென்று கொள்ளுதல் தகுதியாகாதென்பதை விளக்க 'இந்திரிய அபாவங்கட்குச் சம்பந்தமேயில்லை' என்றுகூறப்பட்டது. இந்திரியத்திற்கும் அபாவத்திற்கும் சையோகசம்பந்த மிருக்கின்றதெனின், அது பொருந்தாதென்பதை விளக்க 'திரவியங்கட்கே சையோகமென்பது நியமம். அபாவமோ திரவியமன்று' என்று கூறப்பட்டது. அபாவம் திரவியமாயிருப்பின் அதனுடன் இந்திரியத்திற்குச் சையோக சம்பந்தம் சம்பவிக்கும். அபாவம் திரவியமாகாமையின் அதனுடன் இந்திரியத்திற்குச் சையோக சம்பந்தம் பொருந்தாது. யாண்டும் இந்திரியம் திரவியத்தைச் சையோக சம்பந்த வாயிலாகவே கிரகிக்குமென்பது நியமமாயிருத்தலின் திரவியமன்றாய அபாவத்தை இந்திரியம் சையோக சம்பந்தத்தால் கிரகிக்குமென்பது பொருந்தாதென இதனாலேற்பட்ட தென்க.

இந்திரியத்திற்கும் அபாவத்திற்கும் சமவாய சம்பந்த மிருக்கின்றதெனின் அதுவும்பொருந்தாதென்பதை விளக்கச்'சமவாயமுமின்று; நீக்கமின்றியிராமையின்' என்று கூறப்பட்டது. இந்திரியத்திற்கும் அபாவத்திற்கும் சமவாய (ஒற்றுமைச்) சம்பந்தமுளதாயின் அவ்விரண்டும் யாண்டும் வினையும் முதலும்,குணமும் குணியும், வினையும் வினைமுதலும், சாதியும் வடிவும், விசேடமும் நித்தியத்திரவியமும்போல நீக்கமின்றியிருத்தல் வேண்டும். அங்ஙனமின்மையின் இந்திரிய அபாவங்கட்குச் சமவாய சம்பந்தம் பொருந்தாது. கண்ணால் குடவுருவத்தைக் காணுமிடத்துக் கண்ணோடு சையுக்தமான குடத்தில் உருவம் சமவாயமா யிருத்தல்போன்று கண்ணோடு சையுக்தமான நிலத்தில் அபாவம் சமவாயமா யிருக்கின்ற தெனின் அபாவம் உருவமுதலியவைபோன்று குணமன்மையின் அதுவும்பொருந்தாது; பொருந்தாமையின், அபாவத்தை இந்திரியம் சமவாயசம்பந்த வாயிலாகக் கிரகிக்கின்ற தென்பதும் பொருந்தாதென்பது இதனாலேற்பட்டதென்க. பாவதர்மவடிவமாய சையோகம், சமவாயமென்னு மிருவகைச் சம்பந்தங்களில் யாதொன்றும் இந்திரியத்திற்கும் அபாவத்திற்கும் பெறப்படாமையின் இந்திரியத்தினால் அபாவம் கிரகிக்கப்படுகின்றதென்பது எவ்வாற்றானு மமையாதென்பது சித்தித்தது. விசேடண விசேடிய பாவம் சம்பந்தமாயின் அது வேறுதல், இருபொருட்கண் நிற்றல், ஒன்றுதலென்னும் சம்பந்த விலக்கணத்தை யுடைத்தாதல் வேண்டும். விசேடண விசேடியபாவம் விசேடண விசேடிய சொரூபமேயன்றி வேற்றுச் சம்பந்த மன்றாதலின் விசேடண விசேடிய பாவம் சம்பந்தமேயன்றென்பதை விளக்க 'வேறுதல், இருபொருட் கண் நிற்றல் ஒன்றுதலின்மையின்' என்று கூறப்பட்டது.

சம்பந்தி-சம்பந்தமுடையது; உபயம்-இரண்டு. முரசு-வாத்திய விசேடங்களுள் ஒன்று; அஃதாவது பேரி. குணில்-குறுந்தடி.

இம்மலை தீயுடைத்து; புகையுடைமையால் என்புழித் தீ வியாபகமாயும் புகை வியாப்பியமாயுமிருப்பதுடன் தீ காரணமாயும் புகை காரியமாயுமிருத்தலின் புகைக்கு வியாப்பியத்துவம் வேறுபொருளன்று சொரூபமே காரியத்துவம் வேறுபொருளன்று சொரூபமே என்றும், தீக்கு வியாபகத்துவம் வேறுபொருளன்று சொரூபமே காரணத்துவம் வேறுபொருளன்று சொரூபமே என்றுமுரைத்துக் கொள்க. 'முதலியனவும்' என்றமையின் ஆதார ஆதேயத்துவம், பிரதிபாத்தியப் பிரதிபாதகத்துவம், (பிரதிபாத்தியம்-சொல்லப்படுவது, பிரதிபாதகம்-சொல்வது), பிராப்பியப் பிராபகத்துவம் (பிராப்பியம் - அடையப்படுவது, பிராபகம்-அடைவது) முதலியனவுங் கொள்க.

தன்னோடுகூடிய தென்னும் புத்தியைத் தோற்றுவிப்பதான சொரூபம் யாது அது தீ முதலியவற்றிற்கு வியாபகத்துவமும் * நூல் முதலியவற்றிற்குக் காரணத்துவமும் காரியத்தாற் றொடரப்பட்ட அந்நுவய வியதிரேகி சொரூபமேயன்றி வேறு பொருளன்று; அபாவமும் வியாபகமாயும் காரணமாயு மிருத்தலின் (சொரூபமே). அபாவத்திற் சாமானிய முதலியன சம்பவமாகா (பொருந்தா).

(கு-ரை.) 'தன்னோடு கூடியதென்னும் புத்தியைத் தோற்றுவிப்பதான சொரூபம்' என்றமையின் தீ முதலியவற்றிற்கு வியாபகத்துவமும் நூல்முதலியவற்றிக்குக் காரணத்துவமும் புகை ஆடை முதலிய காரியத்தாற் றொடரப்பட்ட அந்நுவய வியதிரேகிசொருபமேயன்றி வேறுபொருளல்ல வென்றாயிற்று. வியாபகத்துவம் கார

---

* நூல்முதலியவற்றிற்கென்பது சில பிரதியிலில்லை.

ணத்துவமென்றுமிரண்டோடுகூடியதென்னும் புத்தியைத்தோற்று விக்குந்தன்மை காரியத்தாற் றெரடரப்பட்ட அன்வய வியதிரேகியா யிருத்தலின் அவையே அவற்றின் சொரூபமாமென்க. தீ முதலிய வற்றிற்கு வியாபகத்தன்மையும் நூல் முதலியவற்றிற்குக் காரணத் தன்மையும் புகை ஆடைமுதலியன விருத்தலால் தீ நூல்முதலியன விருக்கின்றன வென்னும் அந்வயத்தாலும் தீ நூல்முதலியன வில்லை யாயின் புகை ஆடை முதலியன வில்லை யென்னும் வியதிரேகத்தா லும் பெறப்படுவனவாயிருத்தலின் அவையே அவற்றின் சொரூபமா மென்பது நன்குவிளங்கும்.

ஒன்றன் (கடத்தின்) அபாவம் தனதுபிரதியோகியின் (கடத் தின்) அனுபலத்திக்கு (விளங்காமைக்கு) வியாபகமாயும் காரண மாயு மிருத்தலின் அதுவும் அன்வய வியதிரேகி சொரூபமேயாம்; ஈண்டுக் கடத்தின் யோக்கிய அநுபலத்தியிருந்தால் அதன் அபாவ மிருக்குமென்பதுஅன்வயமும், கடத்தின் அபாவமின்றாயின்அதன் யோக்கிய அனுபலத்தியிரா தென்பது வியதிரேகியுமாம். இங்ஙன மிருத்தலால்'அபாவமும் வியாபகமாயும் காரணமாயுமிருத்தலின்' என்று கூறப்பட்டது. பிரதியோகி (கடத்தின்) உணர்ச்சியின்றி அதன் அபாவவுணர்ச்சி நிகழாதென்பது தர்க்கநூற்றுணிபு.

சாமானியம் (ஜாதி) திரவிய குண கர்மங்களிலிருப்பதன்றி மற்றொன்றினு மிருப்பதன்றாகலின் 'அபாவத்திற் சாமானியமுதலி யன சம்பவமாகா' என்றுகூறப்பட்டது. 'முதலியன' என்றமையின் சமவாயம், விசேடமுதலியனவுங்கொள்க. சமவாயம் நித்தியசம்பந்த மாய்க் குணகுணி முதலிய இரண்டிரண்டு பதார்த்தங்களி லிருப்ப தாயும், விசேடம் நித்தியத் திரவியங்களி லிருப்பதாயுமிருத்தலின் அவை குணகுணி முதலியனவல்லாத அபாவத்திலிராவென்பது கருத்து. இங்ஙனங் கூறியதினால் அபாவம் யாதொருசம்பந்தமு மின்றி விசேடணசொரூபமாகவே இருக்கின்றதென்பது பெறப் பட்டது.

இங்ஙனம் விசேடண விசேடியபாவம், விசேடண விசேடிய சொரூபத்தினும் வேறன்று; இருபொருட்கண் நிற்பதுமன்று; விசேடணத்தில் விசேடணபாவ மாத்திர முண்மையின், விசேடியபாவ மின்மையின்.

விசேடியத்திலும் விசேடிய பாவமாத்திர முண்மை யின், விசேடண பாவமின்மையின்.

விசேடண விசேடியபாவ மென்பது ஒன்றுமன்று (வெவ்வேறே). விசேடணத்தினது பாவமும் விசேடியத்தினதுபாவமுமென உம்மைத்தொகைசுற்றினின்ற பாவமென்னுஞ் சொல் வேறுவேறுபுணரும்.

* இவை இரண்டு; சம்பந்தம் ஒன்று. ஆதலின் விசேடண விசேடிய பாவம் சம்பந்தமன்று.

இங்ஙனம் வியாப்பிய வியாபகபாவ முதலியனவும் சம்பந்தமன்று; ஆனால் சம்பந்தமென்னும் சொற்பிரயோகம் இரண்டாற் கூறப்படுதல் ஒப்புமையால் உபசாரமாகலின்.

---

* வேறுதல், இருபொருட்கண் நிற்றல், ஒன்றுதல் என்னும் இலக்கணமுடைய சம்பந்தம் யாண்டும் ஒன்றேயாம். விசேடண விசேடியபாவம் யாண்டும் விசேடணபாவமும் விசேடிய பாவமுமென இரண்டாயிருத்தலின் அவை சம்பந்தமாகாவென்றவாறு. சம்பந்தசொரூபம் விசேடண பாவத்திலும் விசேடியபாவத்திலும் இன்றென்பது கருத்து.

ஆதலின், சம்பந்தமில்லாத அபாவத்திற்கு இந்திரியத்தாற் கிரகித்தலுண்டாகாது.

(கு-ரை.) சம்பந்தத்திற்கு இரண்டு பதார்த்தம் அவசியம் வேண்டும். இரண்டு பதார்த்தமிராதபோது சம்பந்தமென்னும் பிரயோகமேயின்று. விசேடண விசேடிய முதலியவை சம்பந்தவடிவமாயிராது சொருபமா யிருத்தலின் அவற்றிற்குச் சம்பந்தங் கூறுதல்பொருந்தாது. ஆயினும், விசேடண விசேடியபாவம், வியாப்பிய வியாபகபாவம், காரியகாரணபாவம் முதலியவை குணகுணி, ஜாதி வியக்தி யென்பன போன்று இரண்டிரண்டாகக் கூறப்படுதலால் உபசாரமாக அவற்றிற்குச் சம்பந்தம் கூறப்படுகின்றதென்பதாம். வியாப்பிய வியாபகபாவமென்றவிடத்து வியாப்பியத்தினதுபாவமும் வியாபகத்தினது பாவமுமெனப் பொருளுரைத்துக் கொள்க.

(ச.) அஃதொக்கும் (நீ கூறியதுன்மை); வியாப்தி பாவத்தோடு கூடியதாகலின், பாவத்தை விளக்கும் இந்திரியம் அடைந்தே விளக்கும்; அபாவமன்று.

* அபாவத்தை விளக்கும் இந்திரியம் விசேடண விசேடிய முகத்தானே என்பது சித்தாந்தம்.

---

* "நியாயமதத்தில் அபாவத்தின் பிரத்தியட்சத்தில் இந்திரியம் கரணமாம். இந்திரியத்தில் விசேடணத்தன்மையும் இந்திரிய சம்பந்த முடையதில் விசேடியத்தன்மையும் அபாவத்தில் இந்திரியத்தின் சம்பந்தமாம். அது வியாபாரமாம். அபாவத்தின் பிரத்தியட்சப்பிரமை பயனும். யோக்கியானுபலம்பம் இந்திரியத்திற்குச் சககாரி காரணமாம்; கரணமன்று" என்று விருத்திப்பிரபாகரங் கூறுகின்றது.

(இந்திரிய) சம்பந்தமில்லாத அபாவம் கிரகித்தலில் * அதிப்பிரசங்கதோஷம் (மிகைபடக்கூறலென்னுங் குற்றம்) விசேடணத்துவத்தானே விலக்கப்படும்; (இது) † பரமதத்தினும் ஒக்கும்.

(கு-ரை.) ஈண்டு ‡ வியாப்தியென்றது பொருளிந்திரியங்களின் சாக்ஷாத்காரிப் பிரமைக்கு ஏதுவாகிய ஸம்யோக முதலிய சம்பந்தத்தை. அது யாண்டும் பாவத்தோடு கூடியிருத்தலின் 'வியாப்திபாவத்தோடு கூடியதாகலின்' என்று கூறப்பட்டது. அநுமானத்திற் கூறிய வியாப்தி வியதிரேகத்தோடுங் கூடியிருத்தலின் அஃதீண்டுக் கொள்ளத்தக்கதன்றாம்.

---

* பிரசங்கம் - நியமம்; அதிப்பிரசங்கம் - நியமங்கடந்தது; தோஷம்-குற்றம்.

† எவ்விஷயத்தில் இருவர்க்குத் தோஷமும் பரிகாரமும் சமமாயிருக்கின்றனவோ அவ்விஷயத்தில் ஒருவர் மற்றொருவரை ஆசங்கித்தல் கூடாதென்பது நியமமாமென்பதுணராது ஆட்சேபித்தமையின் 'பரமதத்தினும் ஒக்கும்' என்று கூறப்பட்டது.

இங்ஙனம் கூறினதினால் பரமதத்தினும் அபாவம் இந்திரிய சம்பந்தமில்லாத அதிகரணத்திலும் பிரத்தியட்சமாக அநுபலத்திப் பிரமாணத்தினால் கிரகிக்கிப்படுகின்றதென அங்கீகரிக்கப் பட்டிருக்கின்றதென்பது நன்குவிளங்கும். அவர் யாண்டும் அபாவப்பிரத்தியட்சம் யோக்கியாநுபலத்தியா லுண்டாகின்றதென்பர். யாண்டு அநுபலத்தியின் பிரதியோகி (எதிர்மறை) யாகிய உபலத்தியின் (விளக்கத்தின்) கற்பனை சம்பவிக்கின்றதோ ஆண்டு அவ்வநுபலத்தி யோக்கியமா (தகுதியுடையதா)ம்.

பரமதமென்றது - மீமாம்சகர் முதலியோரது மதத்தை.

‡ மீமாம்சகர் முதலியோர் தூமாதிகளில் அந்வய வியாப்தி

எப்போது கண்ணோடுகூடிய பூதலத்திற் குடமில்லையென்று குடத்தின் அபாவம் ஒருவனற் கிரகிக்கப்படும் அப்போது விசேடண விசேடிய பாவரூப சம்பந்தமிருக்கின்றது; என்னை? கண்ணோடு கூடிய பூதலத்திற்குக் கடத்தின்அபாவம் விசேடணமாயும், பூதலம் விசேடியமாயு மிருத்தலின். இருத்தலால், இந்திரியமானது அபாவத்தை விசேடண வாயிலாக விளக்குகின்றதென்பது தருக்க நூல் சித்தாந்தமாமென்க. இதனல் அபாவத்தை இந்திரியம் விளக்குமிடத்து அதனைப் பாவவடிவமாகவே விளக்குகின்றதென்பது பெறப்பட்டது; அது பூதலத்தில் விசேடணவடிவமாக விருத்தலின். இதனல் பொருளிந்திரியங்களின் சம்பந்தம் பாவத்தோடு கூடியதென்பது நன்கு விளங்கும்.

இந்திரிய சம்பந்தமில்லாத அபாவம் அதனலறியப்படுகின்றதென்னுமிடத்து இந்திரிய சம்பந்தமுள்ளதுதான் அதனலறியப்படும் என்னும் நியமத்திற்குப் பங்கம்வரும் என்னும் அதிப்பிரசங்க தோஷம் 'விசேடணத்துவத்தானே விலக்கப்படும்' என்று கூறிப் பரிகரிக்கப்பட்டது; கண்ணோடுகூடிய பூதலத்தில் கடாபாவம் விசேடணவடிவமா யிருத்தலின். இத்தோஷம் பரமதத்தினுமொக்கு மென்பது வருமாறு:—

இந்திரிய சம்பந்த முள்ள விடத்திற்றான் ஒன்றன் அபாவம் அநுபலப்திப் பிரமாணத்தா லறியப்படுமென்னுமிடத்து இந்திரிய சம்பந்தமில்லாத வாயுமுதலியவற்றில் உருவமுதலியவற்றின் அபாவம் அநுபலப்திப் பிரமாணத்தாலறியப்படு மென்பது அதிப்பிரசங்கதோஷமாம். என்னை? இந்திரிய சம்பந்தமுள்ள விடத்திலேயே

யுணர்ச்சி யில்லாதானுக்கு வியதிரேக வியாப்தி யுணர்ச்சியினல் அநுமிதிஞான முண்டாகாமையின் வியதிரேக வியாப்தியென்பதொன் றின்றென்பர்.

கடமுதலியவற்றின் அபாவம்அநுபலப்திப்பிரமாணத்தாலறியப்படு மென்னும் நியமத்திற்குப் பங்கம்வருதலின்.

இதுபற்றி வேதாந்தபரிபாஷை அநுபலப்தி பரிச்சேதத்தில் "(ஆட்சேபம்.) மேற்கூறியவகையாக அதிகரண (இட)த்திற்கும் இந்திரியத்திற்கும் சம்பந்தமுண்டாகுமிடத்து அபாவம் அனுபலத்தியா லறியப்படுகின்றதென் றங்கீகரிக்கப்பட்டது. ஆண்டு இந்திரியமே அபாவாகாரமான விருத்தியிலும் கரணம். (ஏனெனின்) இந்திரியமிருந்தால் அபாவம் கிரகிக்கப்படுகின்றது; இந்திரிய மிராவிட்டால் அபாவம் கிரகிக்கப்படுகின்றதில்லை. (சமாதானம்.) அது கூடாது. அந்த அபாவத்தின் பிரதியோகியின் அனுபலத்தியும் அபாவஞானத்தில் காரணமாகக் கிருப்த (சித்த)மா யிருக்கின்றமையின் அதில் கரணத்துவமாத்திரம் கற்பிக்கப்படுகின்றது. இந்திரியத்திற்கு அபாவத்துடன் சம்பந்தமிராமையின் (இந்திரியம்) அபாவ ஞானத்தில் ஹேதுவாக மாட்டாது. இந்திரியத்தின் அன்வய வியதிரேகி அதிகரண ஞானத்தால் க்ஷீணத்தையடைந்து விட்டமையின் அந்நியதா சித்தமா (பிறிதோராற்றாற் பெறப்படுவதா) யிருக்கின்றது. (ஆ.) பூதலத்திற் கடமில்லையென்று அபாவஞானம் வருமிடத்துப் பூதலாம்சத்தில் அந்தஞானம் பிரத்தியட்சமா மென்பது உபயமதத்திலும் சித்தமாம். ஆகையால், ஆண்டு விருத்தியின் நிர்க்கமனம் (வெளிப்படுதல்) அத்தியாவசியகமாம். பூதலாவச்சின்ன சைதன்னியத்தோடு கூடிய கடாபாவாவச்சின்ன சைதன்னியத்திற்கும் பிரமாதாவோடு அபேதமிருத்தலால் அத்வைத சித்தாந்தத்திலும் கடாபாவம் பிரத்தியக்ஷமாகட்டுமே. (ச.) நீ கூறியதுண்மைதான். அபாவ ஞானம் பிரத்தியக்ஷமா யிருப்பினும் அந்த ஞானத்திற்குக் காரணமான அனுபலத்தி வேறுபிரமாணமாம். பல ஞானம் பிரத்தியக்ஷமாயிருந்தால் அதற்குக்காரணமான பிரமாணமும் பிரத்தியட்சமா யிருக்கவேண்டுமென்னும் நியமமில்லை. 'நீ தச

மனுயிருக்கின்ருய்' என்றற்ருெடக்கத்து வாக்கியத்தினு லுண்டா கின்றஞானம் பிரத்தியட்சமா யிருந்தாலும் அக்கரணமான வாக்கியம் பிரத்தியட்சப் பிரமாணத்திலும் வேறு பிரமாணமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. ***கடாதி அபாவாகாரமான விருத்தி (ஞானம்) இந்திரிய ஜன்னியமன்று; இந்திரியத்திற்கும் (அபாவ) விஷயத்திற்கும் சம்பந்தமிராமையின்; ஆனுல் கடானுபலத்தியாகிய பிரமாணுந்தரத்தினு லுண்டாகின்றது. ஆகையால், அனுபலத்தி பிரமாணுந்தரமாம்'' என்று கூறியிருப்ப நீண்டறியத்தக்கதாம்.

(1.) சிலர் இம்மலை தீயுடைத்து என்புழி *மலை பிரத்தியட்சப் பிரமாணத்தா லறியப்படுவதாயும் தீ அனுமானப் பிரமாணத்தா லறியப்படுவதாயு மிருத்தல்போன்று 'இந்நிலத்திற்கடமில்லை' என்புழி நிலம் பிரத்தியட்சப் பிரமாணத்தினு லறியப்படுவதாயும் கடத்தினின்மை அனுபலத்திப்பிரமாணத்தினு லறியப்படுவதாயு மிருக்கின்றன. அபாவம் சிலவிடத்துப் பிரத்தியட்சமாயும் சிலவிடத்து அப்பிரத்தியட்சமாயு மிருக்கும். (க) யாண்டு அபாவத்தின் அதிகரண (இட)ம் பிரத்தியட்சமா யிருக்கின்றதோ ஆண்டு அபாவமும் பிரத்தியட்சமாம். எங்ஙனம்? இந்நிலத்திற் கடமில்லையென்புழி அபாவத்தின் அதிகரணம் பிரத்தியட்சமா யிருத்தலின் அபாவமும் பிரத்தியட்சமாம். (உ) யாண்டு அபாவத்தின் அதிகரணம் அப்பிரத்தியட்சமா யிருக்கின்றதோ ஆண்டு அபாவமும் அப்பிரத்தியட்சமாம். எங்ஙனம்? வாயுவி லுருவமில்லை யென்புழி உருவமின்மையின் அதிகரணமான வாயு அப்பிரத்தியட்சமாயிருத்தலின் அபாவமும் அப்பிரத்தியட்சமாம். வாயுவி லுருவமின்மை

* தருக்கநூலார் அனுமிதிக்கு விஷயம் சாத்தியமே யன்றிப் பட்சமுமா மென்பர்.

பிரத்தியட்சப்பிரமாணத்தினு லறியப்படுகின்றதெனின் மூடிய கண்ணுடையவனுக்கும் வாயுவி லுருவமில்லை யென்னும் ஞானமுண்டாதலின் அது பொருந்தாது. இதனுல் அனுபலத்தி வேறு பிரமாணமாமென்பது சித்திக்கின்றதென்று கூறுவர்.

(2.) வேறுசிலர் அபாவ பதார்த்தம் பிரத்தியட்சமாயின் வாதிகளின் விவாத முண்டாதல் வேண்டியதின்று. மீமாம்சகர் அபாவம் அதிகரணவடிவ மென்றும், நையாயிகர் முதலியோர் அதிகரணத்தின் வேறென்றும், நாஸ்திகர் வெறுமை அல்லது பொய் என்றும், ஆஸ்திகர் பதார்த்தமென்றும் கூறுதலினுல் அதன் சொருபத்தில் அநேக விவாதமுண்டாகின்றது. பிரத்தியட்ச யோக்கியமாகிய கடமுதலியவற்றின் சொருபத்தில் அதிகரணத்தின் வேறு? வேறன்று? என்றற்றொடக்கத்து விவாத முண்டாகின்றதில்லை. ஆதலால், அபாவபதார்த்தம் பிரத்தியட்ச மன்று. இவ்வேதுவினுல் யாண்டும் அபாவம் அப்பிரத்தியட்ச மென்றலே பொருத்த முடைத்து. அப்பிரத்தியட்சவடிவ அபாவத்தின் ஞானம் பிரத்தியட்சப் பிரமாணத்தினு லுண்டாகின்ற தென்பது சம்பவமாகாமையின் அஃது அனுபலத்திப் பிரமாணத்தினுலேயே யுண்டாகின்றதென்பது பொருந்துகின்ற தென்பர்.

பிராமாணியம்.

55. இஃதிப்போது கூறப்படும். புனல் முதலிய ஞானம் தோன்றுகையில் அந்த ஞானத்தினது பிராமாணியம் (பிரமாத்தன்மையைத்)துணிந்து ஒருவன் புனல் முதலியவற்றிற் செல்லாநின்றுன். ஒருவன் ஐயத்தானே சென்றுன்; சென்ற பிற்காலத்துப் புனல் முதலிய

வற்றை அடைந்தபோது பிராமாணியம் துணிகின்ருன். இது வஸ்துகதி (உண்மை நிலையாம்).

(கு-ரை.) ஞானத்தினது பிராமாணியம் ஞானத்தைக் கிரஹிக்கும் பிரமாணத்திலும் வேருகிய பிரமாணத்தினல் கிரஹிக்கப்படுமென்பது நியமம். அஃதனுமானப் பிரமாணமாம். ஞானத்தைக் கிரஹிக்கும் பிரமாணத்தினுலேயே ஞானத்தினது பிராமாணியமும் கிரஹிக்கப்படுமாயின் எல்லா ஞானமும் பிரமையாதல் வேண்டும். அப்போது அப்பிரமாஞானமில்லாமற்போம். போகவே, புனல் முதலியவற்றில் ஒருவன் ஐயத்தாற் செல்லுதல் பொருந்தாமை பெறப்படுகின்றது. அங்ஙன மின்மையின் புனல் முதலிய ஞானத்தின் பிராமாணியம் அனுமானத்தாலே கிரஹிக்கப்படுகின்றதென்ப தொருதலையாம்.

யாண்டு ஞானசாமக்கிரியி (பிரமாணத்தி)லும் அதிக சாமக்கிரியின்ருே ஆண்டு ஞானத்தின் பிராமாணியம் துணியப்படுவதின்று. ஆனல் பிரமாஞானத்திற்கு லோபமின்று. அவ்வதிக சாமக்கிரி குணமாம். யாண்டு * குணத்தோடுகூடிய இந்திரிய முதலிய பிரமாணங்களால் ஞான முண்டாகின்றதோ ஆண்டுப்

---

* பிரமையினுற்பத்தியில் குணம் காரணமாகாதென்பவர் பிரத்தியட்சப் பிரமையிற் கூறிய குணம் (நிரவயவமான) உருவ முதலியவற்றின் பிரத்தியட்சப் பிரமையிலும், (நிரவயவமான) ஆத்மப்பிரத்தியட்சத்திலும் பொருந்தாமலும், அனுமிதிப்பிரமையி னுற்பத்தியிற் கூறிய குணம் யாண்டுத்தீயோடுகூடிய மலையில் தூளிபடத்தில் புகையின் பிராந்தியுண்டாய்த் தீயின் அனுமிதிப்பிரமை யுண்டாகின்றதோ ஆண்டுப் பொருந்தாமலுமிருத்தலின் அஃதொவ்வாதென்பர்.

பிரமை யுண்டாகின்றது. * குணமின்றிய இந்திரிய முதலிய வற்றாலுண்டாகும் ஞானம்பிரமையன்றாம். (1) பிரத்தியட்சப் பிரமையி னுற்பத்தியில் குணம் விஷயத்தின் அதிகதேசத்தில் இந்திரியங்களின் சையோகமும், (2) அநுமிதிப்பிரமையி னுற் பத்தியில் குணம் சாத்தியத்தின் வியாப்பியமான ஏதுவின் சாத்தியமுடைய பட்சத்தின் ஞானமும், (3) உவமிதிப் பிரமையி னுற்பத்தியில் குணம் மெய்யான ஒப்புமை ஞானமும், (4) சாப்திப் பிரமையி னுற்பத்தியில் குணம் மெய்யான தகுதி முதலியவற்றின் ஞானமுமாம். அங்ஙனமே ஞானத்தின் பிராமாணியத்தினுற்பத்தி யினும் ஞானசாமக்கிரியினும் வேறாகிய குணத்தின் (அநுமானத் தின்) அபேட்சையிருத்தலின் அது (பிராமாணியம்) பிறிதா (அனு மானத்தா) லுண்டாகின்றதெனக. ஆதலாற்றான், புனல் ஞானந் தோன்றுகையில் ஐயத்தோடு சென்றவன் புனல் கிடைத்த விடத் துப் புனல் ஞானத்தின் பிராமாணியத்தைப் பிறிதாற் றுணிகின் றான். எங்ஙனந் துணிகின்றானெனின்? முன்னர்ப் புனல் என்னும் † வியவசாய ஞானமு (முன்னிகழு முணர்வு)ம், அதன் பின்னர்ப்

* (1.) பிரத்தியட்சப்பிராந்தியி னுற்பத்தியில் குற்றம் நேத் திரமுதலியவற்றின் மஞ்சள் காமாலை முதலிய தோஷமும், விஷ யத்தின் சாதிருசியதோஷமும் பிறவுமாம். (2) அநுமிதிப்பிராந்தி யினுற்பத்தியிற் குற்றம் அசித்தமுதலிய ஏதுப்போலியாம். (3) உவமிதிப் பிராந்தியி னுற்பத்தியிற் குற்றம் பிராந்திசகித ஒப்புமை ஞானமாம். (4) சாப்தப்பிராந்தியி னுற்பத்தியிற் குற்றம் கேட் போனிடத்து வாக்கியதாற்பரியத்தைக் கிரகிக்காமையும், கூறு வோனிடத்து வஞ்சகத்தன்மை முதலியனவும், சப்தத்திற் பிறி தோர்வகையால் போதிக்குந் தன்மைமுதலியனவுமாம்.

† (1.) நேத்திர முதலிய பிரமாணங்களாலுண்டாகும் ஞானம் வியவசாயஞானமெனப்படும். இதற்குவடிவம் இது புனல், இது

புனலையா னுணர்ந்தே னென்னும் அநுவியவசாயஞானமு (பின்னிகழுமுணர்வு)ம், அதன்பின்னர்ப் பிராமாணியம் அப்பிராமாணிய மென்னும் இருதருமஸ்மரணமும், அதன்பின்னர் இந்தஞானம் பிரமையா? அன்று? என்னும் பிராமாணிய சந்தேகமும் நிகழ, அதன் பிறகு விசேடதரிசனத்தின் பின்னர்ப் புனல் ஞானத்தின் பிராமாணியத்தைக் கேவலவியதிரேகியனுமானத்தாற் றுணிகின்றா னென்க. இதனைப் பிறிதாற் பிராமாணியவாத மென்பர்.

56. (ஆ.) இதில் ஒருவன் (மீமாம்சகன்) கூறுகின்றான். பிரவிர்த்திக்கு முன்னரே பிராமாணியந் துணிந்து மகன் (புனல் முதலியவற்றிற்) செல்கின்றான்; தன்னாலே பிராமாணியம் துணியப்படுதலின்.

இதன்பொருள்: எதனானே (எந்தப் பிரமாணத்தினாலே) ஞானங் கிரஹிக்கப்படும் அதனானே அதனை

கனல் என்றாற் போல்வனவாம். (2) மனவடிவப் பிரமாணத்தினாலுண்டாகும் ஞானம் அநுவியவசாயஞான மெனப்படும். இதற்கு வடிவம் புனலையா னறிகின்றேன், கனலையானறிகின்றேனென்றாற் போல்வனவாம். வியவசாய ஞானத்திற்கு விஷயம் விஷயமு (புனலு)ம், அநுவியவசாய ஞானத்திற்கு விஷயம் விஷயமு (புனலு)ம் அதன் ஞானமுமாம். ஞானத்தின் ஞானம் அநுவியவசாய மெனப் படும். (அஃதாவது திரிபுடி கோசரஞானமாம். காண்பான், காட்சி, காணப்படும் பொருள்களின் சமுதாயம் திரிபுடி யெனப்படும். திரிபுடி-மூன்றுபுறமுடையது). வியவசாய ஞானத்தின் பிரகாசம் அநுவியவசாய ஞானத்தாலும் அதன் பிரகாசம் இரண்டாவது அநுவியவசாய ஞானத்தாலும் இங்ஙன முறையே யுண்டாகின்ற தென்பது நியமம்.

யடைந்த பிராமாணியமும் (கிரஹிக்கப்படும்), (என்பது).

ஞானதருமமாகிய பிராமாணியம் கிரஹிப்பது ஞானங் கிரஹிப்பதின் (ஞானத்தைக் கிரஹிக்கும் சாமக்கிரியினும்) வேறன்று. ஆதலின், ஞானத்தைக் கிரஹிப்ப(அறிவ)தினும் வேறுகிராஹக(காரண)த்தை விரும்பாமலிருக்குந் தன்மையே பிராமாணியத்திற்குச் சுதஸ்துவம் (தன்னாற் றுணிதல்).

ஞானமும் செல்வதற்கு (பிரவிர்த்தித்தற்கு) முன்னமே கிரஹிக்கப்படும்; வேறாயின், பிராமாணிய அப்பிராமாணிய ஐயமும் எங்ஙனமுண்டாம்; தருமியை அறியாவிடத்து ஐயமுண்டாகாமையின். ஆதலின், செல்வதற்கு முன்னமே ஞாததை (ஞானத்தாலறியப்படுந்தன்மை) வேறொ (ஞானமன்றிப்பிறிதொ)ன்றாற்றோன்றாமை தோற்றுவித்த (உண்டாகாமையைத் தோன்றச்செய்த) அருத்தாபத்தியால் ஞானங் கிரஹிக்கப்படுகையில் ஞானத்தையடைந்த பிராமாணியமும் அருத்தாபத்தியானே கிரஹிக்கப்படும். பின்னர்ப் புருடன் செல்வன்.

*"முதல் ஞானமாத்திரம் கிரஹிக்கப்படும். பின்பு சென்றதற்குப்பின் பலம் (ஜலப்பிராப்தி) காண்ட

---

* இங்ஙனங் கூறுவது தார்க்கிகாது சித்தாந்தம். விருத்திப்

லால் ஞானத்திற்குப் பிராமாணியம் துணியப்படும்" என்பதன்று.

(கு-ரை.) ஞானத்தினது பிராமாணியம் ஞானத்தைக் கிரகிக்கும் பிரமாணத்தினுலேயே கிரகிக்கப்படுமென்பது மீமாம்சகர் தமதம். அவர் தோஷாபாவத்தோடு கூடிய ஞானசாமக்கிரியி (பிரமாணத்தி)னுல் ஞானத்தின் பிராமாணியம் கிரகிக்கப்படுமென்பர். தோஷமாவது சம்சயமாம். இதனைத் தன்னுற் பிராமாணியவாதமென்பர். தூரத்தினின்று பிரத்தியட்சத்தினுல் புனல் ஞானந்தோன்றிய விடத்துப் புனல் விருப்புடையோன் அந்த ஞானத்தினது பிராமாணியத்தை அந்த ஞானத்தைக் கிரகிக்கும் பிரமாணத்தினுலேயே துணிந்து செல்கின்ருனென் றவர் கூறுவர். இவர் பிறிதாற் பிராமாணியவாதத்தை அங்கீகரிப்பதில்லை.

முன்னிற்பதாகிய வோருயரமுள்ள தருமியை யறியாவிடத்து இது குற்றியோ? மகனோ? என்னும் ஐயமுண்டாகாமை போல் ஞானமாகிய தருமியை யறியாவிடத்து ஞானத்தின் பிராமாணிய அப்பிராமாணிய ஐயமுமுண்டாகா தென்பது 'தருமியை யறியாவிடத்து ஐயமுண்டாகாமையின்' என்பதன் பொருளாம். சம்சயத்தில் தர்மிஞானம் ஏதுவா மென்பது நியமம்.

பிரபாகரம் "பிறிதாற்பிராமாணியங் கொள்ளும் வாதத்தில் முதல் அநுவியவசாயத்தினுல் (புனலையா னுணர்கின்றேன் என்னும் ஞானத்தினுல்) பிரமாத்தன்மையை (பிராமாணியத்தை) விட்டு ஞானத்தன்மை விசிட்ட ஞானத்தின் (புனல் ஞானத்தின்) ஞானமுண்டாகின்றது. மீண்டும் வேறு அநுவியவசாயத்தினுலேனும் அல்லது முற்கூறிய அனுமானத்தினுலேனும் பிரமாத்தன்மையின் (பிராமாணியத்தின்)ஞானமுண்டாகின்றது." என்று கூறுவதறிக.

(பகலுண்ணாதவனது பருமை இராப்போஜனமன்றி வேறொ ராற்றா லுண்டகாமை போன்று) ஞாததை ஞானமன்றி வேறொ ராற்றால் உண்டாகாதென்பது அருத்தாபத்தியாம். ஞானமின்றி ஞாததை பொருந்ாதென ஞானம் அருத்தாபத்திப் பிரமாணத் தினல் கிரகிக்கப்படுகையில் ஞானத்தினது பிராமாணியமும் அருத்தாபத்திப் பிரமாணத்தினாலே கிரகிக்கப்படுகின்ற தென்ப தாம். எஙஙனம்? ஞானமின்றி ஞாததை பொருந்தாமைபோல ஞானத்தின் பிராமாணியமும் ஞானமின்றிப் பொருந்தாதென அருத்தாபத்தியால் ஞானத்தின் பிராமாணியம் கிரகிக்கப்படுகின்ற தென்க. இங்ஙனம் கூறியதால் ஞானமும் ஞானத்தின் பிரா மாணியமும் வெவ்வேறு பிரமாணத்தால் கிரகிக்கப்படுவதில்லை யென்பது பெறப்பட்டது. இதனுல் 'எதனானே ஞானம் கிர கிக்கப்படும் அதனானே அதனையடைந்த பிராமாணியமும் (கிரகிக் கப்படும்)' என்பது நன்கு விளங்கும். ஞானமும் அதன் பிராமாணி யமும் அருத்தாபத்திப் பிரமாணத்தினாலே கிரகிக்கப்படுமென் பது இதனது திரண்ட பொருளாம்.

முதல் ஞானமாத்திரம் பிரத்தியட்ச முதலிய பிரமாணங்க ளுள் ஒன்றால் கிரகிக்கப்படும், சென்றதற்குப் பிறகு பலன் காண்ட லால் ஞானத்தின் பிராமாணியம் அனுமானத்தால் துணியப்படும் என்னும் தார்க்கிகரது மதம் 'என்பதன்று' என்றுமறுக்கப்பட்டது.

(ச.) இதிற்கூறுதும். ஞாதத்துவம் (அறியப்படுந் தன்மை) வேறொன்றாற் றோன்றாமை தோற்றுவித்த அருத்தாபத்தியால் ஞானம் கிரஹிக்கப்படும் என்று யாது கூறப்படும் அதுவே உடன்பாட்ட (சம்மதிப் பட்ட) தன்று. அதனு (அருத்தாபத்தியா)ல் பிரா

மாணியம் கிரஹித்தல் சேய்மைக் கண்ணே நீக்கம் (வெகுதூரத்தே தள்ளப்பட்டது). அங்ஙனமன்றோ, பர (மீமாம்சக) னுடைய அபிமதம் (கொள்கை) ஈதன்றோ? குடமுதலிய விடயஞானம் தோன்றுழி என்னு லறியப்பட்டது இக்குடமென்று குடத்திற்கு ஞாதத்துவம் துணியப்படும். ஆதலின், ஞான முண்டாகையில் ஞாததை யென்றொரு தருமம் பிறக்கு மென்று அனுமிக்கப்படும். அதுவு (ஞாத தையு)ம் ஞானத்திற்குமுன் பிறவாமையின் ஞானம் பிறக்கையிற் பிறத்தலின் அந்வய வியதிரேகங்களால் ஞானத்தாற் பிறக்குமென்று துணியப்படும். இங் ஙனம் ஞானத்திற்பிறந்த இஞ்ஞாததை யென்றொரு தருமமுண்டு. அதுவும் ஞானமல்லாமற் பொருந் தாது; காரண (ஞான) மன்றிக் காரியம் (ஞாததை) தோன்றாமையின்.

ஆதலின், அந்த அருத்தாபத்தியால் அத (ஞாத தையி)ன் காரணஞானம் ஞாததையால் துணியப்படு மென்பது கூடாது; ஞான விடயதை (விஷயத்தன் மை)க்கு வேறான ஞாததையின்மையின்.

(கு-ரை) இக்குடம் என்னாலறியப்பட்டது; குடஞானந் தோன்றுகையால்; படம்போல என்பது அனுமானம். புகையைக் கண்டவிடத்துத் தீயுண்டென் றனுமிக்கப்படுதல் போன்று ஞான முண்டான விடத்து ஞாததை யென்றொருதருமம் பிறக்குமென் றனுமிக்கப்படு மென்றவாறு.

ஞானமுண்டாகையில் ஞாததை யென்றொரு தருமம் பிறக்கு மென்பது அந்வயம். ஞானமுண்டாகாவிடின் ஞாததை யென்ப தொருதருமம் பிறவாதென்பது வியதிரேகம். (தீயின்றிப் புகை பொருந்தாமைபோன்று) ஞானமின்றி ஞாததைபொருந்தாமையின் ஞாததையால் அதன்காரண ஞானம் அருத்தாபத்தியால் துணியப் படுமென மீமாம்சகர் கூறுவது பொருந்தாதென ஞானத்திற்கு விஷயமாவதினும் வேருக அருத்தாபத்திக்கு விஷயமாகும் ஞாத தையென்பதொன்றின்மையின் என்பதனுல் மறுக்கப்பட்டது.

57. (ஆ.) (1.) . அற்றுயின், ஞானத்திற் பிறந்த ஞாததைக்கு ஆதாரத்துவமே யன்றோ குடமுதலிய வற்றிற்கு ஞானவிடயத்துவம்.

அங்ஙனமன்றே, தாதாத்மியத்தால் விடயதை இல்லை; விஷயவிஷயியான குடஞானங்கட்குத் தாதாத் மிய (அபேத) மின்மையின். (2) (ஞானம்) அதனிற் (ஞாததையிற்) றோன்றலால் (ஞாததைக்கு) விடயத் துவங்கூறில் இந்திரியங்கட்கும் விடயத்துவம் வரும்; இந்திரியங்களாலும் அந்த ஞானந் தோன்றுதலின்.

ஆதலின், இது (3) அநுமிக்கப்படும். ஞானத்தாற் குடத்தில் ஒன்று (சிறிது ஞாததை) பிறப்பிக்கப்படும்; (4) எதனுல் குடமே அந்த ஞானத்திற்கு விடயமாம், வேறன்றென்று. ஆதலின் (5) விடயத்துவம்(ஞாததை யின்றி) வேறென்றுற் றேன்றுமை தோற்றுவித்த

அருத்தாபத்தியால் ஞாததை அறியப்படும்; காட்சி மாத்திரையானே (பிரத்தியட்சத்தாலே) யன்று.

(கு-ரை.) (1) ஞானத்தாலுண்டான ஞாததைக்கு (அறியப் படுந்தன்மைக்கு) ஆதாரமாயிருக்குந் தன்மையே கடாதிகளுக்கு ஞானத்திற்கு விஷயமாந்தன்மையாம்.

(2) ஞாததையினின்று ஞானந்தோன்றுதலால் ஞாததைக்கு விஷயத்தன்மை யிருக்கின்றதெனின் அந்தஞானம் இந்திரியங்களி னின்றும் தோன்றுதலால் அவற்றிற்கும் விஷயத்தன்மைவரல் வேண்டும்; இஃததிவியாப்திக் குற்றமாம். அங்ஙனமின்மையின் அது பொருந்தாது.

(3) இக்கடம் ஞானத்திற்கு விஷயமாம்; ஞாததை யென்னும் தருமத்துடன் கூடி யிருத்தலின்; யாது ஞாததையென்னும் தருமத்துடன் கூடியிருப்பது அது ஞானத்திற்கு விஷயமாம்; படம்போல என்பது அநுமானம்.

(4) எதனல் (எந்தஞாததையால்) குடமேஅந்தஞானத்திற்கு விஷயமாக மற்றொன்றாகவில்லையோ அப்படிப்பட்ட ஒன்று குடத்திற் சிறிதுண்டாகின்றதென்பதாம்.

(5) குடத்தில் ஞாததையின்றி விஷயத்துவம் சம்பவியா தென ஞாததை அருத்தாபத்தியாற் சித்திக்கின்றதென்பதாம். எனவே, விஷயத்துவம் ஞாததையன்றிப் பிறிதொன்றா லுண்டாக வில்லையென்பது அருத்தாபத்தியாற் பெறப்பட்டதென்க.

(ச.) இங்ஙனமன்று; இயற்கையானே விஷயி விஷயத்துவங் கூடுதலின். பொருள் ஞானங்கட்கு இத்தன்மையவே இயற்கை விசேடம்.

எதனுல் (இயற்கை விசேடத்தால்) அவற்றிற்கு (பொருள் ஞானங்கட்கு) விஷய விஷயிபாவம் (ஏற் படுகின்றதோ அப்படிப்பட்ட இயற்கை விசேடம் பொருள்ஞானங்கட் கிருக்கின்றது). வேருயின் (இயற்கையென் றங்கீகரிக்காவிடத்து) இறப்பெதிர்வு கட்கு விடயத்துவ மின்ருதல் வேண்டும்; அவற்றில் (இறப்பெதிர்வுகளி லுள்ளபதார்த்தங்களில்) ஞானத் தால் ஞாததை தோன்றுதல் கூடாமையின்; இல்லாத தருமியின் (கடத்தின்) தருமம் (ஞாததை) தோன்று தல் பொருந்தாமையின். இன்னும் ஞாததையும் தனது ஞானவிடய மாதலின் அதன் கண்ணும் (அந்தஞாத தையிலும்) வேறு ஞாததை வரல்வேண்டும். அங்ஙன மாயின் அநவஸ்தை.

(கு-ரை.) ஒருவனது நேத்திரத்திற்கும் கடத்திற்கும் சம்பந்த முண்டானவிடத்து இச்சையின்றியும் அவனுக்குக்கடத்தின் பிரத்தி யட்சமுண்டாதல் இயல்பாயிருத்தலின் 'இயற்கையானே விஷயி விஷயத்துவங் கூடுதலின்' என்று கூறப்பட்டது.

ஞாததையும் தனது ஞானத்திற்கு விடயமா யிருத்தலின் அதனிடத்தும் வேறு ஞாததை வரல் வேண்டும்; அதுவும் தனது ஞானத்திற்கு விடயமாயிருத்தலின் அதனிடத்தும் வேறு ஞாததை வரல்வேண்டும்; அதுவும் தனது ஞானத்திற்கு விடயமாயிருத் தலின் அதனிடத்தும் வேறு ஞாததை வரல்வேண்டும் என்றிங் ஙனம் ஞாததையின் தாரையை யங்கீகரிக்கு மிடத்து வரம்பின்றிச் சேரலென்னும் அநவஸ்தா தோஷமுண்டாகின்ற தென்க.

58. (ஆ.) ஆயின் வேறு ஞாததையின்றியும் இயற்கையானே ஞாததைக்கு ஞானவிடயத்துவமென்னில்,

(ச.) குட முதலியவற்றிலும் (இயற்கையானே ஞானத்திற்கு விஷயமாந்தன்மை யிருக்கும்போது) ஞாததையால் யாது பிரயோசனம்? ஆயினும் (குட முதலியவற்றில் ஞாததையிருப்பினும்) பிராமாணியம் எதனால் கிரகிக்கப்படுகின்றது?

(ஆ.) ஞாததையால் ஞானமாத்திரம் கிரகிக்கப் படுகின்றது. பிரமாண ஞானம் நீங்காத ஞாததை விசேடத்தால்பிராமாணியம் கிரஹிக்கப்படும்(எனின்)

(ச.) பிராமாணியத்திற்கு ஞானங் கிரஹிப்ப தானே கிரஹிக்கப்படுதல் யாண்டையது?

(ஆ.) ஆயின், பிரமாணஞான நீங்காத ஒருஞாததை விசேடத்தால் ஞானப் பிராமாணியங்கள் கூடவே கிரஹிக்கப்படும்.

(ச.) இங்ஙனமாயின், அப்பிராமாணியத்திலும் இது (கிரகிக்கப்படுதல்) கூறலாம்; அப்பிரமாண ஞான நீங்காத ஒருஞாததை விசேடத்தால் ஞான அப்பிராமாணியங்கள் கூடவே கவரப்படுமென்று. (அப்போது) அப்பிராமாணியமும் தன்னானே கவரப்படும்.

(ஆ.) இங்ஙனமாயினும், அப்பிராமாணியம் பிறிதானே (கிரகிக்கப்படுமெனின்),

(ச.) (ஞானசாமக்கிரி வேறு, பிராமாணிய சாமக்கிரிவேறு என்று பெறப்படுதலால்),

பிராமாணியமும் பிறிதானே கிரஹிக்கப்படும். ஞானங் கிரஹித்தலின் (ஞானத்தைக் கிரகிக்கும் சாமக்கிரியினும்) வேறென்பதிதன் பொருள். ஞானம் மானதக்காட்சியானே கிரஹிக்கப்படும்; பிராமாணியம் அநுமானத்தால் (கிரஹிக்கப்படும்).

அங்ஙனமன்றே,புனல் ஞானத்திற்குப்பின் புனல் வேண்டியவனது செலவு (பிரவிர்த்தி) இருவகை; பலமுடையதும்; பலமில்லது மென.

அவற்றுள், யாது பயனோடு கூடியது அது பயனுடைச்செலவு.

அத (அப்பயனுடைப் பிரவிர்த்தியி)னல் ஞானத்திற்கு மெய்ம்மை (யதார்த்தத்தன்மை) அநுமிக்கப்படும்.

(அநுமானப்) பிரயோகமும்:

விவாதத்தாற் றழுவப்பட்ட (விவாதத்திற்கு விஷயமான) புனல் ஞானம் பிரமாணம்; பயனுடைச் செலவைத் தோற்றுவித்தலான்; யாதுபிரமாணமன்று அது பயனுடைச்செலவைத் தோற்றுவியாது; எங்ஙனம்? பிரமாணப் போலி.

இது கேவலவியதிரேகி.

இதில் (இக்கேவல வியதிரேகி யனுமானத்தில்) பயனுடைச்செலவைத் தோற்றுவிப்பதானபுனல் ஞானம் யாது அது பக்கம்; அதனது பிராமாணியம் சாத்தியம்; (பிராமாணிய மென்பதற்கு) மெய்ம்மையதாமென்று பொருள்; பிரமாகரணத்துவ மன்று; நினைவில் வியபிசாரம் வருதலின்.

ஹேதுவோ சமர்த்தப் பிரவிர்த்தி ஜனகத்துவம்- பயனுடைச்செலவைத் தோற்றுவிக்குந் தன்மை.

(கு.ரை.) பயனுடைச்செலவைத் தோற்றுவிப்பதானபுனல் ஞானத்தினது பிராமாணியம் பிரமாகரணத்துவ மன்று; நினைவில் வியபிசாரம் வருதலின் என்று கூறினதினுல் பிராமாணியமும் பிரமாகரணத்துவமும் தம்முள் வேறுபட்டவை யென்பது நன்கு விளங்கும். பிராமாணியம்—பிரமாத்தன்மை (மெய்ம்மை); பிரமாகரணத்துவம்—பிரமையின் (உண்மையனுபவத்தின்) அசாதாரண காரணத்தன்மை. "பிரமைக்குக் காரணம் பிரமாணம். இதில் பிரமாணம் இலக்கியம்; பிரமாகரணத்தன்மை இலக்கணம்" என்று இதன் 9-வது பிரிவில் கூறப்பட்டிருப்பதறிக, சாத்தியம் பிராமாணியமன்று, பிரமாகரணத்துவமாமெனின் ஸ்மிருதியில்(நினைவில்)சமர்த்தப் பிரவிர்த்தி ஜனகத்துவம் இருந்தும் பிரமாகரணத்துவமின்மையின் அங்ஙனம் கூறுதல் வியபிசாரமாம். வியபிசாரம்-பிறழுதல், அஃதாவது பிரிந்திருத்தலாம்; அதனையுடையது வியபிசாரியெனப்படும். யாது அதிகதேசத்திருக்கின்றதோ அது வியபிசாரியெனப்படும். ஸ்மிருதி பிரமாகரணத்துவ மன்றென்பது மிகுபிரசித்தம். இதுவேயுமன்றிப் புனல் ஞானத்தில் பிரமாகரணத்துவமின்மையின் பாதிதமு (மறுப்புடையது)மாம்.

59. இக்கேவல வியதிரேகி அநுமானத்தால் அப்பியாச தசையி லுண்டான ஞானத்திற்குப் பிராமாணியம் *துணிகையில் அத்திருஷ்டாந்தத்தாலே புனற்செல வுக்கு முன்னரும் தத்ஜாதியத்துவ லிங்கமான (அத னது சமான குறியா)ன அந்வய வியதிரேகி அநு மானத்தால் அப்பியாசதசையை யடைந்த அந்நிய ஞானத்தினது பிராமாணியம் அநுமிக்கப்படும். ஆத லின், பிறிதானே பிராமாணியம்; ஞானங் கிரஹிப் பதானே கிரஹிக்கப்படுவதன்று.

நான்கே பிரமாணங்கள்.

† (சிறிது யுத்தியோடுகூடப் பாலர்களுக்குப் போத முண்டாமாறு கேசவமிசிரரென்னும் வித்வான் அந்தப் பிரமாணங்களைச் சாஸ்திரத்தி லுள்ளவாறு வர்ணித் தார்).

பிரமாணங்கள் கூறினும். பிரமேயங்கள் கூறுதும்.

(கு-ரை.) ஞானத்தினது பிராமாணியம் ஞானத்தைக் கிர கிக்கும் பிரமாணத்தினலேயே கிரகிக்கப்படுமென்பது விதிகோடி யென்றும், அது ஞானத்தைக் கிரகிக்கும் பிரமாணத்திலும் வேரு கிய பிரமாணத்தினல் கிரகிக்கப்படுமென்பது நிஷேதகோடி யென்றும் சொல்லப்படும். ஈண்டு விதிகோடி பூர்வபக்கமும் நிஷேதகோடி சித்தாந்தமுமாம். பிறிதாற் பிராமாணிய வாதத் தின் மறுப்பு விருத்திப்பிரபாகரம் எழாவது பிரகாசத்தில் மிகு

---

* போதிக்கப்படுகையில் என்றும் பாடமுண்டு.

† இவ்வளவு சில பிரதியில் அதிகமா யிருக்கின்றது.

விரிவாய் எழுதப்பட்டிருக்கின்றது. விருப்புடையார் ஆண்டுக் காண்க. ஆண்டுப் பிறிதாற் பிராமாணியவாதங் கூறுவனவற்றுள் ஈண்டைக்கேற்பன வருமாறு:—

"பிரமாத்தன்மையினை (பிராமாணியத்தை)ப் போல ஞானத்தின்கணுள்ள அப்பிரமாத்தன்மைக்கும் (அப்பிராமாணியத்திற்கும்) பிறிதால் (அநுமானத்தினுல்) உற்பத்தியுண்டாகின்றது. ஏனெனின், பிராந்தி ஞானம் தோஷ ஜந்யமாமென்னும் வார்த்தை பிரசித்தமாம். பிரமா ஞானத்தில் தோஷம் காரணமன்றாதலின் ஞானத்தின் சாமக்கிரியி (காரணத்தி)னும் தோஷம் புறத்ததாம். அத்தோஷம் பலவகைத்தாம். இவ்வாற்ருல் ஞான சாமக்கிரியினும் தோஷம் பிறிதாம். பின்னத்தைப் பிறிதென்பர். அதனுல் (பிறிதால்) அப்பிரமையின் உற்பத்தியுண்டாகுதலால் பிறிதால் அப்பிராமாணியத்தி னுற்பத்தி யுண்டாகின்றது. அப்பிரமாத்தன்மையை அப்பிராமாணிய மென்பர். இவ்வாற்ருல் பிரமாத்தன்மைபி னுற்பத்தியும் அப்பிரமாத்தன்மைபி னுற்பத்தியும் பிறிதாலுண்டாகின்றன. அங்ஙனமே, ஞானத்தினது ஞானத்தின் சாமக்கிரியினுல் பிரமாத்தன்மையின் ஞானமுண்டாகின்ற தில்லை. ஆனுல், ஞானம் ஞானத்தன்மையென்னு மிவற்றின் ஞானம் எச் சாமக்கிரியினுலுண்டாகின்றதோ அதற்கு வேருய சாமக்கிரியினுல் பிரமாத்தன்மையின் ஞானமுண்டாகின்றது. அவ்வாறே பிரத்தியட்ச முதலிய பிரமாணங்களால் கடமுதலியவற்றின் ஞானமுண்டாகின்றது. அவ்வாறே மனசையுக்த சமவாய சம்பந்தத்தால் கடாதி ஞானங்களின் ஞானமுமுண்டாகின்றது. நேத்திர முதலிய பிரமாணங்களால் கடத்தின் ஞானமுண்டாகின்றது. அதற்கு 'இது கடம்'என்பது வடிவமாம். மனவடிவப் பிரமாணத்தால் கடஞானத்தின் பிரத்தியட்ச முண்டாகின்றது. அதற்குக் 'கடத்தையானறிகின்றேன்'என்பது வடிவமாம். கடத்தையானறிகின்றேனென்னும்

மானசஞானத்திற்கு விஷயம் கடஞானமும் கடமுமாம். எனெனின் ஞானத்தின் ஞானம் அநுவியவசாய மெனப்படும். கடமுதலியவற்றின் ஞானம் வியவசாய மெனப்படும். அநுவியவசாயத்திற்கு இது சுபாவமாம்:—அது வியவசாயத்தின் விஷயத்தை விடுவதில்லை; ஆனால் விஷயத்தோடு கூடிய வியவசாயத்தினைப் பிரகாசிக்கின்(அறிகின்)றது. இதனாற்றான் ஞானத்தின் ஞானத்திற்கு அநுவியவசாயமென்னும் பெயரிருக்கின்றது.

"வியவசாயத்தை யனுசரித்தது அனுவியவசாய மெனப்படும். எங்ஙனம் வியவசாயத்திற்குக் கடமுதலியன விஷயமோ அங்ஙனமே அநுவியவசாயத்திற்கும் கடமுதலியன விஷயமாம். ஆதலால் வியவசாயத்தை யநுசரித்தது அநுவியவசாயமாம். அநுவியவசாயத்திற்கு ஆத்மாவும் விஷயமாம். ஏனெனின், இது நியமமாம்:-ஞானம், இச்சை, கிரியை, சுகம், துக்கம், த்வேஷமென்பன ஆத்மாவின் விசேடகுணங்களாம். இவற்றுள் யாதாயினுமோர் குணம் தோற்றுமாயின் ஆத்மாவின் பிரதீதியுமுண்டாம். எதன் பிரதீதியு(ஞானமு) முண்டாகாதாயின் ஆத்மாவின் பிரதீதியும் உண்டாகாது. ஆதலால் சகல விசேடகுணங்களையும் விட்டு, ஆத்மாவின் பிரதீதியுண்டாவதில்லை. அவ்வாறே ஆத்மாவினைவிட்டுக் கேவலம் ஞானமுதலியவற்றின் பிரதீதியுண்டாவதில்லை. ஆதலால் கடஞானத்தின் ஞானமுண்டாயின் அப்போது ஆத்மாவின் ஞானமுமுண்டாகும். ஆதலால் வியவசாய ஞானத்தினையும் அதன் விஷயமான கடத்தையும், அங்ஙனமே வியவசாயத்தின் ஆசிரயமான ஆத்மாவையும் கடத்தையானறிகின்றே னென்னும் ஞானம் பிரகாசிக்கின்றது. இதனாற்றான் திரிபுடிகோசரஞானம் அநுவியவசாயமெனப்படுகின்றது. அநுவியவசாய ஞானத்திற்குக் கரணம் மனமாம். ஆதலால் சகல விஷயங்களோடும் மனத்திற்குச் சம்பந்தங் கூறல் வேண்டும். எங்ஙனம் கடம், ஞானம், ஆத்மா என்பன விஷய

மாகின்றனவோ அங்ஙனமே கடத்தன்மை, ஞானத்தன்மை, ஆத்மத்தன்மைகளும் கடஞானத்தின் ஞானத்திற்கு விஷயமாம். கடஞானத்திேைடு மனதின் சுவசையுக்த சமவாய சம்பந்த மிருக்கின்றது. ஞானத்தன்மையினேடு சுவசையுக்த சமவேதசமவாய சம்பந்தமிருக்கின்றது. ஆத்மாவோடு சுவசையோக சம்பந்தமிருக்கின்றது. ஆத்மத்தன்மையோடு சுவசையுக்த சமவாய சம்பந்தமிருக்கின்றது. கடத்தினேடு மனதின் சம்பந்தமோ பிரத்தியக்ஷத்திற்கு ஏதுவாகாது. ஏனெனின் பாகிய பதார்த்தத்தின் ஞானம் சுதந்திர மனதினு லுண்டாகிறதில்லை. ஆதலால் கடத்தினேடு மனதிற்கு அலௌகிக சம்பந்தத்தைச் சொல்லுதல் வேண்டும். இலௌகிக சம்பந்தத்தினுல் பாகிய பதார்த்தத்தின் ஞானம் மனதினுலுண்டாகிற தில்லை. அலௌகிக சம்பந்தத்தினுல் பாகிய பதார்த்தத்தின் ஞானமும் மனதினுல் உண்டாகின்றது. அந்த அலௌகிக சம்பந்தமும் ஞானலக்ஷணமாம். அநுவியவசாய ஞானத்தின் விஷயமாகிய வியவசாயஞான மெதுவோ அதுவே மனதிற்குக் கடத்தோடுள்ள சம்பந்தமாம். அதன் சொரூபமிதுவாம்:—சுவசையுக்த சமவேத ஞானம் அல்லது சுவசையுக்த சமவேத ஞானவிஷயத் தன்மை கடத்தோடு மனதிற்குள்ள சம்பந்தமாம். ஞானலக்ஷண வாக்கியத்தில் இலக்ஷணசப்தத்திற்குச் சொரூபமெனப் பொருள் செய்யின் அப்போது முதற்சம்பந்தமாம். இலக்ஷணசப்தத்திற்கு ஞாபகம் (அறிவிப்பது) எனப்பொருள் கொள்ளின், அப்போது இரண்டாவது சம்பந்தமாம். சுவவெனும் சொல்லிற்குப் பொருள் மனமாம். அதனேடு சையுக்த ஆத்மத்தன்மையிற் சமவேதம் வியவசாய ஞானமாம். அது கடத்திலிருக்கின்றது. ஆதலால் முற்கூறிய ஞானமே கடத்தில் மனதின் சம்பந்தமாயிருத்தலின் கடத்தின் மானச ஞானமாகின்றது. இரண்டாவது பக்ஷத்திற்கூறிய ஞானத்தின் விஷயத்தன்மைவடிவ சம்பந்தம் கடத்திலிருக்கின்றது. விய

வசாயஞானத்தின் விஷயம் கடத்தன்மை படத்தன்மை யென்னு மிரண்டுமாம். ஆதலால் வியவசாயவடிவ சம்பந்தத்தால் அநுவியவ சாயஞானத்திற்கு இரண்டும் விஷயமாம். இவ்வாற்ருல் கடஞான முதலியன அநுவியவசாய ஞானத்திற்கு விஷயமாம். ஆதலால் ஞானத்தின் ஞானம் அநுவியவசாயமாம். அதன் சாமக்கிரி மன சையோகமுதலிய வடிவினதாம். அதனுல் ஞானத்தின் ஞானமும் ஞானத்தன்மையின் ஞானமு முண்டாகின்றன; பிரமாத்தன்மை யின் ஞான முண்டாகிறதில்லை. ஆனுல் ஞானமுண்டாய்ப் புருஷ னுக்கு ஸபலப் பிரவிருத்தியுண்டாயின், அதற்குப் பிற்காலத்தில் பிரவிருத்தியை யுண்டுபண்ணும் ஞானத்தில் பிரமாத்தன்மையின் அநுமிதிஞான முண்டாகின்றது.

"எங்ஙனம்? தடாகத்தில் ஜலத்தின் பிரத்தியக்ஷ ஞானத்தி னுல் ஜலவிருப்புடையோனுக்குப் பிரவிருத்தியுண்டாய் ஜலத்தின் லாபமுண்டாகின்றது: அப்போது புருஷனுக்குஇவ்வாறுஅநுமான முண்டாகின்றது:—'இந்த ஜலஞானம் பிரமை; சபலப்பிரவிருத் தியை யுண்டுபண்ணுவதாயிருத்தலின்; யாண்டுச் சபலப்பிரவிருத் தியையுண்டுபண்ணுந் தன்மையுளதோ ஆண்டுப் பிரமாத்தன்மை யுளது; நிச்சயிக்கப்பட்ட பிரமையைப்போல்'. ஈண்டு வர்த்தமான ஜலஞானம் பக்ஷம். அனுமான காலத்தில் ஜலஞானம் அதீதமா (ஈழிந்ததா)யினும், வர்த்தமானத்திற்குச் சமீபித்த இறப்பு மெதிர் வும் வர்த்தமான மென்றே சொல்லப்படுகின்றன. இதனுல் வர்த்த மான ஜலஞானமே பக்ஷமாகச் சொல்லப்பட்டது; அதீதமாகச் சொல்லப்படவில்லை. பிரமாத்தன்மை (பிராமாணியம்) சாத்திய மாம். மேல் எது திருஷ்டாந்தங்கள் ஸ்பஷ்டமாம். வியதி ரேக திருஷ்டாந்தம் சொல்லவேண்டியதாயின், 'யாண்டு யாண்டு ஸபலப் பிரவிருத்தியை உண்டுபண்ணுந் தன்மை யில்லையோ, ஆண்டாண்டுப் பிரமாத்தன்மையில்லை; சுத்தி ரஜதத்தை அறி

தலிற்போல' என்றித்தன்மைய வாக்கியத்தினைச் சொல்லுக. இவ்வனுமானத்தாற் ஜல ஞானத்திற் பிரமாத்தன்மையின் நிச்சயமுண்டாகின்றது. இவ்வாற்றால் சகல ஞானங்களிலும் ஸபலப் பிரவிருத்தியினால் பிரமாத்தன்மையின் அநுமிதியுண் டாகின்றது. ஜலஞானத்தைக் கிரகிக்கும் சாமக்கிரி 'ஜலத்தையா னறிகின்றே' னென்னும் அநுவியவசாயத்தின் சாமக்கிரியாம். பிரமாத்தன்மையைக் கிரகிக்கும் சாமக்கிரி முற்கூறிய அநுமான மாம்; அது அநுவியவசாயத்தின் சாமக்கிரிக்கு வேருயிருத்தலின் பிறிதாம். ஆதலாற் பிறிதாற் பிரமாத்தன்மையைக் கொள்ளுத லாகின்றது. * * *

"யாது யாது ஞானத்தைக் கிரகிக்கும் சாமக்கிரியோ அது முற்றும் (ஞானத்தின்) பிராமாணியத்தைக் கிரகிப்பதாமென்பது * சித்தாந்த பட்சமாம்.

---

* ஈண்டுச் சித்தாந்தமென்றது வேதாந்தத்தை. பிரபாகரர், முராரிமிசிரர், பட்டர் என்னும் மூவகை மீமாம்சகரும், வேதாந்தி களும் தன்னாற் பிராமாணிய வாதத்தை யங்கீகரித்திருக்கின்றனர்.

(1.) பிரபாகர(குரு)மதத்தினர் ஞாதா ஞானம் ஞேயமென்னு மூன்றும் சர்வஞானங்களிலும் விளங்குகின்றன. திரிபுடி கோசர ஞானமே வியவசாயஞான மெனப்படும். அது சொப்பிரகாசமா யிருத்தலின் தன்னையும் தன்னையடைந்த பிராமாணியத்தையும் கிரகிக்கின்ற தென்பர்.

(2.) முராரி மிசிரமதத்தினர் 'இது கடம்' என்னும் வியவ சாயஞானமும், அதன் பிராமாணியமும் கடத்தையா னுணர்ந்தே னென்னும் அநுவியவசாய ஞானத்தினால் கிரகிக்கப்படுகின்றன வென்பர்.

ஞானத்தைக் கிரகிக்கும் சகலசாமக்கிரியிலும் 'ஜலத்தையா னறிகின்றேன்' என்னும் அநுவியவசாயத்தின் சாமக்கிரியும்

(3.) பட்டர்மதத்தினர் ஞானம் அதீந்திரியம். அதுவும் அதன் பிராமாணியமும் அனுமானத்தால் கிரகிக்கப்படுகின்றன வென்பர். அவர் கூறும் அனுமானம் வருமாறு:

i. இக்கடம் விஷயத்தன்மைச் சம்பந்தத்தினால் ஞான முடையதாம்; சமவாயத்தினால் ஞானத்தன்மை யுடைமையால்; யாண்டு யாண்டுச் சமவாயத்தால் ஞானத்தன்மை யுண்டு ஆண் டாண்டு விஷயத்தன்மைச் சம்பந்தத்தால் ஞானமுண்டு என்பது. ஈண்டு முன்னிருப்பதாகிய கடம் பட்சமும், விஷயத்தன்மைச் சம் பந்தத்தால் ஞானமுடைமை சாத்தியமுமாம்.

ii. யான் கடத்தன்மையை விசேடணமாக வுடைய ஞானத்தையுடையேன்; கடத்தன்மையை விசேடணமாக வுடைய ஞாததை யுடைமையின் என்பது. ஈண்டு ஞாததையின் பிரத்தி யட்சத்தினாலே அந்த ஞானத்திற்கு விசேடண விசேடியத்தன்மை நிரூபிக்கத்தக்கதா யிருத்தலின் பிராமாணியம் அனுமிக்கப்படு கின்றதென்க.

சவிஷயமா (விஷயத்தோடு கூடியதா)யும் ஞானத்தா லுண் டாவதாயு முள்ள அதிரிக்த (வேறு) பதார்த்தம் ஞாததையாம்.

(4.) வேதாந்திகள் (விருத்திரூப) ஞானமும் அதன் பிரா மாணியமும் தோஷாபாவத்துடன் கூடிய சாட்சியினால் கிரகிக்கப் படுகின்றன வென்பர். "அவ் விருத்திஞானத்தைக் கிரகிப்பது சாட்சிஞானம். அவ்விருத்திஞானம் கிரகிக்கப்படும்போது அதன் பிராமாணியமும் கிரகிக்கப்படுகின்றது" என்று வேதாந்தபரி பாஷை கூறுகின்றது.

அடங்கியிருக்கின்றது. அதனால் பிராமாணியத்தைக் கிரகித்த லுண்டாகாமையின் சித்தாந்தபட்சத்தின் அங்கீகாரமில்லை.* * * *

"ஆதலால் ஞானத்தின் சகல ஞானங்களினும் பிராமாணியத்தின் நிச்சயமுண்டாகின்றதில்லை. ஆனல், சபல (பயனுடை)ப் பிரவிர்த்தியுண்டாகிய பின்னர் ஞானத்தினது பிராமாணியத்தின் நிச்சய முண்டாகின்றது. * * * *

"ஞானத்தினது உற்பத்தியின் சாமக்கிரியினல் பிராமாணியத்தின் உற்பத்தி யுண்டாகின்றதில்லை. அதிக சாமக்கிரியினல் பிராமாணியத்தின் உற்பத்தியுண்டாகின்றது. அங்ஙனமே, அதிக சாமக்கிரியினல் பிராமாணியத்தின் ஞானமுண்டாகின்றது. பிராமாணியத்தைப் போன்று அப்பிராமாணியமும் பிறிதா லுண்டாகின்றது. * * *

"ஞானத்தை யுண்டுபண்ணுஞ் சாமக்கிரியினல் அப்பிராமாணியத்தி னுற்பத்தியுண்டாவதில்லை. ஞானத்தை யுண்டுபண்ணுவன இந்திரிய அனுமானுதிகளாம். அவற்றில் தோஷத்தின் சகாய மிருக்குமாயின் அப்பிராமாணியத்துடன் கூடிய ஞானத்தி னுற்பத்தியுண்டாகும்."

2. பிரமேயம்—Objects of Knowledge.

60. ஆன்மா, சரிரம், இந்திரியம், அருத்தம், புத்தி, மனம், பிரவிர்த்தி, தோடம், பிரேத்தியபாவம், பலம், துக்கம், அபவர்க்கம், பிரமேய மென்பது சூத்திரம். (சு-வை.) பிரமாணத்தாலறியப்படுவது பிரமேய மெனப்படும்.

1. ஆன்மா—Self.

61. அவற்றுள், ஆன்மத்துவசாதிமான் (ஆத்மத்துவ ஜாதியோடு கூடினவன்) ஆன்மா. அவனும் தேகேந்

திரியங்களின் வேருயினன். சரீரங்கடோறும் பின்னமா(வேரு)யினன்; விபு (வியாபகன்); நித்தியன்; அவனும் மானதக் காட்சியான்; விவாதத்தில் (சந்தேக நிகழ்ந்த விடத்து) புத்தியாதி குணலிங்க முடையன்.

அங்ஙனமன்ரு, புத்தியாதிகள் குணங்கள்; அநித்தியமாய்க்கொண்டு ஓர் இந்திரியத்தால் கிரஹிக்கப் படுதலால்; ரூபம்போல.

குணமும் குணியைப்பற்றியதே. அவற்றுள்,

புத்தியாதிகள் பூதங்கட்குக் குணமல்ல; மானதக் காட்சித் தன்மையால்.

யாவை பூதங்கட்குக் குணங்கள் அவை மனத்தாற் கிரஹிக்கப்படா; எங்ஙனம்? உருவாதிகள்.

(புத்தியாதிகள்) திக்கு,காலம்,மனங்கட்குக் குணங்களல்ல; விசேடகுணமாதலின்; யாவை திக்காதி குணங்கள் அவை விசேட குணமல்ல; எங்ஙனம்? சங்கியை முதலிய. அவை எல்லாப் பொருள்கட்கும் பொதுக் குணங்கள். புத்தியாதிகள் விசேட குணங்களே; குணமாய்க்கொண் டோரிந்திரியத்தாற் கவரப்படுதலின்; உருவம்போல. ஆதலின் திக்காதிகட்குக் குணங்களல்ல.

ஆதலின் (பிருதிவிமுதல் மனமீருய) இவ்வெட்டுத் திரவியங்களினின்றும் வேருய்ப் புத்தியாதிகட்குக் குணி வேண்டத்தக்கது. அதுவே ஆன்மா.

(அநுமானப்) பிரயோகமும்:—

புத்தியாதிகள் பிருதிவியாதி அஷ்டதிரவியங்களின் வேறான திரவியத்தைப் பற்றுவன; பிருதிவியாதி அஷ்டதிரவியங்களைப் பற்றா (ஆசிரயா)மலும் குணமாதலின்; யாது பிருதிவியாதி அஷ்டதிரவியங்களின் வேறாகிய திரவியத்தைப் பற்றாது அது பிருதிவியாதி அஷ்டதிரவியங்களைப் பற்றாமற் குணமன்று; எங்ஙனம்? உருவாதி; இது கேவலவியதிரேகி.

அந்வயவியதிரேகியானும் விளக்குப. எங்ஙனம்? புத்தியாதிகள் பிருதிவியாதி அஷ்டதிரவியங்களின் வேறான பொருளைப் பற்றுவன; பிருதிவியாதிகளைப் பற்றாமலும் குணமாதலின்; யாது எதைப்பற்றாமற்குணம் அது அதின்வேறாயதைப் பற்றுவதாம்; எங்ஙனம்? பிருதிவியாதியைப் பற்றாவொலி பிருதிவியாதிக்கு வேறான வானை(ஆகாயத்தை)ப்பற்றிய தென்று.

அங்ஙனமே, புத்தியாதிகளும் பிருதிவியாதி அஷ்டதிரவியங்களின் வேறாய திரவியத்தைப்பற்றுவன(ஆசிரயித்துக்கொண்டிருப்பன). ஆதலின், இங்ஙனம் பிருதிவியாதி அஷ்டதிரவியங்களின் வேறாய் ஒன்பதாம் பொருளான ஆன்மா சித்திக்கும். அவனும் யாண்டும் காரியம் (ஞாநாதிகள்)தோன்றுதலின் விபு;(விபுவென்பதற்கு) பரமமகத்பரிமாணவா (மிகப்பெரிய அளவு

உள்ளவ) னென்று பொருள்; விபுத்துவத்தால் நித்தி யன்; வியோமம் (ஆகாயம்)போல; சுகமுதலிய வேறு பாட்டால் உடம்புகடோறும் வேறுபாடுடையான்.

(கு-ரை.) ஆன்மா: பரமான்மா சீவான்மாவென் றிருவகைத்து. இவ்விரண்டற்கும் பொதுவிலக்கணம் ஆன்மத்தன்மைப் பொதுவியல்புடைமையாம். நித்தமான ஞானத்திற் கிடனுதல் பரமான்மாவிற்கும் அநித்தமான ஞானத்திற் கிடனுதல் சீவான்மாவிற்கும் சிறப்பிலக்கணமாம்.

பரமான்மா ஈசுரன். அவன் அநாதிசுத்தனும், நித்தியனும், சுதந்தரனும், முற்றறிவனும், சர்வவுலகத்திற்கும் நிமித்தகாரணனும், சர்வானுக்கிரகங்களைச் செய்பவனும், பக்ஷபாதமின்றியவனும், சாந்தனுமாவன்.

சீவான்மா சீவன். அவன் நித்தியன், கர்த்தா, போக்தா, நாநா, வியாபகன், சுகதுக்காதிகளும், பந்தமோக்ஷமு முடையவன். சிவான்மாவுடன் அகவிந்திரியமாய மனதின் சையோகமுண்டாய விடத்து நானிருக்கிறே னென்றற் றொடக்கத்து ஞானம் நிகழ்வதால் ஜீவான்மா ஞானகுணமுள்ள காலத்துச் சேதனமாகவும், அஃ தொழிந்தகாலத்து ஜடமாகவு மிருக்கும்.

பரமான்மாசீவான்மாவென னுமிரண்டன் கண்ணும்பொதுவாயுள்ள குணங்களுள் பரமான்மாவிடத்து ஞானம், இச்சை, முயற்சி யென்பன நித்தமாயும், சீவான்மாவிடத்து அநித்தமாயுமிருக்கும். ஜீவான்மா விடத்துள்ள சிறப்புக்குணங்களியாவும் அநித்தமே. அவை: புத்தி, சுகம், துக்கம், இச்சை, துவேஷம்,முயற்சி, தர்மம், அதர்மம், பாவனையென்பன. அப் புத்தியாதிகள் உற்பத்தியுடையனவாயிருத்தலின் அநித்தியமாம். புத்தி முதலிய ஆறும் சுழுத்தியிலில்லை; இலாமையாற்றான், உறங்கி விழித்தவனுக்கு நான்

மிகவு மூடனுயிருந்தேனென்னும் ஸ்மிருதியுண்டாகின்றது. ஈண்டுக் கூறிய குணங்களுள் புத்தியாதி யாறும் மனவிந்திரியத்தா லறியப்படுவனவாம். ஏனையவை யநுமானத்தா லறியப்படுவனவாம்.

நம்மனோரால் செய்யப்படாது காரியங்களாயிருக்கும் பதார்த்தங்கட்குக் கர்த்தா எவனோ அவனே ஈசுரனுவன். அவனுண்டென்பது: (1.) அங்குர முதலியன சர்த்தாவையுடையன; காரியமாகலின்; கடம் போல. (2) துவியணுகம் கர்த்தாவையுடையது; காரியத்தன்மையால்; கடம்போல என்னு மனுமானங்களால் நிச்சயிக்கப்படும். உபாதான காரணத்தை விளங்கக்காணு மறிவிச்சை செயல்களையுடைய பொருள் கர்த்தாவெனப்படும். தேகேந்திரியாதிகளினும் வேறாய், சரீரங்கள் தோறும் பின்னமாய், • விபுவாய், நித்தியமாய், மனதா லறியத்தக்கதா யிருக்கும் ஜீவான்மா சரீரத்தை யியங்கச்செய்கின்ற தென்பது. சரீரம் கர்த்தாவையுடையது; இயங்குதலால்; கோடரிபோலும் என்னும் அனுமானத்தினால் நிச்சயிக்கப்படும்.

யாது எனதென்று கூறப்படுகின்றதோ அது யான் என்னுஞ் சொல்லிற்குப் பொருளாகா தென்பது நியமமாம். யாண்டும் யானென்னுஞ் சொல்லிற்குப் பொருள் ஆன்மாவேயாம். தேக முதலியவை என துடல், என திந்திரியம், எனது பிராணன் எனக் கூறப் படுதலின் அவை யொருபோதும் ஆன்மாவாகா; யானென்பதற்கு எனதென்பது யாண்டும் வேறாயே யிருத்தலின்.

(1) யான் என்னும் புத்திக்கு விஷயமாவது ஆத்மா; அல்லது பரமப்பிரீதிக்கு விஷயமாயிருப்பது ஆன்மாவாம். யான் மனிதன் யான் பிராமணன் என்றற்றொடக்கத்துஞானத்திற்கு விஷயமாயும்

•தார்க்கிகருள் ஒரு சாரார் கர்த்தா போக்தாவாயும் நானாவாயு முள்ள ஆன்மா அணுவடிவ மென்பர்.

பரமப்பிரீதிக்கு விஷயமாயு மிருப்பது சரீரமே யாகலின் சரீரமே ஆத்மாவாமெனின்: எனது சரீரமென்று கூறப்படுதலானும் யான் கண்டேன் கேட்டேன் என இந்திரியமும் யானென்னும் புத்திக்கு விஷயமா யிருப்பதானும் மின்னல் முதலியவை யுண்டாயபோது கண் முதலியவற்றை மூடிக்கொள்ளுதல் முதலியவற்ருல் இந்திரியமும் பரமப்பிரீதிக்கு விஷயமாதலானும் சரீரத்தின் கைகால் முதலியவை நசித்தவிடத்து ஆன்மாவும் நசித்ததெனல் வேண்டுமாதலானும், சரீரமே ஆன்மாவாயின் செய்தது அனுபவமின்றிக் கெடுதல், செய்யாதது அனுபவத்திற்கு வருதலென்னும் குற்றம் சம்பவிக்குமாதலானும் அது கூடாது.

(2) யான் பார்க்கிறேன், யான் கேட்கிறே னென்றற் ருெடக்கத் துணர்ச்சிக்கு விஷயமாயிருப்பது இந்திரியமா யிருத்தலினுனும், ஜீவனமரணங்கள் இந்திரியத்தின் வசமாயிருத்தலினுனும் இந்திரியமே ஆத்மாவாமெனின்: ஜீவனமரணங்கள் பிராணன் வசமாயு மிருத்தலினுனும், எனது செவி எனது கண் என்று வழங்கப்படுதலினுனும், அது பொருந்தாது. மேலும் இந்திரியமே ஆத்மாவென்னுமிடத்து i. ஒரே இந்திரியம் ஆத்மாவா? ii. இந்திரிய சமுதாயம் ஆத்மாவா? iii. ஒவ்வொரு இந்திரியமும் தனித் தனியே ஆத்மாவா? i. ஒரே இந்திரியம் ஆத்மாவென்னு மிடத்து எவ்விந்திரியம் ஆத்மாவாகச் சொல்லப்படுகின்றதோ அது நசித்த விடத்து ஆத்மாவும் நசித்ததெனல் வேண்டும். அங்ஙனமின்றி ஞானமும் ஜீவனமும் காணப்படுதலின் ஒரே இந்திரியம் ஆத்மாவென்பது பொருந்தாது. ii. இந்திரியங்களின் சமுதாயம் ஆத்மாவென்னுமிடத்து ஒரிந்திரியம் நசித்தவிடத்துச் சமுதாயமும் நசித்ததெனல்வேண்டும். iii. ஒவ்வொரு இந்திரியமும் தனித்தனியே ஆத்மாவென்னுமிடத்து இந்திரியங்க ளாருதலின் ஒவ்வொரு சரீரத்திலும் அவ்வாறு ஆத்மாக்க ளிருத்தல்வேண்டும். அவ்வெல்லா

வற்றின் தனித்தனி யிச்சையினல் ஒரு வாழைமரத்திற் கட்டப் பட்ட ஆறு யானைகளால் அம்மரம் நாசமாவதுபோன்று சரீரமும் நாசமாதல்வேண்டும். ஒருவன் அனுபவித்ததைமற்றொருவன் ஒட்டி யுணர்தல் சம்பவியாதென்பது நியமமாதலின் கடத்தைக் கண்ட யானே கடத்தைத் தீண்டினேனென்னும் தொடர்ந்த அனுபவ மும் நிகழா தொழிதல் வேண்டும்.

(3) பிராணனிருப்பதால் ஒருவன் ஜீவித்திருப்பதாகவும், அஃதில்லாவிடத்து மரித்ததாகவும் கருதப்படுதலின் பிராணனே ஆத்மாவாமெனின்: அது புத்தியாதிகுணங்கட் கிடமாகாது கேவ லம் ஜடமாகவே யிருத்தலினனும் மூர்ச்சையடைந்துள்ள புருஷ னிடத்துப் பிராணன் காணப்படாமைபற்றி அவனிறந்தானென்று கூறுவா ரொருவரு மின்மையானும் அது பொருந்தாது.

புத்தி முதலிய குணங்கட் கிடமாயிருப்ப தெதுவோ அதுவே ஆன்மாவா மென்பதற்கு அனுமானங்கள் கூறப்பட்டனவென்க.

'மனமென்னும் அகவிந்திரியத்தா லெப்போது ஆன்மவிடய ஞானம் நானென்று தோன்றும் அப்போது மனம் இந்திரியம், ஆன்மா பொருள், அவற்றினது சந்நிகர்ஷம் ஸம்யோகமே' என்று முன்னர்க் கூறியிருப்பதனல் ஆன்மா மானதக்காட்சியா னென்பது நன்கு விளங்கும்.

ஆத்மா வென்பது சரீரமா? இந்திரியமா? பிராணனு? என்று சந்தேகந்தோன்றிய விடத்து ஆத்மா இவற்றினும் வேறென்பதன் பொருட்டுப் 'புத்தியாதி குணலிங்க முடையன்' என்று கூறப்பட் டது. மலையில் தியுண்டென் றறிதற்குப் புகை சிறந்த குறியாயிருத் தல் போன்று தேகாதிகளினும் வேறாய் ஆன்மாவுண்டென் றறி தற்குப் புத்தியாதிகள் சிறந்த குறிகளாயிருக்கின்றனவென்க.

'புத்தியாதிகள் விசேட குணங்களே' என்னு மனுமானத்தில் ரூபம் கண்ணிந்திரியத்தினுல் மாத்திரம் அறியப்படுவது போன்று புத்தியாதிகள் மனவிந்திரியத்தால் மாத்திரம் அறியப்படுகின்றன வென்பதாம்.

தர்மாதர்ம முதலியவை யொழிந்த விசேட குணங்கள் ஒவ்வோரிந்திரியத்தாற் கவரப்படுவனவாம்.

சீவான்மாவிற்குரிய சங்கியைமுதல் பாவனை ஈருயுள்ளகுணங்கள் பதினுன்கனுள் புத்திமுதலியவை விசேடண குணங்களாம். திக்காதிகளுக்குரிய பொதுக்குணங்கள் சங்கியை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், குருத்துவம், நைமித்திகத்திரவத்துவம், வேகம், திதித்தாபகம் என்பனவாம்.

விபுத்திரவியமும் பரமாணுத்திரவியமும் நித்தமென்பது நியமம்.

யானென்னு முணர்ச்சியின் வேறுபாடிருப்பதானும், தேகங்கள்தோறும் யான் பிராமணன் யான் க்ஷத்திரியனென்னும் வேறுபாடு காணப்படுவதானும், அவன் அவள் அது நான் நீ யென்னும் வியவகாரம் நிகழ்வதானும், சுகதுக்கங்களின் வேறுபாடுடைமையானும், ஆத்மா வுடல்கள்தோறும் வேறுபாடுடையதாமென்க.

சீவான்மா வொவ்வொன்றும் வியாபகமாயின் வியாபகமான பல ஆத்மாக்களும் ஓரிடத்து எங்ஙனமிருத்தல் கூடும்; ஒரு கையின் சையோகமுள்ளவிடத்து மற்றொருகையின் சையோகமின்மையினெனின், சமானதேசத்திருத்தல் மூர்த்தத்திரவியங்களுக்கு விரோதமாமேயன்றி அமூர்த்தத்திரவியத்திற் காகாமையின் அது பொருந்தாது. காலமும் ஆகாயமும் வியாபகமாயிருந்தும் ஓரிடத்திருத்தல் காண்க.

2. சரீரம்—Body.

62. அவனு (சிவனு)க்குப் போகாயதனமா (போக நிலமா)ன அந்தியாவயவி சரீரம்; இன்பதுன்ப அநுபவம் போகம்; அது (போகம்) எதனேடு கூடிய ஆன்மாவிற் றேன்றும் அது போகநிலம்; அதுவே சரீரம்.

சேட்டாசிரய முடம்பெனினுமாம். சேட்டை- இதமகிதமடைதற் பரிகரித்தற் பொருட்டுப் புடை பெயர்தல்; புடைபெயர்தல் (அசைவு) மாத்திரையன்று.

(கு-ரை.) சீவான்மாவிற்குத் தர்மாதர்மங்களால் (இருவினைகளால்) உண்டாகும் சரீரம் அவற்றின் பயனுன சுகதுக்கங்களை அனுபவித்தற் கிடமாயிருத்தலின் அது 'போகாயதனம்' என்று கூறப்பட்டது. அது வேறு திரவியத்தை யுண்டுபண்ணுவதற்கு அவயவமாகாமைபற்றி 'அந்தியாவயவி—ஈற்றவயவமுடையது' என்று கூறப்பட்டது. அது யோநிஜம், அயோநிஜமெனவிருவகைத்து.

(1.) நம்மனேர்க்குள்ள பிரத்தியட்சசித்தமான சுக்கில சோணிதக் கலப்பினுலாகிய சரீரம் யோநிஜ மெனப்படும்; (2) சுக்கில சோணிதக்கலப்பின்றித் தர்மவிசேஷத்துடன் கூடிய பரமாணுவினுலாகிய சரீரம் அயோநிஜமெனப்படும். அது தேவரிஷிகளாகிய நாரதர் முதலியோர்க் குள்ளதாம். அயோநிஜ சரீரங்கள் வருணலோகத்திலும், ஆதித்த லோகத்திலும் வாயு லோகத்திலும், பிரசித்தமாம்.

இன்பதுன்ப அநுபவமாவது இன்பதுன்பங்கள் புலப்படத் தோன்றலாம். 'சேட்டாசிரய முடம்பெனினுமாம்' என்றது சரீரத்திற்கு மற்றோரிலக்கணமாம். சேட்டை - கிரியை; ஆசிரயம் - பற்றுக்கோடு; இதமகித மடைதற் பரிகரித்தற் பொருட்டுப் புடைபெயர்தல் என்பதற்கு இதத்தை (நன்மையை) யடைதற் பொருட்டுண்டாகிய கிரியை, அகிதத்தை (தீமையை)ப் பரிகரித்தற் (ஒழித்தற்) பொருட்டுண்டாகிய கிரியை என்பது பொருளாம்.

புடைபெயர்தலைமாத்திர முடையது சரீரமன்றென்று விளக்கப் 'புடைபெயர்தன் மாத்திரையன்று'என்று கூறப்பட்டது. காற்று முதலியவற்றின் புடைபெயர்ச்சி இதமகிதமடைதற் பரிகரித்தற் பொருட்டாகாமையின் அதனையுடைய காற்று முதலியன சரீரமாகா. சரீரத்தின் புடைபெயர்ச்சி யாண்டும் இதத்தை யடைதற் பொருட்டாவது அகிதத்தைப் பரிகரித்தற் பொருட்டாவதிருத்தலை யூகித்துணர்க.

3. இந்திரியம்.

Instrument of objective knowledge.

63. உடம்போடு சையுக்தமாய ஞானகரணமான அதீந்திரியம் இந்திரியம் (உணர்கருவி).

'அதீந்திரியம் இந்திரியம்' என்று கூறின் காலாதியினும் இந்திரியத்துவம் வரல்வேண்டும்; ஆதலின் 'ஞானகரணமான' என்று கூறப்பட்டது. அங்ஙனமாயினும், பொருள் இந்திரிய ஸந்நிகருஷ (சம்பந்த) முதலியவற்றினும் இந்திரியத்துவம் வரல்வேண்டும்;

ஆதலின் 'உடம்போடு சையுக்தமாய' என்று கூறப் பட்டது.

'உடம்போடு சையுக்தமாய ஞானகரணம்' என்று கூறின் ஆலோகத்தி (பிரபை-ஒளியி)னும் இந்திரியத் துவம் வரல்வேண்டும்; ஆதலின் 'அதீந்திரியம்' என்று கூறப்பட்டது.

(கு-ரை.) அதீந்திரியம்—இந்திரியத்திற்கு விஷயமாகாமை. அதீந்திரியம் இந்திரியமென்று கூறின், காலம் திக்கு முதலிய வைகளும் அதீந்திரியமா யிருத்தலின் அவற்றினும் இந்திரியத் தன்மை வரல்வேண்டும். அவற்றிற் செல்லு மதிவியாத்தியைப் பரிகரித்தற் பொருட்டு 'ஞானகரணமான' என்று கூறப்பட்டது. காலாதிகள் அதீந்திரியமாயினும் ஞானகரணமன்று. ஞானகரணம் இந்திரியமென்று கூறப்படுமாயினும், பொருளிந்திரிய சம்பந்தமும், அனுமான முதலியவைகளும் ஞானகரணமா யிருத்தலின் அவற்றினும் இந்திரியத்தன்மை வரல்வேண்டும். அவற்றிற் செல் லும் அதிவியாத்தியைப் பரிகரித்தற் பொருட்டு 'உடம்போடு சையுக்தமாய' என்று கூறப்பட்டது. பொருளிந்திரிய சந்நிகர்ஷ முதலியவை ஞானகரணமாயிருப்பினும் உடம்போடு சையோகசம் பந்த முடையனவா யிருப்பனவன்று. உடம்போடு சையுக்தமாகிய ஞானகரணம் இந்திரியம் என்று கூறின் உடம்போடு கூடிய ஆலோ கமும் ஞானகரணமாயிருத்தலின் ஆலோகத்தினும் இந்திரியத் தன்மை வரல்வேண்டும். அதிற் செல்லும் அதிவியாத்தியைப் பரி கரித்தற் பொருட்டு 'அதீந்திரியம்' என்று கூறப்பட்டது. இங்ஙனம் கூறியதினால் இந்திரியத்திற்குக் கூறிய இலக்கணம் நல்லிலக்கண மென்பது நன்கு விளங்கும்.

சத்தமல்லாத உற்பூத விசேட குணங்கட்கு ஆசிரயமாகாது ஞானத்திற்குக் காரணமான மனசையோகத்திற்கு ஆசிரயமாயுள்ளது இந்திரியம் என்பதும் இந்திரியத்திற் கிலக்கணமாம்.

64. அவ்விந்திரியங்களும் ஆறு:—
i. கிராணம், ii. இரசநம்,
iii. சட்சு, iv. துவக்கு,
v. சுரோத்திரம், vi. மனம் என்பனவே.

i. கிராணம்—THE SENSE OF SMELLING.

65. அவற்றுள் கந்தத் தோற்றச் சாதந (வாசனையறிதற்குச் சாதனமான) இந்திரியம் கிராணம்; மூக்குநுனியி லிருப்பது. அதுவும் பிருதிவிமயம் (பிருதிவியின் காரியம்); கந்தமுடைமையின்; குடம்போல.

கந்தமுடைமையும் (கிராணேந்திரியம் கந்தத்தை யுடைத்தா யிருத்தலும்) கந்தங் கவர்வதால். எவ்விந்திரியம் உருவாதி ஐந்தனுள் எக்குணத்தைக் கவரும் (அறியும்) அவ்விந்திரியம் அக்குணத்தோடு கூடியது. எங்ஙனம்? சட்சு உருவங்கவர்வது; உருவத்தையுடையது. அதுபோலக் கிராணம் கந்தத்தைக் கவர்வதும் அதனால் கந்தத்தை யுடையதுமாம்.

(கு-ரை.) கந்தம்-நாற்றம். கந்தப்பிரத்தியட்சத்திற்குச் சிறந்த காரணம் - கிராணேந்திரியமாம். பிருதிவியின் காரியமான குடம் கந்தமுடைத்தா யிருத்தல்போன்று பிருதிவியின் காரியமான மூக்கிந்திரியமும் கந்தமுடைத்தா யிருக்கின்றதென்றும், உரு

வத்தை யறியும் கண்ணிந்திரியம் உருவத்தை யுடைத்தாயிருத்தல் போன்று கந்தத்தையறியும் மூக்கிந்திரியமும் கந்தத்தை யுடைத்தாயிருக்கின்ற தென்றும் உணர்த்தப்பட்டன.

ii. இரசநம்—THE SENSE OF TASTING.

66. இரசத்தோற்றச் சாதந இந்திரியம் இரசநம்; நாநுனியி லிருப்பது. அதுவும் அப்புமயம்; ரூபாதி ஐந்தனுள் இரசத்திற்கே * அபிவியஞ்சகத் திரவியத்துவ மாதலின்; வாய்நீர்போல.

(கு-ரை.) இரசம்-சுவை. இரசப் பிரத்தியட்சத்திற்குச் சிறந்த காரணம் இரசநேந்திரியமாம். ரூபாதி ஐந்து-சப்த, பரிச, ரூப, ரச, கந்தங்கள். வாய்நீர் இரசத்தைப் பிரகாசஞ் செய்தல்போல இரசநேந்திரியமும் இரசத்தைப் பிரகாசஞ் செய்கின்ற தென்பதாம்.

ப்ரகாசஞ் செய்தல் - அறியச்செய்தல்.

iii. சட்சு—THE SENSE OF SEEING.

67. ரூபத்தோற்றச் சாதந இந்திரியம் சட்சு; கண்மணி (கண்ணுறை கருமணியின்) நுனியி லிருப்பது. அதுவும் தேயுமயம்; ரூபாதி ஐந்தனுள் ரூபத்திற்கே அபிவியஞ்சகத் திரவியத்துவ மாதலின்; விளக்குப் போல.

(கு-ரை.) ரூபம்-செம்மை முதலிய நிறம். உருவப் பிரத்தியட்சத்திற்குச் சிறந்த காரணம் சட்சு விந்திரியமாம். விளக்கு

* அபிவியஞ்சகம் - பிரகாசஞ்செய்தல். அபிவியஞ்சநம் - பிரகாசம். அபிவியங்கியம்-பிரகாசிக்கப்படுவது.

உருவத்தைப் பிரகாசஞ் செய்தல்போலச் சட்சு விந்திரியமும் உருவத்தைப் பிரகாசஞ் செய்கின்ற தென்பதாம்.

iv. துவக்கு—THE SENSE OF FEELING.

68. பரிசத்தோற்றச் சாதந இந்திரியம் துவக்கு; உடம்பெலாம் வியாபி. அதுவும் வாயுமயம்; ரூபாதி ஐந்தனுள் பரிசத்திற்கே அபிவியஞ்சகத் திரவியத்துவமாதலின்; சரீர சம்பந்தமான வியர்வுத்தன்மை அபிவியஞ்சகமான விசிறிக்காற்றுப்போல.

(கு-ரை.) பரிசம்-ஊறு. பரிசப் பிரத்தியட்சத்திற்குச் சிறந்த காரணம் துவக்கிந்திரியமாம். உடம்பெலாம் வியாபி - சரீரமுற்று மிருப்பது. (வெப்பத்தா லுண்டான) சரீரசம்பந்தமான வியர்வை நீக்கிக் குளிர்ச்சியை வெளிப்படுத்துவதற் கேதுவான விசிறிக் காற்றானது பரிசத்தோற்றத்திற் கேதுவா யிருத்தல்போலத் துவக்கிந்திரியமும் பரிசத்தோற்றத்திற்கு ஏதுவா யிருக்கின்ற தென்பதாம்.

v. சுரோத்திரம்—THE SENSE OF HEARING.

69. சத்தத் தோற்றச் சாதந இந்திரியம் சுரோத்திரம். அது முறுக்கை நிகர்த்த செவியோடு கூடிய ஆகாயமே, வேறு பொருளன்று; சத்த குணத்துவத்தால். அதுவும் சத்தத்தோடு கூடியது; சத்தங் கிரகித்தலின். எவ்விந்திரியம் ரூபாதி ஐந்தனுள் எக்குணத்தைக் கவர்வது அஃது அக்குணத்தோடு கூடியது. எங்ஙனம்? சட்சு முதலியவை உருவ முதலிய

வற்றைக் கவர்வன; ஆத்லின் உருவாதிகளுடன் கூடியவை.

சத்தங் கிரஹிப்பது சுரோத்திரமாதலின் அது சத்தகுண முடையது.

(கு-ரை.) சத்தம்-ஓசை. சத்தப் பிரத்தியட்சத்திற்குச் சிறந்த காரணம் சுரோத்திரேந்திரியமாம். இவ்விந்திரியம் நித்தமாதல்பற்றி 'வேறு பொருளன்று' என்று கூறப்பட்டது. கந்தத்தையறியும் கிராணேந்திரியம் கந்தத்தையும், இரசத்தைய:றியும் இரசநேந்திரியம் இரசத்தையும், உருவத்தையறியும் சட்சுவிந்திரியம் உருவத்தையும், பரிசத்தை யறியும் தவக்கிந்திரியம் பரிசத்தையு முடைத்தாயிருத்தல்போலச் சத்தத்தை யறியும் சுரோத்திரேந்திரியமும் சத்தத்தை யுடைத்தா யிருக்கின்ற தென்பதாம்.

vi. மனம்—Mind.

70. சுகாதி யுபலத்தி (தோற்றச்) சாதந இந்திரியம் மனம். அஃதணுபரிமாணம்.

(கு-ரை.) சுக முதலியவற்றின் பிரத்தியட்சத்திற்குச் சிறந்த காரணம் மனவிந்திரியமாம். அது நித்தியத்திரவியங்களுள் ஒன்றுதலின் 'அஃதணுபரிமாணம்' என்று கூறப்பட்டது. இவ்விந்திரியம் உருவாதியைந்தனுள் எக்குணத்தையும் சுதந்தரமா யறியுந் தன்மையுடைய தன்மையின் அக்குணங்களுள் ஒன்றேனுங் கூடியதன்றாம்.

(ஆ.) அற்றாயின், சட்சு முதலிய இந்திரியமுண்மையில் யாது பிரமாணம்?

(ச.) கூறுதும்:—அநுமானம்: ரூபாதி ஞானங்கள் கரணசாத்தியங்கள்; கிரியாத்துவமாதலின்; துணித்தற்கிரியைபோல.

(கு-ரை.) கரணமென்றது இந்திரியங்களை. சாத்தியம்-முடிக்கப்படுவது. கிரியாத்துவம்-காரியத்தன்மை முதலியன.

i. (பி.) ரூபாதி ஞானங்கள் கரண சாத்தியம்; (ஏ) கிரியாத்துவமாதலின்; (உதா) யாது யாது கிரியாத்துவம் அதுவது கரணசாத்தியம்; துணித்தற் கிரியைபோல; (உப)இதுவும் (ரூபாதி ஞானங்களும்) அங்ஙனம் (அதுபோல் கிரியாத்துவம்); (நிக) ஆதலின் இங்ஙனம் (ரூபாதி ஞானங்களும் கரணசாத்தியம்) என்பது அந்வயி.

ii. ரூபாதி ஞானங்கள் கரணசாத்தியம்; கிரியாத்துவமாதலின்; யாது யாது கரணசாத்தியமன்று அதுவது கிரியாத்துவமன்று; பரமாணுப்போல; இதுவும் (ரூபாதி ஞானங்களும்) அங்ஙனமன்று (கிரியாத்துவமன்றன்று - கிரியாத்துவமே); ஆதலின் இங்ஙனமன்று (ரூபாதி ஞானங்களும் கரணசாத்திய மன்றன்று-கரணசாத்தியமே) என்பது வியதிரேகி.

ஈண்டு யாது யாது கிரியாத்துவம் அது அது கரணசாத்தியம் துணித்தற் கிரியைபோல என அந்வய வியாத்தியும், யாது யாது கரணசாத்தியமன்று அதுவது கிரியாத்துவமன்று பரமாணுப் போல என வியதிரேக வியாத்தியு முடைமை காண்க.

துணித்தற் கிரியைக்குக் கோடரி கரணமாதல் போன்று ரூபாதி ஞானங்கட்கும் இந்திரியங்கள் கரணமாயிருக்கின்றன வென்க.

ஈண்டுக் கூறிய இந்திரியங்களில் மனமும் சுரோத்திரமும் நித்தியத்திரவியமாம். ஏனையவை பிருதிவியாதிகளின் காரியமா

யிருத்தலின் அநித்தியத் திரவியமாம். (1) கிராணேந்திரியம் பிருதிவியின் காரியம், (2) இரசநேந்திரியம் அப்புவின் காரியம், (3) துவக்கிந்திரியம் வாயுவின் காரியம், (4) சட்சுவிந்திரியம் தேயுவின்காரிய மென்றறிக.

இவ்வாறனுள் சட்சு, துவக்கு, மனமென்னு மூன்றும் திரவியத்தைக் கவர்வனவாம்; ஏனையவை திரவியத்தைக் கவர்வனவல்ல.

(1.) கிராணேந்திரியத்திற்கு மகத்துவத்தோ டொருங்கு நிற்கும் உற்பூதவுருவமுடைய கந்தமும், அதன் சாதியும், அவ்விரண்டன் சமவாயமும் பிரத்தியட்சமாம். பிருதிவிப் பரமாணுவிலுள்ள கந்தம் மகத்துவமும், வயிரமணி முதலியவற்றிலுள்ள கந்தம் உற்பூதவுருவமு முடையன வன்மையின் அவை அதற்குப் பிரத்தியட்சமாகா. கந்தத்திற்கு மூக்கிந்திரியத்தோடு நேரே சம்பந்தமில்லை; ஆனால் கந்தமுடைய திரவியத்தின் சையோக சம்பந்த மிருக்கிறது. அத்திரவியத்தில் கந்தம் சமவாயமா யிருக்கிறது. இருத்தலால் அதற்குக் கந்தம் சையுக்தசமவாய சம்பந்தத்தால் பிரத்தியட்சமாகின்றதென்க.

(2.) இரசநேந்திரியத்திற்கு மகத்துவத்தோ டொருங்கு நிற்கும் உற்பூதவுருவ முடைய இரசமும் அதன் சாதியும் அவ்விரண்டன் சமவாயமும் பிரத்தியட்சமாம். அப்புப் பரமாணுவின் இரசம் மகத்துவமும்,வயிரமணி முதலியவற்றின் இரசம் உற்பூத வுருவமு முடையன வன்மையின் அவை அதற்குப் பிரத்தியட்சமாகா. இரசத்தை நாக்கிந்திரியம் சையுக்த சமவாய சம்பந்தத்தா லறிகின்றதென்க.

(3.) (ஆலோகத்துடன் கூடிய) சட்சு (கண்) இந்திரியத்திற்கு மகத்துவத்தோ டொருங்கு நிற்கும் உர்பூதவுருவ முடைய

பிருதிவி, அப்பு, தேயுத் திரவியங்களும், அவற்றின் உருவம், எண், பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், திரவத்துவம், சிநேகம், வேகம் என்னும் குணங்களும், கருமமும், அத்திரவியங்களின் ஜாதியும், அதன் சமவாயமும், அக்குண கருமங்களின் சாதியும், அதற் கவ்விரண்டோடுள்ள சமவாயமும் பிரத்தியட்சமாம். பரமாணுவில் மகத்துவமும், வாயு முதலியவற்றில் உருவமும், பைசாச முதலியவற்றில் உற்பூதவுருவமு மின்மையின் அவை அதற்குப் பிரத்தியட்சமாகா.

(4.) துவக்கிந்திரியத்திற்கு மகத்துவத்தோ டொருங்கு நிற்கும் உற்பூதவுருவ முடைய பிருதிவி, அப்பு, தேயுத் திரவியங்களும், அவற்றின் பரிசம், எண், பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், திரவத்துவம், சிநேகம், வேகம் என்னுங் குணங்களும், கருமமும், அத்திரவியங்களின் ஜாதியும், அதன் சமவாயமும், அக்குணகர்மங்களின் ஜாதியும், அதற்கவ்விரண்டோடுள்ள சமவாயமும் பிரத்தியட்சமாம். பரமாணுவில் மகத்துவமும், ஆலோகத்தில் உற்பூதபரிசமும், வாயு முதலியவற்றில் உருவமு முடையனவன்மையின் அவை அதற்குப் பிரத்தியட்சமாகா.

(5.) சுரோத்திரேந்திரியத்திற்குச் சத்தமும், அதன் ஜாதியும், அவ்விரண்டன் சமவாயமும் பிரத்தியட்சமாம். கர்ணகோளகத்தால் வளைபட்ட ஆகாயமே சுரோத்திரேந்திரியமா யிருத்தலின் ஆகாயத்தின் குணமாகியசத்தத்திற்கும் அதற்கும் சமவாயசம்பந்த மிருக்கின்றது. அது நித்தியமாயிருத்தலின் வியாபாரமாகாது. வியாபாரம் காரியமென்பது பிரசித்தம்; ஆதலால் சுரோத்திரேந்திரியத்தால் சத்தத்தை யறியுமிடத்துச் சுரோத்திரேந்திரியம் கரணம், சுரோத்திர மனதுகளின் சையோகம் வியாபாரம், சத்தப் பிரத்தியட்சம் பலம் என்று சிலர் கூறுவர்.

(6.) மனவிந்திரியத்திற்கு ஆன்மாவும் அதன் குணமாகிய சுகாதிகளும், அவ்வான்மாவின் ஜாதியும் அதன் சமவாயமும், அக்குணங்களின் ஜாதியும் அதன் சமவாயமும் பிரத்தியட்சமாம்; ஏனைப்புறப் பொருள்கள் கிராண முதலிய இந்திரியங்கள் வாயிலாகப் பிரத்தியட்சமாம்.

எவ்விந்திரியத்தாலெது அறியப்படுகின்றதோ அவ்விந்திரியத்தாலதன் அபாவமும் அறியப்படுமென்ப தீண்டறியத் தக்கதாம்.

4. அருத்தம்—OBJECT OF WORD.

71. அருத்தங்கள் ஆறு *பதார்த்தங்கள். அவை, (1) திரவியம், (2) குணம், (3) கருமம், (4) சாமாநியம், (5) விசேடம், (6) சமவாயம் என்பனவே.

பிரமாண முதலியன ஈண்டே அடங்குவனவாயினும் பயன்படல் வசத்தால் பேதமாகக் கூறப்படும்.

(கு-ரை.) அருத்தம் (பதார்த்தம்) விதிமுகஞானத்தாலறியப்படுவது நிஷேதமுகஞானத்தாலறியப்படுவது என்றிருவகைத்தாம். விதிமுகஞானத்தின் விஷயம் பாவபதார்த்தமெனப்படும். நிஷேதமுக ஞானத்தின் விஷயம் அபாவபதார்த்தமெனப்படும். யாது உண்டென்றறியப்படுகின்றதோ அது பாவ பதார்த்தமாம்.

* சிலர் சத்தி (ஆற்றல்), சங்கியை (எண்), ஞாததை, உடைய பொருண்மை முதலியன திரவிய முதலியவற்று ளடங்காவென்பர். வேண்டியவாறே ஏவப்படுதற் றகுதியே-உடைய பொருண்மையாம். உடைய பொருண்மையை வரைந்துகொள்வது எற்றல் விலைகொடுத்தல் முதலியவற்றால் கொள்ளப்படுந்தன்மை.

யாது இல்லையென் றறியப்படுகின்றதோ அஃது அபாவ பதார்த்த மாம். இது குடம் என்புழிக் குடமென்பது விதிமுகவுணர்ச்சிக்கு விஷயமாயும், ஈண்டுக் குடமின்றென்புழிக் குடமின்றென்பது நிஷேத(விலக்கு) முக வுணர்ச்சிக்கு விஷயமாயு மிருத்தல் காண்க. திரவிய முதலிய ஆறும் விதிமுகவுணர்ச்சிக்கு விஷயமா யிருத்த லின் பாவபதார்த்தங்களாம்.

குணகரும முதலிய சகல பதார்த்தங்கட்கும் ஆதாரமா யிருத்தல்பற்றித் திரவியம் முன்னும், குணம் குணத்துவமாகிய உபாதியினால் சர்வத்திரவியங்களிலு மிருத்தல்பற்றி அதன்பின் னும், கருமம் சாமானியசகிதமாய் (கருமத்தன்மையுடன் கூடிய தாய்) இருத்தல்பற்றி அதன் (குணத்தின்) பின்னும், சாமானியம் (ஜாதி) திரவிய குண கர்மங்களை யாசிரயித்திருத்தல் பற்றி அம் மூன்றன் பின்னும், விசேடம் சமவாயத்தை அதிகரணமாக வுடைமைபற்றி அதன் (ஜாதியின்) பின்னும், சமவாயம் குண முதலியவற்றின் சம்பந்தத்தை நிரூபித்தல் பற்றி அதன் (விசே டத்தின்) பின்னுங் கூறப்பட்டன.

பிரத்தியட்சப் பிரமாணம் திரவியத்திலும் குணத்திலும், அநுமான முதலிய பிரமாணம் குணத்திலும், பிரமேயம் திரவிய முதலியவற்றிலும், சம்சயமும் பிரயோஜனமும் குணத்திலும், திருஷ்டாந்தம் திரவிய முதலிய யாவற்றிலும், சித்தாந்தமும் அவயவமும் தருக்கமும் நிர்ணயமும் வாதமும் சற்பமும் விதண் டையும் எத்துவாபாசமும் சலமும் சாதியும் நிக்கிரகத்தானமும் குணத்திலும் பெரும்பான்மையு மடங்குவ தாகித்துணர்க.

திரவிய முதலியவற்றின் இலக்கணத்தைமாத்திரங் கூறின் பிரமாண முதலியவற்றின் இலக்கணம் விளங்காதாதலின் அதுபற் றிப் பிரமாண முதலியவை பேதமாகக் கூறப்பட்டன வென்க.

(i.) திரவியம்—SUBSTANCE.

72. அவற்றுள், சமவாயி காரணம் திரவியம்; அல்லது குணாசிரயம். அத்திரவியங்களும் (i.) பிருதிவி, (ii.) அப்பு, (iii.) தேயு, (iv.) வாயு, (v.) ஆகாசம், (vi.) காலம், (vii.) திக்கு, (viii.) ஆன்மா, (ix.) மனம் என ஒன்பதே.

(கு-ரை.) திரவியத்திற் கிலக்கணம் குணாசிரயம் (குணத்திற்றுப் பற்றுக்கோடு) என்பதே அமையுமாயினும், முதற்கணத்திற் றோன்றி யழிவுபடுங் கடத்தின்கண் குணமின்மையின் ஆண்டவ்வியாத்திக் குற்றம் வருதல்பற்றிச் 'சமவாயி (முதற்) காரணம் திரவியம்' என முன்னர்க் கூறப்பட்டது. காலம், திக்கு என்னு மிரண்டும் சர்வ காரியங்கட்கும் நிமித்த காரணமென்று கருதப்படு மாயினும் அவை தம்மிடத்துள்ள சையோக முதலியவற்றிற்குச் சமவாயி காரணமா யிருத்த லறிக. பிருதிவி முதலிய நான்கும் பரமாணு (நிரவயவம்) சாவயவம் (அவயவத்துடன் கூடியது) என இருவகைப்படு மென்றும், ஆகாய முதலிய நான்கும் விபுரூபங்களென்றும், மனம் அணுரூபமென்றும், பரமாணுக்களும், துவியணுகங்களும், வாயு, ஆகாயம், காலம், திக்கு, மனம் என்பவைகளும் அப்பிரத்தியக்ஷங்களென்றும், ஆன்மா மானதப்பிரத்தியக்ஷமென்றும், மகத்துவ உற்பூத வுருவமுடைய பிருதிவி அப்பு தேயு என்பன புறவிந்திரியப் பிரத்தியக்ஷங்க ளென்றும், ஆகாயம், காலம், திக்கு, ஆன்மா, பரமாணுக்கள், மனம் என்பன யாதொன்றன் கண்ணும் சமவாயசம்பந்தத்தா லிருத்த லில்லையென்றும், பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் என்னும் ஐந்தனிடத்தும் பூதத்தன்மை யுள்ளதென்றும், பிருதிவி அப்பு தேயு வாயு மனம் என்னும் மைந்தனிடத்தும் மூர்த்தத்தன்மையும் கிரியையுமுள்ளன வென்றும், பிருதிவி அப்பு

தேயு வாயுக்களென்னு மிந்நான்கும் திரவிய சமவாயி காரணங்களென்றும் காலமுந் திக்கும் சர்வகாரியங்கட்கும் நிமித்த காரணமென்றும் பிறவு மறிக.

பூதத்தன்மையாவது பகிரிந்திரியத்தாற் கிரகிக்கப்படும் விசேடகுண முடைமை.

மூர்த்தத்தன்மையாவது கிரியையின் சமவாயி காரணத்தால் வரைந்துகொள்வதானே சித்திக்கும் ஜாதி விசேடம்.

இருளென்பதுந் திரவியமாயிருக்க அதனைவிட்டுத் திரவியம் ஒன்பதென்றது என்னையெனின், இருள் ஆலோகத்தி னபாவமாயிருத்தலின் அது கூடாது.

இருள் விதிமுக வுணர்ச்சிக்கு விஷயமாயும் கருமைக்குணத்திற்கு ஆசிரயமாயு மிருத்தலின் அது திரவியமாமென்பர் * சிலர். பிரளயம் (லயம்) அநவதானம் (பராமுகமா யிருத்தல்) விநாசம் முதலியவை விதிமுக வுணர்ச்சிக்கு விஷயமா யிருப்பினும் அபாவ வடிவா யிருப்பதுபோலும் துக்காபாவத்தில் சுகஆரோபமிருப்பதுபோலும்ஆலோகத்தின் அபாவமாகிய இருள் விதிமுகவுணர்ச்சிக்கு விஷயமாயும், அதில் கருமைக்குண மாரோபமாயுமிருத்தலின் அங்ஙனங் கூறுதலடாது. ஆலோகத்தின் ஞானபாவம் இருளென்பர் சிலர். ஞானபாவம் அகவிந்திரியத்தா லறியப்படுவ தன்றிப் புறவிந்திரித்தாலறியப்படுவதன்ரும். இருள் புறவிந்திரியங்களு ளொன்ருகிய நேத்திரேந்திரியத்தினு லறியப்படுவதா யிருத்தலின் அங்ஙனங் கூறுத லமையாது. விழியாற் கவரப்படுந் திரவியம் ஒளி

* வேறு சிலர் இருள் பாவவடிவமே, ஆவரணவடிவம்,நேத்திரேந்திரிய ஞானத்திற்கு விரோதி, பிரகாசத்தால் நாசத்தையடைவது, மின்னல் முதலியவை போன்று விரைவிற்ருேன்றி அழியுந்தன்மையது என்பர்.

யோடு கூடியிருத்தல் வேண்டுமென்பது நியமமாம். இருள் திரவியமாயின் அது ஒளியோடு கூடி விழியாற் கவரப்படல் வேண்டும். அங்ஙனமின்மையின் அது திரவியமன்றாம். இங்ஙனங் கூறிய நிஞல் ஒளியின் குறைவே (அபாவமே) இருளெனப் படாயிற்று.

(i.) பிருதிவி—Earth.

73. அவற்றுள், பிருதிவித்தன்மைச் சாமாநியமுடையது பிருதிவி; வன்மை, மென்மை முதலிய அவயவ சையோக விசேடத்தோடு கூடியது; கிராணம், உடம்பு, மட்பிண்டம், கல், மர முதலிய உருவமுடையது; கந்தம், ரூபம், ரசம், பரிசம், சங்கியை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம், அண்மை, சேய்மை, குருத்துவம், நீரவத்துவம், சம்ஸ்காரம் (என்னும் பதினான்கு குணங்கள்) உடையது.

அதுவும் நித்த அநித்தபேதத்தா லிருவகை. பரமாணு ரூபம் நித்தியம்; காரிய ரூபம் அநித்தியம்.

பிருதிவியினுடைய ரூப, ரச, கந்த, பரிசங்கள் அநித்தியங்கள்; பாகத்தாற் றோன்றியன. பாகம்-தேயு சையோகம் (தேயுவின் கூட்டம்). ஆதலின் பிருதிவியினது முன்னர் ரூப முதலியன கெடும்; மற்றையன பிறக்கு மென்பது பாகத்தாற் றோன்றுவன.

(கு-ரை.) பிருதிவிக் கிலக்கணம் பிருதிவித்தன்மைச் சாமாநியமேயன்றிக் கந்த முண்டைமையுமாம். காரியவடிவ பிருதிவி சரீர, இந்திரிய, விஷய வேறுபாட்டால் மூவகைப்படும். சரீரம்.

நம்பனோர்க்குள்ளது; இந்திரியம் - கிராணம்; விடயம்-மண் கல் முதலியன. ரூப முதலிய நான்கு குணங்களும் பிருதிவியில் வன்னியின் சையோகத்தினுற் ருேன்றுவனவாய் அநித்தமா யிருக்கும். பீலுபாகவாதிகள் பாகம் பரமாணுக்களுக்கே யன் றித் துவியணுக முதலியவற்றிற் கன்று. பாகமாகும்வரையும் சூளையில் வைத்துள்ள குடத்தில் பரமாணுக்களுக்கு வேற்றுருவ முண்டாயவிடத்தும் பசுங்குடங்கெட்டு மீளத் துவியணுகந் தோன் றுதல் முதலிய முறையாலே செங்குடம் பிறக்கும். ஆண்டுப் பர மாணுக்கள் சமவாயிகாரணம்; வன்னியின் சையோகம் அசமவாயி காரணம்; ஊழ் முதலியன நிமித்தகாரணம். துவியணுக முதலிய வற்றின் உருவத்திற்குக் காரணவுருவம் அசமவாயிகாரண மென் பர். பீலு-அணு. பரமாணு முதல் குடம்வரையிற் செந்நிறமுண்டாக ஒன்பது க்ஷணமாகு மென்பர்; சிலர் பத்துக்ஷணமா மென்பர். இங் ஙனம் கூறுபவர் வைசேடிகர். பிடரபாகவாதிகள் முற்குடத்திற் குக் கேடின்றியே பரமாணு முடிவான அவயவங்களிலும் அவய வியினும் ஒருங்கே வேற்றுருவம் பிறக்கு மென்பர். பிடரம்-கடம். இங்ஙனம் கூறுபவர் நையாயிகர். கடமுதலியவற்றிற் பாகத்தினுல் முன்னுருவங்கெட்டு வேற்றுருவம் பிறக்குமென்க. கடத்தின் ஒரு பகுதி நீலமும் மற்றொருபகுதி பீதமுமாயவிடத்துச் சித்திரவுரு வம் தோன்றுகின்றது. இங்ஙனம் அவயவியின்கண் (கடமுதலிய வற்றில்) சித்திரரசம் சித்திரகந்த முதலியவை யுண்டாதலின்று. அப்புவில் உருவம் இரசம் பரிசமென்னும் மூன்றும், தேயுவில் உருவம் பரிசமென்னுமிரண்டும், வாயுவில் பரிசமும் பாகத்ாலன்றி யியல்பா யிருக்கும். இவை அப்புப் பரமாணு முதலியவற்றில் நித்த மாயும், அப்பரமாணுக்களின் காரியவடிவி திரவியங்களி லநித்த மாயு மிருக்கும்.

முன்னின்மை பின்னின்மைகட் கெதிர்மறை யாகா திருப்பது நித்தமெனப்படும். பரமாணு முன்னின்மைக்கும் பின்னின்மைக்கும் எதிர்மறையாகா திருத்தலின் நித்தமாம். முன்னின்மை பின்னின்மைகட் கெதிர்மறையா யிருப்பது அநித்தமெனப்படும். கடம் முன்னின்மைக்கும் பின்னின்மைக்கும் எதிர்மறையா யிருத்தலின் அநித்தமாம். உற்பத்திநாசமில்லாதது நித்தம்; உற்பத்தியாவது நாசமாவது உடையது அநித்தம் என்பது கருத்து.

(ii.) அப்பு—WATER.

74. அப்புத்தன்மைச் சாமாநியமோடு கூடியது அப்பு; இரசந இந்திரியம், சரீரம், ஆறு, கடல், பனி, ஆலி (பனிக்கட்டி) முதலிய உருவமுடையது;

கந்தமின்றிச் சிநேகமோடு கூடிய முன்சொன்ன குணமுடையது; நித்த அநித்தமுமாம். நித்தம் பரமாணுரூபம், அநித்தம் காரிய ரூபம். நித்தியங்களுடைய ரூபாதி நித்தியங்கள்; அநித்தியங்களுடைய ரூபாதி அநித்தியங்கள்.

(கு-ரை.) அப்புவிற் கிலக்கணம் அப்புத்தன்மைச் சாமாநியமே யன்றிக் குளிர்ந்த பரிச முடைமையுமாம். காரியவடிவ அப்பு சரீர, இந்திரிய, விடய வேறுபாட்டால் மூவகைப்படும். சரீரம்-வருணலோகத் துள்ளது. இந்திரியம்-சிங்ஙுவை (ரசனை). விடயம் - ஆறு, கடல், பனி முதலியன.

(iii.) தேயு—LIGHT.

75. தேயுத்தன்மைச் சாமாநிய முடையது தேயு; சட்சு, சரீரம், ஞாயிறு (சூரியன்), பொன், தீ, மின்

முதலிய வேறுபாடுடையது; ரூபம், பரிசம், சங்கியை, பரிமாணம், பிரதக்துவம் (வேற்றுமை), சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், திரவத்துவம், சம்ஸ்காரம் (என்னும் பதினொருகுணம்) உடையது. நித்தமும் அநித்தமும் முன்போல. *அது(தேயு) i. உற்பூதரூப பரிசம், ii. அநுற்பூதரூப பரிசம், iii. அநுற்பூதரூப உற்பூதபரிசம்; iv. உற்பூதரூப அநுற்பூத பரிசம் என்று நால்வகை(யினையுடையது).

i. உற்பூதரூபபரிசம் எங்ஙனம்? சூரியனது தேசசு முதலாயின, பிண்டிபூத (மின்னல் முதலிய) தேசசு, தீ முதலியன.

சுவர்ணமோ உற்பூத (வெளிப்படுதல்) அபிபூத (மறைபட்ட) ரூபபரிசம்.

அநுற்பூதரூபமென்னில் கட் புலப்படாமைவேண்டும்; அநுற்பூதபரிசமென்னில் பரிசத்தால் கிரஹிக்கப்படாமை வேண்டும்.

அபிபவம் (மறைவு) வலியதாகிய (பலமுடையதான) சமான ஜாதியான பிருதிவி ரூபத்தாலும் பரிசத்தாலும் பண்ணப்பட்டது.

ii. அநுற்பூதரூப பரிசம் எங்ஙனம்? சட்சு இந்திரியம்.

* சண்டுத் திவ்வியம் பௌமம் ஔதரியம் ஆகரஜம் என நால்வகைத்தென் றதிகபாடமுமிருக்கின்றது.

iii. அநுற்பூத ரூப உற்பூதபரிசம் எங்ஙனம்? வெந்நீரிற் தேயு.

iv. உற்பூத ரூப அநுற்பூத பரிசம் எங்ஙனம்? விளக்கினது ஒளி மண்டலம் (பிரபை).

(கு-ரை.) தேயுவிற் இலக்கணம் தேயுத்தன்மைச் சாமாநியமே யன்றிச் சுடும்பரிச முடைமையுமாம். காரியவடிவ தேயு சரீர இந்திரிய விடம் வேறுபாட்டால் மூவகைப்படும். சரீரம் - சூரியலோகத் துள்ளது; இந்திரியம் - சட்சு; விடயம் - பௌமம் (மண்ணிலுள்ளது), திவ்வியம் (விண்ணிலுள்ளது), ஔதரியம்-(வயிற்றிலுள்ளது), ஆகரஜம்-(சுரங்க முதலியவற்றிலுள்ளது) என்னும் வேறுபாட்டால் நால்வகைப்படும். அறியப்படுந்தன்மையிற் போகசாதனமாயுள்ளது விஷயமெனப்படும். சரீரமும் இந்திரியமுமல்லாத வெல்லாம் விடயமாம். பிருதிவியின்காரியமாய இந்தனத்தி (விறகி)லிருக்கும் தீ பௌமமாம்; நீரை யிந்தனமாகவுடைய சூரியன் மின்னல் வடவனல் முதலிய தீ திவ்வியமாம்; உண்டவுணவு பரிணமித்தற் கேதுவாய ஜாடராக்கினி ஔதரியமாம்; சுரங்க முதலியவற்றிலுள்ள பொன் வெள்ளி முதலியன ஆகரஜமாம். முதலியன என்றமையின் நவரத்தினங்களையுங் கொள்க. தேயு வடிவ சுவர்ண முதலியவற்றில் பிருதிவிப் பகுதியின் உருவமும் பரிசமும் பொதிந்து அவற்றின் ஒளிரும் வெண்மையை (பிரகாசஉருவத்தை)யும் சுடும்பரிசத்தையும் தடுத்தலால் அவை புலப்படாதிருக்கின்றன. சுவர்ணம் தேயுவின் கூறன்றென்பார்: 'சுவர்ணம் பிருதிவியின் கூறு; பீதத்துவ (மஞ்சள்நிற)மாயும் குருத்துவமா (திண்மையா)யு மிருத்தலின்; அரிசனம்(மஞ்சள்) போல்'என் றநுமானங் கூறுவர். சுவர்ணம் தேயுவின்கூறு; தடையில்வழி வன்னியின் சையோக மிகவிருப்பினும் (அதன்) திரவத்து

வம் (நெகிழ்ச்சி) நாசமடையா திருத்தலின்; யாது தேயுவின் கூறன்று அது தடையில்வழி வன்னியின் சையோக மிக விருப்பி னும் (அதன்) திரவத்துவம் நாசமடையா திருப்பதன்று பிருதிவி (வெண்ணெய் முதலியவை)போலஎன்னும் வியதிரேகியனுமானத் தினுல் சுவர்ணம் பிருதிவியின் கூறன்றென்பது நன்கு விளங்கும். பிருதிவியினிடத்து நிமித்தத்தா (வன்னியின்சையோகத்தா)லுண் டாகும் திரவத்துவம் நீரிடைநிற்றலாகிய தடையில்வழி வன்னி யின்சையோக மிக விருப்புழி நாசமடைத லறிக.

சுவர்ணம் ஒரு நிமித்தத்தாலாய திரவத்துவத்திற் கிடமா யிருத்தலின் இயல்பாகவே திரவத்துவமுடைய அப்புவின் கூறென் றலும், உருவமுடைமையின் வாயு முதலியவற்றின் கூறென்ற லும் பொருந்தாவென்க. இதனுல் சுவர்ணம் பிருதிவி முதலிய வற்றி லடங்காது தேயுவிலடங்கியவாறறிக.

(i.) சூரியன் முதலிய ஒளிப்பொருள்களின் உருவமும் பரி சமும் உற்பூதமா (முறையே கண்ணிந்திரியத்திற்கும் துவக்கிந் திரியத்திற்கும் பிரத்தியட்ச யோக்கியமா) யிருத்தலின் அவை உற்பூத ரூபமும் உற்பூதபரிசமுமுடையன வென்க.

சுவர்ணத்தின் வெம்மைப் பரிசமும் ஒளிரும் வெண்மையும் இயல்பாகவே வெளிப்படுவதாகாது (பிருதிவியின் பரிசத்தாலும் உருவத்தாலும்) மறைபட்டிருத்தலின் 'சுவர்ணமோ உற்பூத அபி பூத ரூபபரிசம்' என்று கூறப்பட்டது. தேயுவின் கூருன சுவர் ணத்தின்ரூபம் அநுற்பூதமெ(பிரத்தியட்சயோக்கியமாகாததெ)ன் னில் அது கண்ணிந்திரியத்தா லறியப்படாமைவேண்டும்; அதன் பரிசம் அநுற்பூதமென்னில் அது துவக்கிந்திரியத்தா லறியப் படாமை வேண்டுமென்னு மாட்சேபத்திற்குச் சமாதானம் 'அபி பவம் வலிய * * * பண்ணப்பட்டது' என்று கூறப்பட்டது. தேயு

வின் கூறுன சுவர்ணத்தின் சுடும்பரிசத்திற்கும் ஒளிரும் வெண்மைத்தும் அபிபவம் சுவர்ணத்தினும் வலியுடையதாகியும் திரவியத்தன்மை யென்னும் சமானஜாதி யுடையதாயுமுள்ள பிருதிவியின் பரிசத்தாலும் ரூபத்தாலும் பண்ணப்பட்ட தென்பது அதன் பொருள். தேயுவும் பிருதிவியும் திரவியங்களாதலின் அவற்றில் திரவிய ஜாதி சமானமாயிருக்கின்றதென்க. தேயுவின் கூறுன சுவர்ணத்தில் பிருதிவியின் பாகம் அதிகமாயிருத்தல்பற்றி 'வலியதாகிய' என்று கூறப்பட்டது. இதனால் தேயுவின் அற்பபாகமும் பிருதிவியின் அதிகபாகமும் சேர்ந்துள்ள திரவியம் சுவர்ணம் எனக் கூறப்படுகின்றதென்பது வெளியாயிற்று. வெள்ளி முதலியனவு மிங்ஙனமேயாம். பொன், வெள்ளி, இரத்தினம் என்னும் வேறுபாடு பிருதிவியின் தாரதம்மியத்தினேற்பட்டதெனக் கொள்க.

(ii.) தேயுவின் கூறுகிய (காரியமாகிய) சட்சுவிந்திரியம் தோற்றிய உருவமும் தோற்றிய பரிசமு முடையதன்மையின் அது அநுற்பூத (பிரத்தியட்சத்திற்கு யோக்கியமாகாத) உருவத்தையும் அநுற்பூத பரிசத்தையு முடையதென்க.

(iii.) வெந்நீரில் தேயுவின்பரிசம் உற்பூதமாயும் உருவம் அநுற்பூதமாயு மிருத்தலின் அஃது அநுற்பூதரூபமும் உற்பூத பரிசமுமுடையதென்க.

(IV.) விளக்கினது ஒளி மண்டலத்தின் (ஒளிப்பொருள்களின் கூட்டத்தின் அஃதாவது பிரபையின்) உருவம் உற்பூதமாயும் பரிசம் அநுற்பூதமாயுமிருத்தலின் அஃது உற்பூதரூபமும் அநுற்பூதபரிசமு முடையதென்க.

(v.) வன்மைச் சையோகமுடைய அவயவசகித தேயுப் பொருள்விளக்கு முதலியனவாம்.

(b) மென்மைச் சையோகமுடைய அவயவசகித தேயப் பொருள் பிரபையாம்.

(iv.) வாயு:—AIR.

76. வாயுத்துவ சாமாந்யமுடையது வாயு; துவக்கிந்திரியம் பிரமாணம்; பிராணன் காற்று முதலிய பேதமுடையது;

பரிசம், சங்கியை, பரிமாணம், பிரதக்துவம், சையோகம், வியாகம், பரத்துவம், அபரத்துவம், வேகம் (விரைவு) (என்னும் ஒன்பது குணங்கள்) உடையது.

அது (வாயு)வும் பரிசத்தால் * அநுமேயம் (அநு

---

* வாயு பிரத்தியக்ஷ யோக்கியத்திரவியமாமென்னும் மீமாம்சகர் முதலியோர் பிரத்தியக்ஷ யோக்கியபரிசம் எத்திரவியத்திலிருக்கின்றதோ அத்திரவியத்தின் துவாச (துவக்கிந்திரிய)ப் பிரத்தியட்சமுண்டாகின்றது. துவக்கிந்திரிய ஜன்னியதிரவியத்தின் பிரத்தியட்சத்தில் உருவத்தின் அபேட்சையின்று; ஆனால், கேவலம் பரிசத்தின் அபேட்சையிருக்கிறது. எங்ஙனம்? திரவியத்தின் சாட்சுசப் பிரத்தியக்ஷத்தில் உற்பூதவுருவத்தின் அபேட்சையுண்டு; பரிசத்தின் அபேட்சையின்று. திரவியத்தின் சாட்சுசப் பிரத்தியட்சத்தில் உற்பூதபரிசத்தின் அபேட்சையிருக்குமாயின் தீபப்பிரபையிலும் அங்ஙனமே சந்திரப்பிரபையிலும் உற்பூத பரிசமின்மையாகலின் அவற்றின் சாட்சுசப் பிரத்தியட்ச முண்டாகலாகாது; பிரத்தியட்சமோ உண்டாகின்றது. மேலும் திரியணுகத்தில் பரிசமோ இருக்கின்றது; ஆனால் உற்பூதமாகவின்று. ஆகலின் அதன் துவாசப் பிரத்தியட்ச முண்டாவதின்று; ஆனால் கேவலம்

மானிக்கப்படுவது). அங்ஙனமன்றோ, வாயு வீசுகையில் வெம்மை தண்மையில்லாத பரிசம் யாதொன்று தோன்றுநின்றது அது குணமாதலின் குணியை அநுமாபிக்கும் (குணியின் அநுமிதியை யுண்டுபண்ணும்). குணியும் வாயுவே; பிருதிவி தோன்றாமையின்;

பிருதிவி வாயு அல்லதற்கு வெம்மை தண்மையில்லாத பரிசமின்மையின்.

அதுவும் நித்த அநித்த பேதத்தால் இருவகை.

நித்தியம் பரமாணுரூப வாயு; அநித்தியம் காரியரூப வாயு.

(கு-ரை.) வாயுவிற்கிலக்கணம் வாயுத்துவ சாமாநியமேயன்றி உருவமின்றிப் பரிசமுடைமையுமாம். காரியவடிவ வாயு சரீர இந்திரிய விஷய வேறுபாட்டால் மூவகைப்படும்.

அத்திரியணுகத்தின் சாட்சுசப் பிரத்தியட்சமுண்டாகின்றது. ஆதலால் கேவலம் உற்பூதரூபமுடைய திரவியத்தின் சாட்சுசப் பிரத்தியட்ச முண்டாகின்றது. அங்ஙனமே கேவலம் உற்பூத பரிசமுடைய திரவியத்தின் துவாசப்பிரத்தியட்சமுண்டாகின்றது. வாயுவில் உருவமோயின்று; ஆனால் உற்பூதபரிசமிருக்கின்றது. ஆதலால் வாயுவின் சாட்சுசப்பிரத்தியட்சமுண்டாகின்றதில்லை; துவாசப்பிரத்தியட்ச முண்டாகின்றது. மேலும் ஒவ்வொருவனுக்கும் எனக்குத் துவக்கினால் வாயுவின் பிரத்தியட்ச முண்டாகின்றதென அநுபவ முண்டாகின்றது. ஆதலால் வாயுவின் பிரத்தியட்சமும் துவக்கிந்திரியத்தினா லுண்டாகின்றது என்பர்.

சரீரம்-வாயுலோகத்துள்ளது, இந்திரியம்-துவக்கு, விஷயம்-மரமுதலியன அசைதற் கேதுவாயுள்ள மகா வாயு முதலியன. வாயுவின் பரிசத்தை யறிவதற்குத் துவக்கிந்திரியம் காரணமாயிருத்தல்பற்றித் 'துவக்கிந்திரியம் பிரமாணம்' என்று கூறப்பட்டது. சரீரத்தினுட் சஞ்சரிக்கும் வாயு பிராணனெனப்படும். அஃதொன்றே இருதயத்திருப்பதால் பிராணன், குதத்திலிருப்பதால் அபானன், நாபியிலிருப்பதால் சமானன், கண்டதேசத் திருப்பதால் உதானன், உடல்முற்று மிருப்பதால் வியானனென்னும் பெயர்களால் வழங்கப்படுகின்றது. யாண்டுப் பிருதிவி, அப்பு, தேயுக்களில் உற்பூத உருவமும் உற்பூத பரிசமும் இருக்கின்றனவோ ஆண்டு அவற்றினது துவாசப்பிரத்தியக்ஷம் உண்டாகின்றது; மற்றவற்றின் துவாசப்பிரத்தியக்ஷம் உண்டாகின்றதில்லை. கிராண, ரஸன, நேத்திரங்களில் உருவமும் பரிசமும் இருக்கின்றன. ஆனால் அவை உற்பூதமன்றாதலின் முறையே பிருதிவி, அப்பு, தேயு, வடிவான அவ்விந்திரியங்களின் துவாசப்பிரத்தியக்ஷமும் சாட்சுசப் பிரத்தியக்ஷமும் உண்டாகின்றதில்லை. மேலும் சாளரத்திற் றோன்றும் அதிநுட்பமான திரியணுகம் எதுவோ அதில் உற்பூத உருவம் இருக்கின்றதாதலின் அதன் சாட்சுசப் பிரத்தியக்ஷம் உண்டாகின்றது; உற்பூத பரிசமின்மையான் துவாஸப்பிரத்தியக்ஷம் உண்டாகின்றதில்லை. அந்தத் திரியணுகத்தில் பரிசமோ இருக்கின்றது; ஆனால் அது உற்பூதமன்று. வாயுவில் உற்பூதபரிசமோ இருக்கின்றது; உருவமில்லை. ஆதலால் வாயுவின் துவாஸப் பிரத்தியக்ஷமும் சாட்சுசப் பிரத்தியக்ஷமும் உண்டாகின்றதில்லை. இதனால் திரவியத்தின் சாட்சுசப் பிரத்தியக்ஷத்தில் உற்பூத உருவமும், திரவியத்தின் துவாஸப் பிரத்தியக்ஷத்தில் உற்பூத உருவமும் உற்பூத பரிசமுமாகிய இரண்டும் காரணமாமென்பது சித்தித்ததாதலின்

உற்பூத உருவமும் உற்பூதபரிசமுமுள்ள திரவியமே துவாஸப் பிரத்தியக்ஷத்திற் கேதுவாமென்பதாயிற்று. ஆகவே உருவமின் றிப் பரிசமுடைய வாயு துவக்கிந்திரியத்தால் கிரகிக்கப்படுவ தன்றும்; ஆனல் அது அநுமானத்தால் கிரகிக்கப்படுகின்ற தென்க. வாயு பிரத்தியக்ஷத்திரவியமாமென்பவர் "வாயு பிரத்தி யட்சப்பொருள்; பிரத்தியட்சபரிசத்திற் காசிரயமாயிருத்தலின்; கடம்போல" என்றநுமானங் கூறுகின்றனர். இவ்வனுமானம் தோஷமுடையதென முன்னர்க் கூறப்பட்டிருக்கின்றமையின் அது பொருந்தாது.

வாயுவுண்மை பரிசத்தால் அனுமிக்கப்படுதல்விளக்கமாக வருமாறு:—வாயுவீசுகையில் வெப்பமும் தட்பமுமின்றிய பரிசம் புலப்படுகின்றதல்லவா; அது ஒருதிரவியத்தைப்பற்றியே நிற் கும்; உருவம்போற் குணமாயிருத்தலின். அதற்கு ஆசிரயம் பிரு திவியென்றல் பொருந்தாது; உற்பூதபரிசமுடைய பிருதிவிக்கு உற்பூதவுருவமுடைமை நியமமாகலின் அப்புத் தேயுக்களுமன்று; தட்பமும் (சீதஸ்பரிசமும்) வெப்பமும் (உஷ்ணஸ்பரிசமும்) இன்றியிருத்தலின்; ஆகாயம், காலம், திக்கு, ஆன்மாக்களென்னும் வியாபகப்பொருள் நான்குமல்ல; அவற்றுள் ஒன்றன் குணமாயின் யாண்டும் புலப்படல்வேண்டுதலின்; மனமுமன்று, பரமாணுவின் பரிசம் அதிந்திரியமாகலின். ஆதலின் அனுபவிக்கப்படும் பரிசத் திற்கு ஆசிரயம் யாது அதுவே வாயுவென் றறிதற் பாற்றுமென்க.

உற்பத்தியும் நாசமும் வருமாறு:—

77. அவற்றுள் காரியமான பிருதிவியாதி நான்கிற்கும் உற்பத்திநாசம் முறையே கூறுதும்:—

இரண்டு *பரமாணுக்களது வினையால் சையோக முண்டாகையில் துவியணுகந் தோன்றும். அதற்கு (துவியணுகத்திற்கு)ப் பரமாணுக்கள் சமவாயிகாரணம்; அவற்றது சையோகம் அசமவாயிகாரணம்; அதிட்டாதி நிமித்தகாரணம். மூன்று துவியணுகங்களது வினையால் சையோகமுண்டாகையில் திரியணுகந் தோன்றும்; அதற்கு (திரியணுகத்திற்கு)த் துவியணுகங்கள் சமவாயிகாரணம். ஒழிந்தன முன் போல.

இங்ஙனம் திரியணுகங்களாற் சதுரணுகம்; சதுரணுகங்களால் அபரதூலம்; அவற்றால் தூலதரம்; தூலதரங்களால் தூலதமம் (தோன்றும்).

---

* சிருஷ்டியினாதிகாலத்தி லுலகைப் படைக்கவேண்டு மென்னு மீசுரனது இச்சையினால் பரமாணுவின்க ணொக்கிரியை யுண்டாகின்றதோ அதற்குச் சமவாயிகாரணம் பரமாணுவாம். நிமித்தகாரணம் ஈசுரனது இச்சை முதலியனவாம். பரமாணுவை யடுத்தவொன்று அக்கிரியைக்குக் காரணமாயின் அஃதசமவாயி காரண முடையதாம். அப்படிப்பட்டதொன்று ஆண்டுப் பெறப் படாமையின் பரமாணுவின் கிரியை காரணமிரண்டினால் ஆக்கப் பட்டதாம். இங்ஙனமே ஏனையவிடத்துங் கிரியை காரணமிரண் டினால் ஆக்கப்படுவதாம்; காரண மும்மையினா லாக்கப்படுவதன் றாம். இதனால் பாவகாரியத்திற்குக் காரணம் மூன்று வேண்டு மெனல் யாண்டும் நியதமாய்ப் பெறப்படுவதில்லையென்பர் ஒரு சாரார். சமவாயிகாரணத்தையடுத்த காரணம் அசமவாயிகாரண மெனப்படும்.

இங்ஙனம் முறையானே மகாப்பிருதிவி, மகா வப்பு, மகா தேயு, மகா வாயு தோன்றும்.

(கு-ரை.) ஜீவாத்மாக்களுக்குக் கன்மபலனைக் கொடுக்குமாறு உலகைத் தோற்றுவிப்பாமென்னும் ஈசுரனது இச்சைவயத்தால் இரண்டு பரமாணுவிற் கிரியையுண்டாய்க் கூறிய முறையே உலக முண்டாயிற்றென் றறிக.

'அதிட்டாதி' என்றமையின் காலதேச முதலியவற்றையுங் கொள்க. அபரம், தரம், தமம் என்னு மூன்றனுள் முறையே ஒன் றினும் மற்றொன்று பெரிதாமென்றறிக.

காரியத்தை (காரியப்பட்ட துவியணுக முதலிய வற்றை) யடைந்த ரூபாதிகள் தங்கட்கிடமான சம வாயி காரணத்தை யடைந்த ரூபாதிகளாற் றோன் றும்; காரணகுணங்கள் காரியகுணங்களைத் தோற்று விக்குமென்னும் நியாயத்தால்.

(கு-ரை.) காரியப்பட்ட துவியணுக முதலியவற்றின் ரூபாதி கட்குத் துவியணுக முதலியவற்றின் சமவாயி காரணமான பர மாணு முதலியவற்றின் ரூபாதிகள் அசமவாயி காரணமாமென் றறிக.

(1.) இங்ஙனம் தோன்றிய ரூப முதலிய வுடைய காரியத்திரவியமாகிய குடமுதலியவற்றிற்கு அவயவ மான கபாலமாதியிற் றள்ளுதலானாயினும் புடை (அடி)த்தலானாயினும் வினை தோன்றும்; அதனால் விபாகம்; அதனால் அவயவியைத் தோற்றுவிப்ப தான அசமவாயிகாரணமான சையோகத்திற்கு நாசம்

பண்ணப்படும்;அதனுல் காரியத்திரவியமான அவயவியான குடமுதலியவற்றிற்கு நாசம். இங்ஙனம் அசமவாயிகாரண நாசத்தால் திரவியநாசம் காட்டப்பட்டது.

(2) ஓரிடத்துச் சமவாயிகாரண நாசத்தால் திரவிய நாசம். எங்ஙனம்?

முற்கூறிய பிருதிவியாதிகளைச் சங்காரத்திற் சங்கரிக்கவேண்டி மஹேசுவரனுடைய சங்கரித்தல் வேட்கையால் அணுக்களில் வினை, அதனுல் விபாகம், விபாகத்தால் சையோகநாசம், துவியணுகங் கெடுகையில் ஆசிரயக் (துவியணுகத்தின்)கேட்டால் திரியணுகாதி நாசம்.

முறையே பிருதிவியாதி நாசம். எங்ஙனம்? நூற் கேட்டின் ஆடைகெட்டு அதனை அடைந்த ரூபாதிகட்குத் தமது ஆசிரயக்கேட்டானே கேடு; வேருயின் ஆசிரய மிருக்கையிலே மாறுபட்ட குணமடைதலாற் கேடு. எங்ஙனம்? பாகத்தால் குடமுதலியன ரூபாதி நாசமென்க.

(கு-ரை.) ஜீவர்களுக்குக் கன்மபலன் சன் (எதிர்) முகமாகாவிடத்து மகாப்பிருதிவி முதலியனவாகத் தோன்றிய பொருள்களை யொடுக்குவா மென்னும் ஈசுரனது இச்சைவயத்தால் துவியணுக முதலியவை கெடுமென்பதாம். பரமாணுக்களிரண்டன் சையோகநாசத்தாலே துவியணுகநாசமும், துவியணுகநாசத்தால்

திரியணுகநாசமும், திரியணுகநாசத்தால் சதுரணுகநாசமும், சது
ரணுகநாசத்தால் இங்ஙனமே மகாப்பிருதிவி முதலியவற்றின்
நாசமு முண்டாமெனவறிக. துவியணுகத்தின் சமவாயிகாரண
மாகிய பரமாணுக்களிரண்டன் நாசத்தால் துவியணுகம் நாச
மாகின்றதென் றங்கிகரிப்ப தில்லை; பரமாணு நித்தமாகலின்.
மூர்த்தத் திரவியம் அமூர்த்தத் திரவியமென்னு மிரண்டனுள்
பரமாணு முதலியவை மூர்த்தத்திரவியமாம்; வியாபகப்பொருள்
கள் அமூர்த்தத்திரவியமாம். பரமாணு மூர்த்தத்திரவியமாயினும்
நிரவயவமாம்; சாவயவமெ (அவயவத்தோடு கூடியதெ)னின் காரி
யத்திரவியமாய்விடும்; சாவயவத்திரவியம் காரியமென்பதுநியமமா
யிருத்தலின். அசமவாயிகாரண நாசத்தால் துவியணுகநாசமும்,
சமவாயிகாரண நாசத்தால் திரியணுக முதலியவற்றின் நாசமு
முண்டாமென்பது சம்பிரதாயம். யாண்டும் அசமவாயிகாரண
நாசத்தாலே திரவியநாச முண்டாகின்றதென்பர் ஆதுனிகர் (நவீ
னர்).

நாசம், அழிவு, பிரளயம் என்பன ஒருபொருட்கிளவி. அஃ
தவாந்தரப்பிரளயம், மகாப்பிரளயம் என இருவகைத்து. காரியமான
திரவியமெல்லா மழிவது அவாந்தரப்பிரளயம். காரியமான பாவ
பதார்த்தமெல்லா மழிவது மகாப்பிரளயம். அவாந்தரப்பிரள
யத்தில் பிருதிவிப் பரமாணுவின் ரூபாதிகுணங்கள் அழிவதில்லை
யாகலின் காரியமான பதார்த்தமெல்லாமெனக்கூறாது காரியமான
திரவியமெல்லாமென்றும், மகாப்பிரளயத்தில் துவம்சாபாவத்
திற்கு யாண்டுமழிவின்மையின் அஃதொழியக் காரியமான திரவிய
குண முதலியவெல்லா மழிதலின் காரியமான பதார்த்தமெல்லா
மெனக்கூறாது காரியமான பாவபதார்த்தமெல்லாமென்றும் கூறப்
பட்டன.

பரமாணு சத்பாவத்திற் (உண்மைக்)குப் பிரமாணம் யாது?

கூறுதும்:--சாளர (சாளரத்தினுழையும்) வெயிற் கண்ணதாகிய எல்லாவற்றினும் நுண்ணியதியா தொன்று (நுட்பமானதுகள் - திரியணுகம்) தோன்றும் அது தன்னின் நுண்ணியதாகிய பரிமாண திரவியத்தாற் (துவியணுகத்தாற்) றோன்றியது; காரியத் திரவியமாதலின்; குடம்போல.

அத்திரவிய (துவியணுக)மும் காரியமே; பெருந் திரவிய (திரியணுக)த்தைத் தோற்றுவிப்பதற்குக் காரியத்துவ நியமத்தால், ஆகலின் இங்ஙனம் துவியணுகமென்னும் வேறு திரவியம் சித்தம். அதுவு (துவியணுகமு)ம் தன்னின் நுண்ணியதாகிய சமவாயி காரண திரவியத்தாற் றோன்றும்; காரியத்திரவியமாதலின்; குடம்போல. யாது துவியணுகத்தைத் தோற்றுவிப்பது அதுவே பரமாணு. அதுவும் தோன்றா (உற்பத்தியில்லா)ததே.

(ஆ.) அற்றாயின், காரியத்திரவியத்தைத் தோற்றுவிப்பதற்குக் காரியத்துவம் நியமமாகலின் அது தோன்றாதது (உற்பத்தியில்லாததென்பது) எங்ஙனம்?

(சு.) கூறுதும்;—எண்ணிறந்த காரியபரம்புரை அநவஸ்தாதோஷம் (வரம்பின்றிச் சேரலென்னுங் குற்றம்) வருதலின்; இங்ஙனமாயின் பல திரவியத்

தாற் பிறத்தல் விசேடமின்மையின்; மேரு கடுகுகட்குத் துல்லிய(ஒத்த) பரிமாணத்துவம் வருதலின்;
ஆதலின் தோன்றுதகே பரமாணு.

(கு-ரை) பரமாணுவுங் காரியமெனின், அதற்குக் காரணம் யாது? அக்காரணத்திற்குக் காரணம் யாது?என்றளவுகடந்த காரண காரியபாம்பரையை (தாரையை)க் கற்பிக்கின் அநவஸ்தா தோஷம் வருகின்றமையாலும், பரமாணுக்களிரண்டால் துவியணுகம் தோன்றுமென்றற் றொடக்கத்தனவாய்க் கூறிய கிரமத்தையொப்பாது யாதொரு சிறப்புமின்றித் தம்முள் பேதமின்றிய பலதிரவியங்களால் பலகாரியங்களுண்டாகின்றனவெனின் மேரு பெரியது கடுகு சிறியது என்னும் வேற்றுமை காணப்படாது மேரு கடுகு என்னு மிரண்டற்கும் தம்முளொத்த பரிமாணத்தன்மை வரல் வேண்டு மாதலினாலும் பரமாணுவே முடிவான காரணம்; அதற்கு உற்பத்தியின்றென் றங்கீகரிக்கவேண்டு மென்பதாம்.

துவியணுகம் இரண்டு பரமாணுக்களானே தோன்றும்; ஒன்றற்கு (ஒரு பரமாணுவிற்கு)த் தோற்றுவியாமை நியமமாகலின்; ஆரம்பகற்பனையிற் பிரமாணமின்மையின்.

திரியணுகம் மூன்றுதுவியணுகங்களானே பிறக்கும்; ஒன்றற்கு (ஒரு துவியணுகத்திற்கு)த் தோற்றுவியாமை நியமமாகலின்;

இரண்டாற் (இரண்டு துவியணுகங்களாற்) றோன்றின் காரியத்தை (திரியணுகத்தை) யடைந்த மகத்துவம் (பருமை) தோன்றாமை வரல்வேண்டுதலின்.

காரியத்தின் மகத்துவம் காரணத்தின் மகத்து வத்தாலாவது, காரணப்பன்மையாலாவ தன்றோ?

அவற்றுள் முதலது (காரணத்தின் மகத்துவம்) இன்மையின் ஈற்றது (காரணப்பன்மை) வேண்டத் தக்கது; நான்கு முதலிய கற்பனையிற் (சதுரணுக முதலியவற்றால் மகத்துவந் தோன்றுமென்று கூறு வதிற்) பிரமாணமின்மையின்; (துவியணுக) மூன் றானே மகத்துவம் தோன்றுதல் கூடுதலின்.

(கு-ரை.) ஒரு அவயவம் காரியத்திரவியத்திற்குச் சமவாயி காரணமாமென்பது ஆரம்பகாரண வாதத்திற் சம்பவியாமையின் 'ஆரம்பகற்பனையிற் பிரமாணமின்மையின்' என்று கூறப்பட்டது.

நுண்மை, பெருமை, குறுமை, நெடுமை என்னும் பரிமாணம் நான்கனுள் நுண்மையும் குறுமையும் பரமாணு துவியணுகங்களி லிருப்பனவாம். அவ்விரண்டன்கண்ணும் பெருமை யென்னு மகத்துவம் இன்மையின் திரியணுகத்தின் மகத்துவம் காரணமகத் துவத்தினாலாகாது காரணப்பன்மையினாலாயதாம். சதுரணுக முதலியவற்றின் மகத்துவம் காரணத்தின் (திரியணுக முதலியவற் றின்) மகத்துவத்தினாலாயதாம்.

திரியணுகம் அவயவத்துடன் கூடிய திரவியத்தா லாக்கப்பட் டது; புறவிந்திரியத்தாலே யறியப்படுந் திரவியத்தன்மையால்; யாது யாது புறவிந்திரியத்தாலே யறியப்படுந் திரவியத்தன்மை யுடையது அதுவது அவயவத்துடன் கூடிய திரவியத்தாலாக்கப் பட்டது கடம்போல என்னு மனுமானமு மீண்டறியத் தக்கதாம்.

(V.) ஆகாயம்—SPACE.

* சத்தகுணமுடையது ஆகாயம்; (சத்தம், சங்கியை, பரிமாணம், பிரதக்துவம், சையோகம், விபாகம்) என்னும் ஆறுகுணம்) உடையது.

ஏகம் (ஒன்று), விபு, நித்தியம், சத்தலிங்கமுடையது. அத (ஆகாயத்தி)ற்குச் சத்தம் லிங்கம். எங்ஙனம்? பரிசேடத்தால்.

பரிசேடமாவது பல பொருள்கள் நிகழ்ந்தகாலத்து மற்றவை நிஷேதிக்கப்பட எஞ்சிநிற்கும் ஒருபொருளி லுண்டாகும் நிச்சயம்.

அங்ஙனமன்றோ;

சத்தம் விசேடகுணம்; சாமானியமு(ஜாதியு)டையதாய் நம்மனோர் புறவி காதி)ந்திரியமொன்றால் கிரஹிக்கப்படுதலின்; ரூபாதிபோல.

(சத்த) குணமும் குணியைப்பற்றியதே. அத(சத்த குணத்தி)ற்குப் பிருதிவியாதி நான்கும் ஆன்மாவும் குணியாகத்தகா; சத்தம் செவியால் கிரஹிக்கப்படு தலின்; யாவை பிருதிவியாதி குணங்கள் அவை சுரோத்திரேந்திரியத்தாற் கிரஹிக்கப்படுவனவல்ல எங்ஙனம்? ரூபாதிகள்.

---

* சார்வாகாதியோர் ஆவரணமின்றி (மறைப்பின்றி) யிருப்பதே ஆகாசம்; அஃதசத்துவடிவம் என்பர்.

சத்தம் சுரோத்திரேந்திரியத்தாற் கிரஹிக்கப் படும்; திக்குக் கால மனங்களது குணமன்று; விசேட குணமாதலின். ஆதலின் இவ்வெட்டினின்றும் வேறாகச் சத்தத்திற்குக் குணி அநுமிக்கப்படும். அதுவே ஆகாயம். அதுவும் ஒன்று; பேதத்திற் பிரமாணமின்மையின்; ஒருமையாற் கூடுதலின். ஆகாயத்துவமெ (ஆகாயத்தன்மையெ)ன்னும் சாமாநியம் ஆகாயத்திலில்லை; சாமாநியம் (ஜாதி) பலவிடத்திருத்தலின்.

ஆகாயம் விபு-*பரமமகத் பரிமாணமு(மிகப் பெரிய வளவு) டையதென்று பொருள்; எவ்விடத்துங் காரியம் (சத்தம்) தோன்றுதலின். (அது) விபுத்துவத்தால் நித்தியம்.

(கு-ரை.) ஆகாயத்திற்கிலக்கணம் சத்தகுணமே யன்றிச் சத்தசமவாயி காரணமுமாம். "சையோகத்தாலுண்டாகாத விசேட குணத்தினுற்பத்திக் கதிகரண (இட)மாயும் விசேடத்திற் கதிகரணமாயுமிருப்பது ஆகாயம்" என்று சர்வதரிசனசங்கிரகத்தின் அவலோக்கிய தரிசனத்திற் கூறப்பட்டிருக்கின்றது. (மலையில் பிரத்தியட்சத்திற்கு விஷயமாகாத) வன்னியை யறிதற்குப் புகை

* ஈண்டுக் கூறிய பரமமகத் பரிமாணத்திற்கு வேறாய்க் கடமுதலியவற்றில் அபகிருஷ்ட (தாழ்ந்த) மகத்பரிமாணமும், கடுகு முதலியவற்றில் அபகிருஷ்டதர (அதனினுந்தாழ்ந்த) மகத்பரிமாணமும், திரியணுகத்தில் அபகிருஷ்டதம (எல்லாவற்றினுந்தாழ்ந்த) மகத்பரிமாணமு முண்டென்க. இங்ஙனங் கூறியதினால் மகத் பரிமாணம் நால்வகைத்தாதலறிக.

லிங்கமா (குறியா) யிருப்பதுபோன்று (எஞ்ஞான்றும் பிரத்தியட்சத்திற்கு விஷயமாகாத) ஆகாயத்தை யறிதற்குச் சத்தம் லிங்கமாயிருக்கின்றமையின் 'சத்தலிங்கமுடையது' என்று கூறப்பட்டது. பிருதிவிமுதலிய ஒன்பது திரவியங்களுள் சத்தகுணமுடையது பிருதிவி, அப்பு, தேயு, வாயு, காலம், திக்கு, ஆன்மா, மனமல்லவென விலக்கப்பட்டபோது எஞ்சிநின்ற ஆகாயமே சத்தகுணமுடையதென நிச்சயிக்கப்படுதலின் 'அதற்குச் சத்தம் லிங்கம்; எங்ஙனம்? பரிசேடத்தால்' என்று கூறப்பட்டது.

திக்கும், காலமும், மனமும் சங்கியை முதலிய சாமானிய குணங்களே உடையனவாதலின் 'திக்குக் கால மனங்களது குணமன்று; விசேடகுணமாதலின்' என்று கூறப்பட்டது. பேதத்திற் பிரமாணமின்மையின்-ஆகாயம் பிருதிவி முதலியனபோலப் பலவென்பதற்கு எப்பிரமாணமும் இல்லாமையின்; ஒருமையாற் கூடுதலின் - யாண்டும் ஒன்றென்றே வியவகாரம் நிகழ்தலின்.

சாமாநியம் அநேக தருமியிலிருக்கும் ஒரு தருமமாகலின் அஃது ஏகமாயுள்ள ஆகாயத்திருப்பதன்றாம்.

இங்ஙனமே அஃது ஏகமாயுள்ள காலத்திலும் திக்கிலுமிருப்பதன்று. ஆனல் ஆகாயத்தன்மை, காலத்தன்மை, திசைத்தன்மையென்பன உபாதியாம். ஜாதி, குண, கர்மங்களின் வேறாய தர்மம் உபாதியெனப்படும்.

இடைப்பட்ட பரிமாணமுடையது சிலவிடத்து விபுவென்று கூறப்படுதலின், அங்ஙனமன்றென்று விளக்க விபு என்பதற்குப் பொருளுரைக்கப்பட்டது. விபு: ஆபேட்சிகம், நிராபேட்சிகமென்றிருவகைப்படும். (1) கடாதிகளை யபேட்சித்துப் பிருதிவியாதி விபுவா (வியாபகமா)யும், ஆகாயாதிகளை யபேட்சித்து விபுவன்றாயு

மிருத்தலின் அவை ஆபேட்சிக விபுவாம். (2) ஆகாய முதலியன பிருதிவியாதி யாவற்றையு மபேட்சித்து விபுவாயிருத்தலின் அவை நிராபேட்சிக விபுவாம்.

விபுத்துவத்தால் ஆத்மா நித்தியமாயிருத்தல்போன்று ஆகாயமும் விபுத்துவத்தால் நித்தியமாம். இங்ஙனமே காலமுந் திக்கும் விபுத்துவத்தால் நித்தியமென்றுணர்க.

vi. காலம்—TIME.

79. காலம் திக்கின் வேறான பரத்துவா பரத்துவத்தால் (முன்மை பின்மைகளால்) அநுமேயம்; சங்கியை, பரிமாணம், பிரதக்துவம், சையோகம், விபாகம் (என்னும் ஐந்து குணம்) உடையது; ஒன்று; நித்தியம்; விபு. அதற்குத் திக்கின் வேறான பரத்துவாபரத்துவத்தால் அநுமேயத்துவம். எங்ஙனம்? கூறுதும்:—

* (1.) அணியனாய முதியோன்கண் அண்மையால் அபரத்துவத்திற்கு வேறான பரத்துவம் தோன்றும்.

(2.) சேயனாய இளையோன்கண் சேய்மையால் பரத்துவத்திற்கு வேறான அபரத்துவம் தோன்றும்.

இதில் திக்கின் வேறான பரத்துவமும் அபரத்துவமும் காரியமாய்த் திக்கு முதலிய காரணத்தாலுன்

---

* (1.) சமீபத்திருக்கும் விருத்தனிடத்துச் சமீபத்தால் அபரத்துவத்திற்கு வேறாய பரத்துவந்தோன்றும்; (2.) தூரத்திருக்கும் இளையவனிடத்துச் சேய்மையால் (தூரத்திருப்பதால்) பரத்துவத்திற்கு வேறாய அபரத்துவம் தோன்றும் என்பது பொருள்.

டாகாமையின் (அவை தமக்கு) காலமே காரண மென்று அநுமானத்தை யுண்டுபண்ணும்.

அஃதொன்றாயினும் நிகழ்வு, இறப்பு, எதிர்வு வினை யுபாதி வசத்தால் நிகழ்வு முதலிய வியபதேசத்தை (பெயரை) அடையும்; புருஷனைப்போல.

அவற்கு அடுதல் முதலிய வினை (கிரியையின்) உபாதிவசத்தால் மடையன் (சமைப்பவன்) முதலிய வியபதேசம் அடையும்.

இதற்கு (காலத்திற்கு) நித்தியவிபுத்துவங்கள் முன் போல.

(கு-ரை.) காலத்திற்கிலக்கணம் இறந்தது முதலிய வியவகாரத்திற் கேதுவாதலாம். "விபுவாய்த் திக்கினிடத்திற் சமவாய சம்பந்தத்தாலிராத பரத்துவத்திற்கு அசமவாயிகாரணமெதுவோ அதற் கதிகாரணமாயிருப்பது காலம்" என்று சர்வதரிசனசங்கிரகத்தின் அவலோக்கிய தரிசனத்திற் கூறப்பட்டிருக்கின்றது. அஃது எல்லாவற்றிற்கும் பற்றுக்கோடும், எல்லாக் காரியங்கட்கும் நிமித்தகாரணமுமாம்.

பரத்தவமும் அபரத்துவமும் காலத்தினாற் பண்ணப்படுவனவும் திக்கினாற் பண்ணப்படுவனவுமாம். முதியோனிடத்துள்ள பரத்துவமும் இளையோனிடத்துள்ள அபரத்துவமும் திக்கினாற் பண்ணப்படுவதாகாது காலத்தினால் பண்ணப்படுவதா யிருத்தலின் அவற்றின் ஞானத்தால் காலம் அனுமானிக்கப்படுமென்பதாம். எது எதன் அபேட்சையால் மூத்ததோ ஆண்டு அவ்வெல்லை யினையுடைய பரத்துவமும், எது எதன் அபேட்சையாலிளையதோ

ஆண்டு அவ்வெல்லையினையுடைய அபரத்துவமும் காலத்தினு லானவையென் றுணர்தல்வேண்டும். அதிக *சங்கியாகமாகிய சூரி யனது கிரியையோடு கூடிய சரீரமென்னும் ஞானத்தால் பரத்து வமும், அற்பசங்கியாகமாகிய சூரியனது கிரியையோடு கூடிய சரீரமென்னும் ஞானத்தால் அபரத்துவமு முண்டாகின்றன. பரத் துவம்-சேஷ்டத்தன்மை; அபரத்துவம்-கனிஷ்டத்தன்மை. சேய் மைக்கணு (தூரத்து)ள்ள பரத்துவமும் அண்மைக்கணு (சமீ பத்து)ள்ள அபரத்துவமும் திக்கினுற் பண்ணப்படுவனவாம்.

பிராணிகளிடத்துள்ள மூப்பிளமைகள் காலத்தினு லுண்டா கின்றனவென்பது கருத்து.

ஒரு பொருளின் அழிவோடுகூடியகாலம் அதற்கு இறந்தகால மாம்; அப்பொருளின் முன்னின்மை பின்னின்மைகளைத்தழுவாத காலம் அதற்கு நிகழ்காலமாம்; அப்பொருளின் முன்னின்மை யோடு கூடிய காலம் அதற்கு எதிர்காலமாம்.

vii. திக்கு—REGION.

80. திக்கு ஒன்று, நித்தியம், விபு; சங்கியை, பரிமா ணம், பிரதக்துவம், சையோகம், விபாகம் (என் னும் ஐந்துகுணம்) உடையது.

அதுவும் பரத்துவாபரத்துவ ஞானங்களால் அநு மேயம்;

அவற்றிற் (பரத்துவா பரத்துவத்திற்)கு வேறு நிமித்த (காரண)மின்மையின்; முன்னும் (முற்பக்கத் தாவது) பின்னும் (பிற்பக்கத்தாவது) பொருள்

---

* சங்கியாகமாகிய - எண்ணுடையதான.

ஆண்டே இருத்தலின் (அவ்விடத்தே யிருக்கிற தென்று வியவகாரம் நிகழ்தலின்).

அஃதொன்றாயினும் சூரியனுடைய அவ்வத்தேச (இட) சையோக உபாதிவசத்தால் கிழக்கு முதலிய பெயர்களை யடையும்.

(கு-ரை.) திக்கிற்கிலக்கணம் கிழக்கு முதலிய வழக்கிற் கேதுவாதலாம். திக்கு காலத்தைவிட வேறாயும் விசேடகுண மற்றதாயும் வியாபகமாயுமிருக்கும். அஃது எல்லாக் காரியங்கட்கும் நிமித்தகாரணமாம். எது எதன் அபேட்சையாற் றூரத்ததோ ஆண்டு அவ்வெல்லையினையுடைய பரத்துவமும், எது எதன் அபேட்சையாற் சமீபித்ததோ ஆண்டு அவ்வெல்லையினையுடைய அபரத்துவம் திக்கினாலானவையாம். அப் பரத்துவ அபரத்துவ ஞானங்களால் திக்குண்டென் றனுமானிக்கப்படுமென்பதாம். பரத்துவம்-தூரத்தன்மை; அபரத்துவம்-சமீபத்தன்மை.

உதயாசலத்தருகிருக்குந் திக்குக் கிழக்கென்றும், அஸ்தாசலத்தருகிருக்கும் திக்கு மேற்கென்றும், மகாமேருவையடுத்த திக்கு வடக்கென்றும்,மகாமேருவான் மறைபட்ட திக்குத் தெற்கென்றும் சொல்லப்படுகின்றன.

* சிலர் காலமும் திக்கும் வியவகாரகற்பனையா லேற்பட்டனவே யன்றி அவை பொருளல்லவென்பர்.

---

* "திக்கும் காலமுமோ (உன்டென்பதற்குப்) பிரமாண மின்மையால் (அவற்றைப்பற்றியும் சிருஷ்டிப்பிரகரணத்தில்) கூறப்படவில்லை; (ஏனெனின்) ஆகாசமே திக்கென்னும் வியவகாரத்திற்குக் காரணமாகச் சம்பவிப்பதாலும் 'திச: சுரோத்திரம்-திக்குக்களே சுரோத்திரேந்திரியம் (ஆகாயம்)' என்று சுருதி கூறுவதாலு

மென்க. காலமோ அவித்தையே, அதுவே சர்வத்திற்கும் ஆதாரமா யிருப்பதால்'' என்று சித்தாந்தபிந்து கூறுகின்றது.

வேதாந்தபரிபாஷை காலம் அநுமானத்தா லறியப்படுவ தென் றங்கீகரியாது "இப்போது கடமிருக்கின்றது; இப்போது இந்தப் புருஷனுண்டாகின்றானென்றற் றொடக்கத்து வியவகா ரங்களால் காலமும் இந்திரியத்திற்கு விஷயமாம்'' என்று கூறு கின்றது.

ஒருசாரார் தீச்சுடும் ஆறொழுகும் என்றலின் நிகழ்காலமன்றி வேறுகாலமின்றென்பர்; மற்றொரு சாரார் ஒருவர் நடக்குந் தொழிற்கண் ஒருகாலம் முன்சென்றொழிய மற்றொருகாலம் பின் செல்லுமாதலின் இறந்த காலமும் எதிர்காலமுமன்றி நிகழ்கால மென்பதொன் றின்றென்பர்; பிறிதொருசாரார் தெய்வமிருக்கி றது, மலைநிற்கின்றது என்னும் வியவகாரம் பொதுவாக நிகழ்வ தால் இறப்பு நிகழ்வு எதிர்வென்னுமுக்காலமுமன்றிப் பொதுக்கா லமும் பெறப்படுதலின் காலம் நால்வகைத்தாமென்பர்; இன்னொரு சாரார் சுடுதல் ஒழுகுதல் முதலிய யாவும் பொருள்களின் பண்புந் தொழிலுமன்றி வேறின்மையின் காலமென்னுஞ் சொல்லுக்குப் பொருட்பே றின்றென்பர்.

ஒருதிறத்தாசிரியர் திக்கென்பது ஒருபொருளன்று; அது வியவகாரநிமித்தம் பொருள்களின் இருப்பைநோக்கி வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கெனக் கற்பிக்கப்பட்டதேயன்றிப் பிறி தன்று. சூரியனுதயமாகுமிடத்தைக் கிழக்கென்றும், அஸ்தமிக்கு மிடத்தை மேற்கென்றும், சூரியனுதயமாதற் கெதிர்முகமாயுள் ளவர்களது இடப்பக்கத்தையும் வலப்பக்கத்தையும் முறையே வடக்கென்றும் தெற்கென்றும் வியவகரிக்கப்படுதலால் அது நன்குவிளங்குமென்பர்.

viii. ஆன்மா—SELF.

81. ஆன்மத்துவ சாமாநியமுடையது ஆன்மா. சுக துக்க முதலிய வேறுபாட்டாற் பலவே. அதுவும் கூறினும். அதற்குச் சங்கியை முதலிய ஐந்தும், சாமாநிய குணங்கள்; புத்தி முதலிய ஒன்பதும் விசேடகுணங்கள். அதற்கு நித்தியத்துவ விபுத்து வங்கள் முன்போல.

(கு-ரை.) சங்கியை முதலிய ஐந்தாவன:—சங்கியை (எண்), பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம் என்பன. புத்தி முதலிய ஒன்பதாவன:—புத்தி, சுகம், துக்கம், இராகம், துவேஷம், பிரயத்னம், தர்மம், அதர்மம், (பாவனையென்னும்) சம்ஸ்கார மென்பன.

ix. மனம்—MIND.

82. மநத்துவ சாமாநியமுடையது மனம்; அணு பரிமாணம்; ஆத்ம சையோகி; அக (உள்) இந்திரியம்; * இன்ப முதலிய உபலப்திக் (சாக்ஷாத்காரத்திற்)குக் கரணம்; நித்தம்; சங்கியை முதலிய ஐந்துகுணமுடையது; பரத்துவம், அபரத்துவம், வேகமுடையது.

---

* தார்க்கிகருளொரு பகுதியார் ஆத்மாவோடு மனதுகூடுவதால் ஞானமுண்டாகின்றதென்று கூறாது தொக்குடன் மனது கூடுவதால் ஞானமுண்டாகின்றதென்றும், சுழுத்தியில் மனது புரீததியென்னும் நாடியில் பிரவேசித்திருப்பதால் அது தொக்குடன் கூடாதிருக்கின்றது; அதனால் சுழுத்தியில் ஞானமுண்டாவதின்றென்றும் கூறுவர்.

இந்த மன சையோகத்தால் புறவிந்திரியம் புறப் பொருள் கிரஹிப்பது; அதனுனே (மனம்) எல்லா உபலப்திக் (பிரத்தியக்ஷத்திற்)கும் சாதனம்.

அதுவும் காட்சியன்று. மற்றென்னெனின், அநு மானத்தாற் ருேன்றுவது.

அங்ஙனமன்ருே, இன்ப முதலிய உபலப்தி (ஞானங்)கள் கட்புல முதலிய வல்லாத (நேத்திரேந் திரிய முதலியன வல்லாத) கரணத்தாற் சாதிப்பன;

கட்புல முதலிய வின்றியும் தோன்றலின் (உண்டா கின்றமையின்);

எவ்வத்து எதுவன்றியே பொருந்துகின்றதோ அவ் வத்து அதனினும் வேறு கரணத்தாற் சாத்தியம். எங்ஙனம்?

கோடரியன்றி யுண்டான சமையற்கிரியை அதற்கு வேருன தீ முதலிய கரணங்களாற் சாத்தியம். யாது கரணம் அது மனம். அதுவும் *அணுபரிமாணம்.

திரவியங்கள் கூறினும். குணங்கள் கூறுதும்.

(கு-ரை.) மனத்திற்கிலக்கணம் மநத்துவ சாமாநியமுடை மையேயன்றிச் சுக முதலிய அனுபவத்திற்குக் காரணமாதலுமாம்.

---

* சட்சுராதிகளினும்வேறு என ஈண்டதிக பாடமுமுண்டு.

* அது பரிசமின்றிச் செயலுடைத்தாயிருக்கும். அஃதுயிர் தோறும் நியதமாயிருத்தலின் பலவாய் அணுரூபமாய் நித்தியமா யிருக்கும்; சங்கியை,பரிமாணம்,வேற்றுமை, சையோகம்,விபாகம் என்னும் குணங்கள் சங்கியை முதலிய ஐந்து குணங்களாம். இவ் வைந்துடன் பரத்துவ முதலிய மூன்றுகுணமுஞ்சேர எண் குணமுடையதாம்.

ஆத்ம மன சையோகத்தால் ஆத்மாவின் மானதப்பிரத்தியட்ச முண்டாகின்றது. ஆண்டுச் சையோகத்திற் காசிரயம் ஆத்மாவாக லின், சையோகத்தின் மானசப்பிரத்தியட்சமு முண்டாதல்வேண் டும். ஆயினும், சையோகத்திற் காசிரயம் இரண்டாம். யாண்டு இரண்டும் பிரத்தியட்சமாகின்றனவோ ஆண்டுச் சையோகத்தின் பிரத்தியட்சமுமுண்டாம். எங்ஙனம்? இரண்டு கடங்களின் பிரத்தி யட்சத்தினால் அவற்றின் சையோகமும் பிரத்தியட்சமாதல் போல வாம். யாண்டு ஒன்றன் பிரத்தியட்சமுண்டாய் மற்றொன்றன் பிரத்தியட்ச முண்டாகவில்லையோ ஆண்டுச் சையோகத்தின் பிரத்தியட்சமுண்டாகின்றதில்லை. எங்ஙனம்? கடத்தின் கிரியை யால் கடத்திற்கும் ஆகாயத்திற்கும் சையோகமுண்டாகின்றது. ஆண்டுக் கடமும் ஆகாயமும் சையோகத்திற் காசிரயமாம். அவ்வி ரண்டனுள் கடம் பிரத்தியட்சம்; ஆகாயம் பிரத்தியட்சமன்று. அத னால் அவற்றின் சையோகப்பிரத்தியட்ச முண்டாகாமை போல வாம். இவ்வாற்றால் ஆத்மமன சையோகத்திற் காசிரயம் அவ்

---

* பிருதிவியாதி மூன்றும் உருவம் பரிசம் செயலென்னு மூன் றும், வாயு உருவமின்றிப் பரிசம் செயலென்னுமிரண்டும், மனம் உருவம் பரிசமென்னு மிரண்டுமின்றிச் செயலுமுடையனவாம் ஆகாயாதி நான்கும் உருவம் பரிசம் செயலென்னு மூன்றுமில் லனவாம்.

விரண்டுமாம். அவ்விரண்டனுள் ஆத்மாவின் மானசப்பிரத்தியட்ச முண்டாகின்றது; மனதின் மானசப்பிரத்தியட்ச முண்டாகின்ற தில்லை. அதனால் ஆத்மமன சையோகத்தின் மானசப்பிரத்தி யட்ச முண்டாகின்றதில்லையென்க.

சுகமுதலியவற்றின் பிரத்தியட்சம் இந்திரியத்தாலுண்டா வது;இந்திரியத்திற்குப் பிரத்தியட்சமா யிருக்கின்றமையின்;யாது யாது இந்திரியத்திற்குப் பிரத்தியட்சமாயிருப்பது அதுவது இந் திரியத்தாலுண்டாவது, கடாதிப் பிரத்தியட்சம்போலும் என்னு மனுமானத்தால் இந்திரியத்தாலுண்டாவதற்கு வியாப்பியமாயுண் டாகும் பிரத்தியட்சத்தையுடையது சுகமுதலியவற்றின் பிரத்தி யட்சமென்னும் ஆராய்ச்சிக்குப் பின்னர்ச் சுகமுதலியவற்றின் பிரத்தியட்சம் நேத்திராதி இந்திரியங்களால் தோன்றுவதன்று; அவ்வவ்விந்திரிய அயோக்யவிஷயமாதலின் என்னுமனுமானத்தி னால் அவற்றிற்கு மனத்தினாலுண்டாகுந்தன்மை சித்தித்தவிடத்து மனமுஞ் சித்திக்கின்றதென்க. சிலர் மனம் விபுவென்று கூறுவர். அவர் அதற்கு "மனம் விபு; பரிசமல்லாத திரவியமாதலின்; ஆத்மாபோலும்" என்றனுமானங்காட்டுவர். அதனை மறுத்தற் பொருட்டு 'அணு பரிமாணம்' என்று கூறப்பட்டது. மனம் விபு வாயின் அதற்கு ஆன்மாவோடு சையோகமுண்டாதல் பொருந் தாது. விபுப்பொருளிரண்டிற்குச் சையோகமுண்டெனின் அச் சையோகம் நித்தமாதலின் ஆன்மா வுறக்கமின்றி யிருத்தல்வேண் டும். சுழுமுனை நாடியில் மனமொடுங்கியகாலத்து ஆத்மாவிற்கு உறக்கமுண்டாதலாலும் ஒடுங்காதகாலத்து அஃதுண்டாகாமை யாலும் மனம் அணுவென்பது பெறப்படும். யாண்டும் சுழுமுனை நாடியின் வேறாயவிடத்தே மனத்திற்கு ஆத்மாவோடு சையோக முண்டாமென்பது நியமம்.

பரமாணு வடிவான பிருதிவிமுதல் மனமீருகக்கூறிய நித்தியத்திரவியங்களொன்பதற்கும் அவிர்த்தி (பிறிதொன்றிலிருத்தலின்மை) சுபாவமாம். எது சையோகசம்பந்தத்தாலாவது சமவாய சம்பந்தத்தாலாவது ஒன்றினு மிருப்பதில்லையோ அது அவிர்த்தி யெனப்படும். நித்தியதிரவியங்களிலோ பிறபதார்த்தங்கள் சையோகசம்பந்தத்தாலாவது சமவாயசம்பந்தத்தாலாவ திருக்கும். பிற பதார்த்தங்களிலோ அவை அங்ஙனமிருப்பதில்லை.

(1.) கடம் ஆகாயத்தில் சையோகசம்பந்தத்தாலிருக்கின்றது; ஆகாயமோ அதில் சையோகசம்பந்தத்தாலாவது சமவாய சம்பந்தத்தாலாவது இருப்பதில்லை.

(2.) துவியணுகம் தனதவயவ(முதற்காரண)மாகிய பரமாணுவில் சமவாயசம்பந்தத்தாலிருக்கின்றது; பரமாணுவோ அதில் சையோக சம்பந்தத்தாலாவது சமவாய சம்பந்தத்தாலாவதிருப்பதில்லை.

பிறவு மிங்ஙனமே யூகித்துணர்க. நித்தியத்திரவியத்தில் அநித்தியத்திரவியமிருத்தற்கும் அநித்தியத்திரவியத்தில் நித்தியத்திரவிய மிராமைக்கு முதாரணம் பத்தென்னுமெண்ணில் ஒன்றென்னுமெண்ணடங்கியும், ஒன்றென்னுமெண்ணில் பத்தென்னுமெண் ணடங்காமலு மிருத்தல்போல்வதாம்.

(2.) குணம்—QUALITY.

83. குணத்துவ (குணத்தன்மைச்) சாமாநியமுடையது, அசமவாயிகாரணமாவது, *வினையல்லது (அசைவு வடிவினதாகாதது) குணம்.

---

* இலக்கணநூலாரி லொருசாரார் வினையைப் பண்பிலடக்கி தொழிற்பண்பெனக் கூறுவர்.

அதுவும் பொருளைப்பற்றியது (திரவியத்தை யாசிரயித்திருப்பது);

1. ரூபம், 2. ரசம், 3. கந்தம், 4. பரிசம், 5. சங்கியை, 6. பரிமாணம், 7. பிரதக்துவம், 8. சையோகம், 9. விபாகம், 10. பரத்துவம், 11. அபரத்துவம், 12. குருத்துவம், 13. திரவத்துவம், 14. சிநேகம், 15. சத்தம், 16. புத்தி, 17. சுகம், 18. துக்கம், 19. இச்சை, 20. துவேஷம், 21. பிரயத்னம், 22. தருமம், 23. அதருமம், 24. சம்ஸ்காரம் என்னும் பேதத்தால் இருபத்துநான்காம்.

"அன்மையினின்மையின்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தின் விசேடவுரையில் சேனவரையர் "பண்பொடு இவற்றிடை, (அன்மை, இன்மை, உண்மை, வன்மை என்பனவற்றில்) வேற்றுமை யென்னையெனின்—இன்மை பொருட்கு மறுதலையாகலின், பொருளின்கட்கிடக்கும் பண்பெனப்படாது. அன்மையும் உண்மையும் பண்பிற்குமொத்தலின் பண்பெனப்படா; என்னை? குணத்திற்குக் குணமின்மையின். வன்மை-ஆற்றல் (சக்தி). அதுவுங் குணத்திற்குமுண்டாதலின் குணமெனப்படாது; உளதெனின் அது பண்பாயடங்கும். அதனல் பொருட்கட்கிடந்து தனக்கோர் குணமின்றித் தொழிலின் வேறாய்குணத்தின் அன்மை முதலாயின வேறெனப்படும். பண்பெனினுங் குணமெனினுமொக்கும்" என்று கூறுவர்: "பண்புந்தொழிலும்" என்னும் தண்டியலங்காரச்சூத்திரத்தின் விசேடவுரையில் "பண்பென்பன அவற்றின் (பொருள்களின்) குணமாய்த் தோன்றித் தமக்கு வேறுகுணமின்றி நிகழ்வன. தொழிலென்பன அவற்றின் (பொருள்களின்) புடைபெயர்ச்சியாய்க் காலம் புணர்ந்து நிற்பன" என்று கூறப்பட்டிருக்கின்றது.

(கு-ரை.) குணம்-பண்பு. குணத்தன்மையாகிய ஜாதியுடையது அல்லது திரவியகருமங்கட்கு வேருய ஜாதியுடையது குணமாம். அது சமவாயிகாரணமும் நிமித்தகாரணமுமாவதன்ருகலின் 'அசமவாயிகாரணமாவது' என்றும்,கருமமும் அசமவாயிகாரணமாயிருத்தலின் அதிற் செல்லும் அதிவியாத்தியை நீக்க 'வினையல்லது' என்றும் கூறப்பட்டன. குணம் யாண்டும் தனக்கொரு குணமின்றித் திரவியத்தையே யாசிரயித்திருக்கும். 'உருவம் ஒன்று சுவையின் வேறு' என்னும் வியவகாரமிருத்தலால் உருவமென்னுங் குணத்தில் ஒன்றென்னுங் குணமும், சுவையென்னுங் குணத்தில் வேறு என்னுங் குணமுமிருத்தலின் குணத்தில் குணமின்றென்பதெங்ஙனம் பொருந்துமெனின், ஒரு பொருளில் அவை சமவேதித்து(ஒற்றிற்று) நிற்றல்பற்றியே யங்ஙனம் வியவகரிக்கப் படுகின்றதன்றிப் பிறிதன்றென்க. எண்மை,மென்மை வன்மை மடி முதலிய குணங்களு முளவாகக் குணம் இருபத்துநான்கென்பது எங்ஙனம்பொருந்துமெனின்,திண்மையின் அபாவமேஎண்மையாகலானும், அவயவக்கூட்ட விசேடமே வன்மை மென்மைகளாதலானும், பிரயத்னத்தின் அபாவமே மடியா (சோம்பலா)கலானும் பொருந்துமென்க. "பிருதிவி வன்மை மென்மை முதலிய அவயவ சையோகவிசேடத்தோடு கூடியது" என்று முன்னர்க் கூறியிருப்பதறிக.

(க.) ரூபம்—COLOUR.

84. அவற்றுள், கட்புல மாத்திரையாற் கிரஹிப்பது ரூபம்; ஜாதியுடையது; விசேடகுணம்; பிருதிவி முதலிய மூன்றன்கண் ணிருப்பது.

அதுவும் வெண்மை முதலிய பல பிராகாரம் (வகை); பிருதிவியிற் பாகச (பாகத்தாலுண்டாய) ரூபம்.

பிருதிவிமாத்திரத்தில் (பரமாணு வடிவ பிருதிவி, காரியவடிவ பிருதிவியென்னு மிரண்டிலு முள்ள) ரூபம் அநித்தியம்; அப்புப் பரமாணுவிலும், தேயுப் பரமாணுவிலும் நித்தியம்.

காரிய அப்பு தேயுக்களில் அநித்தியம்; தேயுவில் அபாகச (பாகத்தாலுண்டாகாத) வெண்மையொளி; அப்புவில் ஒளியில்லாத அபாகச வெண்மை.

(கு-ரை.) உருவம் - ஒளி. அஃதாவது நிறம். கட்புலம் - விழி. உருவத்தன்மையாகிய ஜாதியுடையது, அல்லது விழிமாத்திரத்தாற் கவரப்படுங் குணம் உருவமாம். சங்கியை பரிமாண முதலியனவும் விழியாற் கிரகிக்கப்படுதலின் அவற்றிற்செல்லு மதிவியாத்தியை நீக்கக் 'கட்புலமாத்திரையாற் கிரஹிப்பது ரூபம்' என்று கூறப்பட்டது. ரூபம் சங்கியை முதலியவை போன்று பிறிதோரிந்திரியத்தானும் கிரஹிக்கப்படுவதாகாது கண்ணிந்திரியத்தாலேயே கிரஹிக்கப்படு மென்பது கருத்து. ரூபம் பிருதிவி, அப்பு, தேயுவென்னு மூன்றன்கண்ணுமிருக்கும். அது வெண்மை, கருமை, பொன்மை, செம்மை, பசுமை, புகைமை, சித்திரம் என * எழுவகைத்தாம். பிருதிவியில் இவ்வேழுமுண்டு. நீரில் விளங்கா வெண்மையும் தேயுவில் விளக்கமான வெண்மையு முண்டு.

---

* பிராசீனர் ரூபம் எழ்வகைத்தாமென்பர்; நவீனர் சித்திரத்தை யங்கீகரியாது அறுவகைத்தாமென்பர். "சித்திரரூபத்தை வேறுபிரித்ததென்னே? வியாபியாதிருக்குங்கருமைமுதலியவற்றின் கூட்டமேசித்திரரூபமாமோவெனின், அற்றன்று; வியாபித்திருத்தலே உருவத்திற்கு நியமமாகலின். அற்றேல்,சித்திரகலிங்கத்தில்

(உ) ரசம்—TASTE.

85. ரசம் ரசநேந்திரியத்தாற் கிரஹிக்கப்படுவது; விசேடகுணம்; பிருதிவி, புனல்களி னிருப்பது.

அவற்றுள், பிருதிவியில் மதுரம், புளிப்பு, கார்ப்பு, காழ்ப்பு, கைப்பு, துவர்ப்பு என்னும் அறுவகைப்

(ஆடையில்) அவயவவுருவு (ஆடையின் சமவாயிகாரணமான நூலின் உருவம்) தோன்றுமென்னுமோவெனின், என்னும் (ஒப்புக்கொள்ள மாட்டோம்); அவயவிக்கு (காரியமான ஆடைக்கு) உருவமின்மையான் (அவயவமான நூலின் உருவம் வருதலின்மையின்) ஆடை காட்சிப்பொருளன்றாதல்பெறப்படுமாகலின். காட்சியைப்பயப்பது (தருவது) உருவமென்னுது உருவுடைப்பொருளில் (ஆடையில்) சமவேதமென (சமவாயசம்பந்தத்தா லிருப்பதென)க் கோடல் மிகையா (மிகைபடக்கூறலா)மென மறுக்க. இதனானே ஆடை காட்சிப்பொருளாதல் வேறொன்றால் (உருவமன்றிப் பிறிதொருகாரணத்தால்) பெறப்படாமையின், சித்திரரூபமுண்டென்பது பெற்றாம்" என்று தருக்கசங்கிரகவுரையிற் கூறப்பட்டிருக்கின்றது. அவயவத்தின் (நூலின்) உருவமுதலியவை அவயவியில் (ஆடையில்) வருகின்றனவென்னுது அவயவியுண்டான இரண்டாவது கணத்தில் அதில் உருவ முதலியவை யுண்டாகின்றனவென்பது நியாயநூற்கொள்கையாதலின் சித்திரரூபமுண்டென் றங்கீகரித்தால் அதன் பிராகபாவம் அவயவியில் ஒன்றே இருப்பதாக அங்கீகரிக்கப்படுகின்றது. இஃதிலாகவமாம் (சுருங்கக்கூறலாம்). சித்திரவுருவத்தை யங்கீகரியாவிடின் அவயவியிற்றோன்றும்வெண்மை முதலிய ஆறுருவத்திற்கும் ஆறுபிராகபாவம் அதிலிருப்பதாக அங்கீகரித்தல் வேண்டும். இது கற்பனுகௌரவமாம் (மிகைபடக்கூறலாம்).

பாகசமும் அப்புவில் மதுரம் அபாகசமும் நித்தியாநித்தியமாம். நித்தியம் பரமாணுவான அப்புவில், அநித்தியம் காரியமான அப்புவிலென்க.

(கு-ரை.) ரசம்-சுவை. ரசத்தன்மையாகிய ஜாதியுடையது, அல்லது இரசநேந் (நாவிந்)திரியத்தால்மாத்திரம் கிரகிக்கப்படும் குணம் ரசமாம். பரமாணுவடிவ பிருதிவி, காரியவடிவ பிருதிவியென்னு மிரண்டிலும் மதுரமுதலிய சுவையாறும் பாகத்தாற் றோன்றி யநித்தியமாகவேயிருக்கும். மதுரம் பரமாணுவடிவ அப்புவில் நித்தியமாயும், காரியவடிவ அப்புவில் பாகத்தாற் றோன்றாது அநித்தியமாயுமிருக்கும்.

(3.) கந்தம்—SMELL.

86. கந்தம் கிராணத்தாற்கவரப்படும் விசேட குணம்; பிருதிவி மாத்திரையினிருப்பது; அநித்தியமே. அது நறுநாற்றம்; தீநாற்றமென் றிருவகை.

புனல் (நீர்) முதலியவற்றிற் கந்தந் தோன்றுதல் சையுக்த சமவாயத்தாலென் றறியத்தக்கது.

(கு-ரை.) கந்தம்-நாற்றம். கந்தத்துவமாகிய ஜாதியுடையது, அல்லது கிராணேந்திரியத்தால் மாத்திரம் கிரகிக்கப்படும் குணம் கந்தமாம். அது பரமாணுவடிவ பிருதிவியிலும் காரியவடிவ பிருதிவியிலும் பாகத்தாற்றோன்றி அநித்தியமாகவேயிருக்கும். 'முதலியவற்றின்' என்றமையின் காற்றுங்கொள்க. புனலுக்கும் பிருதிவிக்கும் சையோகசம்பந்த முண்டாயவிடத்துப் புனலுடன் சையுக்தமான பிருதிவியில் கந்தம் சமவாயமாயிருத்தலால் புனலில் (பனிநீர் முதலியவற்றில்) வாசனை தோன்றுகின்றதெனவும், காற்றுக்கும் பிருதிவிக்கும் சையோகசம்பந்தமுண்டாய

விடத்துக் காற்றுடன் ஸையுக்தமான பிருதிவியில் கந்தம் சமவாயமா யிருத்தலால் (சோலை முதலியவற்றிற் படிந்துவரும்) காற்றில் வாசனைதோன்றுகின்றதெனவுமறிக. நீரினும் காற்றினும் பிருதிவியின் நாற்றமே புலப்படுகின்றதென்பது அந்வயத்தானும் வியதிரேகத்தானு மறிதற்பாற்றும். பிருதிவியின் சம்பந்தமிருந்தால் நீரினும் காற்றினும் நாற்றம்புலப்படுமென்பது அந்வயம்; பிருதிவியின் சம்பந்தமிராவிடின் அவற்றில் அது புலப்படாதென்பது வியதிரேகம்.

(4.) பரிசம்—TOUCH.

87. பரிசம் துவக்கிந்திரியத்தாற் கிரஹிக்கப்படும் விசேடகுணம்; பிருதிவியாதி நான்கினிருப்பது.

அது தண்மை (சீதம்), வெம்மை (ஊஷ்ணம்), தண்மை வெம்மை இல்லதெ (அநுஷ்ணுசீதமெ)ன்னும் பேதத்தான் மூவகை;

தண்மை நீரில், வெம்மை தீயில், தண்மை வெம்மை இல்லது பிருதிவி வாயுக்களில்;

பிருதிவிமாத்திரத்தில் அநித்தியம்; அப்பு, தேயு, வாயுக்களின் பரமாணுக்களில் நித்தியம்;

அப்பு முதலிய காரியங்களில் அநித்தியம்.

இவ்வுருவாதி நான்கும் மகத்துவத்தோ டொருபொருளிற் சமவேதித்துக்கொண் டுற்பூதங்களாயே (பிரத்தியட்ச யோக்கியங்களாயே) காட்சிகள்.

(கு-ரை.) பரிசம்-ஊறு. பரிசத்துவமாகிய ஜாதியுடையது, அல்லது துவக்கிந்திரியத்தால்மாத்திரம் கிரகிக்கப்படுங் குணம்

பரிசமாம். பிருதிவியில் தண்மையும் வெம்மையும், வாயுவில் தண்மையும் வெம்மையும் தோன்றுதல் நீரின் சம்பந்தத்தாலும் தீயின் சம்பந்தத்தாலுமாம். பரமாணுவடிவ பிருதிவியினும் காரியவடிவ பிருதிவியினுமுள்ள பரிசம் பாகத்தாற்றோன்றியதா யிருத்தலின் அநித்தியமாம். பரமாணுவடிவ அப்பு முதலியவற்றி லுள்ள பரிசம் தோற்றக்கேடின்றியதா யிருத்தலின் நித்தியமாம்; காரியவடிவ அப்பு முதலியவற்றிலுள்ள பரிசம் தோற்றக்கேடுடை யதா யிருத்தலின் அநித்தியமாம். பரமாணுவடிவ,துவியணுகவடிவ பிருதிவி முதலியவற்றிலுள்ள ரூபம், ரசம், கந்தம், பரிசமென்னுங் குண நான்கும் அநுற்பூதங்களா யிருத்தலின் நேத்திர முதலிய இந்திரியங்கட்கு விஷயமாவதன்று. திரியணுக முதலிய திரவியங் களில் எந்தக்குணம் மகத்துவத்தோடுற்பூதமா யிருக்கின்றதோ அந்தக்குணம் பிரத்தியட்சமாம்.

(5.) சங்கியை—NUMBER.

88. சங்கியை ஒருமை (ஒன்று) முதலிய வியவ காரத்தின்காரணம்; சாமாநியகுணம்; ஒன்றுமுதற் * பரார்த்தமளவும்.

---

* எண்ணுனது ஏகம், தசம், சதம், சகஸ்திரம், தசசகஸ்தி ரம், லட்சம், தசலட்சம், கோடி, தசகோடி, சதகோடி, அற்புதம், நிர்ப்புதம், கர்வம், மகாகர்வம், பத்மம், மகாபத்மம், க்ஷோணி, மகாக்ஷோணி, சங்கம், மகாசங்கம், க்ஷிதி, மகாக்ஷிதி, க்ஷோபம், மகாக்ஷோபம், நிதி, மகாநிதி, சாகரம், மகாசாகரம், அரி, மகாஅரி; சங்கை, மகாசங்கை, பணி, மகாபணி, கிருது, மகாகிருது என முப்பத்தாறு ஸ்தான முடையதாம்.

அவற்றுள்,ஒருமை இருவகை; நித்த அநித்தபேதத் தான். நித்தியத்தையடைந்தது நித்தியம்; காரியத்தை யடைந்தது அநித்தியம்.

(அநித்திய ஏகம்) தனது ஆசிரயசமவாயிகார ணத்தை யடைந்த ஒருமையாற் றோன்றுவது.

இருமை அநித்தியமே.

அதுவும் இரண்டு பிண்டங் (பொருள்)களில் இஃ தொன்று இஃதொன்று என்னும் * அவாவுதற் கருத்தா (அபேட்சா புத்தியா)ற் றோன்றும்.

அவற்றுள், இரண்டுபிண்டங்கள் சமவாயிகாரணம்; பிண்டங்களின் ஒருமைகள் அசமவாயிகாரணம்; அவா வுதற்கருத்து நிமித்தகாரணம். அவாவுதற்கருத்து நாசத்தானே இருமை நாசம். இங்ஙனம் மும்மை முதலிய தோற்றம்.

(கு-ரை.) சங்கியை - எண். சங்கியாத்துவமாகிய ஜாதி யுடையது, அல்லது எண்ணல் வியவகாரத்திற்குச் சிறந்த காரணம் சங்கியையாம். ஒன்றற்குக் கீழ்ப்பட்ட எண்ணும் பரார்த்தத் திற்கு மேற்பட்ட எண்ணுமின்மையின் ஒன்றென்பது சிற்றெண் ணும் பரார்த்தமென்பது பேரெண்ணுமாம். முந்திரியினுங் கீழ்ப் பட்ட எண்ணே இங்கொன்றென்னுமெண்ணும். பரமாணுவடிவ பிருதிவி முதல் மனமீருய நித்தியத்திரவியங்களிலுள்ள ஒருமை

---

* பல வொருமைகளை விஷயஞ்செய்யும் புத்தி அபேட்சா புத்தி யெனப்படும்.

யெண் நித்தியமும், துவியணுக முதலிய அநித்தியத்திரவியங்களி லுள்ள ஒருமையெண் அநித்தியமுமாம். அநித்திய ஒருமை தனக் காசிரயமாயும் முதற்காரணமாயுமுள்ள அநித்தியத்திரவியத்தின் ஒருமையாற்றோன்றும். தேரொன்று புத்தகமொன்று என்புழி ஒன்றென்னுமெண்ணிற்கு அநித்தியத்திரவியமாகிய தேரும் புத் தகமும் ஆசிரயமும் முதற்காரணமுமாம், பரமாணுவடிவ பிரு திவி முதலியவை நித்தியத்திரவியங்களா யிருத்தலின் அவற்றின் ஒருமை யெண்ணிற்கு அவை ஆசிரயமா யிருப்பதன்றி முதற்கார ணமா யிருப்பதன்றும். பலவற்றினிருப்பதாகிய இருமை முதலிய எண் பல ஒருமைகளை விஷயஞ்செய்யும் அபேட்சாபுத்தியாற் றோன்றி அதன் நாசத்தினால் நாசமாவதா யிருத்தலின் யாண்டும் அநித்தியமேயாம்.

மும்மை யெண்ணிற்கு மூன்றுபிண்டங்கள் சமவாயிகாரண மெனவும், அவற்றின் ஒருமைகள் அசமவாயிகாரணமெனவும், அவா வுதற்கருத்து நிமித்தகாரணமெனவும், அதன் நாசத்தாலே மும்மை யெண் நாசமாமெனவுமறிக. இங்ஙனமே நான்கு முதலியவற் றிற்குங் கொள்க.

அதீந்திரியத்திரவியங்களி (பரமாணு துவியணுகாதிகளி)ன் இருமை முதலிய எண் ஈசுவரனது அவாவுதற் கருத்தாற்றோன்றி ஜீவர்களின் அதிர்ஷ்ட (தர்மாதர்மங்களின்) நாசத்தால் நாசமாம்.

(6.) பரிமாணம்—QUANTITY.

89. பரிமாணம் அளவு வியவகாரத்தின் அசாதாரண காரணம் (அளத்தல் வழக்கிற்குச் சிறந்தகாரணம்).

அது அணு (நுண்மை), மகத்து (பெருமை), நெடில் (நெடுமை), குறில் (குறுமை) என நான்குவகை. இன்

னும் அது நித்த அநித்த பேதத்தால் இருவகை; நித்தியத்தை யடைந்தது நித்தியம்; காரியத்தை யடைந்தது அநித்தியம்.

காரியத்தையடைந்த பரிமாணம் காரணத்தை யடைந்த சங்கியாயோனி, பரிமாணயோனி, *பிரசய யோனி (என மூவகைத்தாம்).

அவை எங்ஙனம்:—

(1.) துவியணுகபரிமாணம் ஈசுவரன் அபேட்சா புத்தியாற் றோன்றியது; பரமாணு இருமையாற் சனிக்கையால் சங்கியாயோனி; (அதற்குச்) சங்கியா காரணமென்று பொருள்.

திரியணுக பரிமாணமும் தனது ஆசிரய (திரியணுகத்தின்) சமவாயிகாரணத்தை (துவியணுகத்தை) யடைந்த பன்மைச்சங்கியாயோனி (மும்மையெண்ணாலாகியது).

---

* மகத்துவ பரிமாணமுள்ள அவயவங்க (திரவியங்க)ளுள் ஒன்றற்கொன்றுண்டாகும் சிதிலசையோகம் பிரசயமெனப்படும். அவயவங்கள் பலவற்றுள் சில அவயவங்கட்குச் சையோகமுண்டாகாதிருக்க வேறு சில அவயவங்கட்குண்டாகும் சையோகம் சிதில சையோகமெனப்படும். பஞ்சுக்குவியலில் சில அவயவங்கட்குச் சையோகமுண்டாகாதிருக்க வேறு சில அவயவங்கட்குச் சையோக முண்டாயிருத்தல் ஈண்டறியத்தக்கதாம்.

(2.) சதுரணுகாதி பரிமாணம் தனது ஆசிரய (சதுரணுக முதலியவற்றின்) சமவாயிகாரண (நான்கு திரியணுக முதலியவற்றின்) பரிமாணத்தாற் றோன்றியது.

(3.) பஞ்சூத்திரட்சிப்பரிமாணம் தனது ஆசிரய (பஞ்சூத்திரட்சியின்) சமவாயிகாரண (பஞ்சின்) அவயவங்களது பிரசிதில (நெருக்கமாயிராத) சையோகத்தாற் றோன்றியது.

பரமாணுவையடைந்த பாரிமாண்டல்ய பரிமாணமும் ஆகாசாதியையடைந்த பரமமகத்பரிமாணமும் நித்தியமே.

(கு-ரை.) பரிமாணம் - அளவு. பரிமாணத்தன்மையாகிய சாதியுடையது, அல்லது அளத்தல் வழக்கிற்குச் சிறந்தகாரணம் பரிமாணமாம். அணு, மகத்து, நெடில், குறில் என்னும் நான்கனுள் அணுவும் குறிலும் பரமாணு துவியணுகங்களிலும், மகத்தும் நெடிலும் திரியணுக சதுரணுக முதலியவற்றிலு மிருக்கும். பரமாணுவிலுள்ள பாரிமாண்டல்ய பரிமாணத்திற்கும் ஆகாய முதலிய நான்கினுமுள்ள பரமமகத் பரிமாணத்திற்கும் வேறாய (இடைப்பட்ட) பரிமாணமியாவும் அநித்தியமேயாம்; தோற்றக் கேடுடையனவா யிருத்தலின். பாரிமாண்டல்ய பரிமாணம்-அணு பரிமாணம். 'காரியத்தையடைந்த பரிமாணம் காரணத்தையடைந்த சங்கியாயோனி, பரிமாணயோனி, பிரசயயோனி' என்பதற்குக் காரியத்திரவியத்தின் பரிமாணத்திற்கு அந்தத் திரவியத்தின் சமவாயிகாரணமாய திரவியத்திலுள்ள சங்கியையும் பரிமாணமும் பிரசயமும் அசமவாயிகாரணமா யிருக்கின்றனவென்பது

பொருள். இங்ஙனங் கூறியதால் காரியத்திரவியத்தின் பரிமாணம் காரணத் திரவியகுணபரம்பரையாற் றோன்றுமென்பதாயிற்று. யோனி - காரணம்.

துவியணுகபரிமாணம் பரமாணுவின் இருமைச்சங்கியையாலும், திரியணுகபரிமாணம் துவியணுகத்தின் மும்மைச் சங்கியையாலும் தோன்றும். சதுரணுக முதலியவற்றின் பரிமாணம் சதுரணுக முதலியவற்றின் சமவாயிகாரணமான நான்கு திரியணுக முதலியவற்றின் பரிமாணத்தாற்றோன்றும். அவயவ (திரியணுக முதலியவற்றின்) பரிமாணம் தனது சமானஜாதியுடைய அல்லது மேன்மையுடைய பரிமாணத்திற்கு அசமவாயிகாரணமாமென்பது நியமம். துவியணுக பரிமாணம் இரண்டு பரமாணுவின் பரிமாணத்தாலும், திரியணுகபரிமாணம் மூன்று துவியணுகத்தின் பரிமாணத்தாலுமுண்டாவதாயின் அவை அவற்றிற்குச் சமானஜாதியாகவாவது மேன்மையாகவாவது இருக்கும்; அங்ஙனமின்மையின் அவை சங்கியாஜன்னியமாமென்க.

(7.) பிரதக்துவம்—INDIVIDUALITY.

90. *பிரதக்துவம் வேறென்னும் வியவகாரத்தின் அசாதாரண காரணம்.

அஃது ஏக பிரதக்துவம் (ஒருவேற்றுமை), துவிப்பிரதக்துவமெ (இருவேற்றுமையெ)ன இருவகைத்து.

---

* "கூற்றினுங் குறிப்பினு மொப்புடை யிருபொருள், வேற்றுமைப் படவரின் வேற்றுமை யதுவே" என்பர் அலங்காரநூலார். "அதனை (அந்நியோந்நியாபாவத்தை)ப் பேதமென்றும், பின்னத்தன்மையென்றும், அதிரிக்தத்தன்மையென்றும், வேற்றுமையென்றுங் கூறுவர்" என்று விருத்திரத்நாவலி கூறுகின்றது.

அவற்றுள், முதலது நித்தியத்தையடைந்தது நித்தியம், அநித்தியத்தை அடைந்தது அநித்தியம். துவிப்பிரதக்துவமோ அநித்தியமே.

(கு-ரை.) பிரதக்துவம் - வேற்றுமை. பிரதக்துவத்தன்மையாகிய ஜாதியுடையது, அல்லது இஃது இதனின் வேறு என்னும் வழக்கிற்குச் சிறந்தகாரணம் பிரதக்துவமாம். பரமாணு முதலிய நித்தியத்திரவியங்களிலுள்ள ஒரு வேற்றுமை நித்தியமும் காரியத்திரவியங்களி லுள்ளஒரு வேற்றுமை அநித்தியமுமாம். இருவேற்றுமை பலவற்றினிருப்பதாகலின் யாண்டும் அவை அநித்தியமேயாம். 'துவிப்பிரதக்துவம்' என்று கூறப்பட்டதாயினும் இனம்பற்றி மும்மை வேற்றுமை முதலியனவும் அநித்தியமெனக் கொள்க. இருவேற்றுமை முதலியன பல ஏகவேற்றுமைகளை விஷயஞ்செய்யும் அவாவுதற்கருத்தாற் றோன்றி அதன் நாசத்தால் கெடும். பிருதிவியின் பரமாணுவிலுள்ள வேற்றுமை பிருதிவியின் துவியணுகத்திற் றோன்றிய வேற்றுமைக்கு அசமவாயிகாரணமாம். இங்ஙனமே ஏனையவற்றிற்கு மூகித்துக்கொள்க.

அந்நியோந்நியாபாவம் அபேதத்தை நிஷேதிப்ப (விலக்குவ) தாயிருத்தலின் அது பேத (வேற்றுமை) வடிவமாம். அங்ஙனமாக அதனோடிதனிடை வேறுபாடியாதெனின் கூறுதும்:—அந்நியோந்நியாபாவத்திற்குப் பிரயோகம் கடம் படமன்றுஎன்றும்,வேற்றுமைக்குப் பிரயோகம் இக்கடம் இப்படத்தினும் வேறு என்று மிருத்தலின் அவ்விரண்டும் தம்முள் வேறுபாடுடையனவேயாம். அந்நியோந்நியாபாவஞானத்தின் விஷயமாகிய பிரதியோகி அநுயோகிகள் சமான (ஒத்த) வேற்றுமை (முதல்வேற்றுமை) யுடையனவாயிருத்தலும், வேற்றுமைஞானத்திற்கு விஷயமாகிய இக்கடம் என்பது முதல்வேற்றுமையேற்று மற்றது அஃதேலாமலிருத்தலுங்

காண்க. கடம் படமன்றென்புழிக் கடம் அநுயோகியும், படம் பிரதியோகியுமாம். எதனிட (கட)த்து அபாவமுண்டாகின்றதோ அஃது அபாவத்தின் அநுயோகியாம்; எதன் (படத்தின்) அபாவமுண்டாகின்றதோ அது பிரதியோகியாம்.

இக்கடம் இப்படத்தினும் வேறு என்புழி அறியப்படாதகடத்தின் வேற்றுமையை யறிதற்கு எல்லையாகசிற்பது அறியப்பட்ட பொருளாகிய படமாதலின் அஃதைந்தாம் வேற்றுமையின் எல்லைப்பொருளில் வந்ததென்க. இங்கு வேறு என்பது பண்புப்பெயர்; குறிப்புவினைமுற்றன்று.

(8.) சையோகம்—CONJUNCTION.

91. * சையோகம் சையுக்த (கூடியதென்னும்) வியவகாரத்தினேது; இரண்டன் கண்ணது (இரண்டு திரவியங்களிலிருப்பது); அவ்வியாப்பிய விருத்தியது. (வியாபியாம லிருப்பது).

அது வேறுவினையாற் றோன்றியது, இரண்டன் வினையாற் றோன்றியது, சையோகத்தாற் றோன்றியதென † மூவகை.

---

* சையோகமாகிய சம்பந்தம் சம்பந்தியாகிய திரவியங்களினும் வேறாகக் காணப்படாமையின் அது சம்பந்தியினும் வேறன்றென்பர் ஒருசாரார்.

† இம்மூவகைச் சையோகமேயன்றி வேறிரண்டு சையோகமும் அங்கீகரிக்கப்பட் டிருக்கின்றன. அவற்றுள், ஒன்று சகஜசையோகமும், மற்றொன்று நித்திய சையோகமுமாம்.

அவற்றுள், (1) வேறுவினையாற் றோன்றுவ தெங்ஙனம்? வினையுடைய பருந்தோடு வினையில் குற்றி (மரக்கட்டை)க்குச் சையோகம்; அதற்கு (அச்சையோகத்திற்கு)ப் பருந்தின்வினை அசமவாயிகாரணம்.

(2) இரண்டன் வினையாற் றோன்றுவ தெங்ஙனம்? வினையுடைய மல்லரது சையோகம்.

(3) ‡ சையோகத்தாற் றோன்றுவ தெங்ஙனம்? காரண அகாரண சையோகத்தால் காரிய அகாரிய சையோகம். எங்ஙனம்? கைத்தருசையோகத்தான் மெய்த்தரு சையோகம்.

(1.) சையோகமுடையதினுற்பத்தியோ டுண்டாகும் சையோகம் சகஜ (இயல்பான) சையோக மெனப்படும். பொன்னில் மஞ்சள் நிறத்திற்கும் குருத்துவத்திற்கும் ஆசிரயமான பிருதிவியின் பாகத்திற்கும் தேயுவின் பாகத்திற்கு முள்ள சம்பந்தம் இயல்பாய்ப் பெறப்பட்டிருத்தலின் இது சகஜ சையோகமாம். செம்பிற்கும் களிம்பிற்குமுள்ள சம்பந்தமும் சகஜ சையோகமாம்.

(2.) வியாபகப்பொரு ளிரண்டற்குள்ள சம்பந்தம் நித்தியமாயிருத்தலின் அது நித்திய சையோகமா மென்பர் மீமாஞ்சகர் முதலியோர். ஆகாயம், காலம், திக்கு, ஆத்மா என்பன வியாபக நித்தியத் திரவியமாயிருத்தலின் இவற்றின் பரஸ்பரசம்பந்தம் நித்திய சையோகமாம்.

‡ கையின் தொழிலால் கைத்தருசையோக முண்டா மிடத்து அத்தொழிலாலேயே மெய்த்தருசையோகமு முண்டா கின்றமையின் இது கர்மஜ சையோகமேயாமென்பர் ஒரு திறத்தாசிரியர்,

(கு-ரை.) சையோகம்—கூட்டம். சையோகத் தன்மையாகிய சாதியுடையது, அல்லது கூடியதென்னும் வழக்கிற்குச் சிறந்த காரணம் சையோகமாம். தம்முள்விட்டுநீங்கி வெவ்வேறா யிருக்கக்கூடிய இரண்டு திரவியங்களின் சம்பந்தம் சையோகமா யிருத்தலின் '(சையோகம்) இரண்டன்கண்ணது' என்று கூறப்பட்டது.

அவ்வியாப்பிய விருத்தியதாவது தானும் (சையோகமும்) தன்னத்தியந்தாபாவமு(தனதுமுற்றுமின்மையு)மோரிடத்திருத்தலாம். அஃதாவது ஏகதேசத் (ஓரிடத்)திருப்பதென்பதாம். ஆட்டுக்கடாக்களிரண்டற்குச் சையோகமுண்டாயவிடத்து அவ்விரண்டன்சையோகம் அவற்றின் ஏகதேசத்திருந்து ஏகதேசத்திராமை காண்க. அது கர்மஜம் (தொழிலாற்றோன்றியது) சையோகஜம் (சையோகத்தாற் றோன்றியது) என்றிருவகைத்தாம். கர்மஜம் அந்நியதரகர்மஜம் (இரண்டில் ஒன்றன்றொழிலாற்றோன்றுவது) உபயகர்மஜம் (இரண்டன்றொழிலாற்றோன்றுவது) என விருவகைத்தாயிருத்தலின் 'அது * * மூவகை' என்று கூறப்பட்டது.

(க.) எச்சையோகத்தினுற்பத்தியில் தொழில் அசமவாயிகாரணமாயிருக்கிறதோ அது கர்மஜ சையோகமெனப்படும்.

(உ.) எச்சையோகத்தினுற்பத்தியில் சையோகம் அசமவாயிகாரணமாயிருக்கிறதோ அது சையோகஜ சையோகமெனப்படும்.

(1.) யாண்டு ஒன்றன் றொழிலால் சையோகமுண்டாகின்றதோ ஆண்டு அது அந்நியதரகர்மஜ சையோகமெனப்படும். பருந்தின் தொழிலால் தொழிலின்றிய குற்றிக்கும் பருந்திற்குமுண்டாகும் சையோகம் அந்நியதரகர்மஜ சையோகமாம். ஈண்டிச் சையோகத்திற்குக் குற்றியும் பருந்தும் சமவாயிகாரணமாம். சையோகத்தின் சமவாயிகாரணமாகிய பருந்தினிடத்து அதன் வினைக் (தொழிற்)குச் சமவாயசம்பந்தமிருத்தலின் பருந்து

வடிவமாகிய சமவாயிகாரணத்தின் சம்பந்தமுடையதாய்ப் பருந்து குற்றிகளின் சையோகத்தை யுண்டுபண்ணுவது பருந்தின் றொழிலா யிருத்தலின், பருந்து குற்றிகளின் சையோகத்தினது அசமவாயிகாரணம் பருந்தின் வினையாமென்க. பருந்து - பறவைவிசேடங்களு ளொன்று.

(2.) யாண்டு இரண்டன்றொழிலால் சையோகமுண்டாகின்றதோ ஆண்டு அது உபயகர்மஜ சையோகமெனப்படும். இரண்டு மல்லர்களின் தொழிலால் அவ்விருவர்க்கு முண்டாகும் சையோகம் உபயகர்மஜ சையோகமாம். ஈண்டிச் சையோகத்திற்கு இரண்டு மல்லர்களும் சமவாயிகாரணமாவர்; அவர்களின் வினை அசமவாயிகாரணமாம். மல்லர்-ஆயுதமின்றிப் போர் புரியும் வீரர்.

(3.) யாண்டுச் சையோகத்தால் சையோகமுண்டாகின்றதோ ஆண்டு அது சையோகஜ சையோகமெனப்படும். கைக்கும் தருவிற்கு (விருக்ஷத்திற்கு) முண்டாய சையோகத்தால் மெய்க்கு (உடம்பிற்கு)ம் தருவிற்குமுண்டாகும் சையோகம் சையோகஜ சையோகமாம். கைத்தரு சையோகத்தைக் காணுதானுக்கு மெய்த் தருசையோகத்தி னுணர்ச்சியுண்டாகாமையின் கைத்தருசையோகம் மெய்த்தருசையோகத்திற்குக் காரணமாமென்பது நன்குவிளங்கும். ஈண்டிச் சையோகத்திற்குக் கையும் தருவும் சமவாயிகாரணமாம்; சையோகம் அசமவாயிகாரணமாம்.

'காரண அகாரண சையோகத்தால் காரிய அகாரியசையோகம்' என்றமையின் ஈண்டுக் காரணம் கையும், அகாரணம் தருவும், காரியம் கையாலுண்டாயமெய்யும், அகாரியம் கையாலும் தருவாலு முண்டாகாத தருவுமாம். இவற்றின் விளக்கம் வருமாறு:—

"ஈண்டு இரண்டு சையோகமுண்டு. ஒன்று அஸ்த (கை) தருக்களின் சையோகம்; அது ஏது சையோகமாம். மற்றையது காய

(உடம்பு) தருக்களின் சையோகம்; அது பல (பிரயோஜன) சையோகமாம். ஈண்டுக் காரணமென்னுஞ் சொல்லால் பல சையோகத்தினது ஆசிரயத்தின் சமவாயிகாரணம் கொள்ளப்படுகின்றமையின் பல சையோகத்தின் ஆசிரயம் காயம் தருவென்னுமிரண்டுமாம். அவற்றுள் காயத்தின் சமவாயிகாரணம் அஸ்தமாம். ஆதலால், காரணமென்னுஞ் சொல்லால் அஸ்தம் கொள்ளப்படுகின்றது. அகாரணமென்னுஞ் சொல்லால் தரு கொள்ளப்படுகின்றது; ஏனெனின்,காயத்திற்காவது தருவிற்காவது சமவாயிகாரணம் தருவாகாதிருத்தலின், அஃது அகாரணமாம். அங்ஙனமே, எது சையோகத்தின் ஆசிரயத்தாலுண்டாயது காரியமென்னும் சொல்லாற் கொள்ளப்படுகின்றது. எதுசையோகத்தின் ஆசிரயத்தாலுண்டாகாதது அகாரியமென்னுஞ் சொல்லாற் கொள்ளப்படுகின்றது. எது சையோகத்தின் ஆசிரயம் அஸ்தமும் தருவுமாம். அவற்றுள்,அஸ்தஜன்னியமாகிய காயமெதுவோ அது காரியமாம். அஸ்தத்தினாலும் அங்ஙனமே தருவினாலும் ஆக்கப்படாத தரு எதுவோ அது அகாரியமாம். இவ்வாற்றால் காரணமாகிய அஸ்தம் அகாரணமாகிய தரு என்பனவற்றின் சையோகத்தால் காரியமாகிய காயம் அகாரியமாய தரு என்பனவற்றின் சையோகமுண்டாகின்றது" என்பது. இங்ஙனம் விருத்திப்பிரபாகரத்திற் கூறப்பட்டிருக்கிறது.

(9.) விபாகம்—DISJUNCTION.

92. *விபாகம் பிரிவின் வியவகார ஹேது; சையோக

---

* இது இதுவன்றென்னும் ஞானத்திற்கு விஷயமாயிருக்கிற பேதமென்னும் அந்நியோந்நியாபாவத்திற்கு வேறாக விபாகமின்மையின், அந்நியோந்நியா பாவத்திற்கு வேறாக விபாகமிருக்கின்றதென்பது பொருந்தாதென்பர் ஒரு சாரார்.

முதற்றாய் (மூலமாய்) இரண்டன்கண் இருப்பது. அது வேறுவினையாற் றோன்றியது, இரண்டன்வினையாற் றோன்றியது, விபாகத்தாற் றோன்றியதென மூவகை.

அவற்றுள், முதலது எங்ஙனம்? மலையினின்றெழும் பருந்தின் வினையால் பருந்தொடு மலைக்கு விபாகம்.

இரண்டாவது எங்ஙனம்? தகர் (ஆட்டுக்கடாக்)களது விபாகம்.

மூன்றாவது எங்ஙனம்? கைத்தரு விபாகத்தான் மெய்த்தரு விபாகம்.

(கு-ரை.) விபாகம் - பிரிவு. விபாகத்தன்மையாகிய சாதியுடையது, அல்லது பிரிந்தது என்னும் வழக்கிற்குச் சிறந்தகாரணம் விபாகமாம்.

சையோகம்இரண்டு திரவியங்களிலிருத்தலின் விபாகம் அதனை நாசம்பண்ணுவதன் மூலமாய் இரண்டு திரவியங்களிலிருக்கும். சையோகம்போல விபாகமும் அந்நியதரகர்மஜம், உபயகர்மஜம், விபாகஜம் என மூவகைத்தாம்.

(க.) யாண்டு ஒன்றன்தொழிலால் விபாகமுண்டாகின்றதோ ஆண்டு அது அந்நியதரகர்மஜ விபாகமெனப்படும். மலையினின்றெழும் பருந்தின் தொழிலால் தொழிலின்றியமலைக்கும் பருந்திற்குமுண்டாகும் விபாகம் அந்நியதரகர்மஜ விபாகமாம். ஈண்டிதற்கு மலையும் பருந்தும் சமவாயிகாரணமாம்; பருந்தின்வினை அசமவாயிகாரணமாம்.

(உ) யாண்டு இரண்டன் தொழிலால் விபாகமுண்டாகின்றதோ ஆண்டு அது உபயகர்மஜ விபாகமெனப்படும். சையோகமுடைய இரண்டாட்டுக்கடாக்களின் இடம்விட்டுப் பெயருந்தொழிலால் அவ்விரண்டற்கு முண்டாகும் விபாகம் உபயகர்மஜ விபாகமாம். ஈண்டிதற்கு இரண்டாட்டுக்கடாக்களும் சமவாயி காரணமாம்; அவற்றின் இடம்விட்டுப் பெயருந்தொழில் அசமவாயிகாரணமாம்.

(ங.) யாண்டு விபாகத்தால் விபாகமு (பிரிவாற்பிரிவு)ண்டாகின்றதோ ஆண்டு அது விபாகஜ விபாகமெனப்படும். கைக்கும் தருவிற்கு முண்டாகும் விபாகத்தால் மெய்க்கும் தருவிற்குமுண்டாகும் விபாகம் விபாகஜ விபாகமாம். இது காரண அகாரணங்களின் விபாகத்தாற்றோன்றிய காரிய அகாரியங்களின் விபாகமாம். ஈண்டிதற்குக் கையும் தருவும் சமவாயிகாரணமாம்; விபாகம் அசமவாயி காரணமாம்.

காரணமாத்திர விபாகஜவிபாகமுமுண்டு. எங்ஙனம்? கபாலங்களின் விலகுந் தொழிலாலே கபாலமிரண்டன் விபாகமும், அதன்பின்னர்க் கபாலமிரண்டன் சையோகநாசமும், அதன்பின்னர்க் கடநாசமும்,அதன்பின்னர்க் கபாலத்திற்கும் ஆகாய முதலியவற்றின் விபாகஜ விபாகமு முண்டாகின்றமை காண்க. சங்கியை, பரிமாணம், பிரதக்துவம், சையோகம், விபாகமென்னுமைந்துகுணமும் சர்வத்திரவியங்களிலு மிருப்பனவாம்.

(10.) பரத்துவம்—PRIORITY.

(11.) அபரத்துவம்—POSTERIORITY.

93. பரத்துவாபரத்துவங்கள் பரஅபரவியவகாரத்தின் அசாதாரண காரணங்கள்.

அவை (பரத்துவ அபரத்துவங்கள்) திக்கான் வந்தவும் (பண்ணப்பட்டனவும்) காலத்தான் வந்தவு மென இருவகைய.

அவற்றுள் (1) திக்கான் வந்தவற்றது (பரத்துவ அபரத்துவங்களின்) தோற்றம் கூறுதும்:—

ஒருதிசையிலிருக்கும் பிண்டங்களில் இஃது (இக்கடம்) அதனின் (அப்படத்தினும்) அணித்தெ (சமீபித்திருப்பதெ)ன்னும் புத்தியால் அனுக்கிரஹிக்க (அறிய)ப்பட்ட திக்குப்பிண்டசையோகத்தால் *அபரத்துவம் அணியதன் (சமீபமுடையதன்)கட் டோன்றும்;

† சேய்மைப் புத்தியால் பரத்துவம் சேயதன் (தூரமுடையதன்)கட் டோன்றும்.

‡ பிண்டத்தினுடைய அண்மை காண்பவனது

---

* அபரத்துவம் கூறுவதாலே பரத்துவம் எளிதின் விளங்குதலின் அது முன்னர்க்கூறப்பட்டது.

† ஒரு திசையிலிருக்கும் பிண்டங் (பொருள்)களில் அஃது இதனின் சேய்மைய (தூரத்த) தென்னும் புத்தியாலறியப்பட்ட திக்குப்பிண்ட சையோகத்தால் பரத்துவம் சேயதன்கண் தோன்றும் என்பதாம்.

‡ காண்பவனது உடம்பின் அபேட்சையினல் பிண்டத்தினது சையுக்த சையோகத்தின் அற்பீயத்துவ (அற்ப)மும் பூயத்துவ (அதிக)மும் முறையே அதனது அண்மையும் சேய்மையுமாம், விளக்கம் வருமாறு:—

உடம்பின் அபேக்ஷயினல் (நோக்கத்தினல்) சையுக்த சையோக அற்பீயத்துவம் (அற்பம்); அவற்றின் (காண்பவனது உடம்பு பிண்டங்களின்) பூயத்துவம் (அதிகம்) சேய்மை (தூரம்).

(2.) காலத்தான்வந்த பரத்துவாபரத்துவங்களது தோற்றம் கூறுதும்:—

(க) நியமமல்லாத திக்கினிருக்கின்ற இளேயோன் மூத்தோனுடைய பிண்டங்களில் இவன் அவனின் அற்பகால சம்பந்தனென்னும் இவ்வகை யவாவுதற் (அபேட்சா) புத்தியா லநுக்கிரஹிக்கப்பட்ட கால பிண்டங்களினுடைய சையோகத்தால் இளேயோன்கண் அபரத்துவம் தோன்றும்.

(i.) காண்பவனது உடம்பின் அபேட்சையினல் அவ்வுடம்பினது சையோகமுடைய நிலத்துப் பிண்டத்தினது சையோகத்தின் அற்பீயத்துவம் அப்பிண்டத்தினது அண்மையாம்.

(ii.) காண்பவனது உடம்பின் அபேட்சையினல் அவ்வுடம்பினது சையோகமுடைய நிலத்துப் பிண்டத்தினது சையோகத்தின் பூயத்துவம் அப்பிண்டத்தினது சேய்மையாம்.

காண்பவனது உடம்பின் சையுக்தமாய (சையோகமுடையதான) நிலத்துப் பிண்டத்தின் சையோகமிருத்தலின் அது சையுக்த சையோகமாம். சையோகமுடையதன் சையோகம் சையுக்த சையோகமெனப்படும்.

(உ) இவன் அவனின்மிகுந்த காலசம்பந்தமுடைய னென்னும் புத்தியான் மூத்தோன்கட் பரத்துவம் தோன்றும்.

(கு-ரை.) பரத்துவம் - முன்மை; அபரத்துவம் - பின்மை; பரத்துவமாகிய சாதியுடையது பரத்துவமாம்; அபரத்துவமாகிய சாதியுடையது அபரத்துவமாம். பரத்துவம் அபரத்துவமென்னு மிரண்டும் திக்காலும் காலத்தாலும் பண்ணப்படுவனவா யிருத்த லின் அவை அனித்திய குணமாம். திக்கினாலும் காலத்தினாலும் பண்ணப்படும் பரத்துவம் முறையே சேய்மைக்கண்ணும் மூத் தோன்கண்ணு மிருக்கும்; திக்கினாலும் காலத்தினாலும் பண்ணப் படும் அபரத்துவம் முறையே அண்மைக்கண்ணும் இளையோன் கண்ணு மிருக்கும்.

(1.) எது (கடம்) எதன் (படத்தின்) அபேட்சையால் தூரத் ததோ ஆண்டு அவ்வெல்லையினையுடைய பரத்துவம் திக்கினாலாகிய தாம்; எது (படம்) எதன் (கடத்தின்) அபேட்சையால் சமீபித் ததோ ஆண்டு அவ்வெல்லையினையுடைய அபரத்துவம் திக்கினா லாகியதாம். ஈண்டுத் திக்கும் பிண்டமும் சமவாயிகாரணமாம்; அவ்விரண்டற்கு முளதாய சையோகம் அசமவாயிகாரணமாம்; சேய்மை அண்மைகளின் ஞானம் நிமித்தகாரணமாம். அதனது நாசம் அவற்றின் நாசத்திற் கேதுவாம். இப்பரத்துவ அபரத்து வங்கள் நித்திய அனித்தியவடிவ மூர்த்தத்திரவியத்தி (வடிவு டைப் பொருளி)லிருக்கும்.

(2.) எது (மூத்தோன்) எதன் (இளையோன்) அபேட்சை யால் மூத்ததோ ஆண்டு அவ்வெல்லையினையுடைய பரத்துவம் காலத்தாலாகியதாம்; எது (இளையோன்) எதன் (மூத்தோன்) அபேட்சையால் இளையதோ ஆண்டு அவ்வெல்லையினையுடைய

அபரத்துவம் காலத்தினாலாகியதாம். ஈண்டுக் காலமும் பிண்டமும் சமவாயிகாரணமாம்; அவ்விரண்டற்கு முளதாய சையோகம் அசமவாயிகாரணமாம்; மூப்பிளமைகளின் ஞானம் நிமித்தகாரணமாம். அதனது நாசம் அவற்றின் நாசத்திற் கேதுவாம். இப்பரத்துவ அபரத்துவங்கள் அநித்தியத்திரவியத்திருக்கும்.

(12.) குருத்துவம்—WEIGHT.

94. குருத்துவம் முதல் விழ்தலின் அசமவாயிகாரணம்; பிருதிவி புனல்களி னிருப்பது.

"சையோகம், வேகம், முயற்சியின்றிக் குருத்துவத்தால் விழ்தல் உளது" என்று கூறப்படும்.

(கு-ரை.) குருத்துவம் - திண்மை. குருத்துவமாகிய ஜாதியுடையது குருத்துவமாம். பிருதிவி, அப்பு என்னு மிரண்டனுள் ஒன்று முதலில் வீழ்தற்கு அதனது குருத்துவம் அசமவாயிகாரணமாம். அஃதின்றி அதற்குமுதலில் வீழ்தலுண்டாகாதென்பதொருதலை; இரண்டாம் வீழ்ச்சி முதலியவற்றிற்கோ குருத்துவம் அசமவாயிகாரணமன்று; ஆனால் அப்பொருளின்வேகம் அசமவாயிகாரணமாம். கடம் முதலில் வீழ்தற்குக் கடம் சமவாயிகாரணமும், தள்ளுவோன் நிமித்தகாரணமும் கடத்தின் திண்மை, அசமவாயிகாரணமுமாம். திண்மையின்றிய பொருள் பிறிதொன்றன் சையோகமும் முயற்சியுமுள்ளவிடத்தும் வீழாமையானும், வேகம் அதனது இரண்டாம் வீழ்ச்சி முதலியவற்றிற்கு அசமவாயி காரணமா யிருத்தலானும் 'சையோகம்-* * * உளது' என்று கூறப்பட்டது. தீ முதலியவற்றி னின்றும் வீழ்தற் காரியமுண்டாகாமையின் அவற்றின்கண் குருத்துவ மின்றென்க.

(13.) திரவத்துவம்—FLUIDITY.

95. திரவத்துவம் முதலொழுகுதலின் அசமவாயி காரணம்; நிலம், தேயு, நீரினிருப்பது. *நிலந் தீயான நெய் பொன்களுக்குத் தீச்சையோகத்தால் திரவத்துவமாதலின் நைமித்திகத்திரவத்துவம்; நீரின் இயற்கைத் திரவத்துவம்.

(கு-ஊ.) திரவத்துவம் - நெகிழ்ச்சி. திரவத்துவமாகிய சாதியுடையது திரவத்துவமாம். உருகிய அரக்கு, மெழுகு, நெய், வெள்ளி, பொன் முதலியவற்றுள் ஒன்று முதலில் ஒழுகுவது (பாய்வது)ற்கு அதனது திரவத்துவம் அசமவாயிகாரணமாம்; அதனையுடையது சமவாயிகாரணமாம்; ஒழுகச்செய்வோன் நிமித்தகாரணமாம். இரண்டாவதொழுகுதல் முதலியவற்றிற்கு வேகம் அசமவாயி காரணமாம். நிமித்தத்தாலுண்டாய நெகிழ்ச்சி நைமித்திகத்திரவத்துவமென்றும், இயல்பாயுள்ள நெகிழ்ச்சி சாம்சித்திகத்திரவத்துவமென்றும் சொல்லப்படும். நெய், அரக்கு முதலிய வடிவினதாய பிருதிவிக்கும், பொன் முதலிய வடிவினதாய தேயுவிற்கும் திரவத்துவம் அக்கினிசையோகமாகிய நிமித்தத்தாலுண்டாதலின் அது நைமித்திகத்திரவத்துவமாம்; நீரில் திரவத்துவம் (அக்கினிசையோகத்தை யபேட்சியாது) இயல்பாயிருத்தலின் அது சாம்சித்திகத்திரவத்துவமாம்.

(14.) சிநேகம்—VISCIDITY.

96. சிநேகம் திரட்டுதலினேது; நீரின்மாத்திரமிருப்பது; காரணகுண முதற்று (முதலாகவுடையது);

---

* நிலத்தி (பிருதிவியி)ன் கூறான நெய்யென்றுந் தீயின் கூறான பொன்னென்றுங் கொள்க.

குருத்துவ முதலியபோலப் பொருள் நிற்குந் துணையும் நிற்பது.

(கு-ரை.) சிநேகம் - பற்று. சிநேகத்தன்மையாகிய சாதியுடைய பசைவடிவினது சிநேகமாம்; கடலைப் பொடி முதலியவற்றைத் திரட்டுவதற்கு (ஒருருண்டையாக்குவதற்கு) ஏதுவாய் நீரில் மாத்திரமிருக்குங் குணமாம். * சிநேககுணந் தோன்றும்போது அதன் சமவாயிகாரணமான நீரிலுள்ள திரவத்துவம் அதற்கு அசாதாரணகாரணமா யிருத்தலின் 'காரணகுணமுதற்று' என்று கூறப்பட்டது. நீராகிய சமவாயிகாரணத்தினின்றும் சிநேககுணந் தோன்றும்போது அதற்குத் திரவத்துவம் அசமவாயி காரணமாம். குணோற்பத்தியில் சிலவிடத்துக் குணமும் சிலவிடத்துத் தொழிலும் அசமவாயி காரணமாமென்ப தீண்டுமுணரத்தக்கது. பிருதிவி புனல்களிலிருப்பதாகிய குருத்துவமும், புனலிலிருப்பதாகிய திரவத்துவமும் பிறவும் தமதாசிரயமான பிருதிவி முதலியனவுள்ள வளவு மிருப்பதுபோலச் சிநேகமும் தனதாசிரயமான புனலுள்ள வளவு மிருக்குமென்க. தமதாசிரயமான பொருளிருக்குமளவும் நிற்காத குணங்கள் பிருதிவியின் உருவ முதலிய நான்கும், சையோகமும் பிறவுமாம். பிருதிவியின் கூறான நெய் முதலியவற்றிலுள்ள சிநேகம் ஜலோபாதியினை யுடையதாம்.

---

* சிநேகம் யாண்டுங் காரிய வடிவகுணமென வங்கீகரியாது நித்தியத்திரவியத்துள்ள குருத்துவ திரவத்துவங்கள் நித்தமாயும் அநித்தியத்திரவியத்துள்ள குருத்துவ திரவத்துவங்கள் அநித்தியமாயு மிருத்தல்போன்று நித்தியத்திரவியத்துள்ள சிநேகம் நித்தமாயும் அநித்தியத்திரவியத்துள்ள சிநேகம் அநித்தமாயுமிருக்குமென்பர் ஒரு சாரார்.

(15.) சத்தம்—SOUND.

97. சத்தம் செவிப்புலனாற் கவர்வது; ஆகாய விசேட *குணம்.

(ஆ.) அற்றாயின், அதற்குச் செவிப்புலனாற் கிரஹிக்கப்படுதல் எங்ஙனம்? யாண்டாயினும் முரசு (பேரிகை) முதலியவிடத்திற் சத்தந் தோன்றும், செவிப்புலன் புருடனிடத்தே இருக்கும்.

(ச.) அஃதொக்கும். முரசிடத்தே தோன்றிய சத்தம் வீசிதரங்க நியாயத்தாற்றான், கதம்பமுகுள நியாயத்தாற்றான் தனக்கணித்தான வேறு சத்தம் தோற்றுவிக்கும். சத்தமும் சத்தாந்தரம் (வேறு சத்தத்தை) தோற்றுவிக்குமென்னு முறைமையால் செவிப்புலனிடத்தே இறுதிச்சத்தம் தோன்றும். அவ்விறுதிச் சத்தம் செவிப்புலனாற் கிரஹிக்கப்படும்;

---

* சப்தம் ஆகாயத்தின் விசேடகுணமென் றங்கீகரியாதவர் சப்தம் ஆகாயத்திற்குமாத்திரங் குணமென்றுசங்கித்தல் கூடாது; வாயு முதலியவற்றினும் அஃதிருப்பதாக அறியப்படுகின்றமையின். இந்த ஞானம் பிராந்திபென்றுரைத்தல் கூடாது; பாதக ஞானமின்மையின் என்று கூறுவர். அவர் பிருதிவியில் கட கட சப்தமும், அப்புவில் சிலு சிலு சப்தமும், தேயுவில் புக் புக் சப்தமும், வாயுவில் வீ வீ சப்தமும் ஆகாயத்தில் பிரதித்தொனி வடிவ சப்தமு மிருக்கின்றனவென்பர். ஒரு சாரார் சத்தத்தில் (சொல்லில்) இச்சைபெ (தாற்பரியமெ)ன்னுங் குணமிருத்தலின் அது திரவியமாமென்பர்.

முதலது நடுவது(முதலிற்றோன்றிய சத்தமும் இடை-யிற்றோன்றிய சத்தமு) மல்ல.

இங்ஙனம் வேய் (மூங்கில்) பிளக்குங்கால் இருபிள வின் நீக்கத்திற் றோன்றிய சத்தம், சத்தாந்தரம் தோற்றுவிக்கு முறையானே செவிப்புலனிடத்தே இறுதிச் சத்தம் தோன்றும். அவ்விற்றுச் சத்தம் செவிப்புலனாற் கவரப்படும்.

முரசொலி என்னுற் கேட்கப்பட்டதென்னும் புத்தி ஈண்டுப் பிராந்தியே மயக்கமே. முரசொலி தோன் றுகையின் முரசாகாய சையோகம் அசமவாயிகார ணம்; முரசு குணிற்சையோகம் நிமித்தகாரணம்.

வேய் பிளத்தலாற் றோன்றிய சட சட வொலித் தோற்றத்தின் வேய்பிள வாகாயத்தின் விபாகம் அசமவாயிகாரணம்; இருபிளவின் நீக்கம் (பிரிவு) நிமித்தகாரணம்.

இங்ஙனம் முதலொலி சையோகத்தாற் றோன்றி யதும் விபாகத்தாற் றோன்றியதுமாம். முதலது ஒழிந்திடும் ஒலிகள் முன்முன் சத்தத்தை அசமவாயி காரணமாக வுடையன. அநுகூலவாயு நிமித்தகார ணம். "சையோகத்தால், விபாகத்தால், சத்தத்தால் சத்தந்தோன்றும்" என்று பிறரும் கூறினர். *முத

* "எங்ஙனம் ஆன்மாவின் விசேஷகுணங்கள் ஞானமுதலி யனவோ, அங்ஙனமே ஆகாயத்தின் விசேஷகுணம் சத்தமாம். விபு

வின் விசேஷ குணங்களைவையோ, அவை யிரண்டு ஒருகாலத்தி லுண்டாகா. ஆனல் தேவதத்தனது சத்தமும் எஞ்ஞதத்தனது சத்தமும் ஒரு காலத்திலுண்டாகின்றன; பேரியின் சத்தமும் தாளத்தின் சத்தமும் ஒரு காலத்திலுண்டாகின்றன. ஒரு நிலைக்களத்த(சமானதிகரணமுடைய)விரண்டு சத்தங்களுக்கு ஒருகாலத்தில் உற்பத்தி நிகழாதெனக் கூறினும், எல்லாச் சத்தங்களும் சமவாயசம்பந்தத்தால் ஆகாயத்திருப்பனவா யிருத்தலின் ஒரு நிலைக்களத்தனவாம். எச்சத்தமும் வேறு நிலைக்களத்ததாகாது. என்றலும் ஆகாயத்தில் சத்தத்திற்குச் சமவாயசம்பந்த மிருப்பதுபோலக் கண்டம், மேல்வாய், பல், மூக்கு, உதடு, நாறுனி, உரம், சிரமென்னும் எட்டுறுப்புக்களினும் வர்ண (எழுத்து) வடிவானசத்தத்திற்குஅவச்சேதகத்தன்மைச் சம்பந்தமுளது. துவனி (ஒலி) வடிவான சத்தத்திற்குப் பேரி தாள முதலியவற்றில் அவச்சேதகத்தன்மைச் சம்பந்தமுளது. ஒரு அதிகரண (நிலைக்களத்)த்தி லிருப்பதனைச் சமானதிகாணம் (ஒரு நிலைக்களத்தது) என்பர். சமவாயசம்பந்தத்தால் எல்லாச் சத்தங்களும் ஆகாயத்திருப்பனவாகலின் சமானதிகரணமா யிருக்கின்றன. என்றலும் அவச்சேதகத்தன்மைச் சம்பந்தத்தால் தேவதத்த சத்தமும் எஞ்ஞதத்த சத்தமும் வியதிகரணமாம். அங்ஙனமே பேரிசத்தமும் தாளசத்தமும் அவச்சேதகத்தன்மைச் சம்பந்தத்தால் வியதிகரணமா (வேற்றுநிலைக்களத்தவா)ம். இது நியமமாம்:—அவச்சேதகத்தன்மைச் சம்பந்தத்தால் ஒரு அதிகரணத்தில் இரண்டு சத்தங்களின் உற்பத்தி யொருகாலத்தி லுண்டாகிறதில்லை. அஃதாவது ஒரு அவச்சேதகத்தில் இரண்டு சத்தங்(சொற்)களின் உற்பத்தி ஒருகாலத்தி லுண்டாகிறதில்லை. ஆதலால் வாக்கிய பதங்களின் அவயவ வடிவமான வர்ணங்களுக்கு ஒரு காலத்தில் உற்பத்தியுண்டாகிறதில்லை. ஆனல் எல்லா வர்ணங்களும் கிரமமாக உண்டாகின்றன" என்று விருத்திப்பிரபாகரங் கூறுவதறிக.

லது முதலான *எல்லாச் சத்தங்கட்கும் ஆகாயமே சமவாயிகாரணம்.

(கு-ரை.) சத்தம்-ஓசை. சத்தத்தன்மையாகிய சாதியுடையது சத்தமாம். சத்தம் ஆகாயத்தின்மாத்திர மிருத்தலின் 'ஆகாய விசேட (சிறந்த) குணம்' என்று கூறப்பட்டது. அஃதொலிவடிவு எழுத்துவடிவென விருவகைப்படும். அவற்றுள், ஒலிவடிவு பேரிகை முதலியவற்றிற் றோன்றுவது; ‡ எழுத்துவடிவு சம்ஸ்கிருத முதலிய பாஷை வடிவினதாம். இது சர்வ வியவகாரத்திற்கு மேதுவாம். சத்தம் சையோகஜம் (கூட்டத்தாற் பிறந்தது), விபாகஜம் (பிரிவாற் பிறந்தது), சப்தஜம் (சத்தத்தாற் பிறந்தது) என மூவகைத்தாம். முதலது முரசுங் குணிலுங் கூடிய கூட்டத்தாற் பிறந்த சத்தமாம்; இரண்டாவது மூங்கில் முதலியவை பிளவுபடுமிடத்து அப்பிளவிரண்டன் பிரிவாற் றோன்றும் சட சட சத்தமாம்; மூன்றாவது வீசிதரங்க நியாயத்தினாலாவது கதம்பமுகுள நியாயத்தினாலாவது முரசு முதலிய விடந்தொடங்கிச் செவிகாறும் சத்தத்தாற் றோன்றுவதான இரண்டாவது சத்த முதலியனவாம்.

---

* நையாயிகர் திரவியத்தை யாரம்பிக்கும் சமவாயிகாரணத்தை அவயவமென்பர்; குணக்கிரியைகளை யாரம்பிக்கும் சமவாயிகாரணத்தை அவயவமென்பதில்லை. அவர் சமவாயிகாரணம் தனது சொரூபத்தை விடுவதில்லையென்பர்.

‡ மீமாம்சகர் எழுத்தினைத் திரவியமென்பர். அவர் நித்தியமாயும் வியாபகமாயுமுள்ள எழுத்து கண்ட முதலிய விடத்து அத்தியான்ம வாயுவின் சையோகமுண்டாவதால் செவிக்குப் புலனுமாறு அபிவியக்தியா (வெளிப்படு)கின்றதென்பர்.

விசிதரங்க நியாயம்.

(1.) எங்ஙனம் கடலினோரலையி னுனிப்பாகத்தினின்று மற்றோரலையெழும்ப, அதனுனிப்பாகத்தினின்று மற்றோரலை யெழும்ப இங்ஙனமே ஒரே கிழக்கு முதலிய திக்கில் அவ்வலைகளி னது பரம்பரை (தொடர்ச்சி)யின் பிரவாகம் போய்க்கொண் டிருக்குமோ அங்ஙனமே முதற்சத்தத்தினின்றும் இரண்டாவ தும் இரண்டாவதினின்றும் மூன்றாவதுமாக முன் முன் சத்தங் களினின்றும் பின் பின் சத்தங்களி னுற்பத்தி ஒரே கிழக்கு முத லிய திக்கிலுண்டாகின்றதென்பது. * இது வீசிதரங்க நியாய மாம். வீசிதரங்கம்-ஓரலையினின்று மற்றோரலையுண்டாதல்; நியா யம்-திருஷ்டாந்தம்.

கதம்பமுகுள நியாயம்.

(2.) எங்ஙனம் கதம்பமுகுளத்தி (மொக்கி) னடுவினின்று எல்லாத் திக்குகளையும் நோக்கி யிதழ்களெழுகின்றனவோ அங்ங னமே எந்தவிடத்தில் முதற்சத்த முண்டாகின்றதோ அதினின் றும் கிழக்குமுதலிய பத்துத்திக்குக்களினும் பத்துச்சத்தங்களுண் டாக, அப்பத்துச் சத்தங்களினின்றும் வேறு பத்துச்சத்தங்களுண் டாம். இங்ஙனம் பத்துத் திக்குகளினும் முன் முன் சத்தங்களி னின்றும் பின் பின் சத்தங்க ளுண்டாகின்றனவென்பது. இது கதம்பமுகுள நியாயமாம்.

---

* ஒரு சாரார் வீசிதரங்கநியாய முதலியவற்றால் சத்தம் சுரோத்திரேந்திரியத்தை யடைகின்றதென்னு மிடத்து அநேக சத்தத்திற் குற்பத்தி கற்பிக்கவேண்டியிருத்தலினாலும், முரசொலி யென்னாற் கேட்கப்பட்டதென்னும் பிரத்தியட்சத்தைப் பிராந்தி யாகக் கற்பிக்கவேண்டி யிருத்தலினாலும் அது கௌரவமாம்; சுரோத்திரேந்திரியம் விஷயதேசத்தை யடைந்து அதனைக் கிரகிக் கின்றதென்று கூறுதல் இலாவகமா மென்பர்,

யாண்டாயினுமோரிடத்து முரசுமுதலிய விடத்திற் றேன்றும் சத்தத்தைப் புருஷனெங்ஙனங்கிரகிக்கின்றனென்னும் வினவிற்கு வீசிதரங்க நியாயத்தினாலாவது கதம்பமுகுள நியாயத்தினாலாவது சத்தத்தாற் றேன்றிய சத்தத்தின் இறுதிச் சத்தத்தையவன் கிரகிக்கின்றனென்று விடைகூறப்பட்டது.

சையோகஜம்.

(1) முரசொலியுண்டாகுமிடத்து அதற்கு ஆகாயம் சமவாயிகாரணம்; முரசிற்கும் ஆகாயத்திற்குமுள்ள சையோகம் அசமவாயிகாரணம்; முரசுக்கும் குணிற்குமுள்ள சையோகம் நிமித்தகாரணமாம்.

விபாகஜம்.

(2.) வேய்பிளத்தலா லோசையுண்டாகுமிடத்து அதற்கு ஆகாயம் சமவாயிகாரணம்; வேய்பிளவிரண்டற்கும் ஆகாயத்திற்குமுள்ள விபாகம் (பிரிவு) அசமவாயிகாரணம்; வேய்பிளவிரண்டன் பிரிவு நிமித்தகாரணமாம்.

சப்தஜம்.

(3) சத்தத்தாற் சத்தமுண்டாகுமிடத்து அதற்கு ஆகாயம் சமவாயிகாரணம்; பின் பின் சத்தத்தில் முன் முன் சத்தம் அசமவாயிகாரணம்; அனுகூல (தடையின்றியுள்ள) வாயு நிமித்தகாரணமாம்.

(சத்தம்) வினை புத்திபோல முக்கணமாத்திர அவத்தையது (நிலையது).

(கு-ரை.) மூர்த்தத்திரவியத்திற் சமவேதித்துள்ள வினையும் (கருமமும்),ஜீவாத்மாவிற் சமவேதித்துள்ள புத்தி, சுகம், துக்கம்,இச்சை, துவேஷம், பிரயத்தனமென்பனவும் இரண்டிக்ஷண

மிருப்பனவாய் மூன்ருவது க்ஷணத்தில் நசித்தல்போன்று ஆகாயத்திற் சமவேதித்துள்ள சத்தமும் இரண்டு க்ஷணமிருந்து மூன்ருவது க்ஷணத்தில் நசித்தலின் 'வினை புத்திபோல முக்கணமாத்திர அவஸ்தையது' என்று கூறப்பட்டது. (ஆகாய முதலிய) விபுத்திரவியங்களின் யோக்கிய விசேட குணங்கட்குத் தமதிரண்டாவது கணத்திற் ருேன்றுவனவற்ருல் (தமக்கடுத்த கணத்திற் ருேன்றித் தம்மோடொருங்குநிற்கும் யோக்கிய விசேட குணங்களால்) நாசமுண்டாமென்பது நியமம்.

அவற்றுள், முதல் நடுவொலிகள் காரிய சத்தத்தாற் கெடும்; ஈற்றது ஈற்றயலால்; ஈற்றயல் ஈற்ருல் சுந்தோபசுந்த நியாயத்தாற் கெடும் என்பது பொருந்தாது;

*முக்கண அவத்தையான ஈற்றதுடைய இரண்டாங்கணத்தி லிருப்பதான மூன்ருங்கணத்திலில்லையான ஈற்றயலால் ஈற்றுக்கேடு தோன்றல் பொருந்தாமையின்.

---

* "ஈற்றுச் சத்தத்திஞசத்தில் ஈற்றயற் சத்தத்திஞசம் ஏதுவாம். ஈற்றயற்சத்தம் ஏதுவன்று. இப்பட்சத்தில் ஈற்றுச் சத்தத்திஞசத்தில் இரண்டாவது கணத்தில் நாசத்தின் ஆபத்தியி (அடைவி)ல்லை. ஏனெனின், ஈற்றயல் சத்தத்திஞசம் ஈற்றுச் சத்தத்தா லுண்டாகின்றது. ஆதலால், ஈற்றுச் சத்தத்தின் இரண்டாவது கணத்தில் ஈற்றயலிஞசமும் அதற்கடுத்த கணத்தில் ஈற்றுச் சத்தத்திஞசமுமுண்டாகின்றன. இவ்வாற்ருன் சகல சத்தங்களிஞசமும் மூன்ருவதுகணத்திலுண்டாகின்றது" என்று விருத்திப்பிரபாகரம் கூறுவதிங் கொப்புநோக்கத் தக்கதாம்.

ஆதலின், ஈற்றயற் கேட்டானே ஈற்றுக்கேடு.

(கு-ரை.) சுந்தோபசுந்தர்-சுதந்தன் உபசுந்தனென்னுமிரண் டசுரசகோதரர்; நியாயம்-திருஷ்டாந்தம். சுந்தனால் உபசுந்தனுக்கும் உபசுந்தனால் சுந்தனுக்கும் கேடுண்டானாற்போன்று ஈற்றயற் சத்தத்தால் ஈற்றுச் சத்தத்திற்கும் ஈற்றுச் சத்தத்தால் ஈற்றயற்சத்தத்திற்கும் கேடுண்டாகின்றதென்பது பூர்வபட்சியின் மதம்.

இரணியகசிபுவின் வமிசத்திற்றோன்றிய நிகும்பனென்பவனின் புத்திரரான சுந்தோபசுந்தர்கள் தம்முள் வேறுபாடில்லாதவராய்ப் பிரமதேவரை நோக்கித் தவஞ்செய்து அவரிடத்தினின்று தங்கட்கு மரணம் தங்கட்குள்ளேயே யுண்டாகவேண்டுமென்னும் வரத்தைப் பெற்று உலகத்தை வருத்திவந்தனர். அதனைத் தேவர்களாற்றுது பிரமதேவரிடஞ்சென்று முறையிட, அவராலோசித்து விசுவகர்மாவினால் மிகச் சிறந்தவழகுள்ள திலோர்த்தமையைப் படைப்பித்து அவ்வசுரர்க ளப்போதிருந்த விந்திய பருவதத்திற் கனுப்ப, அவர்கள் அப்பெண்மணியைக் கண்டு மோகித்துத் தங்கட்குள் வேற்றுமையடைந்து போரிட்டு மடிந்தனரென்பது கதை. இக்கதையின் விரிவைப் பாரதம் ஆதிபருவத்திற் காண்க.

முக்கணமாத்திர அவஸ்தையதும், தனதீற்றுச் சத்தத்தின் இரண்டாவது கணத்திருப்பதும் மூன்றாவது கணத்திராததுமான ஈற்றயற் சத்தத்தால் ஈற்றுச் சத்தத்தின் கேடுண்டாதல் பொருந்தாமையான், ஈற்றயற்சத்தங் கெடுவதானே ஈற்றுச் சத்தம் கெடுகின்றதென்க. ஈற்றுச் சத்தம் ஈற்றயற்சத்தத்தாலும் ஈற்றயற்சத்தம் ஈற்றுச் சத்தத்தாலும் சுந்தோபசுந்த நியாயத்தாற் கெடுமென்பது இதனால் மறுக்கப்பட்டது. ஈற்றயற்சத்தத்தால் ஈற்றுச் சத்தத்திற்கு நாசமங்கீகரிக்கின் இரண்டாவது கணத்திற்

ருனே ஈற்றுச் சத்தத்திற்கு நாசமுண்டாதல்வேண்டும்; அங்ஙன மாயின் சத்தம் மூன்ருவதுகணத்தி லழிகின்றதென்னும் நியமத் திற்குக் கேடுண்டாம்; ஈற்றுச் சத்தம் அப்பிரத்தியட்சமுமாதல் வேண்டும்.

ஆ ஈ முதலிய ஒரேவர்ண (எழுத்து) வடிவமான சத்தங் களின் நாசத்திற் கேதுவாக ஒரு சத்தமுமின்மையின், ஈற்றபற் கேட்டானே ஈற்றுக்கேடு என்பதெங்ஙனம் பொருந்துமெனின், கண்டமுதலியவிடத்து வாயுவின் சையோகத்தினுலுண்டாகும் வர்ணவடிவ சத்தத்தின் பிரத்தியட்சம் சிரவணத்தி (காதி)ற்குண் டாவதில்லை; ஆனுல் வர்ணரூப சத்தத்தால் வேறு சத்தமுண்டாக அதன் பிரத்தியட்சமுண்டாகின்றது. இங்ஙனமுண்டாவதால் அந்நிய சத்தமின்றிய ஒரு சத்தம் அப்பிரசித்தமாம். ஆதலால் அது பொருந்தும். இங்ஙனமே ஒலிவடிவசத்தத்திற்கும் எற்றவாறு கொள்க.

சத்தத்தின் கேடு அநுமானத்தால். அங்ஙன மன்ரே, சத்தம் அநித்தியம்; சாமனியமு (சத்தத் தன்மையாகிய ஜாதியு)டையதாய் நம்மனோர் புறவிந் திரியத்தாற் கவரப்படுதலின்; குடம்போல. இதில் (இவ்வநுமானத்தில்) சத்தத்தின் அநித்தியத்துவம் சாத்தியம். அநித்தியத்துவமும் விநாசத்தோடு கூடிய சொரூபத்துவம். விநாசத்தோடு கூடிய சத்தை பொருந்தாது;

சத்தை யில்லாத பிராகபாவத்தில் அநித்தியத்துவ மின்மை வரல்வேண்டுதலின்.

சாமானியமுடையதாய் நம்மனோர் புறவிந்திரியத்தாற் கிரஹிக்கப்படுந்தன்மை ஹேது.

இந்திரியத்தாற் கிரஹிக்கப்படுந்தன்மை யென்று கூறின் ஆன்மாவில் வியபிசாரம் வருதலின் புறவிந்திரியமென்று கூறப்பட்டது. யோகி புறவிந்திரியத்தாற் கவர்வதான பரமாணு முதலியவற்றின்கண் வியபிசாரம் வருதலின் அதை விலக்கும்பொருட்டு நம்மனோரென்று கூறப்பட்டது. அங்ஙனமாயினும், சாமானியாதிகளோடு வியபிசாரம் வருதலின் சாமானியமுடையதா யென்று கூறப்பட்டது. சாமானிய முதலிய மூன்றும் சாமானிய முடையனவல்ல.

யோகியுண்மையிற் பிரமாணம் யாது? கூறுதும்:— பரமாணுக்கள் ஒருவர்க்குக் காட்சி; பிரமேய மாதலின்; குடம்போல, யாவன் பரமாணுவைக் காண்பான் அவனே யோகி.

(கு-ரை.) அழிவுபாட்டபாவத்திற்கு (பின்னின்மைக்கு) எதிர்மறையாவது அநித்தியமாம். சத்தம் தானுண்டான மூன்றாவதகணத்தி லழிவதா யிருத்தலின் அது பின்னின்மைக் கெதிர்மறையாம். ஆகவே அஃதநித்தியமாம். எதிர்மறையெனினும் பிரதியோகியெனினு மொக்கும். சாமானிய முடையதாய் நம்மனோர் புறவிந்திரியத்தாற் கவரப்படுவது அநித்தியமா மென்பதால் சாமானிய மின்றியதாய் நம்மனோர் புறவிந்திரியத்தாற் கவரப்படுவது நித்தியபதார்த்தமாகவாவது அநித்திய பதார்த்தமாகவாவது இருக்கலா மென்பது பெறப்பட்டவாறறிக.

சாமாநியமின்றியதாய் நம்மனோர் புறவிந்திரியங்களாற் கவரப்படும் பதார்த்தங்களுள் பிராகபாவ முதலியன அநித்தியமாயும், அத்தியந்தாபாவ முதலியன நித்தியமாயு மிருத்தலின் அவ்வாறு கூறப் பட்டது.

விநாசத்தோடு கூடிய சொரூபத்துவம் சத்தை (ஜாதி)யாமென்னு மாசங்கையை நிவிர்த்தித்தற் பொருட்டு 'விநாசத்தோடு கூடிய சத்தை பொருந்தாது; சத்தையில்லாத பிராகபாவத்தில் அநித்தியத்துவ மின்மை வரல்வேண்டுதலின்' என்று கூறப்பட்டது. இதனுல் சொரூபத்துவமும் சத்தையும் தம்முள் வேறுபட்டனவாமென்ப தினிது விளங்கும். ஒன்றன் அழிவோடு கூடிய வடிவத்தன்மை விநாசத்தோடு கூடிய சொரூபத்துவமாம். சத்தை நித்திய பதார்த்தங்களு ளொன்றுமென்பதும் பிராகபாவம் சத்தையில்லாத பதார்த்தங்களு ளொன்றுமென்பதும் நியாய நூற்றுணிபு. பிராகபாவத்தில் சத்தையின்றுயினும் விநாசத்தோடு கூடிய சொரூபத்துவ மிருத்தலின் அஃதநித்திய பதார்த்தமாம். கடத்தின் பிராகபாவம் (முன்னின்மை) கடமுண்டானபோது நாசமாத லறிக. ஈண்டுக் கூறிய அநித்தியத்துவவிலக்கணம் துவம்சாபாவத்தி (பின்னின்மையி)ற் செல்லாமையின் ஆண்டு அவ்வியாத்தியா மெனின், அநித்தியத்துவத்திற் கிலக்கணம் துவம்சாபாவப் பிரதியோகித்துவம்,பிராகபாவப் பிரதியோகித்துவமென்னு மிரண்டனு ளொன்றுயிருத்தலின் ஆகாதென்க. துவம்சாபாவத்திற்கு நாசமின்றென்பது நியாயநூற்றுணிபு. கடத்தினது துவம்சாபாவ முண்டாதற்கு முன்னர் அதன் பிரதியோகியாகிய கடம் அதற்குப் பிராகபாவமா யிருத்தலின் அதற்கு (பிராகபாவத்திற்கு) அது (துவம்சாபாவம்) பிரதியோகியாம். கடத்தின் பிராகபாவத்திற்கு அதன் பிரதியோகியாகிய கடம் அதனது துவம்சாபாவமாயிருத்தலின் அதற்கு (துவம்சாபாவத்திற்கு) அது (பிராகபாவம்) பிரதி

யோகியாம். பிரதியோகித்துவம் - பிரதியோகியின் தருமம்; அத னோடு கூடியிருப்பது பிரதியோகியெனப்படும். அஃதாவது அபா வத்தின் அபாவமாம்.

(1.) வாளா இந்திரியத்தாற் கவரப்படுதலின் என்று கூறின் மனவிந்திரியத்தால் கவரப்படும் ஆன்மாவின்கண் சாத்தியமாகிய அநித்தியத்துவமின்மையின் அது சாத்தியாபாவமுள்ளவிடத்து மிருக்கும் ஏதுவாம். ஆதலால், இது சாதாரண அநைகாந்திக ஏதுவாம். இங்ஙனம் வருவது அதிவியாத்திக்குற்ற முடைய தாம். இவ்வியபிசாரத்தை விலக்குதற்பொருட்டுப் புறவிந்திரிய மென்று கூறப்பட்டது. வியபிசாரமென்பது அதிவியாத்தி முத லியவற்றுள் ஒன்றாயிருக்கும்.

(2.) புறவிந்திரியத்தாற் கவரப்படுதலின் என்று கூறின் யோகி புறவிந்திரியத்தாற் கவர்வதான பரமாணுவில் சாத்திய மாகிய அநித்தியத்துவமின்மையின் இதுவும் சாத்தியாபாவமுள்ள விடத்து மிருக்கும் ஏதுவாம். இவ்வியபிசாரத்தை விலக்குதற் பொருட்டு நம்மனோரென்று கூறப்பட்டது. நம்மனோர் புறவிந்தி ரியத்தாற் பரமாணுவும் துவியணுகமும் கவரப்படுவனவல்ல. கவ ரப்படுதல்-அறியப்படுதல். ஈண்டுக் கூறிய யோகி யுக்தயோகி யுஞ்ஞானயோகியென்று மிருவருள் யுஞ்ஞான யோகி. இந்த யோகியின் புறவிந்திரியத்திற்குப் பரமாணுவும் துவியணுகமும் பிரத்தியட்சமாம்.

(3.) நம்மனோர் புறவிந்திரியத்தாற் கவரப்படுதலின் என்று கூறின் சமானிய முதலியனவும் நம்மனோர் புறவிந்திரியத்தாற் கவ ரப்படுதலின் அவையும் அநித்தியத்துவமாம். அவற்றில் அநித்தி யத்துவமின்மையின் மேற்கூறிய தோஷம் சம்பவிக்கும். அதை விலக்குதற் பொருட்டுச் 'சாமானியமுடையதாய்' என்று கூறப் பட்டது.

பாவபதார்த்த மாறனுள் சாமாநியம், விசேடம், சமவாய மென்னு மூன்றற்கும் சாமாநியமில்லையென்பது நியமம்.

(16.) புத்தி—UNDERSTANDING.

98. பொருள் விளக்கம் *புத்தி.

(கு-ரை.) புத்தி-அறிவு; அதற்கிலக்கணம் பொருளை விளக்குவதாம்; கடத்லையானறிகின்றேனென் றநுவியவசாய ஞானத்தாற் குறிக்கப்படும் அறிவுத்தன்மையுமாம்.

(17.) சுகம்—PLEASURE.

99. பிரீதி (பிரியம்)—சுகம். அஃதெல்லாரானும் அநுகூலமா (நலமா)க அறியத்தக்கது.

(கு-ரை.) சுகம் - இன்பம். யான் சுகமுடையேனென்றற்றொடக்கத்து அநுவியவசாயஞானத்தாற் குறித்துணரப்படும் சுகத்தன்மை முதலியன வுடைமையும் அதற்கிலக்கணமாம். களியன், கள்ளன் முதலியவர்கட்கு இச்சித்தபதார்த்தம் சித்தித்தலினுலுண்டாகும் சுகம் பின்னர்த் தீயனவிளைதற் கேதுவாதல்பற்றி எல்லாரானும் நலமாக அறியப்படாமையின் அது சுகத்தின்பாற் பட்டதன்றும். "புக்க விடத்தச்சம் போதரும் போதச்சம், துய்க்கு மிடத்தச்சந் தோன்றுமற் காப்பச்சம், எக்காலு மச்சந் தருமா லெவன்கொலோ, உட்கான் பிறனில் புகல்." "ஆமாபோ னக்கியவர்கைப் பொருள்கொண்டு, சேமாபோற் குப்புறாஉஞ் சில்லைக்க

---

* பதார்த்தங்களின் சொரூபத்தை நிச்சயஞ்செய்வது புத்தி. அது சங்கற்பித்தல் பற்றி மனமென்றும், சிந்தித்தல்பற்றிச் சித்தமென்றும், நானென்றபிமானித்தல் பற்றி அகங்காரமென்றும் சொல்லப்படுகின்றதென்பர் ஒரு சாரார்.

ணன்பினே, யேமாக் கெமகென் றிருந்தார் பெறுபவே, தாமாம் பலரா னகை." என்றற்றொடக்கத்துச் செய்யுட்களால் அது நன்கு விளங்கும். பிறர்க்கிடையூறின்றி யான் சுகியென்னு மநுபவத்திற்கு விஷயமாகுங்குணமே எல்லாராலும் அனுகூலமாக அறியத்தக்க சுகமாம். சுகம் தர்மத்தினலுண்டாகும். எவ்வாறுண்டாகின்றதெனின், தர்மத்தினல் இந்திரியத்திற்கு அனுகூல பதார்த்தத்தோடு சம்பந்தமுண்டாக அதனல் சுகம் ஆத்மாவினின்றுமுண்டாகின்றதென்க.

(18.) துக்கம்—PAIN.

100. பீடை-துக்கம். அஃதெல்லாராலும் பிரதிகூலமா (திங்கா)க அறியத்தக்கது.

(கு-ரை.) துக்கத்தன்மையாகிய சாதியுடையது துக்கம்; யான் துக்கியென்னு மனுபவத்திற்கு விஷயமாகுங்குணமாம். அஃது அதர்மத்தினல் இந்திரியத்திற்குப் பிரதிகூல பதார்த்தத்தோடு சம்பந்தமுண்டாக அதனல் ஆத்மாவினின்றுமுண்டாகின்றது.

(19.) இராகம்—DESIRE.

101. இராகம்-இச்சை.

(கு-ரை.) இராகத்தன்மையாகிய சாதியுடையது இராகமாம். விசேடவிச்சை இராகமாம்; சாமானியவிச்சை இராகமன்றும். அஃது இஷ்டசாதன ஞானத்தால் தோன்றும். அதற்கு விஷயம் பயனும் அதன் சாதனமுமாம். பயன் சுகமும் துக்கக்கேடுமாம். சாதனம்-அஃதுண்டாதற்கேது. அவ்விராகம் (1) காமம் (புணர்ச்சியில் விருப்பம்), (2) மர்சரம் (தன்பயனை விசாரியாமலே பிறன் விரும்பியதைத் தடுக்க விரும்புதல்); (3) ஸ்புருஹை

(தரும விரோதமில்லாத பொருளையடைய விரும்புதல்), (4) திருஷ்ணை (என்னுடைய விப்பொருள் ஒருநாளுங் கெடலாகா தென்னும் விருப்பம்), (5) உலோபம் (தர்மவிரோதமாகப் பிறர் பொருளை விரும்புதல்), (6) மாயை (பிறரைவஞ்சிக்க விரும்புதல்), (7) இடம்பம் (அகத்தே தர்மமுடைமை யில்லாததாகவும் புறத்தே அஃதுடையவனாகத் தனது மேன்மையையறிவிக்க விரும்புதல்) என்றேழ்வகைத்தாம். எவ்விஷயத்தில் எவ்வளவு பொருள் செல விடல்தகுதியோ அவ்விஷயத்தில் அவ்வளவு பொருள்செலவிடாது காத்தலாகிய கார்ப்பண்யம் (கிருபணத்தன்மை) திருஷ்ணையி லடங்கும்.

(20.) துவேஷம்—AVERSION.

102. குரோதம்-துவேஷம்.

(கு-ரை.) துவேஷம் - வெகுளி. துவேஷத்தன்மையாகிய சாதியுடையது துவேஷம்; அனல் வடிவினதாம். அஃது அநிஷ்ட சாதன ஞானத்தால் தோன்றும்; துக்கத்திற்கும் அதன் சாதனத் திற்கும்விஷயமாம். அது (1) குரோதம் (கண் சிவத்தல் முதலியவற் றிற் கேதுவாய விசேஷ துவேஷம்), (2) ஈரிஷை (ஓர் சாதாரண வஸ்துவில் பிறனுடைமையாக அவ்வஸ்துவைக் கிரகிக்கும் புருஷ னிடத்துண்டாவது), (3) அசூயை (பிறரது வித்தை முதலியவற் றைக் கண்டுண்டாவது),(4) துரோகம் (பிறரைக் கெடுத்தற்பொருட் டுண்டாவது), (5) அமர்ஷம் (குற்றஞ்செய்வோனிடத்துச் சாமர்த் தியமின்றிய புருஷனுக்குண்டாவது), (6) அபிமானம் (அபகாரஞ் செய்தவனுக்குச் சிறிதும் துன்பத்தைச்செய்யச் சாமர்த்தியமின்றி யவனுக்குத் தனதான்மாவினிடத்துண்டாகும் துவேஷம்) என்றறு வகைத்தாம்.

(21.) பிரயத்நம்—EFFORT.

103. உற்சாகம்-பிரயத்நம்.

(கு-ரை.) பிரயத்நத்தன்மையாகிய சாதியுடையது பிரயத்நம்; உற்சாக வடிவினதாம். அது பிரவிருத்தி, நிவிர்த்தி, ஜீவனயோனியென மூவகைத்தாம். (1) இச்சையாற்றோன்று முயற்சி பிரவிருத்தி; (2) அநிச்சையாற்றோன்று முயற்சி நிவிர்த்தி; (3) சுவாசப்பிரசுவாசங்கட் கேதுவான முயற்சி ஜீவன யோனி. அது ஜீவனது அதிஷ்டத்தாற் றோன்றி அதீந்திரியமாயிருக்கும். சுவாசப்பிரசுவாசம்-மூக்கின்வாயிலாக வுள்ளிருக்கும் வாயு புறத்திற் செல்வதும், புறத்துள்ள வாயு அது வாயிலாக வுட்செல்வதுமாம்.

புத்தியாதி ஆறும் மானதக்காட்சி.

(கு-ரை.) ஜீவான்மாவிற் சமவேதித்துள்ள புத்தி முதல் * பிரயத்ந மீறுயுள்ள ஆறும் மனவிந்திரியத்திற்கே விஷயமாம்.

(22.) தருமம்—MERIT. (23.) அதருமம்—DEMERIT.

தர்மாதர்மங்கள் சுகதுக்கங்களுக்கு அசாதாரண காரணங்கள். அவை காட்சியல்ல; அநுமிக்கப்படும். அங்ஙனமன்றோ, தேவதத்தனுடம்பு † முதலியன தேவதத்தன் விசேடகுணத்தாற் றோன்றியன; காரியமாய்த் தேவதத்தனுக்குப் போகஹேது வாகலின்; அது (உடம்பு முதலியன) தேவதத்தன் முயற்சியாற் (பிரயத்நத்தாற்) பிறந்த பொருட் போலும். யாது உடம்பு முதலியவற்றைத் தோற்று

* ஈண்டு ஜீவனயோனி யென்னும் பிரயத்நமொழிய எனையவற்றைக் கொள்க.

† முதலியன வென்றதனமையின் மனம், சுரோத்திரேந்திரிய மொழிந்த இந்திரிய முதலியவற்றையுங் கொள்க.

விப்பதான ஆன்மாவின் விசேட குணம் அதுவே தர்மமும் அதர்மமும்; முயற்சி முதலியன உடம்பு முதலியவற்றைத் தோற்றுவியாமையின்.

(கு-ரை.) தருமத்தன்மையாகிய சாதியுடையது தருமமும் அதருமத்தன்மையாகிய சாதியுடையது அதருமமுமாம். அவை முறையே சுகதுக்கங்களுண்டாதற்கு அசாதாரண காரணமாம். சுபகர்மத்தாலுண்டாகும் தருமமும் அசுபகர்மத்தாலுண்டாகும் அதருமமும் ஜீவாத்மாவின்கண் சமவேதித்திருந்து சுகதுக்காதிபயன்களைக் கொடுப்பதாலும் பிராயச்சித்த முதலியவற்றாலும் நாசமடைவனவாம். இவ்விரண்டும் அபூர்வமென்றும், அதிருஷ்டமென்றும், புண்ணியபாவமென்றும் சொல்லப்படும். தருமாதருமங்களிடத்துப் பிரத்தியக்ஷ யோக்கியதையின்மையின் அவற்றின் மானதப் பிரத்தியக்ஷ முண்டாவதில்லை. அதிருக்குமமா யாத்மாவிற் சமவேதித்திருக்கும் இவை 'இவன் தர்மமுடையவன்; சிஷ்டாசாரமுடையவனா யிருத்தலின். இவன் அதர்மமுடையவன்; சிஷ்டாசாரமின்றியவனா யிருத்தலின்' என்றற் றொடக்கத் தனுமானங்களாலும் அறியத்தக்கனவாம்.

(24.) சம்ஸ்காரம்—FACULTY.

104. சம்ஸ்காரம் i வேகம், ii பாவனை, iii திதித்தாபகமென மூவகை. அவற்றுள்,

i. வேகம் பிருதிவி முதல் நான்கினும், மனத்தினும் இருப்பது; வினைக்கேது.

ii. பாவனை என்னும் சம்ஸ்காரம் ஆன்மாவின் மாத்திரமிருப்பது; அனுபவத்தாற் றோன்றியது; நினைவிற்கேது; அதுவும் எழுந்தே நினைவைத் தோற்றுவிக்கும்.

எழுதல் துணையுண்டாதல். சம்ஸ்காரிக்குத் துணைகள் * ஒப்புமை காண்டல் முதலியன.

"சாதிருசியம், ‡ அதிர்ஷ்டம், சிந்தனம் முதலியன ஸ்மிருதியுண்டாதற்குக் காரணங்(சககாரி)கள்" என்று பிறரும் கூறினர்.

iii. § திதித்தாபகம் பரிசமுள்ள திரவியங்களுள் ஒன்றன்கணிருப்பது. தனக்கிடமாய் வேறொரு வடிவான

---

* ஒப்புமைகாண்டல் முதலியன வென்றமையின் சம்பந்திகளின் ஞானம், சிந்தனம், அதிர்ஷ்டமென்பனவற்றையுங் கொள்க. ஒப்புமைகாண்டல்- சாதிருசிய பதார்த்தங்களின் பிரத்தியட்சம்.

‡ அதிர்ஷ்டம் - தருமாதருமம். அனுபவத்தாற் றோன்றிய பாவனைவடிவ சம்ஸ்காரம் தனது பயனைக் கொடுக்கப் பரிபக்குவமாயுள்ள அதிர்ஷ்டத்தைத் துணையாகப் பெறுதலால் நினைவுண்டாதற் கேதுவா யெழுகின்றது. ஒப்புமைகாண்டல், சம்பந்திகளின் ஞானம், சிந்தனமென்னு மூன்றனுள் ஒன்றனது துணையும் பெறாது நன்னினைவுண்டாகுமிடத்து அதற் கேதுவாகிய பாவனை தருமத்தைத் துணையாகப் பெற்றெழுகின்றதெனவும், தீயநினைவுண்டாகுமிடத்து அதற்கேதுவாய பாவனை அதருமத்தைத் துணையாகப் பெற்றெழுகின்ற தெனவுமறிக.

§ திதித்தாபகம் பிருதிவி முதலிய நான்கினுமிருப்பதென்பாரது மதத்தில் அது சாமானிய குணமாம்; பிருதிவிமாத்திரத்திருப்பதென்பாரது மதத்தில் விசேடகுணமாம். மனம் பரிசமுள்ள திரவியமன்றாகலின் அதன்கண் திதித்தாபக மிருப்பதின்றென்க.

தநு (வில்) முதலியவற்றிற்கு அந் (முன்)நிலைமையை மீட்டும் அடைவிப்பது.

(கு-ரை.) சம்ஸ்காரம்-வாசனை. சம்ஸ்காரத்தன்மையாகிய ஜாதியுடையது சம்ஸ்காரம்; பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆன்மா, மனம் என்பனவற்றிருக்கும். வேகம், பாவனை, திதித்தாபக மென்னு மூன்றனுள் வேகமும் திதித்தாபகமும் மூர்த்தத்திரவி யங்களிலும், பாவனை அமூர்த்தத்திரவியத்திலு மிருக்கும்.

i. ஒன்றனது முதற்கிரியையினுற் றேன்றி இரண்டாவது முதலிய கிரியைகளைத் தோற்றுவிப்பது வேகமாம். அது பிருதிவி அப்புக்களின் இரண்டாம் வீழ்ச்சி முதலிய தொழிற்கும், தேயு வாயு மனங்களின் எரிதல் வீசல் செல்லல் முதலிய விரண்டாவது முதலிய தொழிற்கும் அசமவாயிகாரணமா யிருத்தலின் 'வினைக் கேது' என்று கூறப்பட்டது.

ii. முன்னனுபவத்தாற் றேன்றி நினைவிற்குக் காரணமாய் ஜீவான்மாவின்மாத்திரமிருப்பது பாவனையென்னும் சம்ஸ்கார மாம். அஃது ஒப்புமைகாண்டல் முதலிய சககாரிகளு ளொன் ருல் நினைவுண்டாதற் கேதுவா யெழுகின்றதென்க. (இந்நூலின் 9 வது பக்கம் பார்க்க).

(i.) அனுபவம், சம்ஸ்காரம், ஸ்மிருதியென்பன ஆத்மாவின் தர்மமாம். அநுபவஜன்னியசம்ஸ்காரம்பாவனையாம். அச்சம்ஸ்காரம் பூர்வ அனுபவத்தாற் றேன்றியதும், பூர்வ அனுபவத்தாற் றேன் றும் ஸ்மிருதியை யுண்டாக்குவதுமா யிருத்தலின் வியாபாரமாம். இவ்வாற்ருல் பூர்வ அனுபவம் ஸ்மிருதிக்குக் காரணமாம்; சம்ஸ் காரம் வியாபாரமாம். ஸ்மிருதியின் உற்பத்திக்கடுத்த பூர்வ காலத்தில் பூர்வ அனுபவம் நாசமாய் விட்டமையின் அபாவமாம். ஆயினும் அதன் வியாபாரமாகிய சம்ஸ்காரமிருக்கின்றது. ஆக லால் பூர்வ அனுபவம் நாசமாகியும் ஸ்மிருதி யுண்டாகின்றது.

அந்தச்சம்ஸ்காரமோ பிரத்தியட்சமன்று; ஆனால் அது அனுமானத்தினால் பெறப்படுகின்றது. ஆதலால் எவ்வளவுகாலம் முன்னனுபவிக்கப்பட்டதின் ஸ்மிருதியுண்டாகின்றதோ அவ்வளவுகாலம் சம்ஸ்காரமிருக்கிறது. எந்த ஸ்மிருதிக்குப்பின் ஸ்மிருதியுண்டாகின்றதில்லையோ அது சாம(ஈற்று) ஸ்மிருதியெனப்படுகின்றது. சாமஸ்மிருதியால்சம்ஸ்காரத்திற்கு நாசமுண்டாகின்றது. ஆதலால் மீண்டும் அப்பதார்த்தத்தின் ஸ்மிருதியுண்டாகின்றதில்லை என்பது பிராசீனரது மதம்.

(ii.) பூர்வ அனுபவஜன்னிய சம்ஸ்காரத்தால் முதல்ஸ்மிருதியுண்டாகின்றது; முதல் ஸ்மிருதியி னுற்பத்தியினால் முன் சம்ஸ்காரத்திற்கு நாசமுண்டாகின்றது; ஸ்மிருதியினால் வேறு சம்ஸ்காரமுண்டாகின்றது; அதனினின்று மீண்டும் சஜாதீய (தன்னினமான) ஸ்மிருதியுண்டாகின்றது; அந்த ஸ்மிருதியினால் அதனை யுண்டாக்கிய சம்ஸ்காரத்திற்கு நாசமுண்டாகின்றது; அந்நியசம்ஸ்காரமுற்பத்தியாகின்றது;அதனினின் றும்மூன்றாவது ஸ்மிருதியுண்டாகின்றது. இவ்வாற்றால் ஸ்மிருதியினின் றும் சம்ஸ்காரத்தினுற்பத்தி யுண்டாகின்றது. எந்தஸ்மிருதிக்குப்பின் சஜாதீயஸ்மிருதியுண்டாகின்றதில்லையோ அந்தஸ்மிருதி சம்ஸ்காரத்திற் கேதுவன்று என்பது நவீனரது மதம்; இதுவே உத்தம சித்தாந்தமாம்.

iii. தனதாசிரயத்தின் முன்னிலைமையைச் சம்பாதிக்கும் (அடைவிக்கும்) வாசனை திதிஸ்தாபகமாம். திதிஸ்தாபகமெனினும் நிலைபெறுத்துகையெனினுமொக்கும். அது வில், ஓலைப்பாய், நாய்வால், மரக்கிளை முதலிய பிருதிவியிலிருக்கும். வளைக்கப்பட்டவில் முதலியவற்றிற்கு மீட்டும் முன்னிலைமையைச் சம்பாதிப்பது அவற்றை யாசிரயமாகவுடைய திதிஸ்தாபகமாம்.

வேகமும் திதிஸ்தாபகமும் கிரியையினாற் றோன்றித் தம்மிற்றோன்றிய கிரியையினால் நாசமடைவனவா யிருத்தலின் பாவனை

போன்று அநித்தியமேயாம். பரமாணுவிலுள்ள திதித்தாபகம் நித்தியமென்பாருமுளர்.

இப்புத்திமுதல் தர்மாதர்மம் ஈறுனவையும், பாவனை யும் (ஆகிய ஒன்பதும்) ஆன்ம விசேடகுணம்.

குணங்கள் கூறினும். கருமம் கூறுதும்.

(கு-ரை.) ஆன்மாவின் விசேடகுண மின்னவெனப் பிறித் தோதப்பட்டமையின் ஏனைய குணங்களின் பாகுபாடு விளங்கு தற்பொருட் டுரைக்கப்படுகின்றது; வருமாறு:—

சங்கியை, பரிமாணம், பிரதக்த்வம், சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், குருத்துவம், நைமித்திகத்திரவத்துவம், வேகம், திதித்தாபகம் என்பன சாமாநிய (பொதுக்) குணங்கள்.

ரூபம், ரசம், கந்தம், பரிசம், சிநேகம், சாம்சித்திகத்திரவத்து வம், சத்தம், புத்தி, சுகம், துக்கம், இராகம், துவேஷம், பிரயத்நம், தருமம், அதருமம், பாவனை என்பன விசேட (சிறப்புக்) குணங்கள்.

இவ்விசேட குணங்களுள் தருமம், அதருமம், பாவனை யென் பன ஒழிந்த ரூப முதலியவை சட்சு முதலிய ஒவ்வோரிந்திரி யத்தாற் கவரப்படுவனவாம். "திரவியத்தைப் பகுக்கும் உபாதியிரண்டின் ஒரதிகரணத்திலிராத சாதியுடைமை விசேட குணத்தன்மை" என்று கூறப்பட்டிருக்கின்றது. இது பிருதிவி, இஃதப்பெனத் திரவியத்தைப் பகுக்கும் பிருதிவித்தன்மை அப் புத்தன்மையென்னும் உபாதியிரண்டினது சமாநாதிகரணமா (ஒரு நிலைக்களமா)யுள்ள இருமைச்சங்கியை முதலிய குணங்களிலிராத ஜாதியுடைய்து விசேடகுணமாம்.

"உருவம், இரசம், கந்தம், பரிசம், பரத்துவம், அபரத்துவம், திரவத்துவம், குருத்துவம், சிநேகம், வேகம் என்பன மூர்த்தகுணங்கள்" என்றும், "தர்மம், அதர்மம், பாவனை, சத்தம், புத்தி, சுகம், துக்கம், ராகம், துவேஷம், பிரயத்நமென்பன அமூர்த்தகுணங்கள்" என்றும், "சங்கியை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகமென்பன மூர்த்தாமூர்த்த குணங்கள்" என்றும், "சையோகம், விபாகம் இருமை முதலிய சங்கியை, துவிப்பிரதக்துவம் (இரு வேற்றுமை) என்பன அநேகாசிரித குணங்கள்" என்றும், "சங்கியை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவமென்பன ஈரிந்திரியக் கிராகிய குணங்கள்" என்றும், "உருவம், இரசம், கந்தம், பரிசம், சத்தமென்பன பகிரிந்திரியக் கிராகிய குணங்கள்" என்றும், "குருத்துவம், தர்மம், அதர்மம், பாவனை, திதித்தாபகமென்னுங் குணங்களும், பரமாணு துவியணுகங்களிலுள்ள குணங்களும், (ஆகாய முதலிய) அதீந்திரியங்களிலுள்ள (சங்கியை முதலிய) சாமானிய குணங்களும், திரியணுகத்தின் உருவத்தை யொழித்தொழிந்த குணங்களும் அதீந்திரியங்கள்" என்றும், "அப்பு, தேயு, வாயு, பரமாணுக்களின்கணுள்ள (இரச முதலிய) விசேடகுணங்களும், பரமாணுவிலுள்ள குருத்துவமும் திதித்தாபகமும், (ஆகாய முதலிய) விபுக்களிலும் பரமாணுக்களிலுமுள்ள ஒருமையும் பரிமாணமும் வேற்றுமையும் ஈசுவரனிடத்துள்ள இச்சாஞான முயற்சிகளும் நித்தியகுணங்கள்" என்றும், "உருவம், இரசம், கந்தம், பரிசம், சிநேகமென்னுமிவற்றின் பிரத்தியட்சத்தில் மகத்துவத்தோடு கூடிய உற்பூதத்தன்மையும், சாமானியகுணப் பிரத்தியட்சத்தில் ஆசிரயப் (குணியின்) பிரத்தியட்சமும், புத்திப் பிரத்தியட்சத்தில் (யானறிவுடையேனென்னத்) தன்னிடத்துள்ள விசிட்டஞானத்தன்மையும், சுகமுதலியவற்றின் பிரத்தியட்சத்தில் தன்னிடத்துள்ள சுகத்

தன்மை முதலியனவும் காரணமாம்" என்றும் தருக்காமிர்தம் கூறுகின்றது.

(3.) கருமம்—ACTION.

105. புடைபெயர்ச்சி (சலநாத்மகம்-அசைவு) கருமம்.

குணங்கள்போலத் திரவியமாத்திரத் திருப்பது, மூர்த்தத்துவ பரியாய நாமமுடைய விபுவல்லாத பொருளின் பரிமாணத்தோடு கூட ஒரு பொருளில் சமவேதித்திருப்பது; விபாகவழியான் முதலிடத்தில் சையோக நாசத்தில், பின்னிடத்தில் சையோக ஹேது; எழுதல், விழுதல், முடக்கல், நீட்டல், நடத்தலென்னுங் கூறுபாட்டால் ஐவகை. சுழறல் (சுழற்சி) முதலியன நடத்தலுள் அடங்கும்.

(கு-ரை.) கருமம் - தொழில். கருமத்தன்மையாகிய சாதி யடையது கருமம். அது சையோகத்திற்கு வேறாய்ச் சையோகத் திற்கு அசமவாயிகாரணமாம்; மூர்த்தத்துவபரியாய நாமமு(பெயரு) டைய (வான் முதலிய) விபுவல்லாத (பிருதிவி, அப்பு, தேயு, வாயு, மனம் என்னும்) பொருளின் (வரம்புபட்ட) பரிமாணத் தோடு கூட (பிருதிவியாதி) ஒரு பொருளில் சமவேதித்திருக்கும். விபுவல்லாத பொருளின் பரிமாணமாவது ஒரெல்லைக் குட்பட்ட பரிமாணமாம். அதுவே மூர்த்தத்துவமாம். மூர்த்தத்துவவிலக்க ணம் வரம்புபட்ட பரிமாணத்தோடு கூடிய தன்மையாம். விபுத் திரவியத்தில் கர்மம் நிகழாதென்பது கருத்து.

பரியாயநாமம் ஒரு பொருளைக் குறிப்பித்தற் கேதுவாகிய வேறு சொல். கைம்மலை கறையடி புழைக்கையென்பன யானை யென்னு மொருபொருளைக் குறிப்பித்தற் கேதுவாகிய பரியாய

நாமங்களாயிருத்தல்போன்று விபுவல்லாதபொருளின் பரிமாணத்தைக் குறிப்பித்தற்கு மூர்த்தத்துவமென்பது பரியாயநாமமாயிருக்கின்றதென்க. சர்வகர்மங்களும் உற்பத்தியுடைய பாவபதார்த்தமாயிருத்தலின் யாண்டும் அநித்தியமேயாம். அதீந்திரியமூர்த்தத் திரவியத்துள்ளகருமம் அதீந்திரியமாம்; பிரத்தியட்சமூர்த்தத் திரவியத்துள்ளகருமம் பிரத்தியட்சமாம். கருமம் மூர்த்தத்திரவியந் தின்(பிரிவின்)வாயிலாக முதலிடத்தில் சையோகநாசத்திலுண்டாகும்;பின்னிடத்தில் சையோகவேதுவாம். அது தனதாசிரயம்நசித்தலாலும் தன்றாலுண்டாகும் சையோகத்தாலும் கெடும். நோதனமென்னும் பெயருள்ள சையோகத்தாலே முதற்கிரியையும், வேகத்தாலே இரண்டாவது முதலிய கிரியைகளும், கிரியையாலே விபாகமும், விபாகத்தாலே பூர்வதேச (முன்னிட) சையோகநாசமும், அதன்பின்னர் உத்தரதேச (பின்னிட) சையோகமும், அப்பால் கருமத்திற்கும் விபாகத்திற்குங் கேடுமுண்டாகின்றனவென்பது நியமம். (1) எழுதல்-ஒன்றுமேலிடத்திற் கூடுவதற்கேதுவாம்; (2) விழுதல்-கீழிடத்திற் கூடுவதற் கேதுவாம்; (3) முடக்கல்(வளைதல்) தன்சமீபத்தில் வளைந்து கூடுவதற்கேதுவாம்; (4)நீட்டல்(நிமிர்தல்) தன்னிற்றூரத்தில் நிமிர்ந்து கூடுவதற்கேதுவாம்; (5) இவையொழிந்த சுழற்சி முதலிய யாவும் நடத்தலுளடங்கும்.

இருத்தல் நடவாமை யென்றற்றொடக்கத்தன பொருளின் புடைபெயர்ச்சியன்மையின் அவை கருமமன்று. என்னால் "றவ்வொடுகரவும்மை" என்னுஞ் சூத்திரத்தின் விசேடவுரையில் சங்கரநமச்சிவாயப்புலவர்" மூன்றுகாலமும் அவைபற்றிப் புடைபெயரும் வினையுமில்லனவற்றை எதிர்மறைவினை மூன்றுகாலமுமேற்குமென்று கூறுதல் இலக்கணை" என்று கூறுவதிங் காராயத்தக்கதாம்.

(4.) சாமாநியம்—GENUS.

106. அநுவிருத்தி ஞானஹேது சாமாநியம்; திரவிய முதல் மூன்றினிருப்பது. சாமாநியம் நித்தியம், ஏகம் (ஒன்று), அநேகாநுகதம் (பலவற்றிலிருப்பது).

அதுவும், பரமெ(மேலெ)னவும், அபரமெ(கீழெ)னவும் இருவகை.

(கு-ரை.) சாமாநியம்-ஜாதி. துவம், தன்மை, ஜாதி, சாமாநியமென்பன ஒருபொருட்கிளவி. மாலையின்கண் நூல்போல ஜாதி வியக்திக்கணிருந்து இது கடம் இது சடம் எனத் தொடர்ந்து வரும் ஞானத்திற் கேதுவாயிருத்தலின், 'அநுவிருத்தி ஞானவேது சாமாநியம்' என்று கூறப்பட்டது. அநுவிருத்திஞானம் தொடர்ந்துவரும் ஞானம். நித்தியமாய் ஒன்றாய் அநேகத்திற் சமவேதித்திருத்தல் சாமாநியத்தின் இலக்கணமாம். (1) திரவியத்தன்மையாவது நித்தியமான பிருதிவியாதிகளிலும் அநித்தியமான கடாதிகளிலும் சமவேதித்து நித்தியமாய்க் குணங்களிற் சமவேதித்திராத ஜாதியாம்; (2) குணத்தன்மையாவது சமவாயிகாரணத்திற்கு (திரவியத்திற்கு) வேறாய பதார்த்தங்களிற் சமவேதித்துச் சத்தைக்கு (வியாபகஜாதிக்கு)ச் சாட்சாத் (நேரே) வியாப்பியமா யிருப்பதான ஜாதியாம்; (3) கர்மத்தன்மையாவது நித்திய பதார்த்தங்களிற் சமவேதித்திராது சத்தைக்குச் சாட்சாத் வியாப்பியமான ஜாதியாம்.

பரம்.

அவற்றுள், பரம் சத்தை (உண்மைத்தன்மை); பல விடயமாதலின் (திரவியகுணகர்மங்களி லிருப்பதாக

லின்). அதுவும் (பரமும்) அநுவிருத்தி ஞானமாத்திர ஹேதுவாதலின் சாமானியம் (பொது).

அபரம்.

அபரம் திரவியத்துவ முதலியன; அற்பவிடயமாதலின். அதுவும் (அபரமும்) வியாவிர்த்திக்கு (திரவியகுணகர்மங்களைப் பிரித்தறிவித்தற்கு) மேதுவாதலின் சாமாநிய விசேடம் (பொதுவிற் சிறப்பு.)

(கு-ரை.) அதிக தேசத்திருக்கும் சாமாநியம் பரமாம்; அற்பதேசத்திருக்கும் சாமாநியம் அபரமாம். (1) சத்தை திரவியத்தன்மை,குணத்தன்மை, கருமத்தன்மைகளைநோக்கஅதிகதேசத்திருத்தலின் வியாபக ஜாதியாம்; (2) திரவியத்தன்மை முதலியன சத்தையை நோக்க அற்பதேசத்திருப்பனவாதலின் வியாப்பிய ஜாதியாம்; (3) இத்திரவியத்தன்மை முதலியனவே சத்தையை நோக்க அற்பதேசத்திருப்பனவாகவும் கடத்தன்மை படத்தன்மை முதலியனவற்றைநோக்க அதிகதேசத்திருப்பனவாகவு மிருத்தலின் வியாப்பிய வியாபக ஜாதியாம். ஜாதியுடையது வியக்தியெனப்படும். சாமாநியம் யாண்டும் ஏகாகாரவடிவ ஆகாயமுதலியவற்றிலும் தன்னிலும் விசேட முதலியவற்றிலு மிருப்பதில்லை, அவற்றின் றன்மைஉபாதியாம். ஈண்டு உபாதி அகண்டதருமமெனப்படும். வியக்தி யொன்றுயிருப்பது ஜாதிபாதகமாம்; பாதகம்-கெடுப்பது. ஆகாயத்தன்மை, திசைத்தன்மை, காலத்தன்மை என்றற்றொடக்கத்தனவற்றுள் தன்மை அநேகானுகதமாயிராமையின்அது ஜாதியன்று. ஆசிரயமொன்றுயிருக்குந்தன்மை உபாதியாமன்றி ஜாதியாகாதென்பது கருத்து. * சாங்கரிய (கலத்தல்)

* "ஏகவியக்திவிருத்தித்துவம் (ஒரு வியக்தியி லிருக்குந்

முதலானவையும் ஜாதிபாதகமாம். சாமாநியத்தன்மை சாமாநிய வடிவமன்று. சாமாநியத்திற்குச் சாமாநிய முண்டெனின் அநவஸ்தையாமாதலின் அதற்குச் சாமாநியமின்றெனக.

தர்மமாத்திரம் உபாதியெனக் கூறப்படுதலின் தர்மமாத்திரமாகிய திரவியத்துவ முதலியனவும் உபாதி வடிவமாம். இக்காரணத்தாற்றான் முன்னர்த் திரவியத்தைப் பகுக்குந் தன்மை உபாதிவடிவினதென்று கூறப்பட்டது.

அதீந்திரியங்களிலுள்ள சாமாநியம் அதீந்திரியமாம்; பிரத்தியட்சங்களிலுள்ள சாமாநியம் பிரத்தியட்சமாம். தனதாசிரயம் நசித்தவிடத்தும் சாமாநியம் நசியாதென் றங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது.

"சாமாநியம் ஜாதிவடிவினது உபாதிவடிவினது என இருவகைத்தாம். சாக்ஷாத்தாகச் சம்பாதிக்கப்பட்ட சாமாநியம் ஜாதிவடிவினது. அது சத்தை திரவியத்தன்மை முதலியவற்றைப் போன்றதாம். பாம்பரையாகச் சம்பாதிக்கப்பட்ட சாமாநியம் உபாதிவடிவினது. அது பிரமேயத்துவம் ஞேயத்துவ முதலியனவும் தண்டமுடைமை குண்டலமுடைமை முதலியனவும் போலவாம். பிரமாத்தன்மையே பரம்பரைச்சம்பந்தத்தான் குடமுதலியவற்றினிருக்கும் பிரமேயத்தன்மையாமென் றிவ்வாறு அறியத்தக்கதாம்" என்று தருக்ககௌமுதி கூறுகின்றது.

*இதில் வியக்தியின் வேறின்மை (திரவிய குண கர்மங்

துல்லிய (ஒத்த) வியக்தி விருத்தித்துவம், அநவஸ்தை, இலக்கண பங்கம், சம்பந்தாபாவம் என்பன ஜாதிபாதகங்களாம்" என்று தருக்காமிர்தங் கூறுகின்றது.

* (1) வேதாந்த பரிபாஷை "ஜாதி உபாதியென்னும் பரி

கட்கு வேறான) சாமாநியமில்லென் றொருவன் கூறினான்.

(கு-ரை.) திரவியத்துவ முதலியன அதத்விடாவிருத்தி வடிவமா யிருத்தலின் அவை திரவிய முதலிய வியக்தி வடிவமே யாம்; ஆதலின் திரவிய முதலிய வியக்தியினும் வேறான சாமாநிய முண்டெனல் பொருந்தாதென்பர் பௌத்தர்.

இதிற் கூறுதும்:—

ஆயின், பின்னமாய் வேறுபட்ட இலக்கணமுடைய பிண்டங்களின் (வியக்திகளின்) ஏகாகாரபுத்தி (ஒரு வடிவஞானம்) எல்லாவற்றினும் (சர்வவியக்தியினும்) அடைந்த ஒன்றனையே யல்லாமல் யாதைப்பற்றிநிற்கும்? (எதையும் பற்றாது); அதுவே சாமாநியமென்க.

(கு-ரை.) செம்மை கருமை முதலிய வடிவமாக வொன்றற்கொன்று வேறுபட்டுள்ள கடவியக்திகள் பலவற்றுள்ளுமடைந்

பாஷை (சங்கேதவார்த்தை) எப்பிரமாணங்கட்கும் விஷயமாக வின்மையின் அப்பிராமாணியமாம். 'இது கடம்' என்றற்றொடக்கத்துப் பிரத்தியட்சமோ கடத்துவாதிகளாய தர்மங்களிருப்பதிற் பிரமாணமேயன்றி அக்கடத்துவாதிகள் ஜாதியென்பதிற் பிரமாணமன்று. ஜாதித்துவமாகிய சாத்தியம் அப்பிரசித்தமா யிருக்குமிடத்து அதற்குச் சாதகமான அனுமானத்திற்கும் இடமில்லை'' என்று கூறுகின்றது.

(2.) நன்னூலார் குணத்திற்கு வேறாக ஜாதியென்பதொன்றின்றென்பர். அவர் ''அளவறிவொப்புவடிவு நிறங்கதி, சாதிகுடி சிறப்பாதிப் பல்குணம்'' என்று கூறுவதறிக.

துள்ள வொருகடத்துவசாமாநியத்தை யங்கீகரியாவிடின் அக்கடங்களெல்லாவற்றுள்ளும் இது கடம் இது கடம் என்னும் ஏகாகாரபுத்தியுண்டாகாது. அவ்வேகாகாரபுத்தியுண்டாவது பிரசித்தமா யிருத்தலின் அது சித்தித்தற்பொருட்டுச் சர்வ கடங்களிலும் ஒரு கடத்துவ சாமாநியத்தை அவசியம் அங்கீகரித்தல்வேண்டும். ஞேயா (விஷயா)நுசாரமாக ஞானமுண்டாகின்றதென்பது நியமமாகலின், கடத்துவசாமாநிய மில்லாவிடின் இது கடம் இது கடம் என்னும் ஏகாகாரபுத்தியுண்டாகாது. ஆதலின், வியக்தியினும் வேறாகச் சாமாநியமுண்டென்பது பிரசித்தமாமென்க.

(ஆ.) *அற்றாயின், தானல்லதின் நீக்கத்தா (அதத்

---

* அதத்வியாவிருத்தியினும் வேறாகச் சாமாநிய மொன்றின் றென்பவர் பௌத்தர். அவர் சாமாநியமென்பது சர்வகதமா யிருக்கிறதா? அல்லது தனக்காசிரயமான எல்லாவற்றினு மிருக்கிறதா? முதற்பட்சத்தில் எல்லா வஸ்துக்கட்கும் சாங்கரியமு (கலப்பு)ண்டாம்; அபசித்தாந்தமுமாம். சாமாநியம் தனக்காசிரயமான எல்லாவற்றினு மிருக்கின்றதென்பது தார்க்கநூற்கொள்கை. வர்த்தமான (நிகழ்கால) கடத்திலுள்ள சாமாநியம் மற்றோரிடத்துண்டாகின்ற கடத்துடன் சம்பந்தப்படுகின்றது. அது வர்த்தமான கடத்திலிருந்துவந்து சம்பந்தப்படுகின்றதா? வாராமலே சம்பந்தப்படுகின்றதா? முதற்பட்சத்தில் திரவியத்தன்மை சம்பவிக்கும். இரண்டாவது பட்சத்தில் சம்பந்தம் பொருந்தாது. மேலும் (1) நஷ்டமான கடத்தில் சாமாநியமிருக்கிறதா? (2) நசித்துப்போகின்றதா? (3) வேறிடத்திற் போகின்றதா? முதற்பட்சத்தில் அது நிராதாரமாம்; இரண்டாவது பட்சத்தில் அது நித்தியமென்பதமையாது; மூன்றாவது பட்சத்தில்அதுதிரவியமாம். இத்தோஷங்களுடன் கூடியிருப்

வியா விர்த்தியா)ற் பண்ணப்பட்டதே ஏகாகாரபுத்தியாக (இருக்கிறது); அங்ஙனமன்ரூ, எல்லா ஆ வடிவினும் ஆ வல்லாத புரவி (குதிரை) முதலியவற்றின் நீக்கமுண்டு; நீக்கமுண்மையின், பல ஆ வடிவின் இவ்வேகாகார ஞானம் ஆ வல்லதன் நீக்க விடயமுடையதே; விதி ரூபமான ஆத்தன்மையாகிய சாமாநியவிடய மன்றே யெனின்,

(கு-ரை.) தானல்லதினீக்கம் - அந்நியோந்நியாபாவம். அது கடம் படமன் றென்ருற் போல்வதாம். ஆ, ஆ என்னும் ஏகாகார ஞானம் ஆ, புரவியன்றெனநீக்கும் அந்நியோந்நியாபாவத்தை விஷயமாகவுடைத்தா யிருக்கின்றதன்றி விதி (பாவ) ரூபமான ஆத்தன்மையாகிய சாதியை விஷயமாகவுடைத்தா யிருக்கவில்லை யென்று பௌத்தனல் ஆட்சேபிக்கப்பட்டது.

(ச.) இங்ஙனமன்று; விதிமுகத்தானே ஏகாகாரங் கவர்தலின்.

பதால் சாமாநியம் அப்பிராமாணியமாம். (1) ஓரிடத்துள்ள சாமாநியம் மற்ருேரிடத்துண்டாகும் கடத்தில் அவ்விடத்தினின்றும் அசையாமற் போகின்றதெனல் யுக்தி விருத்தம். (2) யாண்டு இந்தப் பாவ (கட) மிருக்கின்றதோ ஆண்டு அஃதனுடன் சாமாநியம் சம்பந்தப்படுவதின்று; ஆனல் அந்தத் தேச (கட)த்தையும் வியாபித்துக்கொண்டிருக்கின்றது. இஃதென்ன வியப்பு! (3) சாமாநியம் போவதுமன்று; அங்கே இருந்ததுமன்று; பிறகு வருவதுமன்று; அம்சத்துடன் கூடியதுமன்று; முந்திய ஆதாரத்தை விடுகின்றதுமன்று. எவ்வளவு கஷ்டம்! எனச் சாமாநியமின்றென மறுத்து இது கடம்இது கடமெனத் தொடர்ச்சியர்ய்வரும் ஞானத்திற்கு விஷயம் அது படமன்றென்று விலக்கலாம் என்று கூறுவர்.

(கு-ரை.) விதிமுகவுணர்ச்சிக்கு (இருக்கிறதென்னும் ஞானத்திற்கு) விஷயம் பாவமென்பதும், நிஷேதமுக (மறைமுக) வுணர்ச்சிக்கு (இல்லையென்னும் ஞானத்திற்கு) விஷயம் அபாவமென்பதும் நியமமாம். ஆத்தன்மை முதலிய ஜாதி விதிமுகவுணர்ச்சிக்கு விஷயமா யிருத்தலின் அது நிஷேதமுக வுணர்ச்சிக்கு விஷயமா யிருக்கின்றதெனல் பொருந்தாது. தம்முள் பரஸ்பரம் வேறுபாடுடைய பல கடங்களில் இது கடம் இது கடமென்னும் ஏகாகாரபுத்தி சர்வ கடங்களிலுந் தொடர்ந்து சர்வ கடங்களிலும் வேறான ஒரு கடத்தன்மைச் சாமாநியத்தைச் சித்திக்கச் செய்கின்றமையின் அதனை அதத்வியாவிருத்தி வடிவமென்பதமையாது எனப்பௌத்தன்மதம் கண்டிக்கப்பட்டது. இது கடம் இது கடமென்னும் ஏகாகாரம் விதிமுகத்தானே கவரப்படுகின்றமை காண்க.

V. விசேடம்—DIFFERENCE.

107. விசேடம் நித்தியம்; நித்தியத்திரவியத்திருப்பது; வியாவிர்த்தி புத்திமாத்திரத்திற் கேது.

நித்தியத்திரவியங்கள் ஆகாய முதலிய ஐந்து, பரமாணு ரூபமான பிருதிவியாதி நான்கு.

(கு-ரை.) விசேடம்-சிறப்பு. இஃது அந்நியோந்நியாபாவத்திற்கவிரோதியாய்ச் சாமாநியமற்றதாய் நித்தியத்திரவியங்களிற் சமவேதித்து நித்தமாயிருக்கும்; சுத்த சத்தையென்றும் கூறப்படும். * சமான ஜாதிக் குணக்கிரியைகளையுடைய பரமாணுக்கள்

---

* நித்தியத்திரவியங்கள் தம்முள் வேறுபட்டிருத்தலைத் தெரிவிப்பது அவற்றின்கணுள்ள சாமாநிய முதலியனவாதலின் அவையே விசேடமாம். அவற்றிற்கு வேறாக விசேடமென்ப

பரஸ்பரம் தம்முள் வேறுபட்டிருத்தலை யறிவிப்பது விசேடமா யிருத்தலின் அஃதவசியம் அங்கிகரிக்கத்தக்கதாம். பிரளயகாலத்தில் பரமாணுக்களின் பேதத்தை யுணர்தற்பொருட்டு அவற்றின்கணிருப்பது யாதோ அது விசேடமாமெனக் * கணாதமுனிவரால் அங்கிகரிக்கப்பட்டது. விசேடம் நித்தியத்திரவியங்களிலிருந்து அவை தம்முள் வேறுபட்டிருத்தலைத் தெரிவித்தலின் 'வியாவிர்த்தி புத்திமாத்திரத்திற்கேது' என்று கூறப்பட்டது.

vi. சமவாயம்—CO-INHERENCE.

108. நீக்கமின்றி இருப்பவற்றின் சம்பந்தம் சமவாயம். அது கூறப்பட்டதே.

(கு-ரை.) சமவாயம்-ஒற்றுமைச் சம்பந்தம். சமவாயிகாரண விலக்கணங் கூறுமிடத்துச் சமவாயத்தின் இலக்கணம் கூறினமையின் 'அது கூறப்பட்டதே' என்று கூறப்பட்டது. சமவாயசம்பந்த மற்றுச் சம்பந்தவடிவா யிருப்பது யாது அது சமவாயமென்பதும் ஒன்று. அநுயோகிப் பிரதியோகிகளின் உணர்ச்சியின்றி யெதனுணர்ச்சி யுண்டாவதின்றோ அத்தன்மைய தர்மம் சம்பந்தமெனப்படும். ஈண்டு விசேடியம் அநுயோகியும், விசேடணம் பிரதியோகியுமாம். கடத்தில் கடத்தன்மையின் சம்பந்தவுணர்ச்சி கடமாகிய அநுயோகியினுணர்ச்சியும் கடத்தன்மையாகிய பிரதியோகியினுணர்ச்சியுமில்லாவிடத்து நிகழாமையும், குணியில் குணத்தின் சம்பந்தவுணர்ச்சி குணியாகிய அநுயோகியினுணர்ச்சியும் குணமாகிய பிரதியோகியினுணர்ச்சியு மில்லாவிடத்து நிகழாமையுமுணர்க.

துளதெனல் வான்மலர்போல அப்பிரசித்தமா மென்பர் ஒருசாரார்.

* விசேட பதார்த்தத்தை யங்கிகரித்தவர் வைசேடிகரெனப்படுவர்.

இங்ஙனமே அவயவ அவயவி முதலியவற்றின் சம்பந்தவுணர்ச்சிக்குங் கொள்க. அதீந்திரியங்களிலுள்ள சமவாயம் அதீந்திரியமாம். பிரத்தியட்சங்களிலுள்ள சமவாயம் பிரத்தியட்சமாம். அஃதொன்ருய் நித்தியமாயிருக்கும்.

(ஆ.) அற்ருயின், அவயவ அவயவிகள் நீக்கமின்றி இருப்பனவாதலின் அவற்றது சம்பந்தம் சமவாயமென்பது பொருந்தாது; அவயவத்தின் வேருய் அவயவி இன்மையின்.

*பரமாணுக்களன்ரே அங்ஙனம் பல கூடி இது குடமென்று கவரப்படும்.

---

* (1) இரண்டு பரமாணுவினின்று துவியணுகமும், மூன்று துவியணுகத்தினின்று திரியணுகமும், நான்கு திரியணுகத்தினின்று சதுரணுகமும், ஐந்து சதுரணுகத்தினின்று பஞ்சாணுகமும் முறையே தோன்றுவதால் கடபட முதலியன உண்டாகின்றனவென்று கூருது பிருதிவியாதி பரமாணுக்களின் சமுதாயமே கடபட முதலியனவாமென்று கூறுவர் சமுதாயவாதிகள். இவர் பரமாணுவினும் வேருகக் கடபட முதலிய அவயவியுண்டெனல் எவ்வாற்ருனும் பொருந்ாதென்பர்.

(2) சையோக சம்பந்தம் சமவாயத்தை யபேட்சிப்பது போன்று சமவாயமும் சம்பந்தவடிவமா யிருப்பதனல் வேருேர் சம்பந்தத்தை யபேட்சிக்கும்; அப்போது அநவஸ்தையாம். வினை முதலியவை சித்திப்பதற்குமுன்னர்ச் சமவாயம் பெறப்படாமையின் அது நித்தியமாகாது. சம்பந்தியினும் வேருகச் சம்பந்தவடிவ சமவாயம் பெறப்படாமையின் அஃதில்லை என்றும், பிறவும் கூறுவாருமுளர்.

(கு-ரை.) சமுதாயவாதிகளாய பௌத்தர் முதலியோர் அவயவத்தின் (உறுப்பின்) வேறாக அவயவி (உறுப்பி)யின்மையின் அவயவ அவயவிகட்குச் சமவாயசம்பந்தமுண்டென்பது பொருந்தாது; பரமாணுக்களின் சமுதாயமே இது கடம் இது படம் என்று கவரப்படுகின்றதென்பர்.

(ச.) இதிற்கூறுதும்:—குடம் பரிய(பெரிய)தென்னுங் காட்சியுண்டு. அது (குடம்பரியதென்னும் பிரத்தியட்சம்) பலவாய்ப் பரியதல்லதாய்ப் புலப்படாததாகிய (அப்பிரத்தியட்சமாகிய) பரமாணுக்களிலே உண்டாதல் தகாது. இப்புத்தி (குடம் பரியதென்னுங் காட்சி) மயக்கமெ (பிராந்தியெ)னில், அன்று; வாதகமின்மையின்.

ஆதலின், இங்ஙனம் திரவியாதி அறுபொருளும் கூறப்பட்டன. அவை விதிமுகஞானத்தால் அறியப்படுதலின் பாவ ரூபங்களே.

(கு-ரை.) வாதகமின்மையின்-குடம்பரியதென்னுங் காட்சிக்குக் கெடுதியின்மையின். குடம் பரியதென்னுங் காட்சி பிராந்தியாயின் அதனிக்கத்தில் குடம் பலவாய்ப் பரியதல்லதாய்ப் புலப்படாததாகிய பரமாணுவின் சமுதாயம் என்று விளங்கல்வேண்டும். அங்ஙனம் விளங்காமையின் குடம் பரமாணுவின் சமுதாயமாமெனல் பொருந்தாதென்றவாறு. எள்ளது கூட்டத்தில் எள் தனித்தனியாய்ப் புலப்படுதல்போன்று பரமாணுவின் கூட்டமாகிய கடத்தில் பரமாணு தனித்தனியாய் விளங்கல் வேண்டும். அங்ஙனம் விளங்காமையின், பரமாணுக்களின் கூட்டமே கடமெனல் எங்ஙனமாமென மறுக்கப்பட்டதென்க. குண குணி,

வினை வினைமுதல், ஜாதி வியக்தியென்றற் றொடக்கத்தனவற்றின் சமவாயம் 'கரியது குடமென்னும் விசிட்டஞானம் விசேடண விசேடியங்கட்குளதாகிய சம்பந்தத்தை விடயமாகவுடையது; விசிட்டஞானமாகலின்; குழையனென்னும் ஞானம்போலும்' என்னுமநுமானத்தாற் பெறப்படும். பெறப்படவே அஃதின்றென்றலமையாது. சமவாயத்தினை நியாயநூலார் பிரத்தியட்சவிஷயமென்றும், வைசேடிகநூலார் அநுமானவிஷயமென்றுங் கூறுவர். (இருக்கிறதென்னும்) விதிமுக வுணர்ச்சிக்கு விஷயமாயிருப்பது பாவபதார்த்தமாகலின் விதிமுகஞானத்திற்கு விஷயமான திரவியாதியாறும் பாவபதார்த்தமாமென்க.

அபாவம்—NON-EXISTENCE.

109. இப்பொழுது நிடேதமுகப் பிரமாணத்தால் அறிவதாகிய அபாவமான ஏழாம் பதார்த்தம் கூறுதும்:—

(கு-ரை.) அபாவம் - இன்மை. அபாவம் கடமில்லை, படமில்லையென்றற் றொடக்கத்து நிஷேதமுகப் பிரத்தியட்சப் பிரமாணத்தினால் அறியப்படுதலின் 'நிடேதமுகப் பிரமாணத்தா லறிவதாகிய அபாவம்' என்று கூறப்பட்டது. இல்லையென்னும் ஞானத்திற்கு விஷயம் அபாவமாமென்பது கருத்து. நிஷேதம்-விலக்கு. பாவத்தினும்வேறு அபாவமாம். பிரதியோகியி னபேட்சையுடைய ஞானத்திற்குச் சம்பந்தமும் சாதிருசியமும் அபாவமும் விஷயமாயிருத்தலின் சம்பந்த சாதிருசியங்கட்கு வேறாய்ப் பிரதியோகியின் அபேட்சையுடைய ஞானத்திற்கு விஷயமாயிருப்பது அபாவமாம் என்பதும் அபாவத்திற் கிலக்கணமாம். ஈண்டபாவத்தினபாவம் பிரதியோகியெனப்படும். கடமில்லை யென்புழி இல்லையென்னும் அபாவம் கடம் என்னும் பிரதியோகியின் அபேட்சையுடைய ஞானத்திற்கு விஷயமாயிருத்த லறிக. கடஞானமின்றியவனுக்குக் கடமின்றென்னும்ஞான முண்டாகாதென்பது கருத்து.

அவ்வபாவம்-சம்சர்க்காபாவமெனவும் அந்நியோந் நியாபாவமெனவும் வகையானிரண்டு.

(கு-ரை.) அபேத சம்பந்தத்தால் வரைந்துகொள்ளப்பட்ட அபாவம் அந்நியோந்நியாபாவமாம்; ஏனைய சம்பந்தத்தால் வரைந்து கொள்ளப்பட்ட அபாவம் சம்சர்க்காபாவமாம். அபேதமெனினும் தாதாத்மியமெனினும் ஒக்கும். சம்பந்தமெனினும் சம்சர்க்கமெனினு மொக்கும்.

(1) சம்சர்க்காபாவத்தை யறிவிக்கும் வாக்கியத்தில் பிரதியோகியை யுணர்த்தும் பதம் முதல்வேற்றுமை யுடையதும் அநுயோகியை யுணர்த்தும் பதம் ஏழாம் வேற்றுமை யுடையது மாம். உதாரணம் கபாலத்திற் கடமில்லையென்பது. ஈண்டுக் கபாலம் அநுயோகியும் கடம் பிரதியோகியுமாம். கபாலபதம் ஏழாம்வேற்றுமையுடையதாயும் கடபதம் முதல் வேற்றுமை யுடையதாயுமிருத்தல் காண்க.

(2) அந்நியோந்நியாபாவத்தை யறிவிக்கும் வாக்கியத்தில் பிரதியோகியையும் அநுயோகியையும் உணர்த்தும் பதங்கள் முதல் வேற்றுமை யுடையனவாம். உதாரணம் கடம் படமன்றென்பது. ஈண்டுக் கடம் அநுயோகியும் படம் பிரதியோகியுமாம். கடபதமும் படபதமும் முதல் வேற்றுமையுடையனவா யிருத்தலறிக. அபாவத்தின் வேறுபாடு பிரதியோகியின் வேறுபாட்டாலுண்டாகின்றதென்பது நியமம். அதிகரண வேறுபாட்டால் அபாவத்தின் வேறுபாடுண்டாகின்றதென்பது பிறர்மதம்.

(1) சம்சர்க்காபாவம் i. பிராகபாவமும், ii. பிரத்துவம்சாபாவமும், iii. அத்தியந்தாபாவமு மென மூவகை.

(கு-ரை.) பிராசீனர் சாமயிகாபாவத்தையுங் கூட்டிச் சம்சர்க்காபாவம் நால்வகைத்தாமென்பர். இவர் அஃதத்தியந்தாபாவத்தி லந்தர்க்கதமாமென்பர்.

பிராகபாவம்—ANTECEDENT NON-EXISTENCE.

i. உற்பத்திக்குமுன் காரணங்களிற்காரியமின்மை **பிராகபாவம்.** எங்ஙனம்? *நூல்களில் ஆடையில்லை; அஃதநாதி; தோற்றமின்மையின்.

---

* (i) ஒரு சாரார் நூல்களில் ஆடையில்லை என்புழி ஆடையின் பிராகபாவம் நூல்களிலிருக்கின்றது. நூல்கள் உற்பத்தியுடையனவாகலின் அவற்றிலுள்ள ஆடையின்பிராகபாவம் அநாதியென்பதமையாது. தர்மி (நூல்கள்) ஆதியா (உற்பத்தியுடையதா)கவும் தர்மம் (பிராகபாவம்) அநாதியாகவும் கூறல் வியாகாதமாம். நித்தியத்துள்ள பிராகபாவம் அநாதி; அநித்தியத்துள்ள பிராகபாவம் ஆதியெனல் அமையும் என்பர்.

(ii) மற்றொரு சாரார் துவம்சாபாவத்தின் பிராகபாவம்(கடம்) சிலவிடத்து உற்பத்தியுடையதா யிருத்தலின் யாண்டும் பிராகபாவம் அநாதியாமென்பதமையாதென்பர். பிராசீனர் துவம்சாபாவத்தின் பிராகபாவம் அதனது பிரதியோகிவடிவமும் அப்பிரதியோகியின் பிராகபாவவடிவமுமாம் என்பர்.

(iii.) பிறிதொருசாரார் எந்தக்காரணத்தின்கண் எதனை யுண்டாக்குதற்குரிய சக்தி யிருக்கிறதோ அந்தக் காரணத்தின்கண் அஃதுண்டாகின்றது. நூல்களில் ஆடையை யுண்டுபண்ணுவதற்குரிய சக்தியிருக்கின்றது; கபாலத்தில் ஆடையை யுண்டுபண்ணுவதற்குரியசக்தியில்லை. அதனாற்றான் அது நூல்களினின்றுண்டாகின்றது; கபாலத்தினின் றுண்டாகின்றதில்லை. ஆதலால் இச்சக்

(பிராகபாவம்) கெடுவதூம் காரியமே; அதன் (பிராகபாவத்தின்) கேடாதலின்.

(கு-ரை.) பிராகபாவம் - முன்னின்மை; பிராக்-முன், அபாவம்-இன்மை. பிராகபாவம் தனது பிரதியோகியின் உற்பத்திக்கு முன் அதனது சமவாயிகாரணத்திருக்கும். நூல்களில் ஆடையில்லை யென்புழி ஆடை தோன்றுவதன்முன் அதன் சமவாயி காரணமான நூல்களில் ஆடையின்மை யிருத்தலறிக. பிராகபாவத்திற்கு உற்பத்தியின்மையின் அஃதநாதியாம். அது தனது பிரதியோகியைத் தோற்றுவிக்குமிடத்துக் கெடுதலின் பிராகபாவ நாசமே காரியமாம். இதனுல் உற்பத்தியின்றி நாசமுடையது பிராகபாவமென்பது பெறப்பட்டவாறறிக.

பிராகபாவம் நூல்களி லாடையுண்டாகும் என்றற்றொடக்கத்து ஞானங்களாற் பிரசித்தமாம் எதற்கு (எக்காரியத்திற்கு) எதன்கண் (எச்சமவாயிகாரணத்தில்) பிராகபாவமுளதோ அதற்கு அதன்கண் உற்பத்தியுண்டாமென்பது நியமம். கபாலத்தில் ஆடையின் பிராகபாவமும் நூல்களில் கடத்தின் பிராகபாவமுமின்மையாற்றான் கபாலத்தில் ஆடையும் நூல்களில் கடமு முண்டாவதில்லை. எல்லாவற்றினின்றும் எல்லாக்காரியங்களும் உண்டாவதில்லையென்பதை நிரூபிக்கவே பிராகபாவம் அங்கீகரிக்கப்பட்டதென்றறிக.

பிராகபாவம் அநாதியென்பதற்குக் கூறும் காரணம் வருமாறு:—பிராகபாவம், பிரதியோகி, துவம்சம் (அழிவு) என்று மூன்றனுள் ஒன்றன் அதிகரண (இட) காலம் அவசியமுண்டு.

நிக்கு வேருகப் பிராகபாவமென்பதொன் றிருக்கின்றதென் றங்கீகரித்தல் பயனற்றதாமென்பர்.

பிராகபாவத்துவம்சங்களின் அநாதாரகாலம்பிரதியோகிக்கு ஆதாரமாமெனல் நியமமாம். கடமுண்டாய் நாசமாவதற்குமுன் கடத்தின் பிராகபாவத் துவம்சங்களின் அநாதாரகாலமிருக்கின்றது; ஏனெனின், கடத்தின் பிராகபாவம் நாசமாய்விட்டது; கடத்தின் துவம்சம் உண்டாகவில்லை; ஆதலால், கடத்துவம்சத்தின் அநாதாரகாலமாம். அது (அநாதாரகாலம்) கடத்தின் ஆதார காலமாம். கடத்துவம்சத்தின் துவம்சத்தை யங்கீகரிக்கின் கடத்துவம்சத்தினது துவம்சத்தின் அதிகரணகாலம் கடப்பிராக பாவ கடத்துவம்சங்களின் அநாதாரமா யிருத்தலின் கடத்தின் ஆதாரமாதல் வேண்டும். இவ்வாற்றான் துவம்சத்தின் துவம்சத்தை யங்கீகரிக்கின் பிரதியோகியின் எழுச்சி யுண்டாதல்வேண்டும். இதனாற்றான் பிராகபாவம் அநாதியென் றங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. பிராகபாவம் சாதியெ (உற்பத்தியுடையதெ)ன் றங்கீகரிக்கின் பிராகபாவத்தின் உற்பத்திக்குமுந்தியகாலம் பிராகபாவத் துவம்சங்களின் அநாதாரமா யிருத்தலின் பிரதியோகியின் ஆதாரமாதல் வேண்டும். ஆதலால் பிராகபாவம் அநாதியும் அந்தமுடையதுமாமென்க.

பிரத்துவம்சாபாவம்—DESTRUCTION.

ii. காரணங்களி (ஒட்டி)ல் தோன்றிய காரிய (குட)த்தின் அபாவம் **பிரத்துவம்சாபாவம்**; கெடுதலென்னுமளவு. எங்ஙனம்? குடமுடைகையில் ஒட்டிற் குடமில்லை; கோலானடித்தல் முதலியவற்றாற் பிறப்பது. அது (பின்னின்மை) தோன்றுவதாயினும் *கேடில்லது; கெட்டது (அழிந்தகுடம்) மீண்டுந் தோன்றாமையின்.

---

* (கடத்தின்) துவம்சாபாவம் தனது பிரதியோகியின் (கடத்

(கு-ரை.) பிரத்துவம்சாபாவம்-பின்னின்மை; அது தனது பிரதியோகியின் நாசத்தின் பின்னர் அதனது சமவாயிகாரணத்திருக்கும். குடமுடைந்தவிடத்துக் குடத்தின்பின்னின்மை அதன் சமவாயிகாரணமான கபாலத்தி (ஓட்டி)லிருத்தலறிக. அபாவ காரியத்தி னுற்பத்திக்கு நிமித்தகாரணமொன்றே வேண்டற்பாலதாகலின் 'கோலானடித்தன் முதலியவற்ருன் பிறப்பது' என்று கூறப்பட்டது. ஈண்டு நிமித்தகாரணம் குடமும் கோலாலடித்தலுமாம்.

பாவபதார்த்தத்தின் கேடு அபாவபதார்த்தத்தின் கேடு எனக் கேடிருவகையாம். பாவபதார்த்தத்தின் (கடத்தின்) கேடு துவம்சாபாவமாம்; அபாவபதார்த்தத்தின் கேடு பாவபதார்த்தமாகவாவது அல்லது அபாவபதார்த்தமாகவாவதாம். கடப்பிராகபாவத்தின் கேடு கடமாயிருத்தலும், துவம்சாபாவத்தின் பிராகபாவத்தின் கேடு துவம்சாபாவமாயிருத்தலுமறிக. அபாவத்தின் அபாவம் பிரதியோகியெனப் படினும் அஃதுற்றுநோக்குமிடத்து அபாவப் பிரதியோகி, பாவப் பிரதியோகியென இருவகையாம். கடப்பிராகபாவத்தின் அபாவம் (கடம்) கடப்பிராகபாவமென்னும் அபாவப் பிரதியோகியினை யுடையதாம்; கடத்துவம்சாபாவம் கடமென்னும் பாவப் பிரதியோகியினை யுடையதாம். இங்ஙனமே ஏனையவற்றையு முய்த்துணர்க.

தின்) சமவாயிகாரணத்திற்ருன் (ஓட்டிற்ருன்) இருக்கும். அது நாசமாமிடத்துத் துவம்சாபாவமும் நாசமடைதலின் துவம்சாபாவம் கேடில்லதென்பதொவ்வாது. நித்தியத்துள்ள துவம்சாபாவம் கேடின்றியதாம்; அநித்தியத்துள்ள துவம்சாபாவம் கேடுடையதா மென்ப தொவ்வுமென்பர் ஒரு சாரார்.

அபாவத்தின் அபாவம் அதனபாவம் என நிகழும் அபாவ மாலையில் மூன்ருமபாவம் முதலபாவமாயும் நான்காமபாவம் இரண்டாமபாவமாயுமமைந்து யாவு மிரண்டிரண்டாய்ப் பிரதி யோகியும் அபாவமுமாம், கடத்தினது அபாவத்தினபாவம் கட மாயும், கடத்தினது மூன்ருமபாவம் கடத்தின் அபாவமாயு மிருத்தலறிக. பிரத்துவம்சாபாவம் இக்கபாலங்களில் கடமழிந்த தென்றற் ருெடக்கத்து ஞானங்களால் பிரசித்தமாம். பிராக பாவம் நாசமும், துவம்சாபாவம் உற்பத்தியு முடையனவா யிருத்தலின் அவ்விரண்டும் அநித்தியமேயாம். பிரத்துவம்சா பாவம் தோன்றுவதாயினும் கெட்டது மீண்டுந் தோன்ருமையின் நாசமின்றியதாம். பிரத்தும்சாபாவத்தின் நாசத்தை யங்கீகரிக் கின் கெட்டகடம் மீண்டுந் தோன்றவேண்டும்; அங்ஙனந் தோன் ருமையின் துவம்சாபாவத்திற்குக் கேடின்று.

அத்தியந்தாபாவம்—ABSOLUTE NON-EXISTENCE.

iii. முக்காலத்தினுமின்மை அத்தியந்தாபாவம். எங் ஙனம்? வாயுவில் உருவமில்லை.

(கு-ரை.) அத்தியந்தாபாவம்-முற்றுமின்மை. எவ்வதிகரண (இட)த்தில் எதன் அபாவம் முக்காலத்து மிருக்கின்றதோ அஃது அத்தியந்தாபாவமாம். வாயுவில் உருவம் முக்காலத்துமின்மை யின் அஃதத்தியந்தாபாவமாம். இங்ஙனமே ஏனையவற்றையும் ஊகித்துணர்க. இஃதுற்பத்தி நாசமின்றியிருத்தலின் * நித்திய மாம். அந்நியோந்நியாபாவமும் உற்பத்தி நாசமின்றியிருத்தலின், அந்நியோந்நியாபாவத்தின் வேருய் உற்பத்தி நாசமின்றிய அபா

* அத்தியந்தாபாவத்தின் அதிகாணம் நித்தமாயின் அது நித்தமாம்; அநித்தமாயின் அநித்தமாம் என்பர் ஒரு சாரார்.

வம் அத்தியந்தாபாவமென்பதும் அத்தியந்தாபாவத்திற் கிலக்கணமாம். அத்தியந்தாபாவம் வாயுவி லுருவமில்லை, ஆகாயத்திற் கிரியையில்லை, நீரிற் பிருதிவித்தன்மையில்லை என்றற் றொடக்கத்து ஞானங்களாற் பிரசித்தமாம்.

பிறர் கூறும் சாமயிகாபாவம் இதி லந்தர்க்கதமா மென்பதன் காரணம் வருமாறு:—* சாமயிகாபாவம் அத்தியந்தாபாவமேயாம். குடமில்லாதநிலத்துக் குடங்கொணர்ந்த விடத்துக் குடத்தின் அத்தியந்தாபாவம் வேறிடத்துச் செல்லாவிடத்தும் உணர்ச்சி நிகழாமையின், குடங்கொண்டுபோயபின்ன ருணர்ச்சி நிகழ்தலின் நிலத்திற்குங் குடத்திற்குமுள்ள சையோகத்தின் முன்னபாவமும் பின்னபாவமும் அவ்வத்தியந்தாபாவ வுணர்ச்சியை யுண்டாக்கும். அதனாலே குடமுடைய நிலத்து அக்குடத்தினது சையோகத்தின் முன்னபாவமும் பின்னபாவமும் இன்மையின் அத்தியந்தாபாவத்தி னுணர்ச்சி நிகழாதென்றும், குடங்கொண்டுபோய பின்னர் அதன் சையோகத்தின் பின்னின்மை யிருத்தலின் அவ்வத்தியந்தாபாவத்தினுணர்ச்சி நிகழுமென்றும் கொள்க என்பது.

---

* சாமயிகாபாவம் அத்தியந்தாபாவ மாகாதெனப் பிராசீன தார்க்கிகர் மிகு விரிவாயெழுதி யிருக்கின்றனர். அது நூல் விரியுமென்னும் பயத்தால் ஈண்டெழுதாது விடப்பட்டது. விருப்புடையார் விருத்திப்பிரபாகரம் 180-வது பக்க முதல் 183-வது பக்கவரையிற் காண்க.

சாமயிகாபாவமாவது ஒருசமய (கால) விசேடத்திலுண்டாய் ஒரு சமயவிசேடத்தில் நாசமாகும் அபாவமாம். யாண்டு ஓர்காலத்திற் பதார்த்தமுளதாய் ஓர்காலத்திலிலதாகின்றதோ ஆண்டுப் பதார்த்தசூனியகாலத்தில் அப்பதார்த்தத்தின் சாமயிகாபாவமுண்டாகின்றது. நிலமுதலியவற்றில் கடமுதலியன ஓர்காலத்திருந்து

அந்நியோந்நியாபாவம்—MUTUAL NON-EXISTENCE.

(2) அந்நியோந்நியாபாவம் தாதாத்மியத்தைப் பிரதியோகி (எதிர்மறை)யாக வுடைய அபாவம். எங்ஙனம்? குடம் ஆடையன்று.

இங்ஙனம் அருத்தங்கள் கூறப்பட்டன.

(கு-ரை.) அந்நியோந்நியாபாவம்-பேதம். அஃதாவது ஒன்று மற்றொன்றாகாமை. தாதாத்மியம்-அபேதம்; அஃதாவது சொரூபமாம்; கடத்தினது அபேதம் கடசொரூபமாயிருத்தலறிக. அபேதத்தை நிஷேதிக்கும் அபாவம் அந்நியோந்நியாபாவமாம். இஃதுற்பத்தி நாசமின்றியிருத்தலின் * நித்தியமாம். அத்தியந்தாபாவமும் உற்பத்தி நாசமின்றியிருத்தலின் அத்தியந்தாபாவத்

ஓர்காலத்திலவாகின்றன. ஆண்டுக் கடசூனியகால சம்பந்தமுள்ள நில முதலியவற்றில் கட முதலியவற்றின் சாமயிகாபாவமுண்டு. நிலத்தினின்றுங் கடத்தை வேறிடத்திற்குக் கொண்டுபோமிடத்துக் கடத்தின் அபாவம் நிலத்திலுண்டாகின்றது. அதே நிலத்திற் கடத்தைக் கொண்டுவருமிடத்துக் கடத்தின் அபாவம் நிலத்தில் நாசமாகின்றது. இவ்வாற்றால் சாமயிகாபாவம் உற்பத்தியும் நாசமுமுடையதாம். இவ்வபாவம் மூர்த்தத்திரவியத்திற்கன்றிப் பிறவற்றிற்குண்டாவதில்லை.

* குடம் ஆடையன்றென்புழி ஆடையின் அந்நியோந்நியாபாவத்திற் கதிகரணம் குடமாம், அஃதுற்பத்தி நாசமுடையதாயிருத்தலின் அதன் தர்மங்களு ளொன்றான அந்நியோந்நியாபாவமும் உற்பத்தி நாசமுடையதாம். ஆதலால் அந்நியோந்நியாபாவம் நித்தியத்திருக்குமிடத்து நித்தியமும் அநித்தியத்திருக்குமிடத்து அநித்தியமுமாமென்பர் ஒரு சாரார்.

திற்கு வேறாய் உற்பத்திநாசமின்றிய அபாவம் அந்நியோந்நியாபாவ மென்பதும் அந்நியோந்நியாபாவத்திற் கிலக்கணமாம். அது குடம் ஆடையன்று, ஆன்மா அணுவன்று என்றற் றொடக்கத்து ஞானங்களாற் பிரசித்தமாம். குடம் ஆடையன்று என்புழிக் குடத்தில் ஆடையின் அபேத நிஷேதமு (விலக்கு)ண்டாகின்றமையின் குடத்தில் ஆடையின் அபேதத்தை நிஷேதிப்பது குடத்தில் ஆடையின் * அந்நியோந்நியாபாவமாமெனக.

அன்று என்னு மெதிர்மறைச் சொல்லைப் புணர்த்தாது குடம் ஆடையெனின் கடவுள் ஒருவர் என்றாற்போன்று இவ்விரண்டற்கும் ஒரு பொருளுடைமை (அபேதம்) சம்பவிக்கும். சமான (முதல்) வேற்றுமையுள்ள இரண்டுபெதங்கள் ஒரு பொருளுடையனவா மென்பது நியமம், குடம் ஆடையன்று, ஆடை குடமன்று என்புழி இவ்விரண்டற்குமுள்ள அபேதத்தை நிஷேதிப்பது அன் றென்னும் எதிர்மறைச் சொல்லாம். குடம் ஆடையன்று என் புழிக் குடத்தில் ஆடையின் அபேத நிஷேத முண்டாகின் றமையின் குடம் அநுயோகியும் ஆடை பிரதியோகியுமாம். எதன் கண் (குடத்தில்) அபாவமுண்டாகின்றதோ அது (குடம்) அபாவத்தின் அநுயோகியாம்; எதன் (ஆடையின்) அபாவ முண்டாகின்றதோ அது (ஆடை) அபாவத்தின் பிரதியோகியாம்.

---

* ஓராசிரியர் அத்தியந்தாபாவ மொன்றனையே யங்கீகரித்து ஏனைய அபாவத்தை யங்கீகரியாது விட்டனர். அவரது அபிப்பிராயம் வருமாறு:—

(1) கடத்தின் உற்பத்திக்கு முற்காலசம்பந்தியாகிய கபாலமே கடமுண்டாகுமென்னும் ஞானத்திற்கு விஷயமாம். ஆதலால் கடத்தின் பிராகபாவம் கபாலத்திலுண்டெனல் அப்பிரசித்தமாம். (2) அங்ஙனமே, தண்ட முதலியவற்றாற் பொடிக்கப்

அத்தியந்தாபாவமும் அந்நியோந்நியாபாவமும் - விசேஷாபாவம் சாமாந்நியாபாவம் என்னும் வேறுபாட்டால் இரண்டிரண்டு வகையாம்.

"இப்பூதலத்திற் கருங்குடமிருப்பினும் செங்குடமில்லை, என்னும் பிரதீதியாற் பெறப்பட்ட கருங்குடமுடைய பூதலத்திற் செங்குடத்தின் அத்தியந்தாபாவம் விசேஷ அந்தியந்தாபாவமாம்.

"கருங்குடம் செங்குடமன்று" என்னும் பிரதீதியினுற் பெறப்பட்ட கருங்குடத்திற் செங்குடத்தின் அந்நியோந்நியாபாவம் விசேஷ அந்நியோந்நியாபாவமாம்.

எப்பூதலத்தில் எவ்வாற்றானும் கடமிருப்பதின்றோ அப்பூதலத்தில் "பூதலத்திற் கடமில்லை", "பூதலங் கடமுடையதன்று" என்னும் பிரதீதியுண்டாகின்றது. அந்தப் பிரதீதியாற் பெறப்பட்ட அப்பூதலத்தில் கடத்தின் அத்தியந்தாபாவம் சாமாந்நிய அத்தியந்தாபாவமாம்.

பட்ட அல்லது பிரிவுபட்ட கபாலத்திற்கு வேருகக் கடத்துவம்சாபாவமும் அப்பிரசித்தமாம். (3) அங்ஙனமே, கடசம்பந்தமின்றிய நிலமே கடத்தின் சாமயிகாபாவமாம். கடமிருக்குங்காலத்திற் கடசம்பந்தியான நிலமிருக்கின்றதாகலின் கடசம்பந்தமின்றிய நிலமின்ரும். இவ்வாற்ருல் சாமயிகாபாவம் அதிகரண (இட)த்தினும் வேறன்று. (4) அங்ஙனமே, கடத்தின்கணுள்ள ஆடையின் பேதம் கடத்திலிருக்கும் ஆடையின் அந்நியோந்நியாபாவமெனப் படுகின்றது. அஃது (அந்நியோந்நியாபாவம்) இரண்டனது (கடம் ஆடைகளது) அபேதத்தின் அத்தியந்தாபாவமாம். இரண்டு பதார்த்தங்களினது அபேத அத்தியந்தாபாவத்திற்கு வேருய அந்நியோந்நியாபாவம் அப்பிரசித்தமாமென்பர்.

"பூதலம் கடமன்று" என்னும் பிரதீதியாற் பெறப்பட்ட பூதலத்திற் கடத்தின் அந்நியோந்நியாபாவம் சாமாந்நிய அந்நியோந்நியாபாவமாம்.

விசேஷாபாவத்தினும் சாமாந்நியாபாவம் வேறாகாதெனின், எங்ஙனம் கருங்குடமுடைய பூதலத்தில் செங்குடமின்றென்னும் பிரதீதியுண்டாகின்றதோ அங்ஙனமே கடமின்றென்னும் பிரதீதியுமுண்டாதல் வேண்டும்.

எங்ஙனம் கருங்குடத்தில் கருங்குடம் செங்குடமன்றென்னும் பிரதீதியுண்டாகின்றதோ அங்ஙனமே கருங்குடம் கடமன்றென்னும் பிரதீதியு முண்டாதல்வேண்டும். இவ்வாறாய பிரதீதியுண்டாகாமையின், விசேஷாபாவமும் சாமாந்நியாபாவமும் தம்முள் வேறுபட்டனவேயாம். பிரதீதி - தோற்றம்.

மீண்டும், அவ்வத்தியந்தாபாவமும் அந்நியோந்நியாபாவமும்-வியாசஜ்யத்திருக்கும் தர்மாவச்சின்னபிரதியோகித்தன்மையுடைய அபாவம், அவ்வியாசஜ்யத்திருக்கும் தர்மாவச்சின்ன பிரதியோகித் தன்மையுடைய அபாவம் என்னும் வேறுபாட்டால் இரண்டிரண்டு வகையாம்.

பலவற்றினிருக்குந் தர்மம் வியாசஜ்யத்திருக்கும் தர்மம் எனவும், ஒன்றினிருக்குந் தர்மம் அவ்வியாசஜ்யத்திருக்குந் தர்மமெனவுங் கூறப்படும். இவ்விரண்டனுள், முன்னதற்குதாரணம் இருமை மும்மை முதலிய தர்மமாம்; பின்னதற்குதாரணம் கடத்துவ படத்துவ முதலிய தர்மமாம்.

நிலத்திற் கடமிருப்பினும் "இந்நிலத்திற் கடபடமிரண்டுமில்லை" என்னும் பிரதீதியால் அந்நிலத்திற் கடபடமிரண்டின் அத்தியந்தாபாவம் பெறப்படுகின்றது. அவ்வத்தியந்தாபாவத்தின் பிரதியோகித்தன்மை கேவலம் கடத்திலும் கேவலம் படத்திலு

மில்லை; ஆனாலவ்விரண்டிலுமிருக்கின்றது. இருமைத்தர்மமும் கேவலம் கடத்திலும் கேவலம் படத்திலு மிருப்பதில்லை; ஆனால் அவ்விரண்டிலும் சொரூபசம்பந்தத்தாலிருக்கின்றன. ஆதலால், அந்தப் பிரதியோகித்தன்மை வியாசஜ்யத்திருக்கும் இருமைத்தர்ம அவச்சின்னமாம். ஆகவே, கடமுடைய நிலத்திற் கடபடமிரண்டு மில்லை என்னும் பிரதீதியாற் பெறப்பட்ட கடபடமிரண்டின் அத்தியந்தாபாவம் வியாசஜ்யத்திருக்கும் தர்மாவச்சின்ன பிரதியோகித் தன்மையுடைய அத்தியந்தாபாவமாமென்க.

கடத்தில் "இக்கடம் கடபடமாம் இருவடிவமன்று" என்னும் பிரதீதியாற் கடத்தில் கடபடமிரண்டின் அந்நியோந்நியாபாவம் பெறப்படுகின்றது. அவ்வந்நியோந்நியாபாவம் வியாசஜ்யத்திருக் கும் தர்மாவச்சின்ன பிரதியோகித்தன்மையுடைய அந்நியோந்நியா பாவமாம்.

நிலத்தில் கேவலம் ஒரு கடத்தின் அத்தியந்தாபாவமும், கடத்தில் கேவலம் ஒரு படத்தின் அந்நியோந்நியாபாவமுமிருப்பின் அவ்விரண்டும் கடத்துவபடத்துவவடிவ அவ்வியாசஜ்யத்திருக்குந் தர்மாவச்சின்ன பிரதியோகித்தன்மை யுடையனவாகையால் அவ் வியாசஜ்யத்திருக்கும் தர்மாவச்சின்ன பிரதியோகித்தன்மை யுடை யனவாம். இதனால் கேவலம் கடாபாவத்திலும் கேவலம் படா பாவத்திலும் கடபடமாமிரண்டினபாவம் வேறுபட்டதாமென்ப தினிது விளங்கும். ஏனையவற்றையு மிங்ஙனமே யூகித்துணர்க.

மேலும், கேவலம் விசேஷணாபாவத்திலும், கேவலம் விசே ஷியாபாவத்திலும் விசிஷ்டாபாவம் வேறேயாம்; எங்ஙனம்? தண்டீ புருஷனென்னுமிடத்துத் தண்டம் விசேஷணமும், புருடன் விசேஷியமும், தண்டீ புருடன் விசிட்டமுமாம். ஈண்டுத் தண்டீ புருடனில்லையென்னுமிடத்து இவ்விசிஷ்ட அத்தியந்தாபாவம்

தண்டவடிவ விசேஷணபாவத்தினும் புருஷவடிவ விசேஷியா பாவத்தினும் வேறேயாம்.

இவன் தண்டபுருஷனல்லன் என்னுமிடத்து இவ்விசிட்ட அந்நியோந்நியாபாவம் தண்டவடிவ விசேஷணபாவத்தினும் புருஷ வடிவ விசேஷியாபாவத்தினும் வேறேயாம்.

மீண்டும், அத்தியந்தாபாவமும் அந்நியோந்நியாபாவமும் பிரதி யோகித்தன்மை அவச்சேதக சம்பந்தத்தின் வேறுபாட்டால் பல வாம். சையோகசம்பந்தத்தாற் குடமுடைய நிலத்தில் சமவாயசம் பந்தத்தாற் குடமில்லையென்னும் பிரதீதி யுண்டாகின்றது. அந்தப் பிரதீதியால்அந்நிலத்தில்அக்கடத்தின் சமவாயசம்பந்தாவச்சின்ன (சமவாயசம்பந்தத்தோடுகூடிய) பிரதியோகித்தன்மையுடைய அத் தியந்தாபாவம் பெறப்படுகின்றது. சமவாயசம்பந்தத்தாற் குட முடைய கபாலங்களிற் சையோகசம்பந்தத்தாற் கபாலங்களிற் குட மில்லை என்னும் பிரதீதியுண்டாகின்றது. அந்தப்பிரதீதியால் அக் கபாலங்களிற் கடத்தின் சையோகசம்பந்தாவச்சின்ன பிரதியோகித் தன்மையுடைய அத்தியந்தாபாவம் பெறப்படுகின்றது. இவ்விரண் டத்தியந்தாபாவமும் தம்முள் வேறுபட்டனவேயாம். அந்நியோந் நியாபாவமு மிங்ஙனம் வருதலை யுய்த்துணர்க.

குருமதத்தினர் (பிரபாகரர்) அபாவங்களனைத்தும் அவ்வவ் வபாவங்களின் * அதிகரணவடிவமேயன்றி வேறு பதார்த்தமன்

---

* வேதாந்திகள் - நிலமுதலியவற்றுண்டாகும் கடமுதலிய வற்றினபாவம் அதிகரணவடிவமன்றாம். ஆனல், அவ்வபாவம் நிலமுதலிய அதிகரணங்களினும் வேறாம். எவ்வத்து (அரவு) எவ் வதிஷ்டானத்தி(கயிற்றி)ற் கற்பிதமாகின்றதோ அக்கற்பிதவஸ்து வின் அபாவம் அவ்வதிஷ்டானத்தினும் வேறன்று; அவ்வதிஷ் டான வடிவமேயாம் என்பர்.

றென்பர். அபாவங்களை யதிகாரணவடிவமாக வொப்பின் 'இப் பூதலங் கடாபாவமுடையது' என்றற்ளுடக்கத்து ஆதார ஆதேய பாவவிஷய ஞானமுண்டாகாமைவேண்டும்; உண்டாதலின், அபாவம் அதிகாரண சொரூபமன்றும். அபாவத்திற்கனந்த அதிகரண வடிவங் கற்பித்தலைநோக்க அவ்வதிகாணத்தினும் வேறாக ஓர் அபாவங்கற்பித்தல் அத்தியந்தம் இலாகவமாமெனக.

(ஆ.) அற்றாயின், ஞானத்தினும் பிரஹ்மத்தினும் வேறான பொருளில்லையெனின்,

(கு-ரை.) (1) ஞானத்தினும் வேறான பொருளில்லையென்பவர் பௌத்தருள் ஒரு சாரரான விஞ்ஞானவாதிகள் (யோகாசாரர்). அவர் எப்பொருளும் ஞானத்திற்கு வேறாகவில்லை; ஞானமே தத்துவம்; அது க்ஷணிகமா யிருக்கின்றதென்பர். இது பற்றி இப்புத்தகத்தின் 86-வது பக்கத்திற் காண்க.

(2) பிரஹ்மத்தினும் வேறான பொருளில்லை யென்பவர் வேதாந்திகள். அவர் கயிற்றின்கணரவுபோன்று பிரஹ்மத்தின்கண் சேதனசேதனவடிவ வுலகு கற்பிதமாயிருக்கின்றது. எங்ஙனம் உண்மையில் அரவு கயிற்றைத்தவிரவின்றே, அங்ஙனமே * உலகு பிரஹ்மத்தைத்தவிர வின்றென்பர்.

---

* மகோபநிஷத் 6-வது அத்தியாயத்தில் "இந்தச் சகலப் பிரபஞ்சமும் பிரஹ்மமே; விஸ்தாரமாயுள்ள இந்தப் பிரபஞ்சமியாவும் ஆத்மாவே." என்றும், யோகசிகோபநிஷத் 4-வது அத்தியாயத்தில் "பிரபஞ்சத்திற் குபாதானகாரணம் பிரஹ்மத்தைத் தவிர வேறில்லை. ஆதலின், இவ்வெல்லாப் பிரபஞ்சமும் பிரஹ்மமாகவே இருக்கின்றன; வேறே யில்லை" என்றும், திருமந்திரம் "தானே திசையொடு தேவரு மாய்நிற்கும், தானே யுடலுயிர் தத்துவ மாய்நிற்கும், தானே கடன்மலை யாதியு மாய்நிற்கும், தானே யுலகிற் றலைவனு மாமே" என்றும் கூறுவதறிக.

(ச.) அங்ஙனமன்று; அருத்தங்கள் காட்சி முத லியவற்றான் மறைக்கப்படாமையின்.

(கு-ரை.) ஞானத்தினும் பிரஹ்மத்தினும் வேறாகத் திரவிய முதலியன வில்லையாயின் இது கடம் இது படம் என்றற் றொடக் கத்து ஞானம் நிகழாமல் இது ஞானம் அல்லது இது பிரஹ் மம் என்னும் ஞானம் நிகழவேண்டும். ஞானத்திற்கே ஞானமும் பிரஹ்மத்திற்கே பிரஹ்மமும் விஷயமாயின் ஆத்மாசிரய (தன் னைப் பற்றுதலென்னும்) தோஷமாம். யாண்டும் வினைமுதல் கருவியென்றற்றொடக்கத்தன தம்முள் வேறுபட்டே யிருத்தலின் திரவிய முதலியன ஞானத்தினும் வேறன்று, பிரஹ்மத்தினும் வேறன்றெனல் பொருந்தாது. குலாலனும் குடமும் ஒன்றாயிருப் பின் ஞானமும் விஷயமும், அல்லது பிரஹ்மமும் விஷயமும் ஒன்றாமெனல் அமையும். திரவிய முதலியன பிரத்தியட்சமுதலிய பிரமாணங்கட்கு வேறுபட்டே அறியப்படுவனவா யிருத்தலின் தம்முள் வேறுபாடுடைய பதார்த்தங்களை ஒரே பதார்த்தமா மென வியையாது. அருத்தங்கள் ஞானத்தினும் பிரஹ்மத்தி னும் வேறாகாவாயின் காட்சிமுதலியவற்றான் மறைபடல் வேண் டும் (காட்சி முதலியவற்றிற்கு விஷயமாதல் கூடாது). காட்சி முதலியவற்றான் மறைக்கப்படாமையின் (காட்சி முதலியவற் றிற்கு விஷயமாதலின்) அங்ஙன மாகாதென்றவாறு.

5. புத்தி—UNDERSTANDING.

110. புத்தி, ஞானம், உபலப்தி, பிரத்தியயமென்பன முதலிய பரியாயச் சொற்களால் யாது கூறப்படும் அது புத்தி.

புத்தி - பொருள்விளக்கம். *அஃது அநுபவமும் ஸ்மரணமுமெனச் சுருக்கமாய் வகையானிரண்டு.

---

* i. ஒரு சாரார் ஞானம்-ஸ்மிருதி, மதி, புத்தி, பிரஞ்ஞை, பிரதிபையென ஐவகைத்தாமென்பர். (1) கழிந்த விஷயத்தின் ஞானம் ஸ்மிருதி, (2) வரும்விஷயத்தின் ஞானம் மதி, (3) நிகழுகின்ற விஷயத்தின் ஞானம் புத்தி, (4) முக்காலவிஷயஞானம் பிரஞ்ஞை, (5) பிரஞ்ஞையினால் நவநவமாய் நிகழும் ஞானம் பிரதிபையாம்.

ii. தார்க்கிகர் அஞ்ஞானமென்பது வேறு பதார்த்தமன்று; ஆலோகத்தின் அபாவம் இருளாயிருத்தல்போன்று ஞானத்தின் அபாவம் அஞ்ஞானமாம். அது பிரத்தியட்சமா யறியப்படுகின்ற காரியங்களின் காரணத்தை யறியாமை, அல்லது நாசத்தின் காரணத்தை யறியாமை, அல்லது பிறவற்றை யறியாமையா மென்பர்.

iii. உலககாரணம்அஞ்ஞானமாமென்பவர் அநுபாவபதார்த்தம். அதர்மம் என்பதன் அகரம் விரோதப் பொருளுடைத்தாயிருத்தல்போன்று அஞ்ஞானமென்பதன் அகரமும் விரோதப்பொருளுடையதாம். அதர்மம் அபாவபதார்த்த மாகாமைபோன்று அஞ்ஞானமும் அபாவபதார்த்தமன்றாம். இதுவே மாயையெனப்படும். அபாவஞானமுண்டாதற்குத்தர்மிஞானமும்பிரதியோகிஞானமும் காரணமாம். அஞ்ஞானத்தை ஞானுபாவமென்று கூறுமிடத்து ஞானுபாவஞானத்தைக் குறித்து ஞானமாகிய பிரதியோகியின் ஞானமும் தர்மி (ஆத்மா) ஆகிய அதிகரண (இட)த்தின் ஞானமும் காரணமாம். பிரதியோகி ஞானமும் தர்மிஞானமுமுள்ளபோது அவற்றின் அபாவஞானம் நிகழாதென்பது நியமம். எஞ்ஞான்றும் பிரதியோகியாகியஞானமும் தர்மியாகியஆத்மாவின்ஞானமுமிருத்

(கு-ரை.) பிரவிர்த்தி, நிவிர்த்தி, ஆகாரம், விகாரம் என்றற் றொடக்கத்துச் சர்வவியவகாரத்திற்கு மேதுவாய ஞானம் புத்தி. எவ்வகைத்தாய ஞானமும் அனுபவம் ஸ்மிருதியென்னு மிரண்டனுள் ஒன்ருயடங்கலின் 'சுருக்கமாய் வகையானிரண்டு' என்று கூறப்பட்டது.

i. அநுபவம்—EXPERIENCE.

அநுபவம் - யதார்த்தமும் அயதார்த்தமுமென இருவகை.

(கு-ரை.) அஃதுள்ளதன்கண் அது விசேடணமாக நிகழும் அனுபவம் யதார்த்தஅநுபவமாம்; யதார்த்தம் - உண்மை. அஃதில்லதன்கண் அது விசேடணமாக நிகழும் அனுபவம் அயதார்த்த அநுபவமாம்; அயதார்த்தம் - இன்மை.

(1) தண்ட புருஷனென்றறியுமிடத்து அது தண்டமுள்ள புருஷனிடத்துத் தண்டம் விசேடணமாக நிகழும் அனுபவமாயிருத்தலின் யதார்த்த அநுபவமாம்.

(2) கயிற்றில் பிராந்தியால் இஃதரவென்றறியுமிடத்து அஃது அரவின்றிய கயிற்றின்கண் அரவு விசேடணமாக நிகழும் அநுபவமாயிருத்தலின் அயதார்த்த அநுபவமாம்.

யதார்த்தம்.

(1) அவற்றுள், யதார்த்தமாவது அர்த்த (விஷய)

தலின் அவற்றின் அபாவம் ஒருபோதும் வருதற்கிடனின்று. ஞானமுள்ளபோது அதன் அபாவமிருக்கின்றதெனல் எனக்கு நாக்கில்லையென்பது போலும் வியாகாதமாம் என்பர்.

அவிசம்வாதி. அது காட்சி முதலிய பிரமாணங்க ளாற் றோன்றுவது. எங்ஙனம்?

(i.) (பித்தம், படலம் முதலிய) குற்றமில்லாத கட் புல முதலியவற்றாற் குடமுதலிய ஞானம்.

(ii.) புகையை இலிங்கமாகவுடைய தீ ஞானம்.

(iii.) ஆ ஒப்புமை காண்டலால் ஆமாவென்னுஞ் சத்தவாச்சிய (சொற்பொருள்) ஞானம்.

(iv.) "ஜோதிஷ்டோமத்தால் துறக்கம் வேண்டி யான் வேட்க" என்பது முதலிய வாக்கியத்தால் ஜோதிஷ்டோமத்திற்குத் துறக்க (சுவர்க்க) சாத நத்துவ ஞானம்.

(கு-ரை.) அர்த்தஅவிசம்வாதி - விஷயத்தின் உண்மை யனு பவம். அவிசம்வாதி சம்வாதியென்பன ஒருபொருட்கிளவி. பய னில் முயற்சியைப் பிறப்பிக்கும் ஞானம் விசம்வாதியா (அய தார்த்த அனுபவமா)ம்; அதனின் வேறாகிய ஞானம் அவிசம்வாதி; அஃதாவது பயனுடைப் பிரவிர்த்தியைப் பிறப்பிக்கும் ஞானமாம். பிரத்தியட்சம் பரோட்சமென்னு மிரண்டனுள் அனுமிதி முதலிய மூன்றும் பரோட்சமாம். பரோட்சம் - அப்பிரத்தியட்சம்.

அயதரார்த்தம்.

(2.) அயதார்த்தமாவது அருத்தத்தைநீங்கினது; அப் பிரமாணத்தா (பிரமாணப்போலியா)ற் றோன்றுவது. அது சம்சயம், தருக்கம், விபர்யயமென மூவகை. சம்சய தருக்கங்கள் மேற்கூறுதும்.

(கு-ரை.) அயதார்த்த அநுபவத்தின் விஷயம் தெளிந்த விடத்து ஒழிந்துபோவதா யிருத்தலின் 'அயதார்த்தமாவது அருத் தத்தை நீங்கினது' என்று கூறப்பட்டது.

விபர்யயம்.

விபர்யயம் அஃதில்லதன்கண் அதாகவர்ச்சி; பிரமமெ (பிராந்தியெ)ன்னுமளவு. எங்ஙனம்?

முன்னர்த்தோன்றும் வெள்ளியல்லாத இப்பி முத லியவற்றின்கண் இது வெள்ளியென்று கிரகித்தல்.

(கு-ரை.) விபர்யயம் - விபரீதநிச்சயம். இஃதந்நியதாக் கியாதி யெனப்படும். அந்நியதா-வேறுபிரகாரமாக, கியாதி-தோன் றுதல். விபர்யயம், பிரமம், அத்தியாசம், திரிவு என்பன ஒரு பொருட்கிளவி. முன்னர்த்தோன்றும் வெள்ளியல்லாத இப்பி (முத்துச்சிப்பி) தோஷவலியால் வெள்ளியாகத் தோன்றலால் அதன்கண் இது வெள்ளியென்று கிரகிக்கப்படுகின்றது. ஈண்டு இப்பி வேறுபிரகாரமாக அஃதாவது வெள்ளியாகத் தோன்றுதல் காண்க. 'முதலியவற்றின்கண்' என்றமையின் ஈயம் துத்தநாக முதலியவற்றையுங் கொள்க. இக்கியாதிவாதத்தில் இருவகை மத முண்டு. பிராசீனர் தோஷவலியால் ஒரிடத்துள்ள பதார்த்தம் வேறிடத்திற்றோன்றுவது அந்நியதாக்கியாதியா மென்பர். நவீனர் தோஷவலியால் ஒருபொருள் வேறுவடிவமாகத் தோன்றுதல் * அந்நியதாக்கியாதியா மென்பர்.

---

* ஈண்டுக் கூறிய அந்நியதாக்கியாதி வாதமேயன்றி அசத்கியாதி, ஆத்மக்கியாதி, அக்கியாதி, சத்கியாதி, அநிர்வசநீயக்கியாதி என ஐந்து கியாதிவாதங்களுமுண்டு. அவற்றுள், அசத்கியாதியை அங்கீகரித்தவர் பௌத்தருள் ஒரு சாராராகிய மாத்தியமிகர்;

இவர் சூனியவாதியெனப்படுவர். ஆத்மக்கியாதியை அங்கீகரித்தவர் பௌத்தருள் ஒரு சாராராகிய யோகாசாரர்; இவர் க்ஷணிகவிஞ்ஞானவாதி யெனப்படுவர். அக்கியாதியை அங்கீகரித்தவர் சாங்கியப் பிரபாகரர்கள். சத்கியாதியை அங்கீகரித்தவர் விசிஷ்டாத்வைதி முதலியோர். அநிர்வசநீயக் கியாதியை அங்கீகரித்தவர் வேதாந்திகள்.

(1) ஆவணத்தேனும், வேறிடத்தேனுமுள்ள அசத்தாகிய வெள்ளியே இப்பியின்கண் தோன்றுகின்றதென்பர் அசத்கியாதிவாதிகள்.

(2) ஆவணத்தேனும்,வேறிடத்தேனும் எவ்வெள்ளிதோன்றுகின்றதோ அது புத்திக்குப் புறம்பாகவில்லை; ஆனால், க்ஷணிகவிஞ்ஞானவடிவ புத்தியே வெள்ளிவடிவமாகத் தோன்றுகின்றதென்பர் ஆத்மக்கியாதிவாதிகள்.

(3) இப்பியின்கண் இது வெள்ளி என இரண்டு ஞானங்களுண்டாகின்றன. அவற்றுள், இதுவென்பது இப்பியின் இதுவெனும் அம்சத்தின் பிரத்தியக்ஷஞானமாம்; வெள்ளியென்பது முன்கண்ட வெள்ளியின் ஸ்மிருதி ஞானமாம். இவ்விரண்டு ஞானமும் தோஷவலியால் இதுகடமென்றாற்போன்று ஒரு வடிவமாகத் தோன்றுகின்றனவென்பர் அக்கியாதிவாதிகள்.

(4) இப்பியின் அவயவங்களோடு வெள்ளியின் அவயவங்களும் எப்போதுமிருக்கின்றன. இப்பியின் அவயவங்கள்போல வெள்ளியின் அவயவங்களும் யதார்த்தமாம். தோஷத்தோடு கூடிய நேத்திரசம்பந்தத்தால் வெள்ளியவயவங்களினின்றும் யதார்த்த வெள்ளியுண்டாகின்றதென்பர் சத்கியாதிவாதிகள்.

(5) இப்பியின்கண் அவித்தை முதலிய தோஷவலியால் அநிர்வசநீயவெள்ளியும் அதன் ஞானமும் உண்டாகின்றனவென்பர்

(1) ஆவணமுதலியவிடத்து உண்மையான வெள்ளியிருக்கின்றது. அது நேத்திரத்தினுற் பார்க்கப்படுகின்றது. நேத்திரதோஷவலியினுல் அவ்வெள்ளி சமீபித்தெதிரிலுள்ள இப்பியின்கண் தோன்றுகிறது. உண்மையாய வெள்ளிக்கும் நேத்திரத்திற்கும் நடுவே சுவர் முதலிய மறைவுகளிருந்தபோதும் தோஷத்தோடு கூடிய நேத்திரத்தினுல் மறைபட்ட வெள்ளி பார்க்கப்படுகின்றதென்பர் பிராசீனர். ஆவணம் - வர்த்தகஞ்செய்யுமிடம்.

(2) தோஷசகித நேத்திரத்தினுல் ஆவணத்துள்ள வெள்ளி பார்க்கப்படுமாயின் நடுவேயுள்ள வேறு பதார்த்தங்களும் பார்க்கப்படல்வேண்டும். மறைவிலுள்ள பதார்த்தம் நேத்திரத்தினு லறியப்படாமையின் * தோஷசகித நேத்திரத்திற்கு இப்பி தனது சொரூபமாக விளங்காது வெள்ளிவடிவமாக விளங்குகின்றதென்பர் நவீனர். இந்நூலாசிரியர் கூற்று நவீனமதத்தை யனுசரித்ததாம்.

ii. ஸ்மரணம்—MEMORY.

ஸ்மரணமும் யதார்த்தமும் அயதார்த்தமுமென இருவகை. அவ்விருவகையும் நனவில்.

கனவில் எல்லா ஞானமும் அயதார்த்தஸ்மரணம்;

அநிர்வசநீயக்கியாதிவாதிகள். சத்தினும் அசத்தினும் வேருயது அநிர்வசநீயமெனப்படும். அநிர்வசநீயமெனினும், மித்தையெனினு மொக்கும்.

* ஞேயானுசாரமாக ஞானமுண்டாமென்பது நியமம். ஞேய (விஷய)ம் இப்பியும், ஞானம் வெள்ளியினதுமென்பது முற்றும் பொருந்தாதென்பர் பிறர்.

குற்றவசத்தால் அதுவென்புழி இதுவென்பது தோன்றலின்.

(கு-ரை.) யதார்த்த அனுபவத்தின் காரியமாய சம்ஸ்காரத்தினுல் தோன்றும் ஞானம் யதார்த்தஸ்மரணமாம்; அயதார்த்த அனுபவத்தின் காரியமாய சம்ஸ்காரத்தினுல் தோன்றும் ஞானம் அயதார்த்த ஸ்மரணமாம். ஸ்மரணம், ஸ்மிருதி, நினைவென்பன ஒருபொருட்கிளவி. பூர்வகாலத்துடன் சம்பந்தமுடைய யதார்த்த அல்லது அயதார்த்த பதார்த்தங்களின் ஞானம் ஸ்மிருதியாமென்பது அவ்விரண்டற்கும் பொதுவிலக்கணமாம். நனவு-சாக்கிராவஸ்தை. இதில் யதார்த்தஸ்மரணம் அயதார்த்தஸ்மரணமென்னு மிரண்டுமுண்டு. கனவில் எல்லா ஞானமும் அயதார்த்த ஸ்மரணமாம்; கனவு-சொப்பனுவஸ்தை. நனவில் எதன் அநுபவ முண்டாகின்றதோ அதன் ஸ்மரணம் கனவில் உண்டாகின்றது; ஆண்டனுபவ முண்டாவதில்லை. ஆயினும் நித்திராதோஷவசத்தால் கனவில் அனுபவமல்லாத ஸ்மரணத்தின்கண் இஃதனுபவமென்ப துண்டாகின்றது. அதனுற்றான் கனவில் இது குடம் இது படம் என்றற்றொடக்கத்து ஞானமுண்டாகின்றதென்க. கனவில் ஸ்மரணம் நித்திராதோஷவசத்தால் தன் சொரூபத்துடன் விளங்காது அனுபவரூபமாகத் தோன்றலின் இஃதந்நியதாக்கியாதியா மென்க. சொப்பனஞானமுற்றும் மாநசவிபர்யயமா (மாநதக்காட்சியின் திரிபா) யிருத்தலின் 'கனவில் எல்லாஞானமும் அயதார்த்தஸ்மரணம்' என்று கூறப்பட்டது. "குற்றவசத்தால் அதுவென்புழி இதுவென்பது தோன்றலின்' என்னும் எதுவாக்கியத்திற்கு நித்திராதோஷவசத்தால் ஸ்மிருதியென்பதில் அனுபவமென்பது தோன்றுதலின் என்று பொருள் கொள்க. "கனவு முன்னரனுபவித்த பதார்த்தஸ்மரணத்தாலும்,

அதிர்ஷ்டத்தாலும்,(பித்தமுதலியவற்ேறுடுகூடிய) தாதுதோஷத் தாலு முண்டாகின்றது" என்று தர்க்காமிர்தங் கூறுகின்றது.

எல்லா ஞானமும் நிராகாரமே. உண்டாகும் ஞானத் தில் அருத்தத்தால் (திரவிய முதலியவற்ருல்) தனது (ஞானத்தினது) ஆகாரம் தோன்றுமென்பதன்று; சாகாரஞானவாதம் நிராகரித்தலின்.

(கு-ரை.) சாகாரஞானவாதத்தை யங்கீகரித்தவர் பௌத்த ருள் ஒரு சாரரான யோகாசாரர். அவரது மதம் ஒருவாறு இந் நூலின் 86-வது பக்கத்திற் கூறப்பட்டுளது. யோகாசாரர் ஞான மொன்றேயுளது; அது க்ஷணிகம். அது சாகாரம் நிராகாரமென விருவகைத்து. அவற்றுள், கடபடாதிவடிவமாய் அகத்தேதோன் றும் ஞானம் சாகாரமாம்; பந்தம் நீங்கியவிடத்து அங்ஙனம் வேறுபாடின்றித் தொடர்ச்சியாய் நிகழும் ஞானம் நிராகாரமாம். அகத்தே தோன்றும் கடபடாதிவடிவ சாகாரஞானம் அநாதி வாசனைவயத்தால் புறத்தே இது கடம் இது படம் என்றற் ெறுடக்கத்தனவாய்க் காணப்படுவதுபோலத் தோன்றுகின்றது. அதனுல் ஞானத்திணுகாரந் தோன்றுகிறதென்பர். அதனை அங்கீ கரியாதவர் ஆத்மாவிற்கும் மனத்திற்கும் சையோகமுண்டாய விடத்து நானென்று ஞானமுண்டாகின்றது, இந்திரியவிஷய சம்பந்தத்தால் கடஞானம் படஞானம் என்றற் றொடக்கத்து ஞானங்களுண்டாகின்றன. ஞானமே விஷயாகாரமாய்த் தோன் றுவதில்லை. ஞேயா (விஷயா)னுசாரமாக ஞானமுண்டாகின்ற தென்பது நியமமாதலின் ஞானம் ஞேயாகாரமாகத் தோன்று கின்றதென்பது பொருந்தாது. கடமின்றியே கடஞான முண் டாயின் அவர் வார்த்தை பொருந்துமென்பர். இவர் ஞானம் ஞேயமாகப் பரிணமிக்கின்றதில்லை; ஞானம் வேறு, ஞேயம் வேறு

என்று கொள்ளுதலின் நிராகாரஞானவாதியாவர். நிராகாரஞானம்-ஆகாரமாகாதஞானம். ஆகாரம்-விஷயமாகப் பரிணமித்தல்.

> ஆதலினுனே, ஞானுகாரத்தால் அருத்தாநுமானமும் தள்ளப்பட்டது; குடமுதலியன காட்சியாதலின்.

(கு-ரை.) பௌத்தருள் ஒரு பகுதியாராகிய சௌத்திராந்திகர் முற்கூறிய சாகாரஞானவாதத்தை யங்கீகரித்துக் கடவடிவிற்ருய ஞானம் உணர்ந்தபின்னன்றிக் கடமுணர்தல்கூடாமையின் க்ஷணத்திற்ருேன்றி யழியுங் கடமுதலாயின அங்ஙனமுணருங்காறும் நிலைபெறுதலின்மையின், கடமுதலாயின தத்தம் வடிவினை ஞானத்தின்கண்வைத் தழிந்தபின்னர் ஞானத்திற் பொருந்திய வடிவாலே அங்ஙனம் அழிந்துபோய கடமுதலாயின அனுமானத்தா லறியப்படும் என்பர். கடமுதலியன பிரத்தியட்சப்பிரமாணத்தா லறியப்படுதலின் அவை அநுமானப் பிரமாணத்தா லறியப்படுகின்றனவென்பது பொருந்தாதென்க. மேலும், புறப்பொருள் முற்றும் அநுமானத்தா லறியப்படுகின்றனவென்பது பொருந்தாது; திருஷ்டாந்தங்கூறி முடித்தற்கிடம் பெருமையின். ஆதலின், அஃதநுபசங்காரியாமென்க.

> எல்லா ஞானமும் அருத்தத்தாற் கூறப் (நிரூபிக்கப்)படுவன; அது (ஞானம்) பொருளோடு கூடியே மனத்தால் அறியப்படுதலின் நான் குடஞானவான் என்றிவ்வளவுந் தோன்றும்; ஞானமாத்திரவான் நானென்று தோன்ருது.

(கு-ரை.) விஷயமும் ஞானமும் தம்முள் வேறுபட்டனவாம். ஞானமெல்லாம் விஷயங்களால் நிரூபிக்கப்படுவனவாம்.

மனவிந்திரியத்திற்கு ஞானம் பிரத்தியட்சமாகுமிடத்து அது தான்மாத்திரம் பிரத்தியட்சமாவதில்லை; ஆனால் அது விஷயத்தோடு கூடியே பிரத்தியட்சமாகின்றது. அங்ஙனமாவதாற்றான் யான் குடஞானமுடையேன், படஞானமுடையே னென்றற்றொடக்கத்துணர்ச்சி யுண்டாகின்றது. குடஞானமுடையேன் படஞானமுடையேனென்னுமிடத்து ஞானம் குடத்தாலும் படத்தாலும் நிரூபிக்கப்படுவதா யிருத்தலறிக. ஞானமாத்திரம் பிரத்தியட்சமாமென்னுமிடத்து யான் ஞானமாத்திரமுடையேனென்றுணர்ச்சியுண்டாதல் வேண்டும். அங்ஙனமுண்டாதலின்மையின் ஞானமாத்திரம் பிரத்தியட்சமாமென்பது பொருந்தாதென்க. இதுவும், விஞ்ஞானமே யுண்டு; அதற்கு வேறாக விஷயமில்லையென்னும் பௌத்தமதகண்டனமா மென்க.

6. மனம்—MIND.

111. அகவிந்திரியம் *மனம்; அதுவும் கூறினும்.

7. பிரவிருத்தி—ACTIVITY.

112. பிரவிருத்தி-தர்மாதர்ம சொரூபம்: வாக்காதி கிரியைகள்; அது சக (உலக) வியவகாரத்தின் காரணமாதலின்.

(கு-ரை.) பிரவிருத்தி-பிராணிகளது மனோவாக்குக் காயங்களின் கிரியைக்கேது. பிராணிகளது கிரியைக்கேது தருமா தருமமா யிருத்தலின் அவை பிரவிருத்தியாமென்ப தறிவித்தற்பொருட்டுப் 'பிரவிருத்தி தர்மாதர்ம சொரூபம்' என்று கூறப்

---

* மனம் காரியவடிவமென்பவர் மனம் பஞ்சபூதங்களை உபாதானமாகவுடையது; பஞ்சபூதங்களின் குணத்தை யறிதலின் என்றநுமானங் கூறுவர்.

பட்டது. தருமாதருமவடிவப் பிரவிருத்தி வாக்கு முதலிய கிரியைகளா லுண்டாவதாயும் பின் அவற்றிற் கேதுவாயு மிருத்தலின் உபசாரவழக்கால் அபேதப்படுத்தி '(பிரவிருத்தி) வாக்காதி கிரியைகள்' என்று கூறப்பட்டது. பிரவிருத்தியும் வாக்காதிக் கிரியைகளும் முன்பின்னோக்கம்பற்றிப் பரஸ்பரம் காரணமும் காரியமுமாம். இங்ஙனம் வருவது காரணம் காரியமும், காரியம் காரணமுமாய உபசாரவழக்காம். சுபகர்மம் (வேள்வி முதலிய நல்வினை) தனக்கடுத்த கணத்தில் தருமத்தை (சுபவாசனையை)யும், அசுபகருமம் (செய்ந்நன்றிகோறல் முதலிய தீவினை) தனக்கடுத்த கணத்தில் அதருமத்தை (அசுபவாசனையை)யும் உண்டுபண்ணுகின்றன. அவை ஆன்மாவிற்றங்கிப் பின்னுண்டாகுங் கிரியைகட்கேதுவா யிருத்தலின் பிரவிருத்தியென்பது தர்மாதர்ம சொரூபமாமென்பது நன்கு விளங்கும். தருமாதருமம் பிராணிகளின் சகல வியவகாரங்கட்குங் காரணமா யிருத்தலின் 'அது சகவியவகாரத்தின் காரணமாதலின்' என்று கூறப்பட்டது. பிரவிருத்தி - வாக்காரம்பம் (வசனித்தற்கனுகூலமாயது), புத்தியாரம்பம் (தியான முதலியவற்றிற்கனுகூலமாயது), சரீராரம்பம் (உடற்சேஷ்டைக்கநுகூலமாயது) என மூவகைத்தாம்.

8. தோடம்—FAULT.

113. தோடம்: இராகத் துவேஷ மோகங்கள்.

இராகம்-இச்சை; துவேஷம்-குரோதம்; மோகம்-பொய்ம்மையறிவு; விபர்யயமென்னுமளவு.

(கு-ரை.) தோஷம்-குற்றம். அது விருப்பு, வெறுப்பு, மயக்கமாம். சரீர முதலியவனவற்றை ஆன்மாவென மயங்குதலும் பிறவும் மோகமாம். அது விபர்யயம், சம்சயம், தருக்கம், மானம்

(தன்னிடத்தில்லாத குணங்களைக் கற்பித்துக்கொண் டுயர்வாகக் கருதும் புத்தி), பிரமாதம் (அவசியம் செய்யத்தக்க காரியத்தைச் செய்யாது மறந்துவிடுதல்), பயம் (அநிஷ்டஞ் செய்பவன் யாதாயினுமோர் காரணம் வாய்த்தகாலத்து அதனை விடுதற்குத் தகுதியின்மையை யுணர்தல்), சோகம் (இஷ்டவஸ்து பிரிந்தகாலத்து அது மீண்டும் கிடைத்தற்குரிய தாகாமையை யுணர்தல்) என்னும் வேறுபாட்டால் எழ்வகைத்தாம்.

9. பிரேத்தியபாவம்—TRANSMIGRATION.

114. பிரேத்தியபாவம் மீண்டும் பிறத்தல்; அஃது ஆன்மா பூர்வவுடம்பைவிட்டுப் புதிய உடம்போடு கூடுதல்.

(கு-ரை.) பிரேத்தியபாவம் - ஆன்மாவிற்கு இறந்தபினுண்டாம் பிறப்பு. இறத்தலாவது கன்மவயத்தாற் சம்பவித்த உடம்பை விட்டு ஆன்மா நீங்குதல்; பிறத்தலாவது அது கன்மவயத்தாற் சம்பவிக்கும் புதிய உடம்போடு கூடுதல். ஆன்மா பூர்வவுடம்பை விட்டு நீங்குங்கால் * அடுத்த வினைக்கேற்றவாறு தான் விரும்பிய படி புதிய உடம்போடு கூடுமென்க. சரீரப்பிராணனது அந்திய (ஈற்றுச்)சையோகத்தின் நாசம் இறப்பும், சரீரப்பிராணனது ஆதி (முதற்) சையோகம் பிறப்புமாம். ஆன்மா வியாபகமா யிருத்தலின் அஃதெங்ஙனம் பூர்வவுடம்பைவிட்டுப் புதியவுடம்போடு

---

* i. "இவ்வுடம்பு போனபிறகு (சீவன்) எப்பிறப்பை யடையப்போகிறானோ அதனை மனிதர்களறியமாட்டார்கள்; (ஆனால்) தேக நீங்குஞ்சமயத்திலே மனதி லெதையெதைப் பாவிக்கின்றானோ அதுவதுவாகவே சீவனாகின்றான். இதுதான் பிறப்பிற்குக் காரணம்" என்று யோகசிகோபநிஷத் முதலாவது அத்தியாயத்திற் கூறுகின்றது,

கூடுமெனின், ஆகாயத்துடன் குடங் கூடிப் பிரிவது போன்று ஆன்மாவுடன் உடம்பு (வினைவயத்தாற்) கூடிப் பிரிவதே பிறப் பிறப்பென்று கூறப்படுகின்றமையின் அது கூடுமென்க. ஆன்மா வென்றதீண்டு ஜீவான்மாவை.

10. பலம்—ENJOYMENT.

115. பலம் போகம்; சுகதுக்க அநுபவம்.

(கு-ரை.) சுகதுக்கஅநுபவம்-சுகதுக்கங்களின்பிரத்தியட்சம்.

---

ii. ஆன்மா மீண்டும் பிறப்பதுபற்றிச் சாந்தோக்கியோபநிடதம் 5-வது கண்டத்தில் "(சீவர்கள்) அந்தச் சந்திரமண்டலத்திற் புண்ணியம் நசிக்கும்வரை வாசஞ்செய்து பின்னரிப் பிரபஞ்சத்தை நோக்கி மறுபடியும் போனவழியை யனுசரித்துத் திரும்பிவருகிறார்கள். (அங்ஙனம் வருமிடத்துச் சீவன்) முதலில் ஆகாசமாகிறான்; அதினின்றும் வாயுவாகின்றான்; அதினின்றும் புகையாகின்றான்; அதினின்றும் சிறியமேகமாகின்றான்; அதினின்றும் பெரியமேகமாகின்றான்; இங்ஙனமானபிறகு ஜலவருஷமாகின்றான; அப்பாலிவ்வுலகத்தில் நெல், கோதுமை, கொடி, மரம், எள், உழுந்து என்றற் றொடக்கத்தனவற்றுள் யாதாவதொன்றாகின்றான்; அதினின்றும் வெளிப்படமுடியா திருக்கிறான். (இங்ஙனமிருக்கையில்) யாரேனும் அதனைப் புசித்தால் அதனால் சுக்கிலமாய் அது ஸ்திரியினிடத்துப் பிரவேசிப்பதனால் மறுபடியும் பிறக்கிறான். (மேற்கூறிய) அவர்களில் புண்ணியமுடையவர்களியாரோ அவர்கள் விரைவில் குரோத முதலிய தோஷமின்றிய பிராமணப் பிறப்பையாவது, க்ஷத்திரியப்பிறப்பையாவது, வைசியப்பிறப்பையாவது அடைகிறார்கள். பாவமுடையவர்களியாரோ அவர்கள் விரைவில் (பாவத்திற்கேற்றவாறு) மிகவும் பாவமுள்ள நாய் பன்றி முதலிய பிறப்பையாவது சண்டாளப்பிறப்பையாவது அடைகிறார்கள்" என்று கூறுகின்றது.

11. துக்கம்—PAIN.

116. *துக்கம்-பீடை; அதுவுங் கூறினும்.

12. அபவர்க்கம்—FINAL LIBERATION.

117. அபவர்க்கம் மோக்கம். அதுவும் இருபத்தொரு வகை துக்கமுழுதுங் கெடுதல். இருபத்தொருவகை: உடம்பு, ஆறிந்திரியங்கள், ஆறுவிடயம், ஆறுஞானம், சுகதுக்கமென்பனவே. இங்ஙனங் கௌண முக்கிய பேதத்தாற் சுகம் துக்கத்தோடுகூடலின் துக்கமென் றுபசரிக்கப்படும். கூட்டம் - நீங்காதிருத்தல். இவ் வுபசாரம், தேன் விடத்தோடுகூடின் தேனும் விடக் கூற்றில் (பகுதியில்) வைத்தல்போல. அவ்வபவர்க் கம் எங்ஙனமுண்டாமெனின், கூறுதும்:—நூலாலறி யப்பட்ட சகல பதார்த்தங்களின் யதார்த்தசொரூப முடையனாய், விடயக்குற்றங் காண்டலால் விரத்தி யாய் (வைராக்கிய முடையனாய்), வீட்டின்பவேட் கையு (விருப்பமு)டையனாய்த், தியானமுடையனாய்த், தியானபரிபாகவசத்தாற் றோன்றின ஆன்மாவு (ஆத்ம சாட்சாத்காரமு)டையனாய்க், † கிலேச நீங்கினவனாய்,

---

* இதுபற்றி இந்நூலின் 260-வது பக்கத்திற் காண்க.

‡ கிலேசமென்றது பஞ்சக்கிலேசத்தை. அவித்தை, அஸ் மிதை, இராகம், துவேஷம், அபிநிவேசமென்பன பஞ்சக்கிலேச மாம். அவித்தை - தத்துவஞானமின்மை, அஸ்மிதை - மோகம், அபிநிவேசம்-மரணபயத்தால் உடம்பினைக் காப்பாற்றுதலிலுண்டா கும் பிடிவாதம்.

நிட்காமகருமாநுட்டாநத்தால் வருவதான கருமா தருமமீட்டா(அறம்பாவங்களைச்சம்பாதிக்கா)தவனாய், முன்னடைந்த *தருமாதருமக்கூட்டத்தை ‡யோகப் பெருமையாலறிந்தொருங்கு (ஒருமிக்க)நுகர்வா(அநு பவிப்பவ)னுக்கு முன்னர்க் கருமநிவிர்த்தியினிகழ் கின்ற உடம்பு நீக்கத்தில் வருமுடம்பின்மையின், இருபத்தொரு துக்கசம்பந்த முண்டாகா; காரண

---

* தருமாதருமக் கூட்டத்தை யோகப்பெருமையா லறிந் தொருங்கு நுகர்வானுக்கு - தருமாதருமக்கூட்டத்தாலுண்டாகும் தம்முள் பல வேறுபாடுடைய சுகதுக்கங்களின் சமுதாயத்தை யோகமகாத்மியத்தா லுணர்ந்து, அவ்வெல்லாவற்றையும் ஒரு காலத்தில் தம்முள் பல வேறுபாடுடைய பல சரீரங்களைத் தரித் தனுபவிக்கின்றவனுக்கு. இப்பல வேறுபாடுடைய சரீரங்கள் காய வியூகமென்று சொல்லப்படும். காயம் - சரீரம்; வியூகம்-கூட்டம். இத்தருமாதருமக்கூட்டம் சஞ்சிதகருமமெனப்படும். தருமாதருமக் கூட்டமென்னும் கருவியின்பெயர் அதனாலுண்டாகும் சுகதுக்கங் கட்காதலின் கருவியாகுபெயராம். சௌபரியென்னும் யோகி ஒரேகாலத்தில் பல சரீரங்களைத் தரித்துப் போகநுகர்ந்தாரென்று விஷ்ணுபுராணம் நான்காமம்சத்திற் கூறுவதறிக.

‡ சத்த முதலிய விஷயங்களுடன் சுரோத்திர முதலிய இந்தி ரியங்களைச் செல்லாவாறடக்கியும் சுரோத்திர முதலிய இந்திரி யங்களுடன் மனத்தைச் செல்லாவாறடக்கியும் சாட்சாத்கரிக்கப் பட்டுள்ள தத்துவவஸ்துவில் மிகு ஆதரவோடு மனத்தை நிலைக்கச் செய்தல்வாயிலாகவுண்டாகும் சித்தவிருத்தி சமாதி அல்லது யோகமென்று சொல்லப்படும்.

(பிராந்திஞான) மின்மையின். இருபத்தொருதுக்கக் கேடு மோக்கம். அஃது அபவர்க்கம்.

இனிச் சம்சயம் கூறுதும்.

(கு-ரை.) புருஷார்த்த நான்கனுள் தருமார்த்தகாமம் (அறம்பொருளின்பம்) திரிவர்க்கமென்றும், மோக்ஷம் (வீடு) அபவர்க்கமென்றும் கூறப்படும். திரி - மூன்று, வர்க்கம்-கூட்டம். அபவர்க்கம் - கூட்டமொழிந்தது. புருஷர்களது இச்சைக்கு விஷயம் புருஷார்த்தமெனப்படும். ஈண்டு உடம்பு முதலிய இருபத்தொரு துக்கங்களின் அத்தியந்தநிவிர்த்தி அபவர்க்கமாம். உடம்பு முதலியன துக்கத்தை யுண்டுபண்ணுவதற்குச் சாதனமாயிருத்தல்பற்றி அவையும் உபசாரவழக்கால் துக்கமெனப்படுகின்றன. சுவர்க்காதிகளின் சுகமும் நாசமாய்விடுமென்னும் பீதியால் துக்கத்திற்குச் சாதனமா யிருத்தலின் சுகம் துக்கசாதனமும் துக்கம் அதன் பயனுமாம். சாதனம் கௌணமென்றும், பயன் முக்கியமென்றும் சொல்லப்படும். ஈண்டுச் சாதனம் பயனென்னுமிரண்டனுள் சுகம் துக்கசாதனமும் துக்கம் அதன் பயனுமாயிருத்தலின் 'இங்ஙனம் கௌண முக்கியபேதத்தாற் சுகம் துக்கத்தோடு கூடலின் துக்கமென் றுபசரிக்கப்படும்' என்று கூறப்பட்டது. நாசமாந்தன்மையை நோக்கிச் சுகத்தில் துக்கத்தை யாரோபித்தலே ஈண்டுபசாரமாம். பகலிற்குப்பின் இரவு நீங்காது வருதல்போன்று சுகத்திற்குப்பின் துக்கம் நீங்காதுவருதலின், 'கூட்டம்-நீங்காதிருத்தல்' என்று கூறப்பட்டது. யாண்டும் சுகம் பின்வரும் துக்கத்திற்கு நாசமாமென்னும் பீதிவாயிலாகச் சாதனமாயிருத்தலின் விஷத்தோடுகூடிய தேன் விஷமேயாதற்போன்று துக்கத்தோடு கூடிய சுகம் துக்கமேயாமென்க.

இந்திரியமாறனுள் சுரோத்திரமும்மனமும் நித்தியமாக அவற்றிற்கெங்ஙனம் அத்தியந்தநிவிர்த்தி (முழுதுங் கெடுதல்) சம்பவிக்கு

மெனின், சுரோத்திரமும் மனமும் எந்த ரூபங்களால் துக்கசாதன மாகின்றனவோ அந்தரூபங்கள் கெடுதலே ஈண்டத்தியந்தநிவிர்த்தி யாம். அவை பதார்த்தஞானத்தை யுண்டுபண்ணும் வாயிலாகத் துக்கத்திற்கேதுவாம். அந்தப் பதார்த்தஞானம் மோக்ஷகாலத்து அவற்ருலுண்டாவதில்லே. (1) கர்ணகோளகத்துள்ள ஆகாயமே சுரோத்திரமாம். மோக்ஷகாலத்து ஆகாயவடிவ சுரோத்திரேந்தி ரியமிருந்தும் கர்ணகோளகமின்மையின் அதனுல் ஞானமுண்டாவ தில்லே. ஞானத்தையுண்டுபண்ணுஞ் சுரோத்திரேந்திரியத்தின் ரூபமே துக்கவடிவமாம். அதற்கே நாசமுண்டாகின்றது. (2) ஆத்மா வோடு மனங் கூடுவதால் ஞானமுண்டாகின்றது. மோக்ஷ காலத்து மனத்திற்குக் கிரியையுண்டாவதின்ருகலின் சையோக முடைய மனதிற்கே நாசமுண்டாகின்றது. ஆத்மாவோடு சையோக முடைய மனமே துக்கரூபமாம்.

யான் மனிதன் யான் பார்ப்பான் என்றற்ருெடக்கத்தனவாய் உடம்பில் ஆத்மப்பிராந்தி யுண்டாயிருத்தலால் இராகத்வேஷங்க ளுண்டாகின்றன. அவற்ருல் தர்மாதர்மங்களின் பொருட்டு முயற்சியுண்டாகின்றது. அதனுல் உடம்பின் சம்பந்தவாயிலாகச் சுகதுக்கங்களுண்டாகின்றன. இவ்வாற்ருல் பிராந்திஞானம் சம் சாரத்திற் கேதுவாம். அப்பிராந்திஞானம் தத்துவஞானத்தால் நீங்குகின்றது. உடம்பு முதலிய சகல பதார்த்தங்களினும் ஆன்மா வேறு என்னும் நிச்சயம் தத்துவஞானமெனப்படும். அந்தத் தத் துவ ஞானத்தால் யான் மனிதன் யான் பார்ப்பானென்னும் பிராந்தி நீங்குகின்றது. அதனுல் (பிராந்திநாசத்தினுல்) இராகத் துவேஷங்களில்லாதொழிகின்றன. அவற்றினபாவத்தால் தர்மா தர்மங்களின் பொருட்டு முயற்சியுண்டாவதில்லே. அதனபாவத் தால் சரீரசம்பந்தவடிவப் பிறப்பொழிகின்றது. சஞ்சிதமும் பிரா ரத்துவமும் போகத்தினுல் நாசமடைகின்றன. சரீரசம்பந்தத்தின்

அபாவத்தால் இருபத்தொரு துக்கங்களும் நாசமடைகின்றன. அந்தத் துக்கநாசமே மோக்ஷமாம். இதுவே இறுதித்துக்கத்தினழிவு பாடெனப்படும்.

3. சம்சயம்—Doubt.

118. ஒரு தருமியின் மாறுபட்ட பல பொருள் ஞானம் சம்சயம். அது மூவகை.

(கு-ரை.) சம்சயம் - ஐயம். * சமான தருமத்தையுடைய தர்மிஞானத்தாலும் விசேடதரிசனமின்மையாலும் இருதருமஸ்மரணத்தாலும் இது கயிறோ பாம்போ என்று தோன்றும் ஞானம் சம்சயமாம். தருமியின் நிச்சயஞானம் அதற்கு விரோதியாம். இது இப்பியோ வெள்ளியோ என்னுமிடத்து இதுவென்பது ஒரு தருமியும், இப்பியோ வெள்ளியோ என்பது பல தருமமுமாம். ஈண்டு இப்பியும் வெள்ளியும் மாறுபட்ட தருமமாம். ஆகவே,

* சமான தருமத்தையுடைய தர்மிஞானத்தாலும் விசேடதரிசனமின்மையாலும் ஒருதரும ஸ்மரணத்தாலும் இப்பியின்கண் இது வெள்ளியென்று தோன்றும் ஞானம் விபர்யயமாம். ஈண்டுச் சம்சயத்திற்கும் விபர்யயத்திற்குமுள்ள விலக்கண வேறுபாடு முறையே இருதருமஸ்மரணமும் ஒருதருமஸ்மரணமுமாம். ஏனைய விலக்கணம் அவ்விரண்டற்கு மொத்திருத்தல்காண்க. முன்னர்த் தோன்றும் இப்பியின்கண் தோஷத்தால் இது வெள்ளியென்றுணருமிடத்து இப்பிக்கும் வெள்ளிக்குமொத்த தருமம் வெண்மையுருவ முதலியனவாம். அத்தருமத்தையுடைய தருமி இதுவென்பதாம். விசேடதரிசனமின்மை இப்பியினுருவங் காணாமை. ஒரு தருமஸ்மரணம் வெள்ளியென்னும் ஞானம். சம்சயத்தில் இரு தருமஸ்மரணம் இப்பியோ வெள்ளியோ என்பதாம்.

ஒரு தருமியின் மாறுபட்ட பல தருமங்களின் ஞானம் சம்சய மாயிற்றென்க. ஈண்டுத் தருமி விசேடியமும், மாறுபட்ட.தருமம் விசேடணமுமாம். மாறுபட்ட தருமங்களில் ஒன்று பாவமும் மற்றொன்று அபாவமுமாம். இது இப்பியோ வெள்ளியோ என்னு மிடத்து இப்பி பாவமாயும் வெள்ளி அபாவமாயுமிருத்தலறிக. சம் சயம் சாதாரணதர்மஞானத்தாற் றோன்றியது, அசாதாரணதர்ம ஞானத்தாற் றோன்றியது, விப்பிரதிபத்திவாக்கிய ஞானத்தாற் றோன்றியதென மூவகைத்தாம்.

(1) ஒன்று, விசேடங்காணாதிருக்கையிற் சமாந தருமதரிசநத்தாற் றோன்றியது. எங்ஙனம்? குற் றியோ மகனோவென்று முன்னிற்கு மொருபொரு ளின்கண்ணே குற்றிமை துணிவிக்கும் வளைவு பொந்து முதலியன, மகன்மை துணிவிக்குந் தலை கை முதலி யனவென்று விசேடங் காணானைக் குற்றி மகற் கொத்த வுயர்ச்சிவடிவு காண்பானுமகற்கு இவ்வுருக் குற்றியோ மகனோவென்று சம்சயமுண்டாம்.

(கு-ரை.) குற்றி - மரக்கட்டை. இச்சம்சயம் சாதாரணதர்ம ஞானத்தாற் றோன்றியதாம். குற்றியைத் துணிவிக்கும் வளைவு பொந்து முதலியனவும் மகனைத் துணிவிக்கும் தலை கை முதலியனவு மாகிய விசேடங்காணாதிருக்கையில் குற்றி மகற்கொத்த சமானதரி சனத்தால் ஒருவனுக்கு இவ்வுரு குற்றியோ மகனோவென்னும் ஐய முண்டாமென்க. ஈண்டுக் குற்றி மகற்கொத்த சமானதருமம் உயர்ச்சிவடிவு. குற்றி மகற்குரிய விசேடங் காணாதிருக்கையில் சாதாரணதருமதரிசனத்தால் இது குற்றியோ மகனோவென ஐய முண்டாதல் காண்க.

(2) இரண்டாஞ் சம்சயம், விசேடங் காணுதிருக்கையில் விவாதத்தா(விப்பிரதிபத்தியா)ற் றேன்றுவது. எங்ஙனம்? இச்சொல் (சப்தம்) நித்தியமோ அநித்தியமோவென: ஒருவன்சொல்நித்தமென, மற்றொருவன் அநித்தமெனில்; அவரது விவாதத்தால், விசேடங் காணுத நடுவிலிருந்த மகற்கு இச்சொல் நித்தியமோ அல்லது அநித்தியமோவென்று சம்சயமுண்டாம்.

(கு-ரை.) இச்சம்சயம் விப்பிரதிபத்தி வாக்கியஞானத்தாற் றேன்றியதாம். விப்பிரதிபத்திவாக்கியம் - விருத்தார்த்தத்தைக் கூறும்வாக்கியம். சொல்லை நித்தியமென்பவன் மீமாம்சகன்; அநித்தியமென்பவன் தார்க்கிகன். விவாதம்-கட்சிப்பிரதிகட்சி. சொல் நித்தியம் அல்லது அநித்தியமென்னு மிரண்டிலொருவிசேடங் காணுதிருக்கையில் இருவர் தம்முள் மாறுபட்டுச் சொல் நித்தியம் அல்லது அநித்தியமெனச்செய்யும் வாதத்தால் நடுவேயிருந்த ஒருவனுக்கு இச்சொல் நித்தியமோ அல்லது அநித்தியமோவென்னும் ஐயமுண்டாமென்க. ஈண்டுச்சொல் நித்தியமோ அல்லது அநித்தியமோவென்னும் ஐயம் இருவரது விரோதார்த்த வாக்கியஞானத்தினுற் றேன்றுவதறிக.

(3) அசாதாரண தருமத்தாற்றேன்றிய சம்சயமெங்ஙனம்? நித்திய அநித்தியத்தினீங்கின நில (பிருதிவி)மாத்திரத்திருப்பதான அசாதாரண தருமமான மணமுடைமையால் விசேடங்காணுனுக்கு நிலத்தின் நித்தியாநித்தியத்துவ சம்சயமுண்டாம்: அங்ஙனமன்றே, எல்லாநித்தியத்துவ நீங்கின மணமுடைமையோடு கூடுதலின் நிலம் அநித்தியமோ, அல்லது

எல்லா அநித்தியத்தவ நீங்கின அதனோ (மணமுடைமையோ)டு கூடுதலின் நித்தியமோவென்று சம்சயம்.

(கு-ரை.) இச்சம்சயம் அசாதாரணதருமஞானத்தாற்றோன்றியதாம். ஒன்றனது இலக்கணம் அசாதாரணதருமமெனப்படும். பிருதிவியின் அசாதாரணதருமம் மணமுடைமையாம். அது பிருதிவிமாத்திரத்திருப்பதறிக. மணமுடைமை யாண்டும் அநித்தியமென்னும் விசேடங் காணாதவனுக்கு ஆகாய முதலிய நித்திய பதார்த்தத்தினும் ஆறு கடல்முதலிய அநித்தியபதார்த்தத்தினும் நீங்கின பிருதிவிமாத்திரத்திருப்பதான (பிருதிவியின்) அசாதாரண தருமமான மணமுடைமையால் பிருதிவி நித்தியமோ அல்லது அநித்தியமோ என்னும் ஐயமுண்டாமென்க. அஃது எல்லா நித்தியங்களினின்றும் நீங்கின மணமுடைமையோடு கூடுதலின் பிருதிவி அநித்தியமோ, அல்லது எல்லா அநித்தியங்களினின்றும் நீங்கின மணமுடைமையோடு கூடுதலின் அது நித்தியமோ என்பது. ஈண்டுப் பிருதிவியின் அசாதாரண தருமமான மணமுடைமையின் ஞானத்தால் பிருதிவியில் நித்திய அநித்திய சம்சயமுண்டாதலறிக. ஈண்டு இப்புத்தகத்தின் 94, 95-ம் பக்கத்துள்ள அசாதாரண அநைகாந்திகம் கவனிக்கத்தக்கதாம்.

4. பிரயோசநம்—Purpose.

119. எதனானேவப்பட்டு மகன் முயலாநின்றான் அது பிரயோசநம். அது சுகமடைதல், துக்கக்கேடு. வாளா (சும்மா) விருப்பாற்கு அதன் (பிரயோசநத்தின்) பொருட்டன்றோ முயற்சியும்.

(கு-ரை.) பிரயோசநம்-பயன். எதை யுத்தேசித்துப் புருஷன் முயற்சிசெய்கின்றானோ அது பிரயோசனமெனப்படும். அது

முக்கியம் கௌணமென விருவகைத்து. சுகமடைதலும் துக்கக் கேடும் முக்கியமாம்; அதன் சாதனத்தையடைதல் கௌணமாம். தத்துவஞானத்தையடைதல் கௌணப்பிரயோஜனமும், அதனால் அபவர்க்கத்தையடைதல் முக்கியப்பிரயோசனமுமாம். இவற்றுள் கௌணம் திருஷ்ட (பிரத்தியட்ச)ப் பிரயோசநமும், முக்கியம் அதிருஷ்டப் பிரயோசனமுமாம்.

விரும்பியதையடைய முயலும் புருடனுக்கு விரும்பியதாவது அதன் சாதனமாவது அடையப்படும்போது சுகமடைதலும் துக்கக்கேடும் உண்டாதலின் பிரயோசனமென்பது சுகமடைதலுந் துக்கக்கேடுமோமெனல் நன்கு விளங்கும். உதாரணமாக:—தண்ட முதலியவற்றுளொன்றை அடைய விரும்பி முயலும் புருடனுக்கு அஃதாவது அதன் சாதனமாவது அடையப்படும்போது சுகமடைதலுந் துக்கக்கேடுண்டாதலுங் காண்க.

5. திட்டாந்தம்—Instance.

120. வாதிப்பிரதிவாதிகட்குடம்பாட்டுவிடயமானஅருத்தம் திட்டாந்தம். அஃது இருவகை. ஒன்று சாதருமி (அந்வய) திட்டாந்தம். எங்ஙனம்? புகையுடைமையேதுவின்கண் அட்டில். இரண்டாவது வைதருமி (வியதிரேக) திட்டாந்தம். எங்ஙனம்? அவ்வேதுவிற்கே மடு.

(கு-ரை.) திட்டாந்தம் - உதாரணம். அஃதாவது காணப்பட்ட முடிபுடையது. வாதிப்பிரதிவாதிகளின் நிச்சயத்திற்கு விஷயமாகும் (அட்டில், அல்லது மடு என்னும்) பதார்த்தம் திருஷ்டாந்தமாம்; அநுமானத்தில் வியாத்தியை யறியக்கூடிய

விடமாமென்க. சாதருமி வைதருமி திட்டாந்தங்களைப்பற்றி விரிவாய் அநுமானங் கூறியவிடத்தறிக. சாதருமி - ஒத்ததருமத்தை யுடைத்தாயிருப்பது. வைதருமி-மாறுபட்ட தருமத்தை யுடைத்தாயிருப்பது.

6. சித்தாந்தம் —Established Truth.

121. பிரமாணிகத்வத்தா (பிரமாணத்தையுடைத்தாயிருக்குந்தன்மையா) லுடம்படு (சம்மதிக்கு) மருத்தஞ் சித்தாந்தம். அது சர்வதந்திரம், பிரதிதந்திரம், அதிகரணம், அபியுபகம (அங்கிகார)மென நால்வகை. அவற்றுள்,

(1) சர்வதந்திர சித்தாந்தமெங்ஙனம்? தருமிமாத்திரமுண்மை.

(2) இரண்டாவதெங்ஙனம்? நையாயிகர்க்கு மனம் இந்திரியம். அதுவும் சமாந (ஒத்த) தந்திரமான வைசேடிகத்திற் சித்தம்.

(3) மூன்றாவதெங்ஙனம்? நில முதலானவற்றின் கருத்தாசித்திக்கையி லவனுக்குச் சர்வஞ்ஞத்துவம் (சித்தித்தல்).

(4) நான்காவதெங்ஙனம்? சைமிநியினுடைய நித்தியாநித்தியவிசார மெவ்வளவுபரியந்த மிருக்கிறதோ அவ்வளவுபரியந்தம் சத்தம் குணமென்பது.

(கு-ரை.) சித்தாந்தம்-முடிந்தமுடிபு. சாஸ்திரமுணர்ந்தவன் பிரமாணமுடைமையால் அங்கீகரித்த அர்த்தம் சித்தாந்தமாம்.

(1) சர்வதந்திர (சாஸ்திர) அவிருத்தமாயும் தனது சாஸ்திரத்தில் நிச்சயமாய்க் கூறப்பட்டதாயுமுள்ள அர்த்தம் சர்வதந்திர **சித்தாந்தமாம்.** அஃதாவது சாஸ்திரமுணர்ந்தோரியாவரும் பிரமாணமுடைமையால் அங்கீகரித்த விஷயமாம். ஜாதி முதலிய தர்மமுண்டென்பதில் விவாதம் பலவிருப்பினும் (பிருதிவியாதி) தர்மிமாத்திரமுண்டென்பதில் யாதொரு விவாதமுமின்மையின் 'தர்மிமாத்திரமுண்மை' சர்வதந்திர சித்தாந்தமாம். 'இரண்டிரண்டு நான்கு' என்றற் ரொடக்கத்தனவும் சர்வதந்திர சித்தாந்தமாம். ஈண்டெண்கள் தருமி; அவற்றின்றன்மை தருமமாம். வாதிப்பிரதிவாதிக ளிருவராலும் அங்கீகரிக்கப்பட்டுக் கதைக்கனுகூலமா யிருக்கும் அர்த்தம் சர்வதந்திரசித்தாந்தம் என்று நவீனர் கூறுவர். கதை - பஞ்சாவயவபரிகரசகிதவாக்கியம்; பரிகரம்-சாமக்கிரி.

(2) வாதிப்பிரதிவாதிகளுள் ஒருவரால்மாத்திர மங்கீகரிக்கப்பட்டும் இரண்டுசாஸ்திரங்களுள் ஒரு சாஸ்திரத்தில் சித்தாந்தஞ் செய்யப்பட்டுமுள்ள அருத்தம் **பிரதிதந்திர சித்தாந்தமாம்.** மனம் இந்திரியமென வேதாந்திகளா லங்கீகரிக்கப்படாமலும் தார்க்கிகரால் அங்கீகரிக்கப்பட்டும், வேதாந்தம் தர்க்கம் என்னுமிரண்டுசாஸ்திரங்களுள் ஒரு (தர்க்க) சாஸ்திரத்திற் சித்தாந்தஞ் செய்யப்பட்டு மிருக்கின்றமை காண்க. இங்ஙனமே, சத்தம் நித்தம் என்பதும் வான் ஒலிக்குணமுடையதன்றென்பதும் பிறவும் பிரதிதந்திரசித்தாந்தமாம். வைசேடிகராலும் மனம் இந்திரியமென அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றமையின் 'அதுவும் சமானதந்திரமான வைசேடிகத்திற் சித்தம்' எனக் கூறப்பட்டது.

(3) எவ்வர்த்தத்தின் சித்தியுண்டாகும்போதே (பிரஸ்தாபத்துள்ள) மற்றொன்றன்சித்தியுண்டாகின்றதோ அஃது **அதிகரண சித்தாந்தமாம்.** க்ஷிலமுதலாயின கர்த்தாவுடையன; காரியமாதலின்;

கடம்போல என்னும் அனுமானத்தினால் நிலமுதலாயினவற்றிற்குக் கர்த்தா சித்திக்கும்போது அக்கர்த்தாவிற்குச் சர்வஞ்ஞத்தன்மை சித்திக்கின்றமை காண்க. நம்மனோராற் செய்யப்படாது காரியமாயுள்ள நிலமுதலியனவற்றிற்குக் கர்த்தா வுண்மை பெறப்படும்போதே அக்கர்த்தாவிற்குச் சர்வஞ்ஞத்தன்மை பெறப்படுகின்றமை யீண்டறிதற்பாற்று.

(4) சாட்சாத்தாகச் சூத்திரத்திற் சொல்லப்படாத அருத்தத்தை யங்கீகரித்தல் அபியுபகம சித்தாந்தமாம். ரூபமுதல் பிரயத்நமீறுயுள்ள பதினேழு குணங்களையும் சூத்திரத்திற் கூறிய கணாதர் உம்மையால் குருத்துவம், திரவத்துவம், சிநேகம், சம்ஸ்காரம், அதிருஷ்டம் (தருமாதர்மம்), சப்தமென்னுங் குணங்களைத் தழீயினாரென்பதிங் கறிதற்பாற்று. சத்தம் குணமெனச் சூத்திரத்தில் நேரே சொல்லப்படாதாயினும் அது குணமேயெனச் சைமினி நூலாரை மறுத்துச் சித்தாந்தம் செய்தமையின் சத்தம் குணமென்பது அபியுபகம சித்தாந்தமாம். சைமினியென்பவர் பூர்வமீமாம்சையின் ஆசிரியர்; அவர் சத்தம் திரவியமாமென்பர்.

7. அவயவம்—THE "Member" (OF A SYLLOGISM).

122. அநுமாநவாக்கியத்தினுடைய ஏகதேசங்கள் அவயவங்கள். அவை பிரதிஞ்ஞை முதலாயின. அங்ஙனம் நியாயசூத்திரமும் "பிரதிஞ்ஞை யேது வுதாகரண உபநய நிகமநங்கள் அவயவங்கள்". அவற்றுள்,

பிரதிஞ்ஞை—PROPOSITION.

(1) சாத்தியதருமவிசிட்ட தருமிப்பிரதிபாதக வசநம் பிரதிஞ்ஞை. எங்ஙனம்? இம்மலை தீயுடைத்தென்பது.

ஏது—REASON.

(2) திருதியார்த்தம் பஞ்சமியர்த்தமான லிங்கப்பிரதிபாதகவசநம் *ஏது. எங்ஙனம்? புகையுண்மையினென்பது.

உதாகரணம்—EXAMPLE.

(3) வியாத்தியோடு கூடின திட்டாந்தவசநம் உதாகரணம். எங்ஙனம்? யாது யாது புகையுடைத்து அதுவது தீயுடைத்து; எங்ஙனம்? அட்டிலென்பது.

உபநயம்—APPLICATION.

(4) பக்கத்தில் இலிங்கத்தி (புகையி)னுபசங்காரம் உபநயம். எங்ஙனம்? இதுவும் (மலையும்) வன்னி வியாப்பியமான புகையுடையதென்பது. அல்லது அங்ஙனமே (அட்டில்போல) இதுவும் (இம்மலையும்) என்பது.

நிகமனம்—CONCLUSION.

(5) பக்கத்திற் சாத்தியத்தின் உபசங்காரம் நிகமநம். எங்ஙனம்? ஆகையாற் றீயுடையதென்பது. அல்லது ஆகையால் இங்ஙனமே (இம்மலை தீயுடையதே) என்பது.

---

* ஏது, அபதேசம், இலிங்கம், பிரமாணம், காரணம் என்பன ஒருபொருட்கிளவி.

இப்பிரதிஞ்ஞைமுத லைந்தும் அநுமாந வாக்கியத்தின் பஞ்சாவயவங்க்ள்; அவயவம்போல (இருக்கின்றன). (பிரதிஞ்ஞை முதலிய) அவயவங்கள் (அநுமானவாக்கியத்திற்குச்) சமவாயிகாரணமல்ல; சத்தம் ஆகாயத்திற் சமவேதித்திருத்தலின்.

(கு-ரை.) * பரார்த்தாநுமானத்தின் எகதேச வாக்கியம் அவயவம் (உறுப்பு) எனப்படும்.

(1) இம்மலை தீயுடைத்து என்புழித் தீயுடைமை சாத்தியதருமமும், மலை தருமியுமாம். சாத்தியதருமவிசிட்ட தருமிப் பிரதிபாதகவசனம் என்பதற்குச் சாத்தியதருமத்துடன் கூடிய தருமியைக் கூறும் வாக்கியம் என்பது பொருள்.

(2) புகையுண்மையின் என்பது ஐந்தாம் வேற்றுமையின் இன்னுருபீறான எது வாக்கியம். இஃது அந்வயவியதிரேகி, கேவல

* பரார்த்தாநுமானத்தில் (1) இம்மலை தீயுடைத்தென்னும் பிரதிஞ்ஞாவாக்கியத்தைக் கேட்பதால் மலைவடிவ பக்கத்தின் ஞானமும், (2) புகையுண்மையினென்னு மேதுவாக்கியத்தைக் கேட்பதால் புகைவடிவலிங்கத்தின் ஞானமும், (3) யாதுயாது புகையுடைத்து அதுவது தீயுடைத்து; எங்ஙனம்? அட்டிலென்னு முதாகரணவாக்கியத்தைக் கேட்பதால் வியாத்தியின் ஞானமும், (4) இதுவும் வன்னி வியாப்பியமான புகையுடையது, அல்லது அங்ஙனமேஇதுவு மென்னு முபநயவாக்கியத்தைக் கேட்பதால் வியாப்திவிசிட்ட (கூடிய) எதுவில் பக்க தர்மத்தன்மையின் ஞானமும் (5) ஆகையால் தியுடையது, அல்லது ஆகையால் இங்ஙனமே யென்னும் நிகமனவாக்கியத்தைக்கேட்பதால் மலைவடிவபக்கத்தில்தீவடிவ சாத்தியத்தின் அபாதிதத்தன்மையின் ஞானமும் கேட்போனுக்குண்டாகின்றனவென்க.

வியதிரேகி, கேவலாந்வயி என மூவகைப்படும். திருதீயாந்தம் பஞ்சமியந்தமான லிங்கப்பிரதிபாதக வசனம் என்பதற்கு மூன்றும் வேற்றுமையின் ஆல் ஆன் உருபீறாகவேனும் ஐந்தாம்வேற்றுமையின் இன் இல் உருபீறாகவேனும் லிங்கத்தைக் கூறும் வாக்கியம் என்பது பொருள். லிங்கம்—குறி. அஃதிண்டுப்புகை.

(3) யாது யாது புகையுடைத்து அதுவது தீயுடைத்து என்பது வியாத்திவசனம். அதனோடு கூடிய திட்டாந்தம் உதாகரணமாம். 'எங்ஙனம் அட்டில்' என்பது ஈண்டுதாரணம். வியாத்தியோடு கூடிய திட்டாந்தவசனம் உதாகரணவாக்கியமெனப்படும். இஃது அந்வயவியாப்திபோதகம், வியதிரேக வியாப்திபோதகமெ(போதிப்பதெ)ன விருவகைப்படும். வியாத்தியாவதுஎதுவினதிகரண (நிலைக்கள)த்துளதாகிய அத்தியந்தாபாவத்திற்கு அப்பிரதியோகியாகிய (எதிர்மறையாகாத) சாத்தியத்தி னதிகரணத்திருத்தல். 'இம்மலை தீயுடைத்து; புகையுண்மையின்' என்புழி எது புகை; எதுவின் அதிகரண (இட)ம் மலை; அவ்வதிகரணத்துளதாகிய அத்தியந்தாபாவம் (முழுதுமின்மை) கடபட முதலியவற்றின் அத்தியந்தாபாவம்; தீயினத்தியந்தாபாவம் ஆண்டின்று; தீ ஆண்டேயிருத்தலின், அவ் வத்தியந்தாபாவத்திற்குப் பிரதியோகி கடபடமுதலியன; அப்பிரதியோகி தீ, அதனது அதிகரணம் மலை; அவ்வதிகரணத்தில் எதுவாகிய புகையிருத்தல் வியாத்தியாமென்றுணர்க.

(4) ஆரம்பத்திற் கூறிய அர்த்தமே அந்தத்தினும் கூறுவது உபக்கிரம உபசங்காரமெனப்படும், உபசங்காரமெனினும் முடிப்பதெனினு மொக்கும். ஆரம்பத்திற் கூறுவது உபக்கிரமமெனப்படும். ஆரம்பத்தில் மலையிலிருப்பதாகக் கூறிய புகையே அந்தத்திலும் மலையிலிருப்பதாகக் கூறி முடிக்கப்படுதலின் 'பக்கத்தில் இலிங்கத்தி னுபசங்காரம் உபநயம்' என்று கூறப்பட்டது. இதுவும் அந்வயி வியதிரேகியென விருவகைப்படும். பக்கதருமத்

தன்மையை யறிதற்பொருட்டுத் திருஷ்டாந்தத்தைச் சார்த்திக் கூறுவது உபநயமாமென்க. ஈண்டு அநுமானத்தின் 'புகையுண்மையின்' என்னும் ஏது வாக்கியம் உபக்கிரமமும் 'இதுவும் வன்னி வியாப்பியமான புகையுடையது, அல்லது அங்ஙனமே இதுவும்' என்னும் உபநயவாக்கியம் உபசங்காரமுமாம்.

(5) ஆரம்பத்தில் மலையிலிருப்பதாகக் கூறிய தீயே அந்தத்தினும் மலையிலிருப்பதாகக் கூறி முடிக்கப்படுதலின் 'பக்கத்திற் சாத்தியத்தினுப்சங்காரம் நிகமனம்' என்று கூறப்பட்டது. இதுவும் அந்வயி வியதிரேகியென விருவகைப்படும். ஈண்டு அநுமானத்தின் 'இம்மலை தீயுடைத்து' என்னும் பிரதிஞ்ஞாவாக்கியம் உபக்கிரமமும் 'ஆகையால், தீயுடையது அல்லது ஆகையால் இங்ஙனமே' என்னும் நிகமனவாக்கியம் உபசங்காரமுமாம்.

இவ்வைந்து வாக்கியத்தின் சமுதாயம் நியாயமெனப்படும்.

இவற்றின் றன்மை விரிவாய் இந்நூலின் 59, 60-வது பக்கங்களி லெழுதப்பட்டிருக்கின்றமை காண்க.

பிரதிஞ்ஞை முதலிய அவயவமைந்தும் அநுமானவாக்கியத்திற்கு அவயவங்கள்போன் றிருக்கின்றனவேயன்றிச் சமவாயி காரணமா யிருப்பனவல்ல; சமவாயிகாரணம் யாண்டும் திரவியமாமென்பது நியமம். பிரதிஞ்ஞை முதலியன சத்தவடிவமா யிருத்தலின் ஆகாயத்தின் குணமாம். ஆகவே * அவை அநுமானவாக்கியத்திற்குச் சமவாயிகாரண மாகாவென்க.

---

* எழுத்தால் சொல்லும், சொல்லால் வாக்கியமும் ஆக்கப்படுகின்றனவென்பவர் எழுத்து முதலியவற்றைக் குணமாகக் கொள்ளாது திரவியமாகக்கொள்வர். அவர்சொல்லுக்கெழுத்தை யுறுப்பாகவும் வாக்கியத்திற்குச் சொல்லை யுறுப்பாகவுங் கூறுவர்.

8. தருக்கம்--Reasoning.

123. *அநிட்டப்பிரசங்கம் தருக்கம். அது சித்தமான (பெறப்பட்டுள்ள) † வியாத்தியையுடைய தருமங்களுள் (பக்கதருமம் சாத்தியதருமம் என்னுமிரண்டனுள்) வியாப்பியவங்கீகாரத்தால் அநிஷ்டமான வியாபகத்தின் வரவு. எங்ஙனம்? ஈண்டுக் கடமுண்டாயின் அப்போது நிலம்போலக் காணப்படுமென்பது. இத்தருக்கம் பிரமாணத்திற் கநுக்கிராககம். அங்ஙனமன்றோ, இம்மலை தீயுடையதோ இல்லதோவென்னும் ஐயத்தின்பின், ஒருவன் தீயில்லதென்று கருதின் அப்போது அவனைக்குறித்துத் தீயில்லதாயின் அதனாற் புகையில்லதுமாகவேண்டுமென்று புகையில்லாமையின் வரவு பண்ணப்படும். இவ்வநிட்டப்பிரசங்கமே தருக்கமென்று சொல்லப்படும். ‡ இது (தருக்

"மொழியாய்த் தொடரினு முன்னனைத்தெழுத்தே" என்னும் நன்னூற் சூத்திரத்தின் விருத்தியுரையில் "எழுத்துச் சுண்ணத்தின்கண் அரிசனமுதலிய போலாது மாலையின்கண்மலர்போ லவற்றி (மொழிகளி) னிற்றலின்" என்று பரிணமவாதத்தை யங்கீகரியாது ஆரம்பவாதத்தை யங்கீகரித்துக் கூறப்பட்டிருக்கின்றமைகாண்க.

* அநிஷ்டப்பிரசங்கம் - இஷ்டமாகாததைக் கூறல்.

† வியாப்தி - நியதமான வுடனிகழ்ச்சி.

‡ இந்தச் சாத்தியரூபமான அர்த்தம் (தீ) நிகழ்கின்ற (வர்த்தமான) தர்க்கத்திற்கு விடயம்; தீயில்லாமையைத் தள்ளுதலால். என்றும் பாடமுண்டு.

கம்) அநுமானசோதகம் (அநுமானத்தைச் சோதிப்பது); புகையை யேதுவாகவுடைய வர்த்தமானத் (நிகழ்காலத்)துள்ள அநுமானத்திற்கு விஷயமான தீயையறியும்படிசெய்து தியில்லாமையைத் தள்ளுதலால். ஆதலின் அநுமானத்திற் கநுக்கிராககம். தருக்கம் சம்சயத்திலடங்கு மென்றொருவன் சொல்வான். அதுபொருந்தாது; (தருக்கம்) ஒரு சார்பை (கோடியை) விடயமாகவுடையதாகையால்.

(கு-ரை.) தருக்கம்-யுக்தி (விசாரவடிவம்); அஃதாவது இது கூடும் இது கூடாதெனத் தோன்றுமறிவு. ஈண்டுக் கடமுண்டாயின் அப்போது நிலம்போலக் காணப்படும்; இன்றாயின் காணப்படாதென்பது தருக்கத்திற் குதாரணமாம்; ஈண்டுக் கடமுண்டாயின் அப்போது நிலம்போலக் காணப்படுமென்பது சாதக தருக்கமும், இன்றாயின் காணப்படாதென்பது பாதக தருக்கமுமாம். இம்மலை தீயுடைத்து; புகையுண்மையான் என்புழி வியாப்பியமான புகை மலையின்கணிருத்தல் பக்கதருமமும், வியாபகமான தீ மலையின்கணிருத்தல் சாத்தியதருமமுமாம். யாண்டுப்புகை ஆண்டுத்தீயென நியதமான உடனிகழ்ச்சி பக்கதருமமாகிய புகைக்கும் சாத்தியதருமமாகிய தீக்குமிருத்தலின் 'அது சித்தமான வியாத்தியையுடைய தருமங்களுள் வியாப்பிய வங்கீகாரத்தால் அநிஷ்டமான வியாபகத்தின் வரவு' என்று கூறப்பட்டது. "(அநுமானவாக்கியத்தைக் கேட்டும்) அடுக்களை முதலியவற்றின்கண் வன்னியின் உடனிகழ்ச்சியாகிய தூமமிருக்கின்றது. பர்வதத்தில் வன்னியின் வியபிசாரியாகிய தூமமிருக்கின்றது. ஆகையால் பர்வதத்தில் தூமமுண்டு; வன்னியில்லையென்று பிரதிவாதி ஆக்கிரகஞ்செய்யின், அல்லது வியபிசார சங்கையுண்டாயின் தர்க்கத்தால் அவ்வாக்கிரகசங்கைகளின் நிவிர்த்தி

யுண்டாகின்றது. அநிஷ்டத்தைச் சம்பாதித்தல் தருக்கமெனப் படும். பர்வதத்தில் வன்னியின்றித் தூமமிருக்குமாயின் தூமம் வன்னியின் காரியமாகாதென்பது தருக்கம். இதனால் தூமத்தில் வன்னியின் வியபிசாரசங்கை நிவிர்த்தியாகின்றது. வன்னி தூமங் கட்குக் காரணகாரியத்தன்மை இஷ்டமாம். அவற்றின் அபாவம் அநிஷ்டமாம். ஆகையால், காரணகாரியத்தன்மைகளின் பங்கம் சம்பாதிக்கப்படுகின்றது. அக்காரணகாரியத்தன்மைகளின் பங்கம் அநிஷ்டமாம். ஆகையால் அநிஷ்டத்தைச் சம்பாதித்தல் வடி வினது தர்க்கமாம். இத்தருக்கத்தால் பிரதிவாதியின் நிவிர்த்தி யும் சங்கையின் நிவிர்த்தியு முண்டாகின்றன. எனெனின், வன்னி தூமங்களின் காரணகாரியத்தன்மை யிருவர்க்கும் இஷ்ட மாம். அதன் பங்கம் (கேடு) இருவருக்கும் அநிஷ்டமாம். வன்னி யின் வியபிசாரம் தூமத்திற் கூறின் அநிஷ்டத்தின் சித்தியுண்டா கும். அப்பயத்தால் வன்னியின் வியபிசாரியாம் தூமமென்னும் வார்த்தையைப் பிரதிவாதி கூறான்" என்று விருத்திப்பிரபாகரம் 2-வது பிரகாசத்திற் கூறுவதனால் அநிஷ்டப்பிரசங்கம் தருக்கம் என்பது நன்கு விளங்கும். தருக்கம் விபர்யயத்திலடங்குமாயினும் பிரமாணத்திற்குபகாரமாயிருத்தல்பற்றி 'இத்தருக்கம் பிரமாணத் திற் கனுக்கிராககம்' என்று வேறு கூறப்பட்டது. அனுக்கிராக கம் - சககாரி. காணத்தின்கரணம் அல்லது சாதனத்தின் சாத னம் சககாரியெனப்படும்.

தருக்கம் விபர்யயத்திலடங்குவதுவருமாறு:—"தீயில்லதாயின் அப்போது புகையுமில்லையாதல்வேண்டும்" என்னும் ஞானம் புகை தீக்கள்கூடியவிடத்துண்டாயின் அது தருக்கமெனப்படுகின்றது. ஆண்டுத் தீயின் அபாவம் வியாப்பியமும் புகையின் அபாவம் வியா பகமுமாம். தீயபாவத்தின் ஆரோபத்தினால் புகையபாவத்தின் ஆரோபமுண்டாகின்றது. தீயும்புகையுமிருக்க, தீ அபாவத்தின்

ஞானமும் புகை அபாவத்தின் ஞானமுமிருக்கின்றமையின் அந்த ஞானம் விபர்யயமாம். ஒன்று பிறிதொன்முகத் தோன்றுதல் விபர்யயமெனப்படுதலின் உண்மையான புகை தீக்கள் இன்மையாகத் தோன்றுதல் விபர்யயமாமென்பதில் யாது மாசங்கையின்று.

பாதமு (மறுதலையு)ண்டாக விபர்யயமுண்டாயின் அஃதாரோபமெனப்படும். ஈண்டுப் புகை தீக்களினிருப்பில் அவற்றின் அபாவத்திற்குப் பாதமிருக்கின்றது. அங்ஙனமிருக்கவும் புருடனது இச்சையினுல் தீப்புகை அபாவங்களின் விபர்யயமுண்டாகின்றது. ஆதலின் அஃதாரோபமாம். ஆதலாற்முன் "வியாப்பியத்தை யாரோபித்தலால் (தீயில்லையாயின்) வியாபகத்தை யாரோபிப்பது (புகையுமில்லையெனல்) தருக்கம்" என்று கூறப்படுகின்றது. இத்தருக்கம் வியபிசாரசங்கையின் நிவிர்த்திவாயிலாக அநுமானப்பிரமாணத்திற்கு அநுகூலமாயிருத்தல்பற்றி 'ஆதலின் அநுமானத்திற் கநுக்கிராககம்" என்று கூறப்பட்டது.

'இது கட்டையா, கள்ளனு' என ஒரு தருமியில் மாறுபட்ட பக்ஷகோடி (பட்சங்)களையுடைய ஞானம் சம்சயமாயிருத்தலின் அதன்கண் 'தீயில்லையாயின் புகையுமில்லையாதல்வேண்டும்' என ஒரு கோடியை விஷயமாகவுடைய * தருக்கமடங்காதென்க.

அது i. விஷயபரிசோதகம் ii. வியாப்திக்கிராககமென விருவகைத்து.

---

* ஒரு பகுதியார் வியாப்பியத்தின் (தீயின்) ஆரோபத்தினுல் வியாபகத்தின் (புகையின்) ஆரோபமாகிய தருக்கம் இச்சையின் வசமாயிருத்தலின் அது யதார்த்தம் அயதார்த்தமென்னு மிரண்டினும் வேருயிருக்கின்றது; அங்ஙனமிருப்பதினுற்முன் மனனமுதலியவற்றி லுபயோகப்படுகின்றதென்பர்.

(i.) இம்மலை தீயினபாவமுடையதாயின் புகையினபாவமு முடையதாமென்றாற்போல்வது விஷயபரிசோதக தர்க்கமெனப் படும்.

(ii.) புகை தீயின் வியபிசாரமுடையதாயின் அது தீயின் காரியமன்றாமென்றாற்போல்வது வியாப்திக்கிராகக தர்க்க மெனப் படும்.

ஒருசாரார் அது (1) ஆத்மாசிரயம், (2) அந்நியோந்நியாசிர யம், (3) சக்கிரிகை, (4) அநவஸ்தை, (5) பிரமாணபாதிதார்த்தப் பிரசங்கம் என ஐவகைத்தாமென்பர்.

(1) ஒன்று மறைப்பின்றித் தன்னையேதா னபேட்சிப்பது ஆத்மாசிரயமா (தன்னைப்பற்றுதலா)ம். இதற்குதாரணம் சாத்த னுக்குத் தந்தை அவனே என்றாற் போல்வதாம்.

(2) இரண்டன் பரஸ்பரஅபேட்சை அந்நியோந்நியாசிரயமா (ஒன்றையொன்று பற்றுதலா)ம். இஃது இதரேதராசிரியமென் றுங் கூறப்படும். இதற்குதாரணம் சாத்தன் கொற்றனென்னு மிருவருள் சாத்தனுக்குத் தந்தை கொற்றனும் கொற்றனுக்குத் தந்தை சாத்தனுமாவரென்றாற் போல்வதாம்.

(3) இரண்டிற்கு மேற்பட்டவற்றின் பரஸ்பர அபேட்சை சக்கிரிகையா (சக்கரம்போற் சுழல்வதா)ம். உதாரணம் சாத்தன் கொற்றன் பொன்னனென்னு மூவருள் சாத்தனுக்குத் தந்தை கொற்றனும் கொற்றனுக்குத் தந்தை பொன்னனும், பொன்ன னுக்குத் தந்தை சாத்தனுமாவரென முறையே கூறுவதாம்.

(4) முன் முன் உள்ள ஒன்று பின் பின் உள்ள மற் றொன்றை அபேட்சிப்பது அநவஸ்தையாம். அஃதாவது முத லதற்கு இரண்டாவதும் இரண்டாவதற்கு மூன்றாவதும் மூன்றாவ தற்கு நான்காவதும் காரணமாமெனக் காரணத்தின் எல்லையின் மையைக் கூறலாம்.

(5) பிரமாணத்தினுலே பாதிதமான அருத்தத்தை நிரூபிப்பது பிராமாணபாதிதார்த்தப் பிரசங்கமாம். இது மேற்கூறிய வியாப்திக்கிராகக தர்க்கமாம்.

மற்ருெரு சாரார் அது வியாகாதம், ஆத்மாசிரயம், இதரேதராசிரயம், சக்கிரிகை, அநவஸ்தை, பிரதிபந்தி, கற்பனுலாகவம், கற்பனுகெளரவம், உத்ஸர்க்கம், அபவாதம், வைஜாத்தியமெனப் பதினெருவகைத்தாமென்பர்.

ஒன்றற்கொன்று விரோதமுள்ள இரண்டு தருமங்கள் ஒரு அதிகரணத்தி (தருமியி)ற் கூடியிருப்பது வியாகாதமாம். அதற்குதாரணம் என்ருய்மலடி, எனக்குநாக்கில்லை யென்ருற்போல்வதாம்.

வாதிப் பிரதிவாதிகளின் சங்கை சமாதானங்கள் சமமாயிருத்தல் பிரதிபந்தியாம்.

காரியத்தை யுண்டாக்குவதற்கு வன்மையுள்ள வஸ்துவிற்கு அற்பத்தன்மையைக் கற்பித்தல் கற்பனுலாகவமாம்.

ஒரு வஸ்துவினுலேயே ஒருகாரியம் சித்திக்கக்கூடியதாயிருக்க அதற்குப் பலவஸ்துக்களை யேதுவாகக்கற்பித்தல் கற்பனுகெளரவமாம்.

சமாதானங் கூறுதற்குச் சக்கியமாகாத வாதியினது கேள்வியின் பாம்பரையி னடைவுண்டாக மெளனமாயிருப்பது வைஜாத்தியமாம்.

ஏனையதோஷங்கள் வந்துழிக்காண்க.

9. நிண்ணயம்–Ascertainment.

124. அவதாரண (நிச்சய)ஞானம் நிண்ணயம்: அது பிரமாணபலம்.

(கு-ரை.) யதார்த்தாநுபவ மென்னு மபிதானமுடைய பிரமை நிர்ணயமாம். அது பிரத்தியட்சம், அநுமிதி, உபமிதி, சாத்தமென்னும் வேறுபாட்டால் நால்வகைத்தாம். இந்நான்கும் பிரத்தியட்ச முதலிய பிரமாணங்களின் பிரயோஜனமா யிருத்த லின் 'அது பிரமாணபலம்' என்று கூறப்பட்டது.

10. வாதம்--Argumentation.

125. தத்துவம (உண்மைய)றிய வேண்டுவான்கதை வாதம். அது அட்ட (எட்டு) நிக்கிரகங்கட் கதிகர ணம். அட்ட நிக்கிரகங்களாவன: நியூநம், அதிகம், அபசித்தாந்தம், ஏத்துவாபாச பஞ்சகம்.

(கு-ரை.) உண்மைப்பொருளையறியும் விருப்பமுள்ள புருட ரிருவருக்குளுண்டாகும் வினாவிடையாகிய கதை வாதமாம். இது தத்துவநிர்ணயத்தைப் பிரயோஜனமாக வுடைத்தாயிருத்தலின் பெரும்பான்மையும் குருசிட சம்வாதமாம். அது நியூனம், அதி கம், அபசித்தாந்தம், ஏத்துவாபாசபஞ்சகமென்னு மெட்டையும் நிக்கிரகித்தற் கதிகரண (இட)மாம். நியூநம்-குன்றக்கூறல், அதி கம்-மிகைபடக்கூறல், அபசித்தாந்தம்-சித்தாந்தப்போலி, ஏத்துவா பாச பஞ்சகம் - அசித்தமுதல் காலாத்தியயாபதிட்ட மீறாயுள்ள ஏதுப்போலி ஐந்து.

11. சற்பம்---Sophistry.

126. உபயசாதநமு (சாதனமிரண்டு)டையதாய் வெல்ல வேண்டுமென்னு மிச்சையுடையான் கதை சற்பம். அஃதெல்லா நிக்கிரகத்தினுங் கிடைத்தற் கதிகர

ணம். பரபட்சந் தூஷி (நிந்தி)க்கப்படுகையிற் சுபட்ச சாதநப் பிரயோகமுடிவாயுள்ளது சற்பம்.

(கு-ரை.) பிரகாணசம (சற்பிரதிபக்க)மென்னு மேதுப் போலி உபயசாதனமுடையதாய் வெல்லவேண்டுமென்னு மிச்சை யுடையான் கதையாயிருத்த லீண்டுகெித்தறியத்தக்கதாம். சற்பம் யுக்திப்பிரமாணங்களில்வல்ல பண்டிதர்களின் வாதமாம். அது நிக்கிரகஸ்தானம் (தோல்விக்கேது) இருபத்திரண்டனுள் யாது யாது கிடைக்கின்றதோ அததற்கு அதிகாண (இட)மாம். அஃதாவது வாதம் பேசுமிடத்து நேரிடும் நிக்கிரகஸ்தானத்தை யொழித் தற்கிடமா யிருப்பதென்பதாம். அது 'பரபட்சந் தூஷிக்கப்படு கையில்' என்பதனல் விளங்கும். 'பரபட்சம் தூஷிக்கப்படுகை யில் * * * சற்பம்' என்று கூறியதினுல் பரபட்ச நிராகரணமும் சுபட்சஸ்தாபனமுமாயுள்ள வாதம் சற்பமாமெனப் பெறப்படுகின் றமையறிக. ஒருவரையொருவர் வெல்லவேண்டுமென்னும் விருப் புடைய புருடரிருவர் தமதிரண்டுபெட்சங்களையும் ஸ்தாபித்தலாகிய கதை சற்பம் எனக் கூறுவாருமுளர்.

12. விதண்டை—Cavilling.

127. சுபட்சதாபநகிநமாய் (சுபட்சத்தை ஸ்தாபித்த லின்றி)ப் பரபட்சதூஷணமாத்திர முடிவாயுள்ளகதை விதண்டை. இவ்வைதண்டிகனுக்கு ஸ்தாபிக்கும்படி யான பட்சமில்லை.

சொல்வார் பலரையுடையதாய்ப் பூர்வோத்தரபட் சத்தைப் பிரதிபாதிக்கும் வாக்கியக்கோவை கதை.

(கு-ரை.) சுபட்சஸ்தாபநமின்றிப் பரபட்சத்தைத் தூஷித்தல்மாத்திர முடிவாயுள்ள கதை விதண்டையெனப்படுதலின் அது யுக்திப்பிரமாணங்களின்றிய மூர்க்கர்களது வாதமாம். சுபட்சம்-தனது கோட்பாடு, பரபட்சம்-பிறாது கோட்பாடு. விதண்டை பேசுவோன் வைதண்டிகனெனப்படுவன். ஸ்தாபிக்கும் படியான பட்சமில்லை-நிலைநிறுத்தும்படியான ஒருபட்சமுமில்லை.

ஒருதிறத்தாசிரியர் வாதம்: விகாரம் விசியுழியென விருவகைத்து. அவற்றுள், (1) விகாரம் குருவும் சீடனுமாவது ஒருவன் நன்ஞேடொத்தவனுடனுவது மாறுபாடின்றிப் பிரமாணங்களாற் பெறப்பட்ட அருத்தங்களைத் தருக்கித்து அவற்றிலுண்டாகிய வழுக்களைக் களைந்து வழுவின்றியதனை நிர்ணயித்தல். (2) விசியுழி: சற்பம் விதண்டையென விருவகைத்து. அவற்றுள், சற்பம் பிறாது கோட்பாட்டை மறுத்துத் தனது கோட்பாட்டை நிலைநிறுத்தல். விதண்டை பிறாது கோட்பாட்டை மறுத்துத் தனது கோட்பாட்டை நிலைநிறுத்தாமை என்பர்.

13. ஏத்துவாபாசம்—Fallacy.

128. (அநுமானங் கூறுமிடத்துச்) சொல்லப்பட்ட பக்கதருமத்துவ முதலான ரூபங்களுள் ஒரு ரூபத்தாற் குறைந்தாலும் ஏதுவல்ல. அதுவுஞ் சில ரூபயோகத்தால் (ரூபத்துடன் கூடுவதால்) ஏதுவைப்போலத் தோன்ற ஏதுப்போலிகளாம். அவை அசித்தம், விருத்தம், அநைகாந்திகம், பிரகரணசமம், காலாத்தியாபதிட்டமென்னும் பேதத்தா லைவகை.

(கு-ரை.) பக்கதருமத்துவமுதலிய பஞ்சரூபங்களின்றன்மை இந்நூலின் 71, 72, 73, 74-வது பக்கங்களிற் கூறப்பட்டிருக்கின்றமை யறிக.

i. அசித்தம்—UNREAL.

129. அவற்றுள், *உதயனனல் "வியாத்தமான ஏதுவினுடைய பக்கதருமதையி (தருமத்தி)ன் ஞாநஞ் சித்தி; அதனுடைய அபாவம் அசித்தி" என்று அசித்தவிலக்கணஞ் சொல்லப்பட்டது. அதுவும் விருத்த முதலானவற்றினு முண்டென்று சாங்கரியங் (கலத்தல்) தோன்றுகின்றது; ஆபினும் எவ்வாறு சாங்கரியமின்றும் அவ்வாறு சொல்லப்படும். யாது எச்சாதநத்தின் முன்னே தோன்றுந் தோஷ ஞாநத்தில் சமர்த்தமா (சாமர்த்திய முடையதா)ம் அதுவே தோடஞாநத்தைப் பண்ணும்; தூடணமென்னுமளவு; வேறல்ல; முன்னேதோன்றின அதனுலே (அத்தூஷணத்தினுலே)யே தோஷஞாந மறிவிக்கப்படுகையிற் கதை முடிவாயின், அதனை யுபசிவித்து (காரணமாக)க் கொண்டுள்ள அந்நிய (வேறு தோஷ)த்துக் குபயோகமின்மையின்.

---

* உதயனுசாரியென்பவர் வங்காளதேசத்திற் பிறந்த சம்ஸ்கிருதபண்டித சிரேஷ்டர்களுள் ஒருவர்; தர்க்க சாஸ்திரத்தில் மிகச் சிறந்தபண்டிதர். இவரால் இயற்றப்பட்ட நூல்கள் கிரணுவலி, குசுமாஞ்சலி, ஆத்மதத்வவிவேக முதலியவை.

*யாது சாத்தியவிபரித வியாத்தியாற் றோடஞாநத்தைப்பண்ணும் அதுவே விருத்தவேதுப்போலி.

யாவை வியபிசாரதிகளா லப்படியாகும் (தோஷ ஞானத்தைப்பண்ணும்) அவை அநைகாந்திக முதலியன. அவை வியாத்தி பக்கதருமத்துவ விசிட்ட (கூடிய) ஏதுச் சொரூபஞானமில்லாமையான் முன் சொல்லப்பட்ட அசித்தங்கள்; தோடஞாநத்தைப் பண்ணுமென்னுமளவு.

அசித்தம்: ஆசிரயாசித்தம், சொரூபாசித்தம், வியாப்பியத்துவாசித்தம் என மூன்றுவகை.

(கு-ரை) கதை - பஞ்சாவயவவாக்கியம். அல்லது விதண்டையின் இறுதியிற் கூறிய கதையாம். பஞ்சாவயவம்: பிரதிஞ்ஞை ஏது, உதாகரணம், உபநயம், நிகமனமென்பன.

(i.) ஆசிரயாசித்தம்—THE FALLACY OF NON-EXISTENT LOCALITY.

130. அவற்றுள், எவ்வேதுவிற்கு ஆசிரய (பக்க)மறியப்படாது அஃதாசிரயாசித்தம். எங்ஙனம்? ககநாரவிந்தம் (ஆகாயத்தாமரை) மணமுடையது; அரவிந்த (தாமரை)த்தன்மையால்;மடுவிற்றாமரைபோல. இதிற் ககனாரவிந்தம் ஆசிரயம்; அஃது மின்றே. கடம்

* ஆகையால், யாண்டுச் சாத்தியாபாவ வியாப்தமென்னும் பெயருடையதாயும் துஷ்டஞானத்தை யுண்டுபண்ணுவதாயுமுள்ள விரோதம் தோன்றுகின்றதோ ஆண்டு அது விருத்த ஏதுப்போலி என்றும் பாடமுண்டு.

அநித்தியம்; காரியத்துவத்தால்; படம்போல என்பதும் ஆசிரயாசித்தம்.

(கு-ரை) கடம் அநித்தியமென்னு மநுமானத்தில் கடம் பக்க விலக்கணமுடையதன்று; 'ஐயமுடைய சாத்தியதருமத்தை யுடைய தருமி பக்கம்' எனக் கூறப்படுதலின். 'கடம் அநித்தியம்' என்புழி யாதும் ஐயமின்மையின் அஃது அநித்தியமென்னும் ஐய முடைய சாத்தியதருமத்தையுடைய தருமியன்றாம்; ஆகவே, பக்க மன்றாம். காரியத்துவத்தாலென்னு மேதுவிற்குக் கடம் பக்கமாக வறியப்படாமையின் அஃதாசிரயாசித்தமாயிற்று.

(ஆ.) அற்றாயின், ஆசிரய (பக்க)மான கடாதிகளுண்மையாற் காரியத்துவ ஏது ஆசிரயாசித்தமன்று; சித்தசாதநமாம்; சித்தமான கடத்தின் அநித்தியத்துவத்தைச் சாதிக்கையால்.

(கு-ரை.) காரியத்துவத்தா லென்னும் ஏது ஆசிரயாசித்த மாகாது; கடமென்னுமாசிரயமிருத்தலின். ஆனால் சித்தசாதன மென்னும் தோஷமாம் என்பது ஆசங்கை. ஒரு காரணத்தாற் சித்தித்தவொன்றை மற்றோர் காரணத்தாற் சாதித்தல் சித்த சாதனமென்னுந் தோஷமாம். ஈண்டுப் பிரத்தியட்சப்பிரமாணத்தினாற் சித்தமான கடத்தின் அநித்தியத்துவத்தை அநுமானப் பிரமாணத்தினாற் சாதித்தல் சித்தசாதனமாம்.

(ச.) இங்ஙனமன்று; அநுமானத்திற்குச் சொரூபத்தாலொன் றாசிரயமன்று; மற்றென்னெனின், ஐயத்தால் (ஐயத்திற்கு விஷயமான தர்மத்தோடு கூடிய தன்மையால்).

"அநுபலத்தத்தினும் (அநுபலத்திப்பொருளினும்) நிச்சிதார்த்தத்தினும் (துணிந்தபொருளினும்) நியாயம் (அநுமானம்) பிரவிர்த்திக்காது; மற்றெவ்விடத்தெனின், ஐயப்படும் பொருளில்" என்று பாஷியகாரரால் சொல்லப்பட்டிருக்கின்றது.

கடத்திலே அநித்தியத்துவத்திற் கையமில்லை; அநித்தியத்துவ நிச்சயத்தினுல். சொரூபத்தால் கடமிருப்பினும் அநித்தியத்துவ சந்தேகமின்மையால் இஃது (கடம்) ஆசிரய (பக்க)மன்று. ஆசிரயம் சித்திக்காமையால், (காரியத்துவத்தால் என்பது) ஹேதுவன்று:

(கு-ரை.) கடம் அநித்தியம்; காரியத்துவத்தால்; படம்போல என்னும் அநுமானம் இந்நூலின் பக்கவிலக்கணத்தின் குறிப்புரையிற் கூறிய பக்கவிலக்கணத்தின்படி சித்தசாதனமன்றாம். இலிங்கபராமரிசவடிவ அநுமானத்திற்குப் பக்கம் சொரூபத்தா லாசிரயமாயிராது ஐயத்தா லாசிரயமா யிருத்தலின் 'அநுமானத்திற்குச் சொரூபத்தா லொன்றாசிரயமன்று; மற்றென்னெனின் ஐயத்தால்' என்று கூறப்பட்டது. 'இம்மலை தீயுடையது; புகையுண்மையின்' என்புழி மலையாகிய பக்கம் தீயின் வியாப்பியமான புகையுடையதிம்மலையென்னு மநுமானத்திற்குச் சொரூபத்தா லாசிரயமாகாது ஐயத்தா லாசிரயமாயிருத்தலறிக.

'இம்மலை தீயுடையது; புகையுண்மையின்' என்புழி மலையில் தீயுடைமையின் ஐயமிருப்பதுபோன்று 'கடம் அநித்தியம்; காரியத்துவத்தால்' என்புழிக் கடத்தில் அநித்தியத்துவ முடைமையின் ஐயமிராமையின் கடம் அநித்தியத்துவத்தின் வியாப்

பியமான காரியத்துவமுடையது இக்கடமென்னும் அநுமானத்திற்கு ஐயத்தா லாசிரயமன்றாம்.

ஒன்றன் முழுவடிவமும் சொரூபமெனப்படும். அநித்தியத்துவத்தின் வியாப்பியமான காரியத்துவம் கடசொரூபமாயே யிருத்தலின் அதில் (கடத்தில்) அது சொரூபத்தா லாசிரயமா யிருக்கின்றது.

கடம் அநித்தியம்; காரியத்துவத்தால் என்புழி ஐயமின்மையின் அஃதநுமான மாகாதெனப் பாஷியகாரர் (வாச்சியாயனமுனிவர்) வசனங்காட்டி மறுக்கப்பட்டது. கடம் அநித்தியத்துவமென்னுஞ் சாத்தியசந்தேகத்திற் கதிகரண (இட)மாகப் பெறப்படாமையின் அது பக்கமாகாது; ஆகாதாகவே, காரியத்துவத்தால் என்பது ஏதுவாகாதென்று கூறப்பட்டதென்க.

(ii.) சொருபாசித்தம்—THE FALLACY WHERE THE NATURE ALLEGED DOES NOT REALLY RESIDE IN THE SUBJECT.

131. எவ்வேது ஆசிரயத்தி (பக்கத்தி)ல் அறியப்படாது அது சொருபாசித்தம். எங்ஙனம்? சாமாநியம் அநித்தியம்; காரியத்துவத்தா லென்பது. காரியத்துவஹேது ஆசிரய (பக்க)மான சாமாநியத்திலில்லை.

(கு-ரை.) சாமாநியம் அநித்தியம்; காரியத்துவத்தாலென்னுமிடத்துச் சாமாநியம் பக்கமும், அநித்தியத்துவம் சாத்தியமும், காரியத்துவத்தாலென்பது ஏதுவுமாம். சாமாநியமென்னும் பக்கத்தில் காரியத்துவத்தாலென்னுமேது சொருபமாகவில்லை; அது (சாமாநியம்) நித்தியபதார்த்தங்களுள் ஒன்றாயிருத்தலின். பக்கமாகிய சாமாநியத்தில் காரியத்தன்மையின்

அபாவ மிருத்தலின் காரியத்துவவேது சொரூபாசித்தமாயிற் றென்க.

[“சப்தம் அநித்தியம்; முயற்சியோடுகூடி யிருப்ப தால். இதில் சப்தம் பக்கம்; அநித்தியத்துவம் சாத் தியம்; முயற்சியோடுகூடியிருப்பதால் ஏது. இவ்வேது எல்லாச் சப்தங்களினு மின்று. முதலாவது சப்தத் திற்கு முயற்சியோடுகூடியதன்மை புருஷ வியா பாரத்தி லிருக்கின்றது.

சப்தத்தாலுண்டான சப்தத்தில் முயற்சியோடு கூடியதன்மை யின்று. ஆதலின் இவ்வேது பாகா சித்தம்.

முயற்சியோடு கூடியதன்மை யென்பது யாது? கூறப்படுகின்றது:—

முதலில் ஆத்மமன சையோகம்; பிறகு ஞானம்; அப்பால் சொல்லவேண்டு மென்னும் இச்சை; பிறகு யத்தனம் (முயற்சி); பிறகு கோஷ்ட (கண்ட)த்திலிருக் கும் வாயுவிற்குப் பூர்வதேச(இட)விபாகம்; பிறகு கண் டாதிதேசசையோகம்; பிறகு முதலாவது சப்தம் உண்டாகின்றது; இதற்கு(முதலாவது சப்தத்திற்கு)த் தான் முயற்சியோடுகூடியதன்மை யிருக்கின்றது:

முதலாவது சப்தத்தாலுண்டான ஏனையசப்தங்கட் கெல்லாம் முயற்சியோடுகூடியதன்மை யின்மையின் இவ்வேது பாகாசித்தம்.

முதலாவது சப்தத்தில் ஆத்மமன சையோகத்தா லுண்டான ஞானதிக் கிரமத்தினல் முயற்சியோடு கூடிய தன்மை புருஷவியாபாரத்தி லிருக்கின்றது; இரண்டாவது முதலிய சப்தங்களிலின்று. ஆதலின் ஹேதுவானது பக்ஷத்தின் ஏகதேசத்திருப்பதால் பாகா சித்தம்" இவ்வளவு சில பிரதியிலதிகமாயிருக்கின்றது].

பாகாசித்தமும் சொரூபாசித்தமே. எங்ஙனம்?

பிருதிவி முதலிய நான்கின் பரமாணுக்களும் அநித்தியம்; கந்தமுடைமையால் என்பது. கந்த முடைமை பக்கமாகும் எல்லாவற்றினுமில்லை; பிரு திவிமாத்திரத்திருத்தலின். ஆதலின், ஒருகூற்றி (பது தியி)லே சோருபாசித்தம்.

(கு-ரை.) தனதுபக்கத்தி னேகதேசத்தி லறியப்பட்டு ஏக தேசத்தி லறியப்படாதிருக்குமேது பாகாசித்தமாம். ஏகதேசம்-ஓரிடம். பாகம்-பகுதி. தனது பட்சத்திலில்லாத ஏது சொரூபா சித்தமெனப்படுதலின் 'பாகாசித்தமும் சொரூபாசித்தமே' என்று கூறப்பட்டது.

கந்தமுடைமையா லென்னுமேது பிருதிவிப்பரமாணுவிற் சித்தமாயும் (பெறப்பட்டும்) ஏனைய பரமாணுக்களி லசித்தமாயு மிருத்தலின் அது பாகாசித்தமாயிற்றென்க.

அப்படியே (1) விசேடணசித்தம், (2) விசேடியா சித்தம், (2) அசமர்த்த விசேடணசித்தம், (4) அச மர்த்த விசேடியாசித்தம் முதலானவை சொரூபா சித்த பேதங்கள். அவற்றுள்,

(1.) விசேடணாசித்தம்.

132. விசேடணாசித்தம் எங்ஙனம்? சத்தம் நித்தியம்; திரவியத்துவமாய்ப் பரிசமில்லாமை யுடைமையின் என்பது. இங்கே திரவியத்துவ விசிஷ்டபரிசமில்லாமையுடைமை ஹேது; பரிசமில்லாமை மாத்திரமன்று. சத்தத்தில் திரவியத்துவமுமில்லை; குணமாதலால். ஆதலால், விசேடணாசித்தம். திரவியத்துவமென்னும் விசேடணமின்மையின் அதனோடு கூடிய பரிசமில்லாமையு மில்லை; *விசேடணத்தினின்மை

*'விசேடணத்தினின்மையால்விசிஷ்டமுமில்லாமையால். எங்ஙனம்? (விசேடியனான) புருடனுளனாயினும் (விசேடணமான) தண்டமின்மையின் தண்டவிசிஷ்டபுருடனிலனே' என்றமையின் விசேடணத்தின் அபாவவியவகாரம் விசிட்டத்திற் சம்பவிக்கின்றமை காண்க.

(1) சிலவிடத்து விசேடணத்தின் தர்மவியவகாரம் விசிட்டத்திலும், (2) சிலவிடத்து விசேடியத்தின் தர்மவியவகாரம் விசிட்டத்திலும் (3), சிலவிடத்து விசேடண விசேடியங்களின் தர்மவியவகாரம் விசிட்டத்திலும் வரும்.

(1) தடியால் கடாகாசம் அழிந்ததென்னுமிடத்து விசேடணமான கடம் தடியால் அழிந்ததேயன்றி விசேடியமான ஆகாசம் அழியவில்லை; அங்ஙனமாகவும், அழிந்ததென்னும் வியவகாரம் விசிட்டமான கடாகாசத்தில் வருகின்றது.

(2) தண்டபுருஷ னுறங்குகின்றானென்னுமிடத்து உறக்கம் விசேடியனான புருஷனிடத்துச் சம்பவிக்கின்றதேயன்றி விசேடணமான தண்டத்திற் சம்பவிக்கவில்லை; அங்ஙனமாகவும்,

யால் விசிஷ்டமு மில்லாமையால். எங்ஙனம்? புருட னுளனும் தண்டமின்மையின் தண்டவிசிஷ்ட (தண் டத்தோடு கூடிய) புருடனிலனே. ஆதலால், பரிசமில் லாமை யுடைத்தாயினும் (திரவியத்துவமாய்ப் பரிச மில்லாமை யுடைமையின் என்னும்) விசிஷ்ட ஹேது அபாவத்தால் சோருபாசித்தமாம்.

(கு-ரை.) எவ்வேதுவின் விசேடணம் பக்கத்தில் அசித்தமா யிருக்கின்றதோ அவ்வேது விசேடணுசித்தமாம். சத்தம் நித்தியம்; திரவியத்துவமாய்ப் பரிசமில்லாமையுடைமையின் என்புழித் திர வியத்துவமென்னும் விசேடணம் பக்கத்தில் அசித்தமாயிருத்த லின் திரவியத்துவமாய்ப் பரிசமில்லாமை யுடைமையினென்னு மேது விசேடணுசித்தமாம். பட்சமாகியசத்தத்தில் பரிசமில்லாமை யிருப்பினும் திரவியத்துவத்தோடுகூடிய பரிசமில்லாமையின் அபாவமிருத்தலின் திரவியத்துவமாய்ப் பரிசமில்லாமை யென்னு மேது சொரூபாசித்தமாயிற்று. விசேடண முடையது விசிட்ட

உறங்குதலென்னும் வியவகாரம் விசிட்டமான தண்டபுருஷ னிடத்து வருகின்றது.

(3) படைக்கைமறவன் பகைமேற்சென்றானென்னுமிடத்து விசேடணமான படையும் விசேடியமான மறவ (வீர)னும் பகை மேற் செல்லுதலின் அவ்விரண்டனது பகைமேற் செல்லுதலாகிய வியவகாரம் விசிட்டத்தில் (படைக்கை மறவனிடத்தில்) வருகின் றது.

இந்நூலுள் விசேடணத்தினின்மையால் விசிஷ்டமுமில்லா மையால் விசேடியமின்மையால் விசிட்டசொரூபமுமில்லை என்று கூறப்படுதலின் இம்மூன்று மீண்டுக்கூற லவசியமாயிற்றெனக.

மெனப்படும். பரிசமில்லாமை யென்பது திரவியத்துவ மென்னும் விசேடண முடையதாகக் கூறப்பட்டமையின் அது விசிட்டமா யிற்று.

(2.) விசேடியாசித்தம்.

133. விசேடியாசித்தம் எங்ஙனம்? சத்தம் நித்தியம்; பரிசமின்மையாய்த் திரவியத்துவத்தை யுடைமையால் என்பது. ஈண்டும் விசிஷ்டம் ஹேது. விசேடிய மின்மையால் விசிஷ்ட சொரூபமு மில்லை.

(கு-ரை.) எவ்வேதுவின் விசேடியம் பக்கத்தில் அசித்தமா யிருக்கின்றதோ அவ்வேது விசேடியாசித்தமாம். பரிசமின்மை யாய்த் திரவியத்துவத்தையுடைமையால் என்னுமேதுவில் பரிச மின்மை விசேடணமும் திரவியத்துவம் விசேடியமுமாம். சத்த மாகிய பட்சத்தில் பரிசமின்மையிருப்பினும் பரிசமின்மையோடு கூடிய திரவியத்துவமுடைமையின் அபாவமிருத்தலின் பரிச மின்மையாய்த் திரவியத்துவத்தையுடைமையா லென்னுமேது சொரூபாசித்தமாயிற்று. விசேடணமாவது விசேடியமாவது உள்ள தாகப் பெறப்படாவிடத்து விசிட்டமுமில்லையென்பது நியமம். ஈண்டுப்பக்கமாகிய சத்த குணத்தில் திரவியத்திருக்கும் திரவியத் தன்மையின்மையின் அது பரிசமின்மையோடு கூடிய திரவியத் துவமுடைய தன்றாம். ஈண்டு விசேடியம் பெறப்படாமையின் விசிட்டமும் பெறப்படவில்லை யென்க.

(3.) அசமர்த்த விசேடணாசித்தம்.

134. அசமர்த்த விசேடணாசித்தம் எங்ஙனம்? சத்தம் நித்தியம்; குணத்துவமுடையதாய்க் காரணாபாவத்தை யுடைமையால் என்பது. இங்கே விசேடணத்திற்குச்

சிறிதும் சாமர்த்தியம் இல்லை; விசேடியமான காரணு பாவத்திற்கே நித்தியத்துவத்தைச் சாதிக்க வலியுடைமையால். ஆதலால், அசமர்த்தம் விசேடணம்; சொரூபாசித்த மென்பது விசேடணுபாவத்தால் விசிட்டமு மின்மையால்.

(கு-ரை.) எவ்வேதுவின் விசேடணம் பக்கத்தில் அசமர்த்தமா யிருக்கின்றதோ அவ்வேது அசமர்த்த விசேடணுசித்தமாம்; சமர்த்தம்-வலியுடையது; அசமர்த்தம்-வலியின்றியது. வலி-சாமர்த்தியம். 'குணத்துவமுடையதாய்க் காரணுபாவத்தையுடைமையால்' என்னுமேதுவில் குணத்துவமுடைமை அசமர்த்த விசேடணமும், காரணுபாவமுடைமை விசேடியமுமாம். பட்சமாகிய சத்தத்தில் நித்தியத்துவத்தைச் சாதிக்கவந்த ஏதுவின் விசேடணம் அசமர்த்தமா யிருத்தலின் அது சொரூபாசித்தமாயிற்று. ஈண்டுக் குணத்துவ முடைமையென்னும் விசேடணம் சமர்த்தமெனப் பெறப்படாமையின் 'குணத்துவமுடையதாய்க் காரணுபாவத்தை யுடைமையால்' என்னும் விசிட்டமும் சமர்த்தமெனப் பெறப்படாதாயிற்றென்க.

எங்ஙனம் புருடனுளனாயினும் தண்டமின்மையாற் றண்டவிசிட்ட புருடனிலனே அங்ஙனமே பட்சமாகிய சத்தத்தில் நித்தியத்துவத்தைச் சாதிக்கக் காரணுபாவம் சமர்த்தமாயினும் குணத்துவம் அசமர்த்தமா யிருத்தலின் குணத்துவவிசிட்ட. காரணுபாவமின்றாம்.

(ஆ.) அற்றாயின், விசேஷணமான குணத்துவம் சத்தத்திலிருக்கின்றதே; எப்படி விசேஷணமில்லை ?

(ச.) அஃதொக்கும். குணத்துவம் உண்மையே; ஆயினும், அது விசேஷணமன்று.

யாது அந்நியத்தைத் தள்ளுதலென்னும் பயனுடையது அதுவே ஏதுவிற்கு விசேஷணமாம்; குணத்துவம் பயனுடைத்தன்று. ஆதலால், அசமர்த்த மென்று சொல்லப்பட்டதே.

(கு-ரை.) 'குணத்துவமுடையதாய்க் காரணாபாவத்தையுடைமையால்' என்னும் ஏதுவின் குணத்துவம் அந்நியத்தைத் தள்ளுதலென்னும் பயனுடைய தாகாதிருத்தலின் அஃதசமர்த்த விசேடணமாம். ஆதலின்; அது பட்சத்திருப்பினும் பயனியாதுமின்று. அந்நியத்தைத் தள்ளுதலெனினும் * வியாவர்த்தகமெனினு மொக்கும்.

---

* வியாவர்த்தகம் ஒவ்வோரவசரம்பற்றி (1) விசேடணம், (2) உபாதி, (3) உபலட்சணம், (4) உபாஞ்சகம் என நால்வகைத்தாம்.

(1) காரியத்திற் சம்பந்தமுடையதாய் நிகழ்காலத்திருக்கும் வியாவர்த்தகம் விசேடணமாம். எங்ஙனம்? தண்டீ புருஷன் வந்தானென்னுமிடத்துத் தண்டம் வருதலாகிய காரியத்திற் சம்பந்தமுடையதாய் அப்புருஷனைக் குண்டல புருஷன்முதலானோரினின்றும் வியாவர்த்தகமாய் (வேறுபிரித்தறிவிப்பதாய்) வியாவர்த்தியத்திற் (வேறுபிரித்தறிவிக்கப்பட்ட புருஷனுக்)குச் சமானமான தேசகாலங்களிலிருத்தலின் அஃதவனுக்கு **விசேடணமாம்.**

(2) காரியத்திற் சம்பந்தமின்றியதாய் நிகழ்காலத்திருக்கும் வியாவர்த்தகம் உபாதியாம். எங்ஙனம்? கடாகாசமென்னுமிடத்துக் கடம் கடாகாசத்தின் அதிகரண (ஆசிரய)த்தன்மை வடிவ காரியத்திற் சம்பந்தமின்றியதாய்க் கடாகாசத்தைப் படாகாச முதலியவற்றினின்றும் வியாவர்த்தகமாய் வியாவர்த்தியத்திற்

(4) அசமர்த்த விசேடியாசித்தம்.

135. அசமர்த்த விசேடியாசித்தம் எங்ஙனம்? இதிலே முன்பின்னான பிரயோகம்.

சத்தம் நித்தியம்; அகாரணத்துவ முடையதாய்க் குணத்துவமுடைமையால் என்பது. இங்கே விசே

(கடாகாசத்திற்)குச் சமானமான தேசகாலங்களி லிருத்தலின் அஃததற்கு உபாதியாம்.

(3) காரியத்திற் சம்பந்தமின்றியதாய் வியாவர்த்தகமாயிருப்பது உபலட்சணமாம். எங்ஙனம்? காகமுடைய வீட்டிற்குப்போ என்னுமிடத்துக் காகம் போதலாகிய காரியத்திற் சம்பந்தமின்றியதாய் (தானிருக்கினும் இல்லாவிடினும் போதலாகிய காரியமிருத்தலின்) அவ்வீட்டை ஏனையவீட்டினின்றும் வேறுபிரித்தறிவிப்பதா யிருத்தலின் அஃததற்கு உபலட்சணமாம்.

இதுபற்றி இந்நூலின் 5-வது பக்கத்திலு மெழுதப்பட்டிருக்கின்றமை காண்க.

(4) இயல்பாய்ப் பெறப்பட்ட தருமவடிவ வியாவர்த்தகம் உபரஞ்சகமாம். இதுவே சொரூபலட்சணமாம். பிருதிவித்துவ சாமானியமுடையது பிருதிவி என்னுமிடத்துப் பிருதிவிக்குப் பிருதிவித்துவ சாமானியம் இயல்பாய்ப் பெறப்பட்ட தருமவடிவ வியாவர்த்தகமா யிருத்தலறிக.

இதுபற்றி இந்நூலின் 5-வது பக்கத்திலு மெழுதப்பட்டிருக்கின்றமை காண்க.

விசேடணமுடையது விசிட்டம், உபாதியுடையது உபகிதம், உபலட்சணமுடையது உபலட்சிதம், உபரஞ்சகமுடையது உபரஞ்சிதம் என்று கூறப்படும்.

ஷணமாத்திரமே நித்தியத்துவத்தைச் சாதித்தலின் வலியுடையது. விசேடியம் அசமர்த்தம்; சொரூபாசித்தமென்பது விசேடியா பாவத்தால் விசிட்டமின்மையால், (அகாரணத்துவ முடையதாய்க் குணத்துவமுடைமையால் என்னும்) விசிஷ்ட மேதுவாய்க் கொண்டமையால். ஒழிந்தது முன்போல.

(கு-ரை.) எவ்வேதுவின் விசேடியம் பக்கத்தில் அசமர்த்தமாயிருக்கின்றதோ அவ்வேது அசமர்த்த விசேடியாசித்தமாம். 'அகாரணத்துவ முடையதாய்க் குணத்துவமுடைமையால்' என்னுமேதுவில்அகாரணத்துவமுடைமை விசேடணமும்,குணத்துவமுடைமை அசமர்த்தவிசேடியமுமாம். பட்சமாகிய சத்தத்தில் நித்தியத்துவத்தைச் சாதிக்கவந்த ஏதுவின் விசேடியம் அசமர்த்தமாயிருத்தலின் அது சொரூபாசித்தமாயிற்று. ஈண்டுக் குணத்துவமுடைமை யென்னும் விசேடியம் சமர்த்தமெனப் பெறப்படாமையின் 'அகாரணத்துவ (காரணாபாவ) முடையதாய்க் குணத்துவமுடைமையால்' என்னும் விசிட்டமும் சமர்த்தமெனப் பெறப்படாதாயிற்று. 'ஒழிந்ததுமுன்போல' என்றமையின், விசேடியமான குணத்துவம் சத்தத்திலிருக்கின்றதே; எப்படி விசேடியமில்லை என்றும் வினவும், அஃதொக்கும். குணத்துவம் உண்மையே; ஆயினும் அது விசேடியமன்று. யாது அந்நியத்தாற்றள்ளப்பட்டதென்றும் பயனுடையது அதுவே ஏதுவிற்கு விசேடியமாம். குணத்துவம் (பக்கத்திருப்பினும் அந்நியத்தாற் றள்ளப்பட்டதென்னும்) பயனுடையதன்று; ஆகலால் அஃதசமர்த்தமாம் என்னும் விடையுங்கொள்க.

பாவபதார்த்தங்களுள் காரணாபாவமுடையது நித்தியபதார்த்தமாம். பாவபதார்த்தங்களுள் ஒன்றை நித்தியமெனச் சாதிக்க

வேண்டின் அதற்குக் காரணாபாவத்தை ஏதுவாகக் கூறலே அமையும்; அங்ஙனங் கூறாது 'குணத்துவ முடையதாய்க் காரணாபாவத்தை யுடைமையால்'என்றும், 'அகாரணத்துவமுடையதாய்க் குணத்துவ முடைமையால்' என்றுங் கூறல் அமையாதெனக் காட்டப்பட்ட தென்க.

(iii.) வியாப்பியத்துவாசித்தம்—THE FALLACY WHERE THE ALLEGED INVARIABLENESS OF CONCOMITANCY IS NOT REAL.

156. எங்கே ஏதுவின் வியாத்தி அறியப்படாது அதுவே வியாப்பியத்துவாசித்தம். அஃதிருவகை; ஒன்று சாத்தியத்துடனே உடனிகழ்ச்சியதில்லாதது; மற்றொன்று சோபாதிக (உபாதியோடு கூடிய) சாத்திய சம்பந்தமுடையது. அவற்றுள்,

முதலது எங்ஙனம்? (சப்தம் *கணிகம்; சத்துத் தன்மையால்) யாது சத்து அது கணிகம்; எங்ஙனம்? ஜலதர (மேக) படலம். விவாதபத (விவாதத்திற்கு விஷய) மாகிய சப்தாதியும் சத்து. இங்கே சப்தாதி பக்கம், கணிகத்துவம் சாத்தியம், சத்துவம் ஹேது. இவ்வேதுவிற்குக் கணிகத்துவத்தோடு வியாப்தியிற் பிரமாண மில்லை.

(கு-ரை.) இதுபற்றி இந்நூலின் 84-வது முதல் 87-வது பக்கவரையிலும் எழுதப்பட்டிருக்கின்றமை காண்க.

---

* எப்பதார்த்தத்திற்குத் தனதுற்பத்திக் கணத்தின் பிற்கணத்திற் சம்பந்தம் சம்பவிப்பதில்லையோ ஆனால் உற்பத்திக் கணமாத்திரத்திலேயே சம்பந்தம் சம்பவிக்கின்றதோ அப்பதார்த்தம் கணிகமெனப்படுகின்றது.

இரண்டாவது எங்ஙனம்? கருப்பத்தி லிருக்கின்ற மைத்திரி தநயன் கரியன்; மயித்திரிமகன்மையால்; காணப்பட்ட மயித்திரி தனயர் (புத்திரர்) கூட்டம் போல. இங்கே மயித்திரி மகன்மையால் கருமை சாதிக்கப்படும். மயித்திரிமகன்மை கருமையிற் பிர யோசகம் (ஏது) அன்று; மற்றென்னெனின்; சாகா தியாகார பரிணாமமே (கீரைமுதலிய ஆகாரத்தின் திரிபே) பிரயோசகம். பிரயோசகம் உபாதியென்று கூறப்படும். ஆதலான், மைத்திரி மகன்மைக்குக் கரு மைச் சம்பந்தத்தில் சாகாதி ஆகாரப் பரிணாமமே உபாதி. அஃதெங்ஙனம்? தீக்குப் புகைச் சம்பந்தத்தில் ஈரவிறகின் சையோகம் உபாதி. ஈண்டு உபாதியின் சம்பந்தத்தால் வியாப்தியில்லை யென்பது.

மைத்திரி மகன்மையா லென்னும் ஹேது வியாப் பியத்துவாசித்தம்.

(கு-ரை.) இதுபற்றி இந்நூலின் 49-வது பக்க முதல் 52-வது பக்கவரை எழுதப்பட்டிருக்கின்றமை காண்க.

யாகத்துட்பட்ட கொலைமை அதன்ம சாதனம்; கொலைமையால்; யாகப்புறத்துக் கொலைமைபோல. ஈண்டுக் கொலைமை அதன்மசாதனத்தின்கட் பிரயோ சகமன்று; மற்றென்னை? நிஷித்தத்துவமே (விலக்கே) உபாதியென்பது. முன்போல ஈண்டும் உபாதியுண் மையால் கொலைமையேது வியாப்பியத்துவாசித்தம்.

(ஆ) அற்றாயின், சாதன அவ்வியாபகமாய்ச் சாத்திய வியாபகமாயது யாது அஃதுபாதி யென்பது உபாதியி னிலக்கணம். அது நிஷித்தத்துவத்திலில்லை. அஃதெங்ஙனம் உபாதி?

(ச.) இங்ஙனமன்று; நிஷித்தத்துவத்தில் உபாதி இலக்கண முண்மையால்.

அங்ஙனமன்றோ, சாத்தியமான அதன்ம சாதனத்துவத்திற்கு வியாபகம் நிஷித்தத்துவம்; எங்கே எங்கே அதன்மசாதனத்துவம் அங்கே அங்கே நிஷித்தத்துவத்தின் இருப்புண்மையால்.

எங்கேயெங்கே கொலைமை அங்கேயங்கே நிஷித்தத்துவ மவசியமன்று; யாகத்திற் கங்கமான கொலையில் வியபிசாரத்தினால்.

யாக அங்கமான கொலையில் கொலைமையுண்டு; நிஷித்தத்துவமில்லை.

இப்படியே மூன்று அசித்தங்களும் காட்டப்பட்டன.

(கு-ரை.) இதுபற்றி இந்நூலின் 51, 87, 88, 89, 90-வது பக்கங்களி லெழுதப்பட்டிருக்கின்றமை காண்க.

ii. விருத்தம்—ARGUMENTS THAT PROVE THE REVERSE.

137. சாத்தியத்தின் விபரீத (அபாவ)த் தோடு வியாப்தமான ஏது விருத்தம், எங்ஙனம்? சத்தம் நித்தியம்; காரியத்துவத்தா லென்பது.

இங்கே நித்தியத்துவம் சாத்தியம்; காரியத்துவம் ஏது. அதன (நித்தியத்தின)து மாறுபாடான அநித்தியத்தே காரியத்துவம் வியாப்தம்.

யாதுகாரியம் அஃதனித்தியமே. ஆதலால், சாத்திய விபரிதத்தை வியாபித்தலால் காரியத்துவ ஹேது விருத்தமாகும்.

(கு-ரை.) இதுபற்றி இந்நூலின் 92, 93வது பக்கங்களி லெழுதப்பட்டிருக்கின்றமை காண்க.

iii. அநைகாந்திகம்—ARGUMENTS THAT PROVE TOO MUCH.

158. சாத்தியசம்சய ஏது அநைகாந்திகம். அது சவ்விய பிசார (வியபிசாரத்தோடு கூடிய) ஏது வென்றுங் கூறப்படும். அது சாதாரணம், அசாதாரணமென இருவகைத்து. அவற்றுள்,

(1.) முதலாவது பக்க, சபக்க, விபக்க விருத்தி (இருத்தல்). எங்ஙனம்? சத்தம் நித்தியம்; பிரமேயத்துவத்தால் (அளவையால் அளக்கப்படுந் தன்மையால்) என்பது.

பிரமேயத்துவ ஏது பக்கமான சத்தத்திலும், சபக்கமான நித்தியத்தி (ஆகாசாதி நித்தியபதார்த்தங்களி) லும், விபக்கமான அநித்தியத்தி (கடாதி அநித்திய பதார்த்தங்களி)லும் இருக்கின்றது; எல்லாம் பிரமேயமாதலால்.

(2.) இரண்டாவது சபக்க விபக்கங்களி னில்லாமல் பக்கமாத்திரத்திருப்பது. எங்ஙனம்?

நிலம் நித்தியம்; கந்தமுடைமையால். இங்கே கந்தமுடைமை ஏது சபக்கமான நித்திய வியோமாதியி (ஆகாச முதலியவற்றி) னின்றும், விபக்கமான அநித்திய சலாதியி (நீர் முதலியவற்றி)னின்றும் நீங்கினது; கந்த முடைமைக்குப் பிருதிவிமாத்திரத் திருப்புண்மையால்.

வியபிசாரங் கூறப்படுகின்றது:—(இவ்வேதுவிற்குச் சபக்க விபக்கமென்னும்) நியமம் சம்பவியாமையின் சபக்க விபக்கமுடைய ஏதுவிற்குச் சபக்கத்திலிருந்து விபக்கத்தில் நீக்கமாய்நிற்றலே நியமமாம்; கமகாங்கத் தன்மையினல் (அநுமிதிக் குபயோகமா யிருக்குந்தன்மையால்): சாத்தியவிபரீத வியாத்தியுடன் கூடிய அந்நியமாபாவமே (நியமமின்மையே) வியபிசாரம்.

அஃது (வியபிசாரம்) இருவகையாற் கூடும்; சபக்க விபக்கத்தி லிருத்தலானும் அவற்றி னில்லாமையானும்.

(கு-ரை.) அநைகாந்திக வேதுவினல் சாத்திய நிச்சயமுண்டாகாமையின் 'சாத்திய சம்சய ஏது அநைகாந்திகம்' என்று கூறப்பட்டது. 'பிரமேயத்துவத்தால்' 'கந்தமுடைமையால்' என ஈண்டுக்கூறிய ஏதுக்களால் சாத்திய நிச்சயமுண்டாகாமையறிக. 'மலைதீயுடைத்து; புகையுடைமையான்' என்புழிப் புகையுடைமையாகிய ஏதுவிற்கு நியமம் அது சபக்கமாகிய அடுக்களையிலிருத்த

லும் விபக்கமாகிய மடுவினிக்கமுமாம். அங்ஙனம் ஈண்டுக்கூறிய இரண்டேதுவிற்கும் நியமம் சம்பவியாமையின் அவை வியபிசார முடையனவாம். சத்தம் நித்தியம்; பிரமேயத்துவத்தால் என்புழிப் பிரமேயத்துவ ஏது நித்தியமென்னும் சாத்தியத்திற்கு விபரீதமான அநித்தியத்துடனும் வியாத்தியுடையதாயும், 'நிலம் நித்தியம்; கந்தமுடைமையால்' என்புழிக் கந்தமுடைமையேது நித்தியமென்னும் சாத்தியத்திற்கு விபரீதமான அநித்திய கடாதிகளுடனும் வியாத்தியுடையதாயு மிருத்தலின் 'சாத்திய விபரீத வியாத்தியுடன் கூடிய அந்நியமாபாவமே வியபிசாரம்' என்று கூறப்பட்டது. 'சபக்க விபக்கத்திருத்தலானும்' என்றது சாதாரண அநைகாந்திக ஏதுவை; 'அவற்றினில்லாமையானும்' என்றது அசாதாரண அநைகாந்திக ஏதுவை. அநைகாந்திக ஏதுவைப் பற்றி இந்நூலின் 93, 94, 95, 96-வது பக்கங்களி லெழுப்பட்டிருக்கின்றமை காண்க. இந்நூலின் 96வது பக்கத்தில் 'அநைகாந்திகம் ஏழ்வகைத்தா மென்பாருமுண்டு; பின்னர்க்காட்டுதும்' என்றது வருமாறு:—

அவை (1) பக்கத்திரய வியாபக அநைகாந்திகம், (2) பக்க வியாபக சபக்க விபக்க ஏகதேசவிருத்தி அநைகாந்திகம், (3) பக்க சபக்க வியாபக விபக்க ஏகதேசவிருத்தி அநைகாந்திகம், (4) பக்க விபக்க வியாபக சபக்க ஏகதேசவிருத்தி அநைகாந்திகம், (5) பக்கத்திரய ஏகதேசவிருத்தி அநைகாந்திகம், (6) பக்க சபக்க ஏகதேசவிருத்தி விபக்க வியாபக அநைகாந்திகம், (7) பக்க விபக்க ஏகதேசவிருத்தி சபக்க வியாபக அநைகாந்திக மென்பனவாம். திரயம்—மூன்று; ஏகதேசவிருத்தி—ஓரிடத்திருத்தல்.

(1.) சத்தம் அநித்தியம்; பிரமேயத்தன்மையா லென்புழிப் பிரமேயத்தன்மையா லென்னுமேது: பக்கமாகிய சத்தத்திலும், சபக்கமாகிய கடாதிகளிலும், விபக்கமாகிய வான்முதலியவற்றி

லும் வியாபித்திருத்தலின் பக்கத்திரய வியாபக அனைகாந் திகமாம்.

(2.) சத்தம் அநித்தியம்; பிரத்தியட்சமாயிருத்தலின் என் புழிப் பிரத்தியட்சமாயிருத்தலி னென்னுமேது: பக்கமாகிய சத்த முற்றும் வியாபித்தும், சபக்கத்தின் ஒருகூருய துவியணுகத்தில் வியாபியாது மற்றெருகூருய திரியணுகாதிகளில் வியாபித்தும், விபக்கத்தின் ஒருகூருய பரமாணு முதலியவற்றில் வியாபியாது மற்றெருகூருய ஆன்மாவில் வியாபித்து மிருத்தலின் பக்கவியாபக சபக்கவிபக்க ஏகதேசவிருத்தி அனைகாந்திகமாம்.

(3.) இது கோ; கோடுடைமையின் என்புழிக் கோடுடை மையி னென்னுமேது: பக்கமாகிய இது என்பதிலும் சபக்கமாகிய ஏனைய கோக்களிலும் வியாபித்தும், விபக்கத்தின் ஒருகூருய குதிரை முதலியவற்றில் வியாபியாது மற்றெருகூருய யானை முதலியவற்றில் வியாபித்து மிருத்தலின் பக்க சபக்க வியாபக விபக்க ஏகதேசவிருத்தி அனைகாந்திகமாம்.

(4.) இது கோவன்று; கோடுடைமையின் என்புழிக் கோடு டைமையி னென்னுமேது: பக்கமாகிய இது என்பதிலும் விபக்க மாகிய கோமுற்றும் வியாபித்தும், சபக்கத்தினெருகூருய குதிரை முதலியவற்றில் வியாபியாது மற்றெருகூருய யானை முதலியவற் றில் வியாபித்து மிருத்தலின் பக்க விபக்க வியாபக சபக்க ஏகதேச விருத்தி அனைகாந்திகமாம்.

(5.) நிலம் அநித்தியம்; நாசம் பிரத்தியட்சமாயிருத்தலின் என்புழி நாசம் பிரத்தியட்சமாயிருத்தலினென்னுமேது: பக்கமா கிய நிலத்தி னெருகூருய பரமாணுவிலும், சபக்கத்தினெருகூருய துவியணுகத்திலும், விபக்கத்தி னெருகூருய வான் முதலியவற்றி லும் வியாபியாதிருத்தலின் பக்கத்திரய ஏகதேசவிருத்தி அனை காந்திகமாம்.

ஆன்மா நித்தப்பொருள்களு ளொன்ருதலின் அதற்கு நாச மின்று; ஆதலின் 'அஃதநித்தியம், நாசம் பிரத்தியட்சமாயிருத்த லின்' என்பதடாதென்க.

(6.) திக்குக்காலமனங்கள் திரவியம்; அமூர்த்தமாயிருத்தலி னென்புழி அமூர்த்தமாயிருத்தலினென்னுமேது: பக்கத்தி னொரு கூருய மனத்திலும் சபக்கத்தினொருகூருய கடாதிகளிலும் வியா பியாது விபக்கமாகிய ஆகாயத்திலும் ஆன்மாவிலும் வியாபித் திருத்தலின் பக்கசபக்க ஏகதேசவிருத்தி விபக்க வியாபக அநை காந்திகமாம்.

ஈண்டுத்திரவிய மொன்பதனுள் திக்குக் காலமனங்கள் பக்க மாகவும், பிருதிவியாதி பரமாணுக்களும் அவற்றின் காரியத்திர வியங்களும் சபக்கமாகவும், ஆகாயமும் ஆன்மாவும் விபக்கமாகவும், பரமாணுக்கள் அமூர்த்தத்திரவியமாகவும் கருதப்பட்டன.

(7.) திக்குக்காலமனங்கள் திரவியமல்ல; மூர்த்தமாயிருத் தலினென்புழி மூர்த்தமாயிருத்தலி னென்னுமேது: பக்கத்தி னொருகூருய திக்குக்காலங்களில் வியாபியாது மற்றொரு கூருய மனத்தில் வியாபித்தும், விபக்கத்தி னொருகூருய ஆகாயத்தில் வியாபியாது மற்றொருகூருய ஆன்மாவில் வியாபித்தும், சபக்க மாகிய பரமாணுக்களிலும் அவற்றின் காரியத்திரவியங்களிலும் வியாபித்து மிருத்தலின் பக்கவிபக்க ஏகதேசவிருத்தி சபக்கவியா பக அநைகாந்திகமாம்.

ஈண்டு ஆன்மா மூர்த்தத்திரவியமாகக்கருதப்பட்டது. இன்னு மிவற்றின் விகற்பங்களை யெல்லா மூகித்துணர்க.

இவ்வேழும் சிவஞானசித்தியார் "ஈண்டுப்பக்கப் போலி நான்கு" என்னுஞ் செய்யுளின் மறைஞானதேசிக ருரையை யநு சரித் தெழுதப்பட்டன.

iv. பிரகரணசமம்.—ARGUMENTS THAT TELL EQUALLY ON BOTH SIDES.

139. ஏதற்குப் பிரதிபட்சமான வேருகும் ஏது வுண்டு அதுவே பிரகரணசமம்; சற்பிரதிபட்ச மென்றுஞ் சொல்லப்படும். எங்ஙனம்; "சத்தம் அநித்தியம்; நித்தியதருமந் தோன்ருமையால்" "சத்தம் நித்தியம்; அநித்தியதருமந் தோன்ருமையால்" என்பது.

இங்கே சாத்திய விபரீதார்த்தத்தைச் சாதியாநின்ற சமானபலமாகிய வேறு அநுமானம் பிர்திபட்சமென்று சொல்லப்படும். யாது துல்லிய (சம) பலமன்று; அது பிரதிபட்சமன்று.

(கு-ரை.) ஈண்டுள்ள இரண்டேதுவும் தம்முள் சமான பலமுடையனவாயிருத்தலின் அவை பரஸ்பரம் (ஒன்றற்கொன்று) பிரதிபட்சமாம்; அங்ஙனமிருப்பதே சற்பிரதிபட்சமாம். அங்ஙனமில்லா ஏது சற்பிரதிபட்ச ஏதுவாகாதென்க. இதுபற்றி இந்நூலின் 73, 74-வது பக்கங்களிலும், 96, 97-வது பக்கங்களிலும் எழுதப்பட்டிருக்கின்றமை காண்க.

அங்ஙனமன்ருே, (சாத்திய) விபரீதத்திற்குச் சாதக (அநுகூல)மான அநுமானம் உபஜீவியம் (ஜனகம்-உண்டுபண்ணுவது), உபஜீவகம் (ஜன்னியம்-உண்டாவது), அநுபயம் (ஜனக ஜன்னியமாகாதது) என மூவகையாம். அவற்றுள்,

முதலது (உபஜீவியம்) பாதகம் (கெடுப்பது); வலிமையையுடையதால். எங்ஙனம்? பரமாணுக்கள் அநித்

தியம்; மூர்த்தமா (வரம்புபட்டபரிமாண முடையதா) கையால்; கடம்போல.

இதில் (இவ்வநுமானத்தில்) *தருமியை (பட்சமாகிய பரமாணுக்களை)க் கிரகிக்கும் பிரமாணம் முந்தியதாயும் வலிமையுடையதாயு மிருக்கின்றது. அதுவும் (பரமாணுவைக் கிரகிக்கும் பிரமாணமும்) பட்சத்திற்(தருமிக்)குச் சாதகமாயிருப்பதால் உபஜீவியம்.

(கு-ரை.) ‡ பிரத்தியட்சப் பிரமாணத்தினால் அனுமானப் பிரமாண முண்டாவதுபோன்று பரமாணுக்க ளுண்டென்னும் அநுமானத்தால் அவை அநித்தியமென்னு மநுமானமுண்டாவதாயிருத்தலின் இவ்விரண்டனுள் முன்னது உபஜீவிய (காரண)மும் பின்னது உபஜீவக (காரிய)முமாம்.

---

*"பிரமாணம் வருமாறு:—திரியணுகம் அவயவத்தோடுகூடிய திரவியத்தாலே ஆக்கப்பட்டது; புறவிந்திரியத்தாலே யறியப்படுந் திரவியத்தன்மையால்; புறவிந்திரியத்தா லறியப்படுந் திரவியத் தன்மை யாது அது அவயவத்தோடுகூடிய திரவியத்தாலே ஆக்கப்பட்டது, கடம்போல. ஈண்டுத் திரியணுகம் பக்கம், அவயவத் தோடுகூடிய திரவியத்தாலே ஆக்கப்படுந்தன்மை சாத்தியம், புறவிந்திரியத்தாலறியப்படுந்திரவியத்தன்மை ஏது, கடம் உதாரணம். இதனால் துவியணுகமும் பரமாணுவும் பெறப்பட்டன" என்று தருக்காமிர்தங் கூறுகின்றது.

‡ பிரத்தியட்சப்பிரமாணம் அநுமானப்பிரமாணத்திற் கேதுவாமென்பதுபற்றி இந்நூலின் 53, 54-வது பக்கத்திற் காண்க.

பிரமாணத்தாற் கிரகிக்கப்படாத தருமியான பரமாணுக்களின் அநித்தியத்துவ அநுமானங் கூடாது; ஆசிரயாசித்தியால். (பரமாணுக்கள் அநித்தியம் என்னும்) இவ்வநுமானத்தால் பரமாணு கிரகிப்பிற்குப் பிராமாண்யமு மறியப்பட்டது; *அன்றி (பரமாணுவைக் கிரகிக்கும் பிரமாணமன்றி) இதற் (பரமாணுக்கள் அநித்தியமென்னு மிவ்வநுமானத்திற்)குத் தோற்றமே (உற்பத்தியே) இல்லாமையால். ஆதலால் உபஜீவியம் பாதகமே (நாசஞ்செய்வதே).

உபஜீவகம் துற்பலமாதலால் பாத்தியம் (நாசமடையத்தக்கது).

எங்ஙனம்? இந்த அநித்தியத்துவ அநுமானமே.

மூன்றாவது சற்பிரதிபக்ஷம்; துல்லிய (சம) பலத்தால்.

(கு-ரை.) தருமியான பரமாணு பிரமாணத்தாற் கிரகிக்கப் படாவிடத்து 'மூர்த்தமாகையால்' என்னுமேது ஆசிரயாசித்தமாயிருத்தலின் 'பரமாணுக்கள் அநித்தியம்' என்னுமநுமானம் சம்பவியாது. ஆதலால் பரமாணுவின் கிரகிப்பிற்குப் பிரமாணமும் பரமாணுக்கள் அநித்தியமென்னும் பிரமாணத்தால் பெறப்பட்டதென்க. உற்பத்தியின்றிய பாவபதார்த்தம் நாசமாவதின்மையின் அது நித்தியமாம். பரமாணு நித்தியபதார்த்தமா யிருத்தலின் அதனைச்

---

* பரமாணுவைக் கிரகிக்கும் பிரமாணம் (பரமாணுக்கள் அநித்தியமென்னும் அநுமானத்திற்குப்) பாதகமா யிருத்தலின் என்றீண்டதிகபாடமு முண்டு.

சாதித்தற்குரிய பிரமாணம் பரமாணு அநித்தியமென்னும் அநுமானத்தைக் கெடுக்கின்றதென்க.

ஈண்டுள்ள பிரமாணங்களிரண்டனுள் ஒன்று கெடுப்பதும் மற்றொன்று கெடுக்கப்படுவதுமா யிருத்தலின் இவ்விரண்டும் தம்முள் பிரதிபட்ச முடையனவன்றாம். ஆதலின் இவை சற்பிரதிபட்சமாகா. ஈண்டு உபஜீவிய அநுமானம் கெடுப்பதும், உபஜீவக அநுமானம் கெடுக்கப்படுவதுமாம்.

V. காலாத்தியயாபதிட்டம்—ARGUMENTS THAT ARE MISTIMED.

140. எதற் (எவ்வேதுவிற்)குப் பிரத்தியக்ஷாதிப் பிரமாணத்தால் பக்கத்திற் சாத்தியாபாவம் பரிச்சின்னம் (அறியப்பட்டது) அது காலாத்தியயாபதிட்டம்; பாதிதவிடயமென்றுஞ் சொல்லப்படும்.

எங்ஙனம்? தீ வெம்மையில்லது; காரியத்துவத்தால்; சலம் (நீர்)போல. இங்கே காரியத்துவம் ஏது; அதற்குச் சாத்தியம் வெம்மையில்லது; அதனுடைய அபாவம் (சூடு) காட்சியானே பரிச்சின்னம்; துவக்கிந்திரியத்தால் தீயினது வெம்மை (சூடு) கிரகிக்கப்படுகின்றமையின்.

(கு-ரை.) இதுபற்றி இந்நூலின் 97, 98-வது பக்கங்களிலெழுதப்பட்டிருக்கின்றமை காண்க. 'பிரத்தியட்சாதி' என்றமையின் அநுமான முதலியனவுங் கொள்க.

இன்னும் காலாத்தியயாபதிட்டம் எங்ஙனம்?

கடத்திற்குக் கணிகத்துவம் (க்ஷணப்போதிருக்குந்தன்மை) சாதிக்கின்றபோது முன்சொன்ன (வியாப்தி

யத்துவாசித்தத்திற் கூறிய) சத்துவம் ஏது. எங்கே கணிகத்துவம் சாத்தியம் அதனுடைய அபாவமாகிய அக்கணிகத்துவம் (ஸ்திரத்தன்மை) தருக்காதி சொரூபமான பிரத்தியபிஞ்ஞாப் பிரத்தியட்சத்தி னாலே பரிச்சின்னம். யாது என்னுல் முன்னம் அறி யப்பட்டது அதுவே இக்கடமென்று பூர்வ அநு பவத்தாற் சநித்த (உண்டான) வாசனையோடு கூடிய இந்திரியத்தாற்பிறந்து பூர்வாபர(முன்பின்)காலத்தை யடைந்த பிரத்தியபிஞ்ஞாஞானத்தால் கடத்திற்கு நிலைமை (ஸ்திரத்தன்மை) துணியப்படும்.

(கு-ரை.) கடம் கணிகத்துவம்; சத்துவத்தால் என்புழிச் சத்துவத்தாலென்னு மேதுவிற்குச் சாத்தியம் கணிகத்துவம்; அத னபாவம் அக்கணிகத்துவம். அது பிரத்தியபிஞ்ஞாரூபப் பிரத்தி யட்சத்தினுலே அறியப்பட்டதாதலின் சத்துவத்தாலென்னுமேது காலாத்தியயாபதிட்டமாம். கடம் க்ஷணப்போ திருப்பதாயின் * அந்தக் கடம் இது என்னும் பிரத்தியபிஞ்ஞாரூபப் பிரத்தியட் சம் சம்பவித்தலாகாது; சம்பவித்தலின், கடம் க்ஷணப்போதிருப்ப தன்றென்பது ஈண்டுத் தருக்கமாம். பிரத்தியபிஞ்ஞாரூபப்பிரத்தி யட்சத்தினிலக்கணம் இந்நூலின் 36-வது பக்கத்திலு மெழுதப் பட்டிருக்கின்றமை காண்க.

---

* அந்தக்கட மிது என்னும் ஞானத்தில் அந்தக்கடமென்னு மம்சம் ஸ்மிருதிவடிவமா யிருத்தலின் பரோட்சமாம்; இதுவென்னு மம்சம் பிரத்தியட்சமாம். ஆதலால் அந்தக்கட மிதுவெனும் ஞானத்தில் கேவலம் பிரத்தியட்சத்தன்மையில்லை; ஆனல் அம்ச பேதத்தால் பரோட்சத்தன்மை அபரோட்சத்தன்மையென்னு மிரண்டுதருமங்களு மிருக்கின்றனவென்ப வொருசாரார்.

இந்த அசித்த முதலான ஐந்தும் எதுப்போலிகள்; (அததற்கேற்றவாறு) பக்கதருமத்துவ முதலான ரூப ஹீனத்துவத்தால் (ரூபத்தாற் குறைந்தமையால்) எது வல்லன (எதுவாகாதன); (ஆதலின்), தஞ்சாத்தியத் தைச் சாதியா (சாதிக்கமாட்டா).

(கு-ரை.) பக்கதருமத்துவ முதலிய பஞ்சரூபத்தைப்பற்றி இந்நூலின் 71-வது முதல் 76-வது பக்கம்வரையி லெழுதப்பட் டிருக்கின்றமை காண்க.

இலக்கணமாகும் கேவலவியதிரேகியினுடைய அதி வியாப்தி அவ்வியாப்தி அசம்பவங்களும் இவற்றுளடங் கும் (இவ்வேதுப்போலிகளி லந்தர்க்கதமாம்). இவ் வைந்தினு மதிகமல்ல.

(கு-ரை.) கேவலவியதிரேகியேது இலக்கணமா மென்பது இந்நூலின் 66, 67, 68, 69-வது பக்கங்களிலும், அதிவியாப்தி முதலியவற்றின்றன்மை இந்நூலின் 4, 5-வது பக்கங்களிலு மெழு தப்பட்டிருக்கின்றமை காண்க.

அங்ஙனமன்றே, அதிவியாப்தியுடையது வியாப்பி யத்துவாசித்தம்; விபக்கத்தின் நீக்கமில்லாமையால்; (அது)சோபாதிகத்துவத்தாலும் (அதிவியாப்தியுடை யது; விபக்கத்தினீக்கமின்மையால்). எங்ஙனம்? கோவிலக்கணமென்னும் பசுத்துவத்திற்கு (அதி வியாப்தியுண்டு); கோ (ஆ)விற்கு அலைதாடி முதலிய உண்மை (இருத்தல்) பிரயோசக (லக்ஷண)மே யன் றிப் பசுத்துவம் பிரயோசகமன்று.

அவ்வியாப்திக்குப் பாகாசித்தம். எங்ஙனம்? கோவிலக்கணமென்னும் சித்திரவன்னம் கோவிற்குப் பிரயோஜகமன்று.

(இங்ஙனமே) அசம்பவமும் சொரூபாசித்தம். எங்ஙனம்? கோவிலக்கணமான ஒற்றைக்குளம் புடைமை.

(கு-ரை.) அதிவியாப்தி, அவ்வியாப்தி, அசம்பவமென்னு முக்குற்றங்களுள் அதிவியாப்தி வியாப்பியத்துவாசித்தத்திலும், அவ்வியாப்தி பாகாசித்தத்திலும், அசம்பவம் சொரூபாசித்தத்திலும் அந்தர்க்கதமா மென்று கூறப்பட்டது. வியாப்பியத்துவாசித்தம் இருவகைத்தா யிருத்தலின் அவ்விரண்டும் அதிவியாப்தியுடையன என்றறிவித்தற்குச் சோபாதிகத்துவத்தாலும் (உபாதியோடுகூடிய தன்மையாலும்) என்று கூறப்பட்டது.

(1.) சத்தம் கணிகம்; சத்துவத்தால், என்புழிச் சத்துவத்தாலென்னும் ஏது விபக்கமாகிய அக்கணிகத்திலும், (2) மலை புகையுடையது; தீயுடைமையால் என்புழித் தீயுடைமையாலென்னும் ஏது விபக்கமாகிய ஒழுசக்காய்ச்சிய இரும்பிலும் நீக்கமின்றி யிருத்தலின் அவ்விரண்டேதுவும் விபக்கத்தின் நீக்கமுடையனவன்றாம். இவற்றின் விரிவை இந்நூலின் 84-வது முதல் 87-வது பக்கம் வரையிற் காண்க.

கோவிற்கிலக்கணம் பசுத்துவம்(பசுத்தன்மை) என்னுமிடத்து அது அதிவியாப்திக் குற்றமுடையதாம்; பசுத்துவம் கோமுற்று மிருப்பதன்றி யெருமை முதலியவற்றினு மிருத்தலின். பாதம் (கால்) நான்கால் நடப்பது பசுவெனப்படும். கோ (ஆ) வேயன்றி யெருமைமுதலியனவும் பசுவாதலறிக.

பாகாசித்தி அவ்வியாப்திக்குற்றமுடையதென்பது அது கூறியவிடத்தே விளங்கிக்கிடத்தலறிக. கோவிற்கிலக்கணம் சித்திரவன்னம் (சித்திர உருவம்) என்னுமிடத்து அது அவ்வியாப்திக் குற்றமுடையதாம்; சித்திரவன்னம் கோமுற்றுமிராது அவற்றினேகதேசத்திருத்தலின்.

சொரூபாசித்தம் அசம்பவக்குற்றமுடையதென்பது அது கூறியவிடத்தே விளங்கிக்கிடத்தலறிக. கோவிற்கிலக்கணம் ஒற்றைக் குளம்புடைமை யென்னுமிடத்து அஃது அசம்பவக்குற்றமுடையதாம்; ஒற்றைக்குளம்புடைமை கோமுற்றுமிராது குதிரை முதலியவற்றின்கணிருத்தலின்.

14. சலம்—Quibbles.

141. தாற்பரியம் வேறுபடச் சொல்லுஞ் சொல்லுக்குப் பொருள் வேறுகற்பித்துத் தூடணஞ் சொல்லுதல் சலம். எங்ஙனம்? நூதன தாற்பரியத்தாற் சொல்லப்பட்ட நவ (புதிய) கம்பளமுடையான் இம்மைந்தன் என்னும் வாக்கியத்திற்கு வேறுபொருள் ஆசங்கித்து (ஆட்சேபித்து) ஒருவன் இவனுக்கு நவ (ஒன்பது) கம்பள மில்லை; வறுமையால் இவனுக்கு இரண்டாயினுமில்லை; எங்ஙனம் ஒன்பதென்று தூடியாநின்றான். *இவ்வாதி சலவாதியென் றறியப்படுகிறான்.

(கு-ரை.) ஒருபொருள்கருதிக் கூறியதற்கு வேறுபொருள் கற்பித்துக்கொண்டு பழித்தல் சலமாம். அது வாக்குச்சலம், சாமா

* இவ்வாதி சலவாதியாதலால் தோற்றவன் என்றும் பாடமுண்டு.

கியசலம், உபசாரசலமென மூவகைப்படும். இந்நூலாசிரியர் கூறியசலம் வாக்குச்சலமாம்.

சர்வதரிசனசங்கிரகம் அக்கபாத தரிசனத்தில் "சப்தத்தின் (சொல்லின்) விர்த்தி வித்தியாசத்தினல் நிராகரிப்பதற்கேது சலமாம். அஃதபிதான (பெயர்) விர்த்தி வித்தியாசம், தாற்பரிய விர்த்தி வித்தியாசம், உபசாரவிர்த்தி வித்தியாசமென்னும் வேறுபாட்டால் மூவகைத்தாம்" என்று கூறப்பட்டிருக்கின்றது.

(1.) யாண்டு இரண்டு சக்கியார்த்தம் (சக்திவிருத்தியா லறியப்படும் பதப்பொருள்) சம்பவிக்கின்றதோ ஆண்டு ஓரர்த்தத்தை நிச்சயஞ்செய்யக்கூடிய காரணமின்மையின் அபிப்பிராயத்திற்கு விஷயமன்றியுள்ள ஒருசக்கியார்த்தத்தைக் கற்பித்துப்பழித்தல் வாக்குச் சலமாம். அது இவன் நேபாளதேசத்திருந்து வந்திருக்கின்ருன்; நவகம்பளமுடைத்தாயிருத்தலின் என்னுமிடத்து இவனுக்கொன்பதுகம்பள மேது என்று பழித்தல் போல்வதாம்.

(2.) சாமாநிய சகிதமாயும் சம்பவிப்பதாயுமுள்ள அர்த்தாபிப்பிராயத்தினுற்கூறிய வாக்கியத்திற்குச் சாமாநிய சம்பந்த மின்றியும் சம்பவிக்காததாயுமுள்ள அர்த்தகற்பனையினுற் பழித்தல் சாமாநிய சலமாம். அது இப்பிராமணன் வித்தியாசரணசம்பன்னன் (கல்வியொழுக்க முடையவன்) என்று கூறுமிடத்துப் பிராமணத்தன்மையினல் * வித்தியாசரண சம்பத்தைச் சாதிக்கிருனெனக் கற்பித்துப் பிராமணத்தன்மையினல் வித்தியாசரண சம்பத்து எங்ஙனம் சம்பவிக்கும்? † விராத்தியனிடத்து வியபிசாரம் வருதலின் என்று பழித்தல்போல்வதாம்.

---

* வித்தியாசரண மென்பது வித்தியா ஆசரணமெனப் பிரிபடும். வித்தியா-கல்வி, ஆசரணம்-ஒழுக்கம்.

† விராத்தியன் - சாதிதருமம் விட்டவன்; பிரதிலோமத்தந்தைக்கும் அனுலோபத்தாய்க்கும் பிறந்தவன்.

(3.) சக்தி, லட்சணையென்னு மிரண்டனுள் ஒன்றன் விருத்தியினற் கூறிய சப்தத்தில் வேறு விருத்தியினல் எந்த நிஷேதம் (விலக்கு) சம்பவிக்கின்றதோ அது உபசாரசலமாம். அது கட்டில் கரைகின்றது என்றுமிடத்து (லட்சணுவிருத்தியினு லங்ஙனங் கூறப்பட்டதென் றங்கீகரியாது சக்தி விருத்தியினு லங்ஙனம் கூறப்பட்டதென் றங்கீகரித்து) கட்டில் கரையவில்லை கட்டிலி லுள்ள புருஷன் கரைகின்ருனென்று பழித்தல்போல்வதாம்.

15. சாதி—False Analogy.

142. அசத்தான (போலி) உத்தரஞ் சாதி. அது உத்கருஷசமை, அபகருஷசமை முதலான பேதத்தாற் பலவகை. பெருகுமென்னும் பயத்தா லெல்லாஞ் சொல்லப்பட்டனவல்ல. அவற்றுள்,

அவ்வியாத்தமான திருஷ்டாந்த தருமத்தால் சாத்திய பக்க அவ்வியாபகமான தருமத்தை வருவித்தல் உத்கருஷசமை யென்னுஞ் சாதி. எங்ஙனம்? சத்தம் அநித்தியம்; காரியத்துவத்தால்; கடம்போல என்று சொல்லுதற்கண் இங்ஙனம் ஒருவன் சொல்லாநின்ருன்; காரியத்துவ ஏதுவால் கடம்போலச் சத்தமும் அநித்தியமாயின் அந்த ஏதுவாலே அது (அந்தக்கடம்) போலவே சத்தம் சாவயவமா (அவயவமுடையதா)க வேண்டுமென.

அவ்வியாத்தமான திருஷ்டாந்த தருமத்தால் அவ்வியாபகமான தருமத்தின் அபாவத்தை வருவித்தல்

அபகருஷசமை யென்னும் சாதி. எங்ஙனம்? முன் சொன்ன அநுமானத்தில் ஒருவன் இங்ஙனஞ் சொல்லாநின்றான்; காரியத்துவ ஏதுவால் கடம்போலச் சத்தம் அநித்தியமாயின் அந்த ஏதுவால் கடம்போலச் சத்தமும் செவியாற் கவரப்படாததாக வேண்டும்; கடஞ் செவியிற்கவர்வதன்றே யென.

(கு-ரை.) ஒருவன் காரியத்துவ வேதுவால் * * * * * என இங்ஙனஞ் சொல்லாநின்றான் என்று அந்வயித்துக்கொள்க.

சாதி - அசத்துத்தரம்; அஃதாவது சுவவியாகாத (தனக்கு விரோத)மான உத்தரமாம். உத்தரம்-விடை. அது சாதர்மியசமை, வைதர்மியசமை, உத்கருஷசமை, அபகருஷசமை, வர்ணியசமை, அவர்ணியசமை, விகற்பசமை, சாத்தியசமை, பிராப்திசமை, அப்பிராப்திசமை, பிரசங்கசமை, பிரதிதிருஷ்டாந்தசமை, அநுற்பத்தி சமை, சம்சயசமை, பிரகரணசமை, அவேதுசமை, அர்த்தாபத்தி சமை, அவிசேஷசமை, உபபத்திசமை, உபலப்திசமை, அநுபலப்தி சமை, நித்தியசமை, அநித்தியசமை, காரியசமை யென இருபத்து நான்கு வகைத்து.

சாதர்மிய (பொதுவியல்பு) சமை.

(1.) சாதர்மியம்—சமானதர்ம முடையது. சமான தர்மத்தினாலே ஸ்தாபகமாயிருக்கிற ஏதுவைத் தூஷிக்கும் உத்தரம் சாதர்மிய சமை. எங்ஙனம்? ஆத்மாகிரியையுடன் கூடியது; கிரியைக் கேதுவான குணத்தையுடைத்தாயிருத்தலின்; மட்பிண்டம் போல என்புழிக் கிரியைக்குக் காரணமான குணம் கிரியையை யுண்டுபண்ணும் வாயு சையோக முதலியனவே என்று ஸ்தாபிக்கும்போது கிரியையோடுகூடிய வஸ்துவின் சாதர்மியத்தினால்

ஆத்மா கிரியையுடன் கூடினதேயாயின், அப்போது (வான் முதலிய) விபுத்துவவடிவ நிஷ்கிரிய வஸ்துவின் சாதர்மியத்தினுல் அது என் நிஷ்கிரியமுடையதாகக் கூடாது? இவ்விஷயத்தில் யாதொரு நியமமுமின்றென் றுத்தரங் கூறுவது.

வைதர்மிய (வேற்றியல்பு) சமை.

(2.) வைதர்மியம்—விரோததர்ம முடையது. வைதர்மியத்தினுலே எதுவை தூஷிக்குமுத்தரம் வைதர்மிய சமை. எங்ஙனம்? மேற்கூறிய அநுமானத்திலேயே கிரியையுடன்கூடிய மட்பிண்டத்தின் சாதர்மியத்தினுல் ஆத்மா கிரியை யுடையதாயின் அப்போது விபுத்துவவடிவ வைதர்மியத்தினுல் அது நிஷ்கிரியமுடையதாக ஏனுகமாட்டாதென் றுத்தரங்கூறுவது. ஆன்மா கிரியையுடையதன் சாதர்மிய மிருப்பதால் கிரியையுடையதாகவே யிருக்கவேண்டும்; கிரியையுடையதன் வைதர்மியமிருப்பதால் கிரியையற்றதாகவே யிருக்கக்கூடாதென்பதில் யாதொரு நியமமுமின்று.

உத்கருஷ (உயர்ச்சி) சமை.

(3.) பிறன்கூறிய வேதுவினுலேயே அதற்கவ்வியாபகமான தர்மத்தைப் பட்சத்தில் ஆபாதனம் செய்வது (பக்ஷத்தில் அத்தருமத்தை வருவித்தல்) உத்கருஷசமை. எங்ஙனம்? சத்தம் அநித்தியம்; காரியத்துவத்தால்; கடம்போல என்புழிக் காரியத்துவத்தால் என்னுமேதுவினுல் சப்தம் கடம்போல் அநித்தியமாயின் அப்போது அவ்வேதுவினுலேயே சப்தம் கடம்போல் சாவயவம் (உறுப்புடையது) ஆகட்டுமேயென்று கூறுவது.

அபகருஷ (தாழ்ச்சி) சமை.

(4.) பிறன்கூறிய திருஷ்டாந்த சாதர்மியத்தினுலே பட்சத்தில் அவன் அங்கீகரித்துள்ள தர்மாந்தரத்தின் (வேறு தர்மத்

தின்) அபாவத்தைச் சாதிப்பது அபகருஷசமை. எங்ஙனம்? மேற்கூறிய அநுமானத்திலேயே காரியத்துவத்தால் என்னுமேதுவினுல் சப்தம் கடம்போல அநித்தியமாயின் அப்போது அஃது அவ்வேதுவினுலேயே கடம்போலச் சுரோத்திரேந்திரியப் பிரத்தியட்சத்திற்கு விஷயமாகாமற்போதல் வேண்டும் என்று கூறுவது.

வர்ணிய (புகழ்ந்துரை) சமை.

(5) ஸ்தாபிக்கத் தகுந்த திருஷ்டாந்த தருமத்தைப் பட்சத்திற்சாதிப்பது வர்ணியசமை. எங்ஙனம்? ஆத்மா கிரியையுடன் கூடியது; கிரியைக் கேதுவான குணத்தையுடைத்தா யிருத்தலின்; மட்பிண்டம்போல என்று முற்கூறிய அநுமானத்தில் கிரியைக்குக் காரணமான நோதனமென்னும் அபிதானமுடைய சையோகவிசேடத்தினுல் மட்பிண்ட முதலியவற்றிற்குக் கிரியை யிருத்தல்கூடும். ஆத்மாவிற்குக் கிரியையிருக்குமாயின் அதற்குக் காரணமான * நோதனமென்னும் அபிதானமுள்ள சையோகமுமிருத்தல் வேண்டுமென்று கூறுவது.

---

* நோதனமென்னும் அபிதானமுள்ள சையோகம்—சப்தத்தையுண்டுபண்ணுத சையோகம். அது நோதநாக்கிய சையோகமாம்.

முற் (இந்நூலின் 236வது பக்கத்திற்) கூறியுள்ள கர்மஜ சையோகம்: அபிதாக்கியசையோகம், நோதநாக்கியசையோகம் என்றும் இருவகைத்தாம்.

அபிதாக்கிய சையோகம்.

பரிசமும் வேகமும் என்னும் இரண்டு குணங்களுடைய திரவியத்திற்கு வேறு மூர்த்தத் திரவியத்தோடுண்டாகும் சையோகம் அபிதாக்கிய சையோக மெனப்படும். அஃது அம்மூர்த்தத்திரவியத்

அவர்ணிய (பழித்துரை) சமை.

(6.) சாத்திய எதுக்களைப் பக்ஷத்தில் துல்லியமா (ஒப்புமையா)கச் சாதிப்பது அவர்ணியசமை. எங்ஙனம்? ஆத்மா கிரியையுடன் கூடியது; கிரியைக்கேதுவான குணமிருத்தலின்; மட்பிண்டம்போல என்னும் அநுமானத்திலேயே மட்பிண்ட முதலியவற்றிலுள்ள கிரியைக் கேதுவான நோதன முதலிய குணம் ஆத்மாவில் அசித்தம். ஆகவே, அசித்தமாகிய கிரியைக் கேதுவாகிய குணத்தினால் ஆத்மாவில் கிரியை யெங்ஙனம் சாதிக்கப்படுகின்றதோ அங்ஙனமே அந்தக் கிரியையினாலே அதற்கு ஜனகமான (உண்டுபண்ணுவதான) குணமும் என் சாதிக்கப்படவில்லை? ஒன்றைத்தான் சாதித்தல்வேண்டு மென்னும் நியமமுமில்லை என்பது.

தின் கிரியைக்கு அசமவாயிகாரணமும் அம்மூர்த்தத்திரவியத்தோடு கூடிய ஆகாசத்தினின்றுண்டாகும் சப்தத்திற்கு நிமித்தகாரணமுமாம். எங்ஙனம்? பரிசமுடையதும் வேகமுடையது மாகிய கோடரிவடிவ திரவியத்திற்கு மரவடிவ மூர்த்தத்திரவியத்தோடுண்டாகும் சையோகம் அம்மரத்தின் அசைதல்வடிவ கிரியைக்கு அசமவாயிகாரணமாயும், அம்மரத்தோடுகூடிய ஆகாசத்தினின்றுண்டாகும் சப்தத்திற்கு நிமித்தகாரணமாயு மிருத்தலறிக.

நோதநாக்கிய சையோகம்.

பரிசமுடைய திரவியத்திற்கு மூர்த்தத்திரவியத்தோ டுண்டாகும் சையோகம் நோதநாக்கியசையோகம் எனப்படும். அது சத்தத்தின் உற்பத்திக்குக்காரணமாவதன்று; ஆனால் அம்மூர்த்தத்திரவியத்தினது கிரியையின் உற்பத்திக்கு மாத்திரம் காரணமாகின்றது. எங்ஙனம்? வெகுகாலம் நீரின் சம்பந்தத்தால் மிகுசேறுயுள்ள பூமியில் பரிசமுடைய பாதத்தால் மிதிப்பதாலுண்டாகும் சையோகம் ஆண்டுச் சத்தத்திற் கேதுவாகாது அச்சேறுபடிந்த பூமியினது கிரியையின் உற்பத்திக்கு மாத்திரம் ஏதுவாயிருத்தலறிக.

விகற்பசமை.

(7.) திருஷ்டாந்த (உவமான) விகற்பத்தைக்காட்டித் தாஷ்டாந்த (உவமேய) விகற்பத்தைக் கூறுவது விகற்பசமை. எங்ஙனம்? ஆத்மாகிரியையோடுகூடியது; கிரியைக் கேதுவான குணமிருத்தலின்; மட்பிண்டம்போல என்னும் அநுமானத்தில் கிரியைக்கேதுவான குணமுள்ளசில-குரு. எங்ஙனம்? மட்பிண்டம் முதலியன; சில-லகு. எங்ஙனம்? வாயு. இங்ஙனமே, கிரியைக் கேதுவான குணமுடைய சில கிரியையோடு கூடினவாக வாதல் வேண்டும். எங்ஙனம்? மட்பிண்ட முதலியன; சில கிரியையற்றன. எங்ஙனம்? ஆத்மா. ஈண்டு முந்தினவிகற்பந்தான் சம்பவிக்கும்; பிந்தின விகற்பம் சம்பவியாது என்பதில் காரணம் யாது? என்பது.

சாத்திய சமை.

(8.) திருஷ்டாந்தத்தைப் பக்கத்திற் கொத்ததாகக் கூறுவது சாத்தியசமை. சாத்திய சமை யென்னுமிடத்துள்ள சாத்திய சப்தம் பட்சத்தை யுணர்த்துகின்றது. ஆத்மாகிரியையோடு கூடியது; கிரியைக் கேதுவான குணமிருத்தலின்; மட்பிண்டம் போல என்னும் அநுமானத்திலேயே எங்ஙனம் மட்பிண்டமோ அங்ஙனமே ஆத்மாவும் என்று கூறுவையாயின், அப்போது எங்ஙனம் ஆத்மாவோ அங்ஙனமே மட்பிண்டமும் என்று சம்பவிக்கும். ஆகவே, ஆத்மாவின்கண் கிரியை சாதிக்கப்பட்டதே யாயின் அப்போது மட்பிண்டத்திலும் அது சாதிக்கத்தக்கதாம். அன்றென்று ஆசங்கிப்பையாயின், அப்போது எங்ஙனம் மட்பிண்டமோ அங்ஙனமே ஆத்மாவுமென்று கூறுதல் கூடாது; மட்பிண்டத்திற்கொத்தது ஆத்மா, ஆத்மாவிற்கொத்தது மட்பிண்டமன்று என்பதில் நியமமின்மையின் என்பது.

பிராப்தி (அடைவு) சமை.

(9.) பிராப்தியினுல் எதிர்த்து நிற்பது பிராப்தி சமை. பிராப்தியாவது சாத்தியமும் ஏதுவும் ஒரிடத்திருத்தல். எங்ஙனம்? ஆத்மா கிரியையோடு கூடியது; கிரியைக்கேதுவான குணமிருத்தலின்; மட்பிண்டம்போல என்னும் அநுமானத்திலேயே கிரியைக் கேதுவான குணத்திஞல் கிரியை எந்தக் காரணத்திஞலே சாதிக்கப்படுகின்றது? கிரியையிஞலே கிரியைக் கேதுவானகுணம் எந்தக் காரணத்திஞலே சாதிக்கப்படவில்லை? இரண்டும் ஒத்திருத்தலின் என்பது.

அப்பிராப்தி (அடைவின்மை) சமை.

(10.) அப்பிராப்தியிஞலெதிர்த்து வருவது அப்பிராப்தி சமை. எங்ஙனம்? ஆத்மா கிரியையோடு கூடியது; கிரியைக் கேதுவான குணத்துடன் கூடியிருத்தலின்; மட்பிண்டம்போல என்னுமிடத்திலேயே மேற்கூறிய தோஷத்திஞல் அப்பிராப்தமான ஏது சாத்திய சாதகமெனக் கூறல்வேண்டும். ஆகையிஞல் அப்பிராப்தி சமானமாக விருத்தலின் இவ்வேது எல்லாவற்றையும் சாதித்தல் வேண்டும்; சாத்தியாபாவத்தை எந்தக்காரணத்திஞல் சாதிக்கமாட்டாதென்பதில் நியமமின்மையின் என்பது.

பிரசங்க சமை.

(11.) சாதனத்தின் பரம்பரையை விஞவுவது பிரசங்க சமை. எங்ஙனம்? ஆத்மாவினிடத்துக் கிரியையைச் சாதிக்குமிடத்துக் கிரியைக் கேதுவான குணம் சாதனமாம். சாதனமின்றி ஒரு பதார்த்தமும் பிரசித்தமாக விருப்பதில்லை. ஆதலால், கிரியாயேதுகுணமான அச்சாதனத்தில் சாதனம் யாது? அச்சாதனத்தில் சாதனம் யாது? என்றற் றொடக்கத்தனவாய் விஞவுதலாம்.

பிரதி (வேறு) திருஷ்டாந்த சமை.

(12.) வேறு திருஷ்டாந்தத்தால் சாத்தியாபாவத்தைச் சாதிப்பது பிரதிதிருஷ்டாந்த சமை. எங்ஙனம்? மேற்கூறிய அநுமானத்திலேயே மட்பிண்ட திருஷ்டாந்தத்தால் கிரியை சாதிக்கப்பட்டதேயாயின், கிரியையற்ற ஆகாச திருஷ்டாந்தத்தினால் ஆத்மாவிற்குக் கிரியையற்றதன்மை என் சம்பவிக்காது? மட்பிண்ட திருஷ்டாந்தத்தினால் கிரியையே சம்பவிக்கும்; ஆகாச திருஷ்டாந்தத்தினால் கிரியையற்ற தன்மை சம்பவியாது என்பதில் நியமமின்மையின் என்பது.

அநுற்பத்தி சமை.

(13) அநுற்பத்தியி (உற்பத்தியபாவத்தி)னால் பிரதியவஸ்தானம் (எதிர்த்துவருவது) அநுற்பத்திசமை. எங்ஙனம்? கடம் நித்தியமன்று; ஜன்னியமான ஏகத்துவத்தினால்(உற்பத்தியானஒரு வடிவத்தன்மையால்) என்னுமிடத்து ஜன்னியமான ஏகத்துவம் அநித்தியத்துவத்தைச் சாதிப்பதில் பிரமாணமாயின், அப்போது கடத்தில் ஏகத்துவமுண்டாவதற்கு முன்னர் ஜன்னியமான ஏகத்துவமின்மையின் அதற்கு நித்தியத்துவம் சம்பவிக்கின்றது; அது நித்தியமாயின் அப்போது அநுற்பந்நமே (உண்டாகாததே)யாம் என்பது.

சம்சய (ஐய) சமை.

(14.) சாதாரணதர்மத்தைக்காட்டிச் சம்சயத்தையுண்டுபண்ணுவது சம்சயசமை. எங்ஙனம்? சப்தம் அநித்தியம்; காரியத்தன்மையால் என்னுமிடத்துச் சப்தத்திற்கு அநித்தியமான கடத்தோடுகூடக் காரியத்துவவடிவ சாதர்மியம் (ஒத்தவடிவம்) எங்ஙன மிருக்கின்றதோ அங்ஙனமே நித்தியமான சப்தத்தன்மையோடுகூடச் சிராவண (சுரோத்திரேந்திரிய)ப் பிரத்தியட்ச விஷயத்தன்மை வடிவ சாதர்மிய மிருக்கின்றது. ஆகையால் உபய

(இரண்டு) சாதர்மியம் காணப்பட்டிருத்தலின் சம்சய முண்டாகின்றது; ஒன்று எஞ்சுவதென்பதில் நியமமின்மையின் என்பது.

பிரகரண சமை.

(15.) வாதிகூறிய ஏதுவினும் சாத்தியத்திற்கு விபரீதசாதகமான வேறு ஏதுவைக்காட்டல் பிரகரணசமை. சற்பிரதிபக்ஷ உதாரணமே ஈண்டு உதாரணமென்றறிக. சற்பிரதிபக்ஷ மென்பது ஏதுப்போலி ஐந்தனுள் ஒன்று.

அவேது (ஏதுவின்மைச்) சமை.

(16.) முக்காலத்தினும் ஏதுத்தன்மை சம்பவியாமையால் ஏது அன்றென்று கூறுவது அவேது சமை. எங்ஙனம்? காரியத்துவ முதலியவடிவசாதனம் அநித்தியத்துவவடிவசாத்தியத்தினும் பூர்வகால விருத்தியே (முற்காலத்திருந்ததே) யாயின், அப்போது அநித்தியத்துவவடிவ சாத்திய மிராமையின் அது எதற்குச் சாதனம்? அந்தச்சாதனம் பச்சாத் (பிற்) கால விருத்தியேயாயின் அப்போது பூர்வகாலத்திற்சாதனமிராமையின் எவ்வேதுவிற்கு அநித்தியத்துவ சாத்திய மிருக்கின்றது? இரண்டும் ஒருகாலத்திருந்தனவேயாயின் ஏது எதற்குச் சாதனம்? ஏது எதற்குச் சாத்தியம்? என்று நிர்ணயம் சம்பவிப்பதில்லை; நியமமிராமையின் என்பது.

அருத்தாபத்தி சமை.

(17.) அருத்தாபத்தியை முன்னிட்டுச் சாத்தியாபாவத்தைக் காட்டல் அருத்தாபத்தி சமை. எங்ஙனம்? சத்தம் அநித்தியம்; காரியத்தன்மையால் என்னும் அநுமானத்தில் சப்தத்திற்கு அநித்தியத்துவ சாதர்மியத்தால் அநித்தியத்தன்மை யிருந்ததேயாயின், அப்போது அருத்தாபத்தியினாலே நித்தியத் தன்மையும் நித்திய சாதர்மியத்தினாற் பெறப்படும்; இரண்டனுளொன்றை நிச்சயஞ் செய்வதில் நியமமின்மையின் என்பது.

அவிசேஷ (விசேஷமின்மைச்) சமை.

(18.) எல்லாம் சமானமாயிருக்கலாமே என்று காட்டுவது அவிசேஷ சமை. எங்ஙனம்? சப்தம் அநித்தியம்; காரியத்தன்மை யால் என்னும் அநுமானத்திலேயே காரியத்துவ வடிவமுமான அநித்திய கடாதிகளின் சாதர்மியத்தினுல் சப்தம் அநித்தியமா யின் அப்போது பிரமேயத்துவ வடிவமுமான அவற்றின் சாதர்மி யத்தினுல் எல்லாம் அநித்தியமாம்; யான்கூறிய சாதர்மியத்தினுல் அது பெறப்படுகின்றது, நீ கூறிய சாதர்மியத்தினுல் அது பெறப் படவில்லை என்பதில் நியமமின்மையின் என்பது.

உபபத்தி சமை.

(19.) உபய பக்ஷ சாதர்மியத்தினுல் சாதனம் பொருந்து மாறு கூறுதல் உபபத்திசமை. (மேற்கூறிய அநுமானத்தில்) அநித் தியத்துவ சாதனமான காரியத்துவம் பொருந்துகின்றது. ஆகை யால் சப்தம் அநித்தியமாம். அப்போது நித்தியத்துவ சாதனமும் பொருந்துகின்றது. ஆகையால் நித்தியத்துவம் ஏன் சம்பவிக்க மாட்டாது? என்பது.

உபலப்தி சமை.

(20.) சாதனுபாவம் வாதியினுற் காட்டப்பட்டிருப்பினும் சாத்தியோபலப்தி கதனம் (சாத்தியம் காணப்படுவதாகக்கூறல்) உபலப்திசமை. எங்ஙனம்? சப்தம் அநித்தியம்; பிரயத்தனத்தை யநுசரித் துண்டாகின்றமையின்; கடம்போல என்னுமிடத்துப் பிரயத்தனமின்றியும் வாயுவின் நோதனவசத்தாலுண்டான எந்த விருட்சசாகாபங்கமு (மரக்கிளையின் கேடு)ண்டோ அந்த விருட்ச சாகாபங்கத்தினுல் சப்தமுண்டாகிக் காணப்படுவதால் பிரயத் தனத்தை யநுசரித்துண்டாகுந்தன்மை சப்தத்தின்றென்பது.

அநுபலப்தி சமை.

(21.) வாதி அநுபலத்தி வசத்தினுலே சிலபதார்த்தங்களை யங்கிகரியாதிருக்கும்போது (பிரதிவாதி) அநுபலப்தி வசத்தினுலேயே வாதியங்கிகரித்துள்ள சில பதார்த்தங்களின் அபாவத்தைச் சாதிப்பது அநுபலப்தி சமை. எங்ஙனம்? சலாதிகளிருப்பினும் ஆவரண (மறைப்பு) வசத்தினுலே சலாதிகளின் அநுபலப்தி (தோன்ருமை) யுண்டு. அதுபோல், உச்சாரணத்திற்கு முன் சப்த மிருப்பினும் ஆவரண வசத்தினுல் சப்தத்தின் அநுபலப்தி யுண்டு என்னும் மதம்: ஆவரணவசத்தினுல் சப்தம் பிரத்தியட்சமாகாவிடின் அப்போது சலத்தின் ஆவரணம் போன்று சப்தத்தின் ஆவரணமும் காணப்படல் வேண்டும் என்று வாதியினுல் தூஷிக்கப்பட்டதேயாயின், அதற்குத்தரம் நீவிர் ஆவரணத்தின் அநுபலப்தியினுலே ஆவரணத்தை யங்கீகரியாவிடின் ஆவரண அநுபலத்திக்கு அநுபலப்தியிருப்பதால் ஆவரண அநுபலப்தியின் அபாவம் பெறப்படுகின்றது. அது பெறப்படும்போது ஆவரண அநுபலப்தி இல்லாமையின் ஆவரணுபாவம் பெறப்படவில்லை. ஆகவே, அப்போது ஆவரணம் பெறப்படுகின்ற தென்பது.

நித்தியசமை.

(22.) தர்மம் நித்தியம் அநித்தியம் என்னும் விகற்பத்தினுல் தர்மி நித்தியமென்று சாதிப்பது நித்தியசமை. எங்ஙனம்? சப்தத்திற்கு எவ்வநித்தியத்துவம் உம்மால் கூறப்பட்டதோ அவ்வநித்தியத்துவம் நித்தியமா? அல்லது அநித்தியமா? நித்தியமாயின், அப்போது சப்தத்திலுள்ள நித்தியத்துவத்திற்கே எஞ்ஞான்று மிருக்குந் தன்மையிருத்தலின் சப்தத்திற்கும் அத்தன்மை சம்பவிக்கின்றது. அநித்தியமாயின், அப்போது சப்தத்தில் ஒருகாலத்தில் அநித்தியத்துவத்தின் அபாவமிருக்குமாதலின் இரண்டு விதத்தாலும் சப்தம் நித்தியமெனப் பெறப்படுகின்றது என்பது.

அநித்தியசமை.

(23.) அநித்தியமான திருஷ்டாந்தத்தின் சாதர்மியத்தினுல் சர்வபதார்த்தமும் அநித்தியமாமென்று நிரூபித்தல் அநித்தியசமை. எங்ஙனம்? அநித்தியமான கடத்தின் சாதிருசியமிருப்பதனுல் சப்தமும் அநித்தியமாமெனக்கூறின், அப்பொழுது அத்தர்மத்தினுல் சர்வபதார்த்தங்கட்கும் கடசாதிருசியமிருத்தலின் அச்சர்வபதார்த்தங்கட்கும் அநித்தியத்துவம் வரல்வேண்டும் என்பது.

காரியசமை.

(24.) வாதியாற் கூறப்பட்ட ஏதுவிற்கு அந்நியகாரியத்தினுற் சம்பவித்தலைக்கூறல் காரியசமை. எங்ஙனம்? (சப்தம் அநித்தியம்; பிரயத்தனத்தையநுசரித்துண்டாகின்றமையின்; கடம்போல என்று) முற்கூறிய அநுமானத்திலேயே பிரயத்தனத்தை யநுசரித்துச் சொல்லப்படுவதான ஏது இரண்டுவிதத்தாலும் சம்பவிக்கும். கடாதிகள் போன்று சப்தசொரூபத்தின் உற்பத்தி, ஜலாதிகளைப் போன்று ஆவாரக (மறைப்பு) நிவிர்த்தி என்னும் இவ்விரண்டிடத்திலும் பிரயத்தனத்தை யநுசரித்துச் செய்யப்படுந்தன்மை காணப்படுகின்றமையின் அதற்கு ஆவாரக நிவிர்த்தி வருவதாகிய வேறு காரியம் சம்பவிக்கின்றது; சம்பவித்தலின், அநித்தியத்துவம் நியமமன்று என்பது.

16. நிக்கிரகத்தாநம்–Unfitness for arguing.

143. தோல்வி யேது நிக்கிரகத்தாநம். அது நூநம், அதிகம், அபசித்தாந்தம், அர்த்தாந்தரம், அப்பிரதிபை, மாதாநுஞ்ஞை, விரோதம் முதலான பேதத்தாற் பலவிதமாயினும் (அவையெல்லாம்) பெருகுமென்று சொல்லப்பட்டனவல்ல.

144. சொல்லவேண்டிய பொருளிற் சிறிது குறைதல் நூநம் (நியூநம்).

145. சொல்லவேண்டிய பொருளின் அதிகம் அதிகம்.

146. சித்தாந்தத்தின் கேடு அபசித்தாந்தம்.

147. பிரகிருதத்தில் அனேக சம்பந்தமான பொருளுடைய சொல் அர்த்தாந்தரம்.

148. உத்தரத்தினது தோன்ருமை அப்பிரதிபை.

149. தனக்குப் பிரதிகூலமாய்ப் பரனுக்குச் சம்மதமான அர்த்தத்தைத் தானே அங்கிகரித்தல் மதாநுஞ்ஞை.

150. இஷ்டார்த்தபங்கம் (பிரதிஞ்ஞா) விரோதம்.

ஈண்டு மிகவும் வேண்டப்படுவதாகிய பதார்த்தங்களை ரூபபேதத்தினுலே அடிக்கடி கூறுவதும் வேண்டாமையாகிய ரூபபேதங்களுக்கு இலக்கணம் கூருமையும் குற்றமன்று. இவ்வளவினுலே பாலர்களுக்கு வியுற்பத்தி சித்தித்துவிடுகின்றது.

(கு-ரை.) வாதியினது அபஜயத்திற் கேதுவாயுள்ளது நிக்கிரகத்தானமா (தோல்விக் கேதுவா)ம். அஃதாவது எது சித்திக்கச் சபையில் வாதிக்கு அபஜயமுண்டாகின்றதோ அது நிக்கிரகத்தானமாம்.

அது: பிரதிஞ்ஞாஹானி, பிரதிஞ்ஞாந்தரம், பிரதிஞ்ஞா விரோதம், பிரதிஞ்ஞாசந்நியாசம், ஏத்வந்தரம், அர்த்தாந்தரம், நிரர்த்தகம், அவிஞ்ஞாதார்த்தம், அபார்த்தகம், அப்பிராப்தகாலம், நியூநம், அதிகம், புநருக்தம், அநநுபாஷணம், அஞ்ஞாநம்,

அப்பிரதிபை, விக்ஷேபம், மதாநுஞ்ஞை, பரியநுயோஜ்யோபேக்ஷணம், நிரநுயோஜ்யாநுயோகம், அபசித்தாந்தம், ஏத்துவாபாசம் என்னும் வேறுபாட்டால் இருபத்திரண்டாம்.

இவை அப்பிரதிபத்தி, விப்பிரதிபத்தி என இருவகைப் படும்; அப்பிரதிபத்தி-செப்புவழு; விப்பிரதிபத்தி-வினுவழு. பிரதிஞ்ஞாஹாநி முதல் புனருக்தமீருயுள்ள பதின்மூன்றும் அப்பிரதிபத்தியாம்; அநநுபாஷணம் முதல் ஏத்துவாபாசம் ஈருயுள்ள ஒன்பதும் விப்பிரதிபத்தியாம்.

பிரதிஞ்ஞாஹாநி - மேற்கோளழிவு.

(1.) பிரதிஞ்ஞைசெய்த அர்த்தத்தை விடுதல் அல்லது பிரதிஞ்ஞைசெய்த அர்த்தத்திற்கு விரோதமானதை யங்கீகரித்தல் **பிரதிஞ்ஞாஹாநியாம்.** எங்ஙனம்? (வாதி) "சப்தம் அநித்தியம்; பிரத்தியட்ச குணத்தன்மையால்" என்புழி, (பிரதிவாதி) "இஃதங் தக்ககாம்" என்றற்றொடக்கத்துப் பிரத்தியபிஞ்ஞையின் வலியால் சப்தத்தில் நித்தியத்தன்மையினைச் சித்திக்கச்செய்து அவ்வநுமானத்தை மறுக்கும்போது அவ்வநுமானங் கூறினவன் (வாதி) சப்தத்தின் நித்தியத்தன்மையினை யங்கீகரிப்பவனுகிச் 'சத்தம் அநித்தியம்' என்றுசெய்த பிரதிஞ்ஞையினை விட்டுவிடுதலாம்.

பிரதிஞ்ஞாந்தரம்-வேறு மேற்கோள்.

(2.) பிறன் (பிரதிவாதி) கூறிய தோஷத்தை நிவிர்த்திக்க வேண்டுமென்னு மிச்சையினுல் முற்கூருத விசேஷணத்தைச் சேர்த்துப் பிரதிஞ்ஞைசெய்த அர்த்தத்தைக் கூறுவது **பிரதிஞ்ஞாந்தரமாம்.** எங்ஙனம்? "பிருதிவி முதலியன * குணஜன்னியம்;

---

* குணஜன்னியம்-ஈசுரனது ஞானம் இச்சை முதலிய குணங்களா லுண்டானவை,

காரியத்தன்மையால்" என்புழி மற்றொருவன் "அதிர்ஷ்ட (குண ஜன்னியத் தன்மையால்" என்று * சித்தசாதனத்தைக் காட்டும் போது அதனை நிவிர்த்தித்தற் பொருட்டு ஸவிஷயகமெ (விஷயத் தோடுகூடியதெ)னக் குணத்திற்கு விசேஷணங் கொடுத்தலாம்; அஃதாவது பிருதிவி முதலியன சவிஷயககுண ஜன்னியமெனக் கூறலாம்.

பிரதிஞ்ஞாவிரோதம்-மேற்கோள் மாறுபாடு.

(3.) தான் கூறிய சாத்தியத்திற்கு விரோதமாயுள்ள ஹேதுவைக் கூறுதல் **பிரதிஞ்ஞா விரோதமாம்**. எங்ஙனம்? "திரவியம் குணத்தினும் வேறு; உருவமுதலியவற்றினும் வேறுகக் காணப் படாமையின்" என்புழிக் குணத்தினும் வேறும்வடிவ சாத்தியத்தால் உருவ முதலியவற்றினும் வேறும் வடிவமாகத் தோன்றுத ஏது விருத்தமாம். ஈண்டு ஏது சாத்தியவிருத்தமா யிருத்தலறிக.

பிரதிஞ்ஞாசந்நியாசம்-மேற்கோள்விடுதல்.

(4.) தான் கூறியஅர்த்தம் பிறனல் தூஷிக்கப்படும்போது அதை விட்டுவிடுதல் **பிரதிஞ்ஞாசந்நியாசமாம்**. எங்ஙனம்? "சத்தம் அநித்தியம்; இந்திரிய ஜன்னியஞானத்திற்கு விஷயமாவதால்"

---

* அதிருஷ்ட ஜன்னியமென முன்னர்ப் பெறப்பட்ட பிருதிவி முதலியவற்றைக் குணஜன்னியமெனக் கூறல் சித்தசாதனமாம். பிருதிவி முதலியன அதிர்ஷ்டஜன்னியமாம்; அங்ஙனமாக அவற்றைக் குணஜன்னியமெனல் சித்தசாதனமாமெனப் பிரதிவாதிகூற அதனைப் பரிசரித்தற்பொருட்டு வாதி பிருதிவி முதலியன சவிஷயககுணஜன்னியமெனக் கூறினன். தருமாதரும வடிவ அதிர்ஷ்டகுணம் சவிஷயக (பிரத்தியட்சவிஷய)மன்று.

என்புழி மற்றொருவன் அது * ஜாதியில் வியபிசரித்தலைக் காட்டித் தூஷிக்கும்போது சப்தம் அநித்தியமெனக் கூறியதார்? என்று தான்கூறிய பிரதிஞ்ஞையை விட்டுவிடுதலாம்.

ஏத்வந்தரம்-வேற்றேது.

(5.) பிறன்கூறிய தூஷணத்தை நிவிர்த்திக்கவேண்டு மென்னும் விருப்பத்தால் மேற்கூறிய (இந்திரியஜன்னிய ஞானத்திற்கு விஷயமாவதால் என்னும்) ஏதுவின்வகுப்பில் ,வேறு விசேஷணத்தைச் சேர்ப்பது ஏத்வந்தரமாம். எங்ஙனம்? "சத்தம் அநித்தியம்; பிரத்தியட்சமாவதால்" என்புழிச் சாமாநியத்தில் வியபிசாரம் தோன்றுமிடத்து அவ்வேதுவிற்கு † 'ஜாதிமத்துவம் (ஜாதியுடையதாகி)' என்று விசேஷணங் கொடுப்பது; அஃதாவது ஜாதியுடையதாகிப் பிரத்தியட்சமாவதால் என்று கூறுவதாம்.

அர்த்தாந்தரம்-வேற்றுப்பொருள்.

(6.) பிரகிருதத்திலுபயோகப்படாத அர்த்தத்தைக்கூறுவது அர்த்தாந்தரமாம். பிரசங்கத்திற் பெறப்பட்ட அர்த்தம் பிரகிருதம் எனப்படும். "சப்தம் அநித்தியம்; இந்திரியத்தாற் கிரகிக்கப்படுதலின்" என்புழி இவ்வேது நித்தியமானகடத்துவ ஜாதியோடு வியபிசரிக்கின்றதென்று பிறன் கூறியவிடத்து இச்சத்தம் ஆகாயத்தின் குணமாயிருத்தலின் ஆகாசத்தினுற் கிரகிக்கப்படும் சமவாய சம்பந்தத்தினுல் அச்சாதிசம்பந்தமும் அநித்தியமென்று முற்கூறியதற் குபயோகமாகாத வாக்கியத்தைக்கூறுவது.

---

* ஜாதியும் இந்திரியஜன்னியஞானத்திற்கு விஷயமாயிருத்தலின் அதுவும் அநித்தியமாமென் றுட்சேபிக்கப்பட்டது. ஜாதி நித்தியபதார்த்தங்களு ளொன்றென்பது நியமம்.

† இதுபற்றி இந்நூலின் 255-258 பக்கங்களிற் காண்க.

நிரர்த்தகம் - பொருளின்மை.

(7.) அவாசக (எவ்வர்த்தத்தினையுங் கூறாத) சப்தப்பிரயோகம் நிரர்த்தகமாம். எங்ஙனம்? சப்தம் அநித்தியம்; க, ங, ச, ஞ, ட், ண, தன்மையால் என்றாற்போல்வது.

அவிஞ்ஞாதார்த்தம்-பொருட்போலி.

(8.) பொருள் இனிது விளங்காத சொற்களை யெடுத்துக் கொண்டு பேசல் அவிஞ்ஞாதார்த்தமாம்; அஃதாவது சபையிலுள்ளவர், பிரதிவாதி யென்னு மிவருக்குப் போதமாகாத பதப் பிரயோகமாம். எங்ஙனம்? துராான்வயமும், அப்பிரசித்தார்த்தமுமுடைய பதங்களை விரைவாகக் கூறுவது.

அபார்த்தகம்-பொருளுணரப்படாமை.

(9.) (அவாய்நிலை, தகுதி, அண்மையில்லனவாகப் பேசுதல்). பரஸ்பரம் அந்வயமின்றிய அர்த்தத்தைக் கூறுகின்ற பதங்களின் கூட்டம் அபார்த்தகமாம். எங்ஙனம்? "சப்தம், கடம், படம், நித்தியம், அநித்தியம்; பிரமேயத்தன்மையால்" என்பது.

அப்பிராப்தகாலம்-காலம்பெறாமை.

(10.) (பரார்த்தாநுமானத்திற்குக்காரணமாகிய) பிரதிஞ்ஞை முதலிய அவயவங்களை மாற்றிக்கூறுவது அப்பிராப்தகாலமாம். எங்ஙனம்? சப்தத்தன்மையால்; சப்தம் நித்தியம் என்றற்றொடக்கத்தனவாம்.

நியூநம்-குன்றக்கூறல்.

(11.) பிரதிஞ்ஞைமுதலிய அவயவங்களுள் சில குறையக் கூறல் நியூநமாம். இது வெளிப்படை.

அதிகம்-மிகைபடக்கூறல்.

(12.) ஒரேதுவாலும் ஓர் திருஷ்டாந்தத்தாலும் சாத்தியம் பெறப்படுவதாயிருக்க அது கருதாது அதிகஹேது அல்லது அதிக திருஷ்டாந்தத்தினைக்கூறுவது அதிகமாம். எங்ஙனம்? இம்மலை தீயுடைத்து; புகையுடைமையால், பிரகாச முடைமையால்; அடுக்களைபோல, கொல்லனுலைபோல என்றற்றொடக்கத்தனவாம்.

புநருக்தம்-கூறியதுகூறல்.

(13.) அநுவாதமின்றி முற்கூறியதை மீண்டுங் கூறுதல் புநருக்தமாம். எஙஙனம்? சப்தம் அநித்தியம், சப்தம் அநித்தியம்; அங்கமிலாதவன் அநங்கன் என்றுற்போல்வனவாம். அநுவாதமாவது முற்கூறியதைப் பயன்பற்றி மீண்டுங்கூறுவது. அநுவாதமெனினும் வழிமொழிதலெனினு மொக்கும்.

அநநுபாஷணம்-பிற்கூற்றின்மை.

(14.) சபையிலுள்ளபுருஷர் ஒன்றை மும்முறைகூறியும் அதனை அநுவாதஞ் செய்யாதிருப்பது அநநுபாஷணமாம்.

அஞ்ஞானம்-அறியாமை.

(15.) சபையிலுள்ளவர்களால் அறியப்பட்ட அர்த்தத்தை வாதி மும்முறைகூறியும் பிரதிவாதிக்கு வாக்கியார்த்தபோதம் உண்டாகாதிருத்தல் அஞ்ஞானமாம்.

அப்பிரதிபை.

(16.) விடைதெரிந்தும் விளங்காமையாற் சும்மா விருத்தல் அப்பிரதிபையாம்; அஃதாவது பிரதிவாதியின் வினாவிற்கு விடைகூறுவதற்குத் தகுதியறிந்தும் அவ்விடையின் மறதி வசத்தால் விடைகூறாது மௌனமாயிருத்தலாம்.

விட்சேபம்.

(17.) தனக்கிப்போது வேறு காரியமிருக்கின்ற தென்று கூறி வாதத்தை நிறுத்துதல் விட்சேபமாம்.

மதாநுஞ்ஞை.

(18.) தனது பட்சத்தில் பெறப்பட்டதோஷத்தை நீக்காது வேறுபட்சத்தில் தோஷங்கூறுவது; அஃதாவது தன்குற்றத்தைப் பரிகரியாது பிறன்குற்றத்தைக் கூறுவது மதாநுஞ்ஞையாம்.

பரியநுயோஜ்யோபேக்ஷணம்.

(19.) எடுத்துக்காட்டற்குரியபிறனது தோல்விஸ்தானத்தை யெடுத்துக் காட்டாதிருத்தல் பரியநுயோஜ்யோபேக்ஷணமாம்.

நிரநுயோஜ்யாநுயோகம்.

(20.) தோல்வித்தான மின்றியவனிடத்துத் தோல்வியைக் கூறல் நிரநுயோஜ்யாநுயோகமாம்.

அபசித்தாந்தம்-சித்தாந்தப்போலி.

(21.) ஒரு மதசித்தாந்தத்தை மேற்கொண்டு வியவகரிக்கும் போது அதற்குமாறுன மதசித்தாந்தத்தை மேற்கொண்டுத்தரங் கொடுத்தல் அபசித்தாந்தமாம்.

ஏத்துவாபாசம்-ஏதுப்போலி.

(22.) இதுபற்றி இந்நூலின் 81-வது பக்கமுதல் 98-வது பக்கம் வரையிலும், 334 பக்கமுதல் 364-வது பக்கம் வரையிலுங் காண்க.

தர்க்கபரிபாஷை

குறிப்புரையுடன் முற்றிற்று.

குருவே துணை.

வேதாந்தபுஸ்தகசாலை.

புஸ்தக விளம்பரம்.

ரிபுகீதைத்திரட்டு,

குறிப்புரையுடன்.

புதியபதிப்பு. விலை ரூபாய். 1.

மகா இதிகாசங்களு ளொன்றாகிய சிவரகசியத்தின் ஆறாவது அம்சத்திலுள்ள ரிபுகீதை வடமொழி வல்லார்க்கே யன்றித் தமிழருக்கு உபயோகமாகா திருத்தலை நோக்கித் திருவிடைமருதூர்ப் பிட்சுசாஸ்திரிகளென்று வழங்கும் உலகநாத சுவாமிக ளவர்களால் 1924 பாடலாகத் தமிழில்மொழி பெயர்த்தருளப்பட்டது. அது தமிழ்மக்க ளியாவருக்கும் பெரிதும் உபயோகமாகும்படி விஷயப்பொருத்தம் விடாது 874 பாடலாகத் திரட்டப்பட்டு அவசியமான விடங்களிற் குறிப்புரையெழுதப்பட்டு உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் சுத்தப்பிரதியாக அச்சிடப்பட்டிருக்கின்றது. இது முமுட்சுக்க ளொவ்வொருவராலும் அத்தியாவசியகமாய் விரும்பத்தக்க தென்பது மிகுபிரசித்தம்.

திருவாசகம்,

இது பிழையறப்பரிசோதித்து,

உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டது.

பாக்கெட்சைஸ் $5\frac{1}{2} \times 3\frac{1}{2}$ அங்குலம் அளவு.

காலிக்கோ பைண்ட்-விலை அணா 10.

நவநீதசாரம் (வினா விடை).

இது வாசிட்ட முதலிய நூல்களின் கருத்துக்களைச் செவ்வனே விளக்கும் வசன வடிவ நூல். இப்புத்தகம் படிப்பதால் வாசிட்ட முதலிய அரிய பெரிய நூல்களின் இரகசியங்களையெல்லாம் எளிதிலறிந்துகொள்ளலாம். 158 பக்கங் கொண்ட புதிய பதிப்பு. காலிக்கோபைண்ட்-விலை அணா 8.

சித்தாந்தபிந்து.

(சம்ஸ்கிருத மொழிபெயர்ப்பு).

இதுவரைக்கும் தமிழில் வாராதது.

இது சங்கரபகவத் பாதாசாரிய சுவாமிகள் அருளிச்செய்த தசசுலோகியின் வியாக்கியானம். இவ்வியாக்கியானம் செய்தவர் ஆரியபாஷையில் மகாக்கியாதிபெற்ற மதுசூதன சரஸ்வதி சுவாமிகள். இப்புஸ்தகம் ஆத்மா இன்னது அநாத்மா இன்னதுஎன்பதுபற்றிச் சுருதியாதிப் பிரமாணங்களுடன்யுக்தி சகிதமாக நன்கு விளக்கிக் கூறுகின்றமையின், வேதாந்த சாஸ்திரங்கட்கு ஓர் திறவுகோல் போல்வதாம். இதில் அறியவேண்டிய விஷயங்களெல்லாம் சுருக்கமாகவும் விளக்கமாகவும் பண்டிதர்முதல் பாமரரீறாயுள்ள யாவரும் நன்குணருமாறு விளக்கப்பட்டிருக்கின்றன. இப்புஸ்தகம் ஒவ்வொருவர் கையிலும் அத்தியாவசியகமா யிருக்கத்தக்க தென்பது அதனது விஷய அட்டவணையைப்பார்க்க நன்கு விளங்கும்.

காலிக்கோ-விலை அணா 10. ராப்பர் விலை அணா 8.

வேதாந்தசாரம்.

(சம்ஸ்கிருத மொழிபெயர்ப்பு)

இது யாவருக்கும் விளங்கக்கூடிய எளிய செந்தமிழ்நடையில் வினுவிடையாகவசனரூபமாயுள்ளது. இவ்வரியபெரியநூல் இதுகாறும் சுத்தபாடமாக வராதது நோக்கி நன்கு ஆராய்ச்சி செய்து உயர்ந்த கடிதத்தில் தெளிவாயச்சிடப்பட்டுள்ளது. வேதாந்த சாஸ்திரத்தின் முக்கியமான இரகசியங்களை யெல்லாம் எளிதிலறிந்து கொள்வதற்கு இதுபோன்ற நூல் தமிழில் பிறிதொன்றின்றென்பது அதனது விஷய அட்டவணையைப் பார்க்க நன்கு விளங்கும். இந்நூல் மோட்சவிச்சையுள்ள ஒவ்வொருவர் கையிலும் இன்றியமையாதிருக்கத் தக்கதாம்; சகல வேதாந்த சாஸ்திரார்த்தங்களை யெல்லாம் எளிதிலறிந்து கொள்வதற்கு ஓர் தீபம் போல்வதாம்.

காலிக்கோ—விலை அணு 12. ராப்பர்—விலை அணு 10.

நாநாஜீவவாதக்கட்டளை,

குறிப்புரையுடன். விலை அணு 4.

ஆரம்பத்தில் வேதாந்தம் படிப்பவர்களுக்கு இப்புத்தகம் பெரிதும் உபயோகமாயுள்ளது. உபாத்தியாயர் சகாயமில்லாமலே இதனுல் வேதாந்தத்தின் பிரக்கிரியைகளெல்லாம் நன்குய்த் தெரிந்துகொள்ளலாம். இப்புத்தகம் படிப்பவர்கள் வேறு எந்த வேதாந்த புத்தகங்களையும் படிப்பதற்கு அதிகாரிகளாவர்; நூதனமாக எழுதப்பட்ட குறிப்புரையுடன் கூடிய புதிய பதிப்பு. இதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின்

சிஷ்யர் ராமகிருஷ்ணாநந்த சுவாமிகளவர்களும், கோயிலூர்-பொன்னம்பல சுவாமிகளவர்களும், ஸ்ரீமத்-தஞ்சை-குப்புசாமி ராஜா அவர்களும் நல்லபிப்பிராயங் கொடுத்திருக்கின்றனர்.

வாக்கியசுதையென்னும்

திருக்குத்திரியவிவேகம்.

(மூலமும் உரையும்-மொழிபெயர்ப்பு).

இந்து அநேக வேதாந்த சாஸ்திரங்களின் ஆசிரியரும் சங்கரபீடத் தாசிரியரா யெழுந்தருளியிருந்தவருமான வித்தியாரண்ணிய சுவாமிகளா லருளிச்செய்யப்பட்டது. வேதாந்த சாஸ்திரங்களின் முக்கிய அபிப்பிராயத்தை மிகவும் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கியிருப்பதுபற்றி இது முமுட்சுக்க ளொவ்வொருவராலும் பொன்னேபோற் போற்றப்படுவதாம். சமாதிபுரிய விருப்புள்ள ஒவ்வொருவருக்கும் இன்றியமையாததாயுள்ள இந்நூல் சுத்தப்பதிப்பாக அச்சிடப்பட்டிருக்கின்றது. விலை அணு 2.

திருக்குறள் பரிமேலழகருரை,

தெளிபொருள் விளக்கம், கருத்துரை, குறிப்புரை.

விலை ரூபாய் ஆறு.

இப்புத்தகம் டிம்மி 8 பக்கங்கொண்ட அளவில் 1300 பக்கங்களுக்கு மேற்பட்டது; 2 வால்யமாகக் காலிக்கோ

பைண்ட் செய்யப்பட்டுள்ளது. உபாத்தியாயர் சகாயமில்லாமலே பரிமேலழகருரையின் அருமை பெருமைகளை யெல்லாம் இதனால் நன்றாகத்தெரிந்துகொள்ளலாம். தெளிபொருள் விளக்கம், கருத்துரை, குறிப்புரைகள் பரிமேலழகருரைக் கிணங்கப் புதிதாய் எழுதப்பட்ட மூன்றாம் பதிப்பு.

ஸ்ரீ விருத்திப் பிரபாகரம்.

விலை ரூபாய் 4.

இந்நூல் வேதவித்தும் பிரஹ்மவித்துமாகிய மகாத்மா
சாது நிச்சலதாஸரவர்களா லியற்றப்பட்டது.

வேதாந்தத்தின் பிரக்கிரியைகளையெல்லாம் தருக்கவாயிலாக நன்கு விளக்கிக்கூறும் இது ஹிந்தி பாஷையிலிருந்தமை பற்றி அதனைத் தமிழ்நாட்டாருக் குபயோகமாக்குவான் கருதி விசாரசந்திரோதயம், தர்க்ககௌமுதி, ஹடயோகப்பிரதீபிகை, ஸ்ரீவிருத்திரத்னாவலி, பாலபோதம், அபரோக்ஷாநுபூதி, தத்துவமஸிமகாவாக்கியம், சுவாத்மநிரூபணம், வேதாந்தபரிச்சேதம் முதலியநூல்களின்மொழிபெயர்ப்பாசிரியரும் பெரியாருமாகிய தஞ்சைமாநகரம் ஸ்ரீமத். வே. குப்புசாமிராஜு அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

ஸ்ரீ விருத்தி ரத்நாவலி.

(ஹிந்திபாஷை மொழிபெயர்ப்பு).

விலை அணா —12.

இந்நூல் ஸ்ரீவிருத்திப்பிரபாகரத்தைச் சங்கிரகித்துக் கூறுவது. இதனாசிரியர் பண்டித சிரோமணியும் பிரஹ்மநிஷ்டா

பரருமான பீதாம்பரஜீயவர்கள். இது தமிழ்மக்க ளியாவருக்கு முபயோகமாமாறு ஸ்ரீமத்-வெ. குப்புசாமிராஜு அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

ஸ்ரீபாலபோதம்.

(ஹிந்திபாஷை மொழிபெயர்ப்பு.)

விலை ரூபாய் ஒன்று.

இந்நூல் மேற்படி பீதாம்பரஜீ அவர்களால் இயற்றப்பட்டது. ஜீவப்பிரஹ்ம ஐக்கியத்தை யொன்பது உபதேச வடிவமாகக் கூறுமிது தமிழ்மக்க ளியாவருக்கும் பயன்படுமாறு ஸ்ரீமத்-வெ. குப்புசாமிராஜு அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

மோட்ச சாதன விளக்கம்.

விலை ரூபாய் இரண்டு.

இதில் ஏறக்குறைய அரியபெரிய 300 விஷயங்கள் பிரமாண சகிதமாக எழுதப்பட்டிருக்கின்றன. இதனால் நல்லாசிரியரிடத்துப் பலவருடங் காத்திருந் தறியத்தக்க விஷயங்கள் பலவும் தெளிவாயறிந்துகொள்ளலாம். இது மோட்ச விச்சையுள்ளவர்கட்குப் பரமசாதனமா யுள்ளதென்பது இதன் பெயராலேயே நன்குவிளங்கும். இது டிம்மி 72 பாரங் கொண்டது.

வேதாந்த பரிபாஷை.

(சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு).

இதுவரைக்கும் தமிழில் வாராதது.

இது சர்வ தந்திர சுதந்திரரென்று மிகப்பிரசித்தி பெற்றுள்ள தர்மராஜதீட்சிதரா லியற்றப்பட்டது. இஃது தெட்டுப் பரிச்சேத முடையது. இதனால் வேதாந்தத்திற் குரிய பிரமாணங்க ளிவ்வளவென்பதும் அவற்றின் பயனும் வேறு அனுபவ ரகசியங்களும் தெளிவா யறிந்துகொள்ளலாம்.

காலிக்கோ விலை அணு 12. ராப்பர் விலை அணு 10.

தாயுமான சுவாமிகள் பாடல் பாடபேதத்துடன்		0	8	0
ஹடயோகப் பிரதீபிகை (யோகநூல்)		1	8	0
தத்துவமசி மகாவாக்கியம்	ராப்பர்	0	2	0
அபரோக்ஷானுபூதி	,,	0	2	0
சுவாத்மநிரூபணம்	,,	0	3	0
தருக்ககௌமுதி	,,	0	4	0
வேதாந்தபரிச்சேதம்	,,	0	6	0
பஞ்சதசப்பிரகரணம் வசனம்வினுவிடை	காலிக்கோ	1	0	0
பிரபுலிங்கலீலை வசனம்	,,	0	12	0
ஸ்ரீ குமாரதேவர் சாஸ்திரக்கோவை	,,	0	10	0
சூதசங்கிதை (செய்யுள்)	,,	1	8	0
ஸ்ரீபக்தலீலாம்ருத வசனம்	,,	3	0	0

நாலடியார் மூலமும் உரையும் இங்கிலீஷ்மொழிபெயர்ப்புடன்	,,	1	2	0
துவைதசைவகண்டனம் முதற்பாகம்	,,	2	0	0
துவைதசைவகண்டனம் இரண்டாம்பாகம்		1	8	0
ஔவை குறள்		0	2	0
அத்துவிதவுண்மை (ராயல் 32 பேஜில்)		0	1	0
திருவிளையாடற் புராணம் மூலம் காலிக்கோ		1	8	0

தர்க்கபரிபாஷை குறிப்புரையுடன் அச்சில்.

சர்வதரிசன சங்கிரகம் - சம்ஸ்கிருத மொழிபெயர்ப்பு. இதிற் சார்வாகமுதலிய 15 மதசித்தாந்தங்க ளடங்கியிருக்கின்றன. அச்சில்.

தபாற்சார்சுப் பிரத்தியேகம்.

கோ. வடிவேலு செட்டியார்.

தமிழ்ப்பண்டிதர், 15. வேங்கடாசல ஆசாரிவீதி,

கோமளேசுவரன் பேட்டை, சென்னை.